பேரறிஞர்

அண்ணாவின்

கடிதங்கள்



தொகுதி – 6

35 கடிதங்கள்

பேரறிஞர் அண்ணாவின் கடிதங்கள் - 6

அண்ணாதுரை

FreeTamilEbooks.com

பேரறிஞர் அண்ணாவின் கடிதங்கள் - 6

பேரறிஞர் அண்ணாவின் கடிதங்கள் - 6

பேரறிஞர் அண்ணாவின் கடிதங்கள் - 6

அண்ணாதுரை

மின்னூல் வெளியீடு : FreeTamilEbooks.com

அட்டைப்படம் - லெனின் குருசாமி - guruleninn@gmail.com

மின்னூலாக்கம் - ஐஸ்வர்யா லெனின் - aishushanmugam09@gmail.com

This book was produced using pandoc

பதிவிறக்கம் செய்ய - http://FreeTamilEbooks.com/ebooks/letters_of_peraringar_anna_6

மின்னூல் வெளியீட்டாளர்: http://freetamilebooks.com
அட்டைப்படம்: லெனின் குருசாமி - guruleninn@gmail.com
மின்னூலாக்கம்: ஐஸ்வர்யா லெனின் - aishushanmugam09@gmail.com
மின்னூலாக்க செயற்திட்டம்: கணியம் அறக்கட்டளை - kaniyam.com/foundation

Ebook Publisher: http://freetamilebooks.com
Cover Image: Lenin Gurusamy - guruleninn@gmail.com
Ebook Creation: Iswarya Lenin - aishushanmugam09@gmail.com
Ebook Project: Kaniyam Foundation - kaniyam.com/foundation

கருத்தோவியம்

கனவானின் காசநோயும் பற்பலரின் கருத்துக்களும் செயலிலே கோணல், சீலம் பற்றிப் பேச்சு !
குற்றம் சுமத்தப் பெற்றவர் உபதேசியாகிறார் !
மக்களின் குறும்புப் பார்வையும் கேலிப் புன்னகையும்.

தம்பி,

சில இடங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு வரலாம்; வருகிறாயா? என்ன கேள்வி கேட்கிறேன் பார் ஏமாளித்தனமாக. நான் அழைக்கும் போதெல்லாம், அழைக்கும் இடங்களுக் கெல்லாம் வரத்தவறாத உன்னைப் பார்த்துக் கேட்கிறேனே, வருகிறாயா? என்று. நீ வருகிறாய் என்ற தெம்புதானே என்னையே இயக்கிவைக்கிறது. ஆகவே வருகிறாயா? என்று கேட்டது, கேள்வி வடிவிலே இருக்கிறதே தவிர, ஐயப்பாட்டின் விளைவாக எழுந்துள்ள வினா அல்ல: வா! தம்பி! சில இடங்களைச் சென்று கண்டுவிட்டு வரலாம்.

தங்கமான குணம்! எல்லோராலும் மதிக்கப்படுபவர்! வாணிபத் திறமை கண்டு ஊரே வியந்து பாராட்டுகிறது! ஊர் மக்களின் நலனுக்காக உழைப்பதிலே தனி ஆர்வம்! அவருடைய குணத்துக்கு ஏற்ற பத்தினி! பிள்ளைகள் அவர் கீறிடும் கோட்டைத் தாண்ட மாட்டார்கள், அவ்வளவு அடக்கம், கட்டுப்பாடு, ஒழுக்கம். எந்தக் காரியத்திலே ஈடுபட்டாலும் வெற்றிதான்! வெற்றிமேல் வெற்றி

பெற்று வருகிறவர்! ஆனால், பாவம் அவருக்குத் தீராத காசநோய்!!

தம்பி! பேசினாரே, அவரைப் பார்த்தாயா, “பெரிய புள்ளி‘, மற்றோர் பெரிய புள்ளியைப் பற்றிப் பரிவுடன் பேசுகிறார். பரிவுக்குக் காரணம் என்ன என்றா கேட்கிறாய். ஏன், சாதாரண - மனிதாபிமானம்! ஒப்புக் கொள்ளமாட்டாயா... சாதாரண மானவர்களுக்குத்தானே மனிதாபிமானம் இருக்கும்; இவர் “பெரியபுள்ளி’ யாயிற்றே இவருக்கு வேறு ஏதாவது பெரிய”அபிமானம்’ இருக்க வேண்டுமே என்கிறாய்; சரி உன்னிடம் உண்மையை மறைப்பானேன், காசநோய் வந்திருப்பதாகச் சொல்லுகிறாரே, அவர் காசுக்கடை கனகசபை. அந்த வட்டாரத்திலேயே மிகப் பெரிய புள்ளி. அவரிடம் பெரிய”தொகை’ கடன் வாங்கி இருப்பவர் இந்தப் "பெரியபுள்ளி’ அரிய நாயகம்.

கடன் பட்டிருக்கும் ஆசாமிக்குக் கசப்பு அல்லவா இருக்கும் : பரிவுடன் பேசுகிறாரே ; காரணம் என்ன என்று கேட்கிறாய். விடமாட்டாயே நீ, முழு உண்மையைச் சொன்னாலொழிய.

கடனைத் திருப்பித் தரச்சொல்லி கனகசபை வற்புறுத்திய தாலே, அருமை நாயகத்துக்குக் கசப்புத்தான். ஆனால், அதை மறைத்துக்கொண்டுதான் பேசுகிறார், பரிவுகொண்டவர் போல, ஏன் என்றால், அவர் யாரிடம் பேசிக்கொண்டி ருக்கிறாரோ, அவர் “கனகசபை‘யின் "கையாள்’. ஊரிலே யாரார் தன்னைப் பற்றி என்னென்ன பேசுகிறார்கள் என்பதைத் தெரிந்து வந்து சொல்லுவதற்காகவே”வேலை‘யில் வைக்கப்பட்டிருக்கும், வையாண்டி! கடன் பட்டிருக்கும் அருமைநாயகம், கனகசபை யைப் பற்றிப் பரிவு காட்டி, தங்கமான குணம் என்று

பாராட்டிப் பேசுவது, இதனை வையாண்டி, கனகசபையின் காதிலே போட்டு வைப்பான், அது கேட்டு மகிழ்ந்து கனகசபை கடனைத் திருப்பிக் கொடுத்தாக வேண்டும் என்று "கிட்டி’ போடுவதை விட்டுவிடு வான் என்பதற்காக. பரிவுக்குக் காரணம் அதுதான்.

காசநோயா? அடே அப்பா. என்னமோ ஏதோ என்று எண்ணிக்கொண்டேன். தக்க மருத்துவம் பார்த்தால் பஞ்சு பஞ்சாகப் பறந்து போகாதா அந்தக் காசம். இந்த ஊரிலேயே அதற்குத் தகுந்த டாக்டர் இல்லை என்றால்தான் என்னவாம்! சீமைக்குப் போகிறார்! அமெரிக்கா போகிறார்! சுவிட்சர்லாந்து காற்றுப் பட்டாலே போதுமாமே, காசம் போய்விடுமாம். அவருக்கு என்ன, வசதிக்குக் குறைவா! இருப்பதிலே பதினாயிரத்திலே ஒரு பங்கு வீசி எறிந்தால், வீட்டைத் தேடி ஓடிவருகிறார்கள் உலகப் புகழ்பெற்ற டாக்டர்கள், காசம் அவருக்கு என்று பெருமூச்செறிய வேண்டுமா!!

இவர் யார் தெரிகிறதா தம்பி! காசநோயைப் பற்றி இவ்வளவு அலட்சியமாகப் பேசுகிறாரே, இவர் கலியாணத்தரகர் கதிரேசன் - கமிஷன் ஏஜண்டு கதிரேசன் என்று சொல்கொள்வார். இவர், யாரிடம் பேசுகிறார், தெரியுமா? கனகசபைக்கு மூன்றாம் தாரமாகத் தன் இளம் பெண்ணைக் கொடுத்துவிட்டு, இப்போது கலக்கமடைந்திருக்கும் குட்டியப்பரிடம்! பாவி! பணத்துக்கு ஆசைப்பட்டு, பெண்ணைக் கொண்டு போய் காசநோய் பிடித்த வனுக்குத் கொடுத்தாயே, இது அடுக்குமா என்று நாலுபேர் கேட்கிறார்கள். அதனால் ஆத்திரமடைந்து அவர் கதிரேசனிடம் கேட்கிறார் இப்படிப்பட்ட இடம் பார்த்துக் கொடுத்தாயே, என் குடும்பத்தைக் கெடுத்தாயே என்று. அதற்குச் சமாதானம் கூற, ஆறுதல் அளிக்கத் தரகன் தந்திரமாகப் பேசுகிறான், சீமைக்குப் போயாவது காசத்தைப் போக்கிக்

கொள்வார், சீமான்! ஏன் கவலைப்படுகிறாய், காசம் அவரை என்ன செய்யும் என்று அடித்துக் கேட்கிறான்.

காசமாமே! ஏழையும் இல்லாதவனும், உடல் வலிவுக்குத் தேவையான உணவு கிடைக்காமல், மாடாக உழைத்து ஓட்டி உலர்ந்துபோய் இந்தவிதமான வியாதிக்கு ஆளாவது உண்டு,. இவருக்கு என்ன குறை! வே-கள் ஆயிரம்! கூப்பிட்ட குரலுக்கு ஓடோடிவர ஆள் அம்பு, மாளிகை; நாலு சமையற்காரர்கள்! வேளை தவறாமல் பால் பழம். ஒரு குறையும் கிடையாதே, வயலுக்குத் தண்ணீர் இறைக்க வேண்டுமா, வண்டியில் மாட்டைப் பூட்டி ஓட்ட வேண்டுமா, வய-லே இறங்கி உழவேண்டுமா, உடலை வாட்டத்தக்க எந்த வேலையாவது உண்டா! கொடுத்து வைத்தவர்! கோலாகல வாழ்வு! அவருக்கு ஏன் வந்தது காசம்? எப்படி வந்தது அந்த நோய்? உடம்பு ஒரு மாதிரியாக இருப்பது தெரிந்தாலே போதுமே, பத்து வைத்தியர்கள் பக்கத்திலே வந்து நிற்பார்களே! மூன்று வேளை பஸ்பம் என்பான் ஒருவன்! ஒரு முழுங்கு கஷாயம் என்பான் இன்னொருவன்? கச்சக்காய் அளவு லேகியம் என்பான் இன்னொருவன்! ஒரே ஒரு ஊசி! அடுத்த நாள் காசம் இருந்தால் என் பெயரையே மாற்றிக்கொள்கிறேன் என்பான் இன்னொருவன்! இப்படிப்பட்ட சுகபோகம் அவருக்கு. அவரை வந்து தொட இந்தக் காசத்துக்கு அத்தனை துணிச்சலா!

இவர் யார் கூறட்டுமா? புதிதாகப் பணம் சேர்த்துக் கொண்டிருக்கும் புன்னைவனம். கனகசபை போன்ற பெரிய புள்ளிகளின் நேசத் தொடர்பு மூலம் ஆதாயம் தேடிக் கொள்ளும் போக்கினன். பணம் ஒருவருக்குக் சேருவதே அவன் செய்த புண்ணியத்தினால் என்பதிலும், பணத்தைச் செலவிட்டால் எந்தவிதமான கஷ்டத்தையும் போக்கிட முடியும் என்பதிலேயும் அசைக்க முடியாத நம்பிக்கை

உள்ளவன். கனகசபையுடைய கடைச் சரக்குகளை மொத்த விலைக்கு வாங்கிக் கடைகளுக்கு விற்பனை செய்திடும் ஏற்பாட்டுக்காகத் திட்டமிட்டுக் கொண்டிருப்பவன். அதற்குத் தன்னோடு “பங்கு’ சேர விருப்பம் தெரிவித்து பிறகு”ஒருவிதமாக’ப் பேசத் தொடங்கிய பரசுராமனிடம் பேசுகிறான். கனகசபைக்குக் காசமே வராது! வந்திருப்பது காசமாக இருக்கமுடியாது! என்று கூறுகிறான்’, பரசுராமனுக்குத் தைரியமூட்ட.

அபிஷேகம் செய்தார், ஆராதனை நடத்தினார், ஆலயம் கட்டினார், திருவிழா நடத்தினார், புண்ணியவான், தர்மவான், பக்திமான் என்று ஊரே கொண்டாடுகிறது. அவருடைய தெய்வ பக்திதான் அவருக்கு வே-கள் ஆயிரம் தந்தது. போதும் என்கிற அளவு செல்வம் கொடுத்தது, நிம்மதியான வாழ்க்கையைக் கொடுத்தது என்றெல்லாம் பெருமைப்பட்டுக் கொண்டார்களே; தெரியுமா விஷயம்? ஆசாமிக்.குக் காசம்!! ஆமய்யா, ஆம்! காசம்!! உலுக்கி உலுக்கி எடுக்கிறது! உடலை உருக்கியே விடுகிறது. பொல்லாத வியாதி இந்தக் காசம்; அது இவருக்கு!!

கொதிப்புடன் பேசுகிறானே ஏன் என்று யோசிக்கிறாயா, தம்பி! கோதண்டன், நல்லவன்; வாழ்ந்து கெட்டவன் - அயன் நஞ்சை ஒரே சதுரம் அறுபது ஏக்கர்! யானை கட்டிப் போர் அடிப்பது என்று பாடுகிறார்களே, இப்படிப்பட்ட வயல் பற்றித்தான் - அந்தச் சதுரத்தை அநியாயமாக விலையைக் குறைத்து, வேறு ஒருவனும் "ஏலம்’ கேட்க வராமல் தடுத்து, தட்டிப் பறித்துக் கொண்டான் கனகசபை. கொதிப்பு ஏற்படாமலா இருக்கும் கோதண்டனுக்கு. தன் நிலத்தை அநியாயமாகக் கனகசபை அபகரித்துக் கொண்டது பற்றியும், திருட்டுக் கணக்கு எழுதியது பற்றியும் ஊரிலே பெரியவர்களிடம் கோதண்டன் முறையிட்டபோது, அவர் அப்படிச் செய்யக்கூடியவரே அல்ல! பக்திமான்!

தர்மிஷ்டர்! என்றெல்லாம் கூறினார்கள். தனக்காக, நியாயத்துக்காகப் பரிந்து பேச ஒருவரும் வரவில்லையே என்ற எரிச்சல். இப்போது, கனகசபைக்குச் காசம் என்று கேள்விப் பட்டதும், அடக்கிவைக்கப் பட்டிருந்த ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு கிளம்புகிறது. கனகசபையின் அக்கிரமத்தைக் கண்டிக்கத் துணிவற்றுக் கிடந்தவர்களை இடித்துக் கேட்கத் துடிக்கிறான். பெரியவர்கள் இவனை இவ்விதம் பேசவிடு வார்களா! அதனால்தான், பெரியவர்கள் காதிலே விழட்டும் என்று, பெரியவர்கள் பலர் நடத்தும் பண்டரி பஜனைக் கூடத்து மானேஜர் மார்க்க பந்துவிடம், பேசுகிறான், ஆத்திரம் தீர.

காசம்தானே? குஷ்டம், குன்மம்! குடல்புண், இப்படி ஏதும் இல்லையா! காசம்தானா வந்தது, எத்தனையோ பேர்களுடைய வாழ்வை வாட்டி வதைத்த அந்த உத்தமருக்கு! காசமாம்! அது என்ன துடிதுடிக்கச் செய்யுமா, பதைபதைக்க வைக்குமா! ஒரு குற்றமும் செய்யாதவனைப் பிடித்துக் கொள்கிறது தொழுநோய் - இவருக்குக் காசம்!! காசநோய் வந்தால் என்ன? பட்டென்று கீழே வீழ்ந்து பொட்டென்று உயிரா போய்விடும். ஐயோ அப்பா! அம்மா! என்று அலறியா துடிக்கப் போகிறார்! ஒரே ஊசி போட்டு குணப்படுத்திவிட மாட்டார்களா, டாக்டர்கள்! காசம் வந்துவிட்டது காசம் வந்துவிட்டது என்று பேசிக் கண்ணைக் கசக்கிக் கொள்வதா! செத்தே போனாலும் என்ன, குடும்பம் சோற்றுக்கு இல்லையே என்று தேம்பிக் தவித்துக்கிடக்கவா போகிறது. ஊரை அடித்து "உத்தமன்' குவித்து வைத்திருக்கிற சொத்து, மூன்று தலைமுறைக்குப் போதுமே! காசம் வந்துவிட்டதாம், காசம்! காசம்தானே வந்தது போ! போ!

சின்னப்பன்! தம்பி! இவனுக்கு ஊரிலே கெட்டவன் என்று பெயர்! சிறையிலே இவன்,

தங்கக்கம்பி! என்னமோ திருட்டுக் குற்றத்துக்காகத்தான் பயல் தண்டிக்கப்பட்டிருக்கிறான்; ஆனால், நான் சொல்கிறேன்; இவனை நம்பி ஒரு இலட்சம் ரூபாய்கூட நான் கொடுத்துவைப்பேன். எனக்கு இவனிடம் அவ்வளவு நம்பிக்கை என்று ஒருமுறை சிறை மேலதிகாரியே கூறியிருக்கிறார். அவரிடம் இலட்சம் ரூபாய் இல்லை என்கிற தைரியத்திலேதான் அப்படிப் பேசினாரோ என்னவோ! ஆனால், சின்னப்பன் சிறையிலே நல்ல பெயருடன்தான் இருந்திருக்கிறான். அவனைக் கூண்டிலே நிற்க வைத்த கனகசபை சாமி சாட்சியாக'ச் சொன்னார், நல்ல அமாவாசைக் கருக்க-ன்போது சின்னப்பன் தன்னை வழி மடக்கி, கழுத்திலே இருந்த தங்க உருத்திராட்சமாலையைப் பறித்ததாக! சாட்சிகளைத் தீர விசாரித்து, குற்றம் மெய்ப்பிக்கப் பட்டதாகக் கூறி நாலு வருடம் கடுங்காவல் தண்டனை விதித்தார் நீதிபதி. கடைசி வரையில் சின்னப்பன் நான் ஒரு பாவமும் அறியேன் என்றுதான் சத்தியம் செய்தான். அவன் மனைவி மருதாயி கண்ணீர் பொழிந்தாள். அவளை, கனகசபை "கெடுக்க' முயன்ற போது, சின்னப்பன் அடித்து விரட்டிய சம்பவமே, வழிப்பறி வழக்காக வடிவமெடுத்தது என்று ஊரிலே வதந்தி. இது உண்மையா அல்லவா என்று கூற ஒரே ஒரு சாட்சி தான் உண்டு; மருதாயி! ஆனால், மருதாயியின் பிணம்தான் மடுவில் மிதந்ததே, சின்னப்பன் ஜெயிலுக்கு இழுத்துச் செல்லப்பட்ட நாளைக்கு மறுநாள். ஆகவே, சின்னப்பன், நடுஜாம பூஜைக்காக நந்திகேஸ்வரர் கோயிலுக்குச் சென்றுவிட்டுத் திரும்பிய கனகசபையை வழி மறித்துக் கொள்ளை அடித்தான் என்பதை ஊர் ஏற்றுக் கொண்டுவிட்டது. அந்த ஆத்திரம் சின்னப்பனுக்கு! ஊரே, அநியாயத்திற்குத் துணை நிற்கிறதே என்று எண்ணி வேதனைப்பட்டான். அதனால்தான் தம்பி! கனகசபைக்குக் காசம் என்றதும், காசம்தானே!

குஷ்டம் வரவில்லையே என்று கொதிப்புடன் கேட்கிறான். அவனுக்கு ஒரு எண்ணம் கனகசபை தனக்குச் செய்த துரோகத்துக்காக தண்டனையைக் கடவுள் எப்படியும் தருவார் என்று. ஆனால், காசம் போதுமான தண்டனை அல்ல; இதைவிடப் பயங்கரமான நோய் வரவேண்டும் அந்த அக்கிரமக்காரனுக்கு என்று எண்ணுகிறான். அந்த ஆத்திரத்தைத்தான் கொட்டிக்காட்டுகிறான், உண்மை தெரிந்தும் ஊமையாகிக் கிடந்த கனகசபையின் வண்டியோட்டியிடம்.

காசம்தான், சந்தேகமே இல்லை! முதலிலேயே எனக்குச் சந்தேகம். ஆனால், அவசரப்பட்டுச் சொல்லிவிடலாமா? அதனால்தான் இரத்தத்தைச் சோதனை செய்து பார்த்தேன், இப்போது தெளிவாகத் தெரிந்துவிட்டது. காசம்தான்! உடம்பைக் கவனித்துக்கொள்வதில்லையே நீங்கள்! ஓயாத வேலை. வேளையறிந்து சாப்பிடுவதில்லை. நான் பல நாள் சொல்லி இருக்கிறேனே, எல்லா வேலையையும் தலையின்மீது போட்டுக் கொண்டு ஏன் சுமக்க வேண்டும்? மகன் இருக்கிறான். மருமகன் இருக்கிறான், நாணயமான ஆட்கள் இருக்கிறார்கள், ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள், என்று சொன்னேன். கேட்டால்தானே! பொழுது போகவில்லை என்று சொல்லிக்கொண்டிருந்தீர்! இப்போது? பொல்லாத காசம் வந்துவிட்டிருக்கிறது. ஆபத்து இருக்காது, குணப்படுத்திவிடலாம், அதற்காக நான் துளியும் கவலைப்பட வில்லை; ஆனால், உங்களுக்கு எதற்காக இந்தத் தொல்லை? நீங்களாகவா தொல்லையைத் தேடிக் கொள்வது? அதைத்தான் கேட்கிறேன். குற்றாலம் போய் வாருங்கள், கொடைக்கானல் போய் ஒரு மாதம் இருந்து விட்டு வாருங்கள் என்று தலைப்பாடாகச் சொன்னால் கேட்டீர்களா? குடகு போக வேண்டும் ஆரஞ்சு வாங்க, கொச்சி போக வேண்டும் முந்திரி வாங்க கோவை போகவேண்டும் மந்திரியைக் காண என்று இப்படி

எதையாவது சொல்லி என் வாயை மூடிவிடுவீர்! இப்போது? இலட்ச இலட்சமாகப் பணம் இருந்து என்ன பயன்? காசநோய் வருவதை அந்தப் பணத்தினாலே தடுக்க முடிந்ததா? ஊரே பேசும் இனி காசமாம் அவருக்கு என்று! எதற்காக இதற்கு இதற்கு இடம் கொடுப்பது? காசம் வரலாமா உங்களுக்கு!

பந்த பாசத்துடன் இதுபோலப் பேசுகிறார் டாக்டர் பாஸ்கர் - கனகசபைக்குக் குடும்ப டாக்டர்! இந்த ஒரு குடும்பத்தின் மூலமாக மட்டும் டாக்டருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வருமானம் வரும். அவர் வந்து “ஊசி’ போட்டால்தான், அம்மாவுக்குத் தூக்கமே வரும் என்று”ஐயா’ வே சொல்கிறார் : “ஐயாவுக்குத் தனியாகத் தயாரிக்கப்பட்ட”டானிக்’ டாக்டர் கொடுக்கிறார்’ வேறு ஒருவருக்கும் கிடைக்காததாம், அந்த டானிக்!

கிடைக்காததா, தேவைப்படாததா என்று கனகசபையின் "வீட்டில்’ கேட்பார்கள், குறும்புப் புன்னகையுடன்.

டாக்டர், கனகசபையின் ஆதரவு பெற்றுத்தான் ஜில்லா மிராசுதாரர் சங்கத்தின் வைத்திய ஆலோசகரானார்! வியாபார சங்கத்தார் நடத்தும் "பிரசவ ஆஸ்பத்திரி‘க்கு "கௌரவ’ டாக்டரானார். அவர் பரிவு காட்டக் கடமைப்பட்டவர்தானே!

காசம்தானே இதற்கு ஏன் இப்படிப் பயந்து பதறிக்கிடக்கறே - பைத்தியம்! பைத்தியம்! என்னை என்ன செய்துவிடும் இந்தக் காசம்! இதோ பார்! இது எப்படிப்பட்ட உடம்பு தெரியுமா! பாம்பு கடித்தால்கூட விஷம் ஏறாது. அவ்வளவு மூலிகைச்சாறு உள்ளே போயிருக்குது. ஏதோ என்னோட வந்து நடக்கச் சொல்லு உன்னோட தம்பியை; வயது என்ன இருபதுதான்! அறுபதுன்னு கணக்கு என் வயது, வந்து போட்டி போடச் சொல்லேன் வாலிப வயசுக் காரனுங்களை. காசம்னு டாக்டர் சொன்னதும் ஐயோ!

காசமாமே! என்று கவலைப்படுகிறாயே! கல்லுப்பிள்ளையார் போல இருப்பேன். நீ எதற்கும் கலங்காதே! கொஞ்சம் இழுப்பும் ஆயாசமும் இருக்கும்; ஒரு நாலு நாளைக்கு; ஒரு மருந்தும் சாப்பிடாமல், தன்னாலேயே போய்விடும். இருந்தாலும் டாக்டர் சங்கடப்படுவாரே என்பதற்காக அவர் கொடுத்த மருந்தையும் சாப்பிட்டு வைத்திருக்கிறேன். நாளை மறுநாளே பாரேன். வழக்கப்படி, கோயில் பிரதட்சணம் செய்யிறேனா இல்லையான்னு. காசம் என்னை என்ன செய்துவிடும்! சுத்த சொத்தையான வியாதி, இந்தக் காசம்!!

அந்தக் கண்களிலே வெறுப்பு இருந்தது; அவர் அதை வேதனை என்று எண்ணிக் கொண்டார், ஏதோ சாப்பிட்டு விட்டதால் கண் சிவப்பாகிக் கிடந்தது, அழுது அழுது கண்களைச் சிவப்பாக்கிக் கொண்டதாக அவர் கூறுகிறார், யார்? கனகசபைதான்! மூன்றாம் தாரமாக வாய்த்த, மங்கையிடம்!

ஒரு உத்தமி, தன் கணவனுக்குப் பொல்லாத நோய் வந்ததறிந்தால், என்ன ஆகுமோ ஏது ஆகுமோ என்று கலங்கிப் போவாளல்லவா? கணவன், ஆறுதல் கூறி தைரியம் ஊட்டினா லொழிய, உத்தமி வேதனையில் வீழ்ந்து துடிக்க மாட்டாளா!

அதனால் கனகசபை தேற்றுகிறார். இடையில், தன்னை முதியவன் என்று பலர் கூறுவார்களே, இவள் அதுபற்றி என்ன எண்ணிக் கொள்வாளோ என்ற கவலையில், தனக்கு வயோதிகம் இல்லை, வாலிபம்தான், முறுக்குடன் இருக்கிறது என்று சொல்வைக்கிற ôர். வாலிபன் இது போலக் கூறத் தேவையில்லை! வாலிபம் தன்னாலே தெரிகிறது. வயோதிகர்தான், தனக்கு வாலிபம் இருப்பதாகக் கூறித் தீர வேண்டும். அதிலும்; பாவம் "கனகசபை' மூன்றாம் தாரமல்லவா பெற்றிருக்கிறார்.

அதனால்தான், கலங்காதே! காசம் என்னை ஒன்றும் செய்துவிடாது! என்கிறார். ஆனால்! மனத்திலேயோ, காசம் வேறு வந்து விட்டதே! ஏற்கனவே என்னிடம் வெறுப்பு இவளுக்கு - இப்போது என்னென்ன எண்ணுகிறாளோ என்ற கிகில். அந்தத் திகிலை மறைத்துக்கொண்டு தைரியம் பேசிக் காட்டுகிறார், கனகசபை.

காசமேதான்! ஆமாமாம். பெரிய டாக்டரே சொல்லி விட்டார். இனி அசாமி வீட்டோடுதான்! பொல்லாத நோயாச்சே காசம்; அடே அப்பா, ஆளை உருக்கி உருக்கி எடுத்துவிடுமே! ஒரு வேலையும் செய்யவிடாது. ஒரு ஊருக்கம் போகவிடாது சதா தொல்லைதான். காசம்னா இலேசா! ஆசாமி இனி பழையபடி அலைய முடியாது. எங்கே சரக்கு கிடைக்கும், எங்கே பதுக்கி வைக்கலாம் என்கிற காரியத்துக்காக. ஒரு பெரிய தொல்லையே விட்டுதுன்னு சொல்லணும். கொஞ்சமான தொல்லையா நமக்கு அவனாலே. எத்தனை வாடிக்கைக்காரர்களை வலைபோட்டு இழுத்துக் கொண்டான். நம்ம வியாபாரத்தையே நாசமாக்கப் பார்த்தானே. அவனோடு போட்டி போட்டுப் போட்டு நமக்கு இதுவரையிலே எத்தனை பத்தாயிரம் பாழாகியிருக்குது. காசம் வந்தது - இனி காலை மடக்கிக் கொண்டு வீட்டோடு கிடப்பான். நம்ம பாடு இனி நிம்மதிதான். காசம் என்ன இலேசிலே போய்விடுகிற வியாதியா என்ன? நாளைக்கு மூன்று ஊசிதான் போட்டுக் கொள்ளட்டுமே, போய்விடுமா! அதுதான் கிடையாதுன்னேன். காசம், கட்டையோடுதான்! பச்சைச் சிரிப்பு சிரிச்சே மட்டச் சரக்கை ஆசாமிகள் தலையிலே கட்டி அனுப்பு வானே, இனி முடியுமா? முகமே மாறி விடுமே, வியாதி அப்படிப் பட்டது. காரணமில்லாமல் கோபம் வரும், பொறுமை இருக்காது, இதெல்லாம் காசத்தாலே ஏற்படுகிற கோளாறு. நான் பார்த்திருக்கிறேனே, காச நோய் பிடித்த ஆசாமிகளை. எங்க மாமனுக்கே அந்த

நோய்தானே! ஒருவரும் கிட்டே போக முடியாது, எரிஞ்சி எரிஞ்சி விழுவாரு. வியாதியோட குணம் அது. காசம் பொல்லாத வியாதி. அது வந்தா அவ்வளவுதான், உலுக்கி உலுக்கி எடுத்துவிடும்.

தம்பி! பேச்சே, ஆசாமி எப்படிப்பட்டவனாக இருக்க முடியும் என்கிறதைக் காட்டிவிடுகிறதல்லவா? ஆமாம், கடைவீதியிலே கனகசபைக்குச் சரியான போட்டி யார் என்று கேட்டால் இந்த வடிவேலுவைத்தான் காட்டுவார்கள். கனகசபை யுடன் போட்டியிட்டுப் போட்டியிட்டுப் பொருள் நட்டம் அதிகம்; ஆனால், ஆசாமி சளைக்கவில்லை. கனகசபையை அடக்கி ஒடுக்கி மூலையிலே உட்கார வைக்காவிட்டால், என் ஒரு பக்கத்து மீசையையே எடுத்து விடுகிறேன் பார்! என்று பகிரங்கமாகச் சொன்னவன். அவன் மனத்திலே ஒரு மகிழ்ச்சி. காசநோய் காரணமாக, கனகசபை வியாபார வேலையைச் சரிவரக் கவனிக்க முடியாது என்பதாலே. நேரிலே போய்ப் பார்த்து, தைரியம் சொல்லிவிட்டுப் பழனிப் பிரசாதம் கூடக் கொடுத்துவிட்டு வந்தார். அது ஊரார் பார்க்க. இந்தப் பேச்சு, உள்ளத்தின் குமுறல், உண்மை!

காசம்டா, பயலே, காசம்! பெரியவீட்டுப் பிள்ளை, சொத்து இருக்குது அந்தஸ்து இருக்குதுன்னு சொல்லி, கிளிபோல உள்ளவளைக் கொடுத்தாளே பேராசைக்காரி பெருந்தேவி, தெரியுமா விஷயம், மாப்பிள்ளை இருக்கானே அவனுக்குக் காசம்! அவளைக் கல்யாணம் செய்துகொண்டு, என்ன சுகத்தைக் காணப் போகிறாள் செல்வி. அழுது கொண்டு இருக்க வேண்டியதுதான். ஊரே திருவிழா கொண்டாடினாலும், இந்தப் பய, வீட்டோடு முடங்கிக் கிடப்பான், அவனுக்குப் பணிவிடை செய்துகொண்டு இந்தப் பெண் செல்லி இருக்குது! பெரிய டாக்டர் வந்தாரா? புதிய மருந்து கொடுக்கல்லியா? - இப்படிப்பட்ட கேள்விகளுக்குப்

பதில் சொல்லிக் கொண்டிருக்கவேண்டிய வேலைதான் செல்லிக்கு! பெண்ணைப் பெரிய இடத்திலே கொடுக்கிறோம், மோட்டாரிலே மாப்பிள்ளையும் பெண்ணும் போவார்கள், கடற்கரையிலே உலாவுவார்கள் என்றெல்லாம் கனவு கண்டாள் பெருந்தேவி. இனி ஒவ்வொரு டாக்டர் வீடாகப்போய் வரவேண்டிய வேலைதான் செல்லிக்கு. காசம், தீராதநோய்! சொத்து இருந்தும் தான் சுகம் இல்லை. எந்த நேரத்திலும் கவலை, கலக்கம். போயும் போயும் ஒரு காச நோய்க்காரன் தானா கிடைத்தான் செல்லிக்கு என்றுதான் பலரும் பேசுவார்கள். கூலிவேலை செய்பவனாக இருந்தால் போதும் என்றுதான் ஒரு பெண் எண்ணுவாளே தவிர, காச நோய் இருந்தால் என்ன, கை நிறைய வளையல் போட்டிருக்கிறான். காதிலே வைரக்கம்மல் போட்டிருக்கிறான், மாளிகையிலே வாசம் செய்ய வசதி செய்திருக்கிறான், என்று எண்ணியா திருப்திப்பட்டுக் கொள்ள முடியும், பாவம்! அவனுக்குக் காசம்! அதைப் பார்த்துக் பார்த்துக் கலங்கிக் கலங்கி இந்தப் பெண்ணுக்கு என்னென்ன நோய் வந்துவிடுமோ யார் கண்டார்கள்.

செல்லி! - என்று, கனகசபையின் மூன்றாந்தாரம், மங்கையர்ச் செல்வியைத்தான், செல்லமாகப் பெயரிட்டுப் பேசுகிறார். தர்மகர்த்தா தனபால். பெயரில் மட்டுமே "தனம்’ இருந்தது, கையிலே, கொடுத்துவராமல் காலாவதியாகிவிட்ட கடன் பத்திரங்களும், புதுவருடப் பஞ்சாங்கமும்தான்! அவருடைய ஒரே மகன் சதாசிவத்துக்கு மங்கையை - செல்லியைத் தரும்படி, போய்க்கேட்டார் தனபால், நடையாய் நடந்தார். செல்லியின் தாயார் பெருந்தேவி ஒரே பிடிவாதம் பிடித்தாள், தன் மகளைச் சீமாட்டியாக்கிக் கண்குளிரக் காணவேண்டுமென்று.

இப்போது என்ன காண்கிறாள் பெருந்தேவி! காசநோய் பிடித்த கனகசபையைத்தானே! என்று

கேட்கிறார், தனபால்; பெருந்தேவி வீட்டுத் தோட்டக்காரனிடம், அவன் என்ன சொல்லுவான் பாவம். பெருந்தேவியிடம் போய்ச் சொல்ல முடியுமா! அவன் பார்க்கிறான் பெருந்தேவியை - அதிகமாகக் கவலைப் பட்டதாகக் கூடத் தெரியவில்லை. காசமாமே என்று யாரோ சொன்னதற்குக்கூட பெருந்தேவி, தரித்திரத்தைவிட ஆபத்தான நோய் வேறே கிடையாது, பணத்தைப்போல கைகண்ட மருந்தும் வேறே கிடையாது என்று சொன்னதாகக் கேள்வி.

அவளைக் கண்டிப்பதன் மூலம், தனபால், தன் மகனுக்கு அவன் விரும்பிய பெண்ணைத் திருமணம் செய்து வைக்க முடியாமற் போய்விட்டதே என்ற துக்கத்தைத்தான் வெளியிட்டுக் கொண்டார்.

காசநோயா! அவருக்கா? பாரேன், எவ்வளவு வசதியான வாழ்க்கை அவருக்கு. அவருக்கே காசநோய்! அவ்வளவு கெட்டுவிட்டிருக்கிறது ஊர். எதில் பார்த்தாலும் கலப்படம், ஏன் உடல்நலம்ட கெடாது. பலபேர் படாதபாடு படுகிறார்கள். காசம், குன்மம், இப்படிப்பட்ட பொல்லாத வியாதிகளால். இந்தக் காலம் அப்படிப்பட்டதப்பா, அதற்கென்ன செய்வது, என்னென்னமோ வியாதிகள். காற்றிலேயே விஷம் கலந்துவிட்டிருக்கிறது. தண்ணீர் சுத்தம் இல்லை. சாப்பாட்டுப் பண்டங்கள் மோசமான நிலையில். காசம் போன்ற நோய் ஏன் வராது?

பழைய சம்பிரதாயங்களைக் கைவிட்டு விட்டதாலேயே எல்லா நோய்களும் வந்துவிட்டன என்று பிரசாரம் செய்து, பிரமுகர்களிடம் நன்கொடை திரட்டி “யோகாசன சாலா’ அமைத்து அதற்குத் தலைவர் ஆகிவிட்டிருந்த”வியாசர்’ இதழ் ஆசரியர் வேம்பு அவர்களின் விமரிசனம் தம்பி! ஒவ்வொரு சம்பவத்தையும், தனது கருத்துக்கு வலுவளிக்கப் பயன்படுத்திக் கொள்ளும் பக்குவம் தெரிந்தவர்,

கனகசபைக்குக் காசம் என்றவுடன், அவரிடம் சென்று பதினைந்தே நாட்கள், "பத்மாசனம்' முறைப்படி - பிறகு காசம் இருக்கிறதா என்று தேடவேண்டும், ஓடியே போய்விடும் என்று சொல்லிவிட்டு, வியாசர்' இதழுக்குக் கனகசபையை ஆயுள் சந்தாதாரர் ஆக்கிக் கொண்டவர். தமது யோகாசன சாலையை வளரச் செய்ய, கனகசபையின் காசம் ஒரு வரப்பிரசாதம் என்று எண்ணி மகிழ்ந்து பேசுகிறார்.

தம்பி, பார்த்தனையா, உலகத்தின் போக்கை! கனவான் ஒருவருக்குக் காசநோய் என்றவுடன் எந்தெந்த நிலையினர், என்னென்ன நோக்கத்துடன், பேசுகிறார்கள் "பார்த்தனையா?

கனகசபை, சீமான்; ஆகவே அவருக்குக் காசம் என்றதும் பலருடைய கவனமும் அதிலே செல்கிறது. அவரவர்கள் தமக்கும் கனகசபைக்கும் உள்ள தொடர்பு கிளறிடும் எண்ணத்துக்கு ஏற்றவிதமாகப் பேசுகிறார்கள்.

காசம் போன்ற நோய் மட்டுமல்ல, கனவானைப் பீடித்துக் கொள்ளக்கூடிய ஆணவம் என்ற நோய் பற்றிக்கூட, ஒவ்வொருவர் கூறிடும் கருத்தும், அவர்களுக்கும் அந்தச் சீமானுக்கும் உள்ள தொடர்பின் தன்மைக்கு ஏற்றபடிதான் அமையும்.

ஆணவம் கண்டிக்கத்தக்கது, வெறுக்கத்தக்கது, தவிர்க்கப் பட்டாக வேண்டியது. இது பொது இலக்கணம்; பாடப் புத்தகங் களில். ஆனால் சமூக அமைப்பு இன்றுள்ள நிலையில் ஆணவம் பிடித்த ஏழையை அடக்கிட, கண்டித்திட ஆயிரம்பேர் ஓடோடி வருவார்கள், உருட்டு விழிகாட்டியபடி, ஆனால் செல்வத்தாலோ, பதவியாலோ உயர்ந்த இடத்தில் அமர்ந்துவிட்ட கனவான், ஆணவன் கக்கினால், ஏன் என்று கேட்டிட, எதிர்த்து நின்றிட மிகப் பெரும் பாலானவர்கள் வரமாட்டார்கள். அஞ்சுவர்! ஒதுங்கிக் கொள்வர்! முணுமுணுப்பர்!

சரி, தம்பி! காசநோய்க்காரனைப் பற்றிப் பலர் பல்வேறு விதமாகப் பேசினார்களே, உனக்கு என்ன தோன்றுகிறது. பார்த்துவிட்டுத்தான் சொல்லுவேன் என்கிறாயா, சரி வா! போய்ப் பார்ப்போம்.

என்ன அண்ணா! குடிசைக்குள் போகிறாயே..... காசநோய்.... கனவான் மாளிகையில் அல்லவா இருப்பான், இங்கு....! என்று தானே கேட்கிறாய். தம்பி! உற்றுக்கேள்! இதுவும் காசநோய்க் காரன் வீடுதான்! ஏழை இல்லம்.

என்னை என்ன செய்யச் சொல்றே. காசம்னு இப்பத் தான் தெரியுது. பெரிய டாக்டர் முப்பது ரூபா வாங்கிக் கொண்டு, அதற்குப் பிறகுதான் இது காசம்னு சொன்னாரு. நீர்கோத்து கிட்டு இருக்குது வேறே ஒண்ணும் இல்லே, எண்ணெயைக் காய்ச்சித் தேய்ச்சி நாலு வாரம் தலைமுழுகுன்னு, நம்ம வைத்தியர் சொன்னாரு. இதற்கு முன்னே அவர் சொன்னா சொன்னபடி தானே நடந்து வந்தது. நம்பினேன். நாளை ஓட்டிவிட்டாயே, வியாதி முற்றிவிட்டிருக்குதே என்ற கோபிக்கிறார் பெரிய டாக்டர். நான் என்ன செய்ய. இதுக்கு மருந்து மட்டும் சாப்பிட்டா பிரயோஜனம் இல்லையாம். ஆகாரமுறையே மாறணுமாம். மாறணும்னா என்னா தெரியுமா; டாக்டர் சொல்கிற முறைப்படி சாப்பிட வேண்டுமென்றா வேலைக்கு மூன்று ரூபா வேணும். ஐயா நான் ஏழைன்னு சொன்னேன்; அவரு சிரிக்கிறாரு. காசம், ஏழை பணக்காரன் என்றா வித்தியாசம் பார்க்கும்னு கேட்கிறாரு. வெட்கமாகக் கூட இருந்தது அவர் பேச்சைக்கேட்க. வாரத்துக்கு மூன்று ஊசியாம்; ஊசி ஒன்றின் விலை பதினைந்து ரூபாயாம், இப்படி ஆறு மாதமாம். அத்தோடு விடுதா! அந்த ஆறு மாதம் அலையக்கூடாதாம், பாடுபடக் கூடாதாம். அதைவிட வேடிக்கை துளியும் கவலை இருக்கக்கூடாதாம். கேட்டயா! கவலை இருக்கக் கூடாதாம் இந்த வியாதிக்கு. அந்தப்பய வீட்டை

விட்டுப் போயி வருஷம் இரண்டு ஆகுது. அவனுக்குக் கழுத்தை நீட்டிய பாவத்துக்காக அந்தப் பொண்ணு இங்கே குமுறிக்கிட்டு இருக்குது, இந்தப்பய நாலு எழுத்து படிப்பான் நாணயமா இருப்பான்னு நினைச்சா, வீடு தங்கறதில்லை படிப்பிலே வகையில்லை, இப்படி இருக்குது நம்ம குடும்பம்; நான் கவலைப்படக் கூடாதுன்னு டாக்டர் சொல்கிறார்; நினைத்தாலே சிரிப்புத் தான் வருது. மிளகா மிஷனுக்குப் பக்கம் இருப்பவன், தும்மக்கூடாது இருமக்கூடாதுன்னு சட்டம் போட்டா நடக்கிற காரியமா! அதுபோல இருக்குது டாக்டர் சொல்றது. என்கூட வேலை பார்க்கறானே வெள்ளையன் அவன், காசம்தானே இது பரவாயில்லையே, வேறே எத்தனையோ பயங்கரமான வியாதிகளெல்லாம் இருக்கு தெரியுமான்னு சொல்லி மிரட்டி வைக்கறான். உயிருக்கு மிஞ்சியா உடைமை, வீட்டைக் காட்டி ஒரு ஆயிரம் ஐந்நூறு கடனை வாங்கிச் செலவழிச்சி, நோயைக் குணப்படுத்திக்க என்கிறாரு என் சிநேகிதர். ஆனா, வீட்டை விற்கணுமா னாலும், ஓடிப்போயிருக்குதே ஒரு தறுதலை, அதுவந்து கையெழுத்துப் போட்டாகணுமாம். காச நோய்க்காரன்னு தெரிந்தா போதும், வேலையிலேயே இருந்து நீக்கிவிடு வாங்க. எத்தனையோ தொல்லையைத் தாங்கித் தத்தளிக்கிற என்னைப் பார்த்தா வந்து சேரவேண்டும் இந்த வியாதி!

புரிகிறதல்லவா, தம்பி! ஏழை வீடு! காசநோய் என்று தெரிந்து கொள்வதற்குள்ளேயே, நோய்முற்றி விட்டிருக்கிறது. கனவானா, உடனே டாக்டர் கண்டுபிடித்துக்கூற. இவன் உழைப்பாளி - மண்டி பண்டரிநாதன் கடையிலே எடுபிடி வேலையிலே துவங்கி இப்போது எண்பது ரூபா சம்பளம் வாங்கும் மானேஜர் வேலை பார்க்கிறான் - பெயர் ஆரோக்கிய சாமி! மனைவி பெயர் தெரியுமா, சந்தோஷத்தம்மாள்! கிருத்தவக் குடும்பம் தம்பி! ஓடிப் போய்விட்ட பயல்

பெயர் சாலமன். "இன்னொன்று' பெயர் பீடர்! என்ன செய்வான் இந்தக் காசநோய்க்காரன் டாக்டர் சொல்கிறபடி நடக்கமுடியுமா! கவலை இருக்கக்கூடாதாமே! பார்க்கும்போதே உனக்குக் கவலையாகத்தான் இருக்கும். தம்பி! புறப்படு! காசநோய் கொண்ட இந்த ஏழையைப் பற்றி என்னென்ன பேச்சு கிளம்பியிருக்கிறது என்பதைப் பார்க்கலாம்.

ஏழைதான், என்றாலும் என்ன செய்வது, வியாதியை ஓட்டியாக வேண்டுமே. எங்காவது கடன் வாங்க வேண்டியது தான். வேறேவழி. அநியாய வட்டி கேட்டால் கூடச் சம்மதிக்க வேண்டியதுதான்.

தம்பி! அதோ மண்டிக்கடைக்கு எதிர்ப்புறம் பார்த்தனையா, வட்டிக்கடை! உள்ளே போகலாம்.... என்ன கண்டிப்பான குரல், கேட்டனையா! காசம் என்று சொன்னதும், கல்மனமும் கரையும் என்று நாம் எண்ணிக்கொள்கிறோம். இந்தக் குரல், அதிகாரக் குரல்! கேள், தம்பி!

காசமா? ஆராய்ச்சி நடத்தினார் போலிருக்கு! காசமா இருந்தா என்ன, குன்மமா இருந்தா என்ன! பட்ட கடனைத் திருப்பித்தரச் சொல்லி, கண்டிப்பாய் பேசினா, உடனே காசம், குன்மம், கைகால் விழுந்துவிட்டது என்று எதையாவது சொல்லிக் கா-லே வந்து விழுவது! காசமாமா, காசம்! அதற்கு என்னை என்ன செய்யச் சொல்றான் கொடுத்த கடனை விழுங்கிவிட்டா, காசம் போய்விடும், அதனாலே பணத்தைத் திருப்பித் தரச் சொல்லிக் கேட்கல்லே, உன் காசம் போனால் போதும்னு சொல்லச் சொல்றானா? இல்லையானா, கலயத்தைத் தூக்கிக்கிட்டு வீட்டுக்கு ஓடிப் பச்சிலை அறைச்சித் தரச் சொல்லுகிறானா! காசம் வந்துவிட்டதாமா, காசம்! வரும், வரும்! கொடுத்த பணத்தைத் திருப்பிக் கேட்டா காசமும் வரும், கண்ணிலே புண்ணும் வரும்!

கடன் கொடுத்தவனிடம் போய், காசம் - குன்மம் - காய்ச்சல் என்று எதைச் சொல்லி என்ன பயன்? அதிலும் வேடிக்கை என்ன வென்றால் தம்பி! கடன் பட்டவனுக்கு நோயும் கண்டுவிட்டது என்றால், கடன் கொடுத்தவன் மேலும் கண்டிப்புக் காட்டுவான்! சீக்கிரமாகக் கடனை வசூ-த்துவிட வேண்டும். ஆசாமி போய்விட்டா கொடுத்த பணமல்லவா கோவிந்தா ஆகிவிடும்! ஆகவே, இப்போதே பணத்தை வசூலித்தாக வேண்டும்.

அந்தப் பரபரப்புடன் வட்டிக்கடைக்காரன் பேசுகிறான். கடனிலே ஒரு பகுதியாவது திருப்பிக் கொடுத்து விட்டால், பிறகு அவனே கூட; பரிவுகாட்டுவான் பேச்சில், பயம்வேண்டாம் காசநோய்க்காக என்பான், மருந்து பற்றிய விவரம் கூடச் சொல்லுவான். இப்போது அவனுக்கு வேண்டியது பணம்! அந்த நோயாளி பிணமாவதற்குள்!

தம்பி! எதிரேதானே மண்டிக்கடை; அந்த முதலாளி கைகொடுக்கமாட்டாரா; அவருக்கு இவ்வளவு ஆண்டுகளாக வேலை பார்த்தவனிடம் சிறிதளவாவது பிரிவு இருக்கத்தானே செய்யும். மாடாக உழைத்தவனல்லவா, முதலாளியின் குரல்கூடக் கேட்கிறது, வா, வா, போய்க் கேட்போம்.

காசமாமா! சொல்கிறாரா? சொல்லுவாரே, ஆசாமி என்ன சாதாரணமானவரா! எல்லாவிதமான வேஷமும் போடுவாரே! காசம்னு சொன்னா, பச்சாத்தாபப்பட்டு, விட்டுவிடுவாங்க என்கிற தந்திரம். தெரியுமே எனக்கு, கணக்கிலே திருட்டும் புரட்டும் செய்துவிடுவது, கண்டு பிடித்தது தெரிந்தா, மாட்டிக் கொண்டா உடனே இழுத்துப் போர்த்துக்கொண்டு வீட்டிலே படுத்துக் கொண்டு, எனக்குக் காச வியாதி வந்துவிட்டது என்று சொல்லிக் கண்ணைச் கசக்கிக் காட்டுவது! இந்த

வித்தை எனக்குத் தெரியாதா! மரியாதையா அந்தப் பயலை நாளைக் காலையிலே பணத்தோடு வந்து கணக்கைத் தீர்த்துக்கொண்டு போகச் சொல்லு; இல்லே! காசத்துக்கு மருந்து தருகிற பெரிய ஆஸ்பத்திரி இருக்குதே, - எது? ஜெயில்! ஆமா அங்கேதான் அனுப்பிவைப்பேன். காசம் கீசம்னு சொல்லி ஏய்த்துவிடலாம் என்று எண்ணிக் கொள்ள வேண்டாமென்று சொல்லு. எனக்குத் தெரியும் இவனோட காசம்! போ! போ! இழுத்துக் கொண்டுவா, பயலை!!

கிணறு வெட்டப் பூதம் கிளம்பும் கதை போலிருக்கிறதே என்று பதறுகிறாயா. தம்பி! பதறாதே! கணக்கிலே திருட்டும் புரட்டும் துளியும் கிடையாது. அதைச் செய்திருந்தால் அவன் ஏன் பாவம், நோயாளியாகி இருக்கப் போகிறான். தனக்கு நோய் வந்துவிட்டதே என்ற கவலையில், கணக்கிலே தவறு செய்துவிட்டிருக்கிறான், வரவு வைத்து எழுதவேண்டியதைச் சரியாகச் செய்யவில்லை. பணத்திலே அவன் கைவைக்கவில்லை. பணம், பெட்டிக்குள் இருக்கிறது; மறதி; ஆகவே, அது கணக்கில் சேரவில்லை.

கணக்கிலே புரட்டுச் செய்து பணத்தை மோசம் செய்துவிட்டு, காசம் என்று வேஷம் போட்டுத் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறான் என்று முதலாளி அவசர முடிவு செய்கிறான். ஆரோக்கியசாமி, ஏழை; சத்தியத்தை மதிப்பவன். அவன் வீட்டுக்கு மண்டிக்கடை ஆள் போய் என்னென்ன மிரட்டுவானோ, வா, வா, போய்க் கேட்போம்.

காச நோயாமா? யார், பெரிய டாக்டர் சொல்லி விட்டாரா? பெரிய டாக்டரல்லவா, பெரிய பெயராகத்தான் வைப்பார், நோய்க்கு. வெறும் பீதி கிளப்புகிறார். காச நோயல்லப்பா, காச நோய் - டாக்டர் காசு பறிக்கச் சொல்லுகிறார் காசநோய்

என்று. நாலு வேளை மிளகுக் கஷாயம் சாப்பிடு, ஒரு நோயும் இருக்காது. அலுப்பின் பேரிலே ஒரு ஆயாசம், இது. இதுவா காசநோய்! வீணாக மனத்தைக் குழப்பிக் கொள்ளாதே. காசநோய் என்றால் இந்நேரம் உன்னை நடமாட விட்டிருக்குமா, பேச விட்டிருக்குமா! அதனுடைய குணமே வேறே! இது காச நோயே அல்ல.

முதலாளி அனுப்பிய ஆள்தான். அவனுக்குத் தெரியும் ஆரோக்கியசாமியின் நாணயம். ஆகவே, அவன் விவரம் கேட்கிறான். மறதியால் நேரிட்டுவிட்ட தவறு பற்றி ஆரோக்கிய சாமி சொல்லிவிட்டு, மண்டிக்குக் கிளம்புகிறான், முதலாளியின் சந்தேகத்தைத் துடைக்க.

ஆரோக்கியசாமிக்கு ஆறுதல் அளிக்க, தைரியம் கூறுகிறான் அவனைப் போன்ற ஏழை, ஏகாம்பரம்; இது காச நோயே அல்ல என்று.

அந்த ஏழையின் பேச்சு ஒரு தெம்பு கொடுக்கிறது ஆரோக்கியசாமிக்கு. பழைய கோட்டை உதறிப் போட்டுக் கொண்டு புறப்படுகிறான். சந்தோஷத்தம்மாள்கூட, தன் கணவனுக்கு உள்ளபடி காசம் இல்லை; வீண் சந்தேகம், பயம், இதனால் கவலை என்றுதான் எண்ணிக் கொள்கிறார்கள்.

மறதியாகப் பெட்டிக்குள் வைத்துவிட்ட பணத்தை எடுத்துக் கொடுத்ததும், முதலாளி மகிழ்ந்து போவார், அல்லவா! அந்த எண்ணம் துள்ளுகிறது அவன் மனத்தில். அதனால்தான் அத்தனை வேகமான நடை.

அய்யோ! என்ன இவனுக்கு, மறதி கூடப் பிறந்த வியாதி! பாதை ஓரத்தில் நடக்காமல், இப்படி....

அய்யோ! அடடா; ஏ! கிழவா! ஏ! ஏ! மோட்டார்!

அவ்வளவுதான் தம்பி! நாம் செய்யக்கூடியது. அவன் போய்விட்டான். காசம் இனி அவனை

ஒன்றும் செய்யாது!

மோட்டார் ஓட்டி வந்தவர் டாக்டர்! அவரே கூறி விட்டார், அதிர்ச்சி - இருதயம் வெடித்துவிட்டது என்று. அதே டாக்டர் தம்பி! கனவான் வீட்டு, டாக்டர்.

அங்கிருந்து அவசரமான அழைப்பு. அதனால்தான் மோட்டாரை வேகமாக ஓட்டிக்கொண்டு சென்றார், வழியில் இவன்!

போலீசுக்கு ஏதோ குறிப்பு கொடுக்கிறார். மோட்டார் கிளம்புகிறது; கனவான் மாளிகைக்கு. அவருக்குக் காசமல்வா!! போகலாமா மறுபடியும், மாளிகைக்கு? வேண்டாம் என்கிறாயா! ஆமாம் தம்பி! வேதனையாகத்தான் இருக்கும். ஆனால், என்ன செய்வது, நிலைமை அவ்விதம் இருக்கிறது.

உலகின் போக்கு இருக்கும் விதம்பற்றி எண்ணிப் பார்த்திட வேண்டும் என்பதற்காக மட்டுமல்ல காசு மிக்கவனுக்குக் காசநோய் வந்திடின் எவரெவர் என்னென்ன விதமாகப் பேசிடுவர் என்பதனை எடுத்துக் காட்டியது.

வேறோர் விந்தை நடைபெற்றிடின் தம்பி! என்ன கருதிடத் தோன்றும்.

வேகமாக மோட்டாரை ஓட்டிக்கொண்டு சென்று ஏழையைச் சாகடித்தாரே ஒரு டாக்டர், அவர் கிளம்புகிறார் என்று வைத்துக்கொள். ஆபத்தில்லாமல் மோட்டார் ஓட்டும் முறைபற்றிய விளக்கமளித்திட! எப்படி இருக்கும்!! கை கொட்டிச் சிரிப்பர்.

காசு படைத்தவர் என்பதால் மூன்றாந்தாரம் தேடிப் பெற்றுக்கொண்ட காசநோய்க்காரர் கனகசபை "இல்லற இன்பம்’ பற்றிய சொற்பொழிவு நடாத்திடக் கிளம்பிடின் எப்படி இருக்கும்!

அம்மையார் - அதாவது கனகசபையின் இல்லக் கிழத்தியார் - இளமங்கை - "பதிபக்தி' மகத்துவம் பற்றிய காலட்சேபம் செய்திடின் மக்கள் என்ன நினைப்பர்?

கைகொட்டிச் சிரிப்பர், கண்டித்திடுவர்; செயலிலே கோணலாக நடந்துகொண்டு சீலம் பற்றிப் பேசவும் வந்துள்ள னரே என்று கேலி பேசுவர். அப்படித்தானே?

இல்லை என்கிறேன், தம்பி! இல்லை என்கிறேன், உயர்ந்த இடத்தில் உள்ளவர்கள், செல்வம் படைத்தவர்கள், அக்கிரமம் பல செய்துவிட்டு, அவற்றினை மறைத்துவிட்டு, ஏதுமறியாதார் போல நடித்து, ஊருக்கே உபதேசம் செய்திட முன்வந்திடின், ஊர் மக்கள் திகைப்படைவர், ஆனால், கண்டித்துப் பேசிட முன்வர மாட்டார்கள்.

பெரிய இடத்துப் பகை நமக்கேன் என்று இருந்து விடுவர். அதுவே உலக வாடிக்கையாகிவிட்டது.

செய்த அக்கிரமத்தை மறைத்துவிடவும், மக்கள் அதனை மறந்துவிடும்படி செய்துவிடவும்கூட முடியும், செல்வவான் களால், ஆனால், சீலர்கள் என்று தம்மைக் கூறிக்கொண்டு ஊருக்கு உபதேசம் செய்து கொண்டிருக்கவும் முடியுமா, பெரும் பாலான மக்களுக்கு அச்சஉணர்ச்சி அழுத்தமாக இருக்கத்தான் செய்கிறது என்றாலும், இந்த நிலைமையையும் தாங்கிக் கொள்ள மாட்டார்கள் என்று வாதாட நினைப்பர் - சிலரேனும்.

அப்படிப்பட்டவர்கள் கூடத் தமது கருத்தை மாற்றிக் கொள்வர், முன்னாள் நிதி அமைச்சர் டி.டி. கிருஷ்ணமாச்சாரியார் தமிழகத்தில் அரசியல் உபதேசம் அருளிக் கொண்டு வருகிற விந்தையைக் கண்டபிறகு.

முடிகிறதே அவரால்! நாடு தாங்கிக்கொள்ளுகிறதே அவருடைய உபதேசத்தை!!

அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் - சுமத்தப்பட்ட என்றே கூறுகிறேன், தம்பி! மெய்ப்பிக்கப்பட்ட என்று கூறுவில்லை - பற்றிய பேச்சும் வதந்திகளும் நிரம்பக் கிளம்பின.

மறைந்த பிரதம மந்திரி லால்பகதூர், டி.டி. கிருஷ்ண மாச்சாரியார் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அபத்த மானவை, அடிப்படையற்றவை, கவனிக்கத்தகாதவை என்றுகூறி குற்றச்சாட்டுகளைக் கொண்ட புகார் மனுவைத் தூக்கிக் குப்பைத் தொட்டியிலே வீசிவிட்டு, டி.டி. கிருஷ்ணமாச்சாரியின் முகத்தைத் துடைத்து, முகமன் கூறி, மாசுமருவற்றவரே! மாநிதியே! மாச்சரியம் காரணமாகத் தங்கள் மீது இல்லாததும் பொல்லததுமான புகார்களைக் கூறினர், புல்லர்கள், சிலர் - உமது அருமை பெருமை, நேர்மை, நாணயம், திறமை, தகுதி, ஆற்றல் அறியாது. அந்தப் புகார்க் கடிதத்தைச் சுக்கு நூறாக் கிழித்துக் குப்பை கூடையில் எறிந்துவிட்டேன். ஆகவே, ஆற்றல் மிக்கவரே! புகார்பற்றித் துளியும் கவலையற்றுப் பதவியில் வீற்றிருந்து பாரதமாதாவுக்குச் சேவை செய்து கொண்டு வரவேண்டும்! மறுக்கக்கூடாது! பிரதம மந்திரியாம் எனது வேண்டுகோளை மறுக்கக் கூடாது! - என்றா கூறினார்?

இல்லை, தம்பி! இல்லை! புகார் மனுவை, இந்தியாவின் பிரதம நீதிபதியிடம அனுப்பி வைக்க இருக்கிறேன், அவர் பரிசீலனை நடத்தித் நமது கருத்தளிப்பது நல்லது, தேவை, முறை என்று கருதுகிறேன் என்று தெரிவித்தார்.

அவர் தெண்டனிடாதது மட்டும்தான் பாக்கி, அத்தனை பணிவுடன் கூறிப்பார்த்தார், புகார் பற்றித் தாங்களே பரிசீலனை செய்யலாமே, அல்லது தாங்கள்

அமைக்கும் ஒரு குழுவினர் பரிசீலனை செய்யலாமே, பிரதம நீதிபதியிடம் அனுப்பத் தேவையில்லையே என்று முறையிட்டுக் கொண்டார்.

தாங்களோ எனது சகா! தங்கள்மீது வந்துள்ள புகாரை நான் விசாரிப்பதா! செச்சே! அது முறையாகாதே! அதனால்தான் இந்தியாவின் பிரதம நீதிபதியிடம் அனுப்பி வைக்க எண்ணுகிறேன். அவர் துவக்க வேலையைத்தான் பார்த்திடுவார்; அதாவது இந்தப் புகார்களுக்குத் துளியேனும் ஆதாரம் இருக்கிறதா, விசாரணைக்கு எடுத்துக் கொள்ளத்தக்கதுதனா இந்தப் புகார், அல்லது வெறும் குப்பைதானா என்பதுபற்றிப் பிரதம நீதிபதி ஆராய்வார். அதுதான் முறை? அதுதான் என் முடிவு என்று வலியுறுத்தினார்.

தங்கள் முடிவு அதுவாக இருந்தால், நான் நிதி மந்திரியாக இனியும் இருந்து வருவது முறையாக இராது; எப்போது என்மீது வந்த புகார் பற்றிப் பிரதம நீதிபதியைக் கொண்டு பரிசீலனை செய்தாக வேண்டும் என்று முடிவெடுத்தீர்களோ, அப்போதே தங்கள் நம்பிக்கையை நான் பரிபூரணமாகப் பெற்றில்லை என்பது விளக்கமாகிறது. ஆகவே நான் என் பதவியை ராஜிநாமாச் செய்கிறேன் என்று தெரிவித்தார்.

லால்பகதூர், வருத்தம் தெரிவித்தார்; ஆனால், தமது முடிவை மாற்றிக்கொள்ள மறுத்தார், டி.டி. கிருஷ்ணமாச்சாரியார் தமது ராஜிநாமாவை வலியுறுத்தினார்; லால்பகதூர் அதனை ஏற்றுக்கொண்டார் - வருத்தத்துடன்!!

இது நடைபெற்ற நிகழ்ச்சி - நாட்டை ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டது.

புகார் பற்றியோ, அது குறித்து எழுந்த விவாரம் பற்றியோ, காமராஜரைக் கலந்தாலோசிக்க வேண்டும்

என்றுகூட லால்பகதூர் கருதவில்லை. பெரிய ரோஷக்காரரர் என்று விருதுபெற்ற காமராஜரும் தாம் இவ்விதம் புறக்கணிக்கப்பட்டிருப்பது பற்றி ஒரு வார்த்தை பேசவில்லை. எங்கோ கனாவில், கயானாவில் நடைபெறும் நிகழ்ச்சி என்று விட்டுவிட்டார்.

டி.டி. கிருஷ்ணமாச்சாரியார் பதவியை ராஜினாமாச் செய்தார். புதிய நிதி மந்திரி நியமிக்கப்பட்டார்.

புகார் மனுவைக்கூட லால்பகதூர் தள்ளிவிட வில்லை.

இன்று வரையில் - நாளை எப்படியோ - காமராஜரேகூட டி.டி. கிருஷ்ணமாச்சாரியார் மீது ஒரு அபத்தமான புகார் தொடுக்கப்பட்டது குறித்தோ, அதை ஒரு பெரிய பிரச்சினையாகக் கொண்டு ராஜிநாமாச் செய்யவேண்டிய நிலைக்கு அவரைத் துரத்திய நிலைமைகள் பற்றியோ ஒரு கண்டனம், ஒரு சொல் பேசவில்லை. அவருடைய அபாரமான ஆற்றல் அத்தனையும், தி.மு. கழகத்தின் எதிர்காலம் பற்றிய "ஆரூடம்’ கணிப்பதற்கே செலவிட்டுக் கொண்டிருக்கிறார்.

இப்படித் தன்னைக் கவனிப்பாரற்ற நிலையினராக்கி விட்டதனை எண்ணி, டி.டி. கிருஷ்ணமாச்சாரியார்,

அரசியல் துறவுபற்றியும்

சுயசரிதம் எழுதுவதுபற்றியும்

குறிப்பிட்டதுடன், டில்லியில் இருந்துகொண்டு அங்கு நடை பெற இருக்கும் "வேடிக்கை’யைப் பார்க்கப் போவதாகக் கூறினார்.

என்ன வேடிக்கையோ, கூறவில்லை.

எதிர்பாராத முறையில் லால்பகதூர் மறைந்தார்.

இந்திராகாந்தியார் பிரதம மந்திரியாவதற்காக டி.டி. கிருஷ்ணமாச்சாரியார் மும்முரமாகப் பணியாற்றினார்.

இந்திராகாந்தியார் தகுதியுள்ளவர் என்ற உணர்வு சலித்துப் போன உள்ளத்துட்ன் இருந்தவரையும் சுறுசுறுப்பாக்கிற்று என்று கூறினர்.

வேறு சிலரோ, தப்பித் தவறி மொரார்ஜிதேசாய் பிரதம மந்திரியாக வந்துவிட்டால், புகார் மனு பற்றிய புதுக் கட்டங்கள் அமைந்துவிடுமே என்ற திகில் உலவுகிறது என்றனர்.

இந்திராகாந்தியார் வெற்றி பெற்றார்.
அவர்களாவது, டி.டி. கிருஷ்ணமாச்சாரியார் மீது -
பொறாமை
பொச்சரிப்பு
பகை
போட்டி உணர்ச்சி
போன்றவை காரணமாகச் சிலர்
அபத்தமான
ஆதாரமற்ற
அலட்சியப்படுத்தத்தக்க

புகார்களை அனுப்பியுள்ளனர். அதனை நான் பொருட்படுத்த வில்லை. அவர் மாசு அற்றவர் என்று தீர்ப்பளிக்கிறேன், அவருடைய பெருமையை நாடு உணரத்தக்க விதத்தில், அவர்மீது தொடுக்கப்பட்டுள்ள புகாரைக் குப்பையில் போட்டுவிட்டு மீண்டும் அவரை மந்திரிசபையில் அமர்ந்து பணியாற்றும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன் என்று அறிவித்தாரா என்றால் இல்லை.

அவர், தமது பதவியை ராஜிநாமாச் செய்து

விட்டதால், அவர் குறித்து அனுப்பப்பட்ட புகார்பற்றி மேற்கொண்டு எந்தவிதமான நடவடிக்கையும் மேற் கொள்ளத் தேவையில்லை என்று சர்க்கார் முடிவு செய்கிறது என்று மட்டுமே அறிவித்தார்;

டி.டி. கிருஷ்ணமாச்சாரியார் குற்றமற்றவர் என்று கூறிடவில்லை.

டி.டி. கிருஷ்ணமாச்சாரியார் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் பொய்யானவை என்று மெய்ப்பிக்கப் படவில்லை.

போதுமான அளவு தன்மான உணர்வு உள்ள எவரும் இந்த நிலையை வரவேற்கத்தக்கது என்று ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். தகுத்த முறையில் புகார்பற்றி பரீசீலனை செய்து, என்மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் பொய் யானவை என்று மெய்ப்பிக்கப்படவேண்டும். அதுதான், சமூகத்தில் எனக்கு உண்மையான மதிப்பைக் கொடுக்கும். ஆகவே, புகார் பற்றிய விசாரணைக்கு ஏற்பாடு செய்யும்படி வற்புறுத்துகிறேன்.

என்று டி.டி. கிருஷ்ணமாச்சாரியார் வற்புறுத்தி இருக்க வேண்டும். செய்யவில்லை! ஏன் என்றும் கூறவில்லை!

தம்மீது பூசப்பட்ட அழுக்கைத் துடைத்துக்கொள்ள முனையாமல், அவர் கிளம்பிவிட்டிருக்கிறார், எதிர்க்கட்சிகளை - குறிப்பாக, கழகத்தை - வெளுத்து வாங்க!

அவர் தரிசனம் கிடைத்ததும், பார்வையாளர்களின் கண்களிலே ஒருவிதமான குறும்புப் பார்வை! இதழ்களிலே ஒரு கேலிப்புன்னகை !

மெல்லிய குரலில் பேசிக் கொள்கிறார்கள் :

இவர் கதியைப் பாருங்கள் !

இருந்ததை இழந்துவிட்டு அலைகிறார்.

இந்திராகாந்தியார் கூட இவருக்குப் பதவி தரவில்லை.

இவருக்காகக் காமராஜர் ஒரு வார்த்தை பரிந்து பேசவில்லை.

பதவிகூட வேண்டாம், புகார் அபத்தமானது என்று ஒரு வார்த்தை சொல்லி, இவர்மீது பூசப்பட்ட அழுக்கை யாவது துடைத்திருக்கலாமல்லவா! அதையும் செய்ய வில்லை.

இவர் கழகத்தின் அழுக்கு பற்றிப் பேசுகிறார்.

நமக்கோ இவரைப் பார்த்ததும், இவர்மீது இப்போது பூசப்பட்ட அழுக்கும், முன்பு கிளம்பிய முந்திரா ஊழல் கிளப்பிவிட்ட முடைநாற்றமும், அப்போது ஒரு தடவை இவர் பதவியைவிட்டு வெளியேறிய சம்பவமும்தான் நினைவிற்கு வருகின்றன.

என்று இவ்விதமாகத்தான் பேசிக் கொள்கிறார்கள்,

இந்த மனநிலையுடன் உள்ளவர்களின் மத்தியில் பேசுகிறார்: பலன் எத்தனை உருப்படியாக இருக்க முடியும் என்று விளக்கவா வேண்டும்.

ஆனால், பேசுகிறார்! அபாரமான நம்பிக்கையுடன்!!

எந்த நம்பிக்கை? மற்றவர் விஷயம் இருக்கட்டும் மகானுபாவரே! தங்கள் விஷயம் என்ன? ஏன் தங்கள் மீது துளியும் குற்றம் இல்லை; தொடுக்கப்பட்ட புகாருக்கு ஆதாரமே இல்லை என்று ஒரு விசாரணைக் குழு மூலம் விளக்கக்கூடாது. அப்படிச்

செய்து விட்டுப் பிறகு ஒழுக்கப் பிரசாரம் செய்தால் நன்றாக இருக்குமே என்று யாரும் கேட்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை!

அதைப் பார்த்த பிறகுதான், தம்பி! எனக்கு, காச நோய்ச் சீமானும் அவன் கடிமணம் செய்துகொண்ட காரிகையும், ஆளைச்சாகடித்த டாக்டரும், ஊருக்கு, முறையே இல்லற இன்பம் - பதிபக்தி - ஆபத்தின்றி மோட்டார் ஓட்டுவது போன்றவை பற்றிய "உபதேசம்' செய்ய முற்படுவது என்றால் மக்கள் என்ன கருதுவார்கள் என்று சிந்திக்கத் தோன்றிற்று.

என்ன கருதுவார்கள்? என்ன கருதுகிறார்கள்; டி.டி. கிருஷ்ணமாச்சாரியாரின் பேச்சைக் கேட்டுவிட்டு!

அவர் என்னமோ ஓயாமல் உச்சரிக்கிறார்!

கழகத்தை நம்பாதே!
கழகத்தை நம்பாதே!

என்று, ஊரூருக்கும் சென்று அவர் அந்தத் திருமந்திரத்தைத்தான் உச்சரித்தபடி இருக்கிறார். ஆனால், மக்கள் செவியில் விழுவதோ

முந்திரா விவகாரம்
முந்திரா விவகாரம்

என்ற சொற்களே!! காசநோய் கனகசபை இல்லற இன்பம் பற்றிப் பேசும் போது மக்கள் செவியில் என்ன விழும்!

மூன்றாந்தாரம்! இளமங்கை என்ற சொற்கள்!

மேலிடம் சென்றவர்கள் - பணம் காரணமாகவோ பதவி காரணமாகவே மேலிடம் சென்றவர்கள், தீயன புரிந்துவிட்டு, உபதேசிகளாக வடிவமெடுக்கும்போது, எதிர்த்துக் கேட்டிடமாட் டார்கள்; உன் வாயாலா இது

பற்றிப் பேசுகிறாய் என்று கூற மாட்டார்கள்; அவர்களின் கண்களிலே ஒரு குறும்புப் பார்வை மலரும்; இதழோரத்தில் ஒரு கேலிப் புன்னகை தெரியும்.

எனக்கு ஓவியம் தீட்டத் தெரியாது, தம்பி! தெரிந்திடின் எனக்குக் கொள்ளை ஆசை; அந்தக் குறும்புப் பார்வையையும், கேலிப் புன்னகையையும் படமாக்கித் தந்திடவேண்டும் என்று. இயலவில்லை. உன் மனக்கண்ணால் அந்தக் காட்சியைக் கண்டு கொள்ளக் கேட்டுக் கொள்கிறேன். கருத்தோவியம் கிடைத்திடும்.

அன்புள்ள
அண்ணாதுரை
22-5-66

‘சிலர்’ ‘பலர்’

ஆண்டான் - அடிமை முறை ஜனநாயகத்திற்கு முரண்!
தேர்தல் நடக்கிறது! “எல்லாம் காங்கிரசுக்குத் தெரியும்’ என்ற அடிப்படையில்!
”எல்லாம் அவர் அறிவார்; நாம் ஏதும் அறியோம்’ என்று பூஜித்ததன் பலன் என்ன?
“போ வெளியே; போகிறேன் வெளியே; போக்கி விடுவேன் வெளியே!’
”பிடித்து வைத்தால் பிள்ளையார்; வழித்து எழுந்தால் சாணி!

தம்பி!

“நாலுபேரைக் கலந்து பேசினீர்களா?”
”நன்றாக யோசித்துப் பார்த்தீர்களா?”
“உங்களுக்குத் தெரியாதா நல்லது கெட்டது?”
”அவருக்குத் தெரியும் எல்லாம்.”
“நமக்கு என்ன தெரியும்?”
”அவருக்குப்போய் நாம் சொல்லுவதா?”
“நாம் சொன்னாலா அவர் எடுத்துக்கொள்ளப் போகிறார்.”
”அவரிடம் போய் யார் பேச முடியும்?”
“யாரை அவர் கிட்டே சேர்ப்பார்?”
”அவரைப்போய்ப் பார்க்க முடியுமா?”
"நம்மை எல்லாம் பார்க்க அவருக்கு ஏது நேரம்?”

இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு கட்டத்தைக் காட்டுவது என்பதை விளக்கத் தேவையில்லை.

கட்டங்கள் என்பது மட்டுமல்ல, ஒவ்வொருவிதமான நிலைமை மாற்றத்தைக் காட்டுகின்றன.

ஊரிலே “பெரியவர்கள்’ ஆக முனைபவருக்கும், யாராவது ஒரு பெரியவருடைய சொற்படி நடந்துகொள்ள வேண்டும் என்ற இயல்பு கொண்டவர்களுக்கும் இடையே ஏற்படும்”தொடர்பு’ பல கட்டங்களை அடைகிறது. அந்தத் தொடர்பு, பல நிலைமை மாற்றங்களை உண்டாக்குகிறது. நல்லதுதான் சொல்லுகிறார் என்ற எண்ணமும், சொல்லுவது நல்லதற்காகத்தான் இருக்கும் என்ற நம்பிக்கையும் உள்ள கட்டத்தில், நல்லதுதான் சொல்லுகிறார் என்றாலும், நல்லதற்குத்தான் சொல்லுகிறார் என்ற நம்பிக்கை இருந்தாலும், நல்லது சொல்லத்தக்கவர்கள் வேறு பலர் இருப்பார்களே, அவர்களுடன் இவர் கலந்து பேசி, தான் கூறுவது நல்லதுதான் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டால் மேலும் நல்லதாக இருக்குமே என்ற எண்ணத்தைக் கொண்டிருக்கும்போதுதான்,

நாலுபேரைக் கலந்து பேசினீர்களா? என்று கேட்கத் தோன்றும்.

அறிவாளிதான் - நல்லதுதான் சொல்லுவீர்கள் - ஆனால் உங்களுடைய அறிவு மட்டும் போதுமா - அறிந்தவர்கள் பலர் இருப்பார்களே, அவர்களையும் கலந்து பேசினால்தானே நல்லது - உங்களுக்கு மட்டும் "சரி’ என்று தோன்றிவிட்டால் போதுமா - உங்கள் பேச்சை மட்டும் நம்பி நாங்கள் உங்கள் யோசனையை ஏற்றுக்கொள்ள முடியுமா - யோசனை கூறத்தக்கவர்கள், நல்லதா கெட்டதா என்று ஆராய்ந்து பார்த்துச் சொல்லத் தகுதி பெற்றவர்கள் பலர் இருக்கிறார்களே, அவர்களிலே நாலு பேரைக் கலந்து பேசினீர்களா என்று கேட்கும் போக்கிலேதான்.

நாலு பேரைக் கலந்து பேசினீர்களா என்று கேட்கிறார்கள்.

அதன் உட்பொருள், யோசனை கூறத்தக்க பலர் இருக் கிறார்கள். அவர்களிலே ஒருவர் நீங்கள்; உங்கள் ஒருவருடையயோசனையை மட்டும் ஏற்றுக்கொள்ளுவது முறையாக இருக்காது; மேலும் பலரும் உங்கள் யோசனையைச் சரியானது என்று ஒப்புக்கொள்கிறார்கள் என்று தெரிந்தால்தான், உங்கள் யோசனையை ஏற்றுக்கொள்ள மனம் இடம் கொடுக்கும் என்பதாகும்.

எல்லா மக்களுக்குமே, நல்லது கெட்டது புரிந்து கொள்ளத் தக்க, பொது அறிவு இருக்கத்தான் செய்கிறது; சிந்திக்கும் திறன் இருக்கத்தான் செய்கிறது. ஆனால், சிந்திக்கும் திறனைப் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பும், பக்குவப்படுத்திக் கொள்ளும் வாய்ப்பும், கூர்மையாக்கிக் கொள்ளும் வாய்ப்பும் எல்லோருக்கும் கிடைத்துவிடுவதில்லை; எல்லோருக்கும் ஒரு சீராக இருந்துவிடுவதுமில்லை.

அதனால்தான், சிலர், பலருக்கு யோசனை கூறிடும் அவசியமே எழுகிறது. அந்தச் சிலர், எல்லாம் அறிந்தவர்கள், பலர் ஏதும் அறியாதவர்கள் என்பதால் அல்ல.

அந்தச் சிலர், எதையும் சிந்தித்துப் பார்த்திடும் வாய்ப்பை அதிக அளவில் பெற்றுள்ளனர். அந்தப் பலர் அத்தகைய வாய்ப்பை, போதுமான அளவு பெற்றுக்கொள்ள முடிவதில்லை என்பதுதான் உள்ள நிலைமை.

சிந்திக்கும் திறனைப் பயன்படுத்திக் கொள்ளவும் செம்மைப்படுத்திக் கொள்ளவும், “பலர்’ வாய்ப்புப் பெற முடியாமலிருப்பதற்குக் காரணம், அவர்களுக்கு அதற்கு ஏற்ற அளவு அறிவுத் தெளிவு இல்லை

என்பது அல்ல, அவர்களின் வாழ்க்கை முறை அவர்களுக்கு”இக்கட்டாக’ அமைந்து விடுவதுதான் காரணம்.

இந்த அடிப்படையின்மீதுதான், “ஜனநாயகம்’ எழுப்பப் பட்டிருக்கிறது; சிலருக்கு”எல்லாம் தெரியும்’ - பலருக்கு, "ஏதும் தெரியாது’ என்ற ஆணவத்தின்மீது அல்ல.

அந்த ஆணவத்தின்மீது அமைக்கப்படுவது, சர்வாதிகாரம்.

எனக்கும் தெரியும், உனக்கும் தெரியும், முயன்றால் எல்லோருக்கும் தெரியக்கூடியதே. ஆனால் எனக்கு வேறு வேறு பிடிப்புகள், பிரச்சினைகள், இக்கட்டுகள் உள்ளன. ஆகவே நேரம் இல்லை யோசிக்க. உனக்கு அவ்விதம் இல்லை. எதுபற்றியும் சிந்தித்துப் பார்த்திடப் போதுமான வாய்ப்பு இருக்கிறது. ஆகவே உன் "யோசனை’யை நான் கேட்டுக் கொள்ளுகிறேன் என்ற முறையிலே அமையும் தொடர்புதான் ஜனநாயக முறை.

எல்லாம் அவருக்குத் தெரியும் - எனக்கு ஏதும் தெரியாது என்று ஏமாளிகள்கூட ஒப்புக்கொள்ள மாட்டார்கள்; ஆனால் சர்வாதிகாரி, எல்லாம் எனக்குத் தெரியும், மற்றவர்களுக்கு ஏதும் தெரியாது என்று கூறிட முற்படுவான்.

உனக்குத் தெரியும், யோசனை கூறத்தக்கவன்தான் நீ; ஆனால் உன் யோசனை மட்டும் போதாது. வேறு பலரையும் கலந்து பேசி, உன் யோசனையை தாங்கள் ஒப்புக்கொள்ளத் தக்கதாக ஆக்கிக் கொள் என்று கூறிடும் கட்டம், நாலு பேரைக் கலந்து பேசினீர்களா என்பது.

சொல்லுபவர்கள் - கேட்டுக் கொள்பவர்கள் என்ற இரு பிரிவு, பணம், அதிகாரம், ஜாதி போன்ற

அடிப்படைமீது அமைக்கப்படாமல், கேட்டுக் கொள்பவர்களின் தெளிவான சம்மதம் பெற்று மட்டுமே சொல்லுபவர்கள் இயங்க முடியும் என்ற அடிப்படையில் அமைவதே அடிமைத்தனத்தைப் புகுத்தாத, ஒரு அன்புத் தொடர்பை உண்டாக்கி வைக்கும். அந்த அன்புத் தொடர்புதான் ஜனநாயகம்.

அந்த நிலையிலே இருந்து மாறினாலோ, அந்த நிலை மாற்றப்பட்டு விட்டாலோ, பலர், சிலரிடம் யோசனை கேட்கும்போது, வேறு நாலு பேருடன் கலந்து பேசினீர்களா என்று கேட்பதே தவறு என்றோர் எண்ணம்கொண்டு யோசனை கூறத்தக்கவர் நாங்கள்தான், அதிலே ஐயப்பாடு இல்லை! தங்களைவிட மேலான யோசனை கூறத்தக்கவர் வேறு எவரும் இருப்பதாக நாங்கள் எண்ணவில்லை. ஆனாலும் இதுபற்றித் தாங்கள் நன்றாக யோசித்துப் பார்த்தீர்களா என்று கேட்க முற்படுகின்றனர்.

இந்தக் கட்டம் பிறக்கும்போதே, ஒரு படி கீழே இறங்கிவிட்ட நிலை ஏற்பட்டுவிட்டது என்பது பொருளாகிவிடுகிறது.

இந்தக் கட்டத்தில், யோசனை கூறுபவர், சற்று உயர்ந்த இடத்திலே அமர்ந்துகொள்ளுகிறார்; கேட்டுக்கொள்பவர்கள், தமது குரலைச் சற்று தாழ்த்திக் கொள்கிறார்கள்; சிலருக்கும் பலருக்கும் இடையே ஏற்பட்டுள்ள அன்புத் தொடர்பு சிறிதளவு கெட்டுவிடுகிறது; அந்த அளவுக்கு ஜனநாயகத்தின் தூய்மையும் பாதிக்கப்பட்டுப் போய்விடுகிறது.

உங்களுக்குத் தெரியாதா நல்லது, கெட்டது என்று பேசும் கட்டம் வந்ததும், ஜனநாயகத்தின் தூய்மை மேலும் கெடுகிறது என்று கூறலாம்.

கூறப்படும் யோசனை நல்லதா? கெட்டதா? இந்த யோசனையை நாலு பேரைக் கலந்து

ஆலோசித்துத்தான் கூறு கிறாரா அல்லது தாமாகவே சொல்லுகிறாரா, தீர யோசித்துச் சொல்லுகிறாரா அல்லது மனத்திலே தோன்றியதைச் சொல்லுகிறாரா என்றெல்லாம் எண்ணிப் பார்ப்பதுகூடத் தேவையில்லை, கூடாது, தவறு என்று நினைத்துக் கொண்டு, அவர் சொல்லுவதால் அது நல்லதாகத்தான் இருக்கும். ஏனெனில் அவர் நல்லது கெட்டது தெரிந்தவர் என்று ஒப்புக்கொள்ளும் பணிவு மனப்பான்மை கொண்டு விடுகின்றனர். இதன் மூலம், அந்தப் "பலர்' தாமாகவே தமது நிலையைக் கீழ்மட்டம் கொண்டு செல்கின்றனர். ஜனநாயகத்தின் அடிப்படையான அன்புத் தொடர்பு பாழ்படுத்தப்பட்டு,"தலை அசைக்கும' நிலை ஏற்பட்டு விடுகிறது.

அவருக்குத் தெரியும் எல்லாம்! என்ற பேச்சு, எதற்கும் "ஆமாம்' போடுகிறாயே, அவர் கூறிய யோசனை நல்லதாக இல்லையே, அதை ஏன் ஏற்றுக் கொள்ளுகிறாய் என்று வேறு சிலர் கூறிடும்போது, யோசனை நல்லதுதான் என்று மெய்ப்பிக்கவோ, வாதாடவோ இயலாமல், யோசனை கூறுபவரிடமே விளக்கம் பெறவோ, ஐயப்பாட்டினை நீக்கிக் கொள்ளவோ முனையாமல், அவர் கூறுவதை அப்படியே ஒப்புக்கொள்கிறேன்; புத்தியில்லாததால் அல்ல; அவருக்கு எல்லாம் தெரியும் என்று நான் நம்புவதால் என்று பேசுகின்றனர்.

எதைச் சொன்னாலும் தலை ஆட்டி விடுகிறோமே, அதைச் சிலர் இடித்துக் காட்டுகிறார்களே என்பதை உணரும்போது எழும்பும் எரிச்சலையும் கோபத்தையும் குறைத்துக்கொள்ள

எல்லாம் அவருக்குத் தெரியும் என்று கூறிடத் தோன்றுகிறது.

எல்லாம் அவருக்குத் தெரியும் என்று கூறிட முற்படும் போதே, நான் எதைப்பற்றியும் சிந்திக்க

வேண்டிய அவசியமே இல்லை. ஏனெனில் எனக்காக எல்லாவற்றைப் பற்றியும் சிந்தித்து, எனக்கு எது நல்லது என்பதைக் கண்டறிந்து கூறிடும் பொறுப்பை வேறு ஒருவரிடம் ஒப்படைத்து விட்டேன், அவர் எல்லாம் தெரிந்தவர்! என்று நம்பிக்கையை அழுத்தமாகக் கொண்டு விட்டதாக ஆகிவிடுகிறது.

இந்நிலை, அடிமைத்தனத்தை விரும்பி வரவேற்பதாக ஆகிவிடுகிறது.

"ஆண்டான் - அடிமை' எனும் முறை ஜனநாயகத்துக்கு முற்றிலும் முரணானது என்பது மட்டுமல்ல, அந்தக் கேடான முறையை ஒழித்திட வந்த ஏற்பாடே ஜனநாயகமாகும்.

அதே ஜனநாயகத்தில், சிலருக்கும் - பலருக்கும் இடையில் இருக்கவேண்டிய தொடர்பு, அறிவுத் தெளிவின் பேரில் கட்டப்பட்டு அன்புத்தொடர்பாக இருக்க வேண்டும் என்பதை மறந்து போனால், ஆண்டான் - அடிமை என்பதற்குப் பதிலாக எத்தன்-ஏமாளி என்ற முறையிலே தொடர்பு திரிந்து போய்விடும்.

எல்லாம் அவருக்குத் தெரியும் என்று ஏற்றுக்கொள்ளும் போக்கு பிறந்தவுடன், சுய சிந்தனை அடியோடு மடிந்து விடுவதுடன், மற்றவர் கூறுவது சரியா அல்லவா என்று ஆராயும் கடமையும் மறைந்து, எல்லாம் தெரிந்தவரிடம் நாம் இது சரியா அது சரியா என்று கேட்பதுகூடத் தவறு. அடாத செயல் என்று எண்ணிக்கொள்ளும் அசட்டுத்தனம் ஆட்கொண்டுவிடும். அந்த நிலை பிறகு,

நமக்கு என்ன தெரியும்

என்று பேசவைக்கும்: நம்பவைத்துவிடும், தாழ்வு மனப்பான்மை தலைதூக்கும்.

தாழ்வு மனப்பான்மை நிலைத்துவிட்டாலும், "எல்லாம் தெரிந்தவர்' என்று தன்னாலே ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டவரின் யோசனையைக் கண்ணை மூடிக்கொண்டு, பயபக்தி விசுவாசத்துடன் பின்பற்றி நடந்தும், தொல்லை தொலைய வில்லை, துயரம் போகவில்லை என்றாகிவிட்டால், ஒரு கசப்பு, ஒரு ஏமாற்றம், ஒரு வேதனை மெள்ளக் கிளம்புகிறது.

அவர் சொன்னது சரியில்லைபோல இருக்கிறதே, நல்லதற்குத்தான் சொல்வார், அவர் எல்லாம் தெரிந்தவர் என்று நம்பி, எதைப்பற்றியும் நாம் யோசிக்காமல், அவர் சொல்வதைக்கேட்டு நடந்து வருகிறோம். ஆனால் பயன் நலனுள்ளதாக இல்லையோ! அவர் கூறியது சரியில்லையோ! அவர் நாலுபேர்களைக் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வரவில்லையோ, அவரே சரியாக யோசிக்காமல் அவசரப்பட்டு ஒரு முறையைக் கூறிவிட்டாரோ; அவர் கூறிய முறை சரியில்லை, எதிர்பார்த்த நலனைத் தரவில்லை என்பதை அவருக்குக் கூறினால் என்ன? முறையைப்பற்றி அவரிடம் விவாதித்தால் என்ன? என்று எண்ணிடத் தோன்றும்; வேதனையும் ஏமாற்றமும் தாக்கும்போது. ஆனால் "அவரிடம்' போய்க் கூறத் தைரியம் வராது. ஏன்?

அவர் எல்லாம் தெரிந்தவர்!
நமக்கு என்ன தெரியும்!

என்று நம்பிக் கூறியாகிவிட்டதே! அதனால் ஏற்பட்டுவிட்ட தாழ்வு மனப்பான்மை, தயக்கத்தைத் தந்திடும். அப்போது, தயக்கத்துடன்,

அவருக்குப் போய் நாம் சொல்வதா! என்ற பேச்சு பிறக்கிறது.

“நாம்' பார்த்து”அவர்!' நமக்காக “அவர்' என்றிருந்த நிலைமாறி, அவர், மேலானவர்; நாம்

தாழ்நிலையினர்! அவர் எல்லாம் அறிந்தவர்; நாம் ஏதும் அறியாதவர்கள்; அவர் கூறுபவர், நாம், கேட்டுக் கொள்பவர்கள்; அப்படிப்பட்ட அவருக்கு'"நாம்' சொல்லுவதா! - என்று எண்ண வேண்டி வந்ததும், ஜனநாயகத்தின் சாயலையும் பாழ்படுத்திக் கொண்டாகிவிட்டது என்பது பொருளாகி விடுகிறது.

இன்னலால் தாக்குண்ட நிலையில், அவர் பெரியவராக, எல்லாம் தெரிந்தவராகவே இருக்கட்டும். ஏதோ நமக்குத் தெரிந்ததை, நமது நிலைமையை அவரிடம் போய்ச் சொன்னால் என்ன? சொல்லாவிட்டால் அவர் எப்படி நமது நிலைமையைத் தெரிந்துகொள்ள முடியும் என்று எண்ணிக்கொண்டு, மெள்ள மெள்ளத் துணிவைத் தருவித்துக்கொண்டு, "அவரிடம்' போய் தமக்குத் தோன்றியதைச் சொல்லச் சிலர் முற்படுவர்.

இதற்குள் "அவர்' எல்லாம் எனக்குத் தெரியும்! உனக்கு ஒன்றும் தெரியாது! என்று கூறத்தக்க உயரம் சென்றுவிட் டிருப்பார். கூறுவதைக் காது கொடுத்துக் கேட்கமாட்டார்; கூறுவதிலே பொருள் இருக்கிறது என்று ஒப்புக்கொள்ள மாட்டார்; கூறத் தகுதிபடைத்தவர்கள்தான் கூறுகிறார்கள் என்று ஒப்புக் கொள்ளமாட்டார்! ஒரு அலட்சியப் புன்னகையோ கை அசைவோதான் பதிலாகக் கிடைக்கும்.

அந்தக் கசப்பான அனுபவம் பெற்ற பிறகு,

அவரிடம் போய் யார் பேச முடியும்?

என்று ஏக்கப்பேச்சு புறப்படும்,

வேதனை வளர வளர, நாம் போய்ச் சொல்லுவோம், நாமாவது போய்க் கேட்போம் என்று வேறு சிலர் புறப்படுவர். "அவரை'க் கண்டு பேசவே

வாய்ப்புக் கிடைக்காது; அனுமதி கிடைக்காது!

அவர் "மேலே’ மட்டுமல்ல; நெருங்க முடியாத நிலையில்!! - என்று ஆகிவிடும்.

அப்போது வேதனை ததும்பிடும் நிலையில் பேசுவர்.
யாரை அவர் கிட்டே சேர்ப்பார்!
அவரைப் போய்ப் பார்க்க முடியுமா?
நம்மை எல்லாம் பார்க்க நேரம் ஏது!

என்ற விதமாக.

இதுபோல, “பலர்’ பார்த்துச்”சிலர்’ தமக்காக ஆட்சி நடத்தட்டும் என்று அனுமதி கொடுத்தான பிறகு; ஜனநாயகத்தின் தூய்மை கெடுக்கப்பட்டுப்போய்விட்டால், "சிலர்’ ஆட்டிப் படைப்பவர்களாகவும் பலர் அனுபவித்துத் தீரவேண்டியவர் களாகவும் ஆகிவிடுவர். குடியாட்சியே கொடுங்கோலாட்சி யாகிப் போகும்.

அதுபோல ஆகிவிடக் கூடாது என்பதற்காகவே, அந்தப் “பலர்’ ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறையாயினும், அந்தச்”சிலர்’ எல்லாம் தெரிந்தவர்கள் என்ற எண்ணத்தைக் கொஞ்சம் தளர்த்தி, நமக்காகச் சென்றவர்கள் சரியானபடி சிந்தித்து, சிந்திக்கத் தெரிந்த பலருடைய அறிவுரைகளையும் கேட்டு தமது யோசனையைச் செம்மைப்படுத்திக்கொண்டு, நமக்குப் போதுமான நலன்களை செய்தளித்துள்ளனரா என்று கணக்குப் பார்க்கும் முறை பொதுத் தேர்தல் - வகுத்தளிக்கப்பட்டிருக்கிறது.

அந்தச் சமயத்தில், "பலர்’ எந்த அளவு கணக்குப் பார்க்கும் திறமையைச் செய-லே காட்டுகிறார்களோ அதைப் பொறுத்தே சிலர்’ சீலர்களாக இருப்பதும் இல்லாமற்போவதும் இருக்கிறது.

எல்லாம் அவருக்குத் தெரியும்
நமக்கு என்ன தெரியும்

என்று ஜெர்மானிய மக்கள் எண்ணிக்கொண்ட கட்டம் வந்ததறிந்த இட்லர், தேர்தலையே நிறுத்திவிட்டான்!

நம் நாட்டில் தேர்தலை நிறுத்தவில்லை; நடத்துகிறார்கள்; ஆனால், எந்த அடிப்படையில் என்றால்,

எல்லாம் காங்கிரசுக்குத் தெரியும்
மற்ற யாருக்கும் எதுவும் தெரியாது

என்ற அடிப்படையில்!

இந்த அடிப்படையை ஏற்றுக்கொண்டு, தேர்தலில் ஈடுபடுவது, இருப்புப் பெட்டியைத் திறந்து அதிலிருந்து திருவோடு எடுத்துக் கொண்டு, பிச்சைக்குக் கிளம்புவது போன்ற கேலிக் கூத்தாகிப் போகும்.

காங்கிரசின் மூலவர்களின் மனப்போக்கு,

எல்லாம் எமக்குத் தெரியும்
மற்றவர்களுக்கு ஏதும் தெரியாது

என்று அடித்துப் பேசிடும் விதமாக இருக்கிறது என்பதை அக்கட்சியின் தலைவர்களின் பேச்சிலேயே தெரிந்து கொள்ளலாம்.

எந்தக் கட்சிக்கும் எந்தத் தகுதியும் கிடையாது என்பதுடன், எத்தகையவர் தம்முடன் சேர்ந்தாலும் அவர் எல்லாத் தகுதியும் பெற்றுவிடுகிறார் என்றும் கூறிடும் துணிவு தலைவிரித்தாடுகிறது.

அதுமட்டுமல்ல, தம்மோடு இல்லாதவர்களை, தகுதி யற்றவர்கள் என்று தாக்கிப் பேசிப் பேசி, அவர்களை மனம் உடையும் நிலைபெறச் செய்து,

சிறிது அவர்கள் தடுமாற்றம் அடைந்ததும், "கதவு திறந்தே இருக்கிறது! வருக!' என்று அழைப்பு விடுவதும், வந்தடைந்ததும் அவர்களை இந்திரனென்றும் சந்திரனென்றும் புகழ்வதும் காண்கின்றோம்.

சுதந்திரக் கட்சி, ராஜாக்கள் கட்சி என்று கேலி பேசினர். யாரார் அந்த ராஜாக்கள் என்று விவரம் தந்தனர்! இத்தகையவர்கள் மக்களின் ஆதரவைப் பெறத் தகுதி பெற்றவர்களா என்று கேட்டனர்.

அப்படிப்பட்டவர்களிலே ஒருவர் ராம்கர் ராஜா.

அவர் இப்போது தமது படையுடன், காங்கிரஸ் கட்சியிலே சேருகிறார்.

சேர்த்துக்கொள்ளலாமா என்று ஒரு குரல் கிளம்புகிறது.

தலைவருக்கு அதிகாரம் இருக்கிறது என்ற பதில் கிடைக்கிறது.

இன்னின்ன ஆற்றல் உள்ளவர்கள் எமது கட்சியில் உள்ளனர். ஆகவே எமது கட்சிக்கே எல்லாத் தகுதியும் உண்டு, மற்ற எந்தக் கட்சிக்கும் தகுதி இல்லை என்றுகூட விளக்கம் தருவதில்லை.

எல்லாம் எமக்குத் தெரியும்

என்று ஏற்றுக்கொண்டுவிட்டீர்கள்; இனி எவனும் எம்மை எதுவும் கேட்கக்கூடாது; எவனும் எதுபற்றியும் சிந்திக்கக் கூடாது! - என்று கூறத் தலைப்பட்டு விட்டனர்.

எம்முடைய தகுதிபற்றி மட்டுமல்ல, எம்முடன் எவர் வந்து சேர்ந்திடினும் அவர்களின் தகுதி பற்றிக்கூட எவரும் ஏதும் கேட்கக் கூடாது என்று பேசுகின்றனர்.

இது ஜனநாயகம் ஆகாது! இந்நிலை வளர்ந்திடின் பிறகு, “பலர்’ பார்த்துச்”சிலர்’ ஆட்சி நடத்திடும் அனுமதி தருகிறார்கள் என்ற நிலையே போலியாகிப் போகும்; “சிலர்’ இடத்தைப் பிடித்துக்கொண்டு,”பலர்’ சிந்திக்க, உரிமை கேட்க, நல்வாழ்வு பெற வழி தராமல், ஆட்டிப்படைக்கிறார்கள் என்ற பயங்கரம் நிலைத்துப் போய்விடும்.

“சிலர்’ என்று நான் குறிப்பிடுவது காங்கிரசின் பெருந்தலைவர்களை மொத்தமாகக் குறிப்பது என்றாலும், அந்தச்”சிலர்’ ஒருமித்த கருத்து கொண்டவர்களுமல்ல. அவர்களிலே யாரிடம் சூத்திரக்கயிறு சிக்கிக்கொள்கிறதோ அந்தச் “சிலர்’ அதே கட்சியிலுள்ள”பலர்’ அடங்கி ஒடுங்கிக் கிடந்திடும் நிலைமை உண்டாக்கி விடுகின்றனர்.

காங்கிரசில் இருந்துகொண்டே, குற்றம் குறைகளை எடுத்துக்காட்டித் திருத்தலாமே, மாற்றுத் திட்டங்களைத் தந்திடலாமே, ஏன் கட்சியை விட்டு வெளியே சென்று எதிர்ப்புக் காட்டவேண்டும், எதிர்க்கட்சி ஏன் அமைக்க வேண்டும் என்று சில நேரங்களில் தேனொழுகப் பேசுகின்றனர், சூத்திரக்கயிற்றைப் பிடித்துக்கொண்டுள்ளவர்கள்.

ஆனால், காங்கிரசில் இருந்து கொண்டே, அதில் உள்ள குற்றம் குறைகளை எடுத்துக் கூறினால், மாற்றுத் திட்டங்களைத் தந்தால் அவைகளுக்குத் துளியேனும் மதிப்புத் தருகின்றனரா என்றால், இல்லை!

அவர் எப்போதும் அப்படித்தான்.
எதையாவது பேசிக் கொண்டிருப்பார்.
எதிலேயும் குறை கண்டுபிடிப்பார்.
தனக்கு நிரம்பத் தெரியும் என்று காட்டிக்கொள்ளும் போக்கு

என்றெல்லாம் "மூலவர்கள்’ கேலி பேசுவர்;

அலட்சியம் செய்வர்.

குற்றம் குறைகளை அதிக வன்மையாகத் தொடர்ந்து கண்டித்தபடி சிலர் இருக்கின்றனர் என்றால்,

அவர்களை ஏதாவது பதவியில் இழுத்துப் போட்டு "வாய்மூடி' ஆகிவிடும்படி செய்வதும்.

சரியான சந்தர்ப்பம் பார்த்து அவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக் கட்சியிலிருந்து துரத்தி விடுவதும்,

சூத்ரதாரிகள் கையாளும் தந்திர முறைகளாகும்.

சென்ற திங்கள், நண்பர் ராஜாராமும் நானும், டில்லியில் பாராளுமன்ற கட்டிட மாடியில் அமைந்துள்ள உணவு விடுதியில் ஒரு பிரபலமான, முன்னணிக் காங்கிரஸ் தலைவரைப் பார்த்தோம்.

எனக்கு அவர்களிடம் பேசுவது அவ்வளவு எளிதாக இருப்பதில்லை; ஒரு கட்சியில் மிக முக்கியமான நிலையில் உள்ளவர்களிடம் எதையாவது பேசிடின் எரிச்சல் கொள்வார்களோ என்னவோ என்ற ஒரு எண்ணம்.

என்னைக் காட்டிலும் அதிகத் தாராளமாக அவர்களுடன் பழகுவார் நண்பர் ராஜாராம்.

அவர் அந்தக் காங்கிரஸ் தலைவரைப் பார்த்துக் கேட்டார், "என்ன 1967 தேர்தலில், சட்டசபைக்கு நிற்கப் போகிறீர்களா? அல்லது பாராளுமன்றத்துக்கா?' என்று.

அவர், ஏதோ சிந்தனையுடன். "கடைசி நேரத்தில்தான் தீர்மானிப்பேன்" என்றார்.

விடவில்லை ராஜாராம், வெடுக்கென வேறோர் கேள்வியை எழுப்பினார். "காங்கிரசில்தானே நிற்கப்

போகிறீர்கள்?” என்று.

எனக்கு அந்தக் கேள்வி தூக்கிவாரிப் போடுவது போலிருந்தது. ஒரு பிரபலமான, பழம்பெரும் காங்கிரஸ் தலைவரைப் பார்த்து, "காங்கிரஸ் அபேட்சகராகத்தானே நிற்கப் போகிறீர் தேர்தலில்’ என்று கேட்பது, அவரைக் குத்துவது போல அவமானப்படுத்துவதுபோல அல்லவா இருக்கும்; இப்படிக் கேட்டுவிட்டாரே டிலக்சில் போகப் போகிறீரா? கிராண்ட்டிரங்கில் புறப்படப்போகிறீரா? என்று ரயில் பயணம் பற்றிக் கேட்பார்களே, அப்படியா தேர்தலைப் பற்றி இத்தனை பெரிய தலைவரைக் கேட்பது; அவர் கோபித்துக் கொள்ள மாட்டாரா? என்று எண்ணிப் பதறிக் கிடந்தேன்.

நான்தான் அதுபோலப் பதறிக் கிடந்தேனே தவிர ராஜாராமின் கேள்வி அந்தக் காங்கிரஸ் தலைவருக்குத் துளியும் கோபத்தையோ எரிச்சலையோ, தந்ததாகத் தெரியவில்லை; அவர் மிக அமைதியாகச் சொன்னார், "அதுகூடப் போகப் போகத்தான் தெரியும்!” என்று.

இவ்விதமான நிலையில் பலர் இன்று காங்கிரஸ் கட்சியில் இருக்கிறார்கள்.

அந்தப் பழைய பிடிப்பு, எழுச்சி, ஆர்வம் துளியும் கிடையாது!

ஏதோ இருக்கிறார்கள்; வேறு எங்கே போவது என்று தெரியாததால் இருக்கிறார்கள்,

அதிலே கிடைக்கும் வசதிகளை இழந்துவிட மனமின்றி இருக்கிறார்கள்.

இவ்வளவு காலம் இருந்துவிட்டோமே என்பதால் இருக்கிறார்கள். இதன் காரணமாகவே அவர்கள் உண்மையான பற்றுக் கொள்ளுவதில்லை; அதுபோலவே தங்கள் கருத்துக்கள் ஏற்றுக்

கொள்ளப்படுகின்றனவா என்பது குறித்தும் கவலைப்படுவதில்லை.

நாம் சொல்லுவதைச் சொல்லிவைப்போம்; நடப்பது நடக்கட்டும் என்று இருந்துவிடுகிறார்கள்.

இந்த முறையிலே எடுத்துக் கூறப்படும் குற்றச்சாட்டுகளைக் கூடக் கேட்டுக் கொள்வதற்கான பொறுமை, காங்கிரசின் பெருந்தலைவர்களிடம் இல்லை என்பதை, இப்போது நடைபெற்ற அ.இ.கா.க. கூட்டம் எடுத்துக் காட்டிற்று.

கிருஷ்ணமேனன்
மாளவியா
பகவத்ஜா அஜாத்
தாரகேஸ்வரி சின்கா

என்போர், காங்கிரஸ் கட்சி, நாடாளும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு செம்மையாகச் செயல்படவில்லை என்பதுபற்றிக் கொதிப்புடன் பேசினர்.

ஆண்டு பதினெட்டு ஆகிவிட்டன; ஏழையின் வாழ்விலே ஏற்றம் இல்லை; வேதனைப் படுகுழியில் தள்ளப்பட்டிருக் கிறான்; இத்தனை காலம் பொறுத்துக்கொண்டான் இனி பொறுத்துக்கொள்ள மாட்டான்; பொங்கி எழுவான்; புரட்சி வெடித்துக் கிளம்பிடும் என்று மாளவியா கோபாவேசமாகப் பேசினார்.

கல்கத்தாவிலும் பம்பாய் பஞ்சாப் போன்ற இடங்களிலும் நடைபெற்ற கிளர்ச்சிகளைக் காங்கிரசின் மூலவர்கள், பலாத்காரம் என்றும், கலகம் என்றும், மனமுடைந்து கிடக்கும் அரசியல்வாதிகளின் வாண வேடிக்கை என்றும் கண்டித்தனர்.

அந்தச் சம்பவங்கள் புரட்சியின் பொறிகள் என்று

மாளவியா கூறினார்.

ஏட்டிலே தீர்மானங்களை எழுதிவிடுகிறீர்கள் ஒய்யாரமாக! ஒன்றையாவது செயல்படுத்தி நாட்டை வாழ வைத்தீர்களா என்று இடித்துக் கேட்டார் பகவத்ஜா அஜாத்.

அமெரிக்காவிடம் கடன் வாங்கி வாங்கி நாட்டைக் குட்டிச் சுவராக்குகிறீர்கள்! இது அடாத செயல்!! - என்று கண்டித்தார் கிருஷ்ணமேனன்.

இந்தக் கண்டனங்கள், காங்கிரஸ் விரோதிகளின் பேச்சல்ல! காங்கிரஸ், தாங்கள் எதிர்பார்த்தபடியும், நாட்டுக்கு நலன் கிடைக்கிற முறையிலும் நடந்துகொள்ளவில்லையே என்று மனம் குமுறி, காங்கிரசைத் திருத்த வேண்டிய கடமை தமக்கு உண்டு என்ற மெய்யுணர்வுடன் எடுத்துக் கூறப்படுபவை. ஆனால் இவற்றினுக்குத் தரப்படும் மதிப்பு எந்த அளவு இருக்கிறது?

கேட்பாரில்லை
மதிப்பளிப்பாரில்லை

என்ற நிலை மட்டுமல்ல, மூலவர்கள் சீறியே விழுகிறார்கள்.

இந்திரா காந்தி அம்மையார் மெத்தக் கண்டிப்புடனும் கோபத்துடனும் பேசினார்களாம்.

போய்விடட்டும் வெளியே

என்றே கூறிவிட்டார்களாம். அம்மையாரின் கோபம் அத்துடன் நிற்கவில்லை.

என் தலைமையை நீங்கள் விரும்பவில்லை என்று தெரிந்தால் நான் பதவியில் ஒட்டிக் கொண்டிருக்க மாட்டேன், வெளியே போய் விடுவேன்.

என்றே பேசிவிட்டிருக்கிறார்கள்.

எல்லாம் அவர் அறிவார்! என்ற "பஜனை' எந்த நிலைமையை உண்டாக்கிவிட்டது என்பது தெரிகிறதல்லவா!

போ! வெளியே!!
போகிறேன் வெளியே!!

என்ற ஆத்திரப் பேச்சு கிளம்பிடக் காண்கிறோம்.

இது சரியா?
இது முறையா?

என்ற கேள்வி, உள்ளிருந்து எழுப்பப்பட்டதும்.

பகவத்ஜா அஜாத் காங்கிரஸ் மூலவர்கள், சொல் வேறு செயல் வேறு என்ற விதமாக இருந்து வருகிறார்கள் என்று கேசெய்து பேசியதைப் பார்வையாளர்கள் மிகவும் சுவைத்துக் கேட்டுக் கொண்டிருந்தனராம்.

இதுகண்ட மூலவர்களின் "குடிபடை'யினரில் ஒருவர், இப்படி எல்லாம் பேசலாமா? என்று குரல் எழுப்பினாராம். உடனே பலருடைய குரல், பேசட்டும்! பேசட்டும்! பகவத்ஜா பேசட்டும்! அவர் பேச்சை நாங்கள் கேட்க விரும்புகிறோம்!! என்று எழும்பிற்றாம். ஒரே மகிழ்ச்சி ஆரவாரம்.

இதைக் கண்ட காமராஜர் கடுங்கோபங் கொண்டு இப்படி ஆரவாரம் செய்தால், உங்களை இந்த இடத்தை விட்டு வெளியேற்றிவிடுவேன் என்றாராம்,

எல்லாம் அவர் அறிவார்! நாம் ஏதும் அறிவோம்!! - என்று பலகாலும் கூறிக் கூறி மூலவர்களைப் பூஜித்ததன் பலன், மனக்குறையை ஒரு சிறு அளவு எடுத்துக் கூறினாலும்,

போ! வெளியே!
போய்விடுவேன் வெளியே?!

வெளியே துரத்திவிடுவேன்!

என்ற முறையிலே மூலவர்களைப் பேசவைக்கிறது.

என்ன சொல்லுகிறார்கள் என்று யோசிப்பதில்லை மூலவர்கள். ஏன் இப்படிக் குறைகூறிப் பேசுகிறார்கள்? எதை எதிர்பார்த்து? என்ன ஏமாற்றம்? என்ன கேட்டார்கள், எதை நாம் கொடுக்கவில்லை? என்ற முறையிலேதான் எண்ணுகிறார்கள். ஏதாவது பதவி கொடுத்தால் பசி அடங்கிவிடும்; பசி அடங்கிவிட்டால் படுத்துறங்கப் போவார்கள்; பரபரப்பு, பதைப்பு, கொதிப்பு, கோபம் எதுவும் இருக்காது என்று எண்ணுகின்றனர். அதற்கு ஏற்றபடி செயல்படுகின்றனர். ஆகவே அத்தகைய எதிர்ப்பு, வலிவற்றதாகிப் போகிறது. மெள்ள மெள்ளக் குரல் மங்கிப்போகிறது!

நமக்கென்ன ஏதோ நடக்கட்டும்
நாம் இருக்க முடிகிறவரையில் இருப்போம்.

என்ற மனப்போக்கு வளர்ந்து விடுகிறது. எத்தனை காலம் காங்கிரசிலே இருப்பாயோ, எப்போது வெளியேற்றி விடுவார்களோ என்ற எண்ணம் மனத்திலே குடைந்தபடி இருக்கிறது.

அந்த நிலையின் காரணமாகத்தான், நீங்கள் அடுத்த முறை காங்கிரசில்தானே தேர்தலில் நிற்கப் போறீர்கள் என்று ராஜாராம் கேட்டதற்கு அந்தக் காங்கிரஸ் தலைவர்.

போகப்போகத் தெரியும்!

என்று பதில் அளித்தார்; இவ்வளவு நிலையற்ற வாழ்க்கை!

ஆனால் தம்பி! எனக்கும் தெரியும்! என்ற நம்பிக்கை கொண்டவர்களுக்காகத்தான் ஜனநாயக

முறை வகுக்கப்பட்ட தேயன்றி, எனக்கு என்ன தெரியும்! என்ற இழுப்புப் பேச்சுக்காரர்களுக்காக அல்ல.

“பலர்’ - என்றென்றும் ஒதுங்கி ஒடுங்கிக் கிடப்பார்கள் என்று எண்ணிக்கொண்டுதான் காங்கிரசின் பெருந் தலைவர்கள்”தர்பார்’ நடத்துகின்றனர்; உலா வருகின்றனர்.

ஆனால் நாட்டு மக்களோ அந்தப் பெருந் தலைவர்கள் கருதிக் கொண்டிருப்பதுபோல இல்லை.

“பலர்’ அனுமதித்தால்தான்”சிலர்’

என்ற பேருண்மையைத் தெளிவாகத் தெரிந்து கொண்டுள்ளனர்.

எமக்கும் தெரியும் என்று எடுத்துக் கூற முன் வந்துவிட்டனர்.

எம்மைப்போல இருந்தவர் தாமய்யா நீவிர்! எங்கிருந்தோ வந்துதித்த அற்புதங்கள் அல்ல!! என்று கூறத் துணிந்துவிட்டனர்.

கொச்சையாகக் கூறுவதானால் தம்பி! பொதுமக்கள் இன்று, எல்லாம் எமக்குத் தெரியும்! மற்ற எவருக்கும் எதுவும் தெரியாது! என்று இறுமாந்து பேசுபவர்களைப்பற்றி

பிடித்து வைத்தால் பிள்ளையார்!
வழித்தெடுத்தால் சாணி!

என்ற முறையிலேதான் கருதுகிறார்கள்.

இலக்கிய நடையில் இது கூறப்பட வேண்டுமா, தம்பி! பிடித்தால் கற்றை விட்டால் கூளம்!

என்று "மனோன்மணியம்’ தெரிவித்திருப்பதைத் தருகிறேன்.

"பலர்‘, "சிலர்’ - ஆகியோருக்கு இடையே உள்ள தொடர்பு ஆண்டான் - அடிமை என்பது அல்ல அது அன்புத் தொடர்பு - அறிவுத் தெளிவின் பேரில் கட்டப்பட்ட தொடர்பு என்பதை, இன்று ஆளப் பிறந்தவர்கள்தாமே என்ற அளவு ஆணவம் பிடித்து அலைவோர் உணர்ந்திடத் தக்கவிதமாக, 1967 அமைய வேண்டும்.

அந்த தூய பணிக்காகத் தொண்டாற்றுகிறோம் என்ற உணர்வு, தம்பி! உன் ஆற்றலைப் பன்மடங்காக்கும். உன் வெற்றியிலே ஜனநாயகத்தின் எதிர்காலமே அடங்கியிருக்கிறது.

அன்புள்ள
அண்ணாதுரை
29-5-66

நல்லோரின் தீர்ப்பு!

வலியவர் எளியவரை வதைத்திடும் கதைகள்!
வசதியற்றவர் அமைத்த கழகம் வளர்ந்தவண்ணம் உள்ளதே!
பஞ்சை பராரிகளால் பாராளவும் முடியும்!
அடுக்கு மொழி பேசுவதைக் கேலி செய்தவர்களே அடுக்கு மொழி பேசிடும் அதிசயம்!
அரசியல் மேடை நாடக மேடையாவதை அனுமதிக்க லாமா?
அலைய மாட்டோம்; அவசியமானால், விடமாட் டோம்!
நம் வெற்றியில் மாற்றாருக்கு வேதனை!

தம்பி!

"எதுக்காக அகிலாண்டம், அது ஏழை பாவம், அதன்பேரிலே எரிந்து எரிந்து விழறே, எப்பவும் சிடு சிடுன்னு இருக்கறே...?'

"பரிந்து பேச வந்துவிட்டிங்களா அதுக்கு. அது இன்னும் தாவிக்குதிக்க ஆரம்பிக்கும். உங்களுக்கு என்ன தெரியும் அதோட போக்கு. அது நடக்கற நடையும், பார்க்கற பார்வையும் பேசற பேச்சும்...'

"என்ன செய்தா, அதைத்தான் சொல்லேன்...'

"என்ன செய்தாளா? பாருங்க, அவ போட்டுக்கிட்டு இருக்கற கொண்டையை! என்னமோ அள்ளிச் சொருகறதாம், அள்ளி! இந்த அலங்காரமெல்லாம்

செய்து கொண்டிருக்கத்தானே அவளுக்கு நேரம் இருக்குது. வேலை செய்ய நேரம் ஏது! வாடி! வள்ளின்னு கூப்பிட்டா வந்தாத்தானே வேகமா!! அன்ன நடை நடக்கறா, அன்ன நடை...,

"வேண்டுமென்றா அப்படி நடக்கப்போறா! ஒவ்வொருத்தரும் ஒவ்வொருவிதமா நடக்கற பழக்கம். அதுக்காக ஒரு கோபமா...'

"வேளைக்கு ஒரு டப்பா"மை' கண்ணுக்கு அப்பிக் கொள்றது... எத்தனை தடவை, அந்தக் கூந்தலைத் தள்ளித் தள்ளி விட்டுக் கொள்றது, நான்தான் கேட்கறேன், இப்படியா ஒரு சிங்காரிப்பு... புடைவை தெரியுமேல்லோ நாலு கெஜம்... சும்மா ஒரு சுத்து சுத்திக்கிட்டு வந்துவிடறா, அதுதான் இப்ப நாகரிகம்னு...'

•

தம்பி! வீட்டு வேலை செய்யும் வள்ளியிடம்; எஜமானியம் மாளுக்கு ஏகப்பட்ட கோபம்; அவள் குலுக்கி நடக்கிறாள், மினுக்கிக் கொள்கிறாள் என்று ஆத்திரம்! குடும்பத்துக்கு ஏற்றவிதமாக நடப்பதில்லை என்று குற்றச்சாட்டு! சீவிச் சிங்காரித்துக் கொள்கிறாள், ஒயிலாக நடக்கிறாள் என்று கோபம். வள்ளியைக் "காலா காலத்தில்' கண்டித்து வைக்கா விட்டால், வீட்டு வேலைகளைக்கூட அவள் ஒழுங்காகச் செய்யமாட்டாள் என்றோர் எண்ணம். ஏழ்மை காரணமாக வீட்டு வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றுகிறாளே வள்ளி என்பதிலே எஜமானருக்கு அந்தப் பெண்ணிடம் ஒரு மதிப்பு. ஒழுங்கான பெண் என்பதால் அவளிடம் ஒரு பற்றுதல். ஏழையின் மனம் புண்படும்படி நடந்திடக்கூடாது என்ற பெருங்குணம். அதனால்தான் தன் மனைவியிடம் கேட்கிறார், ஏன் அந்த ஏழைப் பெண்ணிடம் சிடுசிடுவென்று

பேசுகிறாய்; கோபித்துக் கொள்கிறாய் என்று.

வள்ளிமீது அடுக்கடுக்காகக் குற்றம் சாட்டுகிறார்க ளல்லவா எஜமானியம்மாள்... அவை உண்மையா?

அழகான பருவம் வள்ளிக்கு! அடர்த்தியானது! இளமை மெருகு பளபளக்கிறது! வேளா வேளைக்கு “மை’ அப்பிக்கொள்வதாகஎஜமானியம்மாள் சொல்வது. கருகருவென்று இருக்கும் அந்த விற்புருவம் இயற்கை அமைப்பு என்பதை ஏற்றுக்கொள்ள மனமில்லாததால் எஜமானியம்மாள், விவரம் தெரியாமல் பேசுகிறார்கள். பேசட்டும் அதனால் என்ன என்று வள்ளி,”அம்மா! நான் "மை’ பூசிப் புருவத்தை அழகுபடித்திக் கொள்ளவில்லை; இயற்கையாகவே ஒரு எழில் இருக்கிறது’ என்று விளக்கம் அளிக்கவில்லை. வள்ளி பதில் ஏதும் கூறாததால், தன் குற்றச்சாட்டை அவள் ஒப்புக்கொண்டுவிட்டாள் என்று எஜமானியம்மாள் நம்பிக் கொள்கிறார்கள்.

வள்ளியின் குடிசைக்குப் பக்கத்தில் ஓர் தாமரைக் குளம். பொழுது புலர்ந்ததும் அதிலே போய்க் குளிப்பதிலே அவளுக்கு ஒரு அலாதியான மகிழ்ச்சி. கூந்தல் உலருவதற்காகக் காத்துக்கொண்டிருக்க முடியுமா, ஆயிரத்தெட்டு வேலை இருக்கிறதே எஜமானியம்மாளின் வீட்டில். அதனால் வள்ளி தலையைத் துவட்டிக்கொண்டு, கூந்தலை அப்படியே அள்ளிச் செருகிக் கொள்கிறாள். அடர்த்தியான கூந்தல்! அழகாக அமைகிறது அந்தக் கொண்டை! அலங்காரம் செய்து கொண்டது போல இருக்கிறது. எத்தனை வேலைப்பாடுகளைத் துணைக்கொண்டாலும் எஜமானியம்மாளால் அந்தவிதமான சிங்காரக் கோலம் பெற முடியவில்லை. அந்த எரிச்சலால் ஏசுகிறார்கள், வள்ளி என்னவோ வேண்டுமென்றே, வெகு

கஷ்டப்பட்டு அந்தவிதமான கூந்தல் அலங்காரம் செய்து கொண்டிருப்பதாக.

அன்னம்போல நடக்கிறாள் வள்ளி என்றார்கள்! அது அவள் தவறு அல்ல! வாலைப்பருவம்! வடிவழகு! சிற்றிடை! பயிலாமல் வந்த நடை! அதற்கு அவள் என்ன செய்வாள்! எஜமானியம்மாள் நடந்தால் பூமி அதிரும், கெம்பீரமான நடை என்று புகழ்வோரும் உண்டு! அசைகிறது பார் யானை என்று கேலி செய்வோரும் உண்டு! வள்ளி, இளமங்கை! சின்ன இடை! அன்ன நடை! அவள் தேடிப் பெற்றதுமல்ல; பாடம் படித்ததுமல்ல! அவளுக்கென்று அமைந்துவிட்ட எழில்! அதற்கு அவள் என்ன செய்வாள்?

பதினெட்டு முழமாகத்தான் அந்தச் சேலை இருந்தது வள்ளியின் தாயிடம். பிறகு அது நைந்து நைந்து கிழியத் தொடங்கிற்று. பொத்தலும் போனதும் போக மிச்சமுள்ளதை வள்ளி எடுத்துக் கட்டிக் கொண்டாள். அவளுடைய உடலமைப்புக்கு அது போதுமானதாக இருந்தது. அது புதியநாகரிகம் என்பதற்காக அல்ல; பழைய புடவையின் மிச்சம் அது. புதுப்புதுப் புடவைகள் வாங்க முடியுமா ஏழையால்.

இந்த விளக்கங்களை யார் கூற முடியும், கோபம் கொண்டுள்ள எஜமானியம்மாளிடம்.

ஏழ்மை, தன்னை வேறோர் வீட்டிலே வேலை செய்து பிழைக்கச் சொல்லுவதுடன், காரணமற்ற கோபத்துடன் எஜமானியம்மாள் ஏசுவதையும் தாங்கிக் கொள்ளச் சொல்லுகிறது என்று எண்ணிக் கொண்டாள். ஏழை வேறு என்ன செய்ய முடியும்? நியாயம், கேட்க முடியுமா!!

•

"பய, படுக்க வேண்டியதுதான், அடுத்த விநாடி தூக்கம். அது எப்படித்தான் வருதோ! எங்கிருந்துதான் வருதோ! துளியாவது வித்து விசனம் இருந்தாத்தானே. வயிறு நிறையப் போட்டு விடுறாங்க; ஆசாமிக்குத் தூக்கம் தள்ளுது.'

என்று தன்னோடு சேர்ந்து தூக்கம் வராமல் தவிக்கும் மனையாட்டியிடம் கூறி வருத்தப்பட்டுக் கொள்கிறார் சீமான். படுத்துப் படுத்துப் புரளுகிறார், தூக்கம் வர மறுக்கிறது. பட்டு மெத்தை; மின்சார விசிறி இருந்து? மனத்திலே முள்! தைத்தபடி இருக்கிறது. மூதூர் நிலத்தை முடிக்க முடியவில்லையே! பாதூரான் இந்த வருடத்து வட்டிப் பணத்தைக் கட்டாமல் ஏமாற்றிக் கொண்டிருக்கிறானே! மந்திரி வந்த கூட்டத்திலே மாலை போடும்போது, பயத்தால் உடல் வெடவெடத்ததைப் பார்த்து பக்கிரி கேலியாகச் சிரித்தானே! எத்தனை டானிக் சாப்பிடட்டும், நாலு அடி நடந்தால் மேல் மூச்சு வாங்குகிறதே. பெரிய இடத்திலே பெண்ணைக் கொடுத்ததிலே பெருமைப்பட்டுக் கொண்டிருக்க, மாப்பிள்ளை "பேயாட்டமாடி' பெண்ணைத் துரத்தி அடிக்கிறானே! கொண்டு போனக் கணக்கைத் தூக்கி தூர எறிந்துவிட்டு அதிகாரி நெருப்பைக் கக்கினாரே! ஒரு ரூபாய் டிக்கட்டு ஒன்பதாயிரத்தை வந்தே மாதரம் தலையில் கட்டிவிட்டு கிட்டி போடுகிறானே! - என்று இப்படிப் பலவிதமான கவலைகள் மனத்திலே குடைகின்றன; தூக்கம் வரவில்லை.

அவன் - படுத்ததும் தூங்கிவிட்டானே - வேலையாள் - காலையிலே இருந்து செய்த வேலை உடலைக் கசக்கிப் பிழிந்துவிட்டது பசி. விறு விறுவென்று சோறும் சாறும் பிசைந்து உள்ளே போட்டதும், பசி அடங்கி, ஒருவிதமான நிம்மதி ஏற்பட்டது.

புளியங்கட்டை, பிளக்க முடியாது, உயிர்போகும் என்று பல பேர் மிரட்டினார்கள். ஆனால் மூன்றே மணி நேரத்தில் பிளந்து போட்டுவிட்டோம்!! எந்தப் பய நம்முடைய வேலையிலே குறை காண முடியும்! என்று எண்ணுகிறான்; ஒரு பெருமித உணர்ச்சி கொள்ளுகிறான். பிற்பகல் சாப்பிட்ட நெல்லிக்காயின் "ருசி'; நான் எங்க மாமனைத்தான் கட்டிக்கப் போறேன் வேளை வந்ததும் என்று காத்தாயி சொன்னதைக் காதாரக் கேட்ட நினைவு அவனுக்கு ஒரு தெம்பு கொடுத்தது. இந்த இன்ப நினைவு தழுவியதும் நிம்மதியாகத் தூங்கிவிட்டான்.

தன் தூக்கத்தை என்னவோ அவன் பறித்துக் கொண்டதுபோல எண்ணிக்கொண்டு, பதைக்கிறார் சீமான். நியாயமல்ல! ஆனால், அவரிடம் போய் நியாயம் பேச முடியுமா? மூன்று இலட்சம் கொண்ட பெரிய புள்ளி!!

•

ஏன் அண்ணா! இவர்களையெல்லாம் என் முன் கொண்டுவந்து நிறுத்துகிறாய். உலகிலே இதுபோலப் பலப்பல உண்டு என்பதை நானும் அறிவேனே காரணமற்ற காழ்ப்பு! பொருளற்ற கோபம்! தேவையற்ற மாச்சரியம்! இருந்திடத்தான் காண்கிறோம். வலியோர், எளியோரை வதைத்திடும் தொடர் கதையிலே இந்தச் சம்பவங்கள் பகுதிகளாக அமைந்துள்ளன; அறிவேனே! - என்று கூறுகிறாய். ஆமாம், தம்பி! இவைபற்றி நீ அறிவாய் என்பதனை நானும் அறிவேன்; ஆனால் வள்ளிமீது எஜமானியம்மாள் குரோதம் கொண்டிருப்பது போல, பாடுபடுபவன் களைத்து உறங்கக் கண்டு சீமான் பதைபதைப்பது போல, உன்னைப் பற்றி, உன் இயல்பும் அதன்மீது அமையும் பணியும் அதன் விளைவான வெற்றியும் கண்டு, அத்தகைய இயல்பற்றவர்கள், வெற்றி பெற்றிடாதவர்கள்,

எரிச்சல்கொண்டு, காழ்ப்பினை உமிழ்கின்றனரே, அதனை அறிந்திருக்கிறாயா!

உன் இலட்சிய முழக்கத்தை, வெறி என்றும்,
உன் தொண்டாற்றும் திறனை, அலைச்சல் என்றும்,
உன் அமைப்பின் வளர்ச்சியை, போலி என்றும்,
உன் வெற்றியை கானல்நீர் என்றும்,
உன் திட்டத்தை வெறும் பகற்கனவு என்றும்,
உன் தமிழ் பற்றை, மொழி வெறி என்றும்,

ஏசிப் பேசிடவும், எள்ளி நகையாடிடவும், நிரம்பப் பேர் உள்ளனரே அறிவாயா?

வானம்பாடிபோல வட்டமிடுகிறாய், தம்பி! தமிழ் இசை பரப்பியபடி! வல்லூறுகள் உன்னைக் கொத்திவிடும் கொடு நோக்குடன் பசி நிறைந்த கண்களுடன் உள்ளனவே பார்த்தனையா?

எல்லோரும் இன்புற்று இருந்திட என்னாலான பணியாற்றுவேன் - என்கின்றாய் நீ; இவன் யார் இந்தப் பணியாற்றிட! இவனை அழைத்தது யார்? இவனுக்கு ஏது அதற்கேற்ற ஆற்றல்? - என்று இறுமாந்து கேட்டிடுவோரின் குரல் உன் செவியினில் வீழ்ந்ததுண்டா?

தம்பி! உன்னைச் சூழ்ந்து கொண்டுள்ளனர், பொறாமையும் பொச்சரிப்பும் கொண்டோர்; நச்சு நினைப்பினர்; நாமடைய முடியாத வளர்ச்சியினை இவன் பெற்று வருகின்றானே என்ற எண்ணத்தால் மிருகமானோர்.

உன் தகுதி என்ன, திறமை என்ன என்றே கேட்கின்றனர், கோபத்துடன்.

பாதை அறிவாயா, பயணப்பட்டுவிட்டாயே! - என்று கேட்கின்றனர்.

பெரியதோர் சுமையைத் தூக்கிட

முனைகின்றாயே, அதற்கேற்ற தோள்வலி உனக்கு உண்டோ? - எனக் கேபேசுகின்றனர்;

ஓட்டாஞ் சல்லிகளைக் கொடுத்து வைரக்கற்களை வாங்கிடப்போமா! ஊராளும் வாய்ப்பை, உண்மைக்கு உழைப்பதன் மூலம் பெறலாம் என்று எண்ணிக் கொள்கிறாயே, ஏமாளித்தனம் அல்லவோ அஃது என்று கேட்கின்றனர்.

கோட்டை எம்மிடம்! கொடிமரம் எம்மிடம்! பேழை எம்மிடம்! நீயோ உறுதி என்னிடம்! உண்மை என்னிடம் களம்புக முனைகின்றாயே, இது பேதையின் போக்கல்லவா என்று கூறிக்கொண்டு கேட்கின்றனர்.

•

ராஜபாட்டையில் ரத கஜ துரக பதாதியர் செல்கின்றனர்!

காலைக் கதிரவன் ஒளிபட்டு, படைக்கலன்கள் பளபளக்கின்றன!

மாடிகளிலே நின்றிடும் மங்கையரின் வதனம் கண்டு ஈதென்ன அதிசயம்! ஒரு கதிரவனைக் காண இத்தனை சந்திரன்கள் வந்துள்ளனவே என்று புலவர்கள் பாடுகின்றனர்.

வீசிடும் மென்காற்றால் அசைந்திடும் பட்டாடை கண்களைப் பறிக்கும் நேர்த்தியுடன் விளங்குகிறது.

அந்த ராஜபாட்டை, அரசிளங்குமரர்க்கும் அவர்தம் படை வீரர்கட்கும் அமைந்தது.

கட்டுடலை மட்டும்கொண்டு, அதற்கு ஓர் அழுக்கேறிய துணி சுற்றிக்கொண்டு நடந்திடும் பராரிக்கு அங்கு என்ன வேலை?

மாளிகைக்குள்ளே பூங்கொடிகள் மீட்டிடும் யாழொலி கிளம்புகிறது. உன் வாய் ஏதோ முணுமுணுக்கிறதே, யார் செவியில் அது விழும்?

போ! போ! ஒதுங்கிப் போ! ஓரமாகப் போ! ஊர்க் கோடி நோக்கி நட!

முட்டுச் சந்துகளில் நட! ராஜபாட்டையைக் கேவலப் படுத்தி விடாதே! இது செல்வபுரி! நீ இங்கே நடந்திட அனுமதி இல்லை! காவலர் தடுத்திடுவர்! வேட்டை நாய்களை அவிழ்த்துவிடுவர்! அவை உன்மீது பாய்ந்து கடித்துப்போடும்! பாவையர் கண்டு கைகொட்டிச் சிரிப்பர், பித்தன் என்று! சிறார்கள் கல் வீசுவர்! சிறைக்கே இழுத்துச் சென்றிடக்கூடும்! இது உனக்காக அமைந்த பாதை அல்ல! இது உடைமை உடையார்க்கான பாதை! உழைத்தால் மட்டுமே பிழைத்திடத் தக்க உனக்கு அல்ல! - என்று பழங்காலத்துக் கொடுங்கோலர் கூறுவர்; இப்போது உள்ள ஆளவந்தார்கள் நாடாள உனக்கு ஏது தகுதி! உனக்கு ஏது ஆற்றல்! என்று ஆணவத்துடன் கேட்கின்றனர்.

உன் அமைதி அவர்களை ஆர்ப்பரிக்கச் செய்கிறது.

உன் கடமை உணர்ச்சி அவர்களைக் கதிகலங்க வைத்திருக்கிறது.

•

மன்னன் மகளுக்குச் சுயம்வரம் என்று கேள்விப்பட்டு விரைந்தோடினர் அரசிளங்குமரர் பலர், தத்தமது விருதுகளுடன் படை புடைசூழ; பரிவாரம் உடன்வர!

பல்லக்கில் சில பார்த்திபர்கள்! பரிமீது சிலர்! யானைமீது அம்பாரி அமைத்து அதிலே கெம்பீரமாக அமர்ந்து சிலர்! அணிபணிபூண்டு! பளபளப்புடன்!!

காட்டுக்குதிரை, இது கட்டுக்கு அடங்காது, இதற்கு மதிப்பும் கிடைக்காது என்று பலர் எண்ணிக் கொண்டிருந்தனர், அவன் ஏறிக்கொண்டு வந்த அந்தக் குதிரையை முன்பு கண்டவர். இது நல்ல "சுழி' உள்ள குதிரை அல்ல என்று நாம் ஒதுக்கி விட்டோம், வேறு நல்லது கிடைக்காததால் இவன் இதனைக் கொண்டான்; இப்போது பார்த்தால், எலும்புந் தோலுமாகவும் இல்லை. இடறி விழுந்திடுவதாகவும் இல்லை, காட்டுப் போக்கையும் காணோம். குதிரைக்கே ஒரு புது மினுமினுப்பு ஏறிவிட்டிருக்கிறதே! நடை, அழகாக இருக்கிறது, தோற்றம் கெம்பீரமாக இருக்கிறது. அவ்வளவு புதுப்பொலிவு, அந்தக் குதிரைக்கு! நம்முடைய குதிரைக்கு நாலு ஆள் பராமரிக்க! பாதாம் பருப்பை அரைத்துப் பக்குவப்படுத்தித் தருகிறோம், மினுமினுப்புப் பெறட்டும் என்று. அரபு நாட்டிலேயே இது போன்ற அருமையான புரவி கிடையாது என்று கூறி நம்மிடம் வணிகர் விற்றனர். நாம் மிக அக்கறையுடன் பராமரித்து வருகிறோம். என்றாலும் அந்தப் பயல் அமர்ந்து வருகிறானே ஒரு குதிரைமீது, அது என்ன கெம்பீரத் தோற்றத்தோடு இருக்கிறது! இடர்மிகு வழியெனினும் எத்துணை எளிதாகச் செல்கிறது. ஆறு குறுக்கிட்டால் அலுப்புத் துளியுமின்றி நீந்துகிறது அகழி கண்டால், தாவுகிறது தடுமாற்றமின்றி! தட்டினால் சிட்டாகப் பறக்கிறது? இவன் ஆள நாடு இல்லை! கொலுவிருக்க, மாளிகை இல்லை! கூப்பிட்ட குரலுக்கு ஓடிவர ஆள் அம்பு இல்லை! இவனிடம் இப்படிப்பட்ட குதிரையா! என்று எண்ணி ஏக்கம் கொள்கிறார்கள் இளவரசர்கள்.

அவனோ! ஊர்பேர் தெரியாதவன்! விருது ஏதும் இல்லை! அரண்மனையில் அவன் இல்லை! குடிமகன்! அவன் உலவுவது பூங்காவில் அல்ல; வயல்வெளியில். அவன் பெருமைமிகு மரபினன் என்று புலவர் எவரும் பாடிடவில்லை. அவன் செயலில் சிறப்பு இருக்கிறது; மனவளத்தில் மரபு

இருக்கிறது என்ற கருத்துடையவன்; உழைப்பால் மெருகேறிய உடல்; களத்திலே பெற்ற வடுக்களே அவன் பூண்டிருந்த அணிபணி! மற்றவர்கள் உடலில் வைரம் மின்னிட, இவன் கண் ஒளியிலே வைரத்தைக் காட்டினான்.

இவனா சுயம்வரம் காண வருகிறான்! ஏனாம் என்று கேட்டு கெக்கலி செய்தனர் சிலர்.

சுயம்வரம் காணப் பல நாட்டுச் சிற்றரசர்கள் வருவார்கள். அங்குச் சென்றால் யாரேனும் ஓர் இளவரசனிடம் வேலை கேட்கலாம் என்று வருகிறான் போலும் என்று கூறிச் சிரித்தனர் சிலர்.

சந்தையோ திருவிழாவோ நடைபெறுகிறது என்று எண்ணிக்கொண்டு வருகிறான் போல இருக்கிறது! பயலுக்குச் சொல்லுங்கள், சுயம்வரம் நடைபெறுகிறது, அதற்காக, அரச மரபினர் செல்கின்றனர் என்பதை! அங்கு வந்து ஏமாற்ற மடைவானேன்!! என்று கேலி பேசினர் சிலர்.

அவன் அவர்களுடைய பேச்சைப் பொருட்படுத்தவில்லை.

அவன் அவர்களிடம் எதனையும் எதிர்பார்க்கவில்லை. ஆகவே ஏமாற்றம் கொள்ளவில்லை.

அவன் சென்றபடி இருந்தான்!

அவன் காட்டிய அலட்சியம் அவர்களுடைய ஆத்திரத்தை மேலும் மூட்டிவிட்டது.

இவ்வளவு ஏசுகிறோம் பயல் ஏனென்று கேட்கமாட்டேன் என்கிறானே!

வம்பு வல்லடிக்கு இழுத்துப் பார்க்கிறோம், பயல் வலையில் விழ மறுக்கிறானே! என்று அவர்கள்

பேசிப் பேசி ஓய்ந்து போயினர்!

அத்தாணி மண்டபத்திலேயோ அந்த அழகுமயிலாள் அவனைத்தான் தேர்ந்தெடுத்தாள்!

கவனிப்பாரற்ற நிலையில் வந்தான்; எல்லோருடைய கவனத்தையும் தன் பக்கம் ஈர்த்துக் கொண்டான்.

அரச மரபினில் வந்தவன் அல்ல இவன் என்று கேபேசின ர். கண்முன் அவன் அரச மரபினன் ஆக்கப்பட்டு விட்டான்.

•

தம்பி! பழங்காலக் கதைகள், பாராளும் வேந்தர் மரபினர், புதியவர்களைக் கண்டு பொச்சரிப்புக் கொள்ளும் இயல்பை எடுத்து விளக்கிடும் கதைகள்.

இக்காலத்தில், கரி பரி காவலர் என்ற புறத் தோற்றம் இல்லை எனினும், அன்று இருந்தது போன்றே, பொச்சரிப்பு கொள்வோரும் பொல்லாங்கு எண்ணுவோரும் நிரம்ப உள்ளனர்.

அவர்கள் அனைவருக்கும் தம்பி! உன் ஆற்றலால் வளர்ந்துள்ள நமது கழகத்தின் ஏற்றமிகு தோற்றம் கண்ணை உறுத்துகிறது, கருத்தைக் கலக்குகிறது, நடையிலே நாராச நெடி அடிக்கிறது!

இவனுக்கு இப்படி ஒரு கழகமா! இப்படி ஒரு கழகத்தை இவன் உருவாக்குவதா!

வசதியற்றவன் அமைத்துள்ள கழகம், வளர்ந்த வண்ணம் இருக்கிறதே!

வசதிகள் நம்மிடம் ஏராளம்! நம்மாலே முடியவில்லை, இந்தவிதமான வளர்ச்சி பெற்றிட. இவன்... இவன்... என்று எண்ணும்போதே; தம்பி! அவர்களுக்கு இதயத்தில் ஈட்டி பாய்வது

போலிருக்கிறது.

பார்க்கப்போனால் தம்பி! நாம் பெற்றுள்ள இந்த வளர்ச்சி, பலருக்கு மனப் புழுக்கத்தைத்தான் தந்திடும்.

ஆராய்ந்து பார்த்திடின், இந்த உண்மையை உணரலாம்.

இந்த உண்மையை உணர்ந்திடின், அவர்கள்மீது கோபம்கூட வராது, பரிதாபந்தான் பிறக்கும்.

நாடாளும் உரிமை ஜனநாயகத்தில் எவர்க்கும் உண்டு.

ஏழைக்கும் பணக்காரனுக்கும், "ஓட்டு' ஒவ்வொன்றுதான்! அதிலே வித்தியாசம் கிடையாது.

மேல்ஜாதிக்காரன் நான் ஆகவே எனக்கு எட்டு ஓட்டுகள்! தாழ்ந்த ஜாதிக்காரனுக்கு ஒரே ஒரு ஓட்டுதான் இருக்கவேண்டும் என்று பேச முடியாது; நாடு கேட்டுக் கொள்ளாது; சட்டம் அனுமதிக்காது; ஜனநாயகம் ஒப்புக்கொள்ளாது.

இவை ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைகள்!

ஆனாலும், இப்போதும் நம்மைவிடப் பண பலத்தில் தாழ்ந்தவன் நமக்குச் சமமாக, அரசியலில் இடம் பெறுவதா! - என்ற காதக எண்ணம் கொண்டவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். வெளிப்படையாகப் பேசமாட்டார்கள்; புற்றுக்குள் அரவம்போல அவர்களின் காதகம் இருந்து வருகிறது.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்பது குறள். சட்டமும், அரசியலில் அனைவரும் சமம் என்று செப்புகிறது. என்றாலும் இன்றும், ஜாதி மூலம் ஆதிக்கம் செலுத்த எண்ணுவோர் சாஸ்திரம் காட்டி

சமூகத்தில் ஏற்றத் தாழ்வைப் புகுத்த நினைப்போர் இருக்கத்தான் செய்கின்றனர். அவர்களால் முன்பு போலக் கொக்கரிக்க முடிவதில்லை, ஆனால் மனத்திலே மட்டும் குரோதம் குமுறிக் கொண்டுதான் இருக்கிறது.

பணத்தால் உயர்ந்த நிலை, ஜாதியால் உயர்ந்த நிலை என்ற முறை, ஒருபுறம் சீர்திருத்தவாதிகளின் சம்மட்டி அடியால் நொறுங்கிக் கொண்டுவந்தது; மற்றோர்புறம் நாட்டு விடுதலைக்கான போராட்ட வேகம், சமூகத்தில் பணம், ஜாதி ஆகியவற்றால் மூட்டி வைத்திருந்த பேத உணர்ச்சியை, மேல் கீழ் என்ற நிலையைத் தகர்த்தபடி இருந்தது.

அரசியலில் அனைவரும் ஒன்றுபட்டுப் பணியாற்று வது என்பதும் அரசியலில் அனைவருக்கும் ஒரே நிலை என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, சமூக அமைப்பிலேயும் சாஸ்திரம் சம்பிரதாயம் ஆகியவற்றின் துணை கொண்டு கெட்டிப்படுத்தப்பட்டிருந்த ஜாதிபேதம் தொலைக்கப் பட்டாக வேண்டும் என்ற உணர்வு வலுப்பெற்றது.

ஜனநாயகத்தின்படி ஏழையாயினும் சீமானாயினும், எந்த ஜாதியினன் என்றாலும் ஒருவருக்கு ஒரு ஓட்டு! என்ற முறை நடைமுறையாக்கப்பட்டது.

என்றாலும், பணம் படைத்தோர், உயர்ஜாதி என்று பட்டயம் பெற்றுக்கொண்டோர், சட்டம் என்ன செப்பிடினும், நாடாளும் உரிமை தமக்குத்தான் இருக்க வேண்டுமேயன்றி ஏழைக்கும், என்னென்னவோ ஜாதிகளைச் சேர்ந்தவனுக்கும் இருக்கக் கூடாது; இருக்க அனுமதிக்கக்கூடாது என்ற நச்சு நினைப்பினை விட்டுவிடவில்லை.

தம்பி! நாம் கழகம் துவக்கியபோது, இந்தப் பயல்களா? இந்தப் பஞ்சைகளா? என்று கேட்டனர், செல்வபுரியினர். ஏன்? பணத்தைக் காட்டியோ, பூர்வ பெருமை காட்டியோ, அரசியலில் பலர் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த நேரத்தில், வறண்ட தலையினர், எமக்கும் அரசியலில் ஈடுபட, மக்களுக்குத் தொண்டாற்ற உரிமை உண்டு என்று கூறியபோது கெக்கலி செய்தனர்.

நாம் அரசியலில் ஒரு திருப்புமுனையை உண்டாக்கத் தக்க விதமாக, முன்னேற்றக் கழகம் துவக்கியபோது, காங்கிரசுக்குள் பணம் படைத்தோரின் செல்வாக்கு மிகுதியாகி விட்டிருந்தது. அவர்கள், நம்மைப் போன்ற "பஞ்சை பராரிகள்' ஒரு கட்சி நடத்த முடியும் என்று நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை.

அவர்கள் கைகொட்டிச் சிரித்தனர்.

எந்தத் திராவிடர் கழகத்தைவிட்டு வெளியேறினோமோ அந்தக் கழகத்தவர் ஏளனம் செய்தனர்.

பெரியார் சாபம் கொடுத்தார்; ஜாதகம் கணித்தார்; நாலு நாளைக்கு ஆட்டமாடிவிட்டு, மூலைக்கு ஒருவனாக ஓடிப்போவான், மூக்கறுபட்டு முக்காடிட்டுக் கொள்வான் என்று ஊளூருக்கும் சென்று கூறினார், நாள் தவறாமல்.

"ப்யூஸ்போன பல்புகள்' என்று உவமைநயம் காட்டிப் பேசினர், நம்மை ஏசிட!

காங்கிரசுக் கட்சியினர் காசு கொடுத்து இந்தக் காலிகளைத் தூண்டிவிட்டுள்ளனர்; வாங்கிய காசு தீர்ந்து போனதும் வாலை மடக்கிக் கொள்வார்கள் என்று பெரியார் "எதிர்காலம்' பேசினார்.

என்னிடம் மூட்டை தூக்கிய பயல்கள். கூலி

வாங்கிய ஆசாமிகள் - இதுகளுக்கு ஒரு கட்சி! ஒரு கொடி! ஒரு படை! ஒரு நடை! செச்சே! நாடு இப்படியா தாழ்ந்து விடுவது என்று பரிதாபம் காட்டிப் பேசினார்.

கோபம் காரணமாகப் பெரியார் இப்படியெல்லாம் பேசினார் என்றுதான் பலர் கருதிக்கொண்டனர்; அவர் உண்மையில் நம்பிக்கையுடன் பேசினார்.

ஒரு கட்சியை நடத்திச் செல்வது, பணபலமற்ற நிலையில் அதனை வளரச் செய்வது நடக்கக்கூடிய காரியமல்ல என்பது அவருடைய அசைக்க முடியாத நம்பிக்கை.

அதிலும் காங்கிரஸ் கட்சியை எதிர்த்து நிற்பது என்றால் அதற்கு மிகப் பெரிய துணிச்சலும், தன்மான உணர்ச்சியும், எவனையும் நத்திப் பிழைக்கவேண்டிய அவசியமற்ற நிலையும் இருக்க வேண்டும். மற்றவர்கள், பத்து நாள் படபடப்புக் காட்டிவிட்டுப் பதினோராம் நாள் பாதம் விழுவார்கள் என்று சொல்பவர்.

எனக்கு எவன் தயவும் தேவையில்லை! யாருடைய கையையும் எதிர்பார்த்து வாழ வேண்டிய நிலையில் என்னை என் பெற்றோர் விட்டுவைக்கவில்லை.

ஈரோட்டிலேயே மிகப் பெரிய மண்டிக் கடை எங்களுடையது.

ஈரோட்டிலேயே மூன்றடுக்கு மாடிக் கட்டடம் எங்களுடையது.

என் வீட்டுத் தாழ்வாரத்திலேதான் தமிழ்நாடு காங்கிரசே இடம் கேட்டுப் பெற்றிருந்தது. என்றெல்லாம் பெரியார் பேசுவார்; வெகு கெம்பீரமாக.

அவருடைய அந்தப் பேச்சு அவருடைய அழுத்தமான நம்பிக்கையின்மீது அமைந்திருந்தது;

வெறும் வீம்புப் பேச்சு அல்ல; வெட்டி வீராவேசப் பேச்சு அல்ல!

மிகுந்த செல்வவசதி படைத்தவர் தவிர மற்றவர்களால் அரசியலில், மற்றவனுக்கு அடிமையாகிடாமல், வாழ முடியாது என்பது அவருக்கு இருந்து வந்த (இப்போது எப்படியோ தெரியாது) அசைக்க முடியாத நம்பிக்கை.

பணமற்றவன், பிறன் கையை எதிர்பார்த்து வாழ வேண்டியவன் கொள்கை பிறழாமல் வாழ முடியாது என்பதனை ஒரு தத்துவம் போலவே பேசுவார்.

சோற்றுக்கில்லாதார் பிரசாரம்!

என்ற தலைப்பிட்டே, அப்படிப்பட்டவர்களைப் பற்றி எழுதியிருக்கிறார்.

ஆகவேதான் தம்பி! அவருடைய கழகத்திலிருந்து பிரிந்து சிலர் தனிக் கழகம் துவக்கியபோது அவர் அவ்வளவு வேகமாக ஆரூடம் கணித்தார்.

எவன் இவன்களோடு போவான்!

எவனுக்கு இவன்களிடம் நம்பிக்கையோ மதிப்போ ஏற்பட முடியும்?

நாலு நாளைக்கு ஒரு கூட்டம் சேர்த்துக் கூத்தடித்துவிட்டு, காங்கிரசின் காலிலே போய் விழுவான்! வேறே வழி!!

என்று அவர் பேசியபோது "ஐயா" நடைபெறப் போவதைத்தான் சொல்கிறார் என்று நம்பினோர் பலப்பலர்.

ஆனால், தம்பி! உன்னுடைய ஊக்கமும் உற்சாகமும் உன்னதமான உழைப்பும், பணவசதியற்ற நம்மை, பல கட்சியினரும் கண்டு வியந்திடத்தக்க ஒரு கழகத்தை நடத்திச்

செல்லத்தக்கவர்களாக்கிற்று.

நம்மிடம் பணம் இல்லை, பழம்பெருமை இல்லை, மேட்டுக் குடியினர் என்ற விருது இல்லை; ஆகவே, வளரமாட்டோம் என்று மட்டுந்தான் அவர் கணக்கெடுத்தார்.

உன் வியர்வைத் துளிகளுக்குள்ள விலை மதிக் கொணாத கணக்கு அவருக்குக் கிடைக்கவில்லை.

கழகம் கருகிவிடவில்லை; கழகம் நடாத்துவோரும் எவர் பின்னும் கைகட்டி வாய்பொத்திச் சென்றிடவில்லை. அது கண்டு ஓரளவு எரிச்சல் ஏற்பட்டது; அப்போதும் எதனால் கழகம் வளருகிறது என்ற கணக்குப் புரியவில்லை.

அப்போதுதான் தம்பி! அரசியல் உலகில், கழக வளர்ச்சி கண்டு அருவருப்பு அடைந்தவர்கள், கழகம் வளருவதற்கான காரணம் எதையாவது கூறியாக வேண்டும் என்ற நிலைக்குத் துரத்தப்பட்டு, நான்,

அடுக்கு மொழி பேசி மயக்குகிறேன் என்றும்,

காமச் சுவையுள்ள கட்டுரைகள் எழுதிக் கெடுத்து விடுகிறேன் என்றும்,

குற்றம் சாட்டி வந்தனர்.

ஒரு ஐந்தாறு வருடமிருக்கும், தமிழகத்தில் எல்லா அரசியல் கட்சி மேடைகளிலும், இதுதான் பேச்சு!

அடுக்கு மொழி!
ஆபாச நடை!!

தமிழ் மொழியின் அமைப்பே அடுக்கு மொழிக்கு இடம் தருகிறது. அடுக்கு மொழி பேசுவதற்கு முன்வந்தவன் நான் மட்டும் அல்ல! என்றாலும் செய்யக் கூடாத ஒரு பாதகத்தை நான் செய்து வருவது போன்ற ஒரு தோற்றமளிக்கும்படி, எல்லா

அரசியல் கட்சியினரும் பேசினர், அடுக்கு மொழியைக் கண்டித்து.

முத்தைத் தரு பத்தித் திருநகை
சத்திக் கிரை சத்திச் சரவண
முத்துக்குக வித்துக் குருபர!

என்பன போன்ற சந்தச் சுவைமிகு எடுத்துக்காட்டுகளை யெல்லாம் நான் பேசி, அடுக்கு மொழி என்பது தவறு ஆகாது என்று விளக்கிக் கொண்டுவந்த காலம்.

தம்பி! நீ மறந்துவிட்டிருப்பாய்; நமது கழகத்தின்மீது என்ன பழி சுமத்துவது என்றே அலைந்தவண்ணம் இருந்த அந்த நாட்களில், நாள் தவறாமல் நாம் கூட்டம் நடத்துகிறோமே, அதுவே தவறு, கேலிக்குரியது, கண்டிக்கத்தக்கது என்று பேசினர்! இப்போது நினைவிற்குக் கொண்டு வந்தால்கூட எனக்குச் சிரிப்பு வருகிறது!

பேச்சுக் கச்சேரி நடத்துகிறார்கள்.
உவமையும் அணியும் வைத்துப் பேசுகிறார்கள்.
இது அரசியல் பேச்சாகுமா!

என்றே எழுதினார்கள் தொடர்ந்து.

இந்த எதிர்ப்பு கழகத்தை ஏதும் செய்துவிடவில்லை.

சொல்லப்போனால், நான் அடுக்கு மொழி பேசுகிறேன் என்று கேலி பேசியவர்களெல்லாம் அடுக்கு மொழி பேசத் தலைபட்டனர்.

அடுத்த கட்டத் தாக்குதல் தம்பி! மேலும் விந்தையானது.

அந்த நேரத்தில், நமது கழகத்தில் கலை உலகினரின் தொடர்பு இன்றுள்ள வகையிலும்

அளவிலும் இருந்ததில்லை. இன்று ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டிருக்கிற பல சமுதாயத் திருத்தக் கருத்துக்களை, நாடகம் மூலம் எடுத்துக் காட்ட வாய்ப்புகள் கிடையாது.

கழகக் கருத்துள்ள நாடகம், சினிமா, பாட்டுக் கச்சேரி, இவை இன்றுள்ளது போல இருந்ததில்லை.

ஆனால், நாடக மூலம், இசை மூலம், அடிப்படையான சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களை எடுத்துக் கூறியாக வேண்டும் என்ற துடிப்பு, நிரம்ப.

அதன் காரணமாக, நாடகங்கள் நடத்திட முனைந்தோம். உடனே தாவிப் பாய்ந்தனர், இது சரியான வாய்ப்பு என்ற எண்ணத்துடன்,

கூத்தாடுகிறான்!
பவுடர் பூசுகிறான்!!
அரசியல் மேடையை நாடக மேடையாக்குகிறான்!
அடுக்குமா! ஆகுமா!
அனுமதிக்கப் போமா? நாடகமாடுபவன் நாட்டிலே அரசியல் கட்சி நடத்துவதா!

கணைகள் சரமாரியாக; மிகக் கூர்மையுடன்!!

ஆனால் தம்பி! அவர்கள்தான் அலுத்துப் போனார்கள், நமது நாடகப் பணி நின்றுவிடவில்லை; கே.ஆர். ராமசாமியின் ஒப்பற்ற கலைத் தொண்டு நமக்குக் கிடைத்தது; சமூக சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பினோம்.

இன்று தலைமை நிலையம் இருக்கிறதே “அறிவகம், அதுவும், அங்கு நடைபெறும் அச்சகமும் பிறவும்,”பவுடர் பூசிகளாக’ இருக்கிறோம் என்று ஏசினார்களே அப்போது பெற்றவை.

கழகத் தோழர்களே நடத்தித் தீரவேண்டியிருந்த நிலையிலிருந்து நமது நாடகப் பணி செம்மையாக

வளர்ந்து "நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி, டி.வி. நாராயணசாமி, எஸ்.எஸ். ராஜேந்திரன் போன்றாரின் பண்பட்ட நடிப்பின் துணை பெற்றது.

தம்பி கருணாநிதி, சி.பி. சிற்றரசு, ஆகியோரின் நாடகங்கள், கழகத்தின் கலைப்பகுதியாக விளங்கி வந்தன.

தம்பி என்று நான் அழைத்தால் மகிழ்ச்சி பெற்றுக் கொண்டிருந்த நிலையில் சிவாஜி கணேசன், கழக நாடகங்களில் பங்கேற்றதை நாடறியும்!

நாடகமாடுவதால், கழகத்தின் தரம் கெட்டுப் போய்விடும் என்று குற்றம் சாட்டினர். கழகமும் வளர்ந்தது; கலை நிலையும் உயர்ந்தது. இன்று இந்த இரு துறைகளிலும் மிக்க ஏற்றம் பெற்றுத் திகழ்ந்திடும் எம்.ஜி. ராமச்சந்திரன், எஸ்.எஸ். ராஜேந்திரன், கே. ஆர். ராமசாமி, டி.வி. நாராயணசாமி ஆகியோர் நாட்டவரின் நன்மதிப்பைப் பெற்றுள்ளனர்.

எதற்காக இதனைக் கூறினேன் என்றால் தம்பி! நாடகமாடுவதையே ஒரு இழுக்கு, இழிவு, அரசியல்வாதி செய்யத்தகாதது; ஆகவே நாடகமாடக் கிளம்பிவிட்டதால் கழகத்தவர் அழிந்துபோய்விடுவர், நாட்டு மக்களுடைய நன்மதிப்பை இழந்துவிடுவர் என்று தவறாகக் கணக்கிட்டுக் கொண்டு, சில ஆண்டுகள் "பவுடர் பூசுகிறானே! பாவலா போடுகிறானே!!' என்றே மேடை அதிரப் பேசிக்கொண்டு வந்தனர்.

இத்தகைய எதிர்ப்புப் பிரசாரம் பலன் தராது போகவே, கழகத்தில் தலைமைப் பதவிக்குச் சண்டை! அவனை இவன் விழுங்கப் பார்க்கிறான்; இவனை அவன் ஒழிக்கப் பார்க்கிறான்! தீர்ந்தது! இன்னும் எட்டே நாளில் படாரென உடைபடப் போகிறது என்று பேசி வந்தனர்.

கழகம் குலையாதது மட்டுமல்ல, நேர்த்தியான ஜனநாயக அமைப்பாக வளர்ந்து வரலாயிற்று.

நாடகத் துறையிலே ஈடுபாடுகொண்டது போலவே கழகத்தவர், சினிமாத் துறையில் ஈடுபடலாயினர்! இதைக் காரணமாகக் காட்டி, இனி இந்தக் கழகம் அழிந்தே போகும்! அவன் - அங்கே புரளுகிறான்! இவன் இங்கே உருளுகிறான்! - என்று ஆபாசமான பழிகளை உமிழ்ந்தனர்.

சினிமாவை விடு!
சிலம்பத்தை எடு!!
என்று நாடெங்கும் முழக்கம் எழுப்பினர்!
இந்தப் படலமும் அவர்களுக்குப் பலன் தரவில்லை.
உடனே வேறோர் முனை பாய்ந்தனர்.
இந்தக் கழகத்தான்கள் பேச்சோடு சரி!
செயலில் முடியாது!!
கிளர்ச்சி நடாத்திட இயலாது!

துணிவும் கிடையாது, திட்டமும் இல்லை; இவர்களை நம்பிக் கிளர்ச்சியில் ஈடுபட ஆட்களும் வரமாட்டார்கள். இவர்கள் கிளர்ச்சி நடத்தினாலும் சர்க்கார் மதிக்காது என்று ஏசலாயினர்.

அப்போது தம்பி! நான் கூறினது நினைவிலிருக்கும்.

கிளர்ச்சிகளைத் தேடி அலையமாட்டோம்.

அவசியம் ஏற்பட்டால் நடத்தாமல் விட மாட்டோம்! என்றேன்.

அந்த வாசகத்தைத் தூக்கிவைத்துக் கொண்டு அலையமாட்டானாம்; அகப்பட்டால் விட மாட்டானாம்.

என்று ஊளருருக்கும் பேசி, ஒவ்வொரு நாளும் கணக்குப் பார்த்து வந்தனர், இன்று கழகம் எந்த

அளவு குலைந்தது என்று! குலையவில்லை.

பிறகு தேர்தலிலே ஈடுபட முனைந்தோம்.

அகப்பட்டுக்கொண்டான் பயல்! இதுவரையில்

சிக்காமல் இருந்து வந்தான்! இனிச் செத்தான்!! - என்று செப்பினர்.

நாட்டு மக்கள் கழகத்தை மேலும் ஏற்றம் பெற்றிடச் செய்தனர்; இவர்களின் ஆரூடத்தைப் பொய்யாக்கினர்.

இரண்டாவது முறை தேர்தலில் ஈடுபட்டவுடன் வேறோர் புகார் கிளப்பினர்.

அண்ணாதுரை பார்ப்பன அடிமை ஆகிவிட்டான்.

ஆச்சாரியார் திருவடி சரணம் என்றாகிவிட்டான்.

இனி அவனைத் தமிழர் துரத்திவிடுவர்.

இந்தப் பிரசாரம், மிகத் தீவிரமாக வேலை செய்யும் என்ற நினைப்பு அதிகம்.

ஆனால், அந்தப் பிரசாரத்திற்குப் பிறகுதான், கழகம் 38-இலட்சம் வாக்குகளைப் பெற்றது!!

ஏமாற்றம்! ஆத்திரம்! எரிச்சல்! அவர்களுக்கு.

ஆகவேதான் தம்பி! உன்னையே ஏசவும், இழித்துரைக் கவும் தலைப்பட்டுள்ளனர்.

இடையிடையே, செத்த பாம்பை எடுத்து ஆட்டிக் காட்டுவதுபோல, ஆச்சாரியாரிடம் சரண் அடைந்து விட்டான்! ஆரிய தாசனாகிவிட்டான்! என்ற பேச்சையும் எடுத்து வீசி வருகின்றனர்.

சுடச்சுட இருந்த நாளிலேயே விலைபோகாத

பண்டம் அது!

இப்போது சூடும்போய், ஈ எறும்பு மொய்த்துக் கொண்டிருக்கும் நிலைக்கு வந்துவிட்டது; இப்போது அதனைக் கூவிக்கூவி விற்றாலும் வாங்கவார் யார்?

ஆனால் வேறு என்ன செய்வார்கள்?

வள்ளிமீது எஜமானியம்மாளால் கோபிக்காமல் இருக்க முடிகிறதா?

அயர்ந்து தூங்குகிறானே என்று வேலையாளிடம் சீமானுக்குப் பொறாமை மூளாமல் இருக்கிறதா? எல்லாவிதமான வசதிகளும், வலிவுகளும் திரட்டிவைத்துக் கொண்டு, தலைவர்கள் ஆகத் துடியாய்த் துடிக்கிறார்கள் பலர்; முடியவில்லை. நீயோ தம்பி! உன் தூய தொண்டின் மூலம், வலிவும் பொலிவும் மிக்க கழகத்தை நடத்திச் செல்கிறாய். கோபம் அவர்களுக்கு. கொதிப்பு மிகுதியாக!! அதனால் இழித்தும் பழித்தும் பேசிட முனைகின்றனர். அவர்களின் வேகம் அதிகமாகும், தேர்தல் நெருங்க நெருங்க!

இழி மொழிகளையும் பழிச் சொற்களையும் கேட்டு, உனக்குக் கோபம் பீறிட்டுக்கொண்டு வர வேண்டும். திசை மாற வேண்டும் என்பது அவர்களின் நோக்கம். தயக்கம், தடுமாற்றம் மூட்டிவிட்டு, தீர்த்துக்கட்டிவிடலாம் என்பது அவர்கள் கொண்டுள்ள நப்பாசை.

இவ்வளவுக்கும் காரணம் உன் தூய தொண்டில் அருமையும் பெருமையும் இன்று அரசியல் வட்டாரத்தில், ஓங்கி வளர்ந்துள்ள தலைவர்களை உறங்கவிடாமல் செய்து கொண்டிருக்கும் ஒரு உன்னதமான பாசறையை அமைத்துக் கொடுத்திருக்கிறதே என்பதனால் ஏற்படும் பொறாமை உணர்ச்சி.

இன்று நேற்றல்ல, நமது கழகம் தொடங்கிய நாள்தொட்டு இத்தகையோரின் இழிமொழியும் பழிச் சொல்லும் நம்மீது வீசப்பட்டு வந்தன. ஆனால் அந்தத் தாக்குதல் நமது வளர்ச்சியைத் தடுத்திட இயலவில்லை என்பதை நினைவுபடுத்தவே "பழங்கதை’யைக் காட்டினேன்!

ஆறு புரண்டோடி வரும் வேகத்தில், கூழாங்கற்களை உருட்டி விட்டுவிடும்.

பெரும் பாறைகள் தடுத்திடினும், அவற்றிலே, மோதிப் பேரிரைச்சலுடன் மேலே தாவும்!

மிகச் சாமான்யர்கள் நாம்! மிகப் பெரிய வலிவினை உருவாக்கி வைத்திருக்கிறோம்.

மிகப் பெரியவர்கள் வலிவு பெறத் தவம் கிடக்கிறார்கள்; பெற்றிட இயலவில்லை.

அதனால் வந்திடும் ஆத்திரத்தில் ஆயிரத்தெட்டு ஏசிடத்தான் தோன்றும்.

•

அந்த வட்டாரத்திலேயே அவன் பெரிய மிட்டாதாரன்! தலம் பல சென்று தொழுது, வரம் பெற்றுப் பெற்றான் ஒரு மகனை! ஆனால் அவனோ...

பொட்டல் காட்டினைப் பண்படுத்திப் பூந்தோட்ட மாக்கினான் ஒரு காளை.

ஒரு நாள் ஆற்றோரம் மிட்டாதாரன் மகன் உலவச் சென்றான். திடீரெனக் கீழே சாய்ந்தான்! காக்காய் வலிப்பால் தாக்குண்டதால்!

கண்டான் காளை! கடுகிச் சென்று, மிட்டாதாரன் மகன் முகத்தில் நீர் தெளித்து, நினைவு வரச் செய்து, அவனை அழைத்துச் சென்றான் மாளிகைக்கு!

மிட்டாதாரன் நன்றி கூறத்தானே வேண்டும்? எரிந்து விழுகிறான், காளையின்மீது!

பார்! இந்தப் பயலை. கொழுத்துக் கிடக்கிறான்!

இத்தனைக்கும் இராப்பட்டினி!

என் மகன் - குலக் கொழுந்து - இப்படி இருக்கிறான்!

என்று எண்ணுகிறான்; கடுங்கோபம் வருகிறது.

தம்பி! கதைதான்: ஆனால், இத்தகைய இயல்பு கொண்டோர் இருந்திடும் இடத்திலேதான் நீயும் நானும் இருந்து வருகிறோம். ஏசுகிறார்களே ஏன் என்று வியப்படையவா வேண்டும்: விளக்கம் பெற்றிட வேண்டும்: நம் வெற்றி அவர்களுக்கு வேதனையைத் தருகிறது: அதனால், பாவம் எரிச்சல் மிகுந்த நிலையில், எதையெதையோ கதைக்கிறார்கள்.

அவர்களுக்குத் தெரிந்ததை அவர்கள் செய்து கொண்டிருக்கட்டும்; நாம் நமது இயல்புக்கு ஏற்றனவற்றினைச் செய்தபடி இருப்போம். நல்லோரின் தீர்ப்பு நம் பக்கம்தான் இருந்திடும்!

அன்புள்ள
அண்ணாதுரை
5-6-66

வந்திடு! ஒளி தந்திடு!

கட்சிமாறிகளின் நா வாணிகம் குறித்துக் கவலை கொளளல் வீண்!
ஜென்கின்ஸ் காதுப் போர் தரும் படிப்பினை!
வதந்திகளுக்கு மதிப்பளிப்பது நேரக்கேடு; மறுப்பது அறிவுக்கேடு!
உதயசூரியன் நமக்கு ஏற்ற இயற்கைச் செல்வச் சின்னம்!
இந்தியைத் தீயாக்கி இன்தமிழை அழித்திட இயலாது!
எழுஞாயிறே! திருச்சிக்கு வந்திடு! ஒளி தந்திடு!

தம்பி!

"விருந்தா! அங்கேயா? கர்மம்! கர்மம்! வேளா வேளைக்கு வெந்ததோ நொந்ததோ ஏதோ ஒரு வகையானது கிடைத்தால் போதாதா? விருந்து போட்டிட்டான், விலாப் புடைக்கத் தின்று கிடந்தேன் என்றா எண்ணிக்கொண்டுள்ளீர், வேதனை! வேதனை!'

"சுவை மிக உண்டு! உண்போர் மறவார்! ஊரோரே! வாரீர்! என்றெல்லாம் முன்பு பேசிடுவீரே; கேட்டிருக்கிறேனே, அதனால்தான், அங்கு விருந்துச் சுவை உண்டு போலும் என்று எண்ணிக்கொண்டேன்.'

"அங்கு இருந்தபோது நான் பேசியதையா நம்பிவிட்டீர்கள்! ஐயோ! ஐயோ! அவன் கையைக் காலைப் பிடித்துக்கொண்டு கெஞ்சுவது என்னை

அவ்விதமெல்லாம் பேசவைத்தது.'

"அப்படியானால் அங்கு ஒரு நலனும் இல்லை, பெற்றிடவில்லை என்று சொல்லுங்கள்'? அதற்கு என்ன ஐயம்! ஒரே வறட்சி! ஓயாத தொல்லை. சிற்சில வேளைகளிலே சீர் தலைகாட்டும்; அஃது நான் அளித்தது; அவனிடமிருந்து பெற்றது அல்ல.'

"போதுமான அளவு பண்டங்களே கிடையாதோ அங்கு.'

"அங்கு என்ன உண்டு? பண்டம் பலவற்றைப் பாடுபட்டு நான் தேடிக்கொண்டு போய்த் தருவேன்; பாவிப் பயல் அருமை தெரியாமல் அத்தனையும் பாழடிப்பான்! பண்டம் இருந்தால் மட்டும் போதுமா? பாங்காகச் சமைத்திடத் திறம் இருக்க வேண்டாமோ? ஏது திறம்? எல்லாப் பண்டந்தனையும் கூட்டிக் குழப்பிக் கொதிக்க வைத்துத் தந்திடுவான்! என் செய்வேன் நான், இடமறியாது இங்கு வந்து சிக்கினேனே, விடுதலை நாள் என்றோ என்றெண்ணி ஏங்கிக் கிடந்திடுவேன். வேறு வழி.''

"கூட்டுடன் குழம்புண்டு, வறுவல் பொரியலுடன் வகையான சுவையான பல உண்டு என்றெல்லாம் கூறுவரே.'

"கூறினேன் நான் கூசாமல்; கூறாதே இங்குள்ள குறையையெல்லாம் என்று கூப்பிடுவான் கரந்தன்னை, என் செய்வேன்! கொதிப்பை அடக்கிக்கொண்டு, குளிர்ச்சோலை! மணமாலை! தேன் அருவி! கனிச்சாறு! என்றெல்லாம் கூறி வந்தேன் அன்று.

"இன்று இங்குக் கண்டிடும் நிலை உமக்கு மனநிறைவு தருகிறதோ?'

"மனநிறைவா! நன்று! நன்று! இன்றே காண்கிறேன் இனிமை எல்லாம்! என்னென்று

இயம்பிடுவேன் என் மகிழ்வை! மல்லிகைப் பூவின் நிறம், மணம்! மாதுளையின் சுவை! மாத்தமிழ்போல் இனித்திடுது இவ்வுணவு! செம்பொன்னை உருக்கியோ வைத் துள்ளார் என்றன்றோ எண்ணிக்கொண்டேன், குழம்புதனைக் கண்டபோது! ஒவ்வொன்றும் இனிக்கிறது! ஒவ்வொன்றும் என்னை இவ்விடத்துடன் பிணைக்கிறது. இஃதன்றோ விருந்து! இதுவன்றோ இல்லம்! இங்கன்றோ நான், நானாக இருக்கின்றேன்.'

"தலைவாழை இலை இல்லை என்று குறை காண்பீரோ! தயிரன்னம் தன்னில் நீரதிகம், வெண்ணெய்ப் பசை குறைவு என்றெண்ணிக் கவலைப்படுவீரோ என்றெல்லாம் எண்ணிக் கொண்டேன்.'

"தவறு! பெருந்தவறு! தரணியெங்கும் எடுத்துரைப்பேன் இங்குள்ள மாண்பதனை: தங்க நிகர் குணம் உமக்கு! அங்குள்ளோன், வெறும் ஈயம்! பலாச்சுளைப் பேச்சு இங்கு; அங்கோ பழைய சோறு! உப்புண்டா அளவோடு அங்கு? இங்கு, தாங்கள் தொட்டாலே போதும், தித்திப்பு ததும்பிடுதே! என்னென்பேன் தங்கள் இன்முகத்தின் காட்சிதனை! எள்ளும் கொள்ளும் வெடிக்கும் முகம் அங்கு! எழுதிடுவேன் ஓவியம் நான் என்றெண்ணுவோன் இஃதன்றோ இனியமுகம் என்றன்றோ கூறிடுவான்; இத்திருமுகத்தைக் கண்டக்கால் நல்ல இடம்! நல்லோர் உள்ள இடம்! நான் நாள் பலவாய் அலைந்தலைந்து கண்டறிந்தேன் இத்திரு இடத்தை! இனி இவ்விடத்துப் பெருமைதனைப் பாரறியச் செய்திடுவேன்! பாவிமகன் இருக்கின்றானே அப்பாழிடம், அதன் கொடுமை அவன் அறிந்திட வைப்பேன்! அஃதே இனி என் பணி! ஆம்!'

•

விருந்து கிடைத்திடும் இடம் எதுவோ அது நல் இடம்,

நம் இடம் என்று கூறிடும் இயல்பினன், ஓரிடத்தில் இருந்து விட்டுப் பிறிதோரிடம் வந்தடைந்தால் முன்னைய இடத்தைப் பற்றிப் பல பழியும் பேசி, புதிய இடத்தார்க்குப் பூரிப்புத் தந்திடவே முனைவான்.

அவன் பேச்சைக் கேட்டிடும் புது இடத்தார், புத்தி கெடாத நிலையில் இருப்பாரேல், "ஏதேது இவன் காலின் கீழ்போட்டு மிதிக்கின்றான், முன்பு கண்ணில் ஒத்திக் கொண்டதனை! ஏத்தி ஏத்தித் தொழுததனை இன்று பிய்த்துப்போடுகிறான்! இவன் இயல்பு, ஆபத்தைத் தருவதன்றோ! அந்த இடம்பற்றி இந்த இடம் வந்தவுடன் இதனைக் கூறுபவன், இந்த இடம்விட்டு ஏகிடும் நிலை பிறந்திடின், எந்தெந்த இடம் சென்று ஏதேது கூறுவனோ! துணிந்த பேர்வழி இவன் போன்றார் தம்மைச் சற்றுத் தொலைவினிலே நிறுத்திவைத்திட வேண்டும். அருகே வந்திவனும் அணைப்பைப் பெற்றிடின், நானறிவேன் எல்லாம்; நவில்வேன் கேளீர் என்றே நாலு பேரிடம் சென்று நம்மைப் பற்றி நாராசம் பேசிடுவான்; நல்லது தாராது இவன் நட்பு! என்றறிந்து அதற்கேற்றபடி நிலையை அமைத்துக்கொள்வார்!

அஃதன்றி, பழி பேசக் கேட்பதிலே பாகுசுவை கண்டு மகிழ்ந்திடும் குறைமதியாளனெனின், குறை கூறுவோனைக் கூடத்திலே அமர்த்தி, குதூகலமும்தான் ஊட்டி, கூறு! கூறப்பா! குறைகளை எல்லாம் கூறு! எனக் கேட்டு மகிழ்ந்திருப்பார். இன்று ஒருவருக்கு! நாளை, நமக்கே இவன் பகைவனாகிவிடின், இஃதே போல இழித்தும் பழித்துமன்றோ பேசிடுவான் நம்மைப்பற்றி என்பதனை அறிந்திடாமல்.

•

முடியுடை மூவேந்தராட்சி மறைந்து நாடெங்கும் சிற்றரசரும், பாளையக் காவலர்களும் ஆங்காங்குக்

கொலுவிருந்த நாட்களில், ஒரு சிற்றரசனிடம் கைகட்டி நின்றும், களிப்பூட்டி வந்தும், காலந்தள்ளிடும் பேர்வழிகள், அங்குப் பசை குறைவு, வேறு பசை தேடிடுவோம் என்று எண்ணிப் புதிய இடம் போய்ச் சேருவதும், அங்கு, முன்பு இருந்த இடந்தன்னைப் பற்றித் தூற்றிக்கிடப்பதும் வாடிக்கையாகிவிட்டிருந்தது. அந்த நிலையினை விளக்குவதே, மேலே காட்டியுள்ள உரையாடல்.

•

இன்று, கட்சியைவிட்டுக் கட்சி தாவிடும் கண்ணியவான்கள், இந்த "மரபு' கெடாமல் காப்பாற்றிக் கொண்டு வருகின்றனர்! காண்கின்றாயே, தம்பி! இங்கு இருந்தபோது அவர்களுக்கு எல்லாம் இனித்தது, சுவைத்தனர்; இந்த இடம்விட்டுச் சென்றதும், புதிய இடத்துள்ளார் முன், புகழ்பாடிக் கிடப்பதுடன் இருந்துவிட்டு வந்த இடம் பற்றி இழித்துரைத்திடுவதனைக் கலையாக்கி, நல்ல விலைக்கும் விற்கின்றார்! நா வாணிகம், நல்லபடி நடக்கிறது. அவர் பேச்சு பற்றிச் சிற்சிலர் என்னிடம் கூறிடக் கேட்கின்றேன். சூழ்நிலை இன்று போலன்றி சிறிதளவு நல்லதாக இருந்த காலந் தன்னிலேயே, விருந்தளித்த இடம்பற்றிப் புதிய விருந்தளிப்பான் மாளிகையில், பழி பேசிப் பிழைத்து வந்த பலர் பற்றி நினைக்கின்றேன்; சிரிக்கின்றேன்: வாழ்வுபெற, செச்சே! அஃதும் அல்ல; வாழ்வை நடத்திச் செல்ல, என்னென்ன செய்கிறார் என்றெண்ணி - அவர்க்காக இரங்குகின்றேன்! ஏதோ பாவம், இது செய்தேனும் இருக்க நினைக்கின்றாரே, அஃதேனும் அவர் விருப்பத்தின் அளவுக்கு நடைபெறட்டும்; இங்கு இருந்துவிட்டுச் சென்றவர் அல்லவோ அவர்! எப்படியோ சுவை பெறட்டும், சுகப்படட்டும்!! என்றும்கூட எண்ணிக் கொள்கின்றேன். ஆனால் தம்பி! ஒன்றுமட்டும் புரிவதில்லை எனக்கு; ஆகவே கவலை கொள்கின்றேன். என்னவெனில், எது

உண்மை, எது நடிப்பு; இங்கு இருந்தபோது அவர் குலவியது உண்மையா, அன்றி அங்குச் சென்று தடவித் தருகின்றனரே, அஃது உண்மையா, எது உண்மை, எது போலி! என்பதுதான் புரியவில்லை. ஏனெனில், இங்கு அவர் இருந்த காலை சொரிந்த அன்புரையும் வரைந்த வாழ்த்துரையும், கொஞ்சமல்ல! அவை அவ்வளவும் அவர் உள்ளத்தில் ஊறிவந்தனவா, வெறும் உதட்டசைவா? உதட்டசைவே என்று கொண்டிடின், இன்று அவர் அங்குச் சென்று உரைத்திடுபவை உள்ளத்தில் ஊற்றுப் பெருக்கெடுத் தோடி வருபவை என்கின்றார். ஆயின் இங்கு இருந்தபோது அஃதே சொன்னார்! எனின் இன்று அங்கு உள்ளம் உரைப்பது என்றுரைப்பவை தம்மை நாளை உதட்டசைவே! என்று கூறிடமாட்டார்கள் என்பதற்கு எது உறுதி!!

உண்மை எது, போலி எது என்று எண்ணிடும் போதன்றி, பிறிதோர் நேரம், அவர் கூற்று பலபற்றி நான் பொருட்படுத்திக் கொண்டில்லை. உலகம் என்றால், பல இருக்கத்தான் செய்யும் என்றெண்ணி இருந்து வருகின்றேன். அஃதே போல, இவர் போன்றார் நிலைகண்டு, உலகின் போக்கை உணர்ந்துகொள் தம்பி! என்றுனக்கும் கூறுகின்றேன். அவர் பேச்சு, அவர் நிலையின் விளைவு என்பதனை அறிந்துகொள்ளின், அப்பேச்சுதனைக் குறித்துக் கவலைகொளல் வீண் என்ற உணர்வு பெற்றிடலாம்.

என்னென்ன விந்தையான மாறுதல்களைக் காண் கின்றோம் என்பதனை எண்ணிடும்போது, நகைத்திடக்கூடத் தோன்றும். அந்த வகையில் அவர்கள் நம்மிடம் இல்லாமலேயே, நமக்குப் பொழுதுபோக்குத் தந்திடும் வேலையையும் செய்து வருகின்றனர் என்றும் கொள்ளலாம். நான் அவ்விதமாகத்தான் எண்ணிக் கொள்கின்றேன்.

தேர்தல் நெருங்க நெருங்க, தம்பி! இவர் போன்றாரின் வேலை சுறுசுறுப்படையும். “அங்கு இருந்த பேர்வழி’ என்பதனையே ஓர்”தகுதி’ யாக்கிக் கொண்டு தூற்றிடுவர்; அதற்காகத் தானே இவர்களை இங்கு அமர்த்தி இருக்கிறோம் என்ற எண்ணத்தில் புதிய இடத்துத் தலைவர்களும் தட்டிக்கொடுத்து வேலை வாங்குவர். இந்த நிலைமையினை நன்கு உணர்ந்து கொண்டால், இருந்துவிட்டுப் போனவர்களின் தூற்றல் பற்றிக் கவலைப்படக்கூடாது என்ற தெளிவு பிறந்திடும். அதற்கே இதனை விளக்கினேன்.

தம்பி! கோட்டான்கள் அனைத்தையும் தொலைத்தா லொழிய நமது இசையின் இனிமையையும் அருமையையும் எங்ஙனம் மாந்தர் உணர்ந்திட முடியும் என்று குயில் எண்ணுகிறதோ! இல்லையே! எத்தனை எத்தனையோ கத்தல், கதறல், உறுமல், குமுறல் இருந்திடினும் நமது குர-ினிமையை நுகர்வோர் நுகர்வர் என்றன்றோ மாங்குயில் பூஞ்சோலையில், கூவி இன்பத்தை வழங்குகிறது.

கோட்டான் பற்றிய குறிப்பினைத் தந்ததும், நான் படித்த ஒரு கட்டுரை நினைவிற்கு வருகிறது; தருகிறேன்.

முகிலன் என்பார், "தமிழ் மலர்’ எனும் சிங்கப்பூர் நாளிதழில் தந்ததிது :

அந்தக் காடு, மனிதர்களின் நடமாட்டமின்றி அமைதி பெற்றிருந்தது, பல்வகையான பறவை இனங்கள் அங்குமிங்கும் பறந்து கொண்டும், அது அதற்குரிய ஓசைகளை எழுப்பிக் கொண்டும் இருந்தன.

காட்டின் ஒரு மூலையில் அமர்ந்திருந்த கோட்டான், எதையோ நினைத்து வேகமாகக் குரல் எழுப்பிக் கொண்டிருந்தது!

அப்பக்கமாகப் பறந்து வந்த ஆந்தை, இந்தக் கோட்டானின் குரலைக் கேட்டு அதற்கெதிரே வந்தமர்ந்து அதையே பார்த்துக் கொண்டிருந்தது.

"நம் குரலின் இனிமையைக் கேட்டுத்தான் இந்த ஆந்தை இங்கு ஓடி வந்திருக்கிறது’ என்று நினைத்த கோட்டான், மேலும் மேலும் வேகமாகக் கத்த ஆரம்பித்தது.

இந்த அலறலைக் கேட்ட ஆந்தை, "இது என்ன வெறும் அலறல்?’ என்று கேட்டது.

"என்ன அலறலா? என் குரல் உனக்கு அப்படியா தோன்றுகிறது? என்று கேட்டுவிட்டு ஆந்தையை வெறுப்புடன் பார்த்தது!

"அலறல் என்பது எனக்குத்தான் உரியதென்று இருந்தேன்! ஆனால், இப்போது நீயும் அலற ஆரம்பித்துவிட்டதால், அதை நான் வேறுவிதமாகச் சொல்ல முடியவில்லை’ என்று ஆந்தை பதிலளித்தது.

நான் உன் குரலுக்கு முயலவில்லை! என் குர-லேயே ஏற்றமுறத்தான் பயிற்சி செய்கிறேன். அந்த முயற்சியை நீ பாராட்டாவிட்டால், உனக்கு "ரசனையே தெரியாது என்றுதான் சொல்ல வேண்டும்!’ கோட்டான் இப்படிக் கூறிவிட்டு மேலும் அதை ஆணவமாகப் பார்த்தது!

“ஆமாம் ஆமாம் எனக்கு”ரசனை’ தெரியாதுதான். ரசனை தெரிந்த நீ, என் குரலைப் பற்றி என்ன நினைக்கிறாய்?’ என்று ஆந்தை கூடுவிட்டு அலற ஆரம்பித்தது!

ஆந்தையின் அலறலைக் கேட்ட கோட்டான், "பரவாயில்லையே! இந்த அளவுக்கு உன் தகுதி உயர்ந்திருக்கு மென்று நான் நினைக்கவேயில்லை!’ என்று பாராட்டுக் குரல் எழுப்பியது.

கோட்டானின் பாராட்டைக் கேட்டதும் ஆந்தைக்கு மகிழ்ச்சி பொறுக்க முடியவில்லை! "நண்பா, இன்று முதல் உனக்கு நானாகவும் எனக்கு நீயாகவும் பாராட்டிக் கொண்டு வாழ்வதுடன், இந்தக் காட்டிலேயே - ஏன் வேறு எந்தக் காட்டிலும் நம் புகழை நிலைநாட்ட நாம் பாடுபடுவோம்!' என்று கூறியது.

கோட்டானுக்கு ஆந்தையின் நட்புக் கிடைத்ததும் அதற்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

அந்தச் சமயம் அங்கு வந்த குயில், பக்கத்திலிருந்த மரத்திலமர்ந்துகொண்டு, தன் குரலின் இனிமையை அடக்கமாகப் புலப்படுத்திக் கொண்டிருந்தது.

அக்கம் பக்கத்திலிருந்த மற்ற குருவிகள், அந்தக் குரலைக் கேட்டுப் பலவகையான பாராட்டுக்களை எழுப்பிக் கொண்டிருந்தன.

இந்தக் காட்சியைக் கண்ட ஆந்தையும் கோட்டானும் ஒன்றை ஒன்று பார்த்துக் கொண்டிருந்தன.

"என்ன நண்பா, இந்தக் குயிலின் குரலை உன்னால் ரசிக்க முடிகிறதா?' - ஆந்தை கோட்டானைப் பார்த்து இப்படிக் கேட்டது!

நம் குரலையே நாம் ரசிக்க நேரமில்லாதிருக்கும் போது, இவற்றுக்கெல்லாம் நமக்கேது நேரம்? அந்தக் குயிலைச் சுற்றிக்கொண்டிருக்கும் மற்றவற்றுக்கு "ரசனை' என்றால் ஏதாவது தெரியுமா? தெரிந்திருந்தால் இப்படிக் காட்டுக் கூச்சலைக் கேட்க ஓடுமா? என்று கோட்டான் ஆரம்பித்தது!

"நமக்கு மற்றவற்றைப் பற்றி அக்கறையில்லை! அதுகள் ஒரு வழி என்றால் நாமும் அவ்வழியில்தான் செல்ல வேண்டுமா? நமக்கென ஒரு வழி இருக்கும் போது நாம் ஏன் அவ்வழியை நாட வேண்டும்?' -

ஆந்தையின் இந்தப் பதில் கோட்டானுக்கு குதூகலத்தையளித்தது!

"ஆம் நண்பரே’ நம் திறமையை நாம் புரிந்திருக்கும் போது, பிறர் புரிந்தாலென்ன புரியாவிட்டால் என்ன நீ உன் குரலை எழுப்பு, நான் ரசிக்கிறேன். நான் என் குரலை எழுப்புகிறேன் நீ ரசி!’ என்று கோட்டான் கூறியதும் இரண்டும் சேர்ந்து ஏக காலத்தில் அந்தக் காட்டில் குரலெழுப்ப ஆரம்பித்தன.

காலம் ஓடிக்கொண்டிருந்தது. குயிலின் புகழுக்கு இணையாக வரவேண்டுமென்று நினைத்த ஆந்தையும் கோட்டானும், எங்கெங்குப் பறந்து சென்று கத்த முடியுமோ அங்கெல்லாம் சென்று கத்திப் பார்த்தன! அலறிப் பார்த்தன!

அலறலையும் ஆரவாரத்தையும் கண்ட மற்ற புள்ளினங்கள் எங்குச் செல்ல வேண்டுமோ அங்குச் சென்று கொண்டிருந்தன!

•

மற்றோர் வகையினரும் உண்டு; இவர்கட்கும் தேர்தல் நேரம், சுறுசுறுப்பு மிக்க நேரம். இவர்களின் வேலை, வதந்திகளைக் கட்டிவிடுவது.

தெரியுமா, தெரியுமா? என்று துவங்கிச் சிப்பிக்குள் முத்து இல்லை, செந்தேள் குட்டி உளது; கண்ணுக்குள் கருமணி இல்லை, கண்ணாடித்துண்டு உளது என்று எதை எதையாவது மூட்டிவைப்பர்.

தாம் கூறுவதை, மற்றவர் நம்பிட வேண்டும் என்பதற்காகக் கூட அல்ல, நம்புவார்கள் என்ற எண்ணம் கொண்டுகூட அல்ல, சில நேரமாகிலும் வதந்தி நெளியட்டும், பலர் காணட்டும், அதுபற்றிப் பேசட்டும், அந்தப் பேச்சிலிருந்து ஏதேனும் புகை கிளம்பட்டும், பகை மூளட்டும் என்ற கெடு

நினைப்புடன்.

அவரும் அவரும் கூடிக்கூடிப் பேசுவது ஏன்?

இவருக்கு உள்ள திறமை அவருக்கு உண்டா என்பது பற்றிப் பலமான விவாதம் நடக்கிறதாமே?

எவர் பற்றியும் எனக்குக் கவலை இல்லை என்று அவர் மிகக் கடுமையாகப் பேசினாராமே?

அவர் பக்கத்தில் நான் அமரமாட்டேன் என்று இவர் பிடிவாதம் செய்தாராமே?

இப்படிப்பட்ட பேச்சுக்களை அவிழ்த்துவிடுவர், அமைதியுடன், துளியும் பரபரப்புக் காட்டாமல், ஏதுமறியாதார் போன்ற கோலம் புனைந்து கொண்டு.

அப்படியா? என்று சிலர் கேட்பார்கள்.
அண்டப்புளுகு என்று சிலர் கூறுவார்கள்.
இருக்கவே இருக்காது என்று சிலர் சொல்லுவார்கள்.
ஆதாரம் காட்டு என்று சிலர் அறைகூவல் விடுப்பார்கள்.

ஆக மொத்தம், அந்த வதந்தியை அவிழ்த்துவிடுவதன் மூலம், பலருடைய கவனத்தை ஈர்த்திட முடிகிறது. பலவிதமான எண்ணங்கள் எழச் செய்ய முடிகிறது அல்லவா; அதுவரையில் இலாபம் என்ற நினைப்புடன் பேசிடும் போக்கினர், தேர்தல் நெருங்க நெருங்க, வேகத்துடன் வேலை செய்வர்.

தம்பி! வெறும் வதந்தியைப் பரப்பியே, இங்கிலாந்து நாட்டைப் போரிலே இழுத்து விட்டுவிட்ட சம்பவம் ஒன்று உண்டு.

அந்தப் போருக்கே, ஜென்கின்ஸ் காது பற்றிய போர் என்று பெயர்.

ஜென்கின்ஸ் என்ற பிரிட்டிஷ் கடற்படைப் பிரிவினைச் சேர்ந்த ஒரு வீரனை, மடக்கிப் பிடித்துப்

பிரான்சுக்காரர்கள், அவனுடைய காதை அறுத்துப் போட்டுவிட்டார்கள் என்று எவனோ ஒரு வதந்தியைக் கட்டிவிட்டான்.

அப்படி நடந்திருக்குமா? யார் கண்டார்கள்? ஜென்கின்சு என்ன சொல்கிறான் என்றெல்லாம் யோசிக்கக்கூட இல்லை. வதந்தி வேகமாகப் பரவப் பரவ, சிந்தனை பாழ்பட்டது, சீற்றம் மிகுந்தது, காது அறுத்த கயவர்களை விடக்கூடாது! பழிக்குப் பழி! இரத்தத்துக்கு இரத்தம்! காதுக்குக் காது! என்ற காட்டுக் கூச்சல் கிளம்பிற்று. போரே மூண்டது. போர் முடிவுற்ற பிறகுதான், ஜென்கின்ஸ் என்ற பெயருடையான் எவனும் பிரிட்டிஷ் கடற்படையில் இல்லை; எவனுடைய காதையும் பகைவர் துண்டித்துப் போடவில்லை; அது வெறும் கட்டுக்கதை என்பது தெரிந்தது. ஆனால் அதற்குள் ஒரு போரே நடந்தேறி விட்டது;

இது போன்ற வதந்திகளைத் தமது தனிச் சரக்கு ஆக்கிக்கொண்டுள்ள விபரீத வியாபாரிகள் தேர்தல் சமயத்தில் தமது கடையினை விரிப்பர்; பரபரப்பு தன்னாலே மூண்டுவிடும் நேரம் இது என்பதாலே.

எவரெவர் நமது கழகத்தின் பொறுப்பினை ஏற்றுக்கொண் டுள்ளனரோ, அவர்கள் நமக்குத் தெரிவிக்க வேண்டியவைகளை, தெரிவிக்கவேண்டிய நேரத்தில், தெரிவிக்க வேண்டிய முறையில் தெரிவிப்பார்கள்; நமது கழகப் பொறுப்பிலே ஈடுபாடு கொள்ளாதவர்கள் எதை எம் முறையில் கூறிடினும், நாம் அது குறித்துக் கவலை கொள்ளக் கூடாது என்ற திடமனம் கொண்டிட வேண்டும். நமது தோழர்கள் அத்தகைய திடமனம் கொண்டோ ராக இருந்திடுவதாலேயே, பல ஆண்டுகளாக, தனித் திறமை காட்டிக் கட்டிவிடப்பட்ட வதந்திகள், மூட்டிவிடப்பட்ட கோள்கள், நமது கழகத்தை ஏதும் செய்திட இயலாது, வீழ்ந்து பொடிப்

பொடியாகிவிட்டன.

இந்தியாவுக்குக் கிடைத்திடும் "சுயராஜ்யம்’ துக்க ராஜ்யம் என்று பெரியார் கருதி, ஆகஸ்ட்டு பதினைந்தாம் நாளைத் துக்க நாள் என்று நடாத்திட அறிக்கை விடுத்ததை நான் மறுத்ததனை அறிந்திருப்பாய்.

தம்பி! அப்போது என்னைப்பற்றிக் கட்டிவிடப்பட்ட வதந்திகள் கணக்கில் அடங்கா!

இப்போது எண்ணிக் கொண்டாலும் எனக்குச் சிரிப்பு வருகிறது.

ஒரு வெடிச் சிரிப்புக் கிளப்பிவிட்டுக் கேட்பார் ஒருவர்

என்ன விலை கெஜம்! நேர்த்தியாக இருக்கிறதே சட்டைத் துணி? கதர்தானே!

கதர் அல்ல ஐயா வழக்கமாக நான் போடும் கைத்தறித் துணிதான்.

கதர் என்று பார்த்தேன், கைத்தறித் துணியா!

தம்பி! கேலி புரிகிறதல்லவா? ஆகஸ்ட்டு பதினைந்து துக்க நாள் அல்ல என்று நான் எழுதியதால், நான் காங்கிரசாகிவிட்டேன் என்று பொருள் கொண்டு, பலப்பல வதந்திகளைக் கிளப்பினர்.

நான் மட்டும் வதந்திகளின் தன்மையையும். அவற்றினைக் கிளப்பிவிடுவோரின் போக்கினையும் ஓரளவு தெளிவாகத் தெரிந்துகொண்ட நிலையினனாக இல்லாதிருந்திருப்பின், என்னென்ன நேரிட்டிருக்கக்கூடும் என்பதை எண்ணும்போது நடுக்கமே எடுக்கிறது.

வதந்திகளைக் கிளப்புகின்றவர்கள்,

பொறுப்பான பதவியினராக இருந்திடினாவது, அவர்களைக் கேட்கலாம், இது சரியா, முறையா என்று.

தவறானவைகளைக் கூறிடினோ, பழி சுமத்திடினோ, குற்றம் சாட்டிடினோ, வழக்கேகூடத் தொடுக்கலாம்,

அவ்விதமான பேச்சுகளை, பொறுப்பில் உள்ளவர்கள் பேசுவதில்லை. பேசிடுவோரோ எதுபற்றியும் கவலையற்ற நிலையினர். அவர்களிடம் வாதாடுவதோ, மறுப்பு உரைப்பதோ, விளக்கம் கேட்பதோ வீண் வேலை.

மேடைமீது ஏறி, அத்தகைய ஒருவர்

உங்கள் அண்ணாதுரைக்கு வலக் கண் கெட்டு விட்டது; பெயர்த்து எடுத்துவிட்டார்கள்; இப்போது உள்ளது கண்ணாடியால் செய்யப்பட்டது.

என்று பேசுகிறார் என்று வைத்துக்கொள். உடனே நான் பதறிப்போய், ஊரூருக்கும் ஓடி, ஒவ்வொருவர் முன்னாலும் நின்று. ஐயா! என் கண்ணைப் பாருங்கள்! வலக் கண்ணை! கண்ணாடி அல்லவே! - என்றா கேட்டுக் கொண்டிருக்க முடியும்?

அப்படியே கேட்டிடின் என்ன எண்ணிக்கொள்வார்கள்? கண் சரியாகத்தான் இருக்கிறது ஆனால், ஐயோ பாவம், மூளைதான், என்னவோ போலாகிவிட்டது என்று கூறிப் பரிதாபப்படுவார்கள்.

ஆகவே தம்பி! வதந்திகளுக்கு மதிப்பளிப்பது நேரக்கேடு. அவைகளை மறுப்பது, அறிவுக்கேடு என்பதனை உணர்ந்திடின், அவை பற்றிய கவலையைக் கொள்ளாதிருக்கலாம்.

தம்பி! நமது கழகத் தோழர்களின் மனத்தைக்

குழப்பிட, இதுவரையில் எண்ணற்ற வதந்திகள் கிளப்பிவிடப்பட்டன; எவற்றினையும் நமது தோழர்கள் பொருட்படுத்திடவில்லை. பொழுதைப் பாழாக்கிக் கொள்ளவில்லை என்று தெரிந்தும் பார்க்கலாம்! இந்த முறை பார்க்கலாம்! இந்த வதந்தியாவது ப-க்கிறதா பார்க்கலாம் என்ற ஆசைகொண்டு அலைவோர் நிரம்ப உள்ளனர். அவர்தம் வேகம் அதிகமாகும் காலம் இது. தேர்தல் காலம். ஏற்கெனவே உன்னிடம் உள்ள தெளிவும் திடமனமும் மேலும் நேர்த்தியானதாகிட வேண்டும். அதற்கே இதனைக் கூறுகின்றேன்.

பிறிதோர் வகையினரும் உளர். அவர்தம் தொழில் திறனையும் நான் காணுகின்றேன்.

உங்களுடைய கல்யாணி, மிக அருமை! மிகமிக அருமை! தோடியில் ஒரு கிருதி பாடினீர்களே அது முதல் தரமாக அமைந்திருந்தது. ஆனால், சற்று தாளத்தை மட்டும் கவனித்துக்கொள்ள வேண்டும்; அடிக்கடி தவறுகிறது! தாள ஞானம், சங்கீதத்துக்கு அடிப்படை அல்லவா!!

இவ்விதம் ஒரு இசைவாணனிடம் பேசி, அவரைப் பாராட்டவும் செய்கிறேன், கண்டிக்கவும் செய்கிறேன்; நான் நடுநிலை நின்று "குணதோஷம்' காண்பவன் என்று கூறிடுவோர் உண்டு!

ஒரே மொத்தமாகக் கண்டித்தால், இவருக்கு அவரைப் பிடிக்காது என்று ஒதுக்கிவிடுவார்கள். அந்த விமரிசனத்தைப் பொருட்படுத்தமாட்டார்கள் என்பதனால், புகழவும் செய்கிறேன், கண்டிக்கவும் செய்கிறேன் என்று போலிப் போக்குக் காட்டி, தமது பேச்சுக்கு ஒரு இடம் தேடிப்பிடித்துக் கொள்பவர்கள் உண்டு; இசைத் துறையிலே மட்டுமல்ல; நமது துறையிலும்.

அவர்கள், கழகத்தின் தொண்டர்கள்

அருமையான வர்கள், அவர்கள் உழைப்பு தரமானது, இலட்சியப் பிடிப்பு நேர்த்தியானது. இது போன்ற தொண்டர்களை எங்கும் காண முடியாது. ஆனால்... ஆனால்... பாவம், அவர்களுக்கு விவரம் புரிவதில்லை, தெளிவு இருப்பதில்லை. எவனெ வனையோ தலைவன் என்று தூக்கி வைத்துக்கொண்டு ஆடுகின்றனர்!

என்று குத்திவிடுவர். தொண்டர்கள் தரமானவர்கள், தலைவர்கள் படுமோசம்! என்று கூறி, தொண்டர்களுக்கும் தலைவர்களுக்கும் இடையே ஒரு "பிளவை' உண்டாக்கி வைப்பதாக ஒரு மயக்க உணர்ச்சி அவர்களுக்கு.

இலட்சியப் பிடிப்பு, நேர்த்தியான உழைப்பு கொண்ட இயல்பினராகத் தொண்டர்கள் இருக்கும்போது, அவர்கள் தெளிவு அற்றவர்களாகவும், விவரம் புரியாதவர்களாகவுமா இருப்பார்கள்? பொருந்தவில்லையல்லவா!

அதனால்தான் தம்பி! அவர்களின் அந்தப் பேச்சு பொருளற்றது என்பதனையும், பொச்சரிப்பைத் தனி முறையில் காட்டிக்கொள்ளும் பேச்சு அது என்பதனையும் நமது கழகத் தோழர்கள் உணர்ந்துகொண்டு விட்டுள்ளனர். அந்த விதமான பேச்சு, பலன் தராது போயிற்று.

ஓரிரு திங்களுக்கு முன்பு நடைபெற்ற நிகழ்ச்சி நினைவிற்கு வருகிறது.

புதிதாகக் காங்கிரசில் சேர்ந்தார் ஒருவர்; கழகத்தவர்கூட அல்ல; கழகத்துடன் நேசத் தொடர்பு வைத்துக் கொண் டிருந்தவர்.

கழகத் தோழர் எவரும் அவரைக் கண்டு, கண்ணீர் மல்கிட நின்று எமை விட்டுப் பிரிந்தீரே ஐயா! என் செய்வோம் இனி நாங்கள் சொல்வீர்! - என்றெல்லாம்

கேட்டிடவில்லை.

அவரே ஓர் நாள், முடி திருத்தகம் சென்றார்; சென்றவர் நான் யார் தெரியுமா என்றும் கேட்டார், முடிதிருத்தகத்திருந்த தோழரை.

அறிவேன் ஐயா! காங்கிரசில் புதிதாகத் தாங்கள் சேர்ந்த செய்தியையும் படித்துள்ளேன் ஐயா! என்று கூறினார். புகுந்தவருக்குக் கோபம்.

ஆமாம்! காங்கிரசில் சேராமல் என்ன செய்வது? உங்கள் அண்ணாதுரைதான் கழகத்தைக் கெடுத்து விட்டானே, நான் சொன்ன நல்ல யோசனைகளைக் கேட்க மறுத்துவிட்டானே, அதனால்தான் நான் காங்கிரசில் சேர்ந்தேன் என்றாராம்.

கடை உரிமையாளர், மெள்ளச் சிரித்தபடி,

கழகத்தைப் பற்றிக் கழகத்தார் கவனித்துக் கொள்வார்கள். ஐயா! தாங்கள் காலமெல்லாம் நான் சுயேச்சையாகவே இருந்திடுவேன் என்று பேசி வருவீரே! இன்று காங்கிரசில் சேர்ந்தீரே! ஏனோ? என்று கேட்டு விட்டு, கழகம் வளர நல்ல நல்ல யோசனைகளை எல்லாம் அண்ணாதுரையிடம் சொன்னதாகவும் அவர் கேட்க மறுத்ததாகவும் செப்பினீரே, கழகத்தில், யோசனைகள் கூறப்படும் இடத்திலே நான் தங்களைக் கண்டதே இல்லையே, ஒரு நாளும். பொதுக் குழுவில் பேசுவர், யோசனைகள், திட்டங்கள் பற்றி. அங்கு நான் கண்டதில்லை தங்களை. எப்படி எனக்கது தெரியும் என்கின்றீரோ! நான் பொதுக்குழு உறுப்பினன்!! என்று கூறிடவே, புதுக் காங்கிரசாருக்குக் கோபம் கொப்பளித்து வந்ததாம். முடிதிருத்தகம் நடத்து, அரசியல் பேசாதே என்று கூவினாராம்! வாருமய்யா, திருத்துகின்றேன் முடிதன்னை என்று அத்தோழர் இரு பொருள் கொண்ட பேச்சைத் தந்தாராம்.

கழகத் தோழர்களின் தெளிவினை விளக்கிடத் தக்க நிகழ்ச்சிகள் இதுபோலப் பல உண்டு.

என்றாலும், மூட்டிவிடுவோர் கடைசி மூச்சு உள்ளவரை முயற்சி செய்தபடியேதான் இருப்பர். அது அவர் வேலை! அல்ல! அல்ல! அருங்கலை!! ஆகவே தம்பி! அவர் போன்றார் உளர் என்ற உணர்வுடன், விழிப்புடன் இருந்திடல் நன்று.

•

மற்றும் ஓர் வகையினர் உண்டு. அவர்கள் கழகத்தின் கொள்கை, வளர்ச்சி இவை பற்றிக் குறையேதும் கூறார்; மாறாகப் பாராட்டவும் செய்வர்; செய்துவிட்டு, "ஆனால்' எனும் பதத்தை ஒட்டவைத்துச் செப்புவர்,

இன்னும் கொஞ்சம் முறையாக, மேலும் சற்றுத் தரமாக, இன்னமும் சற்றுக் கண்டிப்புடன்.

கழகத்தை நடத்திச் சென்றிடின் இன்றுள்ளதைக் காட்டிலும் பன்மடங்கு செல்வாக்கு வளரும் கழகத்துக்கு என்பர்.

இந்த அளவு கழகம் வளர்ந்ததற்கு, ஒப்பி உழைத்திடாதார்,

கழகம், இன்னல் பல ஏற்றுத் தத்தளித்த நாட்களிலே நேசக் கரம் நீட்டிடாதார்,

கழகத்தின் அமைப்பு முறை ஏற்பட்ட வரலாறு தன்னை அறிந்திடாதார்,

இன்று வளர்ந்துள்ள நிலை கண்டு, பாசம்தனை வருவித்துக்கொண்டு பேசிடுவார் புது முறைகள்பற்றி.

உடன் இருந்து பணியாற்றிட வரமாட்டார்.

எது செய்தால் என்ன ஆகும் என்ற கணக்குப்

பற்றி ஆய்ந்திடவும் ஒப்பமாட்டார். ஆனால் நல்ல நல்ல யோசனைகள் தந்திட மட்டும் முனைவார்.

அவர் போன்றார் பேச்சு, பயன் ஏதும் தாராது மாறாக, ஓஹோ! நாம் நமது கழகமதில் புதுமுறை புகுத்திடாமல் இருந்து வருவது தவறு என்றோர் துடிப்புணர்ச்சி ஏற்பட்டு, ஏதேனும் மாற்றங்கள், திட்டங்கள், முறைகள்தமைப் புகுத்திட முனைந்திடின், நல்லது வந்திடுமோ உள்ளது கெட்டிடுமோ என்பது யாரறிவார்!

பாராட்டுத் தெரிவித்து, பரிவும் காட்டி, பல புதுத் திட்டம் பேசிடும் போக்கினரோ, பொறுப்பேற்றுக் கொள்ளமாட்டார். கழகத்தின் வடிவம் குலைந்தாலும், வலிவு கெட்டாலும் வருந்தவும் செய்யமாட்டார். ஏனெனில் அவர் உழைப்பால் அமைந்தது அல்லவே இக்கழகம்! இதன் உயிர்ப்புச் சக்தி எங்கு உளது? இதன் வளர்ச்சியின் கட்டங்கள் எவையெவை என்பதனை, தூர நின்று கொண்டிருந்த அவர் எங்ஙனம் அறிவார்? நீ அறிவாய் உன் உழைப்பைக் கொட்டி உருவாக்கிய கழகம் இது என்பதனால். ஆயினும் உனக்கும் எனக்கும் தம்பி! உற்ற நண்பர்போல நடித்துக் கூறிடுவார் யோசனைகளைப் பொதி பொதியாக! ஏனோ வென்றால், சிற்சிலருக்கேனும், இவ்விதமாகவெல்லாம் கழகம் நடந்திட வேண்டும் என்ற எண்ணம் குடையாதா; குடைச்சல் காரணமாக மனக் குறை வளராதா; மனக்குறை காரணமாகக் கழக வளர்ச்சி குன்றாதா எனும் ஓர் நப்பாசை. உடனிருந்து திட்டம் முறை தந்து உழைத்திட முன்வருவோர் என்றால், அவர் பேச்சைப் போற்றிடத்தான் வேண்டும். அப்பேச்சுக் குறித்து நாம் கலந்துரையாடிடத்தான் வேண்டும். பிறகு அதற்கேற்பச் செயல்படவும் வேண்டும். தேவை முறை நியாயம். ஆனால் உடனிருக்க மாட்டாதார் ஓராயிரம் கூறிடினும், பயன் என்ன? பயன்கூடக் கிடக்கட்டும், கூறுவதன் நோக்கமென்ன? நாம் செய்யும் காரியத்தில்

நமக்கே ஓர் மனக்குறை மூட்டிடச் செய்வதற்கு நன்றா அஃது. அல்ல! அல்ல! இதனை அறிந்திடும். தோழர் அணி மிகப் பெரிது. ஆகவேதான், இப்போக்குக் கொண்டோரின் முயற்சிகளும் பலிக்கவில்லை!

தம்பி! இலட்சியப் பயணம் வெற்றியுடன் நடைபெற வேண்டுமெனில், அதற்கான பாதை அமைவதுடன், பார்வை யைக் கவரத்தக்க சூழ்ச்சிகளின் தன்மையை அறிந்துகொண்டு அவற்றினைத் தவிர்த்திடும் திறனும் பெற்றிட வேண்டும். எனவேதான், உன்னைச் சூழத் தூற்றித் திரிந்திடுவோர், இட்டுக்கட்டிப் பேசிடுவோர், வதந்தி கிளப்பிடுவோர், மயக்கமூட்டிடுவோர், பேதம் விளைவிக்க முயற்சிப்போர், தட்டிக் கொடுத்துத் தடுமாறவைத்திடுவோர் ஆகிய பல்வேறு இயல்பினர் உள்ளனர் என்பதனை எடுத்துக் காட்டினேன், விழிப்புடன் இருந்திட வேண்டும் என்பதற்காக.

ஆனால் தம்பி! உன்னுடன் இருப்போரும் சாமான்ய மானவர்கள் அல்ல. எந்த அரசுக்கும் அடித்தளமாக அமைந்திடுவோர் எவரோ அந்த ஏழையர் உன்னுடன் உள்ளனர்.

எதிர்பார்த்து ஏமாற்றமடைந்து உளம் வெதும்பியுள்ள பாட்டாளித் தோழர்கள், உன்னால் தம் குறை தீரும் என்ற நம்பிக்கையுடன் உள்ளனர்.

அவர்களிடம் பொன்னும் பொருளும் இல்லை, அதே போல் பொய்யும் புரட்டும் இல்லை.

அவர்களிடம் உறுதி இருக்கிறது; உள்ளன்பு காட்டுகின்றார்; உன் தொண்டு விரும்புகின்றார்.

கள்ளங் கபடமறியாத நல்லோர்கள் அவராவார். இன்னலைப் போக்கடிக்க இழிவுதனைத் துடைத்திட என்ன வழி என்று கேட்டு நிற்கின்றார். உனக்கு எல்லாத் துணையினையும் தந்திட முனைகின்றார்.

காட்டாட்சி நடாத்திடவே கனவான்கள் முயலுவதும். கனவானின் பேழை பலம் தமக்குண்டு எனும் துணிவால், எதிர்ப்பற்ற ஆட்சியினை அமைத்திடலாம் எனும் நினைப்பால் காங்கிரசார் முனைவதுவும் அவர் அறிவார்.

அஞ்சற்க என்று கூறுகின்றார்; பேச்சுடன் நின்றார் இல்லை; ஆதரவு தருகின்றார்.

ஆலைக்கு அரசர்களும் சீமான் சிற்றரசர்களும் புடைசூழ நின்றிடும் நிலை பெற்ற காங்கிரசை எதிர்த்து நிற்கும் சாமான்யர்களாம் நமக்கு, வாரி வழங்கியுள்ளார் முப்பது இலட்சத்துக்கும் மேலாக ஓட்டுக்களை,

உதயசூரியன் எமக்கு ஒளி அளிப்பான், வாழ்வளிப்பான், எமக்கு ஏற்ற சின்னம், இயற்கைச் செல்வச் சின்னம் என்கின்றார்; அறிவாய் நீயும்.

தர்பாரில் இடம் பெற்றார் எந்தத் "தகத்தகாயம்' காட்டிடினும் உதயசூரியன் அளிக்கும் ஒளிக்கு நிகரல்ல என்றுரைத்து திரட்டித் தந்துள்ளார் ஆதரவு பெருமளவு.

இத்தனைக்கும் தம்பி! ஏழெட்டுத் தலைமுறைகள் உண்டு எம் தலைவர்கள் காண்! கோபாலகிருஷ்ண கோகலேயும் திலகர், பானர்ஜியுடன் லாலாலஜபதிராயும், வங்கத்துச் சிங்கம் போல் வகை வகையாய் உண்டெமக்கு பர்டொலி வீரரவர் சர்தார் படேலுடனே, பந்துலுவும் பிரகாசம் பற்பலரும் எம் தலைவர். எல்லோர்க்கும் மேலாக எம்மான் காந்தி உண்டு. எட்டுத் திக்கதனில் புகழ் பரப்பி வந்திட்டார் எமது நேருவுமே; அவர் பாதை நடந்திட்டார் மறைந்த லால்பகதூரும். அவரெல்லாம் அளித்திட்ட வரலாறு எமக்குண்டு என்று காங்கிரசில் இடம் பெற்றோரெல்லாம் இயம்பிடுவதுபோல, நாம் கூறிட பாங்கு வாய்ப்பு இல்லை.

இன்றுள்ள காங்கிரசார் - இல்லை இல்லை - இன்றைய காங்கிரசில் உள்ளோர்கள் - பண்டைப் பெருமையினை, மிகு வரலாற்றுச் சிறப்பதனைக் காட்டிக் கண்சிமிட்டி உள்ளம் கவர முனைகின்றார்.

நாமோ, வல்லோர்கள் சமைத்தளித்த வரலாற்றின் மீது நின்று, எத்தனை உயரம் நாங்கள் பாரீர் என்று கூறிடவில்லை. ஆனால் வரலாறு சமைக்கின்றோம்.

ஏழெட்டுத் தலைமுறைகள் பெற்றளித்த பெருநிதியால் பொலிவு பெறுகின்றார், இன்றுள்ள காங்கிரசார்; பொலிவினை அழித்தும் வருகின்றார். நாமோ புதியதோர் காலம் தன்னை உருவாக்கி வருகின்றோம்.

தியாகம் பல செய்து சுதந்திர ஜோதி கண்டார் பெரியோர் - இன்று அதனைப் பயன்படுத்தி வெளிச்சம் போட்டு உலவுகின்றார் காங்கிரசில் இன்றுள்ளார். நாமோ, தியாகத் தீயினில் நிற்கின்றோம் தொடர்ச்சியாக.

எனவேதான், பழங்கதை பேசுவோர் பக்கம் நின்றிடாமல், பணியாற்றிடும் நமக்குப் பக்கபலம் தந்திடவே திரண்டு வருகின்றார் ஏழையர் எல்லோரும்.

நமக்குள்ள வலிவினையும் நமைக் கெடுக்க நினைப்போர்கள் செய்யும் முறையும் எடுத்துக் கூறிவிட்டேன். இக் கணக்கை ஆய்ந்து பார்த்திடுவாயேல், விழிப்பு தேவை. அஃதேபோல் வெற்றி நம் பக்கம் எனும் நம்பிக்கை கொண்டிடவும் வாய்ப்பு உண்டு என்பதையும் உணர்ந்திடுவாய். உணர்ந்ததனை நான் உரைத்தேன்.

பயணம் - பாதை - பக்கம் உள்ளோர் - பாழ்படுத்த முனைவோர்கள் - இவை யாவும் காட்டுவதன் நோக்கம் தம்பி! தெளிவுடன் தொடர்ந்து நம் பணி

தன்னைச் செய்திடத்தான்.

உனைச் சூழ உள்ளோரின் உள்ளம் அறிந்திடுவாய், அவர் முறையும் தெரிந்துள்ளாய். உன்னுடன் உள்ளோர்கள் உளம் அறிவாய்! அவர் உள்ளன்பும் தெரிந்துள்ளாய்.

ஆகவே உவகை கலந்ததொரு உறுதியுடன், விழிப்புடன், ஏறு! முன்னேறு? ஏறே! நீ முன்னேறு! முன்னேற்றப் பாதையிலே நடைபோடும் நல்லோனே! நாடு உன்னிடம் எதிர்பார்ப்பது நிரம்ப. அதற்கேற்ற தன்மையுடன் தொண்டாற்றிட முனைவாய். அந்தத் தொண்டு புரிந்திடுவோர் ஆயிரவர், ஆயிரவர்! பேரூரில் சிற்றூரில் வாழ்கின்ற உழைப்பாளர்; ஏர் பிடிப்போர் சீர் அளிப்போர், உன் தோழர்! வருகின்றார் அவரெல்லாம், மாநாடு மாண்புபெற.

நத்திப் பிழைத்திடாத நல்லோர்கள் வந்திடுவார்!

கத்தும் கடல் அடக்கிக் கலம் விட்ட முன்னோரின் "மரபு' இதுவென அறிந்து மார்தட்டி நிற்போர்கள், மறவர் வருகின்றார் மாநாடு மேன்மை பெற.

அரசியல் சதுரங்கம் ஆடுவோர் அல்ல நாங்கள்; அன்னைத் திருநாட்டின் வாழ்வு வளம் பெற்றிடவே எமதுயிரும் ஈந்திடும் வீரர் குழாம் யாமென்று கூறிப் பவனி வரும் குன்றனைய நெடுந்தோளர் வருகின்றார் நீடுபுகழ்த் திருச்சிப் பதி தன்னில் திரண்டிடும் தீரருடனிருக்க.

மாநாடு திருச்சியிலே; மணம் எழும் தமிழகமெங்கணுமே. எழிலார்ந்த அம்மாநாட்டில், இன்ப ஒளி கண்டிடலாம்.

எமதூரில் இது நிலைமை; மாற்றார் மருள்கின்றார், வெற்றி எமக்கே என்று பல்வேறு பக்கம் வாழ்வோர்கள் பேசிடுவர்; அந்தப் பாகு பருகிடவே, வந்திடுவாய் தம்பி! உன் உடன் பிறப்பு

புடை சூழ.

ஆங்காங்கு நம் கழகக் கோட்டைகள் அமைந்த விதம் பாங்காக எடுத்துரைப்பார்; பழச்சாறாக இனிக்கும் அச்சேதியுந்தான்.

இன்ன தொகுதியிலே இன்றிந்த நிலைமை தோழா! இன்னாரின் "இருப்பு' இல்லாது போயினதால், இழுக்கப் பார்க்கின்றார். இன்னொரு பெரும் புள்ளியினை என்ற விவரம் பேசிடுவர், நாட்டு நிலை உணர்ந்திடலாம்.

ஆங்காங்கு தாம் சென்று ஆற்றிய உரை கேட்ட மக்கள் கொண்டுள்ள உணர்ச்சியின் வேகமதை பேச்சாளர் எடுத்துரைப்பார், பார்த்திடுவாய் தமிழகந்தன்னை.

ஆட்சி முறை தன்னின் இலக்கணமும், அது வழுவியதால் இன்றுள்ள ஆளவந்தார் தந்துள்ள அவதியதும், கூறிடுவர் நம் தோழர், கூர்த்த மதி படைத்தோர்; கருத்துக்கு விருந்தாகும்; பெற்றிடவே வந்திடுவாய்; பெறட்டும் மற்றவரும், உடன் அழைத்து வந்திடுவாய்.

கன்னலின் சுவையன்றோ, காவிய நடையன்றோ, பூங்காற்று வீசுதன்றோ, புல்லரைச் சாய்க்கவல்ல புயலன்றோ என்றெல்லாம் சொலத்தக்க உரையாற்றி, உள்ளம்தனில் உவகை ஊட்டி, உறுதியினை மேன்மையாக்க வருகின்றார் கழகமதன் காவலர்கள்: காண்பாய், தம்பி! கண் குளிர!!

எங்குள்ளோம், எவ்வாறுள்ளோம், எத்தகைய திறனதனைப் பெற்றுள்ளோம், எந்த நிலை உளது நம் அணி வகுப்பு, என்பதெல்லாம் கண்டிடவே மாநாடு; அறிவாயே அதனை "அரிமா நோக்கு' என நாவலர் கூறியதை; வா! வா! தம்பி! உன் வருகை, மாநாட்டின் நிலை உயர்த்தும், நம் நோக்கம் ஈடேற

வழி அமைக்கும்; மாற்றார்க்கு நாம் யார் என்பதனை எடுத்துக் காட்டும்

கருத்துக்கு விருந்து உண்டு என்றேன்; தம்பி! இசையும் உண்டு! கூத்து உண்டு! இவற்றினுக்கும் மேலாக, நாம் காண விரும்பும் எதிர்கால ஓவியத்தைக் கண்டிடவும் வாய்ப்பு உண்டு.

தமிழர் விரும்பிடும் ஓர் நல்லாட்சி எது என்றும், அந்த நல்லாட்சி அமைத்திடவே யாது செய்திடல் வேண்டுமென்றும், கூறிடும் உரிமை பெற்றோய்! கொடுமைதனை வீழ்த்தவல்ல கூர்வாளே! குருட்டறிவைப் பொசுக்குகின்ற ஒளி விளக்கே! உன்னைக் காண, வழிமீது விழி வைத்து நிற்கின்றேன்; அறிவாய் நீயும்.

மாநாட்டில் வந்தமரும் மாத்தமிழர் முகமதனை கண்டிடும் பேறு பெற்றிட்ட போதினிலே, மாற்றார்கள் குவித்துள்ள மாநிதியும் கடுகாகத் தோன்றிவிடும்; மனம் திறந்து நீ பேசிடினோ, அவர் மூட்டும் சூழ்ச்சியெலாம் தூளாகிப் போகும், தூற்றல் தூசு ஆகிப் போகும்; தூய தொண்டுதனை நல்கத் தொகை தொகையாய் இருக்கின்றார் உடன்பிறந்தார் என்பதறிந்தவுடன், உள்ளத்தில் ஓர் எழுச்சி தோன்றும்; வீரம் பொங்கும்.

"உண்மை! இது உண்மை! உயிரனையீர்! நெஞ்சத்தில் திண்மை இருந்தால்தான் வெற்றிச் சுடர் தெரியும்! சாவா? சந்திப்போம், வாழ்க்கை நமக்கென்ன பூவா?

புறப்படுவோம்; புல்லியரைத் தூள் செய்வோம்"

என்ற முழக்கமிட்டுக் கிளம்பினாரே நம் தோழர். இன் தமிழைக் காத்திட. என்னானார்? பசி தீர்க்கப் பயன்பட்டார், பக்தவத்சலனார் ஆட்சிதன்னில் வாய் திறந்து காட்டிற்றே துப்பாக்கி, அதன் பசி தன்மை.

மொழிக் கிளர்ச்சி நடாத்தியதில், மொய்குழலாள் வீழ்ந்தழவே, வீழ்ந்தனர் வீரர் பலர்.

நடை அழகும் நா நல அழகும் பெற்றோன் நான் பெற்ற திருமகனும் என்று பூரித்துக் கிடந்த தாய் காதில் போட்டனர், சுட்டார் ஆளவந்தார்! சுருண்டு வீழ்ந்தான் உன் மகனும்! செத்தான் ஒருவன்! மற்றவர் எங்கே எனக் கொக்கரித்தார் கொடியோர் எனும் சேதியினை.

அன்னை மொழி காத்திடவே ஆற்றலற்று நானிருந்திடப் போவதில்லை. என்னையே நான் தீயிலிட்டு இறந்துபடுகின்றேன், மறந்திடாதீர், என்னை; தமிழ் வாழச் சாகின்றேன்; சாக விட்டிடாதீர் நம் தமிழை என்று செப்பினர், சிங்கத் தமிழர் சிலர். சிந்தினோம் கண்ணீர்; வேறென்ன செய்தோம்?

எங்கும் அடக்குமுறை! என்றும் நடந்தறியாப் பயங்கரங்கள். எல்லாம் தமிழ் தனக்கு இடர்வந்துற்றதுவே என்ற ஏக்கம் காரணமாக.

அவர்கள் அளித்திட்டார் தம் இன்னுயிரை! நாம்?

திரண்டெழுந்து நின்றேனும், போனவர் போக, மிச்சம் உள்ளோர் காண், பெருவெள்ளம்! இந்தியைத் தீயாக்கி இன்தமிழை அழித்திடவே இயலாது அறிந்திடுவீர்! என்றேனும் எடுத்தியம்ப வேண்டாமோ, இறந்துபட்ட இணையற்ற வீரர்தம் மரபினரே நாம் என்பதனை மறக்கப்போமோ!

அந்தப் பெரும் கிளர்ச்சிக்குப் பிறகு, தம்பி! முதன் முறையாய்க் கூடுகின்றோம் திருச்சி மாநாட்டில்; உணர்கின்றாயா அதன் பொருளை?

தமிழ் எந்தன் உயிர் என்போர், உரிமை காக்க உலை நெருப்பிலும் வீழ்வேன் எனும் உறுதி பூண்டோர், நாட்டினில் ஏற்புடைய ஆட்சியது அமைந்தாலன்றி ஏழையர்க்கு வாழ்வில்லை, இன்பம்

இல்லை எனும் உண்மைதனை உணர்ந்தோர் வருகின்றார். எடுப்பார் கைப்பிள்ளையாக இருந்திடோம், விளைந்த காட்டுக் குருவியாகிட ஒருப்படோம், தமிழர் காணீர்! என்று இயம்பிடுகின்றாய், தம்பி! செந்தேன் பாய்கிறது என் செவியில். உன்போல் உள்ளோர்கள் தொகை தன்னை ஒரே இடத்தில் காண்பதற்கு என்போலத் துடித்தபடி உள்ளோர் பலர். எனவே எழு ஞாயிறே! வந்திடு! ஒளி தந்திடு! திருச்சி அழைக்கிறது தீந்தமிழின் சுவைக்கு நிகர் இயல்பினனே! நானும் அழைக்கின்றேன்; வந்திடு! ஒளி தந்திடு!

அன்புள்ள
அண்ணாதுரை
12-6-66

தம்பி உடையான்!

பச்சைப் பாம்பு பார்க்கப் பசுமை! பாய்ந்து விட்டால்...?
நம்மவர் ஆட்சி நமக்காகவா? இல்லை! இல்லை!
ஏழை மேலும் ஏழையாகிறான் காங்கிரஸ் கட்சியில்!
காமராஜர் காட்டும் ஜனநாயக சோஷியலிசம்!

தம்பி!

உறுமும் புலி, சீறிடும் நாகம், துரத்திடும் ஓநாய், இவைகளை எதிர்த்திட வேண்டும் என்ற உணர்வு பெறுவது கடினமல்ல. இவைகளால் ஆபத்து ஏற்படும் என்பது எளிதாகப் புரியக்கூடியது.

கொத்த வரும் வல்லூறு, வட்டமிடுவது கண்டதும் மாடப்புறா தப்பித்துக்கொள்ளத் துடியாய்த் துடிக்கிறது. ஆனால், வலையை வீசிவிட்டு வரகரசி தெளித்துவைத்துப் பிடித்திட முனைபவனைக் கண்டால் அப்படியா அஞ்சிப் பறந்தோடுகிறது? இல்லையல்லவா?

சீறிடும் பாம்பு கண்டால் ஓடோடித் தப்பித்துக் கொள்ளவோ, தடிகொண்டு அடித்துப் போடவோ முனைகின்றனர். ஆனால், பச்சைப் பாம்பு இருக்கிறதே, அது சீறுவது இல்லை; கண்ணுக்குப் பயங்கரமாகத் தெரிவதுமில்லை; பச்சைக் கொடியுடன் பின்னிக் கிடந்திடும்போது, பாம்பு என்று கண்டறியக்கூட இயலுவதில்லை; ஆகவே, அச்சம் எழாது; ஆபத்து இருக்கிறது என்பதனை அறிந்திட

இயலாது. என்னஅழகான கொடி! கவர்ச்சி மிக்க பச்சை நிறம்! - என்று ரசித்துக் கொண்டிருக்கத் தோன்றுமேயன்றி, அச்ச உணர்ச்சி எழாது. அந்த நிலையில், அருகே நெருங்குவான்! பச்சைப் பாம்பு கொத்திவிடும்! அப்போதுதான் அலறித் துடித்திடுவான், ஐயோ! பச்சைக்கொடி என்று எண்ணிக் கொண்டிருந்தேன் பச்சைப் பாம்பல்லவா கொத்திவிட்டது!! - என்று கதறுவான் அல்லவா?

அதுபோலவே தம்பி! கண்டதும் கடுங்கோபம் கக்கி, பற்களை நறநறவென்று கடித்து, காட்டுக் கூச்சலிட்டு, கழுத்தினில் அடித்திடும் கயவனும் உண்டு, கனிவு காட்டி, புன்னகை உதிர்த்து, அருகே அழைத்து, உணவளித்து, அதிலே நஞ்சிட்டு உயிர் பறிப்பானும் உண்டு.

முன்னவனைக் கண்டதும் தன்னாலேயே ஒரு எச்சரிக்கை உணர்வு வந்திடும்; மற்றவனைக் கண்டாலோ ஒரு மயக்கம் மேலிடும்.

கிணற்றினில் இறங்கவேண்டிய நிலை ஏற்படும்போது, காலைப் பதமாக ஊன்றிக் கொண்டு, வழுக்கி விழுந்து விடாமல் மிக எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளத் தோன்றும். பச்சைப்பட்டு விரித்தது போன்ற தோற்றமுள்ள பாதையிலே நடந்திடும்போது, ஒரு அலட்சியப் போக்கு தன்னாலே வந்து சேர்ந்திடும்.

படுகுழி வெட்டி, அதனைப் பசுந்தழை கொண்டு மூடி வைத்திருந்திடின் - அந்தப் பாதையில் - வீழ்ந்து வேதனை அடைந்த பிறகே படுகுழி என்பது புரியும்.

கரத்தினில் அரிவாள் தூக்கிக்கொண்டு ஒருவன் எதிரே வரக்கண்டால், எச்சரிக்கையாக இருந்திடத் தோன்றும்! அறுத்தெடுத்த கதிருடன் வந்திடின்? அருகே அவன் வந்திடும் போதுகூடப் புன்னகை செய்திடத் தோன்றும் இயல்பு.

வெள்ளையர்கள் இந்த நாட்டைச் சுரண்டுவதனைக் கண்டதும், எல்லா மக்களுக்கும் ஒரு எரிச்சலுணர்ச்சி, எதிர்ப்புணர்ச்சி தானாக வந்தது.

அவன் நடை உடை பாவனையும், அவன் அனுபவித்து வந்த மந்தகாச வாழ்வும், அவன் பேச்சிலே நெளிந்த ஆணவமும், எளிதாகப் புரிந்தது; இவன் நமக்கு எதிரி என்ற உணர்வு பீரிட்டுக் கிளம்பிற்று.

உறுமும் புலியை, சீறும் நாகத்தைக் கண்டதும், ஆபத்து! ஆபத்து! என்று உணர்வு பிறந்திடுவது போல, எல்லா வகை யாலும் நம்மிலிருந்து வேறுபட்டுக் காணப்பட்டவனும், எல்லாத் துறைகளிலும் நம்மீது ஆதிக்கம் செலுத்துபவனுமாக இருந்துவந்த வெள்ளையரிடம் எதிர்ப்புணர்ச்சி இயல்பாகவே ஏற்பட்டுவிட முடிந்தது.

அன்னியன் - என்ற நிலையே, அகற்றப்பட வேண்டியவன் என்ற உணர்வை ஊட்டிற்று. பாம்பு என்று கண்டவுடன், அடித்துப் போட்டிட வேண்டும் அல்லது அதனிடமிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் உண்டாவது போல. ஆனால், பச்சைப் பாம்பு, பசுமைமிக்க செடி கொடியுடன் ஒட்டிக் கொண்டிருந்திடின்?

வெள்ளையராட்சியும் அதனால் விளைந்த வேதனையும் சீறிடும் நாகம் அல்லது பாய்ந்திடும் புலிபோல் இருந்தது; நம்மவர்களே நம்மை ஆளும் நிலையில், அவர்கள் மூட்டிவிடும் வேதனை, பச்சைப் பாம்பு போலக் கொடியுடன் கொடியாக சுற்றிக் கொண்டிருப்பதால், எளிதிலே விளங்குவதில்லை; அது தீண்டும் வரையில்! தீண்டிய பிறகும் அதனை எளிதாகக் கண்டறிய முடிவதில்லை. கொடிக்கும் பச்சைப் பாம்புக்கும் தோற்றத்தில் உடனடியாகக் கண்டுபிடித்திடத்தக்க மாற்றம் இராததால்.

எனவேதான், சுயராஜ்யத்தின் பேரால் வேதனைகள் மூட்டப்படும்போது, எளிதாக உணர்ந்து தீவிரமாக எதிர்த்து, துரிதமாக அதனை ஒழித்திட முடிவதில்லை.

ஆனால், நம்மவர்கள் என்பதாலேயே அவர் கரம்பட்ட நஞ்சு உயிர் குடித்திடாமலிருக்குமா? அன்பனே! வருத்தப்படாதே! நெருப்பிலே தூக்கிப் போட இருக்கிறேனே என்று எண்ணி வேதனைப்படாதே! இது சாதாரண நெருப்பு அல்ல! கள்ளியும் சுள்ளியும் போட்டு மூட்டப்பட்ட நெருப்பல்ல. அசல் சந்தனக்கட்டை!! நெருப்புத்தான்! ஆனால் அருமையான நறுமணம்! கவனித்தனையா! பைத்தியக்காரா! நெருப்பிலே தள்ளுகிறார்களே என்று எண்ணியா வேதனைப்படுவது! சந்தன மணம்! இந்த விதமான நெருப்பூரில் நம்மை அனுப்புகிறார்களே என்று மகிழ்ந்திட வேண்டாமா!! - என்று அக்ரமம் பேசினால், ஆமய்யா! ஆம்! நறுமணம்! என்று கூறிவிட்டு, ஓ! என் சோதரரே! காணீர் என்னை! சந்தனக் கட்டைகளை அடுக்கித் தீயிட்டு, அதிலே என்னை இருந்திடச் செய்துள்ளனர்!! என்றா மற்றவரிடம் கூவிக் கூறிடுவர். பித்தரும் கூறார்.

ஆனால் நம்மவர்களே ஆட்சி நடத்தும்போது, நமக்குக் கேடு பயக்கத் தக்கனவற்றினைச் செய்திடுவது கண்டு, நாம் சீறிப் பேசினால், ஆளவந்தார்கள் என்ன செப்புகின்றனர்?

நானா உன்னைக் கெடுத்திடுவேன்!
என்னையா நீ எதிர்ப்பது?
உனக்கு எது நல்லது என்பது எனக்கா தெரியாது!

என்று பேசுகின்றனர், குரலிலே கடுமை கலவாமல், விழியிலே கனிவு கூட்டி! மயங்கிடத் தோன்றும். மயங்குகின்றனர் பலர். பச்சைப் பாம்பு கொடியுடன் பிணைந்து கொண்டிருப்பதனை அறிய

முடிவதில்லையல்லவா, அதுபோல அவர் பேசும் மொழியிலே உள்ள பாகு, நஞ்சு கலந்தது என்பதனை உணர்ந்திட முடிவதில்லை.

ஆகவேதான், வெள்ளையர்மீது பாய்ந்திட முடிந்தது போல கேடு செய்யும் நம்மவரின் போக்கின்மீது பாய்ந்திட முடியவில்லை பலருக்கு.

பச்சைப் பாம்பு பார்வையில் எளிதிலே படாது. நம்மவர் ஆட்சியின் கேடுகள் பலருடைய பார்வையிலே படுவதில்லை.

கேளேன் ஆளவந்தார் பேசுவதை! ஏழையே! உன்னை வாழவைக்கவே நான் அரும்பாடு படுகிறேன்! உன் தலையிலே எண்ணெய் இல்லை! என் கண்களிலே பார், கசிகிறது உருக்கம்; வேதனை!! உன்னை வாழ வைத்திடத்தான் திட்டங்கள்!!

பலருக்கு மனமயக்கம் ஏற்பட்டு விடுவது கண்டு வியப்படைய என்ன இருக்கிறது?

ஆனால் அந்த மயக்கத்தைத் தம்பி! நாம் பெரும் அளவுக்குப் போக்கிவிட்டிருக்கிறோம். ஆளவந்தாருக்கு நம்மீது ஆத்திரம் அதிக அளவில் இருப்பது அதனால்தான்.

நம்மவர்கள் - ஆகவே நல்லவர்கள்! என்ற ஒரு மயக்கத்தை ஊட்டிவைத்திருந்தோம், பாவிப் பயல்கள், நம்ம வீட்டு நெருப்பு என்றால் சுடாதா அப்பா! என்றும், நம்ம கொல்லையில் உள்ள கிணறு என்றால், இடறி விழுந்தால் உயிர் போகாமலா இருந்திடும்! என்றெல்லாம் கேட்டுக்கேட்டு, மயக்கத்தைத் தெளிய வைத்துவிட்டனரே என்று எண்ணுகிறபோதே அவர்களுக்குக் கோபம் "குபுகுபு’வெனக் கிளம்பத்தானே செய்யும். அதைத்தான் காண்கின்றோம்.

நம்மவர்கள்! - கவர்ச்சிகரமான சொல், தம்பி!

சுவை மிக்கதுகூட! ஆனால் "நம்மவர்கள்' என்று உறவு கொண்டாடு வோர் ஒருவரை ஒருவர் வீழ்த்தவல்ல பகைவர்களாக இருந்திடின்!

இன்று இந்தச் சுவையூட்டும் மயக்க மொழியை ஆளவந்தார் பயன்படுத்தும்போது,

கழனியில் காயும் வெயிலில் உழைக்கின்றானே கந்தன் அவனுக்காகவா? அல்லது காட்டூர், மோட்டூர், மீட்டூர் என்று பலப்பல பண்ணைகளை அமைத்துக் கொண்டு பல கந்தன்களை மாடாக உழைக்கச் செய்து, மந்தகாச வாழ்வு நடத்துகிறானே பவுனப்பன் எனும் சீமான் அவனுக்காகவா?

யாருக்காக இந்த அரசு? அது விளக்கமானால்தான், இந்த "நம்மவர்' என்பதிலே நல்ல பொருள் கிடைக்கிறதா அல்லது தீயது உள்ளடங்கிக் கிடக்கிறதா என்பது புரியும்.

அதனைத்தான் நாம் புரியவைத்துக் கொண்டிருக்கிறோம்.

இனியுமா இதிலே உங்களுக்குச் சந்தேகம்? இந்த அரசு ஏழைகளுக்காகத்தான்; இல்லாமையை ஒழித்திடத்தான் என்று பேசுகின்றனர் பெரிய தலைவர்கள்; பெரிய இடத்தைப் பிடித்துக்கொண்டவர்கள்.

ஏழை முன்னேறிவிட்டான், அவன் வாழ்விலே "வசந்தம்' வீசுகிறது! - என்று கூறினர் துவக்கத்தில் துணிந்து.

ஏழை அரிஜனங்களுடைய வீடுகளிலே இப்போதுதான் வெள்ளிப் பாத்திரங்கள் பளபளவென்று தெரிகின்றன என்றே கூறிப் பூரிப்புக் காட்டினார் ஒரு அமைச்சர்.

வேலை வாய்ப்பு அதிகமாகிவிட்டிருக்கிறது, கூலி

உயர்வு கிடைத்திருக்கிறது, வாழ்க்கை வசதி செய்து தரப்பட்டிருக்கிறது, எல்லாம் எமது ஆட்சியின் திறமை காரணமாக என்று கூறிக் களிப்பூட்டினர் சில காலம்.

புதிது புதிதாக எழுந்த தொழிற் கூடங்களைக் காட்டினர்: பாரீர் புதுக்கோலம்! அறிவீர் நாடு செழித்திருப்பதை!! - என்று பண் பாடினர்.

அதனால் ஏற்பட்ட மயக்கம் சிறிது காலம் கலையவில்லை; கப்பிக்கொண்டிருந்தது.

எட்டடுக்கு மாடிகளும், எழில்மிகு தோற்றமுள்ள மோட்டார்களும், புத்தம் புதுப் பொலிவும் கண்டனர் ஏழைகள்; நாடு முன்னேறி இருக்கிறது "நம்மவர்' ஆட்சியில் என்ற பாட்டும் கேட்டனர். கேட்டுவிட்டு? கூரைபிய்ந்து போன குடிசைக்குச் சென்றனர்! குமுறிடும் மனைவியைக் கண்டனர்! தேய்ந்து போகும் குழந்தைகள் கூவிடக் கேட்டனர்; வறுமை எப்போதும் போல அங்கு ஆட்சி செய்திடக் கண்டனர், கலங்கினர்.

கூலி உயர்ந்துதான் இருந்தது. ஆனால், விலைகளோ அதனைவிட அதிக அளவிலும் வேகத்திலும் உயர்ந்து போயிருக்கக் கண்டனர்; வாழ்க்கைச் செலவு சுமையாகித் தம்மை அழுத்துவதைக் கண்டனர்.

புதிய புதிய யந்திரங்கள் அமைத்தனர்; கண்டனர்; வெள்ளையர்போலாகிவிட்ட நமது முதலாளிமார்களையும் கண்டனர்; "நம்மவர்' என்ற உணர்ச்சிகூட எழுந்தது. ஆனால், நமது நிலை என்பது பற்றிய எண்ணம் எழுந்ததும் பந்தபாச உணர்ச்சி மெள்ள மெள்ள உலர்ந்திடலாயிற்று.

புதிய ஆட்சி! புதிய நிலைமை! புதிய பொலிவு! புதிய வலிவு! பொன்னொளி! பூங்காற்று! மெல்லிசை! மினுக்கு! - எல்லாம் கண்டனர்; அவை யாவும் ஒரு

சிலருக்கே, தமக்கு அல்ல என்பதனையும் உணர்ந்தனர்: உணர்ந்ததும், இந்த ஆட்சி நமக்காகவா என்ற ஐயப்பாடு தலைதூக்கிற்று; இல்லை இல்லை என்று உள்ளம் முணுமுணுத்தது, ஒலி வலுத்தது, உண்மை உரத்த குரலில் கூறிற்று, இந்த அரசு உனக்காக அல்ல என்று.

நாடு முன்னேற்றமடையத் தீட்டப்படும் திட்டங்கள் வெற்றி அடைய வேண்டுமானால், வயலில் வேலை செய்யும் உழவனும், தொழிற்சாலையில் வேலை செய்யும் பாட்டாளியும் இந்தத் திட்டம் எனக்காக, என்னை வாழவைக்க என்ற உணர்வுபெற்று உள்ளன்புடன் உழைத்திட வேண்டும் என்று தொழில் அமைச்சராக இருந்தபோது சஞ்சீவய்யா பேசினார். அந்த உணர்வு வரவில்லை. காரணம், உழைக்கிறான், உற்பத்தி பெருகுகிறது, இலாபம் குவிகிறது, முதலாளிமார்கள் கொட்டமடிக்கிறார்கள், இவனோ எப்போதும்போல - இல்லை - இல்லை - முன்பு இருந்ததைவிட மோசமான நிலையில் நலிந்திடுகிறான். இந்த அரசு எனக்காக அல்ல.... என்னைக் கசக்கிப் பிழிந்து இலாபம் பெற்றிடும் முதலாளிகளுக்காக என்று கூறிடலானான்: ஒரு கசப்புணர்ச்சி அவன் உள்ளத்தைக் கப்பிக்கொண்டது; எத்தனை தித்திப்புத் தடவியபோதிலும் அந்தக் கசப்புணர்ச்சி போக மறுக்கிறது.

இதற்கு முன்பு எப்போதும் இல்லாத அளவு விலைகள் ஏறியிருப்பதால், கூலி உயர்ந்தும் தன் வாழ்க்கையில் குளிர்ச்சி ஏற்படவில்லை என்பதறிந்து இதற்குத்தானா இந்த அரசு! அது நமக்காக அமைந்த அரசா? என்று கேட்கலானான். துப்பாக்கிதான் பதில் அளித்தது!

வெள்ளையராட்சிக் காலத்திலே இல்லாத துணிவு முதலாளி களுக்கு ஏற்பட்டது! ஏனெனில்,

தொழிலாளி தன் நிலையை உயர்த்திக்கொள்வதற்காக எந்தக் கிளர்ச்சி நடத்திட முயன்றாலும், ஆயுதம் தாங்கிய போலீஸ் படை முதலாளிகளின் ஆதிக்கத்தைக் காத்திட, தொழிலாளியின் கிளர்ச்சியை முறித்திட முனைந்தது.

இந்த அரசு நமக்காக அமைந்தது அல்ல; இது முதலாளிகளுக்காக அமைந்த அரசு என்ற உண்மையை, தொழிலாளியின் உடலிலிருந்து ஒழுகிய இரத்தமும், கண்களிலிருந்து வடிந்த கண்ணீரும் உணர்த்தின.

காங்கிரசாட்சியில் பணக்காரன் மேலும் பணக்காரனாகிறான்; ஏழை மேலும் ஏழையாகிறான் என்ற கருத்து பரவலாயிற்று. ஆட்சிப் பொறுப்பில் இருந்தோர், முதலில் இதனைப் பலமாக மறுத்தனர்; கடுமையாகக் கண்டித்தனர் இத்தகைய கசப்புணர்ச்சியை மூட்டிவிடுபவர்களை.

ஆனால் ஆய்வாளர்கள் கண்டறிந்து கூறினர், 100-க்கு அறுபது குடும்பத்தினர் பஞ்சத்தின் பிடியில் உள்ளனர்; பசி நோயால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்பதையும்,

விலைவாசிகள் விஷம்போல ஏறிவிட்டிருப்பதையும், கூலி உயர்வு என்பது பணத்தின் அளவிலேயே தவிர, பண்டத்தின் அளவிலே அல்ல என்பதையும்,

பணத்துக்கு உள்ள வாங்கும் சக்தி தேய்ந்து போயிருப்பதையும்,

பாட்டாளிகளின் கடன் சுமை அதிகமாகிவிட்டிருப் பதையும் வேலையில்லாத் திண்டாட்டம் விரிந்து போய்க் கொண்டிருப்பதையும்,

எதனைத் தொழிலாளரும் உழவர்களும் நடுத்தரக்

குடும்பத் தினரும், தமது கண்ணீராலும் பெருமூச்சாலும் எடுத்துக்காட்டி வந்தனரோ, அதனை ஆய்வாளர்கள் புள்ளிவிவரங்களாக்கித் தந்தனர். இந்த நாட்டு ஆய்வாளர்கள் மட்டுமல்ல, வெளிநாடுகளி லிருந்து இதற்காகவே அழைக்கப்பட்டிருந்தவர்களும்.

அந்த ஆய்வாளர்கள் அதேபோது, மற்றும் சில உண்மைகளையும் எடுத்துக் காட்டினர்.

வரிச்சுமை அதிகமாகிவிட்டிருக்கிறது; ஏழையை அழுத்துகிறது என்பதையும்,

நோட்டுகளைக் கண்மூடித்தனமாக அச்சடித்துப் பரப்பி, பண வீக்கத்தைச் சர்க்கார் உண்டாக்கி விட்டார்கள் என்பதையும்,

நாணயத்தின் மதிப்பு தேய்ந்துவிட்டு இருப்பதையும்,

உலகின் நானா பக்கங்களிலும் கடன் வாங்கி வாங்கி, நாட்டின் எதிர்காலத்தை அடகுவைத்து விட்டிருப் பதையும் எடுத்துக்காட்டினர்.

இந்தக் கேடுகளில் ஏதேனும் ஒன்றைச் செய்தால்கூடப் போதும், மக்கள் சீறி எழுந்து அந்த அரசு நடாத்துவோரை விரட்டி விட்டிருப்பர், பிற நாடுகளில்.

இந்தப் புண்ணிய பூமி அவ்வளவையும் தாங்கிக் கொண்டது; பொழுது புலரும், புது வாழ்வு மலரும் என்ற நம்பிக்கையை அணைத்துக் கொண்டபடி.

மற்றவர்கள் - குறிப்பாக எதிர்க் கட்சியினர் - இந்தக் கேடுபாடுகள் குறித்துச் சுட்டிக் காட்டிய போது சீறி வீழ்ந்த ஆளவந்தார்கள், ஆய்வாளர்களே இடித்துரைக்கத் தலைப் பட்டதும், சிரம் கவிழ்த்துக் கொண்டனர்; மெள்ள "ஆமாம்' என்று கூறினர்.

ஆய்வாளர்கள் மற்றும் ஓர் உண்மையையும் எடுத்துக் காட்டினர். இத்தனை கேடுபாடுகள் நெளிகின்ற நிலையில், நாட்டிலே தொழில் வளர்ந்திருக்கிறது, உற்பத்தி பெருகி இருக்கிறது, செல்வம் வளர்ந்திருக்கிறது என்பதனை எடுத்துக் காட்டினர்.

இஃது விந்தையன்றோ என்று கேட்டனர் மக்கள். செல்வம் வளர்ந்திடின் சீர் வளர்ந்திடும். தொழில் வளம் பெருகிடின் விலை குறைந்திடும் - இது பொது உண்மை. விளைச்சல் மிகுந்திடின் களஞ்சியம் நிரம்பிடும், மழை பெய்திடின் பூமி குளிர்ந்திடும், மலர் பூத்திடின் மணம் பரவிடும் என்பது போன்ற பொது உண்மைகள். ஆனால் இங்கோ தொழில் வளர வளரத் தொழிலாளர் துயரம் வளருகிறது; உற்பத்தி பெருகப் பெருக விலைகள் ஏறியபடி உள்ளன; செல்வம் வளர வளர வறுமை பரவுகிறது. காரணம் என்ன இந்த வேதனை நிரம்பிய விந்தைக்கு?

அதுதான் எனக்கும் புரியவில்லை; விளைந்த செல்வம் எங்கே போய்விட்டது? என்று கேட்டிடலானார் காமராஜர்.

நல்லவர்! ஏழைப் பங்காளர்! திறமைமிக்கவர்! காலம் தந்திட்ட கருவூலம்! காமராஜர்!! - இவர் மட்டும் இத்தனை ஆண்டுகள் இங்கு இருந்திருப்பின் இந்த இடர்ப்பாடு வந்தே இருக்காது; ஏழைக்கு வேதனை மூண்டிருக்காது. அவரோ, பாவம் கானடா நாட்டு அரசியலைச் செப்பனிடவும், அமெரிக்க நாட்டுத் தொழில்வளப் பெருக்கத்துக்கான வழி கூறிடவும், சந்திர மண்டலம் யாருக்கு என்பதற்காக ரµயர்மம் அமெரிக்காவும் மோதிக் கொள்ளாதிருக்க ஒரு சமரசத் திட்டம் தந்திடவும், தமது நேரத்தையும் நினைப்பையும் செலவிட்டுக் கொண்டு, காலையில் மாஸ்கோ, மாலையில் இலண்டன், மறுநாள் வர்µங்டன், அதற்கு அடுத்த நாள் ஒட்டவா என்று

பயணம் நடத்திக் கொண்டிருந்து விட்டார்; அதனால் இந்த அவதி இங்கு ஏற்பட்டுவிட்டது என்றாவது கூறி ஆறுதல் அடையலாமா என்றால், முடியவில்லை. பெரியவர் இங்கேயேதான் இருந்து வந்தார், பெரிய இடத்திலே தான் இருந்து வந்தார். அவர் கண் முன்பாகத்தான் இத்தனையும் நடைபெற்றது.

எட்டு ஆண்டுகள் அல்லவா அவர் முதலமைச்சராகக் கொலுவீற்றிருந்தார்!

இருந்து? இப்போது அவரும் கேட்கிறார், முத்தன் முனியன்போல, வளர்ந்த செல்வம் எங்கே போய்விட்டது என்று!

இந்த நாடு தவிர வேறு எந்த நாடும் இந்த விந்தையைத் தாங்கிக் கொள்ளாது.

ஆய்வாளர்கள் தெளிவளிக்க மீண்டும் முன் வந்தனர்.

மகனாலோபிஸ் குழுவினரின் அறிக்கை வெளிவந்தது.

செல்வம் எங்கெங்குச் சென்று முடங்கிக் கொண்டது என்பது பற்றிய விளக்கம் அளித்தது.

ஏகபோகமாகப் பொருளாதார ஆதிக்கம் செலுத்துபவர் பற்றியும் ஒரு தனிக் குழு தனி அறிக்கை கொடுத்தது.

இனியும் மறைத்துப் பயனில்லை என்று கண்டு கொண்ட ஆளவந்தார்கள், இப்போது முற்பகுதியை ஒப்புக்கொள்கிறோம், பிற்பகுதியை ஏற்றுக்கொள்வதற்கு இல்லை என்று தெரிவித்துள்ளனர்.

காங்கிரசாட்சியில் பணக்காரன் மேலும் பணக்காரனாகிறான்.

என்ற முற்பகுதியை ஒப்புக் கொள்கிறார்களாம் பெருந் தன்மையுடன்!!

ஏழை மேலும் ஏழையாகி இருக்கிறான்.

என்ற பிற்பகுதியை ஏற்றுக்கொள்ள மாட்டார்களாம்! ஏன் என்று கேட்காதீர்கள். ஏதோ பெரிய மனது வைத்து, இவ்வளவு இடிக்குப் பிறகு ஒரு பகுதியையாவது ஒப்புக் கொண்டிருக் கிறார்கள் அல்லவா? மகிழத்தானே வேண்டும். அந்தப் பகுதியையும் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டால், மக்கள் என்ன செய்துவிடப் போகிறார்கள்? இது என்ன பிரிட்டனா, அமெரிக்காவா இப்படி ஒரு அரசா என்று கொதித்தெழுந்து அந்த அரசினை வீழ்த்திட

இந்த நிலைமை ஏற்படக் காரணம் என்ன?

ஆட்சியில் இருந்த நீங்கள் ஏன் இந்த நிலை ஏற்படுவதைத் தடுக்கவில்லை?

நிலைமை இவ்விதம் வடிவம் கொள்வது புரிய வில்லையா?

புரியவில்லையென்றால் என்ன காரணத்தால்? புத்தித் தெளிவு இல்லாததாலா? அல்லது மமதை காரணமாகவா?

புரிந்தும் நிலைமையைச் சீர்திருத்தவில்லை யென்றால், முயன்று முடியாமற் போய்விட்டதா?

ஆமென்றால், இந்த அளவு திறமை இல்லாத நீங்கள் ஏன் ஆட்சிப் பொறுப்பிலே இருக்க வேண்டும்? என்றெல்லாம் கேட்பர் அங்கு!

இங்கு? அச்சம் பிடித்தாட்டும் நிலை சிலருக்கு! "நம்மவர்கள்’ ஆயிற்றே என்ற மயக்க உணர்ச்சி சிலருக்கு!!

அந்த அச்சத்தையும் மயக்கத்தையும் போக்கிடும்

முயற்சியில் நாம் ஈடுபட்டுப் பெரும் அளவு வெற்றி கண்டிருக்கிறோம்.

நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆட்சியிலே அமர்ந்திருப் பவர்கள் "நம்மவர்கள்' என்பதாலேயே, அது நமக்காக உள்ள ஆட்சி என்றோ, நல்ல ஆட்சி என்றோ கூறிவிடுவதற்கு இல்லை என்பதனை நாடு அறிந்திடச் செய்திருக்கிறோம்.

கொடியிலே பச்சைப் பாம்பு சுற்றிக் கொண் டிருக்கிறது என்பதனை எடுத்துக் காட்டியிருக்கிறோம்.

பச்சைப் பாம்பு இருப்பதைக் கண்டறிவது எவ்வளவு கடினமோ அதனைவிட அதிகக் கடினம், அதனை அடித்துப் போடுவது ஏனெனில் அது, நாம் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, மறையும்; ஒளியும்; கொடியுடன் கொடியாக அசைவற்று இருக்கும்.

"நம்மவர்கள்' நடாத்திடும் ஆட்சியை மாற்றி அமைத்திட முனையும்போது, இதனை நன்கு நினைவிற் கொள்ள வேண்டும்.

மக்களுக்குத் தெளிவளிக்க, "நம்மவர்' நடாத்திடும் ஆட்சியின் உண்மையான போக்கினை எடுத்து விளக்கிட நாம் கடினமாக உழைத்ததால் பலன் கண்டோம் என்பதுடன், காங்கிரசில் இப்போது குடியேறியுள்ளவர்களின் பட்டியலே, பொது மக்கள் மனத்தில் தெளிவு வளர வழி செய்து விட்டிருக்கிறது.

இது ஏழைக்காக அமைந்துள்ள அரசு என்று பெருந் தலைவர்கள் பேசி முடிந்ததும், மக்கள் எவரெவர்களைக் காண்கின்றனர் மேடை மீது!

ஏழைகள் இந்த அளவுக்கு வளர்ந்திட யார் காரணமாக உள்ளனரோ அவர்களை!!

யாரார் ஊர் நிலத்தைத் தமது உடைமையாக்கிக்

கொண்டு, உழுபவனைக் கூலியாக்கி விட்டனரோ அவர்களை!

யாரார் போட்ட முதலுக்கு ஒன்றுக்குப் பல பத்து இலாபமாகக் குவித்துக்கொண்டு, தொழிலாளி கூலி உயர்வு கேட்டால், கதவை அடைத்து விடுகிறார்களோ அவர்களை!

யாரார் கள்ளக் கடத்தல், கணக்கில் வராத பணம் ஆகியவற்றினுக்கு அதிபர்களோ அவர்களை!

யாரார் இலஞ்சம் வீசி, அதிகாரிகளில் சிலரையும் கெடுத்து நிர்வாகத்தைப் பாழாக்குகின்றார்களோ, அவர்களை!

யாரார் ஒரு தொழிலை நடத்தி அதனால் கிடைத்திடும் இலாபத்தைக் கொண்டு ஒன்பது புதுத்தொழில் துவக்கி மேலும் பணம் குவித்துக் கொள்கிறார்களோ, அவர்களை!

யாரார் வருமான வரி கொடுக்காமல் சர்க்காரை ஏய்த்துவிட்டுக் காங்கிரசின் தேர்தல் நிதிக்கு நன்கொடை கொடுத்துப் பெரியவர்களின் புன்னகையைப் பெற்று, அதனைத் துணைகொண்டு புதிய அக்ரமங்களைத் துணிவுடன் செய்திட முற்படுகின்றனரோ அவர்களை!

எதிர்க்கட்சிகள் என்ன பிரசாரம் செய்து ஏழைகளை விழிப்படையச் செய்தாலும், பணத்தை வீசிப் பாமரரை மயக்கிட முடியும் என்ற கணக்குக் கூறுபவர்கள் யாராரோ அவர்கள்!

அவர்கள் "புடைசூழ'த்தான் பவனி வருகின்றனர், ஏழை பங்காளர் யாமே என்ற விருது தேடிக்கொண்டுள்ள ஆளவந்தார்கள்.

"அவர்களை'க் கண்டதும் மக்களுக்கு நிலைமை மிக நன்றாகத் தெரிந்து விடுகிறது. அதனால், தம்பி!

நமது வேலையும் ஓரளவு எளிதாகிவிடுகிறது.

அவர் காங்கிரசிலா?

இவர் கூடவா, காங்கிரஸ் கட்சியில்?

அவர் எப்போது காங்கிரசில் சேர்ந்தார்?

இவரை எப்படிக் காங்கிரசில் சேர்த்துக் கொண்டார்கள்?

இவர்களெல்லாமா இருக்கிறார்கள் காங்கிரஸ் கட்சியில்?

இவர்களுக்குத்தானா இருக்கிறது காங்கிரஸ் கட்சி?

இவர்களைக் காட்டித்தானா காங்கிரசை ஆதரிக்கச் சொல்கிறார்கள்?

தம்பி! ஊரார் இதுபோலத்தான் பேசிக்கொள்கிறார்கள், "அவர்கள்' புடைசூழக் காங்கிரசின் பெருந்தலைவர்கள் பவனிவரக் காணும்போது.

தம்பி! கொட்டு முழக்குடன், கோவிந்தா எனும் ஒலியுடன், மஞ்சள் ஆடை அணிந்து, வலம் வருகிறது ஒரு "கோஷ்டி'

பக்திமிக்கவர்கள் திருப்பதி செல்கிறார்கள். அவர்கள் ஏந்திவரும் உண்டியலில் நம்மாலானதைப் போட்டால் நமக்குப் புண்ணியம் வந்து சேரும் என்று எண்ணிக்கொண்டு, அன்றைய செலவுக்காக வைத்திருக்கும் பணத்தை எடுத்துக் கொண்டு ஓட்டம் பெருநடையாய் வருகின்றனர்.

அருகே வருகிறது ஊர்வலம்! பார்த்தால், யார் தெரிகிறார்கள்?

கன்னக்கோல் சின்னப்பன், காதறுத்த மல்லப்பன், குத்திக்குடலெடுத்த குமரப்பன், இப்படிப்பட்ட பேர்வழிகள்!

உண்டியில் பணம் போட மனம் வருமா! இந்தப் பாவிகளா! இந்த வேடத்திலா! மஞ்சள் ஆடையைக் கட்டிக் கொண்டால் மயங்கிவிடுவோம் என்று எண்ணிக் கொண்டார்களா? ஏமாந்த நேரத்தில் நடத்தியது போதாது என்று இப்போது பட்டப் பகலேயே வேடமிட்டுப் பொருள் பறிக்க வந்தனரோ பாவிகள் என்று மனம் குமுறிக்கிடப்பர்.

"அவர்கள்' புடைசூழக் காங்கிரசின் பெருந்தலைவர்கள் வருகிறபோது, மக்கள் அடையும் கசப்புணர்ச்சி இதுபோன்றதே.

"பீகார் சட்டசபையில் கொண்டுவரப்பட்ட நிலச் சீர்திருத்தச் சட்டங்களை எல்லாம் விடாப்பிடியாக எதிர்த்துக்கொண்டு வந்திருக்கிறார் இந்த மகாராஜா. ஏதாவது தந்திரம் செய்து தன் உடைமையை, முதலாளித்தனத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார். பொய்யான ஏற்பாடுகள், போலியான தர்ம ஸ்தாபனங்கள் ஏற்படுத்தி வைத்துக் கொண்டு, சட்டத்தையும் சர்க்காரையும் மோசம் செய்திருக்கிறார். மிகத் துணிந்த பேர்வழி! பேர்போன குற்றவாளி!!"

தம்பி! பீகார் மாநில முதலமைச்சர் பிதோனாந்தா ஜா என்பாருக்கு 1961-ல், பண்டித ஜவஹர்லால், ராம்கர் ராஜாவைப்பற்றி குறிப்பு அனுப்பினார்.

அந்த ராம்கர் ராஜா தமது "கோஷ்டியுடன்' இப்போது காங்கிரஸ் கட்சியில் சேர்ந்துள்ளார்.

ஜனநாயக சோஷியலிசமே என் பேச்சு - மூச்சு - என்று கூறிடும் காமராஜர், பண்டித ஜவஹர்லால் மிகக் கடுமையாகக் கண்டிக்கப்பட்ட அந்த

ராஜாவைக் காங்கிரசில் சேர்த்துக் கொண்டார்.

பீகாரில், காங்கிரஸ் வெற்றி என்றால், அது இனி சட்டத்தையும் சர்க்காரையும் மோசம் செய்த பேர்வழி என்று பண்டித ஜவஹர்லால் நேருவால் கண்டிக்கப்பட்ட ராம்கர் ராஜாவின் வெற்றி என்றுதானே பொருள்படும்!

அதுதான் தம்பி! காமராஜர் காட்டும் ஜனநாயக சோஷியலிசம்!!

ராம்கர் ராஜாவுடன் சேர்ந்து ஜனநாயக சோஷியலிசம் உண்டாக்க, நம்மையும் அழைக்கிறார்! அது அல்லவா வேடிக்கை!!

ஆனால் மக்கள் தெளிவு பெற்றுக்கொண்டுவிட்டுள்ளனர். கொடி எது, பச்சைப் பாம்பு எது என்பது புரிந்துவிட்டது! இனி மக்களை மயக்கிட, ஏய்த்திட முடியாது என்பது விளக்கமாகிக் கொண்டு வருகிறது. மக்களின் இந்தத் தெளிவுக்குக் காரணம், அச்சமற்று, பணியாற்றிய என் தம்பிகளன்றோ என்று எண்ணும்போதே, தம்பி உடையான் படைக்கு அஞ்சான் எனும் கவிதை செவியினில் ஒலிக்கிறது, இதயத்தில் இனிமையைச் சேர்க்கிறது.

அன்புள்ள
அண்ணாதுரை
19-6-66

கண்ணீர்!

சுகர்ணோ, பூட்டோ, நிக்ருமா கண்களில் கசிவு - ஏன்?
கனல் கக்குபவன் ஓர் நாள் கண்ணீர் சிந்துவன்!
ஆணவம் மிகுந்தது! அழிவு நேர்ந்தது!
செருக்குடன் சிரித்தவர்கள் கண்ணீர் சிந்துகிறார்கள்!
ஆணவக்காரரின் அழுகைகள் புகட்டும் பாடம்!

தம்பி!

புன்னகை, பூங்காற்று, இன்னிசை, பொற்கொடி, மழலை, விழிமொழி என்பவை குறித்து எழுதிடின், படித்திட இனிமையாகத்தான் இருக்கும்; எழுதிடவும் எளிதுதான். ஆனால், அவை குறித்து நான் இன்று எழுதப்போவது இல்லை.

சோலையில் உலவுதல், அருவியில் நீராடல், கனிரசம் பருகிடல், நடனம் கண்டு மகிழ்ந்திடல், மண அறை அமர்ந்திடல், மங்கை நல்லாளின் "முதல் இரவு' பெற்றிடல், பெற்றெடுத்த செல்வத்தின் உச்சி மோந்து கழிபேருவகை அடைந்திடல், தான் பெற்ற முதல் ஊதியத்தைத் தாயிடம் கொடுத்து அவர்கள் தந்திடும் பெருமிதம் கலந்த கனிவினை நுகர்தல் என்பவை பற்றியும் எழுதிடலாம், தித்திப்பு நிரம்பக் கிடைக்கும். ஆனால், அவை குறித்து எழுதிட இன்று மனம் இல்லை.

செய்தொழிலிலே பெற்றிடும் நேர்த்தியான வெற்றி, களத்திலே மாற்றான் மண்டியிடக் காணும் போது ஏற்படும் பெருமித உணர்ச்சி, உலா, முடிசூட்டு விழா

போன்றவை குறித்து எழுதிடலாம்; மகிழ்ச்சியும் எழுச்சியும் நிரம்பிடத்தக்க விதமாக; ஆனால், அவை பற்றியும் இன்று எழுதிடப் போவதில்லை.

நான் இன்று எழுதுவது கண்ணீர் பற்றி! ஆமாம் தம்பி! ஆமாம். கண்ணீரைப் பற்றியேதான்!

நமக்கும் கண்ணீருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டே அறிவாயே; பெரியார் நமக்கு இட்ட பெயரே, கண்ணீர்த் துளிகள் என்பதல்லவா! பெரியாரின் பொருந்தாத் திருமணம் பற்றி மனம் குமுறிய பல்லோர் தெரிவித்திருந்த கருத்துக்களை முதலில் கண்டனக் கணைகள் என்ற தலைப்பிட்டு நமது இதழில் வெளியிட்டனர்; எனக்கு அந்தத் தலைப்பு பிடிக்கவில்லை; ஆகவே, அந்தக் கருத்துக்களைக் கண்ணீர்த் துளிகள் என்ற தலைப்பிட்டு வெளியிடச் செய்தேன். அதனையே நமக்குப் “பெயர்’ ஆக்கிவிட்டார் பெரியார். அவர் எனக்காகவென்று வெகு அருமையாகப் பாடுபட்டுத் தேடிக் கொடுத்த செல்வம் என்றே நான் அந்த”கண்ணீர்த் துளிகள்’ என்ற பெயரை வரவேற்று மகிழ்ந்தேன்.

அது ஆண்டு பலவற்றுக்கு முன்பு நடைபெற்ற நிகழ்ச்சி; இப்போது எதற்காக அண்ணா! அந்த நினைவு என்று கேட்கிறாயா? தம்பி! காரணமற்றும், தொடர்பற்றும், பொருத்தமற்றும், பொருளற்றும் எனக்குப் பழைய நினைவுகள் ததும்பிடுவதில்லை. இப்போதும் அப்படித்தான். ஒரு பெரிய தலைவர், நாட்டின் அதிபர் புரட்சி வீரர் புவியோர் மெச்சிடத்தக்க பேறு பெற்றவர், கண்ணீர் வடித்தார் என்று இதழ்களில் கண்டேன்; உடனே எனக்குக் கண்ணீர் பற்றிய பல்வேறு நினைவுகள் மனத்திலே ததும்பிடலாயின!

தம்பி! கண்ணீரில் பலவகை உண்டு! நிகழ்ச்சிகளின் தன்மைக்கு ஏற்பக் கண்ணீரின் வகை அமைகிறது.

வெற்றிக் களிப்பு, தியாக உணர்ச்சி, மகிழ்ச்சிப் பெருக்கு, வேதனை, கோபம் எனும் பல்வேறு உணர்ச்சிகளின் போதும் கண்ணீர் வெளிப்படுகிறது. வகை பல என்றேன். முறைகூடப் பலப்பல, அதனால்தான் கசிந்தான், பொழிந்தான், கதறினான், வடித்தான் என்று பலவிதமான பதங்களைக் கண்ணீருடன் இணைக்கிறோம்.

நான் குறிப்பிட்டேனே, நாட்டுத் தலைவரொருவரின் கண்ணீர் பற்றி. அவர் கண்ணீர் வடிக்கவில்லை; கண்களிலே நீர் கசிந்தது - மற்றவர்கள் கதறினால், கண்ணீர் பொழிந்தால், வடித்தால் காண உருக்கம் எழும். ஆனால், அவர் கண் கசிந்ததைக் காணவேண்டி ஏற்பட்டுவிட்டபோது ஒரு புன்னகை பிறந்திடும் நிலை பலருக்கு; மிகப் பலருக்கு.

சிரித்திடப் பிறந்தவர் அவர்; அவர் கண் கசிகிறது.

பலருடைய கண்களிலே நீர் கொப்பளித்துக் குபுகுபுவெனக் கிளம்பிடும் நிலைமைகளை மூட்டினவர் அவர்; அவர் கண்களிலே நீர் கசிகிறது.

அவருடைய கண்ணீர் தனித்தன்மை வாய்ந்தது.

அந்தக் கண்கள் களைப்பு, திகைப்பு, ஏக்கம், கோபம் ஆகியவற்றினை வெளிப்படுத்தினதுண்டு. இப்போது அந்தக் கண்களிலே கசிவு!

கண்ணீர் சிந்திடு முன்பு அவருடைய கண்கள் அகம்பாவத்தைக் கக்கின! அடுத்துக் கண்ணீர் சிந்திட வேண்டி நேரிடும் என்று அவர் துளியும் எதிர்பார்த்திருந்திருக்க முடியாது. அவ்வளவு உன்னதமான இடம் அவருடையது! ஒரு நாடே அவருடைய காலடியில்! உலகமே அவர் சுட்டு விரல் அசைவு கண்டு! அதற்கு ஏற்ப நடந்துகொள்ள வேண்டும் என்ற நினைப்பு தடித்துப் போயிருந்த

நிலை! அவருடைய கோபம் போதும் எவரையும் சுட்டெரிக்க! அவருடைய புன்னகை போதும் வாழ்க்கையைப் பூங்காவாக்கிட! அவர் சொல்லே சட்டம்! அவர் கண் கசிந்திடும் நிலை பெற்றார் என்றால், அது தனித்தன்மை வாய்ந்ததல்லவா?

பேரிடி, பேரிழப்பு, மூட்டப்பட்ட வேதனை ஆகிய வைகளால் கிளம்பிடும் கண்ணீர் வேறு! இவர் சிந்திய கண்ணீர் வேறு. செய்த தவறுகளை எண்ணி, தன்னால் துன்புறுத்தப் பட்டவர்களை எண்ணி, சிந்திடும் கண்ணீர் வேறு, இவர் கண்களிலே கசிந்திட்ட கண்ணீர் வேறு. எடுத்த காரியத்தை முடித்திட முடியாது போகிறதே, போட்ட திட்டப்படி செயல் வடிவம் கொள்ளவில்லை, எதிர்பார்த்துக் கணக்கிட்ட பலன் கைக்குக் கிட்டவில்லையே என்பதாலே கண்ணீர் சிந்திடும் நிலைமைக்கும், இனி நமது விருப்பத்தின்படி காரியம் நடவாது போலிருக்கிறதே, இனி நமது கட்டுக்கு மற்றவர் அடங்கிட மாட்டார்கள் போலிருக்கிறதே, இனி நம்முடைய நிலை, தாழ்வாக்கிடப்படும் போல இருக்கிறதே, எப்படி நாம் அதனைத் தாங்கிக் கொள்வது, தாள் பணிந்து கிடந்ததுகளெல்லாம் தட்டிக் கேட்கத் துணிந்து விட்டனவே; அதுகளை மட்டந் தட்டத் தக்க வலிவு நமக்குக் குறைந்துபோய் விட்டிருப்பது, அவர்களுக்கும் புரிந்து விட்டிருக்கிறதே, இனி என்ன செய்வது என்று எண்ணியதால் கண்ணீர் கசியும் நிலை. அது தனி இயல்புடையது. அதனைக் காண்போர், அந்தக் கண்ணீரைத் துடைத்திடவோ, வந்துற்ற இன்னல் யாவும் நீங்கிப் போகும் என்று ஆறுதல் கூறிடவோ மாட்டார்கள்.

அப்படிப்பட்ட விதமான கண்ணீர் வடித்தார், இந்தோனேஷியா நாட்டு அதிபர் டாக்டர் சுகர்ணோ சின்னாட்களுக்கு முன்பு என்றோர் செய்தி கண்டேன். அதனால் தான் தம்பி! கண்ணீர் பற்றிய நினைவு

எழுந்தது.

ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கொண்டதோர் அவை; அங்குப் பேசுகிறார் டாக்டர் சுகர்ணோ, கண்ணீர் சிந்திடும் நிலையில்.

அந்த அவையின் முன்பு அவர் பல முறை இடி முழக்கமிட்டிருக்கிறார்; எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசி இருக்கிறார்; புத்திமதி கூறியிருக்கிறார்; சூளுரைத்திருக்கிறார்; கண்டனக் கணைகளைத் தொடுத்திருக்கிறார்; விளக்கம் அளித்திருக்கிறார்; பேருரை நிகழ்த்தியிருக்கிறார்; செயல்முறை பற்றிக் கூறியிருக்கிறார்; வெற்றிக் களிப்புடன் பேசியதுண்டு; வீராவேசம் காட்டியதுண்டு; அறைகூவலை எழுப்பியதுண்டு; கோபக் கனலை வீசியதுண்டு, ஒரு நாளும் கண் கலக்கத்துடன் பேசினதில்லை. அந்த நிலை பிறந்திடும் என்று அவர் கனவிலும் எண்ணினதில்லை.

ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிட அழைப்பு விடுத்தவர், எதனையும் இழந்திடலாம் உரிமையைப் பெற்றிட என்ற உறுதியை நாட்டவர் அனைவருக்கும் ஊட்டியவர் டாக்டர் சுகர்ணோ; மறுப்பார் இல்லை; வரலாற்றுச் சுவடியிலே பதிக்கப்பட்டுவிட்ட நிகழ்ச்சி அந்த வீரக் காதை.

விடுதலை கிடைத்துவிட்டது என்ற வெற்றிச் செய்தியை நாட்டவருக்கு அறிவித்து அனைவரையும் அகமகிழ்ச்சி கொள்ளச் செய்தவர் டாக்டர் சுகர்ணோ.

அன்னியரின் பிடியினை நீக்கிக்கொண்டோம்; இனி இயற்கை அன்னை நமக்கு அளித்துள்ள செல்வத்தைத் திரட்டி நாட்டினைச் சீர்படுத்திடுவோம்; வெளி நாட்டார் விரும்பிப் பெற்றிடத்தக்க பொருள் நிரம்பிய களஞ்சியம் நம் நாடு; பொன்னும் மணியும் குவித்திடலாம், புவியோர் மெச்சிட வாழ்ந்திடலாம்,

புகழ்க் கொடியைப் பறந்திடச் செய்திடலாம் என்றெல்லாம் கூறினவர்.

டாக்டர் சுகர்ணோ பேசினால் ஆயிரம் ஆயிரம் மக்கள் அப்படியே சொக்கிப் போவார்களாம். சொற்சிலம்பம் கண்டு வியந்திடுவார்களாம். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் தம்பி! அவரை அந்நாட்டு மக்கள் கண்கண்ட கடவுளாகக் கொண்டனர். அவரினும் அறிவாற்றல் மிக்கவர் எவரும் இல்லை என்று நம்பிக் கிடந்தனர்.

நாட்டுப்பற்று மிக்கவர் நமது தலைவர், தன்மானம் காத்திடுபவர் நமது தலைவர், நமக்கு நல்வாழ்வு அளித்திட வல்லவர் நம் தலைவர், நமக்கு எது தேவை, எது நல்லது என்பதனை முற்றிலும் உணர்ந்தவர் நமது தலைவர் என்று கொண்டாடினர்.

பிரச்சினை எதுவாயினும், சிக்கல் எதுவென்றாலும், அவர் அறிவார் என்ன செய்ய வேண்டும் என்பதனை என்று அந்நாட்டு மக்கள் திடமாக நம்பினர்.

கப்பலோட்டியின் திறமையிலே மிகுந்த நம்பிக்கை கொண்டவர், சீறிடும் அலைகளைக் கண்டோ, பாய்ந்து வந்திடும் பெருமீன்களைக் கண்டோ கவலை கொள்வார்களா?

கட்டளையிடுங்கள் காவலரே! வழிகாட்டுங்கள் தலைவரே! அழைத்துச் செல்லுங்கள் அதிபரே - என்று துதி பாடினர் அந்நாட்டு மக்கள்.

அவரிடம் அளவிட முடியாத மதிப்பும் நம்பிக்கையும், பற்றும் பாசமும் கொண்டதுடன், அவருடைய போக்கு, நோக்கு, சொல், செயல் எனும் எதிலேயும் எந்தத் தலைவருக்கேனும் நிபுணருக்கேனும் ஐயப்பாடு ஏற்பட்டு, விளக்கம் கேட்டிடின், வாதம் செய்திடின், மறுத்தும் பேசிடின்,

என்ன துடிக்குத்தனம்! நமது தலைவரிடமா குறை காணுகிறான்! அத்தனை பெரிய அறிவாளியோ இவன்! - என்று பேசிட, சீறிப் பாய்ந்திடவும் அந்த நாட்டு மக்கள் முனைந்தனர்.

எதனையும் சிந்தித்துப் பார்த்திடும் உரிமையைத் தாமாகவே விட்டுவிட்டனர், அதற்கான தகுதியும் திறமையும் தமக்குக் கிடையாது என்ற எண்ணத்தில்.

நம்மிடம் கொண்டுள்ள நம்பிக்கையின் காரணமாகத்தான், மக்கள் எல்லாப் பிரச்சினைகளையும் நம்மிடமே ஒப்படைத்து விட்டனர். அவ்வளவு நல்ல இயல்பு கொண்டவர் நமது மக்கள் என்று துவக்கத்தில் "அதிபர்’ எண்ணிக் கொண்டார். பிறகோ!

பாவம் ஏதுமறியாதவர்கள் இந்த மக்கள் என்று எண்ணிடலானார். பிறகு,

எதனையும் நானல்லவா சொல்லவேண்டி இருக்கிறது,

செய்யவேண்டி இருக்கிறது, என்று பேசிடலானார். அதற்குப் பிறகு,

ஏ! மூடமே! இப்படிச் செய்! இதைச் செய்!

என்று கட்டளையிடலானார். பிறகு,

எதையாவது ஒழுங்காக, திறமையாகச் செய்திடத் தெரிகிறதா இதுகளுக்கு! என்று கேலி பேசிடலானார்.

இப்படிச் செய்யாவிட்டால், இன்னின்ன தண்டனை விதிக்கப்படும்,

என்ற மிரட்டல் பேச்சும், அதைத் தொடர்ந்து கடுமையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளலானார் அதிபர் சுகர்ணோ.

புதிய புதிய சட்டங்களைப் பிறப்பிப்பார்!

மேலும் மேலும் வரிகளை விதிப்பார்!

எண்ணிட, எழுதிட, கூடிட, பேசிட, தடைகள் போட்டிடுவார்!

இவன் உன் பகைவன், இவனை ஒழித்துக்கட்டு என்பார்!

உரிமை கேட்காதே, உடைமையும் உயிரும்கூட உனக்கே உரியது என்று எண்ணிக் கொள்ளாதே! எல்லாம் நாட்டுக்காக! நாட்டுக்காக நான்! என் சொற்படி நடந்திட நீங்கள்! நான் இல்லையேல், இந்த நாடு இல்லை. இந்த நாடு இல்லையேல், நீங்கள் இல்லை

என்று உரத்த குரலில் பேசி, உருட்டு விழி காட்டலானார். நாட்டு மக்கள் சிறிதளவு கலங்கினர். ஆனால், அவரைப் பின்பற்ற, அவர் சொற்படி நடந்திடத் தவறவில்லை.

நமக்குப் புரியவில்லை. ஆனால், நமது தலைவர் எதனையும் நமது நன்மைக்காக; நாட்டு நலனுக்காகத்தான் செய்திடுவார்

என்று கூறி அமைதி பெற்றனர்.

தத்துவ விளக்கத்தில் அக்கறை கொண்டோர் மட்டும் அதிபர் மேற்கொள்ளும் போக்குத் தவறானது, அதன் பயனாக நாடு சீர்கேடடையும், மக்கள் வேதனையில் தள்ளப்படுவர் என்று எச்சரித்துப் பார்த்தனர்.

எச்சரித்தவர்கள் தூக்கி எறியப்பட்டனர், மக்கள் அதிபருக்குத் துணை நின்றனர்.

மெள்ள மெள்ளக் கட்டங்கள் புதிது புதிதாக வளர்ந்தன. இறுதியில் அதிபர் - கை கட்டி வாய்

பொத்தி நின்றிடும் ஏவலர் - அடிமைத்தனத்தைத் தாமாகவே மூட்டிவிட்டுக் கொண்ட மக்கள்... என்ற நிலை பிறந்தது.

உரிமையின் அருமையும் சிந்தனைச் செல்வத்தின் பெருமையும் கிடக்கட்டும்; அவர் நடாத்திடும் ஆட்சியில், நாம் நல்வாழ்வு பெற்றிருக்கிறோம்; அது போதும். ஏடு தூக்கிடுவோர், எதற்கும் வாதாடிடும் இயல்பினர், எதனையாவது கதைத்துக் கொண்டு கிடக்கட்டும் நாம் புதுவாழ்வு, முழு வாழ்வு பெற்றிருக்கிறோம், நமக்கு அது போதும் என்று இந்தோனேசிய மக்கள் எண்ணி நிம்மதி பெற்றிட முடியவில்லை.

நாடு சீர்கேடடைந்தது.
வளம் பாழாக்கப்பட்டது.
தொழில்கள் நசித்திடலாயின.
வீண் பகை வளர்ந்தது.
பொருளாதாரச் சீர்குலைவு ஏற்பட்டது!
நாணயத்தின் மதிப்பு தேய்ந்தது.
பண்டங்களின் விலைகள் விஷம்போல் ஏறின.
வாழ முடியாதாரின் தொகை பெருகிற்று;
பெருமூச்சுக் கிளம்பிப் பெரும் புயலாகி விட்டது!!
நம்பிக்கை முறிந்தது. கண்கள் சிவந்தன!
வழி திறந்தது! கேள்விகள் கிளம்பின!
எதிர்ப்பு வலுத்தது, எங்கும் பரவிற்று!
அதிபரின் அக்ரமப் போக்கு கண்டிக்கப்பட்டது!
மக்கள் பொங்கி எழுந்தனர், புது வேகத்துடன்!
புரட்சி வெடித்துக் கிளம்பிற்று.
போதும் உமது அலங்கோல ஆட்சி என்றனர் மக்கள்!

இனிப் பொறுத்திட முடியாது, பட்டதெல்லாம் போதும் என்று குமுறினர் மக்கள்.

அடக்குமுறையை அவிழ்த்து விட்டார் அதிபர்! அதன் பசி தீருமளவு "பலி' கிடைத்தது; ஆனால் புரட்சி மங்கிட மறுத்தது.

உடனிருந்தோர்களை உருக்குலையச் செய்திட்டார் அதிபர்! அவர்க்குப் பரிவு காட்டிட முனைந்தனர் மக்கள்!

சூறைக் காற்று கிளம்பிற்று; தோணி ஓட்டம் தடுமாறிடலாயிற்று.

துரத்தப்பட்டுப் போய்விடுவோமோ என்ற கிலி பிடித்துக்கொண்டது அதிபரை! ஆண்டது போதும்! மக்கள் மாண்டது போதும்; வளம் வறண்டது போதும் இனி நாட்டு வாழ்வுக்கான வழிகண்டிடத் துணிவு கொண்டோம் என்றனர் மக்கள்!

என்னையா எதிர்க்கத் துணிந்தீர்கள்! என் வீரதீரம் அறியீரா! என்று ஆர்ப்பரித்தார் அதிபர்!

மக்களின் மகத்தான சக்தியின் முன்பு எந்த மன்னனும் எம்மாத்திரம் என்று கேட்டனர் மக்கள்.

இளைஞர் அணி திரண்டது! மாணவர் படை முனைந்து செயலில் ஈடுபடலாயிற்று!

அதிபர் சுகர்ணோ தமது பிடிதளர்ந்து விட்டதனை உணர்ந்தார்; கொதித்தார்; மிரட்டினார்; கடைசியில்? அழுதார்! அவையைக் கூட்டி வைத்துக் கண்ணீர் கசிந்திடும் நிலையினராகி, நாட்டு விடுதலைக்காக நான் இன்னலும் பட்ட இழப்பும் கொஞ்சமா?

என்னை இதயத்தில் வைத்திருந்தீரே! என்னையா இப்போது எதிர்க்கின்றீர் என்று கேட்டார்!

பேச்சுடன் நிற்கவில்லை! கண் கசிந்தது!! மக்களின் மனம் இளகவில்லை. ஏன்? டாக்டர் சுகர்ணோவின் போக்கு அந்த நெஞ்சங்களைக் கல்லாக்கிவிட்டது.

துவக்கத்தில், மக்கள் துயரம் கொட்டிடுகிறதே, அதிபரே! என்று முறையிட்ட நேரத்தில், அதிபர்,

ஒரு தலை அசைவு, ஒரு இலேசான புன்னகை, ஒரு நல்ல வார்த்தை, துளியேனும் மதிப்பு

காட்டியிருந்திருந்தால், மக்கள் தமது இன்னலைக்கூட மறந்துவிட்டிருப்பர். அதிபர் சுகர்ணோவோ, கனலைக் கக்கினார், அது மக்களின் நெஞ்சிலே ததும்பிக்கொண்டிருந்த பற்று பாசத்தை அடியோடு பொசுக்கிக் கருக்கிப் போட்டுவிட்டது! மக்களின் மனம் வெதும்பிப் போய்விட்டது; அவர்கள் ஒரு முடிவுக்கு வந்துவிட்டனர்; இல்லை, இல்லை துரத்தப்பட்டுவிட்டனர்.

அதற்குப் பிறகு அவர்களின் மனம் இளகுமா?

பரிவு காட்டும் முறையில் அவர் பேசினாலும், அதனைப் பாசாங்கு என்றே மக்கள் கொண்டிடலாயினர்.

நாட்டுக்காக நாளும் உழைத்தேனே என்று அவர் கூறும்போது, அறிவோமே! நாட்டைக் காடாக்கியதை! மக்களை மாக்களாக்கியதை! செல்வத்தை நாசமாக்கியதை! என்று மக்கள் முணுமுணுத்திடலாயினர். அது மெள்ள மெள்ள வேகமடைந்து அதிபரின் நிலையைக் குலைத்திடும் எதிர்ப்பாகிவிட்டது! சீறிடும் மக்களை அடக்கிடும் திறனற்றுப்போன நிலையில் - அதிபர் சுகர்ணோ "அழுது கொண்டே’ பேசினாராம்!

ஆனால் அவருடைய கண்ணீர் காலங்கடந்து வெளிப்பட்டது; ஆகவே, பலன் கிடைக்கவில்லை - அது மட்டுமல்ல ஆணவத் துடன் அரசு நடாத்தியதால் அவதி பல கண்டோர் கண்ணீர் வடித்தபோது, காவலன் கேலிப் புன்னகையோ அலட்சியமோ காட்டினான்; இரக்கம் காட்டினானில்லை, கண்ணீருக்கு மதிப்பளித்திட்டானில்லை. அத்தகைய போக்கினன், பிடி இழந்து நடை தளர்ந்து தடுமாறித் தத்தளித்துக்

கண்ணீர் உகுத்திடின், எவர் இரக்கம் காட்டுவர்?

தம்பி! டாக்டர் சுகர்ணோவின் கண்ணீர், இரக்க உணர்ச்சியைத் தூண்டிடவில்லை எனினும், ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டாரனைவருக்கும் பாடம் புகட்டத்தக்கது!

ஆர்ப்பரித்துக் கிடப்பவன் ஓர் நாள் அழுது தீர வேண்டும்.

மக்களைக் கசக்கிப் பிழிபவன் ஓர் நாள் கண்கலங்கி நிற்க வேண்டும்.

கனல் கக்கிக் கிடப்பவன் ஓர் நாள் கண்ணீர் சிந்திட வேண்டி வந்திடும்.

இந்தப் பாடங்களைத் தருவதாக உளது டாக்டர் சுகர்ணோ சிந்திய கண்ணீர். வீரத்தில், தீரத்தில், அறிவாற்றலில் தியாகத்தில், டாக்டர் சுகர்ணோ முதல் வரிசையில் வைத்துப் போற்றிடத் தக்க நிலையினர்; ஐயமில்லை. ஆனால், மக்களாட்சியின் மாண்பினை மாய்த்து, மமதை கொண்டு, கொடுமை புரிந்திடின் "அன்றொரு நாள்' ஆற்றிய அரும் பணி எழுப்பிடும் பற்றும் பாசமும், மக்களைக் கடைசிவரையில் செயலற்றவர்களாக்கிவிடாது!

நாட்டுக்கு விடுதலை வாங்கித் தந்தார்; உண்மை; அதனால் நம்மை நசுக்கி உரிமைகளை உருக்குலையச் செய்து, நாட்டைப் பாழ்படுத்துவதா?

விடுதலை வாங்கித் தந்தார்! ஆம்! ஆனால், எதற்கு? நாம் ஆமைகளாய், ஊமைகளாய்க் கிடந்திடவா? கொடுங்கோலாட்சி நடத்திடவா? நியாயமா?

புலியிடமிருந்து மீட்டிட்டார், உண்மை; நன்றி கூறிடக் கடமைப்பட்டுள்ளோம்; ஆனால், எதற்காகப் புலியிடமிருந்து நம்மை மீட்டிடுவது?

பெருநெருப்பிலே தள்ளிடவா? பெரு நெருப்பிலே நின்றிடும்போது நம்மைப் புலியிடமிருந்து காப்பாற்றிய புனிதன் இவன், ஆகவே, இப்போது நம்மைத் தழலிலே தள்ளிடினும் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும் என்று எவர் கூறுவர்! ஏமாளியும் கூறிடானே!

என்று பல முறை ஆற்றோரத்தில், அங்காடியில், சாலையில், சோலையில், விடுதிகளில் குடில்களில் பேசிப் பேசிக் குமுறினோர் பல்லோர்: அவர்களின் கண்ணீர் முதலிலே சிந்தப்பட்டது; இறுதியில் ஆணவ அரசு நடாத்தியோன் கண்ணீர் வடிக்கிறான்! இட்டார்க்கு இட்ட பலன்! விதைத்தது தினை அல்ல; கிடைப்பது தினையாக இருக்க முடியாதல்லவா!

இந்தோனேஷிய அதிபர் கண்கசியும் நிலையினில் பேசினார் என்ற செய்தியைப் படித்ததும் தம்பி! இந்த நினைவுகள் வந்தன! பிறிதோர் செய்தி கண்டேன், சிரிப்பே வந்தது.

பகை கக்கி, போர் மூட்டிவிட்டு வரம்பு மீறிய வகையில் "நாய்' என்றே ஏசிப் பேசி, இறுமாந்து கிடந்த பாகிஸ்தானத்து புட்டோ பதவி இழந்து, விரட்டப்பட்டு வீடு திரும்புங் காலையில், அவருடைய போக்கிரித்தனத்தை வீரம் என்று எண்ணிடும் போக்கினர், அவருக்கு வரவேற்பு நடத்தி, மலர் தூவிப் பாராட்டினராம், லாகூர் ரயிலடியில்; அப்போது புட்டோ விக்கிவிக்கி அழுதாராம்!

இறுமாப்பு இவ்வளவு விரைவிலே நொறுக்கப்பட்டுப் போகும் என்றோ, ஆணவம் கக்கிய கண்கள் இவ்வளவு குறுகிய காலத்தில் கண்ணீர் வடித்திடும் என்றோ, எவரும் எதிர் பார்த்திருக்க முடியாது. அயூப்கானையே ஆட்டிப் படைப்பவர் இந்த புட்டோ என்று புகழ் பாடினர்! விக்கிவிக்கி அழுதாராம் வீராவேசமாடிய புட்டோ! என்ன எண்ணிக்கொண்டு அழுதாரோ, என்ன

நோக்கத்துடன் அழுதாரோ!

பாவம்! இப்படி அழுகிறாரே! இவருக்குப் பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் இத்தனை கொடுமை இழைத்துவிட்டாரே!

என்று பார்ப்பவர் எண்ணிக்கொண்டு, தன் பக்கம் திரண்டு நின்று, அயூப்கானை எதிர்த்திடத் தூண்டுவார் என்ற நினைப்பாக இருக்கலாம். அல்லது பாகிஸ்தானத்து அதிபரின் பக்கம் அமர்ந்து இருந்த துணிவிலே என்னென்னவோ பேசித் திரிந்தோம்; இனி? என்று எண்ணியபோது கண்ணீர் புரண்டோடி வந்ததோ? தெரியவில்லை.

ஆனால், ஆணவம் நிலைக்கவில்லை! அழவேண்டிய நிலை பிறந்தது.

இவராகிலும் பரவாயில்லை, விக்கிவிக்கி அழுதார், வேறு இன்னல் எதுவும் தாக்கிடவில்லை; இன்னமும். "நானே எல்லாம்' என்று இருமாந்துகிடந்த கானா நாட்டு அதிபர் நிக்ருமா, தம்பி! எந்த நிலையில் உள்ளார் தெரியுமா? ஆட்சி அவரிடம் இருந்தபோது நாடுகள் பற்பல போட்டியிட்டுக்கொண்டு அவருக்கு வரவேற்பு கொடுத்திட, விழா நடாத்திடத் துடித்தன.

இப்போது அறுபது நாடுகளின் போலீஸ் இலாகா, அவரைப் பிடித்துக் கைது செய்து, கூண்டிலே நிறுத்திட துடித்தபடி உள்ளன.

அழத்தான் செய்வார் பாவம்! அன்று இருந்ததை எண்ணிக்கொண்டு!! ஆனால், அவர் சிந்திடும் கண்ணீரைக் கண்டு இரக்கம் காட்டிட கானா மக்கள் ஒப்புவரா?

அழுகிறாரா? அழட்டும்! அழட்டும்! எங்களை ஆண்டு பல அழ வைத்தவர் அழட்டுமே சிறிது!! நாங்கள் அழுது அழுது ஓய்ந்து போனோம்! கண்கள்

வறண்டு போய்விட்டன! இப்போது, எம்மை அழ வைத்தவர் அழட்டுமே! கண்ணீர் வடியட்டுமே!!

என்றுதானே பேசுவர் கானா நாட்டில் காட்டாட்சி நடத்தியவர் கண்ணீர் சிந்திடும்போது!

உயர்ந்த இடம் அமர்ந்துவிட்டோம், இனி நம்மை எவரும் நெருங்க முடியாது!

மக்களைத் துதிபாடகர்களாக்கி விட்டோம், இனி நம்மை அசைக்கவும் எவராலும் முடியாது.

என்று இறுமாந்து கிடந்ததால் கானா நாட்டு அதிபர், ஜனநாயக அமைப்பையே நொறுக்கித் தள்ளினார். இப்போது? அவர் கிடைக்கவில்லை! ஆகவே, அவருடைய சிலையை உடைத்துத் தூள் தூளாக்கினர், கொதித்தெழுந்த மக்கள்!

ஏ அப்பா! சாமான்யமானவர்கள் அல்ல இந்த மக்கள்!

மண் பொம்மைகள்
மரக்கட்டைகள்
தலையாட்டிகள்
தாள்பணிவோர்
அச்சத்தால் பீடிக்கப்பட்டோர்!
ஐயோ பாவங்கள்!
கையில் ஊமையர்!

என்று ஆணவ அரசு நடாத்துவோர்களை நம்பவைத்து விடுகிறார்கள், நெடுங்காலம்! ஆனால், ஓர் நாள், எங்கிருந்தோ, எப்படியோ அவர்களுக்கு எதையும் செய்திடலாம் என்ற துணிவு பிறக்கிறது; புயல் எழுகிறது! அப்போது,

அரண்மனைகள் இடிக்கப்படுகின்றன!

ஆணவ அரசுகள் கவிழ்க்கப்படுகின்றன!

மணிமுடிகளைப் பந்தாடுகின்றனர்!
மமதையாளர்களை விரண்டோடச் செய்கின்றனர்.
சிலைகள் தூள் தூளாகின்றன!
அந்த நாளை எண்ணி அரசு இழந்தவர், அழுகின்றனர்!

தெளிவாகத் தெரிகிறது, மக்கள்மீது மமதையாளர் இறுதிவரையில் ஆதிக்கம் செலுத்த முடியாது என்பது.

என்றாலும், மக்களை அழ வைத்து மமதையாளர் சில காலமோ நெடுங்காலமோ சிரித்துக் கிடக்கின்றனர். பிறகோர் நாள்,

செருக்குடன் சிரித்தவன் கண்ணீர் சிந்துகிறான்.

அந்தக் கண்ணீரைக் கண்டு, இரக்கம் காட்டிட மக்கள் மறுக்கிறார்கள்!!

உரிமை பறிக்கப்படும்போது உள்ளம் குமுறி அழுகிறான் குடிமகன், உடைமை பறிக்கப்படும்போது கதறுகிறான் ஏழை! கொடுமை தாக்கும்போது கூவி அழுகிறான் சாமான்யன்! கொளுத்தப்பட்ட குடிசைகள், இடித்தெறியப்பட்ட நம்பிக்கைகள், ஏழையைக் கதறிடச் செய்கின்றன. மகனைச் சவுக்காலடித்ததைக் கண்ட தாய், சுட்டுக் கொல்லப்படுவதைக் கண்ட அன்னை, தலையில் அடித்துக்கொண்டு அழுகிறாள்! கற்பழிக்கப்பட்டாள் கன்னி என்பதனை அறிந்து ஆண் மகன் இரத்தக் கண்ணீர் வடிக்கிறான்; கொடியவன் கிடைத்திடின் வாள் வேண்டாம், இக்கரம் போதும் அவனைக் கொன்றிட என்று அழுதபடி கூறுகிறான்.

அப்போதெல்லாம், ஏழை எட்ட முடியாத உயரம் இருக்கிறோம், நம்மை எவன் என்ன செய்ய முடியும் என்ற இறுமாப்புடன், சிரிக்கிறான், செருக்குமிக்கோன்! பிறகோர் நாள்? கண்ணீர்

வடிக்கிறான்!

பன்னெடு நாட்கள் கண்ணீர் வடித்துக் கிடந்த ஏழை காண்கிறான்.

நான் இளகிய மனதுடன்தான் இருந்தேன், உன் கொடுமை என் மனத்தைப் பாறையாக்கிவிட்டது!

நான் அடிபணிந்துதான் கிடந்தேன், அன்புக்குக் கட்டுப்பட்டு; உன் ஆணவம் என்னை எழுப்பிவிட்டு விட்டது.

நான் உன்னை ஆட்சி நடத்தச் சொன்னேன். நீயோ என்னைக் கா-ன் கீழ்போட்டு மிதித்தாய்! நான் விடுபட முனைந்தேன், பொடிப் பொடியாயிற்று உன் ஆதிக்கம். கண்ணீர் வடிக்கிறாய்! இப்போது!!

அந்தக் கண்ணீர் இனி உன்னைக் காப்பாற்றாது. ஆனால், மற்றவர்கள் - அரசாளும் நிலை பெறுபவர்கள் - பாடம் பெற உதவட்டும்! ஆகவே, அழு! அழு! ஆணவம் அழிந்தது என்று அழு! மக்களின் சக்தியே முதல்! முடிவு! என்று அழு! மனிதனாகு!! - என்று கூறுவான் - சொல்லால் அல்ல; தன் பார்வையால்.

தம்பி! இந்த எண்ணங்களெல்லாம் வந்ததுடன், இன்று ஆணவ அரசு நடாத்திடுவோர் இதனைக் கண்டேனும் பாடம் பெறுவார்களா என்ற கேள்வி எழுந்தது!

அந்தக் கேள்விக்கான விடையை நான் எங்கு எதிர்பார்ப்பேன்? உன்னிடந்தானே! ஆகவேதான் உள்ளத்தில் தோன்றினவற்றை உன்னிடம் உரைத்தேன்!

அன்புள்ள
அண்ணாதுரை
26-6-66

கோட்டை வெளியில்...

வேதனை வாழ்க்கை எத்தனை காலத்துக்கு?
மக்களே தலைவர்களைத் தயார் செய்யும் நிலை!
வரி கொடுத்தோமே, வாழ்வு கொடுத்தாயா?
எங்களுக்குத் தேவை சோஷியலிசம்: ஜோடனையிசமல்ல!
டாட்டா பிர்லா கூட்டாளி-பாட்டாளிக்குப் பகையாளி!
வேலை மிகுதி; நேரமோ குறைவு!
குடும்பத்தோடு கூடுவோம் கோட்டை வெளியிலே!

தம்பி!

இந்தக் கிழமையும் உன்னுடன் அளவளாவ இயலாத நிலை நீடிக்குமோ என்று அஞ்சிக் கிடந்தேன்; ஆனால், ஓய்வும் உட்கொண்ட மருந்தும் தக்கபடி வேலை செய்ததால், உடல்நலக் குறைவு வேகமாகக் குறைந்துவிட்டது. கழக இதழ்களில் காணக் கிடைக்கும் செய்திகள், எத்தனை சுறுசுறுப்புடனும் விறுவிறுப்பாகவும் பிரச்சாரப் பணி நடைபெற்று வருகிறது என்பதனை எடுத்துக்காட்டுகின்றன. இந்த மாமருந்து புதிய தெம்பினை அளிக்கத் தவறுமா?

வேலை மலைபோல! நாட்களோ அதிகம் இல்லை. இந்நிலையில் என் முழுப் பங்கினைச் செலுத்தியாக வேண்டும். அதற்குத் தக்கவிதமாக என் உடல்நிலை அமைய வேண்டுமே என்பதே இன்று எனக்குள்ள கவலை. கவலை மட்டுமல்ல, தம்பி! வெட்கம்கூட!! எங்குச் சென்றிடினும் தோழமை! எப்பக்கம் திரும்பிடினும் பேராதரவு! சிற்றூர்களிலெல்லாம்

உன்னதமான உற்சாகம்! எங்கிருந்துதான் பணம் திரட்டுவார்களோ; எத்தனை இன்னலோ தொல்லையோ? என்றாலும், ஒவ்வொரு நிகழ்ச்சியும் அந்த வட்டத்திற்கே தனிச் சிறப்பளிக்கத்தக்க விதமாக அமையும்படி ஏற்பாடு செய்கிறார்கள் கழகத் தோழர்கள். எடுத்துக் கூறிடும் கருத்துக்களைத்தான் எவ்வளவு உன்னிப்பாகக் கவனிக்கிறார்கள்! காங்கிரஸ் எதேச்சாதிகாரம் ஒழிக்கப்பட்டாக வேண்டும் என்பதிலே எவ்வளவு ஆர்வம் காட்டுகிறார்கள்; உறுதி தெரிவிக்கிறார்கள்! நாடு கொண்டுள்ள இந்தக் கோலத்தை நித்த நித்தம் காண வேண்டும்! ஒரே நாளில் பல காண வேண்டும்!! ஓய்வு ஒழிச்சலின்றிக் காண வேண்டும் என்ற துடிப்பு எனக்கு. அதற்குத் தக்கவிதமாக உடல் நிலை அமையவேண்டுமே; இல்லையே என்பதை எண்ணும்போது என்மீதே எனக்குக் கோபம்.

தேவை மிகுதியாக இருக்கிறது; உணருகிறேன். அந்த உணர்வு, உடல் நலத்தைச் செம்மைப்படுத்திடும் என்றும் நம்புகிறேன். இல்லையென்றால், சென்ற கிழமை ஏற்பட்ட உடல்நலக் குறைவு இவ்வளவு வேகமாகக் குறைந்திருக்க முடியாது!

நமது கூட்டங்களில் எடுத்துக் கூறப்படும் கருத்துக்கள், பெரிதும் நாட்டு நலிவு, ஆட்சியாளர் மூட்டிவிட்ட அவதிகள், மக்களை அலைக்கழிக்கும் தொல்லைகள் என்பவைகளைப் பற்றித்தான். மக்கள் உள்ளத்திலே குமுறிக் கொண்டுள்ள "வேதனை’ பற்றித்தான் நாம் எடுத்துக் கூறுகிறோம்; மனதுக்கு மகிழ்ச்சி தரத்தக்க விஷயங்களை அல்ல!!

சில வேளைகளில் எனக்கு ஒரு ஐயப்பாடு எழுவதுண்டு; இப்படி வேதனைகளைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கிறோமே, கேட்கும் மக்களுக்கு ஒரு கசப்புணர்ச்சி ஏற்பட்டு விடாதா, தொல்லையும் துயரமும் தரத்தக்க பேச்சினைத்தானா கேட்க

வேண்டும் என்ற ஒரு சலிப்புணர்ச்சி ஏற்பட்டுவிடாதா என்ற ஐயப்பாடு.

ஆனால், நமது மக்கள், வேதனை பற்றிய பேச்சினை நாம் விடாது எடுத்துக் கூறிடுவது கேட்டு, கசப்போ சலிப்போ கொள்ளாமல் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருப்பதற்கான காரணம் தெரிந்த பிறகு, எனக்கு இருந்த ஐயப்பாடு போய்விட்டது. என்ன அந்தக் காரணம் என்றால், தம்பி! மக்கள்,

வேதனைகளைப் போக்கிக்கொள்ள முடியும்
வேதனை மூட்டியவர்களை விலக்கிட முடியும்
புதியதோர் வாழ்வினை நாம் பெற்றிட முடியும்
அதற்கான திறமையும் உரிமையும் தமக்கு உண்டு

என்ற நம்பிக்கையுடன் இருப்பதுதான் காரணம். அதனால் தம்பி! அவர்களுக்கு, திரும்பத் திரும்ப நாம் கூறுவதைக் கேட்டிட வேண்டும் என்ற ஆர்வத்தைத் தந்தபடி இருக்கிறது.

மக்கள் சிந்திக்கிறார்கள், மிகத் தீவிரமாக. பிரச்சினைகளை ஆராய்ந்து பார்க்கிறார்கள் - வேதனை தாக்குகிறது தத்தளிக்கிறோம், ஆனால், எத்தனை காலத்துக்கு? ஏன்? இதற்கு ஒரு முடிவே கிடையாதா? பரிகாரமே கிடையாதா? மாற்றமே கிடையாதா? என்ற கேள்விகள் கிளம்பிக் கிளம்பி, மக்களிடம் இன்று ஓர் புதிய உறுதியை எழச் செய்துவிட்டது. அந்த உறுதியைத் தம்பி! அவர்களின் கண்ணொளியும், முழக்கமும் எடுத்துக் காட்டுகின்றன.

வேதனை நாளாகவாகக் குறையும் மறையும் என்று எண்ணிப் பல காலம் பொறுத்துக் கொண்டனர். பொழுது புலரும், புதுவாழ்வு மலரும் என்று நம்பிக் கொண்டிருந்தனர். ஆளவந்தார்களும் அந்த நம்பிக்கையை ஊட்டியபடி இருந்தனர். உழுதுவிட்டோம், விதை தூவப் போகிறோம்! விதை

தூவிவிட்டோம், அறுவடை காணப் போகிறீர்கள்! - என்று வாக்களித்தபடி இருந்தனர். நல்ல காலம் பிறந்திடப் போகிறது, அதோ நம்பிக்கை நட்சத்திரம் எழுந்துவிட்டது, காணீர்! - என்று கூறியபடி இருந்தனர்.

பொறுத்துக்கொள்ள வேண்டிய அளவு பொறுத்துக் கொண்டாகிவிட்டது;

காத்துக் கொண்டிருக்க வேண்டிய அளவு காத்துப் பார்த்தாகி விட்டது.

நிலைமையைத் திருத்துவார்கள் என்று நம்ப வேண்டிய அளவு நம்பிப் பார்த்தாகி விட்டது:

இனி இவர்களை நம்பிக் கிடப்பதில் பயனில்லை. நமக்கு வந்துற்ற வேதனையைப் போக்கிக்கொள்ள நாமாகத்தான் முயற்சி எடுத்தாக வேண்டும் என்ற உறுதியுடன் இன்று மக்கள் உள்ளனர்.

வேடிக்கை அல்ல, தம்பி! உண்மையான நிலைமை இன்று என்னவெனில், மக்கள் தயாராக உள்ளனர், உறுதியுடன் உள்ளனர், ஆட்சியிலே ஒரு மாற்றம் கண்டிட. மக்களுடன் தொடர்பு கொண்டுள்ள தலைவர்களே இன்று, தயாராக வேண்டும், மக்களை அணிவகுத்து அழைத்துச் செல்ல.

ஒரு வேடிக்கைச் சித்திரம் பார்த்த நினைவு வருகிறது.

குதிரைப் பந்தயம் நடைபெறுகிறது.

பல குதிரைகள் போட்டியிட்டு ஓடுகின்றன.

மிக வேகமாக ஓடிய ஒரு குதிரைமீது அமர்ந்திருந்தவன் கீழே விழுந்து விடுகிறான்.

இலக்கு இருக்கும் இடம் நெருங்குகிறது. குதிரை,

தன்மீது ஆள் அமர்ந்தில்லை என்ற காரணம் காட்டி, பந்தயத்தில் வெற்றி பெறவில்லை என்று கூறிவிடுவார்களோ என்று கவலைப்படுகிறது.

கவலை காரணமாக, ஓட்டத்தின் வேகத்தைக் குறைத்துக் கொள்ளவில்லை.

ஓட்டத்துடன் ஓட்டமாக, பந்தயத்தைப் பார்த்துக் கொண்டிருப்பவர்களை நோட்டம் பார்க்கிறது.

ஒரு ஆளை வாயால் கவ்வித் தூக்கித் தன் முதுகின் மீது அமரச் செய்கிறது.

இலக்கை வந்து அடைகிறது, வெற்றிப் பரிசு கிடைக்கிறது!!

இலக்கை நோக்கி வேகமாக ஓடிவரும் புரவி, தன்னைச் செலுத்துபவன் ஒருவனையும் தூக்கிச் செல்வதுபோல இன்று விழிப்புற்ற, எழுச்சி பெற்ற மக்கள் நிலை இருக்கிறது. தலைவர்கள், மக்களைத் தயார் செய்வதற்குப் பதிலாக, இன்று மக்கள், தலைவர்களைத் தயார் செய்கின்றனர், துரிதப்படுத்து கின்றனர், தீவிரப்படுத்துகின்றனர்.

நம்மாலே ஆகுமா என்ற இழுப்புப் பேச்சு இன்று மக்களிடம் இல்லை; நாம்தான் செய்தாக வேண்டும் என்ற உறுதி மிகுந்து காணப்படுகிறது.

வேதனைகளைத் தாங்கித் தாங்கி இனித் தாங்க முடியாது என்ற நிலைக்கு வந்துவிட்டனர். மாற்றம் கண்டாக வேண்டும் என்ற உறுதிகொண்டுவிட்டனர் மக்கள். எப்போது?

இந்த வேதனைகளுக்கான காரணம் கேளீர் என்று துவங்கி, ஆளவந்தார்கள் கூறியவைகளைக் கேட்ட பிறகு!

காரணம் எதுவும் பொருத்தமாக இல்லை;

விளக்கம் போதுமானதாக இல்லை என்பதைக் கண்டறிந்தான பிறகு!

அன்புரை தருவதற்குப் பதிலாக ஆட்சியினர் அடக்குமுறையை அவிழ்த்து விடுவதைக் கண்டு மனம் வெதும்பிய பிறகு!

தேனும் பாலும் ஆறாக ஓடும் என்று காங்கிரசார் ஆளவந்தார் களாவதற்கு முன்பு கூறினர்; மக்கள் விவரமறியாதவர்கள் அல்ல; தேனும் பாலும் ஏன் ஆறாக ஓடவில்லை என்று ஆளவந்தார்களான காங்கிரசாரைக் கேட்கவில்லை. கண்ணீரும் இரத்தமும் பீறிட்டுக் கொண்டு வரும் நிலையையாவது மூட்டிவிடாமல் இருக்கக்கூடாதா என்றுதான் இன்று கேட்கின்றனர். தேனும் வேண்டாம், பாலும் வேண்டாம், சோறும் மோரும் போதும், அதுவாவது தரக்கூடாதா என்று கேட்கின்றனர். அடிப்படைத் தேவைகளை மட்டுமே கேட்கின்றனர்! அளவற்ற போக போக்கியத்தை அல்ல.

அதுவும், இதற்குமுன் என்றுமே கொடுத்திராத அளவு வரிப் பணத்தைக் கொட்டிக் கொடுத்துவிட்டு, இந்த அடிப்படைத் தேவைகளைக் கேட்கின்றனர்.

உண்மையைச் சொல்லுவதானால் தம்பி! வெள்ளைக்காரன், இன்று காங்கிரசாட்சி வசூலிக்கும் வரிப்பணத்தின் அளவைக் கேட்டு, ஆச்சரியத்தால் மூர்ச்சித்துக் கீழே விழுவான்! அவ்வளவு பெரிய அளவு வரிப்பணம் கிடைக்கிறது! வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி ஏழை எளியவர்கள் கொட்டிக் கொடுக் கிறார்கள். தொட்டதற்கெல்லாம் வரி! தொடர்ந்து வரி! சுமை ஏறியபடி இருக்கிறது! விதவிதமான வரி! எல்லாம் ஏழையின் முதுகெலும்பை முறிக்கத்தக்க விதமான வரிகள்.

பொதுமக்கள் புள்ளி விவரம் தெரிந்து

கொள்ளாமலிருக்கலாம்; முன்பு இருபது கோடிக்கும் குறைவாகவே வரி கொடுத்து வந்தோம்; இப்போது இருநூறு கோடி அளவுக்குக் கசக்கி எடுத்துக் கொள்கிறார்கள் என்ற உண்மையை உணருகிறார்கள், தமது வாழ்க்கையிலே ஏறிவிட்டுள்ள சுமையின் அழுத்தத்தைக் கொண்டு.

பொருளாதாரத் துறையின் அரிச்சுவடி அளவு அறிந்தவர்களும், வரி வகையில், ஏழை மக்களை வாட்டி வதைக்கக் கூடியது மறைமுக வரி என்பதை அறிவர்.

பண்டங்களின்மீது விதிக்கப்படும் விற்பனை வரி,

இறக்குமதி செய்யப்படும் பண்டங்களின்மீது விதிக்கப்படும் சுங்க வரி

போன்ற மறைமுக வரிகள், காங்கிரசாட்சி ஏற்பட்ட பிறகு, எத்தனை வேகமாக வளர்ந்திருக்கிறது என்பதையும் எத்தனை பெரிய அளவு ஆகிவிட்டிருக்கிறது என்பதையும் கணக்கெடுத்துப் பார்த்தால், இந்த ஆட்சி நடத்திடும் கொடுமையின் வகை விளங்கிடும்.

இந்த மறைமுக வரிகள் மூலம் இந்தியப் பேரரசு 1964-65-ம் ஆண்டிலே மட்டும் பெற்றுள்ள தொகை 1,247 கோடி ரூபாய்.

இவ்வளவும், ஏழைகள் எப்பாடுபட்டேனும் வாங்கித் தீரவேண்டிய பண்டங்களின்மீது விதிக்கப்பட்டுள்ள வரிகள் மூலம் கிடைக்கிறது.

அதே ஆண்டில், சீமான்கள் கட்டிய வருமான வரியின் தொகை எவ்வளவு? 294 கோடி ரூபாய்.

இதுதான் தம்பி! காங்கிரசின் ஜனநாயக சோஷியலிசம்.

ஏழை கட்டும் தொகை 1,247 கோடி; பணக்காரன் கட்டுவது 294 கோடி!!

ஏழையால், வரியிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது; அவன் வாங்கித் தீரவேண்டிய பண்டங்களின்மீது வரி, மறைமுகமாகச் சேர்க்கப்பட்டிருப்பதால்.

ஏழை வாங்கித் தீரவேண்டிய கிரசின் எண்ணெய்க்காக அவன் தரும் பணத்தில் 45 சதம் வரியாகிறது!

ஏழை வாங்கிடும் சர்க்கரைக்காகக் கொடுக்கும் பணத்தில் 50 சதம் வரியாகிறது!

ஏழை பயன்படுத்தும் தீக்குச்சிக்காகத் தந்திடும் பணத்தில் 62 சதம் வரியாகிறது!

ஏழை வாங்கியாக வேண்டிய ஒவ்வொரு பண்டத்துடனும் இந்த மறைமுக வரி சேர்ந்திருக்கிறது.

அப்படி ஏழை கொட்டிக் கொடுக்கும் தொகை 1,247 கோடி! அதைக் கூசாமல் பெற்றுக்கொண்டுதான் காங்கிரசாட்சி கூவுகிறது, தனது திட்டம் ஜனநாயக சோஷியலிசம் என்று.

சில நூறு கோடி ரூபாய் அளவுக்கும் ஏறாமலிருந்த இந்த மறைமுக வரியை ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் ஏற்றிவிட்டு, காங்கிரசாட்சி ஏழையின் வாழ்க்கையை உயர்த்துவதாகவும் பேசுகிறது; மறுத்தால் உருட்டி மிரட்டிப் பார்க்கிறது.

ஆயிரம் கோடி ரூபாய்க்குமேல், மறைமுக வரி கொடுக்கத் தக்க விதமாக ஏழையின் வாழ்வு காங்கிரஸ் ஆட்சியினால், உயர்ந்துவிட்டதா, செம்மைப்பட்டு விட்டதா? என்று பார்த்திடின், தம்பி! முன்பு இருந்து வந்ததைவிட ஏழையின் வாழ்வு

செல்லரித்துக் கிடப்பதற்குத்தான் சான்றுகள் கிடைக்கின்றன.

ஜெயப்பிரகாச நாராயணன், தேபர் போன்றார் இதற்குச் சான்றளித்துள்ளனர்.

வினோபா பாவே, மனம் குமுறி இது குறித்துப் பேசியிருக்கிறார்.

பொருளாதாரத் துறையின் ஆய்வாளர்கள் இதனைப் படம் பிடித்துக் காட்டியுள்ளனர்.

மற்ற இடங்களுக்குச் செல்வானேன், சர்க்காரே புள்ளி விவரம் தந்திருக்கிறது, நாலாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய அறிக்கையுடன் இணைத்து.

430 இலட்சம் மக்கள் - தினம் 30 பைசா
430 இலட்சம் மக்கள் - 42 பைசா
460 இலட்சம் மக்கள் - 51 பைசா
430 இலட்சம் மக்கள் - 59 பைசா

பெற்று வாழ்ந்து வருவதாக!

பெற்றுவரும் வரிப்பணத்தின் அளவு என்ன? அதைக் கொண்டு மக்களின் வாழ்க்கையை எந்த அளவு செம்மைப்படுத்த முடிந்தது? என்று கேட்டால், கடுங்கோபம் பீறிட்டுக் கொண்டு வருகிறது காங்கிரசாருக்கு. பணக்காரனை மட்டும் விட்டு விட்டோமா? வரி போடுகிறோமே! என்கிறார்கள். எவ்வளவு என்று கேட்டால் 294 கோடி என்று கணக்களிக்கிறார்கள். ஏழைக்கு ஆயிரம் கோடிக்கு மேல்! பணக்காரனுக்கு அதிலே கால்தானா என்றால், ஆமாம்! அப்படித்தான்!! என்று அடித்துப் பேசுகிறார்கள்.

பணக்காரர்களுக்குப் போடும் வரித் தொகையையாவது சரியான முறையிலே

வசூலித்துக்கொண்டு வருகிறார்களா? - என்று கேட்டால், கொஞ்சம் "நிலுவை' இருக்கிறது என்கிறார்கள். எவ்வளவு இருக்கும் அந்த நிலுவை என்று கேட்டால், ஒருவர் 300 கோடி இருக்கும் என்கிறார், இன்னொருவர், 500 கோடி இருக்கும் என்கிறார், வேறொருவர் ஆயிரம் கோடிக்குக் குறையாது என்கிறார்.

ஏழையால் ஒரு ரூபாய் வரியைக் கொடுக்காமல் தப்பித்துக்கொள்ள முடியாது. பணக்காரர்கள் பல நூறு கோடி ரூபாய் வரிப்பணத்தைச் செலுத்தாமலே காலத்தை ஓட்ட முடிகிறது. இதுதான் காங்கிரசின் ஜனநாயக சோஷியலிசம்.

இதனை மெத்தத் தெளிவாக விளக்குவதுபோல இந்த ஆட்சியினர், உத்திரப்பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு முதலாளி செலுத்த வேண்டிய வருமான வரித் தொகையை 30 இலட்ச ரூபாய் அளவு - தள்ளுபடி செய்துவிட்டனர்.

காங்கிரசின் ஜனநாயக சோஷியலிசத்தின் கனியைச் சுவைத்த இந்த முதலாளி ஒரு காங்கிரஸ்காரரர், பிரமுகர்!!

ஒரு விளக்கம், ஒரு சமாதானம் கூற வேண்டுமே, இந்த அக்ரமத்துக்கு! கிடையாதே! ஆமாம்! அப்படித்தான்!! என்று அடித்துப் பேசுகின்றனர், ஆளவந்தார்கள்! யார் கேட்க முடியும் என்ற துணிவுடன்; என்ன செய்துவிட முடியும் என்ற ஆணவத்துடன்.

அவரால் வரித் தொகையைக் கட்ட இயலவில்லை யாம்!! ஏழையால் மட்டும் வரிச் சுமையைத் தாங்கிக்கொள்ள முடிகிறதா?

முடிகிறதே!

எப்படி?

கடன்படுகிறான்!
எவ்வளவு?
ஆய்வாளர்கள் தந்துள்ள கணக்கின்படி, விவசாயக் குடும்பத்தினர் பட்டுள்ள கடன் தொகை மட்டும் 2,789 கோடி ரூபாய்!

ஆக, காங்கிரசாட்சியில் பணக்காரன் வரி கட்ட மாட்டான்; தள்ளுபடி செய்துவிடப்படும்! ஏழை கடன் பட்டாகிலும் வரி கட்டியாக வேண்டும். இதுதான் காங்கிரசின் ஜனநாயக சோஷியலிசம்.

எதிர்க்கட்சிகள் இப்படித்தான், எதையாவது கிளறும்! ஏதாவது குளறும், காங்கிரசாட்சி ஒன்றுமே செய்யவில்லை என்று பொய் பேசும். காங்கிரசாட்சி ஒன்றுமேவா செய்யவில்லை? என்று கேட்டுவிட்டு,

விளக்குக் கம்பங்கள்
மின்சார பல்புகள்
பம்பு செட்டுகள்
பொலி காளைகள்
உரக் குழிகள்
அணைகள், தேக்கங்கள்
பள்ளிக்கூடங்கள்
மருத்துவ மனைகள்
தொழிற் பேட்டைகள்

ஆகியவற்றின் கணக்கை நீட்டுகின்றனர். இவைகளைக் கணக்குக் காட்டும்போது, வெள்ளையராட்சியில் வாங்கிய வரிப் பணம் எவ்வளவு? இப்போது இவர்கள் வாங்கிடும் வரிப் பணம் எவ்வளவு? என்ற கணக்கை மட்டும் மறைத்துவிடுகிறார்கள்.

இவர்கள் மறைத்தாலும் மக்கள் மறந்தா போய் விடுவார்கள்!

அவர்களுக்கும் கணக்குத் தெரியும்.

தெரிந்துவிட்டதால்தான் கணக்குத் தீர்த்தாக வேண்டும் என்ற உறுதிகொண்டு விட்டிருக்கிறார்கள்.

கட்டிய பள்ளிக்கூடம், நட்டுவிட்ட மின்சார விளக்குக் கம்பங்கள் ஆகியவைகளைக் காட்டியேவா காங்கிரஸ் ஆட்சி காலந் தள்ளிக் கொண்டு போக முடியும் - இனியும்! பித்தனும் ஏற்றுக்கொள்ள மாட்டானே!

கொடுத்த வெண்ணெய் எவ்வளவு, கிடைத்த நெய் எவ்வளவு என்ற கணக்கா புரியாமலிருக்கும், மக்களுக்கு!

விளைந்ததில், நெல் எந்த அளவு, பதர் எந்த அளவு என்று பிரித்துப் பார்க்கவா தெரியாது, மக்களுக்கு.

இறைத்தது எவ்வளவு, பாய்ச்சல் கிடைத்தது எந்த வகையில் என்பது பற்றிப் பார்த்திடவா தெரியாது, மக்களுக்கு.

தெரிந்துவிட்டது, அதனால்தான் அவர்கள் உறுதி கொண்டுவிட்டார்கள் ஆட்சி மாற்றப்பட வேண்டும் என்று.

இன்று அந்த மக்களை மயக்க, ஜனநாயக சோஷியலிசம் பேசிப் பார்க்கிறது காங்கிரஸ் அரசு!

மக்கள், காங்கிரசின் நடுநாயகர்கள் எவரெவர் என்று பார்க்கின்றனர்.

ஜனநாயக சோஷியலிசம் திட்டமாவது உண்மையானால், இத்தனை சீமான்கள், இந்தக் காங்கிரசிலே இடம் பெற்றிருப்பார்களா? என்று கேட்கிறார்கள்.

எங்கள் சோஷியலிசத்தில் ஏழையும் இருப்பான், பணக்காரனும் இருப்பான் - நாங்கள் பாலுக்கும்

காவல், பூனைக்கும் தோழன் என்று காங்கிரசின் பெரியவர்கள் கூறுகிறார்கள், ஓ, அப்படியா! உங்கள் சோஷியலிசம் அப்படிப்பட்டதா! எங்களுக்கு சோஷியலிசம் வேண்டும், உங்கள் ஜோடனையிசமல்ல என்று மக்கள் கூறுகின்றனர்.

டாட்டா பிர்லா கூட்டாளி
பாட்டாளிக்குப் பகையாளி

என்று நமது கழகத் தோழர்கள் கூறும்போது, எழுகிறதே தம்பி! மகிழ்ச்சி ஆரவாரம், அதற்குக் காரணம், மக்கள் பெற்று விட்டுள்ள தெளிவு.

இந்தத் தெளிவு பிறந்திட நமது கழகம் பெரும் அளவு பணியாற்றி இருக்கிறது என்பதிலே நாம் பெருமிதம் கொண்டிடலாம் என்றாலும், இத்தனை தெளிவு பிறந்துள்ள போது, ஆட்சியை மாற்றிடும் செயலில் வெற்றி பெற்றால்தான், உண்மையான பெருமைக்கு நாம் உரியவர்களாவோம்.

அதற்காக நாம் மேற்கொள்ள வேண்டிய பணிகள் அடுக்கடுக்காக உள்ளன. வேலை அதிகம்! நேரம் அதிகம் இல்லை!! சென்ற ஆண்டே நடந்து முடிந்திருக்க வேண்டிய மாநாடுகளை நாம் இப்போதுதான் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

திருச்சியில் துவக்கினோம், நாம் மகிழத்தக்க விதமாகவே மாநாடு நடந்தேறியது.

இப்போது வேலூர் கோட்டை வெளியில் அழகுற அமைகிறது மாநாட்டுப் பந்தல்.

திருச்சியில் திறந்தவெளி அரங்கு; இங்குப் பாங்கு நிறை பந்தல். நமது கழக மாநாடு, பல்லாயிரவர் கூடிடும் பாசறை மட்டுமல்ல, குடும்பம் குடும்பமாக நமது கழகத்தவர் கூடிடும் அறிவகம்.

பல்வேறு ஊர்களினின்றும் வந்திடுவோர்,

தத்தமது இடத்து நிலைமை பற்றி உரையாடி, மொத்தத்தில் அமைந்துள்ள சூழ்நிலையினை அறிந்து அகமகிழ்ந்திடுதல் அரியதோர் வாய்ப்பாகும்.

திருச்சியில் திறந்தவெளி மாநாடு - எனவே, காலையிலும் பிற்பகலிலும் காய்கதிரோன் குறுக்கிட்டதால கழகப் பேச்சாளர் பலர், கருத்து விருந்து அளித்திடும் வாய்ப்பினைப் பெற்றோமில்லை.

வேலூரில் எழில்மிக்கதும், வசதி நிரம்பியதுமான முறையில் பாங்கான பந்தல் அமைத்துள்ளனர்.

இரு நாட்களிலும், எழுச்சியூட்டத்தக்க விளக்க உரையாற்றிடும் நமது கழகத் தலைவர்கள் வருகின்றனர்.

கழகக் கலைஞர்கள், கருத்து விருந்துடன் கலை விருந்தும் தந்திட இசைந்துள்ளனர்.

முத்தமிழ் முழங்கிடும் திரு இடமாகத் திகழப் போகிறது வேலூர் மாநாடு.

வீரர் அணிவகுப்பைக் கண்டிடவும், வெற்றிப் பாதை வகுத்திடவும், வாரீர் வாரீர் என்று அனைவரையும் அழைக்கின்றேன்.

நாட்டை வாட்டிடும் கேட்டினைப் போக்கிட, கோட்டை வெளியினில் கூடுவோம் வந்திடுவீர் என்றழைக்கின்றேன்.

திருச்சி போலவே வேலூர் எனக்கு ஒரு திருத்தலம்.

திருச்சியில் ஒரு முறை சிறை சென்றேன். விலைவாசிக் குறைப்புக்கான அறப் போராட்டத்தின்போது வேலூர் சிறையில் இடப்பெற்றேன்.

மாநாடு கூடிடும் கோட்டை வெளியைக் கடந்து,

கோட்டைக்கு உட்புறம் உள்ள துரைத்தன அலுவலகத்திலே தான், இன்று மாநாட்டு அலுவல்களை உற்சாகத்துடன் கவனித்துக் கொள்ளும் மாவட்டச் செயலாளர் தருமலிங்கம், வேலூர் நகராட்சி மன்றத் தலைவர் சாரதி, உறுப்பினர் தேவராஜி, தொண்டர் படைத் தலைவராக உள்ள இளஞ்செழியன், அவர் துணைவியார் மற்றும் ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் சம்பங்கி, வாணியம்பாடி சட்டமன்ற உறுப்பினர் முல்லை வடிவேலு ஆகிய பலர் கொண்ட அணிவகுப்பில் நான் நின்று மறியல் செய்தேன்; எங்களுடன் சிறையில் திருவண்ணாமலை சட்டமன்ற உறுப்பினர் ப. உ. சண்முகம், முருகையன், திண்டிவனம், வானூர் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கவேலு, பாலகிருஷ்ணன் ஆகிய பல நண்பர்கள் இருந்தனர். என்னுடன் அன்று இருந்த வேலூர் நண்பர் பாலசுந்தரம் மறைந்துவிட்டார்.

இப்போதும், அந்தோ! என் மனக் கண்முன் நிழலாடுகிறதே, போளூராரின் இனிய முகம்!

அந்தச் சிறையிலே அவரைக் கண்டதும், சிறை என்ற எண்ணமே பறந்தோடிவிட்டதே! அந்தச் சிரித்த முகத்தைக் காண முடியாது. ஆனால், மாநாட்டிலே வந்திடும் எவருக்குத்தான் அந்த இனியவரின் நினைவு நெஞ்சிலே எழாதிருக்கும், கண்களிலே நீர் துளிர்த்திடாமலிருக்கும்?

அவர் பெயரால், பந்தல் - அங்குக் கூடுவது, மறைந்த அந்த மாவீரனுக்குச் செலுத்தும் அஞ்சலியில் ஒருவகை என்றே நான் கருதுவேன்.

திருத்தலம் என்றும் கூறுவேன், அந்த மாநாட்டினை! அங்கு, தம்பி! உன்னை உன் நண்பர்களுடன் கண்டு அளவளாவ விரும்புவது இயற்கைதானே!

நண்பர்கள் மட்டுந்தானா அண்ணா! - என்று கேட்டிடாதே,

உன் குறும்புப் புன்னகையின் பொருள் விளங்காமலில்லை, உன் கோலமயிலுடன் வந்து சேர்; எழிலூட்டு; எழுச்சியூட்டு; எதிர்காலத்தை ஒளிமயமானதாக்கிடு. தம்பி! நீ உலவினால்தானே "கோட்டை' என்ற பெயரின் முழுப் பொருளும் நான் உணர முடியும்.

அன்புள்ள
அண்ணாதுரை
10-7-66

கழுகும் கிளியும்

திருடனே உபதேசியான விந்தை!
உருட்டி விடப்பட்டவர் உபதேசியாகிறார், வெட்கமின்றி!
டி.டி.கே. முகத்திலே லால்பகதூர் பூசிய கரி!
இருந்ததை இழந்துவிட்ட எரிச்சலிலா இழிபேச்சு?
கழுகு பிணம் தின்னும்; கிளி கோவைக் கனி தின்னும்!
வாய் நீளுகிறது! வார்த்தை நாராசமாகிறது!

தம்பி!

கேட்போர் மனம் உருகும் விதமாக இருந்தது அந்த உபதேசம். அருள் வாக்கு என்றும், ஆத்ம சக்தியின் விளைவு என்றும் பலர் வியந்து புகழ்ந்திடும் விதமான உபதேசம்!!

கல் மனமும் கரையும்! காதகனும் புனிதனாவான்! மனமாசு அகலும்! மதி கலங்கும்! வழி தவறி நடந்து வந்தவனும் தன் குற்றத்தை உணர்ந்து நெஞ்சு நெக்குருக நிற்பான்; புதுப் பிறவியாகிடுவான்! அப்படிப்பட்ட அருமையான உபதேசம் அது.

கர்த்தரின் கட்டளைகளை எத்தனை விளக்கமாக்கிக் காட்டுகிறார் இந்த வித்தகர்!

நாமும்தான் நித்த நித்தம் படிக்கின்றோம் "வேதம்' - என்ன பயன்! இவர் கூறிடும் போதல்லவா அருமை புரிகிறது!

ஆதாரங்களை அள்ளி வீசுகிறார்; சான்றுகள் சரமாரியாக! மேற்கொள்ளும் விளக்கங்களும் எவ்வளவு சுவையுடன்! இதற்குமுன்பு இதுபோல உபதேசம் அருளியவர் எவரையும் கண்டதில்லை என்று அந்த உபதேசம் கேட்டவர்கள் கூறினர். நானாக எதனையும் கூறிடவில்லை! எல்லாம் நாதன் அருளியது!! என் சொல் ஏதும் இல்லை! எல்லாம் இறைவன் இட்ட பிச்சை! கற்றதனைக் கூறிடும் வித்தகன் அல்ல நான்! கர்த்தர் காட்டிடும் வழிநடப்பவன். அவர் பேசுகிறார் என் மூலம்!

ஆண்டு பலவாகக் கற்றுத் தெளிந்து பேசுகிறேன் என்றும் எண்ணற்க! நான் படித்தது ஒரே ஏடு! படிப்பது ஒரே ஏடு! அந்த ஒரு ஏடு போதும் உள்ளத்திலே அருள் ஒளியைத் தந்திட. அது புலவர் தீட்டிய ஏடு அல்ல - புனிதன் அருளிய வேதம் - பைபிள் அதில் உள்ளதனைத்தான் எடுத்து உரைக்கின்றேன்! - என்று அவன் உபதேசம் செய்கிறான், கேட்போர், கண்களில் நீர் துளிர்க்கிறது.

அதிலும் பத்துக் கட்டளைகளில் எட்டாவது கட்டளை யான பிறர் பொருளைக் களவாடாதே! - என்ற கட்டளை பற்றிய உபதேசம் முதல்தரமாக அமைகிறது.

திருடாதே! திருஅருளை இழந்திடாதே! திருடாதே!

சமூகத்தைக் கெடுக்காதே! திருடாதே!

பாப மூட்டையைச் சேர்த்துக் கொள்ளாதே!

எட்டாவது கட்டளைபற்றி அவன் செய்த உபதேசம் கேட்டு, "உபதேசியார்கள்’ வியந்தனர் - அவ்வளவு அற்புதமாக இருந்தது அந்த உபதேசம்.

உபதேசமும் திடலில் அல்ல! திருக்கோயிலில்!!

இதே எட்டாவது கட்டளைபற்றி எவரெவரோ

பேசினர், கேட்டோம்; இவர்போலவா அவர்கள் உபதேசம் செய்தனர்! என்று கூறினர் திருக்கோயிலில் கூடி அந்த உபதேசத்தைக் கேட்டவர்கள்.

ஆனால், அந்த அருமையான உபதேசம் செய்தவர் - அருள் பெற்றவனோ என்று பலரும் வியந்திடத்தக்க விதமான உபதேசம் செய்தவர் - எட்டாம் கட்டளை பற்றிய விளக்கத்தை ஏற்புடைய முறையிலே அளித்த அந்த உபதேசி ஒரு திருடன்!!

மோட்டார் திருடியவன்! பிடிபட்டுச் சிறையில் அடைக்கப்பட்டவன்! அவன்தான் அத்தனை அருமையாகஉபதேசம் செய்கின்றான், எட்டாவது கட்டளை பற்றி; களவாடுவது பாபம் என்று!!

இருந்தால் என்ன? பூர்வ ஜென்ம வினையால் களவாடினான்; சிறைப்பட்டான்; சிறைச்சாலையையே தவச் சாலையாக்கிக் கொண்டு, செய்த தவறுக்காக வருந்தி இறைவனிடம் முறையிட்டு, பாபம் கழுவப் பெற்று, புனிதனாகி இருப்பான்! அதனால்தான் “உபதேசி’ யாகி இருக்கிறான். முன்பு களவாடியவன் என்பதாலே, அவன் இப்போது”உபதேசி’யாகக் கூடாது என்று கூறிவிடலாமா? - என்று கேட்டிடுவார் உளர்.

தம்பி! இவன், தான் குற்றம் செய்ததை ஒப்புக்கொண்டு, கழுவாய் தேடிக் கொண்டவன் அல்ல! செய்த பாபத்தைத் துடைத்து அருளும்படிப் பரமனை இறைஞ்சிப் புனிதன் ஆனவனல்ல.

களவாடினான்
சிறைப்பட்டான்
சிறைக்காவலரை ஏய்த்துத் தப்பி ஓடினான்.
ஊரை ஏய்க்க "உபதேசி’ வேடம் புனைந்தான்.

எட்டாவது கட்டளையை மீறிய இந்த எத்தன் அதே எட்டாவது கட்டளையைப் பற்றியே

அருமையாக "உபதேசம்' செய்வதன் மூலம், சட்டத்தின் கண்களையும் சமுதாயத்தின் கண்களையும் குருடாக்கிட முனைந்தான். உள்ளம் திருந்தியவன் அல்ல! உதட்டளவு உபதேசம்! ஊரை ஏய்க்க உபதேசம்!

பிறகு அவன் கண்டுபிடிக்கப்பட்டான்.

புரட்டு அம்பலமாயிற்று. இவனைப் புனிதன் என்று நம்பினோமே ஏமாளித்தனத்தால் என்று மக்கள் கூறினர்.

கதை அல்ல! நடந்த நிகழ்ச்சி!

சிட்னி என்ற நகரிலே, திருக்கோயில்களிலே எட்டாவது கட்டளைபற்றி உபதேசம் செய்து வந்தவன் எத்தன் என்பதும், அவன் திருட்டுக் குற்றத்துக்காகச் சிறைப்படுத்தப்பட்டு, அங்கிருந்து ரொட்டி வண்டியிலே ஒளிந்துகொண்டு தப்பி ஓடிவிட்டான் என்பதும் பிறகே தெரிய வந்தது; அவன் செய்த உபன்யாசங்களைக் கேட்டு உருகிய பிறகு.

இந்த நிகழ்ச்சிபற்றி இதழ்களிலே படித்தபோது தம்பி! எனக்கு ஒரே வியப்பு.

எவ்வளவோ "அறிவுத் தெளிவும் ஆராய்ச்சித் திறனும் வளர்ந்துள்ள இந்த நாட்களிலும், மக்களிடம் கப்பிக் கொண்டுள்ள ஏமாளித்தனத்தைப் பயன்படுத்திக் கொள்ள எத்தர்களால் முடிகிறதே! உருவத்தைக் கண்டும், புனைந்திடும் கோலம் கண்டும், பேசிடும் மொழியின் பாங்கு கண்டும், புனிதத்தன்மை பற்றிய பேச்சைக் கேட்டும், மக்கள் மயங்கிப் போகிறார்களே!... என்று எண்ணிக் கவலைமிகக் கொண்டேன்.

மதப் போர்வை அத்தகைய மன மயக்கத்தைத் தருகிறது; புரிகிறது!

எதனை நாம் புனிதமானது என்று நம்பிப் போற்றுகிறோமோ, அந்தப் புனிதத்தையே, புரட்டுக்குப் பயன்படுத்திக்கொள்ளும் புல்லர்கள் உலவியபடிதான் இருக்கிறார்கள். விழிப்புடன் இருந்தாலொழிய எத்தர்கள் கிளம்பியபடிதான் இருப்பார்கள்; மக்களை ஏமாளி களாக்கியபடிதான் இருப்பார்கள் என்று எண்ணிக் கொண்டேன்.

அந்த நேரமாக நண்பரொருவர் வந்தார்; அவரிடம் கூறினேன், என் மனத்திலே தோன்றிய இந்தக் கருத்தை. அவர் இடி இடியெனச் சிரித்தார். எனக்குத் தூக்கிவாரிப்போட்டது. என்ன! என்ன! இது நகைப்புக்குரிய விஷயமா! மக்கள் மதக்கோலம் புனைந்திடும் எத்தர்களிடம் ஏமாந்து போகும் செய்தி கேட்டு, நாம் வெட்கப்பட வேண்டும், வேதனைப்பட வேண்டும், ஆத்திரப்பட வேண்டும், பகுத்தறிவுப் பிரசாரத்தை மும்முரமாக்க வேண்டும், அவ்விதமிருக்க, நான் இந்த விஷயத்தைக் கூறிடக் கேட்டுச் சிரிக்கின்றீரே, ஏன் என்று கேட்டேன்.

அவர் சொன்னார், அண்ணாதுரை! மதவேடம் போட்டுக் கொள்பவன்தான் மக்களை மயக்க முடியும் என்று எண்ணிக் கொண்டு இத்தனை ஆத்திரப்படுகிறாய், உலகம் போகிற போக்கு புரியாமல்; அதை எண்ணித்தான் சிரித்தேன். மதவேடம் போடாமலேயேகூட, மக்களை மயக்கிடத்தக்க உபதேசம் செய்பவர்கள் உலவுகிறார்கள்; அவர்களைப் பார்க்கவில்லையா என்று கேட்டார்.

விளக்கம் கேட்டேன். அவர் கூறினார்: எட்டாவது கட்டளையை மீறியவன் எட்டாவது கட்டளையின் அருமை பற்றிய உபதேசம் செய்தான் என்பதுதானே உனக்கு வியப்பாக இருக்கிறது? எனக்கு அதிலே வியப்பு ஏற்படவில்லை. அவனாகிலும் “பைபிள்’ கருத்திலே புலமை காட்டி, தன்னைப் புனிதன் என்று

நம்பும்படி மக்களை மயக்கினான். டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அப்படிக்கூட எந்த”அருட்பாவை’யும் கற்றுத் தெளிந்து வித்தகராகிடவில்லையே; கொச்சைத் தமிழில்தானே பேசுகிறார்? அவர் ஊருக்கு உபதேசம் செய்துகொண்டிருக்கிறாரே, அது உனக்கு ஆச்சரியமாக இல்லையா? என்றார்.

"இது போக்கிரித்தனமான பேச்சு! நான் கள்ளனாக இருந்தவன் கர்த்தர் அருள் பெற்றவன்போல் நடித்து மக்களை மயக்கிய புரட்டுபற்றிக் கூறுகிறேன்; நீ காங்கிரஸ் தலைவருள் ஒருவரான டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் ஊருக்கு உபதேசம் செய்கிறாரே, அது நியாயமா என்று கேட்கிறாயே, முறையா அது’’ என்று சற்றுக் கோபத்துடன் கேட்டேன். என் நண்பர்,

நான் உபதேசம் செய்து ஊராரை மயக்கப் பார்த்திடும் போக்குப்பற்றி மட்டுமே கூறுகிறேன்; நீ எதற்காகக் களவாடிய வனுடனா, "கனம்’ ஆக இருந்தவரை ஒப்பிடுகிறாய் என்று கேட்கிறாய். மக்கள், தான் சொல்லுவதை நம்புவார்கள் என்ற உறுதியுடன்தானே, டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் பேசுகிறார்? என்று கேட்டார்.

ஆமாம்! தனது பேச்சை நம்புவார்கள் என்ற நம்பிக்கை யுடன்தான் அவர் பேசுகிறார் என்றேன்.

டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் பேச்சு நம்பத்தகுந்தது அல்ல என்று இன்றைய கல்வி அமைச்சராக உள்ள சக்ளா அவர்கள், பம்பாய் நீதிபதியாக இருந்தபோது முந்திரா விவகார சம்பந்தமாக எழுதிவைத்திருக்கிறாரே, தெரியுமல்லவா? என்று கேட்டார். தெரியும் என்றேன்.

ஆக, யாருடைய பேச்சு நம்பத்தகுந்ததாக இல்லை என்று முந்திரா விவகார விசாரணையின்போது ஒரு

நீதிபதியால் கூறப்பட்டிருக்கிறதோ, அந்த டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், எந்தத் துணிவிலே மக்களிடம் பேசுகிறார், எந்தத் துணிவிலே தன் பேச்சை மக்கள் நம்புவார்கள் என்று எதிர்பார்க்கிறார்? அதைச் சொல்லு! என்று கேட்டார்.

என்னால் பதில் கூற முடியவில்லை. நானும் நண்பருடன் சேர்ந்துகொண்டு சிரித்தேன்.

ஆனால், தம்பி! டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் நடத்திக் கொண்டிருக்கும் உபதேசத்தில், நமது கழகத்தைப்பற்றி அவர் கூறிய கருத்துபற்றி எண்ணும்போது, சிரிப்பு அல்ல, உள்ளபடி வேதனைதான் பீரிட்டுக்கொண்டு கிளம்புகிறது.

ஒரு முறைக்கு இரு முறை “உருட்டிவிடப்பட்ட’ இந்த உத்தமர், தமக்கு நேரிட்ட”கதி’யை எண்ணி, முக்காடிட்டு மூலையில் உட்கார்ந்திருக்க வேண்டும்; ஆனால், உலாவருகிறார், வெட்கமின்றி! உபதேசமும் செய்கிறார் துணிவுடன். கழகம்பற்றி மிகக் கேவலமாகப் பேசுகிறார் துடுக்குத்தனத்துடன்.

இவர்மீது ஒரு புகார் கிளம்பிற்று.

புகார் செய்தவர்கள் நடுத்தெரு நாராயணர்கள் அல்ல; பாராளுமன்ற உறுப்பினர்கள்.

புகாரும் திடலில் கூறப்படவில்லை; எழுத்து மூலமாகவே குடியரசுத் தலைவருக்குத் தரப்பட்டது; இந்தியப் பிரதமரிடம் அது குடியரசுத் தலைவரால் தரப்பட்டது.

மற்றவர்களைப்பற்றி மிக மட்டமாகப் பேசும் இந்த மகானுபாவரிடம் உள்ளபடி நம்பிக்கையும், மதிப்பும் இருந் திருந்தால், "புகாரை’ப் பெற்றுக்கொண்ட லார்பகதூர் என்ன செய்திருப்பார்?

என்ன துணிவு இப்படிப்பட்ட புகாரை, எனது நிதி

அமைச்சர்மீது சுமத்த! அவருடைய யோக்யதை எப்படிப்பட்டது, நாணயம் எப்படிப்பட்டது! நாட்டுக்காகவும், மக்களுக்காகவும் அவர் செய்துள்ள தியாகம் எப்படிப்பட்டது! கோடி கோடியாகப் பணத்தைக் கொட்டிக் காட்டினாலும், அவர் நேர்மைக் கோட்டை விட்டு, இம்மி அளவாவது விலகுவாரா? சுயநலத்துக்கும் அவருக்கும் ஆயிரமாயிரம் காத தூரமாயிற்றே! தன் சுகம், தன் குடும்ப சுகம் ஆகியவற்றையா அந்த உத்தமர் பெரிதாக மதிப்பார்! நிஷ்காமகர்மி அல்லவோ அவர்! அப்படிப் பட்ட ஒப்பற்ற உத்தமர்மீது, பாவிகளே! பழி சுமத்துகிறீர்களே! ஆகுமா, அடுக்குமா? அந்தப் புனிதர்மீது பழி சுமத்தினால் நான் உங்கள் புகார் மனுவைத் துளியாவது மதித்திடுவேனா? இதோ அதனைச் சுக்கு நூறாகக் கிழித்துக் குப்பைக் கூடையில் போடுகிறேன்! - என்றல்லவா கூறியிருந்திருக்க வேண்டும்.

ஆனால் லால்பகதூர் செய்தது என்ன?

மான ரோஷத்திலே துளி அக்கறை உள்ளவர்களும், தம்மீது ஒரு புகார் மனு தொடுக்கப்பட்டு, அதனைத் தமது சகாவாகவும் தலைவராகவும் உள்ளவர், ஏறெடுத்தும் பார்க்க மறுத்தார் என்ற நிலை கிளம்புவதைத்தான் பெருமைக்கு உரியதாகக் கருதுவார்கள்.

டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், சாமான்யமான நிலையில் இல்லை. இந்தியப் பேரரசின் நிதி மந்திரி! நிதித்துறை நிபுணர்! சிக்கல்களை அறுத்து எறிந்திடும் சமர்த்தர்! விளக்கம் அளிப்பதில் வல்லவர்! வாதாடுவதில் புலி! - என்றெல்லாம் விருது பெற்றவர்.

அவர்மீது புகார் மனு! அதனைத் தள்ளுபடி செய்யவில்லை லால்பகதூர். ஏன்?

இந்த ஒரு கேள்வியை எண்ணி எண்ணி மனம் குன்றிக் கிடப்பர், தன்மானம் பெரிது என்று எண்ணிடும் இயல்பினர்

புகார் மனு ஒன்று வந்தது.
பரிசீலனை செய்து பார்த்தேன்.

அவ்வளவும் அபத்தம், வீண் பழி என்று கண்டறிந்தேன்.

ஆகவே புகார் மனுவைக் கிழித்தெறிந்து போட்டு விட்டேன்.

இவ்விதம் லால்பகதூர் கூறி இருந்திருந்தாலாவது, ஓரளவு தலைநிமிர்ந்து நடந்திடலாம்; நான் மாசற்றவன் என்பது கிடைத்த தீர்ப்பு என்று மார்தட்டிக் கூறிக்கொள்ளலாம்.

அந்த நிலையும் கிடைக்கவில்லை இந்த வித்தகருக்கு.

புகார் மனு ஒன்று வந்திருக்கிறது, அதனை அலட்சியப் படுத்தி விடுவதற்கில்லை. ஆகவே புகார் மனுவிலே கூறப் பட்டுள்ளவைகள் விசாரிக்கத் தக்கவைதானா என்பதனைக் கண்டறிந்து கூறும்படி, இந்திய உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதிக்கு அந்த மனுவை பரிசீலனைக்காக அனுப்பி வைக்கலாம் என்று முடிவு செய்திருக்கிறேன் என்று லால்பகதூர் அறிவித்தார்.

இந்த அறிவிப்பைக் கேட்டதும், தன்மான உணர்ச்சி ததும்பிடும் மனத்தினர் ஒரு முழக் கயிறு கொடுத்து விடுங்களேன், இப்படி என்னைக் கேவலப்படுத்துவதைவிட என்று கூறிக் குமுறி இருப்பார்கள்.

புகார் மனு குப்பைக் கூடைக்கு அனுப்பிவிடத் தக்கது அல்ல; தானே விசாரணை நடத்தித்

தள்ளிவிடத் தக்கது அல்ல. முதல் கட்டமாகவே, இந்தியாவின் தலைமை பரிசீலித்துப் பார்க்கத்தக்க விதமானது என்று லால்பகதூர் தீர்மானித்தார் என்றால், அதைவிட இழிவு வேறு என்ன வேண்டும்?

நாடே நகைத்தது! இவரோ துடிதுடித்தார்!

அப்படியானால் என்னிடம் தங்களுக்குப் பரிபூரண மான நம்பிக்கை இல்லை என்றல்லவா பொருள்படுகிறது என்று கேட்டார், டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்.

நியாயமான கேள்விதானே! லால்பகதூருக்கு, டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் நேர்மையிலும் நாணயத்திலும் முழு அளவு நம்பிக்கை இருக்குமானால், புகார் மனுவைப் பிரதம நீதிபதியிடம் அனுப்பப்போகிறேன் என்று அறிவிப்பாரா? இவருக்கு தெரியாதா, டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் எப்படிப் பட்டவர் என்பது - என்று நாட்டிலேயும் பலர் கேட்டனர்.

நயமாகப் பேசிப் பார்த்தார் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்! லால்பகதூர் அசைந்து கொடுக்கவில்லை.

பயம் காட்டிப் பார்த்தார்; அப்படியானால் நான் பதவியை ராஜிநாமாச் செய்கிறேன் என்றார்; லால்பகதூர் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

நீங்கள் விசாரணை நடத்துங்கள்! அல்லது மந்திரி சபையினரிலிருந்து ஒரு குழு அமைத்து, விசாரணை நடத்தச் சொல்லுங்கள் - என்று வாதாடிப் பார்த்தார் நிதி மந்திரி.

லால்பகதூர் அந்த வாதம், வேண்டுகோள், மிரட்டல் எதற்கும் அசையவில்லை. பிரதம நீதிபதியிடம்தான் புகார் மனுவை அனுப்பிவைப்பேன் என்று உறுதியாகக்

கூறிவிட்டார்.

பதவியை ராஜிநாமாச் செய்தார், டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்!

லால்பகதூர் அதனை ஏற்றுக்கொண்டு, உடனடியாகவே வேறு ஒருவரை நிதி மந்திரியாக்கிவிட்டார்!

இந்த இலட்சணத்திலே இருந்திருக்கிறது இவருக்கு லால்பகதூர் காட்டிய மதிப்பும் மரியாதையும். இவர் கிளம்புகிறார் ஊருக்கு உபதேசம் செய்ய.

குட்டுப்பட்டார்! குனிந்து கொடுத்தார்! இவர் கிளம்புகிறார் கழகத்தை இழித்தும் பழித்தும் பேச!

தன் நேர்மை, நாணயம், தகுதி, திறமை, வயது, அனுபவம் ஆகிய எதற்கும் லால்பகதூர் மதிப்பளிக்க மறுத்துவிட்டாரே என்பதை எண்ணி எண்ணி, வெட்கம் விலாவைக் குத்திடும் மற்றவர்களுக்கு; இவர் கிளம்புகிறார், கழகத்தைத் தாக்கிட!

காட்டுவதுதானே இந்த வீராவேசத்தை லால்பகதூரிடம்! கேட்பதுதானே அவரை, எனக்குப் பதவி பெரிது அல்ல! இதோ விலகிவிட்டேன். என்மீது எவனெவனோ செய்த புகார்பற்றி என் வார்த்தையை நம்ப மறுத்துவிட்டீர்கள். இருக்கட்டும். நான் மாசு மறுவற்றவன் என்பது நாட்டுக்கு விளக்கப்பட்டாக வேண்டும். ஆகவே விசாரணை நடத்துங்கள், உண்மை துலங்கட்டும், என் நேர்மையும் நாணயமும் உலகுக்கு மெய்ப்பிக்கப்பட வேண்டும் என்று கூறுவதுதானே! அதற்குக் கிளம்பக் காணோம் ரோஷத்துடன், இப்போது கழகத்தைத் தாக்கத் தோள் தட்டிக் கிளம்புகிறார்.

லால்பகதூர், இவர் முகத்தில் பூசிய கரியை நாடு அறியாதா! இவர் பதவி விலகியது இது இரண்டாவது முறை - இரு முறையும் புகார் கிளம்பிய பிறகே இவர்

பதவியை விட்டு விலகினார் என்பதனை நாடு அறியாதா!

மூக்கறுபட்டோம், நாலு பேர் கண்களிலே படாமல் மூலையில் உட்காருவோம் என்று "சராசரிகள்' எண்ணிக் கொள்ளட்டும், நாம் அப்படியா! பெரிய ஆசாமி அல்லவா என்ற நினைப்புடன் கிளம்பிவிட்டார்!

காமராஜர் இவரிடம் சொன்னாராம், "போய்ப் பார்த்து வாரும், நாடு எப்படி இருக்கிறது; ஓட்டு எப்படிக் கிடைக்கும்' என்பது பற்றி.

காமராஜர் போகாத இடமா, பார்க்காத நிலைமையா, போடாத கணக்கா! அவருக்குப் புரியாததா இவருக்குப் புரியப் போகிறது? காமராஜர்தான் என்னை அனுப்பி வைத்தார் என்று இவர்தான் சொல்லுகிறார்; காமராஜர் வாய் திறந்து இதுவரை சொல்லவில்லை, நான்தான், டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரை அனுப்பி வைத்திருக்கிறேன் என்று.

அவர் சொல்லுவாரா? இவர் முகத்தில் லால்பகதூர் கரியைப் பூசியபோது, வாய் திறந்து, "ஐயோ! பாவம்!' என்று ஒரு வார்த்தை அன்பாக, ஆதரவாகப் பேசவே இல்லையே அந்தக் காமராஜர்.

அவர் இப்போதா வாய் திறந்து, ஊர் நிலவரம் அறிந்து வந்து கூறிடும் என்று இவரிடம் சொல்லி யிருப்பார். இவர் சொல்லிக்கொள்கிறார் அப்படி!

லால்பகதூருக்குப் பிறகாகிலும், "புகார் மனு' அபத்தமானது, தள்ளுபடி செய்தாகிவிட்டது என்ற"நல்ல செய்தி' தரப்பட்டதா? இல்லையே!

இந்திரா காந்தியார் என்ன கூறினார்? டி. டி. கிருஷ்ணமாச் சாரியாரின் நேர்மையும், நாணயமும் நாடு அறியும். அவர்மீது யாரோ அபத்தமான புகார்

செய்தனர், அதனைத் தள்ளுபடி செய்துவிட்டேன் என்று கூறினாரா? இல்லை! டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டதால், புகார் மனுபற்றி மேற்கொண்டு கவனிக்கத் தேவை இல்லை என்று முடிவு செய்துள்ளேன் என்று மட்டுமே கூறினார்!

இது பெருமைக்குரிய நிலையா?

மேதையும் கூறிடான்!

ஆனால், இந்த மேதை ஏதோ தமது கீர்த்தி கொடி கட்டிப் பறப்பதாகக் கருதிக்கொண்டு கிளம்புகிறார் கழகத்தைத் தாக்கிட!

கழகம் ஆட்சி நடத்தினால், பெண்கள் நகை போட்டுக்கொண்டு ஊரிலே உலவ முடியாதாம்!

கேட்டனையா இந்தப் பேச்சை! என்ன அறிவுத் தெளிவப்பா இந்த அனுபவசாலிக்கு!

கழகம் ஆட்சி செய்தால், பெண்களை வழி மறித்துப் பொருளைக் களவாடுவார்களாம்! நகைகளைப் பறித்துக்கொள்வார்களாம்! அப்படிப்பட்ட காலித்தனம் நடக்குமாம்! அவ்வளவு அராஜகம் இருக்குமாம்!

இவ்வளவும் எந்த ஆராய்ச்சி மூலம் இவருக்கு கிடைத்திருக்கிறது? கூறக் காணோம்.

கழகத்தைப்பற்றி இத்தகைய இழிவான கருத்தைக் கொண்டிருப்பின், சென்ற தேர்தலின்போது 30 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் ஆதரவு காட்டி, ஓட்டு அளித்திருப்பார்களா? என்று கேட்டால் என்ன பதில் அளிப்பாரோ இந்த அறிவுக்கரசர்!

சட்டத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள

எதிர்க்கட்சியாக, தமிழகத்தில் கொலுவிருக்கும் ஒரு அரசியல் கட்சியைப் பற்றி இத்தனை பெரிய பதவி வகித்தவர் இப்படியா பொறுப்பற்ற முறையில் பேசுவது? இதுதானா காங்கிரஸ் காட்டும் ஜனநாயகம்?

கழகத்தின் கொள்கைத் திட்டம் குறை மிக்கது என்று வாதிடட்டும். . . அறிவுத் தெளிவுடன்.

அறிவு அற்றவர்கள் பேசுவதுபோல, கழகத்திற்குக் கொள்கை இல்லை, திட்டம் இல்லை என்றாகிலும் குளறட்டும். கழகம் ஆட்சிக்கு வந்தால், வழிப்பறி நடக்கும் - பெண்களின் நகை பறிபோகும் என்றா பேசுவது?

ஆணவத்துக்குக்கூட ஒரு வரம்பு வேண்டாமா?

ஆளுங்கட்சி, ஆகவே நாக்கு எந்த அளவும் நீளலாம் என்றா கருதுவது?

நாடாளும் கட்சியினர் நாங்கள், ஆகவே நாராச நடையில்தான் பேசுவோம் என்றா போக்கு இருப்பது?

சே! இத்தனை இழிநடையா!

பதவி பறிபோய்விடுமோ, பசையும் ருசியும் கெட்டுவிடுமோ என்ற கவலை எவ்வளவு தரக் குறைவான பேச்சையும் கொட்டச் செய்கிறதே! எதைச் சொல்லியாவது கழகத்தை இழிவுபடுத்த வேண்டும், எரிச்சல் மூட்ட வேண்டும் என்ற நினைப்பு நெளிந்திடக் காரணம் என்ன? கிலி! அச்சம்! பதவி பறிபோய்விடுமோ என்ற பதைப்பு!

பெண்களின் நகை பறிபோய்விடும் என்று பேசினால் மக்கள் பீதி அடைவார்கள், கழகத்தை ஆதரிக்க மறுப்பார்கள் என்றா எண்ணுகிறார் இவ்வளவு படித்தவர்? ஏமாளியும் அவ்விதம் எண்ணிடமாட்டானே!

காந்தியார் காலத்திலேயே இந்திப் பிரசார விடுதியில், விபசாரம் நடைபெற்றதாகப் புகார் வந்ததே! நாடு அறியாதா அதனை?

திங்கள் சில தானே ஓடியுள்ளன, ஒரு காங்கிரஸ் அமைச்சர்மீது ஒரு மாதிடம் வம்பு செய்ததாகப் புகார் கிளம்பி நாடு மறந்துவிட்டதா?

குடித்துப் புரளுவதும் மனைவியை அடித்துக் கொடுமை செய்வதுமாக இருந்தார் என்ற புகார் கிளம்பியது யார்மீது? ஒரு காங்கிரஸ் அமைச்சர்மீது அல்லவா?

குடித்துவிட்டுப் புரளும் காங்கிரஸ் தலைவர்கள் உள்ளனர் என்று மொரார்ஜி தேசாயே கூறினாரே சென்ற ஆண்டு! நாடு மறந்துவிட்டதா? என்ன நினைப்பிலே பேசுகிறார்? இருந்ததை இழந்துவிட்ட எரிச்சலிலா? இடிபட்ட வருத்தத்திலா? ஒரு முறைக்கு இரு முறை புகார் தாக்கியதாலா? இப்படியா, மற்ற ஜனநாயக நாடுகளிலே பேசுகிறார்கள்.

கழகம் ஆட்சிக்கு வந்தால், வழிப்பறி நடந்திடும் என்ற இழி மொழி பேசிடுகின்றாரே இந்த மூதறிஞர், இவருடைய காங்கிரஸ் கட்சி ஆட்சி நடத்தும் நாட்களில்தானே, டில்லியில் முதியவர், நீதிபதி வேலை பார்த்தவர், அவருடைய வீட்டிலேயே கொலை செய்யப்பட்டார்! காங்கிரஸ் ஆட்சி நடந்துகொண்டிருக்கும் நாட்களில்தானே கெய்ரோன் சுட்டுக் கொல்லப்பட்டார்! காங்கிரஸ் ஆட்சி நடந்துகொண்டிருக்கிறபோதுதானே கொள்ளைக்காரக் கூட்டம் மத்தியப் பிரதேசத்தில் கொட்ட மடித்தபடி இருக்கிறது!

கொள்ளைக்காரத் தலைவர்களிலே ஒருவன் காங்கிரஸ் தலைவர் ஒருவரை அழைத்து, காங்கிரசின் தேர்தல் நிதிக்குக் கணிசமான தொகை நன்கொடை தந்தான் என்று சில காலத்துக்கு முன்பு

செய்தி வெளி வந்ததே; நாடு மறந்துவிடுமா?

மக்கள் ஏதுமறியாதவர்கள், அவர்களிடம் எதனையும் கூறிடலாம், நம்பிவிடுவார்கள் என்ற நினைப்புடன் நாப்பறை நடாத்திடுகின்றனர்; மக்கள் தெளிவு பெற்று விட்டுள்ளனர் என்ற உண்மை அறியாது.

கழகம் ஆட்சிக்கு வந்தால், வழிப்பறி நடக்கும் என்று இழிமொழி பேசுகிறார் இந்தப் பெரியவர்; ஆனால் தம்பி! காங்கிரஸ் ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறதே இப்போது பஞ்சமாபாதகம் எந்த வகையிலே இருக்கிறது என்பதுபற்றி ஒரு சிறு கணக்குக் கொடுக்கவா? இதோ!!

தம்பி! மற்றக் கட்சிகள் ஆட்சிக்கு வந்தால் பஞ்சமாபாதகம் தலைவிரித்தாடும் என்று பேசுகிறாரே மகானுபாவர். இவருடைய காங்கிரஸ் ஆட்சி நடத்திக்கொண்டிருக்கும் இந்த நாட்களில், ஒரு ஆண்டில் நடைபெற்றதாகக் கணக்கு எடுக்கப்பட்டிருக்கும் குற்றங்களின் தொகை எவ்வளவு தெரியுமா? 6,74,466!

ஆறு இலட்சத்துக்கு மேற்பட்ட கொடிய குற்றங்கள் தலைவிரித்தாடியிருக்கும் நிலை இந்த ஆட்சியில். இதிலே இருந்தவர் கதைக்கிறார் கழகம் ஆட்சிக்கு வந்தால் குற்றம் தலைவிரித்தாடும் என்று. அவ்வளவு நாகரிகமாகக்கூடப் பேசத் தெரியாததால், குளறி இருக்கிறார், நகை போட்டுக்கொண்டு பெண்கள் ஊரிலே உலாவ முடியுமா என்று.

எவ்வளவு அக்கறை நகைபற்றி!!

இவ்விதம் பேசியவர் சொந்தம் கொண்டாடும் கட்சி ஆட்சி நடத்திடுகிறது, குற்றங்களோ ஆறு இலட்சத்துக்கும் மேல்! விவரம் வேண்டுமா! தம்பி!

தருகிறேன்.

கொலை	11,586
பெண்ணைக் கடத்திச் சென்ற குற்றம்	7,119
கொள்ளை	4,890
வழிப்பறி	7,551
கன்னம் வைத்துக் களவாடியது	1,34,324
ஆடு, மாடு களவு	23,122
களவு	2,29,331
கலகம்	29,096
நம்பிக்கைத் துரோகக் குற்றம்	18,092
மோசடி	9,738
கள்ள நாணயம் தயாரித்தல்	423
பலதரப்பட்ட குற்றங்கள்	1,99,194

தம்பி! ஒரு ஆண்டுக் கணக்கு! இந்த இலட்சணத்திலே இவர்கள் தர்பார் நடத்தும் நாட்டில் இருக்கிறது. இவர் வாயோ நீளுகிறது; வார்த்தையோ நாராசமாகிறது.

தம்பி! நான் தந்துள்ள கணக்கு 1962-ம் ஆண்டுக்கானது. அந்த ஆண்டிலே என்ன காரணத்தாலோ குற்றங்களும் கொடுமைகளும் அதிக அளவிலே இருந்தனபோலும். காங்கிரசின் மாபெருந் தலைவர்கள் உபதேசம் செய்யச் செய்ய, அந்தக் குற்றங்கள் குறைந்துகொண்டு வந்துள்ளனபோலும் என்று எண்ணிக்கொண்டுவிடாதே! வளர்ந்தபடி இருக்கிறது என்று சர்க்கார் அறிக்கையே தெரிவித்திருக்கிறது.

1965-ம் ஆண்டில், மூன்றே மாதங்களில்,

குற்றங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்ற கணக்கைக்கூட சர்க்கார் தந்திருக்கிறது.

மூன்றே மாதங்களிலே, தம்பி! காங்கிரசின் புனிதமான ஆட்சியில் ஒரு இலட்சத்து எண்பத்து மூன்றாயிரம் குற்றங்கள்! வகையும் வேண்டுமா? பார்த்துக்கொள்ளேன்.

கொலை - 3,162
பெண் கடத்தல் - 1,873
கொள்ளை - 1,133
வழிப்பறி - 1,910

இது 1965-ம் ஆண்டில், மூன்று மாதத்துக் கணக்கு. 1961-ம் ஆண்டு, மூன்று மாதத்துக் கணக்குடன் இதனை ஒப்பிட்டுப் பார்ப்போமா? இவர்கள் ஆட்சி காரணமாகப் புனிதத் தன்மையும் ஒழுக்கமும் எந்த அளவு வளர்ந்திருக்கிறது(!) என்பது விளங்கிவிடும்.

	1961 1965	
	(3 மாதம்) (3 ம	◌ாதம்)
கொலை	2,792	3,162
பெண் கடத்தல்	1,674	1,873
கொள்ளை	1,053	1,133
வழிப்பறி	1,607	1,910

இப்படி வளர்ந்திருக்கிறது கொலையும் கொள்ளையும், பெண்களைக் கடத்திச் செல்லும் கொடுமையும், காங்கிரஸ் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் நாட்களில். இதற்காக வெட்கப்படாமல், வாயில் வந்ததைப் பேசுகிறார், பெரிய இடத்தில் இருந்தவர்.

காங்கிரஸ் ஆட்சியிலே கொலையும் கொள்ளையும் கற்பழித்தலும், வழிப்பறியும் போன்ற கொடுமைகள் வளர்ந்து கொண்டே போகின்றன;

நாம் "பண்பு' காரணமாக இதனை எடுத்துக் காட்டிடவில்லை; இதற்காக இந்த ஆட்சியை இடித்துரைக்கவில்லை. ஆனால், பாரேன் அந்த இடத்துப் பேச்சு எவ்வளவு தரம் கெட்டதாக இருக்கிறது என்பதனை.

கொலையும், கொள்ளையும், வழிப்பறியும், களவும், பெண்ணைக் கடத்திச் செல்வதும், கன்னம் வைப்பதும், மோசடியும், பிற பாதகங்களும், இவ்வளவு நடந்துள்ளன. இவைகளையா காட்டுகிறோம், காங்கிரசாட்சியைக் குறை கூற! நமக்கு இல்லை அத்தகைய இழிதன்மையான போக்கு!

நாம் ஆட்சிக்கு வந்துவிடுவோம் என்ற கிலி பிடித்ததும் பார் தம்பி! எத்தனை இழிமொழியைப் பொழியத் தோன்றுகிறது, இருப்பது பறிக்கப்பட்டுவிடும் என்ற எரிச்சல் காரணமாக.

ஆனால், தம்பி! அவர்கள் எத்தனை இழிமொழி உமிழ்ந்திடினும், நாம் நமது தரம் குறையாமல் நமது சொல்லையும் செயலையும் அமைத்துக்கொள்ள வேண்டும்.

எருமைகள் சேற்றில் புரளும் - அதனைக் கண்டும் ஆறறிவினர் அருவியில்தான் நீராடுகின்றனர்.

கழுகு அழுகிய பிணத்தைக் கொத்தித் தின்கிறது! கிளி, கொவ்வைக் கனியைத்தான் விரும்புகிறது!

புளித்த காடியைப் பருகுவான் குடிகாரன்; செவ்விளநீர் தேடுகிறான் பண்பாளன்.

எவர் எத்தகைய இழிமொழி பேசிடினும் தம்பி! நீ கானம் பாடிடும் வானம்பாடியாகவே இருந்திடல் வேண்டும்.

பண்பு மறந்து, கண்ணியமற்று, காழ்ப்புக்

காரணமாக ஆளவந்தார்கள் என்னென்ன இழிமொழி பேசுகின்றனர் என்பதை எண்ணிடும்போது தம்பி! நாம் மேற்கொண்டுள்ள காரியத்திலே வெற்றி கிடைத்திட மேலும் உறுதியும் ஊக்கமும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

யாராரோ வீசிடும் இழிமொழிகளை பழிச்சொற்களை, எல்லாம் கேட்டுக்கொண்டுதான் ஆகவேண்டுமா அண்ணா! என்று கேட்பாயேல், தம்பி! தயக்கமின்றிக் கூறுவேன், கேட்டுக்கொள்ளத்தான் வேண்டும். நாட்டுக்கு நல்லாட்சி அமைத்திட நாம் இந்த "விலை' கொடுத்தாக வேண்டும்.

தம்பி! பாம்பும் மயங்கிடும் என்கிறார்கள், புல்லாங்குழல் இசை கேட்டிடின்! அந்தக் குழல் எப்படித் தயாரிக்கிறார்களாம் தெரியுமா? சூட்டுக்கோலால் துளை போட்டு! தீயால் சுடுகிறார்கள்; பிறகு தீஞ்சுவை இசை தரும் குழலாகிறது! சுடு சொல் நம்மீது வீசுகிறார்கள், வீசட்டும்!

அன்புள்ள
அண்ணாதுரை
17-7-66

கருப்பு மல்லி

உள்ளத்தில் தோன்றுவதை ஒளிக்காமல் பேசுபவர் அன்பழகன்!
மலையைக் கெல்லி எலி பிடித்த கதை!
மயக்க மருந்தில் பழையது, சுயராஜ்யம் புதியது, ஜனநாயக சோஷியலிசம்!
சைவ ஒட்டலிலே கோழிப் பிரியாணி தயாராம்!
காங்கிரஸ் சோஷியலிசத்தில் முதலாளிகளும் உண்டாம் !
அதிகார போதை தெளியக் காத்திருக்கிறார்கள் மக்கள்!

தம்பி!

நள்ளிரவு ஆகிவிட்டதே, இப்போதாகிலும் எழுதப் போகலாமா என்று எண்ணிக்கொண்டேன். ஆனால் பேச்சின் சுவை என்னை மேலும் பேசவைத்துவிட்டது; மணி இப்போது இரண்டு; இதுவரை என்னோடு பேசிக்கொண்டிருந்த அன்பழகன் இப்போதுதான் வீடு சென்றார், நான் எழுத உட்கார்ந்தேன். வேலூர் மாநாட்டுச் சிறப்பு குறித்து அடுத்து நடைபெற இருக்கும் சிவகெங்கை மாநாடு, கள்ளக்குறிச்சி மாநாடு, பொள்ளாச்சி மாநாடு ஆகியவைகள் குறித்தும் பேசத் தொடங்கிக் கழக வரலாறு, வளர்ச்சி, எதிர்காலம், அரசியலில் உருவாகிக்கொண்டு வரும் சூழ்நிலைகள் நிலைகள் ஆகிய பல பற்றிப் பேசினோம். உள்ளத்திலே தோன்றுவதை ஒளிவு மறைவில்லாமல் பேசுபவர்

அன்பழகன். அவரிடம் கழகப் பிரச்சினைகள் பற்றிப் பேசுவதிலே எனக்குத் தனியான விருப்பம் உண்டு; ஆகவே நேரம் ஓடுவதே தெரியாமல் பேசிக்கொண்டிருந்துவிட்டேன்; பேசப் பொருள் நிரம்ப இருக்கிறது, நேரம்தான் இல்லை. அவரிடம் பேசுவது மட்டுமல்ல, தம்பி! நாட்டு மக்களிடம் நாம் பேசுவதற்கு உள்ள பிரச்சினைகள் நிரம்ப உள்ளன; போதுமான நேரம் இல்லை. காலம் கடுவேகத்துடன் ஓடிக்கொண்டிருக்கிறது; செய்து முடிக்கவேண்டிய காரியங்களோ அளவிலும் வகையிலும் அதிகமாகிக்கொண்டே உள்ளன. என்ன செய்வது! அமைச்சர்களைப்போலவோ காங்கிரசின் பெருந்தலைவர்களைப் போலவோ,

ஆமாம், அப்படித்தான்!
அதனால் என்ன?
ஆகட்டும் பார்க்கலாம்!!

என்று பேசிவிட முடிகிறதா? ஒவ்வொரு பிரச்சினைக்கும் விளக்கம் - கேட்போர் ஒப்புக்கொள்ளத்தக்க விதமான விளக்கம் - தரவேண்டி இருக்கிறது. பிரச்சினைகளோ சிக்கல் மிக்கனவாகி விட்டுள்ளன; பொது மக்களுக்கோ அவைகளை ஆராய்ந்து கொண்டிருக்கப் போதுமான நேரமோ மன அமைதியோ கிடைப்பதில்லை. வாழ்க்கையின் சுமை அவ்வளவு அழுத்துகிறது; அல்லல்கள் அவர்களுக்கு அடுக்கடுக்காக.

ஆளுங்கட்சியினரோ பல பிரச்சினைகள் சிக்கலாகி விட்டிருக்கின்றன என்று தெரிந்தும், துளிகூடத் திகைப்புக் கொள்ளாமல், எல்லாம் தன்னாலே சரியாகிவிடும் என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

பிரச்சினைகள் உள்ளன என்று ஒப்புக்கொள்வதற்கேகூட அவர்களுக்கு மனம் வருவதில்லை; மறைக்கப்பட முடியாத விதமாகப்

பிரச்சினைகள் அழுத்த ஆரம்பித்த பிறகுதான், பிரச்சினை இருப்பதாகவே ஒப்புக்கொள்கிறார்கள். ஒப்புக் கொண்ட பிறகாகிலும், தக்க பரிகாரம் தேட முற்படுகின்றனரா என்றால், இல்லை! அப்படித்தான் இருக்கும் என்று கூறிக் கொண்டே காலத்தை ஓட்டப் பார்க்கிறார்கள்; பிறகு என்ன பரிகாரம் தேடலாம் என்பதுபற்றி ஆராய ஒரு கமிட்டி அமைக்கிறார்கள்; பிறகு கமிட்டியின் கருத்துபற்றி விவாதிக் கிறார்கள்; பிறகு பரிகாரத்துக்கான முறைபற்றி அறிவிப்பு அளிக்கிறார்கள்! செயல்படத் தொடங்குவதோ மிகுந்த காலதாமதத்துக்குப் பிறகு; செயல் மூலம் கிடைத்திடும் பலனோ மலையைக் கெல்லி எலி பிடித்த கதை கூறுவார்களே அதுபோல! ஏன் இந்த அலட்சியப் போக்கு ஏற்படுகிறது என்றால்,

அல்லலைத் தாங்கிப் பொறுத்துக்கொண்ட மக்கள், மேலும் சில காலம் அல்லலைத் தாங்கிக்கொள்வார்கள்.

தாங்க முடியாத அளவுக்கு அல்லல் வளர்ந்தாலும் மக்கள் சீறி எழமாட்டார்கள்.

சீறி எழுந்திடினும் அவர்களை அடக்கி ஒடுக்கிட நம்மிடம் அடக்குமுறை இருக்கிறது.

அடக்குமுறை ஆட்சியை மாற்றிடத்தக்க ஆற்றல் நாட்டிலே எழவில்லை

என்ற இந்த எண்ணம் ஆட்சியினருக்குத் தடித்துவிட்டிருக்கிறது. ஆகவே அவர்கள் மக்களைப்பற்றிய கவலையற்று இருக்கின்றனர்.

ஜனநாயகத்திலே இந்த நிலை வளர்ந்துவிடுவது பேராபத்தை மூட்டிவிடும்.

வளைக்க முடியாதது பிறகோர் நாள் முறிக்கப்பட்டுப் போகும் என்பதுபோல, ஆட்சியைத் திருத்த இயலாமல் போய்விடுமானால், சட்டம்,

சமாதானம், ஒழுங்கு, அமைதி ஆகியவைகள் அழியினும் சரி, பரிகாரம் தேடித் தீரவேண்டும் என்ற ஆத்திர உணர்ச்சி மேலோங்கும்.

அந்த நிலை சமூகத்தின் கட்டுக்கோப்பையே கூடக் கெடுத்துவிடும்.

மக்களை வாழவைப்பதிலே வெற்றிபெறத் தவறிவிடும் துரைத்தனத்தை மாற்றி அமைக்கும் அதிகாரம் பெற்றுள்ள பொது மக்கள், அறிவாற்றலுடன் பணியாற்றி ஆட்சியை மாற்றிட முனையவேண்டுமேயன்றி, நம்மால் ஆகுமா என்று நெடுங்காலம் பெருமூச்செறிந்து கொண்டிருந்துவிட்டு, பிறகோர் நாள் எரிமலையாகி விடுகிற போக்கு கூடாது.

இவ்விதமான போக்கு எழும் என்று, அந்தப் போக்கு வெடித்துக் கிளம்புகிற வரையில், எந்தக் கொடுங்கோலரும் எதிர்பார்ப்பதில்லை; யாரேனும் துணிந்து எச்சரித்தாலும் ஏளனம் செய்வர்; நம்பிட மாட்டார்கள்.

ஊமைகளா இத்தனை முழக்கம் எழுப்புகிறார்கள்!

அடங்கிக் கிடந்தவர்களா இத்தனை ஆர்ப்பரிப்புச் செய்கின்றனர்!

சவுக்கடிக்கு நடுங்கிக்கொண்டிருந்தவர்களா இன்று துப்பாக்கிக்கு மார் காட்டுகின்றனர்!

அடிபணிந்து கிடந்தவர்களா இன்று முடிபறிப்பேன் என்று கூவுகின்றனர்!

என்று வியந்துதான் கொடுங்கோலர் கேட்டனர், ஒவ்வொரு புரட்சி வெடித்தபோதும்; இப்படித்தான் நடக்கும் என்று முன்பே தெரியும் என்று எந்தக் கொடுங்கோலனும் கூறினதில்லை.

முடியாட்சிக் காலத்திலே முரட்டுப் போக்கு காரணமாக இருந்து வந்தது குருட்டுப் போக்கு.

குடியாட்சிக் காலத்திலே முரட்டுப் போக்கு காட்ட இயலுவதில்லை; முறை மாறியிருக்கிறது. நெறித்த புருவம் அல்ல! புன்னகை! பாகுமொழி! இவைகளைக் கருவியாக்கிக் கொண்டு மக்களை மயக்கிக் கட்டுப்படுத்துவதிலே முனைகின்றனர்.

முரட்டுப் போக்குடன் முடி தரித்தோன் நடந்து கொண்டால், பல கொடுமைகளைத் தாங்கித் தவித்த மக்களிடமிருந்து ஓர் நாள், எதற்கும் அஞ்சாத ஒரு வீரன் எழுவான்! கொடுங்கோலன் வீழ்வான், இடையே இரத்தம்! தீ! பலி! நிறைய!

மக்களைத் தமது புன்னகையாலும் பாகுமொழியாலும் மயக்கிடும் போக்கிலே குடியாட்சிக் கோமான்கள் நடந்திடும் போது, எதிர்ப்பு உணர்ச்சி மங்கிடுவது இயல்பு. இந்த இயல்பு காரணமாகவே, அல்லல் பல தொடர்ந்து கிளம்பித் தாக்கியும், மக்கள், இந்தக் கொடுமைகளை மூட்டிவிட்ட ஆட்சியினருக்கு எதிராகப் பொங்கி எழ முடியாதவர்களாகின்றனர்.

இதனைத் தமக்குச் சாதகமாக்கிக்கொண்டு, ஆளவந்தார்கள் தமது பதவிகளைக் காப்பாற்றிக்கொண்டு வருகின்றனர்.

ஆனால் தம்பி! மெள்ள மெள்ள அந்த மயக்கம் நீங்கிக்கொண்டு வருகிறது; தெளிவும் துணிவும் மிகுதியாகிக்கொண்டு வருகிறது - இனி நீண்ட நாட்களுக்கு மக்களை மயக்கிக்கொண்டிருக்க முடியாது பழைய பேச்சினால் என்று கண்டுகொண்ட காங்கிரஸ் கட்சியினர் இப்போது புதிய மயக்கம் தரும் பானத்தைத் தயாரித்துத் தருகின்றனர்; இந்த மயக்க மருந்து இன்னும் சில காலம் வேலை செய்யும் என்று நம்பிக்கொண்டும் இருக்கின்றனர். அந்த மயக்க மருந்துதான், தம்பி, இப்போது இவர்கள் வெகு

வேகமாகப் பேசிக்கொண்டிருக்கும் ஜனநாயக சோஷியலிசம் என்பது.

பழைய மயக்க மருந்து வேலை செய்வதில்லை முன்பு போல!

"சுயராஜ்யம்’ என்ற சொல் காதில் பாய்ந்ததும் காதில் தேன் வந்து பாய்ந்திடும் நிலை முன்பு!

சுயராஜ்யம் வருகிறது! என்று அறிவித்ததும் பொது மக்கள் கண் முன்பு, அவர்கள் மனத்திலே இருந்துவந்த ஆசைகள் அவ்வளவும் வடிவம்கொண்டு நின்றன!

சுயராஜ்யம் வருகிறது, இனி வறுமை இல்லை, வாட்டம் இல்லை, வரிக் கொடுமை இல்லை; உண்ண உணவு, உடுக்க உடை, குடி இருக்க வீடு, செய்யத் தொழில், தொழிலில் நீதி, நிம்மதி எல்லாம் கிடைக்கும் என்று மக்கள் நம்பினர்.

அத்தகைய ஒரு இன்ப வாழ்க்கையைப் பெற்றுத் தந்திடுவோர் காட்டிடும் பாதை நடந்திடுவோம், கேட்டிடுவதைத் தட்டாமல் தயங்காமல் கொடுத்திடுவோம் என்று சூளுரைத்தனர், செயல்பட்டனர்.

சுயராஜ்யம் வந்தது! கொட்டு முழக்குடன் கோலாகல விழாவுடன்! கொடி பறந்தது, பட்டொளி வீசி! கூனன் நிமிருவான்! குருடன் பார்வை பெறுவான்! என்றனர் குதூகலத்துடன். ஆடுவோமே! பள்ளுப் பாடுவோமே! ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம் என்பதாகக் கவிதைகள் இசைக்கப்பட்டன! ஒளிமயமான எதிர்காலம் தெரிந்தது, மனக் கண் முன்பு. ஆனால் நாட்கள் உருண்டோடின, ஆண்டுகள் புரண்டோடின, ஆசைக் கனவுகள் நிறைவேறவில்லை. அல்லல் அகலவில்லை, தொல்லை தொடர்ந்தது; சுயராஜ்யம்

என்றால் சுகராஜ்யம் என்று எண்ணிக்கொண்டிருந்தோமே, ஒரு சுகத்தையும் காணவில்லையே, கண்ணீர் விட்டா வளர்த்தோம்-செந்நீர் விட்டல்லவா வளர்த்தோம் சுதந்திரத்தை. நமக்கு ஒரு பயனும் கிடைக்கக் காணோமே என்று ஏக்கப்பட்டனர் மக்கள்.

ஆனால் இதுதானா ஐயா! சுயராஜ்யம்! என்று கேட்கக் கூச்சம்!! அச்சம்!!

ஒரு நூற்றாண்டாக உம்மைக் கப்பிக்கொண்டிருந்த அவதிகள், சுயராஜ்யம் கிடைத்த மறுநாளேவா ஓடிவிடும்! காலம் வேண்டும் நண்பர்களே! காலம் வேண்டும்! வேலையைத் தொடங்கி விட்டோம், விரைவிலே பலனைக் காணப்போகிறீர்கள். அதற்குள் அவசரப்படாதீர்கள் என்று அன்று தலைவர்கள் சொல்லக் கேட்ட மக்கள், "ஆமாம்! அவசரப்படக் கூடாது!!" என்று கூறினர்; பொறுத்துக்கொண்டனர்; எதிர்பார்த்தது கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன்.

ஆனால் ஆண்டுகள் பதினெட்டுக்கு மேலாகிவிட்ட பிறகும் எதிர்பார்த்த இன்ப வாழ்வு கிடைக்காமல் போனதையும், அதேபோது ஒரு சில செல்வந்தர்களுக்கும், ஆளுங்கட்சியின் ஆலவட்டங்களுக்கும் இன்ப வாழ்வு கிடைத்திருப்பதையும் கண்ட மக்கள், வெகுண்டு எழுந்து, இதற்குப் பெயர்தான் சுயராஜ்யமா! என்று முழக்கமிடலாயினர்! சுயராஜ்யம் என்ற சொல்லால் மயக்கினீர்கள் - கண்டுகொண்டோம்; மயக்கத்தின் பிடியிலிருந்து இதோ விடுபட்டோம்; காட்டு கணக்கினை! என்று மக்கள் கேட்டிடலாயினர். ஓ! ஓ! பழைய மயக்க மருந்து போதுமானதாக இல்லை; புதிதாக ஒன்று தந்தாக வேண்டும் என்பதனை அறிந்த தந்திரத் தலைவர்கள், ஜனநாயக சோஷியலிசம் என்ற சுவையினையே மயக்க மருந்து

ஆக்கித் தர முயன்றுகொண்டிருக்கின்றனர்.

நாளைக்கு ஒரு சூரணம் தருகிறேன், அதனைத் தேனிலே குழைத்து மூன்றே வேளை சாப்பிடு, நோய் கட்டாயம் பறந்து போகும் - என்று மருத்துவர் சொல்லும்போது, இவ்வளவு நாள் இவர் கொடுத்த மருந்து துளியும் பயன் தரவில்லையே; ஒவ்வொரு வகையான மருந்து தருகிறபோதும் இதுபோலத் தானே இவர் கூறினார் என்ற எண்ணம் எளிதிலே ஏற்பட்டு விடுவதில்லை. இந்த மருந்தாவது வேலை செய்கிறதா பார்க்கலாம்! மருத்துவர்தான் இவ்வளவு நம்பிக்கையுடன் சொல்லுகிறாரே, இதைச் சாப்பிட்டுப் பார்ப்போம் என்றுதான் எண்ணம் கொள்ளச் செய்கிறது- மனித இயல்பு! அதிலும் நம்முடைய நாட்டு மக்களின் இயல்புபற்றிக் கூறிடவா வேண்டும்!!

இதிலாவது பலன் கிடைக்கிறதா பார்க்கலாம், இவரா லாவது நலன் கிடைக்கிறதா பார்க்கலாம் என்று எண்ணிக் கிடந்திடும் போக்கு மிகுதியாக. அந்த இயல்பைப் புரிந்து கொண்டு அதற்குத் தகுந்தபடி தமது சொல்லை மாற்றிக் கொண்டு வருவதிலே வல்லவர்கள், நம்மை ஆண்டு கொண்டுள்ளவர்கள்.

நாம் தம்பி! மக்களின் அந்த இயல்பையும் மாற்றவேண்டி இருக்கிறது; ஆளவந்தார்களின் போக்கையும் திருத்தவேண்டி இருக்கிறது.

துவக்கத்திலே இது குறித்து அக்கறை காட்டாமலிருந்து வந்த மக்கள் இப்போது நாம் எடுத்துச் சொல்வதைக் கேட்டுத் தெளிவு தேடிக்கொள்வதிலும், அதன் காரணமாகத் தமது இயல்பை மாற்றிக்கொள்வதிலும் முனைந்து நிற்கின்றனர். இதனை நாம் பொதுக் கூட்டங்களில் காணுகின்றோம்.

மாநாடுகளிலே இதனை மிக விளக்கமாகக் காணுகின்றோம். வேலூர் மாநாட்டிலே, மக்கள் காட்டிய இந்த அக்கறை குறித்து நான் அன்பழகனுடன் பேசிக்கொண்டிருந்தபோது அங்கு அவர் தந்த விளக்க உரைக்காகப் பாராட்டினேன். அன்று அவருடைய பேச்சு எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

ஜனநாயக சோஷியலிசம் பேசுகிறது இந்தக் காங்கிரஸ் ஆட்சி; ஆனால் அதனுடைய செய-லே ஜனநாயகமும் இல்லை, சோஷியலிசமும் காணோம் என்பதற்கான விளக்கத்தை அவர் மிகத் தெளிவாகத் தந்திருந்தார்.

எதிர்க்கட்சிகள் வளருவது கண்டாலே எறிந்து விழும் போக்கும், ஆங்கு உள்ளவர்களை வலைவீசிப் பிடிக்கும் போக்கும் ஜனநாயகமாகுமா?

நாட்டை ஆளும் தகுதியும் திறமையும் தமக்கன்றி பிறர் எவருக்கும் இல்லை என்று பேசிடும் அகம்பாவம் ஜனநாயகமாகுமா?

மன்னன் மகேசன் பிரதிநிதி! அரசன் ஆண்டவனுக்குத்தான் பதில் கூறவேண்டியவன்; மக்களுக்கு அல்ல! மன்னன் செய்திடும் காரியம் கொடுமை உள்ளதாயினும் எதிர்த்திடலாகாது; முறையிட்டுக்கொள்ளலாம்; கடவுளை வேண்டிக்கொள்ளலாம் - என்ற தத்துவத்தின்மீது பலப்பல நூற்றாண்டுகளாகக் கட்டப்பட்டு, கெட்டிப்படுத்தப்பட்டிருந்த முடியாட்சி முறையை உடைத்தெறியுமுன்பு பல ஆயிரவரின் மண்டைகள் பிளந்தெறியப் பட்டன! எவ்வளவோ இரத்தத்தைக் குடித்துக் கொக்கரித்து, பிறகே குடியாட்சி முறை மலர்ந்தது.

முடியாட்சியிலே நெளிந்துகொண்டிருந்த கருத்து மெள்ள மெள்ளக் குடியாட்சியிலும் தலைகாட்டுகிறது

என்றுதானே கூறவேண்டும். இன்றைய ஆட்சியாளர்கள், தாங்கள் மட்டுமே ஆளப்பிறந்தவர்கள் என்று ஆணவம் கக்கும்போது! அந்தப் போக்கு ஜனநாயகமாகுமா?

அத்தகைய போக்கினை மேற்கொண்டுவிட்டவர்கள், ஜனநாயகப் பாதுகாவலர்கள் என்று வேறு தங்களைக் கூறிக் கொள்கின்றனர்.

மக்களின் ஆதரவினைப் பெற்றிடும் வாய்ப்புப் பெற்ற எவரும் நாடாளும் தகுதி பெறுகின்றனர்; மக்களின் நல் வாழ்வுக்கான முறையிலே ஆட்சி நடத்திடும் எவரும், மீண்டும் மக்களின் ஆதரவைப் பெற்றிடும் தகுதியைத் தேடிக்கொள்கின்றனர்.

காங்கிரஸ் ஆட்சியாளர்களோ, நாட்டிலே வேறு யாருக்குமே நாடாளும் தகுதி இல்லை என்ற அகம்பாவம் பேசி, நாட்டை ஆண்டுகொண்டு வருகின்றனர் தொடர்ந்து.

உள்ளபடி, எவர் ஆட்சி நடத்தினாலும் அவர்களின் திறமையால் கிடைத்திடும் பலனைக் காட்டிலும் மிகுதியான பலன் கிடைத்திடத்தக்க முறையிலே ஆட்சி நடத்திட மற்றொரு கட்சியினர் வாய்ப்புப் பெற்று, பழைய ஆட்சியுடன் புதிய ஆட்சியை ஒப்பிட்டுப் பார்க்கும் வாய்ப்பு மக்களுக்குக் கிடைத்தால் மட்டுமே, நாடாளும் தகுதி உள்ளவர்கள் எவர் என்பது பற்றிய உண்மையான மதிப்பீடு கிடைத்திட முடியும்.

ஓட்டப் பந்தயத்தில் ஒன்பது பேர் கலந்து கொண்டால்தான், யார் அதிக வேகமாக ஓடுகிறார்கள் என்று கண்டறிந்து பரிசளிக்க முடியும். பந்தய மைதானத்திலே நுழையும் தகுதி எனக்கு மட்டுமே உண்டு என்று கூறிக் கொண்டு ஒரே ஆசாமி திடலில் ஓடுகிறான் என்றால், கேலிக்கூத்தாக

அல்லவா கருதிடுவர்?

ஆனால் அத்தகைய முறையைத்தான் காங்கிரஸ் ஆட்சியினர், ஜனநாயகம் என்று கொண்டுள்ளனர். அது ஜனநாயகம் ஆகாது. மக்கள் இதனை அறிந்துகொண்டதால்தான், எதிர்க்கட்சிகளின் பக்கம் வந்துகொண்டிருக்கிறார்கள். ஆட்சி மாற வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

ஆகவே மக்களை மறுபடியும் ஒரு மயக்கத்தில் ஆழ்த்தித் தமது பக்கம் இழுத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடனும், நம்பிக்கையுடனும், கேட்பதற்கு இனிப்பாக இருக்கும் "சோஷியலிசம்'பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

அதிலே அவர்கள் எவ்வளவு நாணயத்தோடு உள்ளனர் என்பதும், அதனைச் செயல்படுத்த எந்த முறைகளைக் கடைப் பிடிக்கிறார்கள் என்பதும் ஒருபுறம் இருக்கட்டும்.

அந்த சோஷியலிசத்தை நிறைவேற்றிக் கொடுக்கும் தகுதி, தமக்கன்றி மற்ற எந்தக் கட்சிக்கும் இல்லை என்று கூறும் உரிமை இவர்களுக்கு யார் அளித்தது? என்ன காரணம் காட்டி இவர்கள் அந்த உரிமை தமக்கே இருப்பதாகக் கூறுகிறார்கள்.

நம்முடைய பொதுக்கூட்டங்களிலும் மாநாடுகளிலும் கலந்து கொள்கின்ற மக்கள் யார்? மேடையிலே அமர்ந்திருக்கிற கழக முன்னணியினர் எவரெவர்? மாவட்டச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள் யார்? சட்ட மன்றம், பாராளுமன்றம் ஆகிய இடங்களில் உறுப்பினராகியுள்ள கழகத் தோழர்கள் எப்படிப் பட்டவர்? மிட்டா மிராசுகளா? எட்டயபுரம், போடி ஜெமீன் வழிவந்தவர்களா? பெரும் பண்ணைக்குச் சொந்தக்காரர்களா? நம்மிடம் தீராத பகை கொண்டவனும் அவ்விதம் கூறிட மாட்டானே! காமராஜரே ஒரு முறை கழகத்தில் உள்ளவர்களைப்

பிச்சைக்காரர்கள்! - என்றே கேலி பேசியிருக்கிறாரே.

இவர்களைக் கொண்டதும் இப்படிப்பட்டவர்களால் நடத்தப்பட்டு வருவதுமான திராவிட முன்னேற்றக் கழகம் சோஷியலிசத்தைச் செயல்படுத்தாதா?

சோஷியலிசம் வேண்டும்! ஒப்புக்கொள்கிறோம், வரவேற்கிறோம்! ஆனால் அதனைச் செயல்படுத்தும் திறமையும், உரிமையும், கழகம் போன்ற மற்றக் கட்சிகளுக்கு இல்லை, எமக்குத்தான் உண்டு என்று கூறிக்கொள்ளக் காங்கிரசுக்கு என்ன யோக்யதை இருக்கிறது?

சோஷியலிசத்தைச் செயல்படுத்திக் கொடுத்திடத் தக்கவர்களாலா காங்கிரஸ் நடத்தப்பட்டு வருகிறது? ஊரூருக்கும் அந்தக் கட்சியிலே உள்ள மூலவர்கள் எப்படிப்பட்ட பெரிய புள்ளிகள் என்பது மக்களுக்குத் தெரியாதா? அப்படிப்பட்ட பெரிய புள்ளிகளின் ஆதிக்கம் காரணமாகத்தான், ஏழைகளின் தொகை பெருகியிருக்கிறது, அவர்களின் அல்லல் - வளர்ந்து விட்டிருக்கிறது என்பதனை மக்கள் அறியமாட்டார்களா? அதே பேர்வழிகளின் பிடியிலே உள்ள காங்கிரசுக் கட்சியினால் எப்படி சோஷியலிசத்தைச் செயலாக்கிட முடியும்? - என்பது பற்றியெல்லாம் மக்கள் எண்ணிப் பார்க்காமலா இருக்கிறார்கள்?

சோஷியலிசம் பேசும் காமராஜர் பவனி வருகிற போதும் கொலுவீற்றிருக்கிறபோதும் சீமான்கள் பக்கம் நின்று பராக்குக் கூறுவதையும் மக்கள் பார்க்கத்தானே செய்கிறார்கள்!

கழகத்தை நடத்துகின்றவர்கள் வருகின்ற விழாக் களிலே, எந்தப் பெரிய புள்ளியும் கலந்துகொள்வதில்லை என்பதையும் மக்கள் தெரிந்து வைத்துக்கொண்டுதானே இருக்கிறார்கள்.

அப்படி இருக்கும்போது, சோஷியலிசத்தை எம்மால்தான் செயல்படுத்த முடியும் என்று காங்கிரஸ் கட்சி பேசுவதை எப்படி மக்களாலே நம்ப முடியும்?

பணக்காரர்கள் புடைசூழப் பவனி வந்துகொண்டே பணக்கார ஆதிக்கத்தை ஒழிக்கப் போகிறோம் பாரீர்! ஆதரவு தாரீர் - என்று முழக்கம் எழுப்புகின்றனர் ஆளவந்தார்கள், எதைச் சொன்னாலும் மக்கள் நம்பிக்கொள்கிறார்கள் என்ற நினைப்பில். ஆனால் மக்கள் அத்தனை தெளிவற்றவர்களாக இல்லை.

அவர்கள், காகிதப் பூவில் மணம் இருக்காது என்பதை அறியாதவர்கள் அல்லர்.

அதனை நன்கு அறிந்துகொண்டிருப்பதனால் தம்பி! நம்மிடம் அத்தனை பற்றும் பாசமும் காட்டுகின்றனர்.

புதிய மயக்க மருந்து பலனளிக்கவில்லை என்பதைக் காங்கிரசாரே இப்போது மெள்ள மெள்ள உணர்ந்துகொண்டு வருகின்றனர். "சுயராஜ்யம்' - என்று சொன்னபோது மக்களிடம் கிளம்பிய எழுச்சி இப்போது காணோமே என்று ஏக்கமடைந்து கொண்டு வருகின்றனர். திங்கள் தவறாமல் விழா நடத்து கிறார்கள்; ஜனநாயக சோஷியலிச விழாவாம்!

அவ்விதமான ஒரு விழாவுக்கான அறிவிப்பு, கொட்டை எழுத்துக்களிலே மாயவரம் சுவரிலே - எழுதிவைக்கப் பட்டிருந்ததைக் காண நேரிட்டது; என்னால் சிரிப்பை அடக்கிக்கொள்ள முடியவில்லை. இவ்வளவு துணிந்து போலி நாடகமாடிடும் சாமர்த்தியம் கொண்டவர்களாகக் காங்கிரசார் இருக்கிறார்களே என்பதை எண்ணி வியப்படையாமலும் இருக்க முடியவில்லை.

ஜனநாயக சோஷியலிச விழா; தம்பி!

மாயவரத்தில். யார் தலைமை?

தலைமை வகித்தவர், சக்தி விலாஸ் பஸ் கம்பெனி முதலாளி பார்த்தசாரதி என்பவர்.

நான் முதலில், யாரோ வேண்டுமென்றே சக்தி விலாஸ்காரரரைக் கேலி செய்ய, இதுபோல எழுதி இருக்கிறார்களோ என்று எண்ணிக்கொண்டேன்; நண்பர்கள் சொன்னார்கள், அவர்தான் தலைவர், அறிவிப்பு அதிகாரபூர்வ மானதுதான் என்று.

இந்தப் போலி நாடகம் நடத்த, தம்பி! மெத்த நெஞ்சுரம் வேண்டும்.

கேட்டுப்பாரேன், இது எப்படி ஐயா பொருந்துகிறது? விழா சோஷியலிசத்துக்காக! தலைமை வகிப்பவரோ, பெரிய பஸ் முதலாளி! சோஷியலிசம் வெற்றி பெற அவரா வழி அறிந்து கூறுவார்? - என்று. ஒரு விளக்கம் வெடித்துக்கொண்டு கிளம்பும், எமது சோஷியலிசத்தில் முதலாளியும் உண்டு! - என்பதாக.

காங்கிரசார் கூறிடும் சோஷியலிசம் அப்படிப்பட்டது.

சைவ ஓட்டல் - கோழி பிரியாணி தயார்! - என்பது போன்றது!

சைவ ஓட்டல் என்கிறீர்களே, கோழி பிரியாணி அங்கு இருக்கலாமா என்றால், பதில் என்ன கூற முடியும்? கேட்டுப் பாருங்கள், காங்கிரஸ் பேச்சாளர்களை!

பைத்தியக்காரா! நாங்கள் நடத்தும் ஓட்டல் சைவ ஓட்டல். சந்தேகம் வேண்டாம்; உள்ளே வந்து பார், அவரைப் பொரியலும், கத்தரிக் கூட்டும், வெண்டைக் குழம்பும் இருப்பதை - என்பார்.

ஆனால் கோழி பிரியாணி தயார் என்று "போர்டு' இருக்கிறதே என்று கேட்டால், திகைத்துப் போய்விடுவாரா என்கிறீர்களா? திகைக்கமாட்டார்கள்; துணிச்சல் மிக்கவர்கள்!

ஆமாம்! கோழி பிரியாணியும் உண்டு! அதனால் என்ன? சைவ ஓட்டல் இது, ஆகவே சைவ பதார்த்தங்கள் உள்ளன. சைவ ஓட்டல் என்றால், வெண்டையும், கத்தரியும், அவரையும் பிற காய்களும் உண்டு என்றுதானே பொருள்; இருக்கின்றன! சைவ ஓட்டல் என்று அறிவித்திருப்பதாலேயே, இங்கு இறைச்சி இல்லை என்றா பொருள்? அப்படியா அறிவிப்புப் பலகை சொல்லுகிறது.

இங்கு ஆட்டு இறைச்சி, கோழிக்கறி போன்றவை கிடைக்காது.

என்றா எழுதியிருக்கிறோம். எமது ஓட்டல், சைவ ஓட்டல், - ஆனால் எமது சைவ ஓட்டலில் கோழிக்கறியும் இருக்கும் என்று கூறிவிட்டு, அடுத்த கூட்டத்திற்காக அவசரமாகக் கிளம்புவார். இடையிலே வேறோர் காரணம் மனத்திலே ததும்பும்; உடனே, திகைத்துப் போயுள்ள உன்னை இழுத்து நிறுத்தி, இன்னொரு காரணம் கூறுகிறேன் - இது சைவ ஓட்டல் என்பதை உறுதிப்படுத்த. முதலாளி இருக்கிறாரே, அவர் சுத்தச் சைவர், முட்டைகூடச் சாப்பிடமாட்டார், தெரியுமா? அவர் நடத்தும் கடையைச் சைவ ஓட்டல் என்று கூறுவது தவறா? - என்று கேட்டுவிட்டு - இன்று ஒரு போடு போட்டுவிட்டோம் என்ற திருப்தியுடன் நடையைக் கட்டுவார்!

தம்பி! கோழி பிரியாணி தயார்! என்ற அறிவிப்புடன், சைவ ஓட்டல் என்ற பலகையைத் தொங்கவிட்டு யாரும் கடை நடத்த இன்னும் துணியவில்லை.

காங்கிரஸ் கட்சியினரோ தனிப்பட்ட முதலாளிகளும் உண்டு எமது சோஷியலிசத்தில் என்று துணிச்சலுடன் கூறுகின்றனர்.

கோழி பிரியாணியும் வைத்துக்கொண்டு இந்த ஓட்டலுக்குச் சைவ ஓட்டல் என்று பெயரிடலாமா என்று கேட்டதும், கடை நடத்தும் முதலாளி சுத்தச் சைவர் - முட்டைகூடச் சாப்பிட மாட்டார் என்று கூறும் துணிச்சல்காரரைப்போல, முதலாளி களையும் வளர்த்துக்கொண்டு சோஷியலிசம் தழைக்கும் என்றும் பேசுவது பொருளற்றதாக இருக்கிறதே என்று கேட்பவர்களுக்கு, காமராஜரைக் காட்டுகிறார்கள்; பாருங்கள்! இவர் முதலாளி அல்ல! ஏழைப் பங்காளர்! - என்று.

ஆளுங் கட்சியில் இருக்கிறோம் என்பதாலே தன்னாலே ஒரு துணிச்சல் வந்துவிடுகிறது. அந்தத் துணிச்சலுடன் பேசு கிறார்கள்; இடம் பேசுகிறது என்பதைப் புரிந்துகொண்ட மக்கள், இவர்களிடம் வாதாடுவானேன் என்று இருந்துவிடுகிறார்கள்; ஒப்புக்கொண்டு அல்ல, நமக்கு ஏன் வீண் வம்பு என்ற எண்ணத்தில்.

ஆனால் தம்பி! அந்தத் துணிச்சல் மிக்க பேச்சுப் பேசிடும் திறனும், பாராட்டத்தக்கதுதானே! எல்லோருக்கும் வருமா பொய்யையும் பொருளற்றதையும் மளமளவென்று பேசிட?

ஒரு எத்தன், தம்பி! அவன் அலுவலகத்திலே சில காலம் "லீவ்' பெற எண்ணினான்; தனக்குக் கண் பார்வை சரியாக இல்லை என்று கூறினான்.

மருத்துவரிடம் அனுப்பினார்கள் பரிசோதனைக்கு.

டாக்டர், சுவரிலே அச்சடித்த எழுத்துக்கள் கொண்ட படத்தை மாட்டி, எழுத்துக்களைப் படி,

ஐயா! என்றார்.

எந்த எழுத்துக்களைப் படிக்கச் சொல்லுகிறீர் டாக்டர் என்று கேட்டான் எத்தன்.

எதிர்ப்புறம் உள்ள சுவரிலே தொங்கவிடப்பட்டிருக்கும் படத்தில் உள்ள எழுத்துக்களை என்று விளக்கமளித்தார் டாக்டர்.

அவன்தான் ஏமாற்றித் தீருவது என்று துணிந்து வந்திருக்கிறானே, சிக்கிக்கொள்வானா?

சுவரா? எதிரே இருப்பது சுவரா! - என்று கேட்டான்; டாக்டர் ஏமாந்து போனார். ஆசாமிக்கு எதிரே வெள்ளைச் சுவர் இருப்பதும், அதிலே படம் தொங்கவிடப்பட்டிருப்பதும்கூடத் தெரியவில்லை; பாவம் கண் அந்த அளவுக்குப் பழுதாகி விட்டிருக்கிறது என்று பரிதாபப்பட்டு, கண் மிகவும் கெட்டு விட்டிருக்கிறது என்று எழுதிக் கொடுத்தார்.

ஒரு மணி நேரம் ஓடிற்று. தன் நடிப்பால் டாக்டரை ஏய்த்து விட்டவன், புதிய படம் ஒன்று கண்டு களித்திட சினிமாக் கொட்டகை சென்று அமர்ந்தான்; படம் துவக்கப்படவில்லை; இசைவிருந்து மட்டும் நடைபெற்றுக்கொண்டிருந்தது; அந்த நேரத்தில் அவனைத் தூக்கி வாரிப் போடத்தக்க நிகழ்ச்சி நேரிட்டது. எந்த டாக்டரை தனக்கு அடியோடு பார்வை கெட்டுவிட்டது என்று நம்ப வைத்தானோ, நடிப்பால், அதே டாக்டர், படம் பார்க்க, அதே கொட்டகைக்கு வந்து, பக்கத்திலேயே வந்து அமர்ந்தார்!

ஒரு கணம் அவன் திடுக்கிட்டுப் போனான், தன் குட்டு உடைபட்டுவிடுமே என்று எண்ணி; மறு கணம் சமாளித்துக் கொண்டு, தன்னைக் கோபத்துடன் முறைத்துப் பார்த்த டாக்டரின் பக்கத் திரும்பி, "அம்மா, இந்த பஸ் புறப்பட இன்னும் எவ்வளவு

நேரம் பிடிக்கும்? என்று ஒரு கேள்வியைத் தூக்கிப் போட்டான்.

கண் அடியோடு பழுதாகிப் போய்விட்டதால், சினிமாக் கொட்டகையை மோட்டார் பஸ் என்று தவறாக எண்ணிக் கொண்டுவிட்டான் பாவம் என்று டாக்டர் எண்ணிக் கொள்ளுவார் என்று தந்திரம் செய்தான்.

டாக்டர் ஏமாந்து போனார்; பரிதாபம் கலந்த குரலிலே அவர் பேசினார், "யாரப்பா, உன்னை ஏமாற்றி இங்கே கொண்டுவந்து உட்கார வைத்துவிட்டார்கள்? இது மோட்டார் பஸ் அல்ல! இது ஒரு சினிமா கொட்டகை! - வா! உன்னை நான் மோட்டார் பஸ் இருக்குமிடம் அழைத்துச் செல்கிறேன்; நான்தான் உன் கண்களைப் பரிசோதித்த டாக்டர்!'' என்று.

“டாக்டர்! டாக்டர்! பார்த்தீர்களா டாக்டர், உலகம் எவ்வளவு பொல்லாதது என்பதை. அப்பா! எனக்குக் கண் சரியாக இல்லை; மெள்ள என்னை மோட்டார் பஸ் இருக்குமிடம் அழைத்துக்கொண்டு போய்விடு'' என்று கேட்டேன் ஒருவனை. அவன்”வா! ஐயா! உன்னை மோட்டார் பஸ்ஸிலேயே உட்கார வைத்துவிட்டு வருகிறேன்!'' என்று அன்பாகப் பேசி, இங்கு அழைத்துவந்து உட்கார வைத்துவிட்டுப் போய்விட்டான். நான் என்னடா இன்னும் பஸ் புறப்படவில்லையே, நேரம் ஆகிறதே என்று கவலைப்பட்டுக்கொண்டிருந்தேன்; "நல்ல வேளை, நீங்கள் வந்தீர்கள்; மிக்க நன்றி!'' என்றான்; டாக்டர் உருகிப் போனார்.

இந்தக் கதையிலே வருகிறானே குருடனாக நடித்தவன், அவன் ஒரு மண்டலம் பாடம் கேட்க வேண்டும் தம்பி! காங்கிரஸ் பேச்சாளர்களிடம். அவ்வளவு துணிவுடன் போலி நாடகத்தைத் திறமையாக நடத்துகின்றனர்; முதலாளிகளையும்

கொண்டுள்ளது எமது சோஷியலிசம் என்று பேசுகின்றனர்.

தம்பி! ஆட்சி நடத்தும் கட்சியிலே இருக்கிறோம் என்ற உடன் துணிச்சலும் அதற்குத் தேவைப்படும் திறமையும் தன்னாலே பொங்கி வழிகிறது; அதனால்தான் அவர்கள் முதலாளிகளும் கொலுவிருக்கும் சோஷியலிசம் எம்முடையது என்று பேசுகிறார்கள், அவர்களுக்கு வளர்ந்துவிட்டிருக்கிற துணிச்சலில், இனிஅவர்கள்,

இனிக்கும் எட்டி
பாடும் ஊமை
ஓடும் நொண்டி
கருப்பு மல்லிகை

என்று பலப் பல பேசுவார்கள்! அவர்கள் அந்தத் துணிச்சல் கொண்டிருப்பதிலே நான் வியப்படையவில்லை; ஆனால் மக்கள் அந்தப் பேச்சையெல்லாம் நம்பிக்கொள்கிறார்கள் என்று எண்ணிக்கொள்கிறார்களே அது கண்டுதான் வியப்படைகிறேன். மக்கள் விவரமறியாதவர்கள் அல்ல; அவர்கள் நன்றாக அறிவார்கள், பேசுபவர் அறிவுத் தெளிவுடன் பேசவில்லை; அதிகார போதையிலே பேசுகிறார் என்பதனை. அந்தப் போதை தெளியட்டும் என்று காத்துக்கொண்டிருக்கிறார்கள்; போதையைத் தெளிய வைக்கும் நாளையும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

அன்புள்ள
அண்ணாதுரை
24-7-66

ஒட்டாண்டியாக்கிவிட்டு! (1)

கழகம் அஞ்சும் மூணும் அடுக்காக உள்ள இடம் அன்று!
மக்கள்தம் மனக்குமுற-ன் வடிவமே தி. மு. க.!
ஐந்தாண்டுத் திட்டங்களால் கிடைத்த பலன் என்ன?
சுயராஜ்யம் கிடைத்தும் சுபிட்சம் இல்லையே!
ஓட்டாண்டியாக்கிவிட்டு ஓட்டுக் கேட்கிறார்களே!
இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்?
ஏழையைக் கண்டறியாதவர்கள் தீட்டிய திட்டமே ஐந்தாண்டுத் திட்டம்!

தம்பி!

பார்த்துக்கொண்டிருக்கும்போதே நாட்கள் உருண் டோடிக்கொண்டிருக்கின்றன. தேர்தல் வேக வேகமாக நெருங்கி வந்துகொண்டிருக்கிறது.

நாலைந்து மாதங்களில் பொதுத் தேர்தல் நடைபெற இருக்கிறது என்று நேற்றுத்தான் பேசிக்கொண்டிருந்ததுபோல இருக்கிறது; இப்போது பார்த்தாலோ ஐந்து அல்ல, நாலும் அல்ல, மூன்று மாதங்களே இடையிலே உள்ளன என்று கூறவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டிருக்க காண்கின்றோம்.

நமக்கு மட்டுமா! காங்கிரசுக்கும் அதே நிலைமைதானே என்று கேட்பார்கள். ஆனால், தம்பி!

இது ஏழைக் குடித்தனம்; ஐந்தும் மூணும் அடுக்காக உள்ள இடம் அல்ல; எல்லாவற்றையும் நாமேதான் கவனித்துக்கொண்டாக வேண்டும். காங்கிரசுக்கு நிலை அப்படியா? ஏராளமான எடுபிடிகள்! பெட்டி வழிய வழியப் பணம்!! இதை முடித்துவிட்டேன் - அதனை முடித்துத் தருகிறேன் - இது முடிந்துவிடும் என்று கூறிக் கட்டளையை எதிர்பார்த்துக் கிடக்கும் ஆள் அம்பு உள்ள கட்சி.

பதவியில் உள்ளவர்களிடம், அதிலும் தொடர்ந்து இருபது ஆண்டு அளவு பதவியில் உள்ளவர்களுக்கு, அதன் காரணமாகவே - ஒரு தனிச் செல்வாக்கு ஏற்பட்டுவிடத்தானே செய்யும்.

பலன் பெற்றவர்கள், பலன் கிட்டும் என்று எதிர்பார்த்துக் கிடப்பவர்கள் அங்கு நிறையப் பேர் இருக்கத்தான் செய்வர்.

அதிலும் தகுதி, திறமை ஆகியவைகளைக் காட்டிலும், பெரிய இடத்துச் சிபாரிசு, எந்த இடத்திற்கும் நுழைவுச் சீட்டாகப் பெரிதும் பயன்படும் நாட்டிலே, பதவியில் உள்ளவர்களைப் பலரும் மொய்த்துக்கொண்டிருப்பது எளிதாகப் புரியக் கூடியதுதானே. அதிலும், "வரம்’ கொடுப்பதிலே காங்கிரசார், வேறு எவரும் போட்டியிட முடியாத அளவு வல்லமை காட்டிப் பழக்கப்பட்டவர்கள்.

புதிய பாதைகள் போடுகிறார்கள்!
பள்ளிக்கூடமா? புதிது புதிதாக!

மருந்தகம்! படிப்பகம்! மனமகிழ் மன்றம்! மாதர் சங்கம்! இவைகளுக்கான திறப்பு விழாக்கள், ஆண்டு விழாக்கள்! அமைச்சர்களின் பேருரைகள்! ஒவ்வோர் நாளும்!!

காளை வாங்க, கிணறு வெட்ட, உரம் வாங்க, வரப்பு அமைக்க கடன் கேட்டிருந்தவர்கள், கேட்டு

இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது, இனி எங்கே கிடைக்கப் போகிறது என்று எண்ணி ஏக்கமடைந்து, சோர்ந்து கிடக்கிறார்களல்லவா, பலர் - அவர்களைத் தட்டி எழுப்பு கிறார்கள், தர்பார் நடத்துபவர்கள், கடனா கேட்டிருந் தீர்கள்? அடுத்த வெள்ளிக் கிழமை கிடைக்கும் என்று வாக்களிக்கிறார்கள்.

உமது மகனா உத்தண்டன்? தெரியாமலே போய் விட்டதே! போன வருடமே இடம் வாங்கி இருக்கலாமே! இந்த வருடம் இடம் நிச்சயம் - என்று கூறுகிறார் மண்டலம்.

முகங்களிலே புதிய மலர்ச்சி! வார்த்தைகளிலே தனியானதோர் குளிர்ச்சி! நடவடிக்கைகளிலே ஒரு நட்புணர்ச்சி! எல்லாம் பளிச்சிடுகின்றன!

இவை "போலி' என்பதனைக் காட்ட மட்டுமல்ல இவை குறித்து நான் கூறுவது; வாக்காளர்களை மயக்க, ஆட்சி நடாத்திடும் கட்சியினரால் முடிகின்ற அளவு, எதிர்க் கட்சிகளால் முடியாது என்பதையும் உணர்த்துவதற்குத்தான்.

உடனடியாக உள்ளம் மகிழ்ந்திடும் செயலைச் செய் வதன் மூலமோ இனிப்புப் பேச்சுப் பேசுவதன் மூலமோ, நீண்ட காலமாக நடத்திக்கொண்டு வந்த கொடுமைகளை மறைத்துவிடலாம் என்று காங்கிரஸ் கட்சியினர் எண்ணுகின்றனர்.

ஆனால், உள்ளத்துக்கு மகிழ்ச்சி ஊட்டும் பொருள் தருவதன் மூலமாகவே, மக்களை மயக்கிவிட முடியும் என்ற நிலை இருக்குமானால், ஆளுங் கட்சியான காங்கிரசு, சென்ற தேர்தலிலே 100-க்கு 42 என்ற அளவு ஓட்டுகள்தானா பெற்றிருக்கும் ?

ஏழ்மை, அறியாமை, மனக் குழப்பம், மருட்சி என்பவைகளின் பிடியிலே சிக்கிக் கிடப்பினும்,

தமிழகத்துப் பொதுமக்கள் ஜனநாயக உணர்வை, நீதி நியாயத்தில் கொண்டுள்ள பற்றினை விட்டுவிடவில்லை.

அந்த நம்பிக்கை எனக்கு நிரம்ப இருப்பதனால் மட்டுமே, எத்தனையோ இடர்ப்பாடுகளுக்கு மத்தியிலும், இந்தப் பொதுத் தேர்தலில் கழகம் ஈடுபட்டு வெற்றி வாகை சூடும் என்று அறிவித்திருக்கிறேன்.

கொடுமைகளுக்கு ஆளான மக்கள் மனம் குமுறிக்கொண்டிருக் கிறார்கள் என்பதையும், மீண்டும் கொடுமையின் பிடியிலே சிக்கி விடக்கூடாது என்பதிலே உறுதியாக உள்ளனர் என்பதையும், அதற்கான பணியாற்றுவதிலே ஆர்வம் கொண்டுள்ளனர் என்பதையும் ஒவ்வொரு கூட்டத்திலும் நான் காண்பதுபோலவே, பொதுமக்களிடம் தோழமைத் தொடர்பு கொண்டுள்ள கழகத் தோழர்கள் அனைவரும் காண்கின்றனர். அதனால்தான் அவர்களின் பேச்சிலே ஒரு தெம்பும், உறுதியும் காணப்படுகிறது.

தொகுதிகளின் நிலைமைகளை ஆராய்ந்து பார்த்ததில் தமக்கு ஏற்பட்ட கருத்து பற்றி நாவலர் என்னிடம் பேசிக்கொண்டிருந்தார்; அவரிடமேகூட, அந்தத் தெம்பு ததும்பிக்கொண்டிருக்கக் கண்டேன்.

சென்ற தேர்தலின்போது கழகத்திற்கு இருந்த செல்வாக்கு இம் முறை இன்னின்ன காரணங்களால் இந்த அளவு வளர்ந் திருக்கிறது என்பது குறித்து என்னிடம் எடுத்துக் கூறும்போதே கழகத் தோழரின் முகத்திலே ஒரு பொலிவு புதிதாகத் தவழ்ந்திடக் காண்கின்றேன்.

அவர் மாளிகைவாசி அல்ல!

அம்பாரம் அம்பாரமாகச் செந்நெல்லைக் குவித்து

வைத்துள்ள பெருநிலக்கிழார் அல்ல.

ஏழை அல்லது நடுத்தரக் குடும்பத்தினர்!

அவர்களிடம், தெளிவும் செயலார்வமும் இருந்திடக் காண்கின்றேன். செய்வதைத் திட்டமிட்டு, வகைப்படுத்தி, முறைப் படுத்திச் செய்திட வேண்டும் என்ற ஆர்வம் நல்ல அளவு இருந்திடக் காண்கிறேன்.

கூட்டு முயற்சியிலே எத்தனை சாதிக்க முடியும் என்பதனை நாட்டுக்கு எடுத்துக் காட்டியதுடன், நாமே உணர்ந்து கொள்ளும்படி செய்திருப்பது நமது கழகம்.

ஆத்திரத்தினாலோ, அருவருப்பினாலோ, வெறும் பிரசாரம் என்ற போக்கினாலோ நம்மைப்பற்றி, காங்கிரசிலுள்ளவர்கள் எவ்வளவு வேகமாக மேடைகளிலே பேசினாலும், இவனைப் பார்! அவனைப் பார்! என்று இழித்துரைத்தாலும், ஒரு நேரமாகிலும் அவர்கள் உண்மையை உணரும்போது

எப்படியோ இப்படி ஒரு வலிவினைத் திரட்டி விட்டார்களே!

என்று தம்மையும் அறியாமல், பேசாமலிருக்க முடியாது.

இதனாலா? அதனாலா? இப்படியா? அப்படியா?

என்றெல்லாம் ஆராய்ச்சி நடத்தி நடத்தி, தமது முறைகளைக்கூட அவர்கள் நம்முடைய முறைகளுக்கு ஏற்ப மாற்றிக்கொண்டும் பார்க்கிறார்கள். ஆனால் ஒரே ஒரு உண்மையைத்தான் அவர்கள் ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள்.

மக்களின் மனக்குமுறலின் வடிவமாக, மக்களின் பெருமூச்சின் வடிவமாக

திராவிட முன்னேற்றக் கழகம் இருந்து வருகிறது என்ற உண்மையை.

மற்றொரு நம்பிக்கை ஆளவந்தார்களுக்கு இருக்கிறது; பணம் பத்தும் செய்யும் என்பதிலே உள்ள நம்பிக்கை.

ஆனால் பணத்திற்கு உள்ள மதிப்பே இன்று வேகமாகக் கெட்டுக்கொண்டு வருகிறது.

டில்லியில் மூண்டிடும் கலவரங்களைப்பற்றிய செய்தி கேட்டு, இந்தியாவுக்குக் கடன் தொகை எந்த அளவு கொடுக்கலாம் என்பதற்காகக் கலந்து பேசிய குழுவினர், இத்தனை குழப்பம் மூண்டுகிடக்கும் நாட்டுக்குப் பெரிய அளவு தொகை கடன் கொடுப்பது நல்லதுதானா? என்று யோசிக்கின்றனர்; கவலையைத் தெரிவித்துள்ளனர் என்பதும்,

வெளிநாடுகளிலே வாங்கியுள்ள கடனைத் திருப்பித் தருவதற்கான தவணையில் மாறுதல் தேவை; அதாவது பிறகு திருப்பித் தருகிறோம் என்று கூறித் தவணை வாங்க வேண்டும் என்ற யோசனை டில்லி வட்டாரத்தில் உலவுகிறது என்பதும்,

இந்தியாவிலே தொழில் நடத்த "முதல்’ போடு வதற்குப் பணத்திலே குறியாக உள்ள ஜப்பான் தயக்கம் காட்டுகிறது என்பதும்,

இன்றுள்ள பொருளாதார நெருக்கடியை எடுத்துக் காட்டு வதனை எத்தனை வேகமான காங்கிரஸ் பிரசாரகரும் மறுத்துவிட மாட்டார்.

நிலைமை, பல முனைகளில் நல்லபடியாக இல்லை.

சமூகத்தில், ஒழுங்கும் சாந்தியும் பெரிய அளவில் குலைக்கப்பட்டிருக்கிறது.

பசியும் பட்டினியும் கொட்டும் கொடுமை வளர்ந்தபடி இருக்கிறது.

இவைகளிலே ஒன்றைக்கூடச் சீர்படுத்தக் காங்கிரஸ் அரசினால் முடியவில்லை.

இருப்பினும் தேர்தலிலே நாங்கள் வெற்றி பெறுவோம் என்று அவர்கள் மார்தட்டுகிறார்கள் என்றால், எதை நம்பிக்கொண்டு அவ்விதம் பேசுகிறார்கள் என்று யோசிக்க வேண்டாமா?

படி அரிசி நாலு ரூபாயாம்! இந்த அக்கிரமம் வேறு எங்காவது நடந்திடுமா? அனுமதிப்பார்களா? என்று பதறுகிற மக்களிடம் எப்படியும் நாங்கள் ஓட்டுக்களைப் பறித்திடுவோம் என்று காங்கிரஸ் கட்சி கூறுகிறது என்றால், பணத்தால் எதையும் சாதித்துக்கொள்ளலாம் என்பது தவிர வேறு எதுவாக இருக்க முடியும்?

காலை மலர்ந்ததும், மக்கள் கண்களிலே படுவது, பட்டினிச் சாவு, துப்பாக்கிச் சூடு, சிறை பிடித்தல், வெளி நடப்புகள், புகார்கள், உட்பூசல்கள் என்பனபற்றியே. ஒரு நாடு மிகச் சீர்கேடான நிலையிலே இழுத்துச் செல்லப்படுகிறது என்பதற்கு வேறென்ன சான்றுகள் வேண்டும்?

நம்ம சர்க்கார்
நல்லவர் சர்க்கார்

என்று சொந்தம் கொண்டாடுகிறார்கள்; இதற்கா எதிர்ப்புக் காட்டுவது என்று கேட்கிறார்கள்; மக்களோ

இருண்ட கண்களையும்
வறண்ட தலையையும்
காய்ந்த வயிற்றையும்

காட்டுகிறார்கள்; நம்ம சர்க்கார் தந்தவை! ஆனந்தத் தாண்டவ மாடச் சொல்லுகிறீர்களா ஐயா!

என்று கேட்கிறார்கள். இந்த நிலையிலும் "ஓட்டு' எமக்குத்தான் என்று எந்தத் தைரியத்தில் பேசுகிறார்கள் ஆளுங்கட்சியினர்?

பணம் இருக்கிறது பார்த்துக்கொள்ளலாம் என்ற ஒரே தைரியத்தில்.

போக போக்கியத்திலே மூழ்கி, வலிவிழந்து கிடந்த ஐந்நூறு சிற்றரசர்களையும், செல்வச் செருக்குமிக்கோரையும் பதவிக் காகவும் பட்டத்துக்காகவும் பல்லிளித்துக் கிடப்போரையும், ஆலவட்டங்களையும் ஆமாம் சாமிகளையும் பக்கத் துணையாக வைத்துக்கொண்டு இருநூறு ஆண்டுகள் வெள்ளை ஏகாதி பத்தியம் ஆட்சி நடத்த முடிந்ததல்லவா? இவர்கள் அதே "பாணி'யில் தமது ஆட்சியை நடத்திச் செல்ல முடியும் என்று நம்புகிறார்கள்.

அவர்களால் முடிகிறதா இல்லையா என்பதல்ல பிரச்சினை; நாடு இன்னமும் அவர்களின் ஆட்சியைத் தாங்கிக்கொள்ள முடியுமா என்பதுதான் பிரச்சினை.

தம்பி, காங்கிரசாட்சி துவக்கப்பட்டபோது, மக்களின் வாழ்விலே வளம் உண்டாக்க என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டபோது, ஒரு வசீகரமான புன்னகையுடன் காங்கிரஸ் தலைவர்கள் கூறினார்கள்.

ஐந்தாண்டுத் திட்டங்கள் போடப் போகிறோம் என்று.

மூன்று முடிந்து, நாலாவது நடமாட விடப்பட்டிருக்கக் காண்கிறோம். திட்டங்களால் கிடைத்த பலன் என்ன? எங்கு சென்றுள்ளது? என்று கேட்கிறார்கள்.

நானும் அதைத்தான் தேடிக்கொண்டிருக்கிறேன்,

ஐந்தாண்டுத் திட்டங்களால் விளைந்த பலன், எங்குப் போயிற்று என்றுதான் தெரியவில்லை; ஏழைக்கு அந்தப் பலன் வந்து சேரவில்லை என்று காமராஜர் கூறுகிறார்.

திட்டத்தை நிறைவேற்றினோம்; ஆகவே எமக்கு ஓட்டுப் போடுங்கள் என்று கேட்பதற்கான நியாயம் எங்கே இருக்கிறது? பலன், போன இடம் தெரியவில்லை என்று பெருந்தலைவரே பேசுகிறாரே!

திட்டங்களுக்குத் தேவைப்படும் பொருள் குவிய, வரி கொடுத்துக் கொடுத்து ஏழை எளியோர்கள், மேலும் இளைத்துப்போய், களைத்துப்போய் இருப்பது தெரிகிறது; திட்டத்தால் பெற்ற பலன் வேறு என்ன, எங்கே இருக்கிறது என்று காட்டக்கூடக் கூச்சப்படுகிறார்கள் காங்கிரசின் பெரிய தலைவர்கள்.

ஆராய்ச்சி நடத்துகிறார்கள், திட்டம் ஏன் எதிர்பார்த்த பலனைச் சமூகத்துக்குத் தரவில்லை என்று.

திட்டம் சரியாகத் தீட்டப்படவில்லை.

திட்டம் நடைமுறைக்கு ஏற்றதாகத் தீட்டப்படவில்லை.

திட்டம் சரியாகவே தீட்டப்பட்டது, செயல்படுத்துவதிலேதான் தவறுகள் நேரிட்டுவிட்டன.

செயல்முறை சரியாக வகுக்கப்படவில்லை. செயல்படுவதற்குத் தக்கவர்களை அமர்த்தவில்லை.

செயல்படுத்தியவர்களுக்குப் போதிய அக்கறை இல்லை.

திட்டத்தின் உட்பொருளைச் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை.

திட்டத்திற்கு மக்களின் ஒத்துழைப்பு முழு அளவில் கிடைக்கவில்லை.

இப்படி ஆளாளுக்கு ஒரு குட்டுக்குட்டியபடி உள்ளனர். குட்டுபவர்கள் எல்லோருமே காங்கிரஸ் எதிர்ப்பாளர் என்று கூறிவிட முடியாது. காங்கிரஸ்காரர்களிலேயே பலர் குறை காணுகின்றனர்.

எல்லோரும் ஒருசேர இன்று ஒப்புக்கொண்டிருப்பது, திட்டங்கள் எதிர்பார்த்த பலனை சமூகத்துக்கு தரவில்லை என்பது.

ஆகவே, எந்தத் திட்டங்களைத் தமது சாதனையிலே சிகரம் போன்றது என்று இவர்கள் கூறிக்கொண்டு வந்தார்களோ, அந்தத் திட்டங்களே தோல்வி அடைந்துவிட்டன என்பது மறுக்கப்பட முடியாத ஆனால் பயங்கரமான உண்மையாகி விட்டது. இந்தத் திட்டங்களுக்காகச் செலவாகி இருக்கும் பணத்தின் அளவு, எவருடைய தலையையும் சுற்றச் செய்துவிடும்; அத்தனை பெரிய தொகை.

"விடமாட்டோம் இந்தியாவை" என்று வெள்ளையர் வீம்பு பேசிக்கொண்டிருந்த நாட்களில் டில்லிப் பாராளுமன்றத்தில் வீற்றிருந்த கோவிந்த வல்லப பந்த் கோபாவேசமாக ஒரு முறை சுயராஜ்ய திட்டம்பற்றிப் பேசியபோது, வெள்ளையர் ஒருவர் குறும்புத்தனமாகக் குறுக்கிட்டு,

சுயராஜ்யம் கிடைத்ததும் என்ன செய்யப் போகிறீர்கள்?

என்று கேட்டபோது, பந்த் அவர்கள் பதிலளித்தார், சுடச்சுட. அவரால் அன்று, எந்த அளவுக்குச் சொல்ல முடிந்தது?

சுயராஜ்யம் கிடைத்ததும் நாட்டை வளப்படுத்த

திட்டம் தீட்டுவோம். நூறு கோடி ரூபாய் அளவு செலவிட்டுத் திட்டம் நிறைவேற்றுவோம்!

என்று கூறினார். கவனித்தனையா தம்பி! 100 கோடி! அது அன்று பிரம்மாண்டமான தொகை!

ஆனால் காங்கிரஸ் அரசு இந்த ஐந்தாண்டுத் திட்டங் களுக்காகச் செலவிட்டிருக்கும் தொகை, 20,000 கோடி ரூபாய்! பண்டித பந்த்தினால் நினைத்துப் பார்த்திருக்கக்கூட முடியாத தொகை!! இவ்வளவு செலவான பிறகும், இன்று நாட்டிலே இல்லாமை, போதாமை! அமெரிக்கா பறக்கிறார் அமைச்சர் சுப்பிரமணியம், உணவுக்காக! சௌத்ரி, ஐரோப்பா பயண மாவார், கடன் கேட்க! மேத்தா, ரஷியா செல்லக்கூடும்! இந்திரா அம்மையார், உலக சமாதானம் உண்டாக்க யூகோ செல்லக்கூடும்.

பாவம், அவர்களால் இங்கு இருக்க முடியவில்லை.

காது குடையும் கூச்சல்! கண்ணைக் கெடுக்கும் காட்சி! மனதை மருட்டும் செய்திகள்! நிம்மதி இல்லை! நிலைகொள்ளவில்லை.

பாரிசோ, மாஸ்கோவோ, நியூயார்க்கோ, இலண்டனோ எங்காவது சென்று சிறிதளவு நிம்மதி யாவது பெறலாம் என்று எண்ணுகிறார்கள். துல்லியமான மேக மண்டலங்களுக்கு மேலே விமானம் செல்லும்போது, ஆர்ப்பரிப்பும், பேரணியும், கடை அடைப்பும், கலவரமும் இல்லாத நிலை காண்கின்றனர்! ஒரு நிம்மதி!

இலஞ்சக் குற்றச்சாட்டுகள் கூறிடுவோர், குறுக்குக் கேள்விகள் பூட்டிடுவோர், ஊழல்களை அம்பலப் படுத்துவோர், அமீர்சந்த் பியாரிலால் போன்றவர்கள் பற்றிக் கிளறிவிடுவோர் இல்லாத இடம்; ஒரு மகிழ்ச்சி!

இந்த விதத்தில் அவர்களும் பாவம், தங்கள்

மனத்திலே குமுறிக் கொண்டிருக்கும் கவலையை மறந்துவிட முயற்சிக்கிறார்கள்.

20 ஆயிரம் கோடி ரூபாய் செலவிட்டு, தோல்வி கண்ட கட்சி, கூனிக் குறுகிப் போகவேண்டியது முறையாக இருக்க, இந்தத் திட்டங்களின் கர்த்தாக்களாகிய எமக்கே ஓட்டுகள்! - என்று பாத்யதை வேறு கொண்டாடுகிறார்கள்!!

தெளிவும் ஜனநாயக உணர்வும் இருக்கவேண்டிய அளவிலும் வேகத்திலும் இந்த நாட்டில் இருந்திடுமானால், 20 ஆயிரம் கோடி ரூபாயைப் பாழாக்கினதற்காகக் காங்கிரஸ் கட்சியைக் கூண்டிலே நிற்க வைத்து விசாரணை நடத்தி இருப்பார்கள்!

இன்றோ இந்த ஆட்சியின் போக்கை எதிர்க்கத் துணிபவர்களை, காரணம்கூடக் காட்டாமல் சிறையில் தள்ளிவைக்க, தடுப்புக் காவல் சட்டத்தை மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீடிப்பது என்று பாராளுமன்றத்தில் பலமான எதிர்ப்பைத் துச்சமென்றுத் தள்ளிவிட்டு நிறைவேற்றி வைத்துக்கொண்டுவிட்டார்கள்.

உரிமைகள் குலைக்கப்படுகின்றன. இது நாம் ஏற்றுக்கொண்டுள்ள இந்திய அரசியல் சட்டத்திற்கே ஒவ்வாதது என்று கண்டிக்காத மேதைகள் இல்லை; சட்ட நிபுணர்கள் இல்லை. இன்னமும் நெருக்கடி நிலைமையை நீடித்துக்கொண்டிருப்பது அறமாகாது; அதன் பெயரால் பாதுகாப்புச் சட்டத்தை ஏதாவது ஒரு வடிவத்தில் நீட்டிக்கொண்டு போவது அடாத செயலாகும் என்று நீதி மன்றங்களில் கீர்த்திமிக்க நிலை பெற்றிருந்தவர்களெல்லாம் எடுத்துக் கூறிவிட்டனர். சர்வாதிகார நாடுகளில் தவிர வேறு எங்கும் இப்படிப்பட்ட ஆள்தூக்கிச் சட்டங்கள் - நாக்கறுப்புச் சட்டங்கள் இல்லையே என்று கூறிக் கண்டிக்கின்றனர் சான்றோர் பலர்.

இந்தியாவின் முன்னாள் சட்ட அமைச்சர் ஏ. கே. சென் அவர்களே இந்தப் போக்கைக் கண்டித்துப் பேசுகிறார்.

ஆனால், தம்மைவிட அறிவிலும் ஆற்றலிலும் மிக்கார் எவர் உளர் என்ற நினைப்புத் தடித்துப் போன நிலையில் தடுப்புக் காவல் சட்டம்கூடத் தேவைதான் என்று காங்கிரசார் வாதாடுகின்றனர்; எண்ணிக்கை வலிவினைக் காட்டி அக்கிரமத்தை நியாயமாக்கிக் காட்டுகின்றனர்!

தடுப்புக்காவல் சட்டம், ஒப்புக்கொள்ளப்பட்ட சாதாரண சட்ட முறையாகிவிட்டது என்றே பேசுகிறார், உள்துறை அமைச்சர் - புதியவர் - சவாண்! மனித உரிமைகள் அவ்வளவு கேவலப்படுத்தப்பட்டு விடப்பட்டுள்ளன.

உணவு போதுமான அளவு இல்லை.
உரிமைகள் பறிக்கப்படுகின்றன.
சாந்தி இல்லை, சமாதானம் இல்லை.

என்றாலும், ஓட்டு இருக்கிறதல்லவா, அதை எமக்குக் கொடுத்திடுக! என்று கேட்கிறார்கள். ஓட்டாண்டியாக்கிவிட்டு ஓட்டும் கேட்கிறார்கள். புது டில்லியில், "ஜனநாயக நிலை’பற்றிய கருத்தரங்கு ஒன்றில் பேசிய மேனாட்டு அரசியல்துறைப் பேராசிரியர் ஒருவர்,

"மக்கள் காங்கிரசாட்சியிலும் வெறுப்படைந் துள்ளனர்; ஆனாலும் காங்கிரசுக்கு ஓட்டுப் போடுகின்றனர். இந்த விந்தை இந்திய ஜனநாயகத்திலே காணப்படுகிறது. இது ஆராயப்பட வேண்டிய பிரச்சினையாகும்’ என்று குறிப்பிட்டிருக்கிறார்.

உள்ளபடியே தம்பி! காங்கிரசாட்சியிடம் மக்கள் கொண்டுள்ள கோபமும் கொதிப்பும்,

வெளிநாடுகளிலே உள்ள ஆய்வாளர்களும் அறிந்துள்ளனர். மக்களிடையே இவ்வளவு ஏமாற்றத்தையும் எரிச்சலையும் மூட்டிவிட்ட காங்கிரஸ் கட்சியை மக்கள் மீண்டும் ஆதரித்து ஆட்சியில் அமர்த்தமாட்டார்கள் என்று கருதுகிறார்கள். ஏனெனில், இங்குக் காங்கிரசாட்சி செய்திருப்பது போன்ற தவறுகளிலே நூற்றிலே ஒரு பங்கு தவறு செய்திடினும் போதும், அங்கு அத்தகைய ஆட்சியை மக்கள் தாங்கிக்கொள்ள மாட்டார்கள். ஜனநாயக உணர்வு அங்கெல்லாம் அந்த அளவு இருக்கிறது.

இங்கோ ஆட்சியினிடம் மக்களுக்கு அச்சம் மூண்டுவிடுகிறது.

அக்கிரமம் செய்திடினும், ஆட்சி தன்னிடம் சிக்கிக் கொண்டுள்ள வலிவினைக்கொண்டே, எதிர்ப்புச் சக்திகளை முடியடித்துவிடும் என்ற பீதி பிடித்தாட்டுகிறது.

இந்த அச்சத்தை, தம்பி உன் இடைவிடாத முயற்சியின் துணை கொண்டு, திராவிட முன்னேற்றக் கழகம் பெரும் அளவுக்கு ஓட்டிவிட்டிருக்கிறது.

இந்த நிலைமையை நன்கு புரிந்துகொண்ட காங்கிரசார் இம்முறை "கடைசி ஊசி' போடுவது என்பார்களே அதுபோல உள்ள பணம் அவ்வளவையும் வீசிப் பார்த்துவிடுவது என்று துணிந்துவிட்டுள்ளனர். பார்க்கட்டும்! பாசி பிடித்துப்போன பணமெல்லாம் வெளியே வரட்டும்! பாட்டாளியின் வயிற்றில் அடித்துச் சேர்த்து வைத்துள்ள பணமெல்லாம் வெளியே வரட்டும்! ஒன்றை ஒன்பதிற்கு விற்றுச் சேர்த்துள்ள பணமெல்லாம் வெளியே வரட்டும்! கள்ளப் பணம், கருப்புச் சந்தைப் பணம், வரி கொடுக்காமல் ஏய்த்துச் சேர்த்த பணம் எல்லாம் வெளியே வரட்டும்!! ஏன்

வருகிறது என்பதா மக்களுக்குத் தெரியாது; புரியாது!! மிக நன்றாகப் புரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் பேரூர்களில் மட்டுமல்ல, சிற்றூர்களிலே எல்லாம் பார்க்கிறேன்.

என் ஆவல் தீருமளவுக்கும் தோழர்களின் அன்பழைப்பை நிறைவேற்றும் அளவுக்கும் என்னால் எல்லா இடங்களுக்கும் சென்று வர முடியவில்லையே, அதற்குப் போதுமான வலிவு இல்லையே என்றுதான் வருத்தப்படுகிறேன்.

நண்பர்கள் அடுக்கடுக்காக நிகழ்ச்சிகளைக் கூறும்போது சுரீல் என்று கோபம்கூட வந்துவிடுகிறது, இப்படி "வேலை வாங்குகிறார்களே' என்று. ஆனால், சென்று, அங்கு ஆர்வம் ததும்பும் நிலையில் ஆடவரும் பெண்டிரும், முதியோரும், இளைஞரும் திரண்டு இருந்திடக் காணும்போது எல்லாக் கஷ்டங்களும் இருக்கும் இடம் தெரியாமல் பறந்தே போய்விடுகின்றன.

இவ்வளவு பேரும் எதேச்சாதிகாரத்தை எதிர்ப்பவர்கள்.

காங்கிரசினால் மூட்டிவிடப்பட்டுவிட்ட கொடுமை களை எதிர்ப்பவர்கள்.

காங்கிரசுக்கும் கனதனவான்களுக்கும் ஏற்பட்டு விட்டுள்ள கூட்டுச் சதித் திட்டத்தைத் தகர்த்திடத் துடிப்பவர்கள்

. ஏழை வாழ்ந்திட வேண்டும்; இல்லாமை ஒழிய வேண்டும்; நிம்மதி ஓங்க வேண்டும் என்ற உன்னதமான இலட்சியத்துக்காகப் போராடுபவர்கள்.

மொழி காத்திட, உரிமை காத்திட, எதனையும் இழந்திடும் துணிவு பெற்ற தூய உள்ளத்தினர்.

இவர்களை ஆசை அலைக்கழிக்கவில்லை;

அச்சம் மருட்டவில்லை; ஆளவந்தார்களின் அட்டகாசம் அடக்கிட முடியவில்லை.

ஏடு பல காட்டி இவர்களை மயக்கிட முடியவில்லை.

ஏதேதோ செய்கிறோம் என்று தித்திப்புத் தடவி இவர்களை இழுத்திட முடியவில்லை.

இவர்கள் அஞ்சா நெஞ்சினர்; அறப்போர் இயல்பினர்,

இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்?

இவர்கள் பலர்! மிகப் பலர்! இவர்களை வீழ்த்திட முனைபவரோ சிலர்!

இவ்விதமான எண்ணமெல்லாம் கொள்ளுகின்றேன்; இதயத்திலே ஓர் இசையே சுரக்கிறது. அவர்களைக் காண்கிறேன். கனிவு என்றால் என்ன என்பது விளக்கமாகிறது, அவர்களிடம் பேசுகிறேன்; பாசம் என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்கிறேன்; புதியதோர் ஆர்வம் பெறுகிறேன்.

என் உள்ளத்தில் எழுந்திடும் ஆர்வத்தின் அளவு எவ்வளவோ, அந்த அளவு என் உடலில் வலிவு இருக்கக் கூடாதா, இல்லையே என்று எண்ணி ஏக்கம் கொள்கிறேன்.

ஒவ்வொரு கூட்டமும் என்னை அந்த மக்களுடன் பிணைத்துவிடுவதை உணருகிறேன் - பாசப் பிணைப்பு அஃது என்பதால் பெருமிதம் கொள்கிறேன்.

நான் பெற்றிடும் இந்தப் பெருமிதத்தைத்தான் மற்ற பேச்சாளர்களும் பெறுவர் என்பதை எண்ணிப் பார்க்கிறேன்; மிகப் பெரியதோர் குடும்பம் நமது

கழகம் என்ற இலக்கணம் மெய்ப்பிக்கப்பட்டு வருகிறது என்பதை உணர்ந்து மகிழ்கிறேன்.

புதுப்பாளையம்	பகத்தூர்
சிறுவாளூர்	வடுகபாளையம்
தூக்கநாய்க்கன் பாளையம்	மேட்டுப்பாளையம்
	காளிங்கராயன்பாளையம்
தாசப்பகவுண்டன்	தொட்டிபாளையம்
புதூர்	அத்தாணி
கூடக்ரை	சவுண்டப்பூர்
நம்பியூர்	பவானி
பவானிசாகர்	கவுந்தப்பாடி
புஞ்சைபுளியம்பட்டி	அந்தியூர்
காவ-பாளையம்	ஓலகடம்
உக்கரம்	ஆண்டிபாளையம்
சத்தியமங்கலம்	குருவரெட்டியூர்
கோபிசெட்டிப்பாளையம்	கந்தாம்பாளையம்
தாளக்கொம்புபுதூர்	கீரனூர்
பெருந்தலையூர்	ஆலாம்பாடி
பொத்தபாளையம்	பச்சாம்பாளையம்
உடையாம்பாளையம்	நாச்சிபாளையம்
கெம்பநாயக்கன் பாளையம்	புதுப்பை
கோவை நகர உட் கிளைகள்	எரசனம்பாளையம்
கோவை நகரம்	கன்னிவாடி
தாயனூர்	மூலனூர்
தோலம்பாளையம்	புளியம்பட்டி
கெண்டேபாளையம்	லக்கமநாயக்கன்பட்டி
காரமடை	வெள்ளகோயில்
எல்லப்பாளையம்	முத்தூர்
வரதய்யன்பாளையம்	காங்கயம்
அன்னூர்	வரப்பாளையம்
நீலிபாளையம்	தாராபுரம்
கருவலூர்	எலகாம்வலசு
பெரிய ஆயிபாளையம்	கெல்லிபாளையம்

ராக்கியாபாளையம்	சிவன்மலை
அம்மாபாளையம்	வெள்ளவாவிபுதூர்
அவினாசி	காமாட்சிபுரம்
சேவூர்	கண்ணம்பாளையம்
சாவக்கட்டுபாளையம்	பட்டணம்
திருமுருகன் பூண்டி	பாப்பம்பட்டி
சிறுமுகைபுதூர்	அப்பநாயக்கன்பட்டி
ராசிபாளையம்	சூலூர்
அருகம்பாளையம்	வாகராயம்பாளையம்
திருப்பூர்	ஆனைமலை
சோமனூர்	காளியாபுரம்
கோம்பக்காடு	பழனிக் கவுண்டனூர்
பல்லடம்	பொள்ளாச்சி – பல வட்டங்கள்
பள்ளபாளையம்	கோடம்பட்டி
வதம்பச்சேரி	புளியம்பட்டி
சேகம்பாளையம்	ராசக்காபாளையம்
காமநாயக்கன்பாளையம்	கொப்பம்புதூர்
பூலவாடி	வடசித்தூர்
துங்காவி	வெள்ளே கவுண்டன் புதூர்
தாமரைப்பாடி	அரசன்பாளையம்
கணியூர்	கிணத்துக்கடவு
சோழமாதேவி	சேரிபாளையம்
மடத்துக்குளம்	மொடக்குறிச்சி
கொழுமம்	அரச்சலூர்
கொமரலிங்கம்	மேலப்பாளையம்
சாமராயபட்டி	புதுப்பாளையம்
மலையாண்டி கவுண்டனூர்	குமாரபுரி
கண்ணமநாயக்கனூர்	ஈங்கூர்
உடுமலைப்பேட்டை	வீரப்பன்சத்திரம்
தேவனூர்புதூர்	பெரிய அக்ரகாரம்
காரத்தொழுவு	ஈரோடு
வால்பாறை	குன்னத்தூர்

வாட்டர் பால்ஸ்	ஊத்துக்குளி
கல்லூர்	பெருமாநல்லூர்
பச்சைமலை	பெங்கால்மட்டம்
பழனியூர்	மஞ்சூர்
பெத்தநாயக்கன்	குன்னூர்
பாளையம்	
உதக மண்டலம்	

தம்பி! புஞ்சை புளியம்பட்டி தோழர் சாமிநாதன் அனுப்பிய கடிதத்தின் மூலம், நான் கோவை மாவட்டச் சுற்றுப் பயணத்தின்போது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளச் சென்றிருந்த ஊர்களின் பட்டியலைத் தொகுத்துத் தந்திருக்கிறேன்.

இத்தனை ஊர்களிலும் - இவைகளில் பல, பாளையங்கள் - நமது கழகத்திடம் பற்று நிரம்பக் கொண்டவர் பல்லாயிரவர் இருந்திடக் கண்டு பெரு மகிழ்ச்சி கொண்டேன். அவர்கள் ஆர்வத்துடன் கூறுகின்றனர். "அண்ணா! இந்த முறை வெற்றி நமக்குத்தான்!! கவலைப்படாதீர்கள்" என்று.

அவர்களுக்குப் புள்ளிவிவரம் போதுமான அளவு தெரியாது. மேற்கோள்கள் அவர்கட்கு மனப்பாடமாகவில்லை. வரலாற்றுச் சான்றுகளை இவர்கள் தேடி அலைந்து கொண்டில்லை.

கண் இருக்கிறது, காண்கின்றனர்; காங்கிரசாட்சியால் நாடு கொண்டுவிட்ட அலங்கோலத்தை.

காது இருக்கிறது; விம்மல், குமுறல், பெருமூச்சு, கதறல் விழுகிறது.

அறிவு இருக்கிறது; தூய்மை கெடாத அறிவு; சிந்திக்கிறார்கள்! தெளிவு பிறக்கிறது.

வயலைப் பார்க்கிறார்கள் வயிற்றையும் பார்த்துக் கொள்கிறார்கள்!

வரட்டும்! வரட்டும் இந்த முறை ஓட்டுக்கு - என்று மெல்லிய குரலில் ஆனால் உறுதி நிரம்பிய தன்மையில் கூறுகிறார்கள்.

இவர்களிடம் காங்கிரஸ் தலைவர்கள் சென்று, நாங்கள் இப்போது நாலாவது ஐந்தாண்டுத் திட்டம் போட்டிருக்கிறோம் என்று சொன்ன உடனே, பூரித்துப்போய் விடுவார்களோ! ஏமாளித்தனமான எண்ணம்!

திட்டம்தானே ஐயா! ஐந்தாண்டுத் திட்டம்!! தெரியுமே! பார்த்தோமே!! அனுபவித்துக்கொண்டுதானே இருக்கிறோம் திட்டங்களை!!

என்றுதான் சலிப்புடன் பேசுவார்கள். அவர்கள் திட்டங்களுக்கு விரோதிகள் அல்ல! ஆனால் திட்டங்கள், ஏழைக்கு பயன்பட வில்லையே என்ற வேதனையால் தவிக்கின்றார்கள்.

அவர்களின் சார்பிலே பணியாற்றிடும் ஆச்சார்ய வினோபா பாவே, அவ்வப்போது காங்கிரசாட்சியினால் விளைந்துள்ள கேடுபாடுகளை விளக்கிக்கொண்டு வருகிறார்.

அவருக்குப் பூசை நடத்தக்கூடக் காங்கிரஸ் தலைவர்கள் முன்வருகிறார்கள். ஆனால் அவருடைய அறிவுரையின்படி நடந்திட மட்டும் மறுக்கிறார்கள். முடியவில்லை!!

தம்பி, இந்த ஐந்தாண்டுத் திட்டம்பற்றி வினோபா மிகக் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறார். இதனைக் "குருட்டுத் திட்டம்' என்றே கூறுகிறார். நிலைமையைத் தெரிந்து கொள்ளாதவர்கள் தீட்டிடும் திட்டம். அவர்கள் மெத்தப் படித்தவர்களாக இருக்கலாம். ஆனால் ஏழைகளை அவர்கள் கண்டதில்லை!! - என்று

சாடுகிறார்.

நிலைமை மிகவும் சீர்கேடடைந்து வருகிறது. இதைத் தில்லியிலுள்ள நமது தலைவர்கள் பார்க்காமல் இல்லை. அவர்கள் அவற்றை நன்கு அறிவார்கள். ஆனால் அவற்றிற்கு மாற்று என்ன என்பதைக் கண்டறியத் திறனில்லாதவர்கள் என்றே நான் வருத்தத்துடன் கூற வேண்டியிருக்கிறது.

திட்டத்தை இயற்றியவர்கள் மிகப் பெரியவர்கள், அவர்களில் சிந்தனையாளர்கள், பொருளாதார சமூக சாஸ்திர நிபுணர்கள் அனைவரும் இருக்கிறார்கள், ஆனால் அனைவருமே இந்தத் தேசத்தின் ஏழையைக் கண்டறியாதவர்கள்.

எல்லோரும் பட்டணத்தையும் பட்டணத்தின் பகட்டான வாழ்க்கையையும் பார்த்துப் பழக்கப் பட்டவர்கள். முதுகோடு முதுகாக ஒட்டிக்கிடக்கும் விவசாயியின் வயிற்றையோ மற்ற ஏழைக் கிராம மக்களின் நிலைமையையோ அவர்கள் கண்டறிந்ததில்லை என்றே கூற வேண்டும். அதைத்தான் திட்டமும் பிரதிபலிக்கிறது.

பதவிபெறும் நோக்குடன் காங்கிரசைக் குறைகூறித் திரிகிறார் என்று வினோபாவேயைக் கூறிடும் துணிவு வராது என்று நம்புகிறேன். இதுவரையில் அத்தகைய துணிவு வரவில்லை.

அவருடைய கண்டனம், மனம் வெதும்பி வெளிவந் திருக்கிறது. இந்த இலட்சணத்தில் திட்டத்தைத் தீட்டியும் நடத்தியும் வந்திருக்கும் காங்கிரசு, மீண்டும் ஆதரவு கேட்கிறதே, என்ன நியாயம்?

நியாயமற்றதுதான். ஆனால் நிதி இருக்கிறதே நிரம்ப! பணம் இருக்கிறதே, கோடி கோடியாக!! பணம் பாதாளம் வரை பாயுமே! - என்கிறார்கள்.

தம்பி! நாடு என்ன பதில் அளிக்க வேண்டும்? என்ன பதில் கிடைக்கப்போகிறது என்பது, உன் உழைப்பைப் பொறுத்து இருக்கிறது.

இடையே உள்ள நாட்கள் அதிகமில்லை; அவை வேகமாகவும் உருண்டோடிக்கொண்டுள்ளன. எனவே உன் நேரம் முழுவதும், நினைப்பு முழுவதும், அறிவாற்றல் அவ்வளவும், இந்த ஒரே காரியத்துக்கு என்ற உறுதியுடன் இன்றே பணியாற்றக் கிளம்பிடுவாயேல், தம்பி! வெற்றி நிச்சயம். நாடு வாழ்ந்திடும்; வாழ்த்திடும்! உன்னால் மட்டுமே இந்த வெற்றியைப் பெற்றுத்தந்திட முடியும்; ஆனால் ஒரே ஒரு நிபந்தனை; மற்ற எதற்கும் இரண்டாவது இடமே - முதல் இடம், ஜனநாயகப் பாதுகாப்புக்கே - கழக வெற்றிக்காகப் பணியாற்றுவதற்கே - என்ற உறுதியுடன் தொண்டாற்ற வேண்டும். முடியுமா? செய்வாயா?

கேள்வி கேட்கிறேன் பார், கேள்வி - செய்வாயா? என்று. இப்போதே அதைத்தானே செய்துகொண்டிருக்கிறாய்!! அந்த மகிழ்ச்சி தந்திடும் வலிவுதானே என்னையும் வேலை செய்திடச் செய்கிறது.

அன்புள்ள
அண்ணாதுரை
31-7-66

இட்லர்கூட சோஷியலிசம் பேசினான்!

ஒரே படம், இரு வேறு பதில்கள்!
தேன் துளி தெளித்தால் தீர்ந்திடுமா கவலை?
ஜெர்மன் தேசிய சமதர்மத்தில் தைசன்கள்! இந்திய ஜனநாயக சமதர்மத்தில் பிர்லாக்கள்!
இட்லர் பாணியில் பேசுகிறார்கள் இவர்கள்!
கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவனா கோபுரம் ஏறி வைகுந்தத்துக்கு வழிகாட்டப் போகிறான்?

தம்பி!

ஒரு பணக்காரச் சிறுவன், ஒரு ஏழைச் சிறுவன் இருவரையும் ஒரு மனோதத்துவக்காரர் சோதனை செய்தார் ஒரு படத்தைக் காட்டி.

சாப்பிட்டுக்கொண்டிருக்கும் ஒரு சிறுவன் தன் தாயாரைப் பார்த்துச் சிணுங்கும் காட்சி படத்தில் வரையப்பட்டிருந்தது.

படத்திலுள்ள சிறுவன் என்ன காரணத்துக்காகச் சிணுங்குகிறான் என்று கேட்டார் மனோதத்துவக்காரர்.

ஒரே படம்! இரண்டு சிறுவர்கள் பார்க்கிறார்கள்!! பதில்? இன்னும் கொஞ்சம் சோறு கேட்கிறான் சிறுவன். அதற்காகத்தான் சிணுங்கிக்கொண்டிருக்கிறான் என்று பதில்

அளித்தான் ஏழைச் சிறுவன்.

எனக்குப் பசி இல்லை அம்மா? போதும் சாப்பாடு! இனிச் சாப்பிட முடியாது!! - என்று தாயிடம் சொல்கிறான் படத்திலுள்ள சிறுவன் - அதனால்தான் சிணுங்குவது போலப் படம் வரையப்பட்டிருக்கிறது என்று பதில் தந்தான் பணக்காரச் சிறுவன்!

ஒரே படம்! இரு வேறு பதில்கள்!!

ஏழை, பணக்காரன் என்ற இரு வேறு நிலைகள், இரு வேறு இயல்புகளைத் தந்திருக்கிறது என்பதைக் காட்டுவது இந்தக் குட்டிக் கதை.

ஏழை, பணக்காரன் என்ற மாறுபட்ட நிலையை மாற்றாமல், அந்த நிலைமை காரணமாக ஏற்பட்டுவிடும் இயல்பினை மாற்ற முயற்சிப்பது, குதிரையின் காதுப் பக்கத்தில் மாட்டுக் கொம்பினைக் கட்டிவிடுவதுபோன்றதாகும்! விந்தைக் காட்சியாக இருக்கும் இயல்பு மாறாது.

ஏழை, பணக்காரன் என்ற நிலைமைகள், மனித இயல்பை வேறு வேறு தரமுள்ளதாக்குவது மட்டுமல்ல, சமூகத்திலே கசப்பும், கொதிப்பும், பேதமும், பிளவும், பகையும், சமரும் மூண்டு விடுவதற்கும் அந்த நிலைமைகளும், அவற்றின் தொடர்பாக அமைந்துவிடும் இயல்பும் காரணமாகிவிடுகிறது.

நிலைமையை மாற்றுவதன் மூலம் இயல்பை மாற்றி, இந்த விரும்பத்தகாத சூழ்நிலையை அப்புறப்படுத்த முடியுமே தவிர, நிலைமையை அப்படியே வைத்துக்கொண்டு, கசப்பும் கொதிப்பும் போக வேண்டும், பேதமும் பிளவும் தொலைய வேண்டும், பகையும் சமரும் கூடாது என்று "உபதேசம்' செய்து பார்ப்பது, படகிலே உள்ள ஓட்டையைச் செப்பனிடாமல், உள்ளே புகும் தண்ணீரை வெளியே

எடுத்துக் கொட்டிக் கொண்டே இருக்கும் முயற்சி போன்றதாகும்.

காங்கிரசாட்சிக்கு, நிலைமையை மாற்ற வேண்டும் என்ற துணிவும் இல்லை; எண்ணமும் இல்லை. சொல்லப் போனால், இந்த நிலைமை தீதானது ஆபத்தை மூட்ட வல்லது என்ற கருத்தே இல்லை; இந்த நிலைமை மாற்றப்படத்தக்கதுதான் என்ற நம்பிக்கையும் இல்லை.

நிலைமையை மாற்றாமல், இயல்பை மாற்ற முடியும் என்ற தவறான போக்கைக் காங்கிரசாட்சி மேற்கொண்டிருக்கிறது.

அந்தத் தவறான போக்கு காரணமாகத்தான், காங்கிரசாட்சி எங்கள் சோஷியலிசத்தில், ஏழைக்கும் இடம் கிடைக்கும், பணக்காரனுக்கும் இடம் கிடைக்கும் என்று பேசுகிறது.

சோஷியலிசம் என்பது திட்டவட்டமான ஒரு ஏற்பாடு; எல்லோருக்கும் இரண்டொரு சொட்டு தேன் தெளித்துவிடுகிற தந்திரம் அல்ல.

காங்கிரஸ் பேசும் சோஷியலிசம், இந்நாட்டுச் சீமான்களை மட்டுமல்ல அமெரிக்க நாட்டுப் பெரிய முதலாளிகளையே அச்சம் கொள்ளச் செய்யாததற்குக் காரணம் இதுதான்; காங்கிரசின் சோஷியலிசப் பேச்சு விவரமறியாத ஏழைக்கென்றே தயாரிக்கப்படும் இனிப்புப் பானம் என்பதை அவர்கள் நன்றாகப் புரிந்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இந்தியாவிலே "முதல்' போட்டு தொழில் நடத்தச் சொல்லுகிறீர்களே; இந்தியா சோஷியலிசம் பேசுகிறதே; அங்கு பெரிய முதல் போட்டு தொழில் நடத்துவது ஆபத்து அல்லவா என்று அமெரிக்க நாட்டு முதலாளிகள் கேட்டபோது, அமெரிக்க

அரசியல் தலைவரொருவர் புன்னகையுடன் கூறினார்

இந்தியாவில் பேசப்பட்டு வரும் சோஷியலிசம் பற்றிப் பயம் கொள்ளாதீர்கள் என்று.

மேடையிலே "சோஷியலிசம்' பேசிவிட்டு, சீமான்களின் மாளிகைகளில் விருந்து சாப்பிடும்போது, காங்கிரஸ் தலைவர்கள் விளக்கம் தருகிறார்கள், விவரமறிந்த சீமான்கள்,

"எல்லாம் எங்களுக்குத் தெரியும்'

என்ற குதூகலத்துடன் கூறிவிட்டு

பாவம், ஏழைகளும் வாழத்தானே வேண்டும் என்று உருகுகிறார்கள்.

ஐயோ! பாவம்! ஏழை! அவனும் மனிதன்! - என்ற இரக்கப் பேச்சு இன்று நேற்று தோன்றியது அல்ல; பஞ்சையும் பராரியும் தோன்றியபோதே தோன்றியது. அது பேச்சாக, பாட்டாக, நாடகமாக, காவியமாக, பேருரையாக, உபதேசமாக, வெளிவந்த வண்ணம் இருக்கத்தான் செய்கிறது. ஏழை பணக்காரன் என்ற பேதத்தை அந்தப் பேச்சு நீக்கிவிடவில்லை.

உழைப்பே, செல்வத்தை உற்பத்தி செய்கிறது.

உழைப்போரின் தொகை அதிகம்.

உழைப்பின் மூலம் உற்பத்தி செய்யப்படும் செல்வம், உழைப்போர் அனைவருக்கும் ஒரு சீராகக் கிடைக்குமானால், சமூகம் முழுவதும் பலன் பெறும்; ஒருபுறம் சோலை, சுற்றிலும் பாலை என்ற நிலை ஏற்படாது.

ஒரு சீராகக் கிடைக்குமானால்! - என்று கூறிவிட்டோமே தம்பி! எளிதாக! இது தன்னாலே நடைபெற்றுவிடுமா? பாவ புண்ணியம் பற்றிய

உணர்ச்சி மூலமாக ஏற்பட்டுவிடுமா? ஏற்பட்டு விடுவதில்லை!

வருவாய் அல்லது செல்வ உற்பத்தி சமூகத்தில் ஒரு சீராகப் போய்ச் சேராததால்தான், இத்தனைக் கேடுபாடுகள் ஏற்பட்டுவிட்டன.

இந்தக் கேடுபாடுகளை நீக்கவேண்டுமானால், உற்பத்தி ஆகிற செல்வம் ஒரு சீராக, சமூகம் முழுவதற்கும் பரவிடும் முறையைச் செயல்படுத்த வேண்டும். அதனை ஒரு அரசுதான் துணிந்து மேற்கொள்ள முடியும். அந்தத் துணிவு ஒரு அரசுக்கு ஏற்படவேண்டுமானால் அது, செல்வத்தைத் தமதாக்கிக்கொள்ள முனைந்திடும் செல்வவான்களின் செல்லப் பிள்ளையாகிவிடக் கூடாது.

சில திங்களுக்கு முன்பு இந்தியப் பூபாகத்திலே மிகப் பெரிய கோடீஸ்வரராக உள்ள பிர்லா முதலாளிகளைக் கூட்டிவைத்து, நாம் அனைவரும் மீண்டும் காங்கிரஸ் ஆட்சியே அமைவதற்காகப் பாடுபட வேண்டும்; ஏனெனில் நம்மைப் பாதுகாக்கக்கூடியது காங்கிரஸ் கட்சி ஒன்றுதான் என்று பேசினார்.

கட்டுப்பாடுகள் சில விதிக்கும்போது கடுங்கோபம் கொள்கிறார்கள்; வரி கூடுதலாக்கும்போது வெகுண்டெழுகிறார்கள்; ஆனாலும் அதே முதலாளிகள் ஆர அமர யோசித்துப் பார்க்கும்போது, உண்மையான "சோஷியலிசத்தை’ வரவிடாமல் தடுத்து நிறுத்தவும், அதேபோது சோஷியலிசம் பேசி ஏழைகளை மயக்கத்திலாழ்த்தி வைக்கவும் காங்கிரசைவிடத் திறமையான கட்சி எதுவுமில்லை என்பதை உணருகிறார்கள்; காங்கிரசுக்கு ஆதரவு திரட்டித் தருகிறார்கள்.

வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்ட

கணக்கின்படி, சென்ற பொதுத் தேர்தலிலே காங்கிரசுக்கு முதலாளிகள் கொடுத்த நன்கொடைத் தொகை கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாயல்லவா?

இந்த ஒரு கோடி எதற்கு? எவ்வளவு வேண்டுமானாலும் சோஷியலிசம் பேசுங்கள்; ஆனால் நடைமுறைக்குக் கொண்டு வராதீர்கள் என்று கேட்டுக் கொள்வதற்குத்தானே!

தம்பி! சோஷியலிசம் பேசிவிடுபவர்களெல்லாம் ஏழையை வாழ வைத்துவிடுவார்கள் என்று கூறிவிடுவதற்கில்லை. இட்லர் பேசாத சோஷியலிசமா!

நாஜிசம் என்று கூறப்படுகிறதே, இட்லர் புகுத்திய முறை நினைவிலிருக்கிறதல்லவா? அதுகூட சோஷியலிசம் என்ற பெயருடன் இணைந்ததுதான்.

இதோ இவர்கள் தமது சோஷியலிசத்துக்கு ஒரு அடை மொழி சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள் அல்லவா, ஜனநாயக சோஷியலிசம் என்று; அதுபோல, இட்லர் தம்முடைய சோஷியலிசத்துக்கும் ஒரு அடைமொழி சேர்த்துக்கொண்டார், தேசீய சமதர்மம் - என்பதாக.

அந்த "National Socialism’ என்பதுதான் சுருங்கி மருவி, நாஜிசம் என்ற பெயராயிற்று.

என்ன கண்டனர் ஜெர்மன் மக்கள்? பயங்கரமான போர்!

என்ன தந்தது இந்த நாஜிசம் உலகுக்கு? அமளி, அழிவு!

இவர்கள் ஜனநாயக சோஷியலிசம் பேசுகிறார்கள்.

எங்கள் சோஷியலிசத்தில் முதலாளியும்

இருப்பான்; ஆனால் அவன் வெறும் சுரண்டல்காரனாக இருக்க மாட்டான்; இலாப வேட்டைக்காரனாக இருக்க மாட்டான்; ஏழையை வாழவைக்கும் கருணாமூர்த்தியாக இருப்பான்; அவனை அப்படி மாற்றுவோம் என்று. அது போலவே, இட்லர் சொன்னான். என்னுடைய நேஷனல் சோஷியலிசத்தில் (தேசீய சமதர்மத்தில்), முதலாளி இருப்பான், ஆனால் அவன் தேசீய முதலாளியாக, நாட்டு நலனைக் காத்திடும் முதலாளியாக, அரசின் ஆணைக்குக் கட்டுப்பட்டு, நாட்டு வளத்தைப் பெருக்கிடும் முதலாளியாக இருப்பான் என்று பேசினான்! உரத்த குரலில்! கேட்போர் மயங்கும் வண்ணம்! இதோ ஓர் புது தத்துவம் என்று பலரும் பாராட்டத்தக்க விதமாக.

தம்பி! பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் - இதழாசிரியர்கள் போட்டி போட்டுக்கொண்டு விளக்கம் தயாரித்து அளித்தனர், வெறும் சோஷியலிசத்தைவிட, இட்லர் தந்திடும் நேஷனல் சோஷியலிசம் சிலாக்கியமானது, நாட்டுக்கு ஏற்றது என்றெல்லாம்.

இட்லருடைய நாஜிசத்தில், அதாவது நேஷனல் சோஷியலிசத்தில், "க்ருப் தைசன்’ போன்ற பெரும் முதலாளிகள் கோட்டை கட்டி வாழ்ந்தனர்; தம்மை தேசீய முதலாளிகள் என்று காட்டிக் கொள்வதற்காக, தமது கோட்டைகளிலே சுவஸ்திக் கொடியைப் (இட்லரின் கொடியை) பறக்கவிட்டனர்.

அந்த நாஜிசம் ஜெர்மன் நாட்டு ஏழைகளைக் காப்பாற்றிற்றா? பயங்கரமான அழிவைத் தந்தது; நாடே அடிமைக் காடு ஆக்கப்பட்டது.

இவர்கள்கூடத் தம்பி! வெறும் சோஷியலிசம் என்பதைவிட, நேஷனல் சோஷியலிசம் என்று கூறுவது வசீகரமாக இருக்கும் என்ற கருத்துடையவர்கள்தாம். ஆனால், நேஷனல்

சோஷியலிசம் எனும் நாஜிசம் உலகிலே - ஒரு கெட்ட பெயர் எடுத்து விட்டதால், மக்கள் வெறுப்பதால், நேஷனல் சோஷியலிசம் என்று கூறக்கூடாது என்று தீர்மானித்து ஜனநாயக சோஷியலிசம் என்று பேசி வருகிறார்கள்.

இட்லர் முதலாளிகளை கொலுவிருக்கச் செய்தான், அவர்கள் தனக்குக் கொடி பிடிப்போர்களாக இருந்து வரவேண்டும் என்ற நிபந்தனையுடன். இவர்களும் எத்தனை பிர்லாக்களும் இருக்கலாம், தொழில் நடத்தலாம், செல்வபுரி அமைக்கலாம், ஆனால் ஒரு நிபந்தனை, எமது "போஷகர்களாக' இருக்க வேண்டும் என்று கூறிவிட்டனர்.

இங்கும் தைசன்கள் வளருகிறார்கள்.

அன்று தைசனை வளரவிட்டபடி நேஷனல் சோஷியலிசம் பேசினான் இட்லர்.

இன்று பிர்லாக்களைக் கொழுக்க வைத்துக்கொண்டே காங்கிரஸ் ஜனநாயக சோஷியலிசம் பேசி வருகிறது.

முதலாளி, போகபோக்கியத்தில் புரளுவதற்காகத் தன் செல்வத்தைப் பயன்படுத்தினால், அது கெடுதல், ஆனால் அவன் தன் செல்வத்தை நாட்டு வளத்தை அதிகமாக்க, எழில் கூட்ட, ஏற்றம் உண்டாக்க, பிற நாட்டார் கண்டு அஞ்சத்தக்க வலிவு நமது நாட்டுக்கு ஏற்படப் பயன்படுத்தினால், நல்லதுதானே என்று கேட்டான் இட்லர். அவனிடம் சொக்கிப்போன மக்கள் ஆம்! ஆம்! என்றனர்.

அதுதான், என் அருமை மக்களே! நாஜிசம்!! - என்றான் இட்லர்; வாழ்க நாஜிசம் என்று ஜெர்மன் மக்கள் முழக்கமிட்டனர்!

இங்கே அதே பாணியில் பேச்சு!!

தொழில் பெருகவேண்டுமல்லவா? - ஆமாம்!

தொழில் பெருகவேண்டுமானால் புதிய புதிய தொழில் நடத்தும் முதலாளிகள் வேண்டுமல்லவா? அதனால் நமது சோஷியலிசத்தில் முதலாளிகள் இருக்கிறார்கள் தவறா? - என்று கேட்கின்றனர் ஆளவந்தார்கள்.

"ஆம்'' என்பவன் அணைத்துக்கொள்ளப்படுகிறான் - அது சரியில்லையே! என்பவன் அடித்து நொறுக்கப்படுகிறான்.

இட்லரின் நேஷனல் சோஷியலிசத்தில் சுவஸ்திக் திரைக்குப் பின்னாலே இருந்துகொண்டு முதலாளிகள் கொட்டமடித்தார்கள். காங்கிரசாட்சியில், மூவர்ணக் கொடி மறைவிலே இருந்துகொண்டு, முதலாளிகள் பெருத்துக்கொண்டு வருகிறார்கள்; காங்கிரஸ் கட்சியையே குத்தகைக்கு எடுத்து நடத்திக்கொண்டும் வருகிறார்கள்.

அரண்மனை போன்ற மாளிகைகள், அன்னங்கள் ஊர்ந்து செல்லும் அழகிய செயற்கைக் குளங்கள், அவைகளிலே துள்ளிடும் பல வண்ண மீன்கள், அவற்றினைக் கண்டு கலகலவெனச் சிரிப்பொலி எழுப்பும் சிங்காரிகள், அந்தச் சிங்காரிகளின் இதழ் கண்டு ஏங்கிடும் சீமான்கள். இந்தக் காட்சியை ஓவியமாக்கிய வர்கள், கவிதை இயற்றியவர்கள், இவை எல்லாமே இருந்தன பிரான்சு நாட்டில். இவற்றை அந்த நாட்டு ஆட்சியாளர்கள், சீமான்கள் போகபோக்கியத்தில் புரளும் நிலை என்று கருதவில்லை; மாறாக அவர்கள் இந்த நிலையினை,

பிரஞ்சு நாட்டு எழில், ஏற்றம்!
பிரஞ்சு நாட்டுச் சிற்பக் கலையின் சிறப்பு!
பிரஞ்சு நாட்டு ஓவியத் திறமை!
பிரஞ்சு நாட்டுக் காவியப் புலமை!

பிரஞ்சு நாட்டில் காதல், ஒரு கலையாகி இருக்கும் நேர்த்தி என்றுதான் பெருமிதம் கொண்டனர்.
பிரஞ்சு நாட்டு மக்கள்கூட, நெடுங்காலம் நம்பினர்! உண்மை பிறகுதான் வெடித்துக் கிளம்பிற்று!!

அதுபோன்றே, இங்கு முதலாளிகள் அமைத்துள்ள பணக் கோட்டையை பாரத நாட்டுச் சிறப்பு என்று காங்கிரசார் பேசுகின்றனர்; நம்பச் சொல்லுகின்றனர்.

ஒரு அமைச்சர் தம்பி! துணிந்து, வெகுதூரம் சென்று விட்டிருக்கிறார். முதலாளிகள் பணத்தைக் குவித்துக்கொள் கிறார்கள் என்று கொதிப்படைகின்றீர்களே, எங்கே போய்விடும் அவர்களிடம் குவிந்துள்ள பணம்? இந்த நாட்டில்தானே இருக்கிறது! வெளிநாடுகளுக்கா போய்ச் சேர்ந்துவிட்டது அந்தப் பணம்? இங்கேயே, நம் நாட்டிலேயேதான் இருக்கிறது! இந்த நாடு, அவர்களுக்கு மட்டுமா சொந்தம்? இல்லையே! இது உனக்கும் சொந்தமான நாடுதானே! அப்படியானால், அந்தப் பணம், உன்னுடை நாட்டில்தானே இருக்கிறது!! இதை அறியாமல் முதலாளிகளிடம் போய்க் குவிகிறதே பணம் என்று கொதித்துப் பேசுகிறாயே தவறல்லவா! விவரம் தெரியாததால் வேதனைப்படுகிறாய்! தெரிந்துகொள், அவ்வளவு பணமும் இங்கேயேதான் இருக்கிறது, நம் நாட்டிலேதான் இருக்கிறது. கவலைப் படாதே, நாம் விரும்பும்போது அந்தப் பணத்தை வரி போட்டு எடுத்துக்கொள்ளலாம். பணம் எங்கும் போய்விட வில்லை, இங்கேதான் இருக்கிறது என்று பேசினார் - துணிந்து!!

தம்பி! கொள்ளைக்காரன், கன்னக்கோலன், காது அறுப்பவன், அகப்பட்டதைச் சுருட்டுபவன் போன்றார் திருடுகிறார்களே, அந்தச் செல்வமெல்லாம்கூட இங்கே தான் இருக்கிறது,

நம்முடைய நாட்டிலேயேதான்! அவர்கள், களவாடியதை கனடா நாட்டுக்கோ, காங்கோ நாட்டுக்கோ, ஆஸ்திரே-யாவுக்கோ, அர்ஜெண்டினா வுக்கோ கொண்டோடிவிடவில்லை; இங்கேயேதான் இருக்கிறது; இந்த நாட்டிலேயேதான் புண்ய பூமியாம் பாரத நாட்டிலேயே இருக்கிறது. ஆகவே பொருள் களவு போய்விட்டதே என்று கூச்சல் எழுப்பாதே; உன் பொருள் வேறு எந்த நாட்டுக்கும் போய்விடவில்லை; இந்த நாட்டிலேயே, உன் சொந்த நாட்டிலேயே இருக்கிறது என்று எவனும் கதைக்காகக்கூடத் துணியமாட்டான். ஆனால், நாடாள வந்துள்ள நல்லவர்கள், துணிந்து பேசுகிறார்கள், ஏழையின் வயிற்றில் அடித்து முதலாளிகள் குவிக்கும் பணம் வேறு எங்கும் போய்விடவில்லை, இந்த நாட்டிலேயே இருக்கிறது என்று!

கேட்டுக்கொள்கிறார்கள், கேட்டுக்கொள்ள வேண்டி இருக்கிறது.

முதலாளித்தனத்தை நீக்க மனமற்றவர்கள், துணிவற்றவர்கள் ஏன் "சோஷியலிசம்’ என்று பேசுகிறார்கள்? காரணமற்று அல்ல!

சோஷியலிசம் என்பதனை நாட்டின் பெரும்பான்மை மக்கள் விரும்புகிறார்கள் என்பது புரிகிறது.

உண்மையிலேயே சோஷியலிசத்தைச் செயல்படுத்தக் கூடியவர்கள் மக்களை அணுகினால் பேராதரவு பெற்று விடுவார்களே என்ற அச்சம் காரணமாக, மற்றவர்களை சோஷியலிசம் பேசவிடுவதா, அதையும் நாமே பேசி, உண்மை சோஷியலிஸ்டுகள் மக்களிடம் தொடர்பு கொள்ளாதபடி செய்துவிடலாம் என்ற நைப்பாசை காரணமாகவே காங்கிர சாட்சியினர் சோஷியலிசம் பேசுகின்றனர்.

அவர்களின் பேச்சு போலி என்பதையும், அவர்களின் போக்கு வெறும் பசப்பு என்பதையும் உணர்ந்தும், கட்டுக் கோப்புள்ள காங்கிரஸ் கட்சியை எதிர்த்து நிற்கும் துணிவற்று, காங்கிரஸ் கட்சிக்குள் நுழைந்து இடம்பெற்று, மெள்ள மெள்ள, காங்கிரஸ் கட்சியையே கருவியாக்கிக்கொண்டு சோஷியலிசம் கொண்டு வந்துவிடலாம் என்ற எண்ணத்துடன் சிலர் இருக்கிறார்கள். அதுபோலவே காங்கிரசின் செல்வாக்கைப் பழுதுபடாதபடி பார்த்துக்கொள்ளப் பெரும் பொருள் செலவிட்டு, அதனைத் தம்மிடம் வைத்துக்கொண்டு, கருவியாக்கி தங்கள் ஆதிக்கத்தைக் கெட்டிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற துணிவுடன் செல்வவான்கள் இன்று காங்கிரசில் இடம் பெற்றுள்ளனர்.

இந்த இரு தரப்பினருக்கும் பலப்பரீட்சை நடத்தப் படுவதில், இன்றுவரையில் செல்வவான்களின் கரமே ஓங்கிக் காணப்பட்டு வருகிறது.

அப்பழுக்கற்ற, உண்மையான சோஷியலிசத்தை மேற்கொண்டால், காங்கிரஸ் கட்சியில் மாஜி மகாராஜாக்களையும், ஆலை அரசர்களையும், வணிகக் கோமான்களையும் காண முடியாது. அவர்கள் தனித்திட்டிலே சிக்கிக்கொள்வார்கள்; அவர்களின் ஆதிக்கத்தை நீக்கிடும் திட்டம் எது கொண்டுவரப்பட்டாலும் எதிர்த்திடும் வலிவு அவர்களுக்குக் கிடைக்காது.

போன மாதத்திலேதான் தம்பி! ராம்கார் ராஜா காங்கிரசில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்; இதழ்களில் பார்த் திருப்பாயே! ராம்கார் ராஜா காங்கிரசில் நுழைகிறார். பழம்பெரும் காங்கிரஸ் தலைவர் அஜாய்குமார் முகர்ஜி காங்கிரசைவிட்டு வெளியேறுகிறார். நிலைமை புரிகிறதல்லவா? உனக்குப் புரிகிறது, ஆனால் காங்கிரஸ் தொண்டர்கள் எங்கே இதனைப்

புரிந்துகொள்ளுகிறார்கள்.

இந்த ராம்கார் ராஜா சுதந்திரக் கட்சியில் இருந்தபோது எதிர்த்தனர்; இன்று அணைத்துக்கொள்கின்றனர்; அகமகிழ் கின்றனர். எதனால்? அவர் தியாகி என்பதனாலா? ஏழைப் பங்காளர் என்பதனாலா? தொண்டு பல செய்த தூயவர் என்பதனாலா? இல்லையே! அவரிடம் உள்ள இலட்சங்கள், ஓட்டு வேட்டைக்குப் பயன்படும் என்பதனால்! அவர் நோட்டுக்களை நீட்டி ஓட்டுக்களை வாங்குவார், பிறகு காங்கிரஸ் வெற்றி! என்று முழக்கமிட்டு மகிழ்ச்சி அடையலாம் என்ற ஆசை காரணமாக!

இத்தகையவர்கள் இருக்கும்போது காங்கிரசால் எப்படி சோஷியலிசம் புகுத்துவதில் வெற்றி காண முடியும்?

தங்களை ஆதிக்கம் செலுத்தவும், தொழில் அமைப்புகளில் தர்பார் நடத்தவும் உரிமை கொடுத்து, வசதி ஏற்படுத்திக் கொடுத்து, பாதுகாப்பும் செய்து கொடுத்துவிட்டு, ஏழைகளின் மனம் குளிர்ச்சி கொள்வதற்காக சோஷியலிசம் பேசுகிறோம், அதற்காக வருத்தப்பட்டுக் கொள்ளாதீர்கள் என்று சொல்லும் போது, அந்த முதலாளிகளுக்கு, காங்கிரசிலே இருப்பதாலே என்ன நட்டம்? கசக்குமா, குமட்டுமா?

பெரிய அளவிலே வளர்ந்து, நாடாளும் வாய்ப்பும் பெற்றுள்ள காங்கிரஸ் கட்சியிலே இடம் பெற்றுக் கொள்வதன் மூலம், முதலாளிகள் தங்கள் ஆதிக்கத்தைப் பாதுகாத்துக் கொள்வதுடன், ஏழை எளியோரின் பகையும் தங்கள்மீது பாயாமல் ஒரு கேடயத்தையும் பெற்றுக் கொள்கிறார்கள்.

படிப்படியாகவாகிலும் சோஷியலிசம் வருகிறதா என்று பார்த்தாலும், வராதது மட்டுமல்ல,

நாளாகவாக முதலாளிகளின் ஆதிக்கம் வளர்ந்துகொண்டு வருகிறது.

உள்நாட்டு முதலாளிகளுக்கு இப்போது வெளி நாட்டு முதலாளிகளின் துணை, குறிப்பாக அமெரிக்க முதலாளிகளின் துணை அதிக அளவிலே கிடைத்துக் கொண்டு வருகிறது. உள்நாட்டு முதலாளிகளிடம் காட்டும் பரிவு மரியாதையைக் காட்டிலும் அதிக அளவுக்கு அமெரிக்க முதலாளிகளுக்கு இந்தியப் பேரரசை நடத்திச் செல்லும் காங்கிரஸ் தலைவர்கள் காட்டிக்கொண்டு வருகிறார்கள்.

காங்கிரசின் மூலமாக, எப்படியாகிலும் சோஷியலிசத்தைப் புகுத்திவிடலாம் என்று எண்ணமிட்டுக் கொண்டு, காங்கிரசிலே இருந்து வருபவர்களும், இந்தப் போக்கைக் கண்டு மனம் வெதும்பி சிற் சில நேரங்களில், கண்டனம் உமிழ்கிறார்கள். பிறகோ, கட்சிக் கட்டுப்பாடு அவர்களை ஒடுக்கிவிடுகிறது. காங்கிரசுக்கு ஓட்டு தேட அவர்களே கிளம்பிவிடவேண்டி நேரிட்டுவிடுகிறது.

காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே, ஒரு சமதர்ம முன்னணி இருக்கிறது! காங்கிரஸ் கட்சி போலியாகத்தான் சோஷியலிசம் பேசுகிறது என்பதற்கு இதனைவிடச் சான்று தேவையில்லை, அல்லவா?

மெய்வழிச் சபைக்குள் ஒரு உண்மை நாடுவோர் சங்கமும், சைவ மெய்யன்பர் கூட்டத்திற்குள், இறைச்சி விரும்பாதார் மன்றமும் இருந்திடின், விந்தை என்பீர்கள் அல்லவா? ஆனால் ஜனநாயக சோஷியலிசம் பேசும் காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே சோஷியலிச முன்னணி என்ற ஒரு பிரிவும் இருக்கிறது!!

அந்த முன்னணியினர் சின்னாட்களுக்கு முன்பு அறிவித்துள்ளனர்;

காங்கிரஸ், இவ்வளவு ஆண்டுகளாகியும் சோஷியலிசத்தை ஏற்படுத்துவதில் வெற்றி பெறவில்லை,

சோஷியலிசத்தைக் கொண்டு வரும் முயற்சியில் இதுவரையில் காங்கிரஸ் கட்சி ஈடுபடவேயில்லை.

சோஷியலிசப் பேச்சு நடைபெற்றுக்கொண்டிருக்கிற இதே நேரத்தில் முதலாளிகளின் ஆதிக்கம் வளர்ந்து கொண்டு இருக்கிறது என்பதாக.

இந்த "கண்டுபிடிப்புக்குப்’ பிறகும் அவர்கள் ஏன் காங்கிரசிலே இருக்கவேண்டும் என்று கேட்கிறாய். நியாயமான கேள்வி! அதைவிடத் தேவையான கேள்வி, உள்ளே இருப்பவர்களே மனம் குமுறிக் கிடக்கும்போது, ஊராரைப் பார்த்து ஜனநாயக் சோஷியலிசம் வேண்டுமானால், காங்கிரசில் வந்து கூடுங்கள் என்று அழைக்கிறார்களே, பொருள் இருக்கிறதா?

ஆனால் அழைக்கிறார்கள்!! ஏன்? சோஷியலிசம் என்பதன் கவர்ச்சி மக்களை ஈர்த்துக்கொண்டு வரும் என்பதால்.

வைகுந்தம் போக விரும்புவோரெல்லாம் என்னோடு வருக! - என்று அழைத்தான் ஒருவன்.

நெற்றியிலே திருநாமமும் கழுத்திலே துளசி மணி மாலையும் இருந்தது. கண்டவர்கள், அவனை நம்பி, "வைகுந்தம் போக வழி எது? சொல்லுங்கள் வருகிறோம்’’ என்றார்கள்.

"பள்ளிகொண்டான் கோயில் கோபுரம் தெரியுமா? அதன்மீது ஏறவேண்டும்! அங்கே சென்றதும்,

வைகுந்தம் போகும் வழியை நான் காட்டுகிறேன்'' என்றான் திருநாமதாரி. மக்கள் யோசித்தனர், சிறிதளவு தயக்கம் அவர்களுக்கு.

கட கடவெனச் சிரித்தான் ஒருவன்; மக்கள் அவனைத் திரும்பிப் பார்த்தனர்.

வைகுந்தத்துக்கு வழி காட்டுவதாகக் கூறுகிறாரா இவர்! கோபுரம் ஏறிக் காட்டப் போகிறாரா? ஏமாளிகளே! இவன் யார் தெரியுமா? இவன் கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாத பேர்வழி. அவன் வீட்டுக் கோழி, கூரையிலே ஏறிக்கொண்டது; கூரை ஏறிக் கோழியைப் பிடிக்க முடியாமல், கல்லை எடுத்து அதன்மீது வீச, குறி தவறி, வழியே வந்துகொண்டிருந்த மணியக்காரர் பிள்ளை தலைமீது விழ, மணியக்காரரின் ஆட்கள் இவனை நையப்புடைத்தார்கள். மண்டையில் பலத்த அடி; மூளை குழம்பிவிட்டது; அது முதற்கொண்டு இவன் இப்படித்தான் எங்கெங்கோ அலைந்து, வைகுந்தத்துக்கு வழி காட்டுகிறேன் என்று குளறிக்கொண்டிருக்கிறான். "கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாத இவனா கோபுரம் ஏறி வைகுந்தத்துக்கு வழி காட்டப் போகிறான்?'' என்று விளக்கமளித்தானாம்.

அதுபோல ஓரளவுகூட சோஷியலிசத்தைப் புகுத்த முடியாதவர்கள் என்று காங்கிரசைக் கண்டித்துக்கொண்டு, ஆனாலும் காங்கிரஸ் ஜனநாயக சோஷியலிசம் தந்திடும் என்றும் அந்த முன்னணியினர் பேசுகின்றனர், விந்தை அல்லவா?

விந்தை மட்டுமல்ல; இது விபரீதமான யோசனை என்பதை உணர்ந்துகொண்டு வருகிறது நாடு.

நாடு பெற்றுள்ள அந்த உணர்வினைத் தந்திட தம்பி! நீ மிகுந்த பாடுபட்டிருக்கிறாய்.

நீ, பட்ட பாடுகளுக்கு ஏற்ற பலனைப் பெறுவதற்கான நாளும் நெருங்கிக்கொண்டு வருகிறது. உன் நடையிலேயும் புது வேகம் காண்கிறேன், மகிழ்கிறேன்.

அன்புள்ள
அண்ணாதுரை
7-8-66

சிறகு விரித்து ஆடுவதெல்லாம் மயிலாகுமா?

ஏழைக்கும் வருவாய் உழைக்கும் ஓரிடத்தில் மட்டும்!
ஏழ்மை ஒரு நோய்; ஓட்டுவார் ஓட்டி!
புலித்தோலில் அமர்ந்தவன் யோகியாகிவிட முடியுமா?
காங்கிரஸ் ஆட்சி கனதனவான்களின் ஆட்சியே!
ஏழை - பணக்காரன் "ஓட்டில்' இல்லையாம்!
பூ எனக் கூவி முருங்கைப்பூ விற்பரோ?

தம்பி!

இல்லாமையும் போதாமையும் கொட்டிக்கொண்டுள்ள இடத்திலேயே உழன்றுகொண்டிருக்கிறாயே, வாயேன் சிறிது நேரமாகிலும் “உல்லாசபுரி' சென்று பார்ப்போம். அண்ணன் என்றால் இப்படி அல்லவா இருக்க வேண்டும், இன்னலைத் துடைத்து இதம் அளித்திட வேண்டும் என்றெல்லாம் எண்ணி அகமகிழ்ச்சியை அளவு கடந்துகொண்டுவிடாதே! நான் உன்னை அழைப்பது”உல்லாசபுரி'யில் இருந்திட அல்ல! பார்த்திட! கற்பனைக் கண்களால்!

மாளிகைக் கூடம், தம்பி! அதோ அமர்ந்திருக்கிறாரே, அவர்தான் பெருநிலக்கிழார் பேயாண்டி! பெயர் என்னவோ போல இருக்கிறதே என்று எண்ணிக்கொள்ளதே; "சாமி' பெயர்!!

எதிரே அடக்க ஒடுக்கமாக நின்று கணக்கேட்டைப் புரட்டிப் படிக்கிறாரே "காரியஸ்தர்', கவனி.

கானூர் வரவு ஆறு ஆயிரத்து நானூற்று எழுபது
சீனூர் வரவு எட்டாயிரத்து ஐம்பது.
சோரனூர் வரவு பத்தாயிரத்து எழு நூறு.
கல்லூர் வரவு ஆயிரத்து அறுநூறு.
மாந்தோப்புக் குத்தகை வரவு ஐயாயிரத்து ஐந்நூறு;
சவுக்குத் தோப்பு ஏல வரவு ஏழாயிரத்து நானூறு;
முந்திரித் தோப்புக் குத்தகை வரவு மூன்றாயிரத்து இரு நூற்று அறுபது.
ஆக மொத்தம். . . . .

தம்பி! பேயாண்டி பேசுவதைக் கேள். "ஆக மொத்தம்' இருக்கட்டும் ஓய்! கானூர் என்ன இப்படிக் குறைந்துவிட்டது? முந்திரி போன வருடம் நாலு இந்த வருடம் மூணு ஆகிவிட்ட காரணம் என்ன? சூளை போட இடத்தைக் குத்தகைக்கு விட்ட கணக்கையே காணோம். என்ன பெரிய புரட்டு நடக்குது என்றே தெரியவில்லை.

தம்பி! காரியஸ்தர் ஏட்டைப் புரட்டுகிறார்; ஏதாவது காரணம் கிடைக்கும்; கூறுவார்; ஐயா சமாதானமாகமாட்டார்; ஏசுவார்; அதைக் கேட்டுக்கொண்டிருப்பானேன், வா, வா! போய்விடலாம்! “உடையவர்’ வருவாய் எத்தனை வழிகளிலே பெறுகிறார் என்பதைக் காண வேண்டும் என்பதற்குத்தான் இங்கு அழைத்து வந்தேன். கவனித்தாய் அல்லவா, கானூர், சீனூர், சோரனூர், கல்லூர், இப்படிப் பல சிற்றூர்களிலே உள்ள நில புலத்திலிருந்து வருவாய். மாந்தோப்பு, முந்திரித்தோப்பு, சவுக்குத் தோப்பு இவைகளிலிருந்து வருவாய், வாடகைப் பணம், வட்டிப் பணம், வியாபார இலாபம் இப்படி வேறு வகையிலும் வருவாய்; கோயில் கும்பாபிஷேகம் நடத்தியது, தருமகருத்தா வேலை பார்த்தது, சத்திர நிர்வாகம்

போன்ற"புண்ணிய' காரியத்தின் மூலம்கூட "வருவாய்' உண்டு. தம்பி! நாம் தெரிந்துகொள்ள வேண்டியது விவரம் அல்ல; அவைகளுடன் பிணைந்துள்ள ஒரு பொது உண்மை;

சீமான் பல வழிகளில் வருவாய் பெறுகிறார் என்பதுதான்.

ஏழைப் பாட்டாளி அதுபோல, சிம்சன் கம்பெனி மூலம் ஆறு ரூபாய், சிவராமன் கடை மூலம் மூன்று ரூபாய், ராம் சேட் மண்டி மூலம் நாலு ரூபாய், சுந்தரம் ஸ்டோர் மூலம் எட்டு ரூபாய், ஆகமொத்தம் கிடைத்த வருமானம். . . என்று கணக்குக் கூற முடியாதல்லவா? அவன் பெறக்கூடிய வருவாய், இவைகளிலே ஏதாவது ஒரு இடத்தில் மட்டுந்தான்; அதுவும் வேலை நிலைத்திருந்தால்.

ஏழைக்கு வருவாய் உழைக்கும் இடம் ஒன்றில் இருந்து மட்டுமே கிடைக்கும்.

சீமானுக்கு வருவாய் பல இடங்களிலிருந்து கிடைக்கும்.

ஏழைக்கும் சீமானுக்கும் ஒரே வயிறுதான்; அதிலே வித்தியாசம் இல்லை.

ஆனால் வருவாய்த்துறை ஏழைக்கு பல இருப்ப தில்லை; சீமானுக்குப் பலப் பல.

ஆகவே ஏழை உழைக்கிறான் பிழைத்திருக்க!

சீமான், மேலும் சீமானாகிறான், பணம் குவிகிறது; குவிந்த பணம் சீமானுக்குப் புதுப் புது வருவாய்த் துறைகளைப் பெற்றுத் தருகிறது.

கானூர் நிலத்திலே கிடைத்த வருவாய் குவியக் குவிய, சீனூரில் புதிதாக நிலம் வாங்க முடிந்தது - சீமானால். கானூரில் இவருடைய நிலத்தை

உழுதுகொண்டிருக்கிறானே, அவனுக்கு இவர் மூலம் கிடைத்த வருவாயைக் கொண்டு அவன் பெற முடிந்தது என்ன? கேட்டுப் பார்த்தால், கண் கலங்குவாய்! "அவளுக்கு ஆஸ்த்துமா! எனக்குக் குடல் நோய்! என் தாயாருக்கு முடக்கு வியாதி! பிள்ளையா? அதைப்பற்றிக் கேட்க வேண்டாமய்யா, அது எனக்குப் பிள்ளை அல்ல, என்னைச் சாகடிக்க வந்துள்ள எமன்!!' - என்று சொல்லிப் புலம்புவான்.

கானூர் நிலத்தை வாங்கிய வேளை நல்ல வேளைங்க . . . . அதற்குப் பிறகுதான், பகவானோட கடாட்சத்தாலே, முந்திரித் தோப்பும், மாந்தோப்பும் கிடைச்சுது என்று “அம்மா' பேசுவார்கள்,”ஐயா' சந்தோஷமாக இருக்கும் போது.

அங்கே பணம், பணத்தைப் பெற்றுத் தருகிறது.

இங்கே (ஏழையிடம்) உழைப்பு உடலை வாட்டி, உள்ளத்தைக் கசக்கிப் போடுகிறது.

அங்கே, செலவு போக இருந்திடும் மிச்சம் முந்திரித் தோப்பாக, மூன்றடுக்கு மாடியாக மாறுகிறது.

இங்கே உழைத்து உழைத்து உருக்குலைந்ததன் பலன், காசம், குன்மம், கடன் இப்படி.

இந்த நிலை, சமூகத்திலே பெரும் அளவு பரவி இருக்கும் கொடுமையை நீக்கினாலொழிய மனித குலம் நிம்மதியாக வாழ்ந்திட முடியாது என்பதனை உணர்ந்ததன் விளைவு தந்த திட்டந்தான் சோஷியலிசம்.

ஏழை - பணக்காரன் பேதத்தைப் போக்கியாக வேண்டு மானால் ஏழை - பணக்காரன் பேதம் எப்படி ஏற்படுகிறது என்பதைக் கண்டறிந்தாக வேண்டும்.

ஏழ்மை ஒரு நோய்; அது யாரைப் பீடித்துக்கொள்கிறதோ அவனை மட்டுமல்ல,

அவனைச் சூழ உள்ளவர்களை, அவன் உலவும் சமூகத்தையே பீடித்துக்கொள்வது; ஒட்டுவார் ஒட்டி! ஆகவே அந்த நோயைப் போக்குவது, அவனிடம் பரிவும் பச்சாதாபமும் காட்ட வேண்டும் என்பதற்காக மட்டும் அல்ல; அவனைப் பீடித்துக்கொண்டுள்ள நோய் மூலம் கிளம்பிப் பரவிடும் கிருமிகள், சமூகத்தின் நல்லவைகள் யாவற்றையும் அரித்து அழித்துவிடும்; அந்த நோயைத் தடுத்தாக வேண்டும் என்பதற்காக; சமூகத்தைக் காப்பாற்ற; எதிர்காலத்தைப் பாதுகாத்திட.

கானூருக்கும் சீனூருக்கும் சொந்தம் கொண்டாடும் சீமானுக்கும் அவரிடம் கைகட்டி வாய்பொத்தி வேலை செய்யும் பாட்டாளிக்கும், பஞ்சம், பிணி, குழப்பம், கலகம், போர் போன்ற விபத்துக்கள் ஒரே விதமான இன்னலையும் இழப்பையும்தான் தரும் ஐயமில்லை.

ஆனால், "உடையவர்' அந்த விபத்துக்களைத் தாங்கிக்கொள்ள முடிகின்ற அளவுக்கு உழைப்பாளியால் முடிவதில்லை.

அதனால்தான் பணம் படைத்தவர்கள் பல்வேறு விதமான அரசியல் மாறுதல்களையும், அதிர்ச்சி தரத்தக்க மாறுதல் களையும் தாங்கிக்கொண்ட பிறகும், "சகஜ' நிலைமை ஏற்பட்டதும், மெள்ள மெள்ள, தங்களின் பழைய நிலையைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. இந்தப் பொது விதிக்கு, சில குறிப்பிடத்தக்க விலக்குகள் இருக்கலாம், இருக்கின்றன. ஆனால் பொதுவான உண்மை என்னவென்றால்,

பணம், பயங்கரமான விபத்துக்களையும் தாங்கிக் கொள்ளச் செய்திடும் கேடயமாக, பணக்காரர்களுக்கு பயன்படுகிறது.

அதிலும், அரசியல் சூழ்நிலையில் ஏற்படும்

மாறுதல்கள் கேடு பயப்பனவாக இருந்திடின், அந்தக் கேடுகளின் முழுத் தாக்குதல், ஏழையின்மீதுதான் விழும்; பணக்காரனைத் தாக்கிடக் கிளம்பிடும், அவன் பணம் எனும் கேடயம் கொண்டு தடுத்துக் கொள்கிறான்.

இந்தியாவின் வரலாற்றிலே இதற்கான சான்றுகளை நிரம்பக் காணலாம்.

வெள்ளையர் வந்தனர்; சிற்றரசர்களும், சீமான்களும் போர்ச் சூழ்நிலை காரணமாக அல்லற்பட்டனர்; ஆனால் விரைவிலேயே நிலைமை அவர்களுக்குச் சாதகமாக அமைந்து விட்டது. எதிர்த்து நிற்க முடியாது - என்பதைக் கண்டுகொண்ட - சீமான்கள், வெள்ளையரை "எஜமானர்கள்' என்று ஒப்புக் கொண்டனர்; அந்தச் சரணாகதியை ஏற்றுக்கொண்ட வெள்ளை அரசு, சீமான்களைத் தமது கொலுப் பொம்மைகள் ஆக்கிக் கொண்டது? அந்தக் கொலுப் பொம்மைகள், எப்போதும்போல கோலாகல வாழ்வு நடாத்தவும், கானூர் வரவு என்ன? வானூர் வரவு என்ன என்ற கணக்குப் பார்க்கவும், ஏழைகளின் உழைப்பை மிரட்டிப் பெற்றுக்கொள்ளவும் முடிந்தது. வெள்ளை அரசு அதனை அனுமதித்தது!!

பணம் படைத்தவர்கள் எந்த அரசு அமைந்திடினும் அதனைத் தமக்குச் சொந்தமுள்ள அரசு ஆக்கிக்கொள்வர்; தமது பண பலத்தைக் காப்பாற்றிக்கொள்ள.

இந்த நிலைமை, வெள்ளை அரசு அமைத்ததோடு முடிந்துவிடவில்லை.

காங்கிரஸ் அரசு அமைந்ததும், அதே சீமான்கள் அந்த அரசைத் தமக்குச் சொந்தமுள்ள அரசாக ஆக்கிக்கொண்டுவிட்டுள்ளனர்.

சான்று வேண்டிடுவோர் தத்தமது வட்டாரத்தில் உள்ள "பெரிய புள்ளிகள்' இன்று எந்தக் கட்சியில் இடம் பெற்றுள்ளனர் என்பதனைக் கணக்கெடுத்தாலே போதும்.

முதலமைச்சர் இருக்கிறாரே பக்தவத்சலனார், அவருடைய குடும்பத்தினரே, நவாப் காலத்திலே "மானியம்' வாங்கிய குடும்பமாம். விவரம் கேட்கிறாயா, தம்பி! விசாரித்துச் சொல்கிறேன்,

ராமநாதபுரம் ராஜா குடும்பம் இருக்கிறதே, "சேதுபதிகள்' வெள்ளையர் காலத்திலும் இதே செல்வாக்குத்தான்; ராஜாக் களையும் ஜெமீன்தாரர்களையும் அழித்துவிட்டதாகக் கூறிக்கொள்ளும் காங்கிரஸ் அரசின்போதும் அதே செல்வாக்குத்தான்!

வெள்ளைக்காரன்கூட, சேதுபதிகளை, ராமநாதபுரம் ராஜாவாக மட்டுமே இருக்கச் செய்தான்.

காங்கிரசாட்யிலேதான் ராமநாதபுரம் ராஜா, தமிழ் நாடு முழுவதற்கும் "மந்திரி'யாகி ஆட்சி நடத்தினார்.

சிவகங்கை ராஜா குடும்பம் அதே நிலைமை!

செட்டி நாட்டு ராஜா குடும்பம்? அதே நிலைமை!!

வெள்ளையர் ஆண்டபோது, எப்படி அவர்கள் இந்தப் பெரிய புள்ளிகளைத் தமது கொலுமண்டபத்தில் இடம் கொடுத்து, துணைக்கு, துதி பாடவும் வைத்துக்கொண் டிருந்தனரோ, அதுபோலவேதான், காங்கிரஸ் ஆட்சியும் பெரிய புள்ளிகளைத் தமது நண்பர்களாக்கிக்கொண்டு விட்டிருக்கிறது.

பணம் படைத்தவர்களை எந்த அரசும், தனது பரிவாரத்தினர் ஆக்கிக்கொள்ளும் என்பதையும், இந்த எழுதாத ஒப்பந்தம் இன்று நேற்றல்ல, நெடுங்

காலமாக இருந்து வருகிறது என்பதையும் உணர்ந்திடின் இன்றைய அரசியல் நிலைமை நன்கு விளங்கும்.

காங்கிரஸ் கட்சி ஆட்சி நடத்துவது என்பது, ஆராய்ந்து பார்க்கும்போது, இதற்கு முன்பு அமைந்திருந்த ஆட்சிகளின் போது, எந்தச் சீமான்கள் - பெரிய புள்ளிகள் - செல்வாக்குப் பெற்று வந்திருந்தனரோ, அதே திருக்கூட்டத்தார், தமது நிலைமையை உறுதிப்படுத்திக்கொள்ளவும், வாழ்வை வளமாக்கிக் கொள்ளவும் நடத்தப்பட்டு வரும் ஆட்சி என்பது புரிகிறது. அதனால்தான், நாம் அந்த ஆட்சியை மாற்றியாக வேண்டும் என்கிறோம்.

புலித்தோல்மீது அமர்ந்து கண்களை மூடிக் கொள்வதாலேயே, முன்னாள் வழிப்பறிக்காரன், யோகியாகி விட முடியாது.

சில காலம், விவரம் தெரியாதவர்கள் மயங்கிக் கிடக்கலாம்.

எல்லோரும் ஏமாளிகளாகிவிட மாட்டார்கள்.

ஏமாளிகளாகிவிடுபவர்களும் கடைசி வரையில் விழித்துக்கொள்ளமாட்டார்கள் என்று எண்ணுவதும் பேதைமை.

அந்த விழிப்புணர்ச்சியை, தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஏற்படுத்துவதிலே நமது கழகத்துக்குச் சிறப்பான பெரும் பங்கு உண்டு - அந்தப் பெருமைக்கு முழு உரிமை பெற்ற உன்னைத் தம்பியாய்க் கொண்டதனால் நான் மகிழ்ச்சி கொள்கிறேன்.

காங்கிரஸ் ஆட்சி என்பது கனதனவான்களின் ஆட்சிதான் என்பதை மக்கள் உணரத் தலைப்பட்டு விட்டார்கள் என்றவுடன்தான், காங்கிரஸ் கட்சி, எங்களைச் சாமான்யமாக எண்ணிவிடாதீர்கள்,

நாங்கள் ஏழை பணக்காரன் வித்தியாசத்தை ஒழிக்கப்போகிறோம்; சோஷியலிசம் கொண்டு வரப்போகிறோம் என்று அறிவிக்கிறார்கள்.

தம்பி! நான் உயர்நிலைப் பள்ளியில் படித்துக்கொண்டிருந்தபோது, ஒரு வேடிக்கை நடைபெற்றது.

அன்னியச் சாமான்களை விலக்குவது என்ற திட்டம் மும்முரமாகப் பரவிய நேரம்.

குறிப்பாக அன்னிய ஆலைத் துணிகளைப் போட்டுக் கொளுத்தும் திட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரம்.

என் நண்பன் ஒருவன், "சிகரெட்' பிடிப்பவன்; முன்பு மறைவாகப் பிடித்து வந்தவன், தைரியமாக நாலு பேருக்கு முன்பாகவே சிகரெட் பற்றவைக்கத் தொடங்கினான்.

திடுக்கிட்டுப் போனவர்கள் அந்த நண்பனைக் கேட்டார்கள், இப்படிச் செய்யலாமா? என்று.

ஒரு குறும்புப் புன்னகையுடன் அந்த நண்பன் சொன்னான், "நான் என்ன செய்கிறேன் என்று எண்ணிக்கொண்டீர்கள்? நான் அன்னியச் சாமானைக் கொளுத்துகிறேன்; இது இங்கிலாந்து நாட்டுச் சிகரெட்டு; இதைக் கொளுத்தித் தள்ளுகிறேன்'' என்றான்.

இது வேடிக்கை நிகழ்ச்சி! காங்கிரஸ் கட்சியோ, ஏழை பணக்காரன் பேதத்தை ஒழித்துக் கட்டுகிறோம்! எப்படி என்றால், ஏழை பணக்காரன் இருவரையும் "ஓட்டர்கள்' ஆக்கி, அந்த ஓட்டுகளிலே, இது ஏழையின் ஓட்டு, இது பணக்காரன் ஓட்டு என்று பாகுபாடு பார்க்காமல், இரண்டு பேர்களுடைய ஓட்டுகளையும் கேட்டு வாங்கிக்கொள்கிறோம்; பேதத்தை ஒழிக்கிறோம் என்று வாதாடும்போல

இருக்கிறது.

யார் தங்கள் செல்வத்தையும் செல்வாக்கையும் கெட்டிப்படுத்திக்கொள்ளக் காங்கிரஸ் கட்சியிலே புகுந்துகொண்டுள்ளனரோ, அந்தப் பெரிய புள்ளிகளைக் கொலு மண்டபத்திலே வைத்துக்கொண்டே ஏழை. . . பணக்காரன் வித்தியாசத்தை ஒழிக்கப் போகிறோம் என்று பேசுவது, காளையைக் காட்டி கலம்பால் கறந்து தருகிறேன் என்று கூறுவதற்கு ஒப்பானதாகும்.

தம்பி! குள்ளர்களை ஒழிக்கப் போகிறேன் என்று நான் பேசினால் எப்படி இருக்கும்? உறுதி! உறுதி! உறுதி! காங்கிரஸ் கொள்கையிலே நாங்கள் உறுதியாக நிற்போம் என்று "புகுந்தவர்கள்' முழக்கமிட்டால் எப்படி இருக்கும் கேட்க! தாடி ஒழிப்புச் சங்கத்தைப் பெரியாரும், மீசை ஒழிப்புச் சங்கத்தை நண்பர் ம. பொ. சிவஞானமும் துவக்கினால் எப்படி இருக்கும், தாடியும் மீசையும் இப்போது உள்ளபடியே வைத்துக்கொண்டு. காங்கிரஸ் கட்சி ஊரில் உள்ள எல்லாப் பெரிய புள்ளிகளையும் உடன் வைத்துக்கொண்டு, நாங்கள் சோஷியலிசம் கொண்டு வரப்போகிறோம் என்று பேசுவதை நினைக்கும்போது, எனக்கு இவ்விதமெல்லாம் தோன்றுகிறது.

ஆனால் பேசுகிறார்களே! தம்பி, துணிந்து! நாடு கேட்டுக் கொள்ளும், ஏற்றுக்கொள்ளும் என்று எதிர்பார்க்கிறார்களே! எதனால்? எதைச் சொன்னாலும் கேட்டுக்கொள்ளும் இயல்பினர் நாட்டிலே ஏராளமானவர்கள் உள்ளனர் என்ற எண்ணம். ஆனால் நாடு இன்று அவ்விதமாகவா இருக்கிறது? நாட்டு நிலையை நன்கு பார்க்கிறாயே, தம்பி! எதைச் சொன்னாலும் ஏற்றுக்கொள்ளும் நிலையிலா நாட்டவர் உள்ளனர்? இல்லையே! மக்களின் கண்களே கேள்விக் குறிகளாக அல்லவா

உள்ளன!!

முதலாளிகளை ஒழிப்பதுதான் சோஷியலிசம் என்று கருதாதீர்கள், அவர்களையும் வாழவிட்டு, ஏழையையும் வாழ வைப்பதுதான் எங்கள் சோஷியலிசம் என்று விசித்திரமாக வாதாடுகிறார்கள்.

வாதிக்கும் வெற்றி கிடைக்க வேண்டும் பிரதிவாதிக்கும் தோல்வி ஏற்படக்கூடாது என்கிறார்கள்!

முட்டையும் உடையக் கூடாது அடையும் சுட்டாக வேண்டும் என்கிறார்கள்!

புயலும் அடிக்க வேண்டும் மரமும் விழக் கூடாது என்கிறார்கள்!

பணம் படைத்தவர்களும், பணம் திரட்டிக் குவிப்பவர்களும் இருப்பார்கள்; ஏழையும் நிம்மதியான வாழ்வு பெறுவான் என்கிறார்கள்!

பணக்காரர்கள் என்று சமூகத்தில் ஒரு பகுதியினரும், ஏழைகள் என்று மற்றோர் பகுதியினரும் இருக்கும் நிலைமை சோஷியலிசம் ஆகாது.

ஆனால் இதைத்தான் சோஷியலிசம் என்று காங்கிரஸ் கட்சி பேசுகிறது.

திருப்பதி செல்லும் பஜனைக் கோஷ்டியும், கோவிந்தா! கோவிந்தா! என்று முழக்கம் எழுப்புகிறது.

பிணத்தைச் சுமந்து செல்லும்போதும், கோவிந்தா! கோவிந்தா! என்று கூச்சல் எழுப்புகிறார்கள்.

இரண்டு நிலைமைகளின்போதும், “கோவிந்தா!’ கேட்கிறது. ஆனால் அந்த இரண்டு”கோவிந்தா’வும்

ஒன்றா?

அதுபோலத்தான், சமூகத்திலே ஒரு பகுதி பணம் படைத்தோர்களாகவும், பெரும் பகுதியினர் வாழ முடியாமல் தத்தளிக்கும் ஏழைகளாகவும் இருக்கக்கூடாது. இந்த நிலைமையை மாற்றியாக வேண்டும் என்ற புரட்சித் திட்டம் மேற்கொள்பவர்களும், சோஷியலிசம் பேசுகிறார்கள்.

பணக்காரர்கள் இருக்கத்தான் செய்வார்கள். சிலர் பணம் திரட்டுவது நடந்துகொண்டுதான் இருக்கும். அதனை அனுமதித்துக்கொண்டுதான் இருப்போம். ஆனால் ஏழைக்கும் நல்லது செய்வோம், வாழ்வு கொடுப்போம் என்று பேசும், பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன் என்ற போக்கினராக உள்ள காங்கிரஸ் கட்சியினரும் சோஷியலிசம் பேசுகிறார்கள்!

இந்த இருவகை சோஷியலிசப் பேச்சில், எது பொருள் உள்ளது, பயன் தருவது, நேர்மையானது என்பதுதான் நாட்டின் முன் உள்ள கேள்வி.

காடும் மேடும் கழனியாகவேண்டுமானால், கள்ளியும் முள்ளும் களைந்தெறியப்பட்டாக வேண்டும்; மேடு பள்ளம் சமமாக்கப்பட வேண்டும்.

ஒழுங்குபடுத்தப்பட்ட "பள்ளம்’ பயன்படும், குளமாக, குட்டையாக.

சமப்படுத்தப்பட்ட இடம் வயலாகும், விளைச்சல் இடமாகும்.

எமது வயலில் ஆங்காங்கு சிறு சிறு பள்ளங்களும் இருக்கும், கேடுகளும் இருக்கும், ஒருபுறம் கள்ளி கிடக்கும், மற்றோர் புறம் புற்றும் இருக்கும், அதிலே பாம்பும் இருக்கும், வேறோர் புறம் புதர் இருக்கும், அதிலே நரியாவது இருக்கும், சேறு இருக்கும், அதிலே எருமை புரளும், இந்தச்

சூழ்நிலையிலும், விளைச்சல் மட்டும் அமோகமாகக் கிடைக்கும். அப்படிப்பட்ட அற்புதமான வயல் எம்முடையது என்கிறார்கள் காங்கிரஸ் கட்சியினர்.

இன்று உள்ள முறைப்படி சமூகத்தில் பணக்காரர்களும் இருப்பார்கள், அவர்கள் பணம் தேடிட, குவித்திட, சேமித்திட, உரிமையும் இருக்கும்; அதேபோது ஏழைக்கு வாழ்வும் உயரும் என்பது, சோஷியலிசம் அல்ல என்பது மட்டுமல்ல, தம்பி! அது நடைமுறைக்கு வர இயலாததுமாகும்.

ஏழைகளின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திடவேண்டு மானால், அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதற்காகத் தேவைப்படும் பணம், நாட்டின் பொது வருவாயில் இருந்துதான் எடுத்தாக வேண்டும். நாட்டின் பொது வருவாயைத் தமக்காக என்று பணக்காரர்கள் மடக்கிக் கொள்ளுகிற வரையில் ஏழையின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி வாழ்வைச் செம்மைப்படுத்துவதற்குத் தேவைப் படும் பணம் கிடைக்காது.

காங்கிரஸ் ஆட்சியோ பணக்காரர்கள் செல்வம் தேடிடும் உரிமையை இழக்கமாட்டார்கள் என்று திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டிருக்கிறது.

அப்படியானால், ஏழையின் வாழ்வை வளப்படுத்தத் தேவைப்படும் பணம் எங்கிருந்து கிடைக்கும்?

விளக்கம் காணோம். கேட்டால் கோபம்தான் பொத்துக்கொண்டு வருகிறது.

ஏழையை வாழவைக்கப் போகிறோம், வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் போகிறோம், நாட்டிலே பல்வேறு துறைகளிலே உற்பத்தியாகும் செல்வம், அதற்கே பயன்படும் என்று பேசுவது, நடைமுறைக்கு வரவேண்டுமானால், அந்தச்

செல்வத்தைச் சிலர் தமதாக்கிக்கொள்ளும் முறை மாற்றப்பட்டாக வேண்டும்.

அந்த முறையை மாற்றாமல், ஏழையை வாழவைக்கப் போகிறோம் என்று பேசுகின்றனர் காங்கிரசார்.

இந்தப் பேச்சு புதுமையானது, புரட்சிகரமானது என்றும் புகழ்ந்து பேசிடச் சிலர் உளர்; சீமான் கொட்டாவிவிட்டு எழுப்பும் சத்தத்திலேயே "சங்கீதம்' கேட்பதாகத் துதி பாடிக் காசு தேடும்"தின்று தீர்த்தான்கள்' போன்றார்!

எல்லோரும் வாழ வேண்டும் என்ற பேச்சுக்கா பஞ்சம்! அதை எப்படி நடைமுறையாக்குவது என்பதுபற்றிய செயலுக்குத் தானே தொடர்ந்து பஞ்சம் இருந்து வருகிறது.

Our task is to use rightly and to best advantage her great economic aets not to increase the wealth of the few but to raise the many from poverty to a decent standard of comfort.

We must lift the poor man of India from poverty to security, from ill-health to vigour, from ignorance to understanding.

And our rate of progre must no longer be at the bullock - cart standard but atleast at the pace of the handy and serviceable jeep.

இந்தியாவின் பொருளாதார வளத்தை, தக்க முறையில், பலன் தரத்தக்க வகையிலே பயன்படுத்துவதுதான் நமது பணியாகும் - ஒரு சிலருடைய செல்வத்தை அதிகப்படுத்து வதற்காக அல்ல; ஆனால் பெரும்பாலோர்களை வறுமையி லிருந்து எழச்செய்து, வசதியுள்ள, நாகரிகமான வாழ்க்கைத் தரம் பெறும்படிச் செய்வதற்காக.

இந்தியாவிலுள்ள ஏழையை வறுமையிலிருந்து

நிலையான வாழ்க்கைக்கு உயர்த்திட வேண்டும்; நலிவை நீக்கி ஆற்றலுள்ள வனாக்கிட வேண்டும்; அறியாமையிலிருந்து தெளிவுள்ள நிலைக்கு உயர்த்த வேண்டும்.

நமது முன்னேற்ற வேகம் இனி, கட்டை வண்டி அளவினதாக இருந்திடக்கூடாது, குறைந்தபட்சம் கைக்கு அடக்கமாக பயன்படுகிற ஜீப் (மோட்டார்) வேகத்தின் அளவாவது இருக்க வேண்டும்.

இலக்கிய நயமேகூட இருக்கிறதல்லவா, தம்பி! இந்தப் பேச்சில்.

இந்தியாவிலே இயற்கையான பொருளாதார வளம் இருக்கிறது.

அந்த வளத்தைத் தக்க முறையில் பயன்படுத்த வேண்டும்.

அப்படிப் பயன்படுத்துவது ஒரு சிலர் செல்வம் சேர்ப்பதற்காக இருக்கக்கூடாது.

மிகப் பெரும்பாலான மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, அந்தப் பொருளாதார வளர்ச்சி பயன்பட வேண்டும்.

ஏழை, வறுமையின் பிடியிலிருந்து விடுவிக்கப் பட்டாக வேண்டும்.

ஏழையின் வாழ்விலே ஒரு நிம்மதியும், நிலையான தன்மையும் ஏற்பட வேண்டும்.

ஏழையின் நலிவு நீங்க வேண்டும்; வலிவு மிக வேண்டும்.

அறியாமை போக வேண்டும்; தெளிவு பிறந்திட வேண்டும்.

அதற்கான முன்னேற்றம் கட்டை வண்டி

வேகத்தில் இருக்கக்கூடாது. முன்னேற்ற வேகம், குறைந்தது ஜீப் மோட்டாரின் வேகத்தின் அளவுக்காவது இருக்க வேண்டும்.

இப்படியெல்லாம் மெருகு கூட்டிப் பேசமாட்டார் எங்க காமராஜர், மனதிலே பட்டதை அப்படியோ மெருகு கலவாமல், சுத்தமாகச் சொல்லுவார், வேறு சிலர்போல அவர் தமது பேச்சுக்கு அழகு கூட்டிக்கொண்டிருக்கமாட்டார், ஆனால், இப்போது உங்கள் அண்ணாதுரை எடுத்துக்காட்டினானே, இதையேதான் "எங்க தலைவர்' ஒவ்வொரு நாளும் சொல்லுகிறார், ஓயாமல் சொல்லுகிறார், ஒருவருக்கும் அஞ்சாமல் சொல்லுகிறார், உள்ளன்போடு சொல்லுகிறார், உணர்ந்து சொல்லுகிறார் - என்றெல்லாம், தம்பி! காங்கிரஸ்காரர்கள் கூறக்கூடும்.

அதிலேயே சிலர், இதுபோல இலக்கிய அழகு சொட்டச் சொட்டப் பேசினாரே, எமது பண்டிதர், அறிவாயா!! - என்று கேள்வியைக் கிளப்புவார்கள்.

தம்பி! நான் இந்தப் பேச்சை எடுத்துக் காட்டுவது, காமராஜர் "கொச்சை'யாகக் கூறுவதை, ஏன் இதுபோல இலக்கிய அழகுடன் கூறக்கூடாது என்று கேட்கவுமல்ல; இலக்கிய நடைப் பேச்சில் பண்டிதர் வல்லவர் என்பதை மறுப்பதற்கும் அல்ல. என் நோக்கம் வேறு. மறுமுறையும், அந்தப் பேச்சைப் படித்துப் பார், தம்பி! அதிலே ஒரு இடத்திலாவது சோஷியலிசம் என்ற வார்த்தை இருக்கிறதா என்று பார்! இல்லையல்லவா!

இப்போது காங்கிரஸ் கூறுவது அவ்வளவும் அந்தப் பேச்சிலே இருக்கிறது.

பொருளாதார முன்னேற்றம்.

அது பத்துப் பணக்காரர்களுக்கு மட்டும் பயன்

படுவதாக இருந்துவிடக்கூடாது, ஏழையை வாழ வைப்பதாக இருக்க வேண்டும்.

முன்னேற்றம் வேகமாக இருக்க வேண்டும்.

இவை யாவும் காங்கிரஸ் பேச்சிலே உள்ளவையே!

ஆனால் இந்தப் பேச்சிலே சோஷியலிசம் என்ற சொல்லே இல்லை.

இதே பேச்சைப் பேசிக்கொண்டு, இதுதான் சோஷியலிசம் என்று காங்கிரஸ்காரர்கள் பேசுகின்றனர்.

பேசுவது மட்டுமல்ல, இதைக் காமராஜர் பேசும் போது கேட்டாலும் கேட்டேன், உன் பேச்சைப்போலக் கேட்கல்லே; - என்றும் பாடுகிறார்கள்!

இதனைப் புதிய கண்டுபிடிப்பு என்கிறார்கள்!

இதற்குக் காமராஜர் தந்தையாம்! சிற்பியாம்!!

ஜனநாயகம் - சோஷியலிசம் என்ற வார்த்தைகளைச் சொல்லத் துணிவின்றி ஜவஹர்லால் நேருகூட இருந்து விட்டுப் போய்விட்டார், இப்போது "தேசப் பிதா' வந்துதான் இதனைப் பேசுகிறார் என்கிறார்கள்.

அர்ச்சனை செய்வது என்று கிளம்பிவிட்ட பிறகு, "சஹஸ்ர நாமம்' வரையில் போகவேண்டியதுதான்! போகிறார்கள்.

அதற்காக அல்ல, தம்பி! நான் இதனைச் சொல்வது. நான் காட்டிய பேச்சுதான்; இப்போதும் காங்கிரஸ் கட்சி பேசி வருகிறது.

அந்தப் பேச்சிலும் சரி, இப்போது பேசப்படுவதிலும் சரி, பணக்காரர்கள் என்ற ஒரு வர்க்கம் இருக்க அனுமதிக்க மாட்டோம் என்ற

திட்டவட்டமான அறிவிப்பு இல்லை.

நாட்டு வளம், ஒரு சிலர் செல்வத்தைக் குவித்திடப் பயன்பட விடக்கூடாது; ஏழையின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் பயன்படுத்த வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது.

அது சோஷியலிசம் அல்ல என்பதால்தான், நான் எடுத்துக் காட்டிய பேச்சில், சோஷியலிசம் என்ற வார்த்தை இணைக்கப்படவில்லை.

சிறகை விரித்தாடும் பறவை என்பதற்கும் மயில் என்பதற்கும், வித்தியாசம் இல்லையா, தம்பி!

மயில் மட்டுமா சிறகை விரித்தாடுகிறது? வான்கோழி கூடத்தானே!

மயில் என்று கூறினால், மயிலாக இருக்க வேண்டுமேயன்றி, சிறகை விரித்தாடுவது மயில், இதோ இதுவும் சிறகை விரித்தாடு கிறது; ஆகவே இதற்கு மயில் என்றே நான் பெயரிடுகிறேன் என்று கூறி ஒரு துணிந்த பேர்வழி, வான்கோழியைக் கொண்டு வந்து காட்டினால், தம்பி! என்ன எண்ணிக்கொள்வது? அந்த நெஞ்சழுத்தத்தை வியந்திடத்தானே வேண்டும்! சிறகு விரித்து ஆடுவதெல்லாம் மயிலாகுமா?

நான் எடுத்துக் காட்டிய பேச்சிலே, ஏழையை வாழ வைத்தாக வேண்டும் என்ற விருப்பம் தெரிவிக்கப்பட்டிருப்பினும், அதிலே சோஷியலிசம் என்ற வார்த்தை காணப்படாததற்குக் காரணம், இதனைச் சோஷியலிசம் என்று கூறினால், நம்மை விவரமறியாதவன் என்று அறிவாளர் எண்ணி எண்ணி நகையாடு வார்களே என்ற அச்சம் கூச்சம்.

அச்சமில்லை! அச்சமில்லை! அச்சமென்பதில்லையே; அறிந்தோர் தொகை நூற்றில் ஒரு முப்பதே என்பதனாலே! என்று

காங்கிரசின் பெருந் தலைவர்கள் துணிந்துவிட்டார்கள்; அதனால்தான் அந்தப் பழைய பேச்சுக்கே "சோஷியலிசம்' என்று பெயரிட்டுவிட்டார்கள்.

பெயர் முக்கியமல்ல, நோக்கம்தான் முக்கியம் என்று வாதாடுவார் உளர். உண்மை! ஒப்புக்கொள்வோம், தம்பி! ஆனால் ஒரு பொருந்தாத பெயரைத் தேடி எடுத்து ஏன் சூட்ட வேண்டும்? அந்தப் பெயர் மக்களைச் சொக்கவைக்கும் என்பதால்தானே! அந்த நோக்கம் நேர்மையானதுதானா?

பூவோ பூ! - என்று முருங்கைப் பூவை விற்பாரைப் பார்த்ததுண்டா? பார்த்திருக்க முடியாது! இதோ! விற்கிறார்களே ஜனநாயக சோஷியலிசம் என்று - ஐயோ! பாவம்! ஏழையும் வாழட்டும் என்ற பழைய பேச்சை, புதிய "லேபிள்' ஒட்டி. பாரேன்!

ஏழையை வாழ வைப்பதே எமது நோக்கம்

என்ற இந்தப் பேச்சு, புரட்சிப் பேச்சாக, புதுமைப் பேச்சாக, சோஷியலிச கீதமாக விளம்பரப்படுத்தப்படுகிறதே, தம்பி! இதே கருத்தைக் கொண்ட பேச்சு நான் எடுத்துக் காட்டினேனே, அது யாருடையது தெரியுமா?

ஜவஹர்லால் நேருவுடையதா?
லால்பகதூர் சாஸ்திரியுடையதா?
லாலா லஜபதிராயுடையதா?
மோதிலால் நேருவுடையதா?

என்றெல்லாம் யோசித்துக்கொண்டிருக்க வேண்டாம் தம்பி! இது எந்தக் காங்கிரஸ் தலைவருடைய பேச்சும் அல்ல; சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட எவருடைய பேச்சுமல்ல. சொல்லப் போனால் "பாரத புத்திரர்' எவரும் பேசியது அல்ல; ஏகாதிபத்திய ஏஜண்டு பேச்சு.

ஆமாம்! தம்பி! பதறுவர் காங்கிரஸ்காரர். ஏழை வாழ வேண்டும். பணக்காரனுக்காக நாட்டுச் செல்வம் இல்லை, ஏழைக்காக, அவனுக்கு நல் வாழ்வு அளிக்க! - என்று பேசும் திறமையும் நேர்மையும், உரிமையும், உணர்ச்சியும் எமக்கன்றோ உண்டு! நாட்டு விடுதலை வீரர்களாம் நாங்கள் மட்டுமே பேசக்கூடிய இந்த உருக்கமான பேச்சை, எழுச்சியூட்டக்கூடிய பேச்சை, ஒரு ஏகாதிபத்திய ஏஜண்டா பேசினான்? யார் அவன்? - என்றெல்லாம் கேட்பர். பதறிப் பயன் இல்லையே! தம்பி! உள்ளபடி, இன்று இவர்கள் பேசும் இதே பேச்சை, இவர்களைப் போல லேபிள் ஒட்டாமல் பேசியவர், இந்தியாவின் வைசிராயாக இருந்தவர்; வெள்ளையர்! 1944-ம் ஆண்டு வைசிராய் பேசிய பேச்சு இது.

1944லில் - இருபத்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு வெள்ளைக்கார வைசிராய் பேசியதை, அதே கருத்தை 1964லில் போலி லேபிள் ஒன்று ஒட்டி, இவர்கள் பேசுகிறார்கள்.

இருபத்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நாடு கேட்ட அதே பேச்சு, இன்று சோஷியலிசம் என்ற பெயர் ஒட்டப்பட்டு மக்களுக்கு அளிக்கப்படுகிறது.

ஒரு வெள்ளைக்கார ஏஜண்டு, எதைச் சொன்னானோ அதை இருபத்து இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இவர்கள் சொல்லுகிறார்கள்; இதிலே புதுமை இருக்கிறதாம், புரட்சி இருக்கிறதாம்; நம்பச் சொல்லுகிறார்கள்!

அவன் சொன்னான்! நாங்கள் செய்கிறோம்! புரிகிறதா வித்தியாசம் என்று பொறி கிளப்புவோர் பேசுவர்; பேசட்டும், தம்பி! அடுத்த கிழமை இவர்கள் என்ன செய்கிறார்கள் என்பது பற்றியும் கூறுகிறேன். இந்தக் கிழமை, இவர்கள் இன்று பேசுவதிலே புதுமையும் இல்லை, புரட்சியும் இல்லை, இதைப் பேச அபாரமான ஆற்றலோ ஏழைகளிடம் ததும்பி வழியும்

அன்போகூட இருந்திடத் தேவையில்லை. இதுபோல ஒரு வெள்ளைக்கார ஏகாதிபத்திய ஏஜண்டினாலேயே பேச முடிந்தது - இருபத்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே - என்பது வரையில் கூறினால் போதும் என்று கருதுகிறேன்.

அன்புள்ள
அண்ணாதுரை
14-8-66

அனுபவி ராஜா!

பொதுத்துறைத் தொழில்களில் சில போதுமா?
பல்வேறு பெயர்களில் பற்பல அமைப்புகள்!
பொருளாதார ஏகாதிபத்தியத்துக்கு அடையாளம் பொள்ளாச்சி மகாலிங்கம்!
பணத்தோட்டம் எங்கே? அமீர் சந்த்களிடம்!
தண்டனை பல பெற்றும் தளரவில்லையே - ஏன்?
வளர்ச்சியால் வசதி பெற்றவர் யாவர்?
அனுபவி ராஜான்னு ஆள்பவர் கொடுக்கிறார் வாய்ப்பு!
மான் எங்கே? வேங்கையின் வயிற்றிலே! பணம் எங்கே? முதலாளியினிடத்திலே!

தம்பி!

முந்திரா என்ற முதலாளி நடத்திய திருவிளையாடல் இந்தியப் பேரரசையே ஒரு முறை திக்குமுக்காடச் செய்து விட்டதுபற்றி மறந்திருக்கமாட்டாய்.

அப்படி யாராகிலும் மறந்துவிட்டிருப்பினும், இப்போது வெகு வேகமாகப் பேச்சாளராகி வருகிறாரே திருச்செந்தூர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், அவரைப் பார்த்ததும் அல்லது அவரைப்பற்றிய நினைவு வந்ததும், முந்திரா பற்றிய முழுக் கவனமும் வந்துவிடும்.

முந்திரா, மிகப் பெரிய மோசடிகளைச் செய்து கோடி கோடியாகப் பணத்தைக்

குவித்துக்கொண்டிருந்தபோது - குட்டு உடைபடாதிருந்தபோது - அவனுக்குப் புகழ்கூட இருந்தது! வியாபாரத்தில் சூரன், புள்ளி போடுவதில் புலி, தொழில் அமைப்பதில் நிபுணன் என்றெல்லாம் பாராட்டக்கூடச் செய்தனர்.

வணிக உலகிலே ஒரு புதிய ஒளி நட்சத்திரம் என்று சிந்து பாடிடக்கூட ஆட்கள் கிளம்பினர்.

அவன் மண்ணைத் தொட்டால் அது பொன்னாகும்! அவன் ஜாதகப் பலன் அப்படிப்பட்டது! யோகம் அப்படிப் பட்டது! என்று பேசினர் பலர். எப்போதோ கேட்ட பாட்டு நினைவிற்கு வருகிறது.

ஆண்டவன் படைச்சான் எங்கிட்ட கொடுத்தான் அனுபவி! ராஜான்னு அனுப்பி வைச்சான்!

அதுபோல "ராஜா’வாகத்தான் முந்திரா அனுபவித்துக் கொண்டிருந்தான் - மோசடி வெளியே வெடித்துக்கொண்டு கிளம்பும் வரையில்.

சிக்கிக்கொண்டான் சிறை சென்றான்; ஆனால், அவன் குவித்திருந்த செல்வம்? இருக்கிறது!

அந்தச் செல்வத்தைப்பற்றி இப்போது ஒரு புதுத் தகவல் கிடைத்து புதிய பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது.

முந்திரா, சேர்த்த பணத்தில் பெரும் பகுதியை, பல இலட்சக்கணக்கான பவுன்களை, தன் மனைவி பெயரால் இலண்டனில் பாங்கியில் போட்டு வைத்திருப்பதாக ஒரு தகவல் கிளம்பி, அதுபற்றிய துப்பு விசாரித்துக்கொண்டிருக்கிறார்கள்.

இலண்டன் பாங்கியில் ஒரு வெள்ளைக்காரன் பெயரால் இலட்சக்கணக்கான பவுன் போடப்பட்டிருக்கிறது. ஆனால், உண்மையில் அந்தப் பணம் அவனுடையது அல்ல; அவன் திருமதி

முந்திராவுக்காக, அவர்களின் ஏஜண்டாக அந்தப் பணத்தைப் பரிபா-த்து வருகிறான் என்ற விவரம் கிடைத் திருக்கிறது. வழக்கப்படி புலன் விசாரித்துக்கொண்டு வருகிறார்கள்.

நான் தம்பி! இதைச் சொல்லுவதற்குக் காரணம், முந்திரா பற்றிய புதுத் தகவலின் முழு விவரம் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக அல்ல.

தனிப்பட்டவர்கள் தொழில் நடத்த சர்க்கார் அனுமதிக்கும் போது, பணம் குவித்திட என்னென்ன விதமான புரட்டுகள் நடைபெறக்கூடும் என்பதைக் காட்டிடவே இதனைக் கூறினேன்.

சர்க்கார் பணத்தையும், நம்பிக் கொடுத்தவர்களின் பணத்தையும், ஒன்றைப்போட்டு ஒன்றை இழுத்தும், இதைக் காட்டி அதை வாங்கியும், இப்படிப் பல செப்படி வித்தைகளைச் செய்ய முடிந்தது முந்திராவால்; அதன் காரணமாகப் பல வழிகளிலே பணம் கிடைத்தபடி இருந்தது; பணம், பணத்தை இழுத்துக்கொண்டு வந்து சேர்ந்தது.

இப்படி ஒரே ஆசாமியிடம் பல தொழில்கள் சிக்கிக் கொண்டால், பல தொழில்கள் மூலம் கிடைக்கும் வருவாய் அவ்வளவும் ஒரே ஆசாமியிடம் போய்ச் சேர்ந்தால், அவன் கோடீஸ்வரனாவதுமட்டுமல்லாமல், மற்றவர்களின் வாழ்க்கை வறண்டு போகத்தானே செய்யும்!

இந்த நிலையை அனுமதித்துவிட்டுப் பிறகு, சோஷியலிசம் பேசுவதினால் என்ன பயன்?

முந்திராபோல மோசடி செய்யாமலேகூட, சட்டப்படி கிடைத்திடும் சலுகைகளைக் கொண்டேகூட, முதலாளிகள் பணத்தை மேலும் மேலும் குவித்துக்கொள்ளக்கூடிய வாய்ப்பு இன்றைய காங்கிரஸ் அரசினால் அளிக்கப்பட்டிருக்கிறது.

தனிப்பட்டவர்கள் இதுபோலப் பல தொழில்களைச் செய்து பணம் குவித்துக்கொள்ளும் முறையை அமெரிக்காவில், முதலாளித்துவ முறை என்கிறார்கள். அதனையே இங்கு காங்கிரஸ் அரசு, ஜனநாயக சோஷியலிசம் என்று பெயரிட்டிருக்கிறது.

சர்க்கார், பொதுத் துறையிலே சில தொழில்களை நடத்துவதைக்கொண்டே இங்கு சோஷியலிசம் இருப்ப தாகக் கூறிக்கொள்வது தவறான வாதம், சொத்தையான தத்துவம்.

பணம், ஒரு சிலரிடம் போய்க் குவிந்துகொள்வதற் கான வழியை அமைத்துக் கொடுத்துவிட்டு சோஷியலிசம் பேசுவது, கன்றுக்குட்டி இறந்த பிறகு, வைக்கோலால் செய்த உருவத்தின்மீது அதன் தோலைப் போர்த்தி வைத்து, அதைக் காட்டிப் பசுவை ஏய்த்துப் பால் கறந்திடும் தந்திரம் போன்றதாகும்.

எத்தர்கள், புரட்டர்கள் கிடக்கட்டும்; என்றேனும் ஓர் நாள் அவர்கள் பிடிபட்டுக்கொள்வார்கள். ஆனால் தம்பி! சட்டத்திற்கு உட்பட்ட முறையிலேயே நடந்து பெரும் பொருளைத் திரட்டிக்கொள்ள இடம் இருக்கிறது. அப்படி ஒரு சிலரிடம் தொழில் சிக்கிக்கொள்வதால், உற்பத்தியாகும் செல்வம் அந்த ஒரு சிலரிடம் போய்ச் சேர்ந்துவிடுகிறது. பல இலட்சக் கணக்கானவர்கள் "கூலி’ மட்டும் பெற்று, குமுறிக் கிடக்கும் நிலையினராகின்றனர்! ஏழை பணக்காரன் வித்தியாசம் விரிவாகிக்கொண்டு வருகிறது.

காங்கிரசாட்சி ஏற்பட்ட பிறகு புதிய பணக்காரர்கள், புதிய புதிய தொழிலதிபர்கள் எவ்வளவு வேகமாக வளர்ந்துகொண்டு வருகிறார்கள் என்பதை மக்கள் அறியமாட்டார்களா?

முன்பெல்லாம் தம்பி! ஒரு குடும்பம் பணக்காரக்

குடும்பமாக வேண்டுமானால், ஒரு தலைமுறை உழைத்துப் பணம் சேர்த்து, அடுத்த தலைமுறையில்தான், அந்தக் குடும்பம் பணக்காரக் குடும்பமாக முடியும். இருபது வருடமாக மண்டி வியாபாரம்; முப்பது வருடமாக நகை வியாபாரம்; பதினைந்து வருடமாக ஜவுளி வியாபாரம்; பாட்டனார் கால முதற்கொண்டு "காண்ட்ராக்டு'த் தொழில் - இப்படித்தான் பணக்காரக் குடும்பங்கள் பற்றிய "வரலாறு' இருக்கும்.

காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்ட பிறகுதான், பார்த்துக் கொண்டிருக்கும்போதே, பணக்காரர்கள் உண்டாகிவிடு கிறார்கள். ஆறு வருடத்திற்கு முன்பு மோட்டார் துடைத்தவன், ஆண்டவன் தயவாலே, இப்போது அறுபது பஸ்ஸுக்குச் சொந்தக்காரன் என்கிறார்கள்!

ஏழு வருடத்திற்கு முன்னாலே எடுபிடி! ஏழுமலையான் தயவாலே, இப்போது பத்து பங்களாவுக்குச் சொந்தக்காரன் என்கிறார்கள்.

இந்த வேகமான வளர்ச்சிக்குக் காரணம் என்ன? பணம். ஒரே ஒரு தொழிலிலே கிடைத்தது அல்ல; ஒரு தொழிலிலே கிடைத்த பணத்தைக் கொண்டு மற்றொரு புதிய தொழில், அதிலே கிடைத்ததைக்கொண்டு மற்றோர் தொழில், இப்படிக் குட்டிப்போடுகிறது! இதைக் காங்கிரஸ் அரசு அனுமதிக்கிறது.

ஒரு தொழிலில், - பல சரக்கு மண்டி - ஜவுளிக் கடை - காண்ட்ராக்ட் - எதுவாகவேனும் இருக்கட்டும், அது சிறிய அளவிலே துவங்கி, பிறகு அது மெள்ள மெள்ளப் பெரிய அளவாகி, ஒரு இடத்தில் இருப்பது; பிறகு பல இடத்திலே கிளைகள் விட்டு எல்லாவற்றிலும் இருந்து வருவாய் கிடைத்து, மொத்தமாகப் பல இலட்சங்கள் சேருவது ஒரு முறை.

உதாரணமாக, கடைவீதிக் கோடியில் இருபது ரூபாய் வாடகைக் கட்டிடத்தில் ஜவுளிக் கடை ஆரம்பித்து, பிறகு அது வளர்ந்து, இரு நூறு ரூபாய் வாடகையுள்ள புதிய பெரிய கட்டிடத்தில் கடை நடந்து, பிறகு கடைவீதியில் மையமான இடத்தில் புதிய கட்டிடமே சொந்தத்தில் அமைந்து, அதிலே பெரிய அளவிலே கடை நடத்தி, இலாபம் கூடுதலாகக் கிடைக்கக் கிடைக்க வேறு சில ஊர்களிலேயும் ஜவுளிக் கடைகளைத் துவக்கி, இலாபம் சேர்ப்பது ஒரு முறை.

அந்த விதமாக மட்டும் இருந்தால்கூட, ஒரு சிலரிடம் இவ்வளவு வேகமாகப் பணம் சேராது.

முதலில் சிறிய அளவில் ஜவுளிக் கடை
பிறகு பெரிய அளவில் ஜவுளிக் கடை
பிறகு ஜவுளி தயாரிக்கும் ஆலை.
பிறகு ஆலைக்குத் தேவையான பருத்திக் காடு!
பிறகு ஆலைக்குத் தேவையான இயந்திர உற்பத்தி.
பிறகு இயந்திரத்துக்குத் தேவையான இரும்புத் தொழில்.
பிறகு இவ்வளவுக்கும் தேவைப்படும் பணத்துக்காக பாங்க்!

இப்படி, பல கால்களை உண்டாக்கிக்கொள்வது ஒரு முறை.

நமது நாட்டில் இன்று வளர்ந்து, வலிவு ஏறியுள்ள முதலாளித்துவம், இந்த முறையானது. ஜவுளியிலிருந்து துவங்கி பாங்க் வரையில், பல்வேறு தொழில்களுக்கு ஒரே அதிபதி!

இதனைத்தான் பொருளாதார ஏகாதிபத்தியம் என்பர்.

இந்தியா, பர்மா, சிலோன், இப்படிப் பல நாடுகளுக்கு அதிபதியாக இருந்து பிரிட்டன்

ஏகாதிபத்தியத்தை பல நூற்றாண்டுகள் நடத்தியதால், உலக வல்லரசாகவும், செல்வம் கொழிக்கும் இடமாகவும் இருந்து வந்தது.

பொருளாதாரத் துறையிலே இன்று வளர்ந்துவிட்டிருக்கும் ஏகாதிபத்தியம் அரசியல்துறை ஏகாதிபத்தியத்தைவிட ஆபத்தானது; நாட்டு வளத்தை ஒரு சிலர் உறிஞ்சிக் கொள்வதால்.

யார்மீதும் பகைகொண்டோ, பொறாமை காரண மாகவோ, அருவருப்புக்கொண்டோ கூறவில்லை; விளக்கத்துக்காகக் கூறுகிறேன்; நான் குறிப்பிடும் பொருளாதார ஏகாதிபத்தியத்தை உணர்ந்துகொள்ள வேண்டுமானால், உதாரணத்துக்காக இந்த இருபது ஆண்டுகளில் டி. வி. எஸ். கம்பெனி வளர்ந்துள்ள வகையையும், பொள்ளாச்சி மகாலிங்கம் தமது தொழிலை விரிவாக்கியுள்ள வகையையும், பார்! நிலைமை புரியும்! பார்க்கச் சொல்லிக் கேட்டுக்கொள், கோபப்படும் காங்கிரஸ் நண்பரை; அவருக்கும் உண்மை உள்ளத்தைத் தைக்கும்.

பொள்ளாச்சி மகாலிங்கம் காங்கிரஸ்காரரர்; சட்டமன்ற உறுப்பினர்! படித்தவர், நல்லவர், எனக்கு நண்பர்கூட.

அவர், காங்கிரஸ் கட்சி கூறும், சோஷியலிசத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார், ஏன்? அந்த சோஷியலிசம்,

பஸ் தொழில்
சர்க்கரை ஆலைத் தொழில்
செயற்கை வைரத் தொழில்

என்ற முறையில் நண்பர் மகாலிங்கம் தமது தொழில் சாம்ராஜ் யத்தைப் பெரிதாக்கிக்கொண்டு, இப்போது சென்னையை அடுத்த கும்மிடிப்பூண்டியில், இரும்புக் குழாய் தயாரிக்கும்

பெரிய தொழிற்சாலை அமைக்கும் அளவு அனுமதித்திருக்கிறது. இந்த நிலையிலே, காங்கிரஸ் பேசும் சோஷியலிசத்தை ஏற்றுக்கொள்ள அவருக்குக் கசக்குமா?

சோஷியலிசம் என்றால், இலாபம் தரும் தொழில் பலவும் ஒரு சிலரிடம் போய்ச் சிக்கக்கூடாது, சிக்கிடின் ஏழை பணக்காரன் பேதம் அதிகமாகிவிடும். ஆகவே மகாலிங்கம் அவர்களே! பஸ் தொழிலோடு திருப்திப் படுங்கள்! புதிய புதிய தொழில்களைத் துவக்கி, புதிய புதிய வருவாயைப் பெருக்கிக்கொண்டே போனால், செல்வம் பரவாது என்று காங்கிரசின் சோஷியலிசம் கூறினால், மகாலிங்கம், இது அக்கிரமம்! இது கொடுமை! என்று கோபித்துக்கொள்ளக்கூடும்.

எந்தத் தொழிலையும் நடத்தலாம், எவ்வளவு பெரிய தொழிலையும் நடத்தலாம், எந்த இடத்திலும் நடத்தலாம், எல்லாத் தொழி-லும் கிடைக்கும் இலாபத்தை அடைய லாம், ஆனால் ஜனநாயக சோஷியலிசத்தை மட்டும் பேசவேண்டும் என்றுதானே காங்கிரஸ் கட்சி கூறுகிறது. முதலாளிகள் ஏன் தலை அசைக்கமாட்டார்கள்! தாளமே போடுகிறார்கள், இது அல்லவா கீதம் என்று!!

ஒரு முதலாளி, பல்வேறு தொழில்களை நடத்துவது மட்டுமல்ல; பல்வேறு பெயர்களில், பல அமைப்புகளை நடத்திக் கொள்ளவும் முடிகிறது.

ஒரு பத்து நாட்களாக, பத்திரிகைகளிலே பலமாக அடிபடுகிறதே தம்பி! அமீர்சந்த் பியாரிலால் கம்பெனி - அதன் கதை அப்படித்தான்.

பல (கம்பெனிகள்) அமைப்புகள் - தனித்தனிப் பெயருடன்; எல்லாவற்றிலும் இலாபம்; எல்லாம் ஒரே இடத்திற்குச் செல்ல வழி!

ஆண்டவனுக்கு ஆயிரம் நாமம் - அர்ச்சிக்க.

புதிய முதலாளிகளுக்கு பல கம்பெனிகள், தனித் தனிப் பெயருடன் - எல்லாம் இலாபம் பெற!

அமீர்சந்த் பியாரிலால் கம்பெனி என்ற ஒரே பெயரில் தொழிலை விரிவாக நடத்துவதைவிட, தனித் தனிப் பெயருடன் பல கம்பெனிகளை நடத்துவதிலே பல வசதிகள்; பல இலாபங்கள்; வரிச் சலுகைகள் கிடைக்கின்றன.

அமைச்சர் சுப்பிரமணியம் முதலிலே போட்ட ஒரு உத்தரவைப் பிறகு மாற்றினாரே, அது ஏன்? அது முறையா? என்ற கேள்வி கிளப்பிவிடும் சத்தத்தில், பொது மக்கள் - அதிலும் குறிப்பாக காங்கிரஸ் பேசி வரும் ஜனநாயக சோஷியலிசம் போலியானது என்பதை உணராதிருக்கும் பொது மக்கள் - ஒரு பேருண்மையை அறிந்துகொள்ள முடியாமலிருக்கிறார்கள்.

எத்தனை பெரிய அளவிலும், எத்தனை வடிவங்களுடனும் ஒரு
முதலாளித்துவ அமைப்பு இருக்கிறது என்பதனை எடுத்துக் காட்டுகிறது, இந்த அமீர்சந்த் பியாரிலால் கம்பெனி.

தம்பி! இந்தக் கம்பெனி 1910-ம் ஆண்டு துவக்கப்பட்டது. இன்று எஃகு வியாபாரத்தில் மட்டும் ஈடுபட்டுள்ள இதன் அமைப்புகளின் எண்ணிக்கை 20

இந்த இருபதும், முதலாளிகளைக் கொழுக்க வைக்கவே ஏற்பட்டதாகச் சொல்லுகிறார்களே வெள்ளைக்கார அரசை - அப்போது ஏற்பட்டவை அல்ல. அப்போது, அமீர்சந்த் பியாரிலால் கம்பெனி மட்டுந்தான். மற்ற இருபது கம்பெனிகளும் காங்கிரஸ் ஆட்சியின்போது - 1948-லிருந்து

ஏற்பட்டவை. பொதுக் கணக்குக் குழுவினர் கண்டறிந்து வெளியிட்ட தகவலைத் தருகிறேன் - எந்த விதமான முதலாளித்துவ அமைப்பு, சோஷியலிசம் பேசும் காங்கிரஸ் ஆட்சியின்போது வளர்ந் திருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளச் சொல்லு தம்பி! பொங்கி எழுகின்ற காங்கிரஸ் நண்பர்களை.

1. அமீர்சந்த் பியாரிலால் 1910
2. சுரேந்திரா ஓவர்சீஸ் லிமிடெட் 1948
3. சுரேந்திரா ஓவர்சீஸ் பிரைவேட் லிமிடெட் 1948
4. அசோசியேட் ஒயர்ஸ் கண்டக்டர்ஸ் கம்பெனி -
5. அபிஜே பிரைவேட் லிமிடெட் 1959
6. அபிஜே கம்பெனி, கல்கத்தா 1962
7. அபிஜே ஸ்டீல் காஸ்டிங், ஜலந்தர் - தகவல் இல்லை
8. ஸ்டீல் கிரீட் பிரைவேட் லிமிடெட் -
9. ஸ்டீல் ரோலிங் மில்ஸ், கல்கத்தா 1963
10. காஷ்மீர் சிராமிக்ஸ் 1961
11. ஓரியண்டல் ஸ்பூன் பைப் கம்பெனி 1961
12. ஏரான் ஸ்டீல் ரோலிங் மில்ஸ், ஜலந்தர் 1957
13. ஏரான் ஸ்டீல் ரோலிங் மில்ஸ், பம்பாய்-தகவல் இல்லை
14. இன்டர்நேஷனல் சானிடரி என்ஜினியர்ஸ், டில்லி ”
15. இந்தியா என்ஜினியரிங் ஒர்க்ஸ், கல்கத்தா ”
16. மெட்டல் இம்போர்ட் கல்கத்தா ”
17. அமீர்சந்த் பியாரிலால் லிமிடெட் 1963
18. சுரேந்திரா என்ஜினியரிங் ஒர்க்ஸ் 1960
19. அபிஜே பிரைவேட் லிமிடெட், கல்கத்தா
20. அமீன்சந்த் பியாரிலால் டின் கன்ட்டெயினர் லிமிடெட்
21. அபிஜே ஸ்டீல் ஒர்க்ஸ், ஜம்மு.

டில்லி, பம்பாய், கல்கத்தா, ஜம்மு, ஜலந்தர் இப்படிப் பல ஊர்களில்!

எஃகு ஆலை, குழாய் தயாரிப்புத் தொழில், வேலைப் பாடுள்ள மண்பாண்டத் தொழில், இப்படிப் பல வகை.

முதலாளியின் பெயரில், பொது மக்களிடம் பங்குகள் வாங்கி நடத்தப்படும் கம்பெனி, குறிப்பிட்ட சிலரிடம் மட்டும் பங்குத் தொகை வாங்கி நடத்தப்படும் கம்பெனி இப்படிப் பல முறை.

எல்லாவற்றிலும் கிடைக்கும் இலாபம், ஒரே இடத்திற்குப் போய்ச் சேருவதற்கான வாய்ப்பு.

இதை அனுமதித்துக்கொண்டு, சோஷியலிசம் பேசுவதிலே, பொருள் இருக்கிறதா? நேர்மை இருக்கிறதா? கேட்டால், கோபம் வருகிறதே!

இத்தனை தொழில் அமைப்புகள் என்றால், இத்தனை வருவாய்த் துறைகள் என்று பொருள். இத்தனை வருவாய்த் துறையும் ஒரே இடத்திற்கு என்றால், பணம் அங்கு குவிவதும், பிற இடங்கள் வறண்டு போவதும் இயல்புதானே? எப்படி இந்த நிலைமையை வைத்துக்கொண்டு ஏழை பணக்காரன் வித்தியாசத்தை ஒழிப்பது?

இத்தனைத் தனித் தனி அமைப்புகள், ஒரே முதலாளியிடம் இருப்பதிலே வேறோர் வசதி கிடைக்கிறது.

சர்க்காரிடம், பர்மிட் லைசென்சு, வியாபார ஒப்பந்தம், தரகு இவைகளைப் பெறும்போது, ஒவ்வொன்றின் பேராலும் பெற்றுக் கொள்ளலாம்.

ஒரு அமைப்பு ஏதாவது தவறு நடத்தி அது கண்டு பிடிக்கப்பட்டு, சர்க்காரின் கோபம் பாய்ந்தால், மற்ற அமைப்புகளின் பேரால், சர்க்காரிடம் சலுகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

விளக்கிட விளக்கிட விதவிதமான ஆதாயம்,

இதன் பலனாகக் கிடைப்பது புரியும்.

சர்க்கார், இந்த நிலைமையைக் கட்டுப்படுத்தவே இல்லையா என்று கேட்கிறாய். கட்டுப்பாடு, கட்டுப்பாடு என்று பேசுகிறார்களே, இதன் பொருள் என்ன என்று அறிந்துகொள்ள ஆசைப்படுகிறாய்.

காங்கிரஸ் அரசு தொழில் நடத்தும் அனுமதியில், ஏற்றுமதி இறக்குமதி நடத்துவதற்கான அனுமதியில் கட்டுப்பாடு வைத்திருக்கிறது.

அதாவது, எம்மிடம் அனுமதி பெற்றவர்கள் மட்டுமே இன்ன உற்பத்தித் தொழிலில் ஈடுபடலாம், இன்ன சரக்கை ஏற்றுமதி செய்யலாம், இன்ன சரக்கை இறக்குமதி செய்யலாம் என்ற கட்டுப்பாட்டை சர்க்கார் வைத்துக்கொண்டிருக்கிறது.

ஆனால் இன்ன அளவுக்கு மேல், இன்ன வகை களுக்கு மேல், ஒருவர் தொழில் நடத்தி விரிவாக்கி முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தை அமைத்துக்கொள்ளக் கூடாது என்ற தடையோ, நிபந்தனையோ, கட்டுப்பாடோ இல்லை!

எம்மிடம் அனுமதி பெறுக! - என்கிறார்கள்! முதலாளிகள், "அனுமதி'யைப் பெற்றுக்கொள்கிறார்கள்!

அதுவேகூட அவர்களுக்கு இலாபமாக முடிகிறது. அதே தொழிலில் பலர் ஈடுபட்டால், அந்தத் தொழில் மூலம் கிடைக்கும் இலாபம் பல பேர்களுக்குப் பங்கு போடப்பட்டுவிடும்; ஒருவருக்கும் கொழுத்த இலாபம் கிடைக்காது.

சர்க்காரின் அனுமதியைப் பெற்றவர்கள் மட்டுமே உற்பத்தி செய்யலாம், ஏற்றுமதி இறக்குமதி நடத்தலாம் என்று இருப்பதால், அதற்கான சர்க்கார் அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடிந்த "பாக்கியவான்கள்', மற்றவர் களுடைய போட்டித்

தொல்லை இல்லாமல், இலாபம் முழுவதையும் அவர்களே பெற்றுக்கொள்கிறார்கள்.

அதாவது, தம்பி! பாட்டு ஒன்று குறிப்பிட்டேனே, அதுபோல, சர்க்கார் அனுபவி ராஜா என்று சிலரை அனுப்பி வைக்கிறார்கள்!

சர்க்காரிடம் சட்டம் இருக்கிறது - சுமை சுமையாக!

போலீசும் பட்டாளமும் இருக்கிறது - பலம் பொருந்தியதாக!

ஆனால், அமீர்சந்த்களிடம் பணத் தோட்டம் இருக்கிறது. அதனுடைய பொலிவு இருக்கிறதே மயக்கும்; வலிவு இருக்கிறதே மிரட்டும்; சட்டமே வளையும்; சர்க்காரே மலைக்கும்!

முதலாளித்துவ அமைப்பு இவ்வளவு விரிவாகவும் விழுதுவிட்ட தன்மையிலும் வளரவளர, அதனை அடக்கிடும் ஆற்றலை சர்க்கார் மெள்ள மெள்ள, ஆனால் நிச்சயமாக இழந்துகொண்டேதான் வரும்.

தவறுகள் செய்தால் விடமாட்டோம், தண்டிப்போம் என்கிறார்கள்.

தவறுகள் நடந்தன; கண்டனமும், தண்டனையும் தரப்பட்டது; ஆனால் அமீர்சந்த் பியாரிலால் அமைப்பு அவ்வளவையும் தாங்கிக்கொள்ள முடிந்தது; தகர்ந்து போய்விட வில்லை; மூல பலம் அப்படி அமைந்திருக்கிறது.

ஏற்றுமதி இறக்குமதித் துறையிலே ஈடுபட்ட கம்பெனிகள் தவறு செய்தால், சர்க்கார் அவைகளை "கருப்புக் கோடிட்டு'த் தண்டிக்க முறை இருக்கிறது; அதாவது அந்தக் கம்பெனிகளுடன் சர்க்கார் எந்த வியாபார ஒப்பந்தமும் செய்துகொள்ளாது - ஒருவன் பல முறை போக்கிரித்தனம் செய்தால், போலீஸ்

அவன் பெயரைக் குறித்து வைத்துக்கொள்வதுபோல.

அதுபோலச் செய்தது சர்க்கார் - அமீர்சந்த் பியாரிலால் - அதன் கிளைகள்மீது. செய்து? சளைக்கவில்லை! அமீர்சந்த் பியாரிலாலின் சாம்ராஜ்யம் நடந்துகொண்டுதான் இருக்கிறது. எத்தனை முறை சர்க்காரின் "தண்டனை' கிடைத்தது என்ற விவரம் வேண்டுமா, தம்பி!

1. அமீர்சந்த் பியாரிலால் அமைப்பின் மீது 4-8-54 முதல் 29-1-57 வரையில், வீட்டு அமைப்பு அமைச்சர் அவை நடவடிக்கை எடுத்திருந்தது. மறுபடியும், 31-7-63 முதல் 31-7-65 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த நடவடிக்கை இரும்பு எஃகு அமைச்சர் அவையினால் எடுக்கப்பட்டது.

2. சுரேந்திரா ஓவர்சீஸ் அமைப்பின் மீது 26-10-56 முதல் 29-1-57 வரை அந்த இரண்டு அமைச்சரகங்களுமே நடவடிக்கை எடுத்திருந்தன. மறுபடியும் அதே அமைப்பின் மீது 31-7-63 முதல் 31-7-65 வரையில் நடவடிக்கை.

3. சுரேந்திரா ஓவர்சீஸ் லிமிடெட் என்ற அமைப்பின் மீது இரும்பு எஃகு அமைச்சரகம், 31-7-63 முதல் 31-7-65 வரையில் நடவடிக்கை எடுத்திருந்தது.

4. இன்டர்நேஷனல் சானிடரி என்ஜினியர்ஸ் என்ற அமைப்பின்மீது வீட்டமைப்பு அமைச்சரகம் 15-9-54 முதல் 29-1-57 வரை நடவடிக்கை எடுத்திருந்தது.

5. இந்தியா என்ஜினியரிங் ஒர்க்ஸ் என்ற அமைப்பின் மீது 4-8-54 முதல் 29-1-57 வரை நடவடிக்கை எடுக்கப் பட்டது.

6. மெட்டல் இம்ப்போர்ட் கல்கத்தா என்ற அமைப்பின் மீது 31-7-63 முதல் 31-7-65 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டது.

7. அதுபோன்றே அபிஜே பிரைவேட் லிமிடெட் மீது.

8. அதுபோலவே அமீர்சந்த் பியாரிலால் டின் கன்ட்டெயினர் எனும் அமைப்பின் மீது.

இத்தனை வகையான நடவடிக்கைகள் - முறை தவறாக நடந்ததற்காக - எடுக்கப்பட்டும், இந்தத் தொழில் அமைப்பு, இப்போதும், எப்போதும்போலவே வலிவுடன் நிற்கிறது. அமைச்சர் சுப்பிரமணியத்துக்குத் தலைவலியைத் தருகிற பிரச்சினை இந்தக் கம்பெனியுடன்தான் பிணைந்திருக்கிறது.

தம்பி! தனிப்பட்டவர்கள் தொழில் நடத்த அனுமதிப் போமே தவிர, ஏராளமாக இலாபம் குவித்துக் கொழுக்க விடமாட்டோம் என்கிறார்கள், தனிப்பட்டவர்கள் நடத்தும் தொழிலில் தவறு நடந்தால், விடமாட்டோம் என்று வீரம் பேசுகிறார்கள் காங்கிரஸ்காரர்கள். மறுபடியும் ஒரு தடவை, அமீர்சந்த் பியாரிலால் அமைப்புபற்றி நான் தந்துள்ள தகவல்களைப் படித்துப் பார்த்துவிட்டு பண்பு கெடாத காங்கிரஸ்காரரிடம் படித்துக் காட்டி அவரையே நியாயம் கூறச் சொல்லு; இதுவா சோஷியலிசம் கொண்டுவரும் இலட்சணம் என்பது பற்றி.

அடக்கிவிடுவோம், ஒடுக்கிவிடுவோம் என்று வீரம் பேசுகிறார்கள் தம்பி! அதைக் கேட்டு உண்மையான காங்கிரஸ் பற்று கொண்டவர்கள் ஓரளவு மயங்கிப் போகிறார்கள். ஆனால் இவ்வளவு முறைகேடுகளில் ஈடுபட்டதாகக் கண்டுபிடிக்கப்பட்டு, சர்க்கார் சூடிட்டும், அமீர்சந்த் பியாரிலால் எனும் அமைப்பு எத்தகைய வளர்ச்சி அடைந்திருக்கிறது

தெரியுமா? சர்க்காரின் அனுமதியில்லாமல், ஏற்றுமதி இறக்குமதித் துறையிலே ஈடுபட முடியாது என்பதை அறிவாய். அந்தத் துறையில் இந்த அமீர்சந்த் பியாரிலால் அமைப்பு,

1959லில் இறக்குமதியில் 100க்கு 9 என்ற அளவு பங்கும், ஏற்றுமதியில் 100க்கு 12 என்ற அளவு பங்கும் பெற்றிருந்தது.

ஆனால் 1960லில், இதே கம்பெனி இறக்குமதியில் 100க்கு 59 என்ற அளவிலும், ஏற்றுமதியில் 100க்கு 60 என்ற அளவிலும் பெற்றிருக்கிறது. பார்த்தாயா வளர்ச்சியை! எந்த அமைப்பு? பல அமைச்சரகங்களால், பல முறை முறைகேடாக நடந்துகொண்டதாகக் கண்டுபிடிக்கப்பட்டு, முகத்தில் கரி பூசப்பட்ட அமைப்பு!

முகத்திலே கரி பூசுவதுபோல இந்த அமைப்பு, முறை கேடாக நடந்துகொண்டதற்காக, இந்த அமைப்புடன் தொடர்பு கொள்ளக்கூடாது என்று சூடிட்டிருந்தும், எப்படி இந்த அமைப்பு இந்த வேகமான வளர்ச்சியைப் பெற முடிந்தது என்று கேட்கத் தோன்றும். தம்பி! அந்த வேடிக்கையையும் சொல்லுகிறேன் கேளேன்.

1954 ஆகஸ்ட் - செப்டம்பரில், அமீர்சந்த் பியாரிலால் என்ற அமைப்பு முறைகேடாக நடந்ததற்காக, வீட்டமைப்பு அமைச்சரகம் சூடிட்டது, இந்த அமைப்புடன் எந்தவிதமான ஒப்பந்தமும் கொள்ளக்கூடாது என்று.

முதலாளி திணறிப்போயிருப்பார் என்றுதானே எண்ணிக் கொள்கிறாய்! பணம், தம்பி! பணம்; கோடி கோடியாக! தந்திரம் தன்னாலே வருமே!

அமீர்சந்த் பியாரிலால் என்ற பெயருடைய அமைப்பின் மீதுதானே நடவடிக்கை! இருக்கட்டுமே

என்று கூறி விட்டு, முதலாளி ஒரு புன்னகை காட்டுகிறார்; திட்டம் தயாராகிறது.

சுரேந்திரா ஓவர்சீஸ் பிரைவேட் லிமிடெட் என்ற புதிய அமைப்பு துவக்கப்படுகிறது.

சர்க்காரின் கோபப் பார்வை அமீர்சந்த் பியாரிலால் என்ற அமைப்பின்மீதுதானே! இது புத்தம் புதிது! சுரேந்திரா ஓவர்சீஸ் லிமிடெட்!!

52 காண்ட்ராக்டுகள் ஒப்பந்தங்கள் கிடைக்கின்றன சுரேந்திராவுக்கு!! எஃகு இறக்குமதி செய்வதற்கான அனுமதி! தொகை? 23 கோடி ரூபாய்.

சுரேந்திரா ஓவர்சீஸ் பிரைவேட் கம்பெனி எவருடையது? பொதுக் கணக்குக் குழு தெரிவிக்கிறது, அதுவும் அமீர்சந்த் பியாரிலால் அமைப்புக்கு உட்பட்டதுதான் என்று.

உரையாடல் எப்படி இருந்திருக்கும் என்று கற்பனை செய்து பாரேன், தம்பி! சுவையாக இருக்கும்.

எஃகு இறக்குமதி செய்ய அனுமதி வேண்டும்.

யாருக்கு? உனக்கா? முறைகேடாக நடந்ததற்காகக் கரி பூசப்பட்ட கம்பெனிக்கா? என்ன துணிவு!

ஐயையே! அனுமதி யார் கேட்பதாக எண்ணிக் கொண்டு பேசுகிறீர்கள்? கரி பூசப்பட்டது யார்மீது? அமீர்சந்த் பியாரிலால் கம்பெனிமீது!

ஆமாம்! அந்த அமைப்பின்மீதுதான்.

இது, அமீர்சந்த் பியாரிலால் என்ற அமைப்பு அல்ல. இது சுரேந்திரா ஓவர்சீஸ் லிமிடெட்! இந்த அமைப்பின் மீது மாசு மறுவு கிடையாது.

புதிய கம்பெனியா? ஆனால் இரண்டும் ஒன்று

அல்லவா? சட்டப்படி, இது ஒரு தனிக் கம்பெனி! இந்த அமைப்பிற்கு, இறக்குமதி அனுமதி தர முடியாது என்று மறுக்க காரணம் ஒன்றும் கிடையாது. . . ஆகவே. . .

இப்படித்தான் தம்பி! சர்க்கார் சூடிட்டாலும், இந்த அமைப்பு வளர்ச்சி அடைந்திட முடிந்தது.

இவ்விதமாக, பண பலத்தாலும் சட்டத்தின் சந்து பொந்து களிலே நுழைந்து தப்பித்துக்கொள்ளும் சாமர்த்தியத்தாலும் பல அமைப்புகள் இன்று, அரசையே ஆட்டிப்படைக்கத்தக்க அளவு வலிவு பெற்று விளங்குகின்றன. பாட்டாளிகளின் உழைப்பினாலும் பொதுமக்கள் விலை கொடுத்துப் பண்டம் பலவற்றை வாங்குவதாலும் குவியும் செல்வத்தை, இத்தகைய அமைப்புகளின் அதிபர்கள் தமதாக்கிக்கொள்கின்றனர்.

நாட்டிலே வளர்ச்சியேவா இல்லை; செல்வம் பெருகவே இல்லையா? என்று சிறிதளவு கோபத்துடன் கேட்கின்றனர், காங்கிரசிலே உள்ள நல்லவர்கள்.

வளர்ச்சியும் செல்வப் பெருக்கமும் நிச்சயம் ஏற்பட் டுள்ளன; மறுப்பார் இல்லை. ஆனால் வளர்ச்சியால் வசதி பெற்றவர்கள் யாரார்? செல்வப் பெருக்கம் எவரிடம் போய்ச் சேர்ந்தது? என்பதுதான் தம்பி! நாம் கேட்கும் கேள்வி.

மான் எங்கேவும் போய்விடவில்லை, வேங்கையின் வயிற்றிலேதான் இருக்கிறது என்று கூறுவதுபோல, செல்வப் பெருக்கம் எங்கேயும் போய்விடவில்லை, முதலாளிகளிடம்தான் இருக்கிறது என்று கூறிடும் துணிச்சலே பிறந்திருக்கிறது சில அமைச்சர்களுக்கு.

தம்பி! 1949 - 50லில் சுரங்கத் தொழில் மூலம்

உற்பத்தியான செல்வம் 110 கோடி ரூபாய் மதிப்புள்ளது. இதே துறையில் 1960 - 61லில் 183 கோடி ரூபாய் அளவு கிடைத்திருக்கிறது. வளர்ச்சி! சந்தேகமில்லை! புலியின் வயிறு பெருத்திருக்கிறது! உள்ளே புள்ளி மான் குட்டி!!

தேயிலைத் தொழிலின் மூலம், 1949-50லில் 133 கோடி, 1960-61லில் 242 கோடி ரூபாய்.

தொழிற்சாலைகள் மூலம் 1949-50லில் 1333 கோடி, 1960-61லில் 4003 கோடி!

கப்பல் துறை மூலம் 1949-50லில் 18 கோடி, 1960லில் 135 கோடி!

பாங்கித் தொழில், இன்ஷூரன்ஸ் தொழில் மூலம் 1949-50லில் கிடைத்தது 68 கோடி, 1960-61லில் கிடைத்தது 138 கோடி.

தம்பி! மொத்தத்தில் பல்வேறு துறைகளின் மூலம் உற்பத்தியான செல்வம், 1949-50லில் 1662 கோடி. 1960-61லில் 4741 கோடி!!

இந்தச் செல்வம், சமூகத்தில் சீராகப் பரவி இருந்தால் மக்களின் வாழ்க்கை இத்தனை சீர்கேடாகவா இருக்கும்?

இந்தச் செல்வத்தில் மிகப் பெரும் பகுதி, நிபுணர்கள் கூறுகிறார்கள் - காங்கிரஸ் தலைவர்களும் மறுக்கவில்லை - ஏழைக்கு வந்து சேரவில்லை - பணக்காரனை மேலும் பணக்காரனாக்கி இருக்கிறது.

இந்தச் செல்வத்திலே பெரும் பகுதி, இந்தியாவிலே ஒரு நூறு பேர்களிடம் - கோடீஸ்வரர்களிடம் - போய்க் குவிந்திருக்கிறது என்ற உண்மையை மறுப்பவர் எவரும் இல்லை.

அவர்கள் வைத்திருக்கும் கணக்கோ - துப்பறியும் இலாகாவையே திணற வைக்கிற முறையிலே இருக்கிறது.

மறுபடியும் அந்தப் பாட்டுத்தான் நினைவிற்கு வருகிறது.

அனுபவி ராஜான்னு
அனுப்பி வைச்சான்!

ஆண்டவன் கொடுத்ததாகச் சொல்லிக்கொள்வது, பழைய முறை; இப்போது ஆள்பவர் கொடுக்கிறார்கள் - வாய்ப்பு.

கொடுமை! - என்கிறாய் தம்பி! எனக்கு அதைவிடக் கொடுமையாகத் தென்படுவது என்ன தெரியுமா? இதைச் செய்து கொண்டே, கூச்சப்படாமல், சோஷியலிசமும் பேசுகிறார்களே, அதுதான், தம்பி!

அன்புள்ள
அண்ணாதுரை
21-8-66

குன்று குடை பிடித்துக்கொள்ளுமா?

காமராஜரின் நினைவு கழகத்தின்மீதே!
ஏசுவோர் ஏசட்டும்! இருக்கிறோம் நாங்கள்!
ஏத்தி ஏத்தித் தொழுவதன் இலட்சணம் என்ன?
எரிச்சலைக் குறைக்கவே ஏச்சு!

தம்பி!

உலகின் பாதியைச் சுற்றிவிட்டு வந்துள்ள காமராஜர் தமது முதல் முழக்கத்திலேயே நம்மைத் தாக்கிப் பேசி இருப்பது கண்டு மெத்த வருத்தப்படுவதாக எழுதி இருக்கிறாய்; நம் தோழர்களிலே சிலர் கோபம் கொண்டிருப்பதாகவும் அறிகிறேன். ஆனால், உண்மைக் காங்கிரஸ்காரரர் சிலர் வருத்தமல்ல - கோபமல்ல - வெட்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. இருக்குமல்லவா? பாவம்! அவர்கள் ஓடி ஓடிப் பேசி வருகிறார்கள் எமது தலைவர் உலகுக்கே உன்னதமான தத்துவங்களைத் தந்துவிட்டு வரச்சென்றிருக்கிறார் என்று. வந்தவர் அப்படிப்பட்ட தத்துவ விளக்கம் பற்றியும், தத்துவ விளக்கத்தைத் தாம் தந்தபோது அந்தந்த நாட்டினர் ஆச்சரியத்தால் வாய்பிளந்து நின்றது பற்றியும் எடுத்துரைப்பார், கேட்டு இன்புறலாம் என்ற ஆசையுடன்தானே போயிருந்திருப்பார்கள் முழக்கம் கேட்க! ஆனால், அவ்வளவு தொலைவு போய்விட்டு வந்தவர், என்ன

பேசினார்? வழக்கமான "விட்டேனா பார்!' என்பதைத்தானே! எனக்குத் தெரியாதா அவனோட யோக்யதை! இவனோட நிலை! என்ற திருவாய் மொழிதானே!

இதைத்தான் எல்லாச் சில்லறைகளும் நித்தநித்தம் பொழிந்து தள்ளிக்கொண்டிருக்கின்றனவே; இவர் பெரியவர் - உயர்ந்த இடம் இருப்பவர் - உலகு சுற்றியவர் - இவருமா அதே பேச்சைப் பேசுவது? அதிலும் வந்த உடனே!

என்றெண்ணி வெட்கப்படுகிறார்கள்.

மாஸ்கோ சென்றேன், ரμய நாட்டின் மகோன்னதமான வளர்ச்சியைக் கண்டேன். எப்படி ஒழிக்க முடியும் இங்குள்ள ஏழ்மையை என்று இதுநாள் வரையில் ஏங்கிக் கிடந்தேன் - சோவியத் நாட்டினைக் கண்டேன் - உறுதி கொண்டேன் - புது நம்பிக்கை கொண்டேன் - ஏழ்மையைப் போக்க முடியும்! அதற்கான திட்டத்துடன் வந்துள்ளேன்! கேண்மின்! என்ற முறையில் எழுச்சியூட்டத்தக்க முறையில் எவரையும் தம் வசம் ஈர்க்கத்தக்க வகையில் பேசுவார், தாம் மிகப்பெரிய தலைவர் என்பதனை மெய்ப்பித்துக் காட்டுவார் என்றெல்லாம் எண்ணிக் கொண்டு போயிருக்கிறார்கள். அவரோ பாவம் அந்தப் பழைய பாணிப் பேச்சையேதான் பேசிக் காட்டி இருக்கிறார். நாடு பல சென்று வந்தவர் ஏதேது பேசுகிறார் கேட்போம் என்று பற்பல நாட்டுத் தூதரகத்தினர்கூட ஆவலாக இருந்திருப்பார்களே; பெரியவர் அந்தப் பழைய பாட்டையே பாடிவிட்டாரே, விட்டேனா பார்! என்ற பாட்டை; அதனைக் கேட்ட பிற நாட்டுத் தூதரகத்தினர் இவ்வளவுதானா இவர் சரக்கு என்றல்லவா எண்ணிக்கொள்வார்கள் என்பதனை நினைத்து உண்மைக் காங்கிரஸ்காரர்கள் உள்ளபடி வெட்கப்பட்டுத்தான்

இருப்பார்கள்.

மண்டலம் பல சென்று திரும்பிய மாமன்னன் உரை கேட்டிடச் சிற்றரசரும், புலவர் பெருமக்களும், வணிகரும் மற்றும் வகையான வாழ்வினரும் கூடி இருந்த அவைதனில் அமர்ந்து மாமன்னன், அவையினரே! நாட்டிலே உள்ள ஏரி, குளம், குட்டைகளிலே உள்ள மீன்களைக் குவியல் குவியலாகப் பிடித்திடத் தக்க வலை உண்டு நம்மிடம் அறிவீரன்றோ! - என்று பேசிடின், அவையினர் என்ன எண்ணுவர்? தனியே சென்று தலையிலன்றோ அடித்துக்கொள்வர்?

காசி சென்று திரும்பியவரைக் கண்டு பேசச் சென்றவரிடம் காசித் தலத்தின் மகிமைபற்றியும் கங்கையின் எழில்பற்றியும், அங்குச் சென்றதால் தமக்கு ஏற்பட்ட மன அமைதிபற்றியும் கூறாமல், "கருவாடு மிக மலிவு'' என்று பேசிடின் என்ன எண்ணிக் கொள்வர்? கைபிசைந்து கொள்வர், காசிக்குப்போய்க் கற்றுக் கொண்டு வந்தது இதைத்தானா? என்று.

எதிர்க் கட்சிகளை - குறிப்பாக நமது கழகத்தை வழக்கம் போல் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசிடத்தான் அவ்வளவு பெரியவரால் முடிந்ததேயன்றி, பொதுவுடைமை நாடுகளிலே உலவியதால் பெற்ற புதுக் கருத்துகள்பற்றிப் பேசினாரோ? நினைப்பே வரவில்லை! அவருடைய நினைவு முழுவதும், கழகத்தின்மீதுதான் இருந்திருக்கிறது.

சிலருக்குக் கோபம், சிலருக்கு வருத்தம், உண்மைக் காங்கிரசாருக்கு வெட்கம் ஏற்பட்டது அந்தப் பேச்சைக் கேட்டு - எனக்கோ தம்பி! ஒரு திருப்தி! ஒரு மகிழ்ச்சி! அவர் உலகத் தலைவர்களின் வரிசையிலே சேர்ந்துவிட்டார் என்றும், உலகத் தலைவராக உயர்ந்துவிட்டார் என்றும் கூறி உடுக்கை

அடிக்கிறார்களே, உண்மையிலேயே அவர் உயர்ந்துபோய், எங்கே நம்மைப்பற்றிய நினைப்பற்றுப் போய்விடுகிறதோ - ஒரே அடியாக அலட்சியப்படுத்திவிடுவாரோ - கழகமா! அதை எதிர்ப்பதா! - இதுவா நாம் மேற்கொள்ளவேண்டிய வேலை? வேலையா அது? நாம் எதிர்த்தொழிக்கவேண்டியது இல்லாமை, போதாமை, அறியாமை எனும் தீமைகளை என்று பேசி விடுகிறாரோ - ஆரம்பித்து அவர் அவ்விதம் பேசக் கேட்டு பொதுமக்கள், கழகத்தைப்பற்றிய நினைப்பே அவருக்கு வரவில்லை! அதை ஒரு பொருட்டாக அவர் மதிக்கவில்லை! என்று பேசிக்கொள்கின்றனரோ என்றெண்ணி அஞ்சிக் கொண்டிருந்தேன்.

பெரியவர் பேச்சு அந்த அச்சத்தைப் போக்கிவிட்டது.

அவ்வளவு தொலைவு போய்விட்டு வந்தும் அவருக்குக் கழகம்தான் பிரச்சினையாக இருக்கிறது.

உயர்ந்த நிலை சென்றாராமே, அங்கிருந்து நோக்கும் போதும் அவருடைய கண்களுக்கு நாம்தான் தெரிகிறோம்.

இதனை எண்ணிடும்போது எனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. நமது கழகம் சாமான்யமானது அல்ல; எங்கெங்குச் சென்று திரும்பிடினும் அவருடைய கவனத்தை ஈர்த்திடும் வல்லமை பெற்றிருக்கிறது.

உலகத் தலைவராகிவிட்டார் என்கிறார்கள் காமராஜரை! மகிழ்ச்சி! அந்த உலகத் தலைவராகி விட்டவர், நமது கழகத்தைத்தான் தாக்கிப் பேசுகிறார், பேசிட ஆயிரம் பிரச்சினைகள் இருந்தும்.

ஆகவே கழகம், உலகத் தலைவர் நிலையைப் பெற்றுள்ளவரின் "கவனிப்பை’ப் பெற்றிருக்கிறது!

பொருள் என்ன? கழகம் உலகத் தலைவர் ஆகிவிட்ட பிறகும் கவனித்தாகவேண்டிய பிரச்சினையாக இருக்கிறது.

கழகத்தின் வளர்ச்சியும் வல்லமையும் அந்த வகையிலே இருக்கிறது.

அவ்வளவு பெரியவர் ஆகிவிட்டவராலும் அலட்சியப் படுத்த முடியாத அளவு வளர்ந்துவிட்டிருக்கிறது.

ஆகவே தம்பி! நம்மை நாம் அறிந்துகொள்ளச் செய்தது அவருடைய முழக்கம்.

என் மகழ்ச்சி அதன் காரணமாகத்தான்! ஆயிரம் பிரச்சினைகள் உள்ளன அவர் பேசிட

நாணய மதிப்புக் குறைப்பு - அதன் விளைவு.

எல்லைத் தகராறுகள் - அவற்றுக்கான பரிகாரம்.

பாகிஸ்தான் - சீனா கூட்டுச் சதி - அதனை முறியடிக்க நாடு மேற்கொள்ளவேண்டிய முறைகள்.

உணவுப் பிரச்சினை - அதற்குப் பரிகாரம்.

நாலாவது ஐந்தாண்டுத் திட்டம் - அதன் வடிவம், பொருள் - பலன்.

இப்படிப் பிரச்சினைகள் பலப் பல உள்ளன. இவைபற்றி இவ்வளவு வளர்ந்துள்ளவர் என்ன கூறுகிறார் என்று அறிந்துகொள்ள மக்கள் ஆவல் கொண்டுதானே இருப்பார்கள்? இந்தப் பிரச்சினைகள்பற்றி மூண்டுவிட்டுள்ள குழப்பத்தைப் போக்குவார், தெளிவளிப்பார் என்று எண்ணாமலிருக்க முடியுமா? அகில இந்தியக் காங்கிரசின் தலைவராயிற்றே! ஆனால், பாரேன் தம்பி பொருளாதாரப் பிரச்சினைபற்றி டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் பேசட்டும் - உணவுப்

பிரச்சினை பற்றிச் சுப்பிரமணியம் பேசட்டும் - உலகப் பிரச்சினைபற்றி இந்திரா காந்தி பேசட்டும் - நான் அந்தப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசப் போவதில்லை, என் முன் உள்ள பிரச்சினை ஒன்றே ஒன்று! இந்தத் தேர்தலில் கழகம் காங்கிரசை வீழ்த்தாமல் இருக்கும் வழியைக் கண்டுபிடிப்பது - அந்தப் பிரச்சினை பற்றித்தான் நான் பேசுவேன் என்று கூறுபவர்போல, வந்ததும் நம்மைப்பற்றிய துத்தியமே பாடி இருக்கிறார்!

தம்பி! களம் செல்லும் வீரன் வாளின் கூர்மை சரியாக உளதா என்று பார்த்துக்கொள்வான்.

வீர அர்ஜுனன் வேடமணிந்து நாடக மேடை செல்வோன், வாளின் கூர்மை சரியாக உளதா என்றா பார்த்திடுவான்? மீசை சரியாக ஒட்டப்பட்டிருக்கிறதா என்றுதானே பார்த்துக் கொள்வான்.

காமராஜர் உலகப் பிரச்சினைகளைப்பற்றி ஆய்ந்தறிந் திடவே நாடு பல சென்றுள்ளார் என்று அவர் நாமாவளி பாடிடுவோர் கூறிடினும், அவர் கொண்டுள்ள அக்கறை உலகப் பிரச்சினைகள்மீது அல்ல; காங்கிரஸ் நடாத்தும் எதேச்சாதிகாரத்தை உருக்குலைக்க எழுந்துள்ள கழகத்தை எப்படி மடக்குவது என்பதிலேதான்.

அவர் ஏதோ நாலு வார்த்தை பேசிவிட்டார் என்று வருத்தப்பட்டுக்கொள்கிறார்களே, நமது தோழர்கள், அவர்கள் ஒரு விஷயத்தை உணருகிறார்களா?

காமராஜர் கொண்டுள்ள வருத்தத்தை உணருகிறார்களா?

வருத்தம் கொஞ்சமாகவா இருக்கும் அவருக்கு?

சிற்றரசர்கள்
சீமான்கள்
வணிகக் கோமான்கள்

நிலப் பிரபுக்கள்
ஆலை அரசர்கள்
பெரிய புள்ளிகள்

அணிவகுத்து நிற்கிறார்கள், வெட்டி வா என்றால் கட்டி வருகிறோம் என்று கூறியபடி.

தேர்தல் நிதியினை இலட்ச இலட்சமாகத் திரட்டிக் கொடுத்திடக் கனதனவான்கள் போட்டி போட்டுக்கொண்டு முனைகின்றனர்.

இதழ்கள், புகழ் பாடிடத் தயாராக உள்ளன!

சேர்த்துக் கொள்ளுங்கள் சேவை செய்கிறோம் என்று செப்பிடப் பலர் துடித்துக் கிளம்பி வருகின்றனர்.

இருந்தும்! மனத்திலே மகிழ்ச்சி துள்ளத்தக்க சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்திடப் பலர் இருந்தும்!

அடுத்த தேர்தலைப்பற்றிய பயமற்று, கவலையற்று இருக்க முடிகிறதா அவரால்?

இருக்க விடுகிறதா கழகம்?

இதனை எண்ணிடும்போது அவருக்கு வருத்தமாகத்தானே இருக்கும். துளியாவது வெளியே காட்டிக்கொள்கிறாரா? இல்லையே! வருத்தத்தைக் குறைத்துக்கொள்ளத்தான் அவர் நம்மைப்பற்றி நாலு வார்த்தைகள் பேசுகிறார்.

மிக மட்டமாகப் பேசுகிறார்,
கேவலமான விதத்தில் பேசுகிறார்,
அவன் - இவன் - என்றுகூடப் பேசுகிறார்,
என்று வருத்தப்பட்டுக்கொள்கிறாயே தம்பி! அவர் வேண்டு மென்றேவா அப்படிப் பேசுகிறார்?
அவருடைய பேச்சே அப்படித்தான்!

அவருக்குத் தெரிந்த பாணியில் அவர் பேசுகிறார்! இத்தனை வயதான பிறகு அவரைப் புதுப்பாணியில் பேசப் பழகிக்கொள்ளச் சொல்ல முடியுமா?

ஏசுகிறாரே! ஏசுகிறாரே! என்று நீ வருத்தப்படுகிறாய்; தம்பி! அவர் ஆச்சரியப்படுகிறார், நான் எங்கே ஏசினேன்! பேசினேன்! என்கிறார்.

அவர் பேசுவது ஏசுவதுபோலத் தெரிகிறது உனக்கு. காரணம்? வேறுவிதமாகவும் அவருக்குப் பேசத் தெரியும் என்று நீ எண்ணிக்கொள்வதுதான்.

இதனைப் புரிந்துகொள் தம்பி! புகையிலைக்கு யாரும் நெடியை ஊட்டத் தேவையில்லை; இயற்கையாகவே இருக்கிறது.

புகையிலையிலே பூமணம் எதிர்பார்ப்பது, யாருடைய தவறு, தம்பி?

காமராஜரிடம் வேறுவிதமான பேச்சை எதிர் பார்ப்பது உன் தவறு!

அவருக்குத் தெரிந்த முறையில் அவர் பேசுகிறார் - அவ்வளவுதான்.

இது எனக்குப் புரிந்திருப்பதால்தான் தம்பி! அவருடைய பேச்சு எனக்குக் கோபத்தையோ, வருத்தத்தையோ தரவில்லை.

மேலும் தம்பி! நாம் என்ன அவ்வளவு "மேலான' நிலையினரா?

மெருகு கலையாத மோட்டாரிலா சவாரி செய்கிறோம்? மாளிகைகளிலா நமக்கு விருந்து நடக்கிறது?

அதிகாரிகளா நம்மைப் புடைசூழ்ந்து நிற்கிறார்கள்? "செக்கு' களையா நம்மிடம்

தருகிறார்கள்

நன்கொடையாக. இல்லையே! நாம் எளிய நிலையினர்; எளியோருக்காகப் பணியாற்றுகிறோம். நம்மைக் கண்டதும், மதிப்பளிக்க வேண்டும், மரியாதை காட்ட வேண்டும் என்று பெரியவருக்குத் தோன்றுமா?

மகாராஜாக்கள் மண்டியிடுகிறார்கள்; ராஜாக்கள் உபசாரம் நடத்துகிறார்கள்; இந்தப் பயல்கள் எதிர்க்கிறார்களே என்று எண்ணுகிறார்; எரிச்சல் கொள்கிறார்.

இவ்வளவு செல்வம், செல்வாக்கு, அதிகாரம், அந்தஸ்து நம்மிடம் இருக்கிறது. பஞ்சைகள் நம்மை எதிர்க்கிறார்களே என்பதை எண்ணும்போது அவருக்கு ஏகப்பட்ட எரிச்சல் மூள்கிறது.

சிரங்கு பிடித்தவன் அரிப்பை அடக்கிக்கொள்ள வேக வேகமாகச் "சொறிந்து'கொள்ளும்போது, பூசிக்கொள்ளச் சந்தனம் கொடுத்துப் பாரேன், சள்ளென்று எரிந்துவிழுவான். மனித சுபாவம் அது. அதனை உணராமல், ஏசுகிறாரே என்று வருத்தப்படுகிறாய்.

அதுமட்டுமா தம்பி! ஏசுகிறார் என்கிறாயே! இது என்ன முதல் முறையாகவா உன் காதிலே விழுகிறது? அல்லது ஏசக் கிளம்பிய முதல் மனிதரா இந்தக் காமராஜர்?

கழகம் தொட்டிலில் இருந்த நாள்தொட்டு ஏசினர் பலர்; இவரைவிடக் கடுமையாக. பழகிக்கொள்ளச் சொல்கிறாயா அண்ணா! என்று கேட்கிறாய். அதற்காகச் சொல்லவில்லை.

இவ்வளவு ஏசி வருகிறார்களே இவர்கள், அது நம் வளர்ச்சியைத் துளியாவது கெடுத்ததா?

இவர்களின் ஏசலை மக்கள் மதித்திருந்தால் கழக வளர்ச்சிக்கு இந்த அளவு துணை நின்றிருப்பார்களா? கழகம் பெற்றுள்ள வளர்ச்சி என்ன இலேசானதா? எத்தனை இடிகளை, தாக்குதல்களைத் தாங்கிக்கொண் டிருக்கிறது! எத்தனை சாகசத்தைக் கண்டும் நிலை குலையாமல் இருந்து வருகிறது! எத்தனை எத்தனை சதிச் செயல்களைக் கண்டிருக்கிறது! சாய்த்திட முடியாத நிலையைப் பெற்றிருக்கிறது! இதிலிருந்து தெரிய வில்லையா, இவர்கள் ஏசுவது, வீண் வேலை என்பது?

மழை பெய்கிறதே என்று கவலை கொண்டு குன்று, குடை பிடித்துக்கொள்ளுமா?

தம்பி! அவர்கள் ஏசுவது நம்மை எந்த விதத்திலும் பாதித்த தில்லை; பாதிக்கவில்லை; பாதிக்காது.

மேலும் தம்பி! கழகம் விடுத்திடும் அழைப்பு என்ன? எல்லோரும் பாராட்டுவர்; எங்கிருந்தும் புகழ்மொழி கிடைத்திடும்; பெற்றிட வருக! பெருமகிழ்வு கொண்டிட வருக!! - என்றா அழைக்கிறது. இல்லையே!

ஏசுவர் - பொருட்படுத்தாதீர்.
தாக்குவர் - தாங்கிக்கொள்வீர்!
சிறையில் தள்ளுவர் - அதனை அறச்சாலை எனக் கொள்வீர்.
இஃதன்றோ கழகம் விடுத்திடும் வேண்டுகோள்!
இந்த வேண்டுகோளைக் கேட்டன்றோ கிளம்பினர் பணி புரிய ஆயிரமாயிரம் தோழர்கள்.
குத்தும் வெட்டும் கிடைத்தது - சிலருக்கு.
தடியடி கிடைத்தது - பற்பலருக்கு!
கஞ்சிக் கலையம் கிடைத்தது - பலருக்கு - சிறையினிலே!
இன்னுயிரே பறிக்கப்பட்டது - சிலருக்கு - நமது வணக்கத்துக்குரிய வீரர்க்கு.

இவ்வளவு இன்னலையும் இன்முகத்துடன் ஏற்றனர் தோழர்கள்.

கண்ணிழந்தோர் உளர், அறிவாயே! கா-ழந்தோர், கரமிழந்தோர் உளர், தெரியுமே உனக்கு! சொத்திழந்தோர், சுகமிழந்தோர் உளர் - பலர் - நமக்காக - நாட்டுக்காக. மக்கள், தம்பி! இதனைத்தான் கணக்கெடுத்து வைத்துள்ளனர்; எவரெவர் என்னென்ன ஏசினர் என்பதுபற்றி அல்ல!

ஏசுவோர் ஏசட்டும். எமதருமைத் தோழர்களே! இருக்கின்றோம் நாங்கள் தொகைதொகையாய், ஆதரவு தந்திடவே என்கிறார் மக்கள். இஃதன்றோ உன் உளத்தில் இருந்திட வேண்டும்? ஊசல் சரக்காகிப்போன ஏசல் மொழியா?

ஏசுகின்றனர், அதனால் நமது கழக வளர்ச்சி குன்றிடுவ தில்லை, உணருகிறோம்; ஆயினும் அண்ணா! எரிச்சலாக இருக்கிறதே; வருத்தமாக இருக்கிறதே என்கின்றாய்.

இத்தனை பெரிய உயரிடம் கிடைத்திருக்கிறதே காமராஜப் பெரியவருக்கு, அவர் மனம் மகிழ்ச்சியால் துள்ளுகிறது என்றா எண்ணிக்கொள்கிறாய்? ஏமாற்றமும் எரிச்சலும், வேதனையும் துளைக்கிறது அவர் மனத்தை, அறிவாயா?

காங்கிரசைக் கட்டுப்பாடுள்ளதாக நடத்திச் செல்வதில் வல்லவர் - இது புகழ் மாலை. பிளவுகளைத் தடுத்திடுவார், பேதம் ஒழித்திடுவார் - இப்படிப் பாராட்டுதல்! எந்தப் பிரச்சினையையும் எளிதாகத் தீர்த்திடுவார், கூர்த்த மதி படைத்தார் - இப்படித் திருப்புகழ்.

சரி! தம்பி! திருப்புகழ் தித்திப்பாகத்தான் இருக்கிறது; ஆனால், உண்மை நிலைமை என்ன? கேரளத்திலே காங்கிரஸ் இரண்டு துண்டு.

வங்கத்திலே காங்கிரசில் பிளவு. ஒரிசா காங்கிரசில் ஒரு வெடிப்பு. பீகார் காங்கிரசுக்கு முட்டுக் கொடுக்க ஏற்பாடு. ராஜஸ்தானத்துக் காங்கிரசில் ரகளை. ஆந்திரக் காங்கிரசில் இரு படை வரிசைகள். உத்திரப்பிரதேசப் பிரச்சினையின் இலட்சணமோ உலகறியும்!

இவை எதனைக் காட்டுகின்றன தம்பி? காங்கிரசைத் திறமையாக நடத்திச் செல்லும் ஆற்றல் மிக்கவர் காமராஜர் என்பதனையா? இவர் பார்வை பட்டால் போதும், பிளவுகள் மூடிக்கொள்ளும் என்றார்களே, பிளவு எத்தனைப் பெரிய அளவு விரிவாகிக் கொண்டு போகிறது பார்த்தனையா?

இவர் கூப்பிட்டுப் பேசவேண்டியதுதான், உடனே "குடுமிப்பிடி'ச் சண்டையிட்டுக்கொண்டோரும், கட்டித் தழுவிக் கொள்வர்; ஒன்றுபடுவர் என்றனர்.

கேரளத்துக்குப் போயே பார்த்தார் - பலித்ததா?

இவர் கேரளம் சென்று சங்கர் என்பாரைப் பட்டத்தரசர் போலாக்கினார்! பலன்? காங்கிரசே இரு துண்டுகளாகிவிட்டது. தடுத்திட முடிந்ததா? ஒற்றுமை உண்டாக்க முடிந்ததா?

இந்தப் பிளவுகளெல்லாம் எம்மை ஒன்றும் செய்துவிடாது என்று பேசலாம்; பேசுகின்றனர்; அது வீறாப்பு! ஆனால் இவருடைய திறமை காரணமாக, காங்கிரசில் பேதம் நீங்கி, பிளவு நீங்கி, ஒற்றுமை ஏற்படும் என்று கூறினார்களே, நடந்ததா என்பதுதான். இல்லை! அப்படியாயின், இவருடைய திறமை பற்றிய திருப்பல்லாண்டு பாடுவதன் பொருள்?

போகட்டும் தம்பி! கட்சியிலே ஏற்பட்டுவிடும் பிளவு களைத் தடுத்திட முடியாமலிருக்கட்டும்; காங்கிரஸ் கட்சியின் ஒப்பற்ற தலைவர்

என்கிறார்களே, ஒரு பிரச்சினையிலாவது திட்டவட்டமான கருத்து, காங்கிரசில் உள்ள மற்றவர்களை வழி நடத்திச் செல்லத்தக்க விதமான கருத்தளிக்கும் போக்கு காண்கின்றாயா?

இதுநாள் வரையில் - ஊரே கொதிக்கிறது ரூபாய் மதிப்பு குறைப்புபற்றி. இவர் அதுபற்றி ஒரு விளக்கம் கொடுத்தாரா?

இவருடைய ஒப்புதலின் பேரில் நடந்தேறியதா? இவரை ஒதுக்கித் தள்ளிவிட்டுப் பிரதம மந்திரி, இதை அமுலாக்கி னார்களா? அதற்கான விளக்கமாவது கிடைத்ததா?

நாணயத்தின் மதிப்பைக் குறைத்திடும் பிரச்சினை இவர் கவனிக்கத் தேவையற்ற அற்பப் பிரச்சினையா? அறிவற்றவன்கூட அவ்விதம் கூறிடானே! கருத்தளித்தாரா? இதுவரையில் காணோம்! ஏன்?

மானத்தோடு வாழ்வோம், அன்னிய நாட்டிடம் உணவுக் காகக் கை ஏந்தமாட்டோம் என்று முழக்கம் எழுப்பினார். எழுப்பிய முழக்கம் "பிளேட்' ஆக்கப்பட்டுவிட்டது.

கப்பல் கப்பலாக உணவுப்பொருள் அமெரிக்காவில் இருந்து வந்த வண்ணம் இருக்கிறதே - என்ன மதிப்பு அளிக்கப்பட்டது, இவருடைய மானத்தோடு வாழ்வோம் என்ற முழக்கத்துக்கு? இது பற்றிய கருத்து விளக்கம் தருகிறாரா? இல்லை! ஏன்? தந்திடின் இந்திரா காந்தி சர்க்காருடன் மோதிக் கொள்ளவேண்டி நேரிடும்! அதற்கு இவர் தயாராக இல்லை! காரணம்? என்ன ஆகுமோ என்ற அச்சந்தானே!

உரத் தொழில் சம்பந்தமாக அன்னிய நாட்டுக் கம்பெனிகளுக்குக் கொடுக்கப்பட்ட சலுகைகள்,

அக்கிரம மாக இருப்பதாகக் கருத்தறிவித்தார். இவரை நம்பிக் கொண்டு சில தலைவர்களும் அந்த ஒப்பந்தங்களைக் கண்டித்தனர். ஆனால், காங்கிரஸ் சர்க்கார், இவர் பேச்சை மதித்து நடந்ததா? இல்லை! அன்னியக் கம்பெனிகளுக்குச் சலுகைகள் தந்து ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டன. என்ன செய்கிறார்?

பிரச்சினைகள் பற்றிக் கருத்தறிவிப்பதே அத்திபூத்ததுபோல! அப்படி அவர் அறிவித்திடும் கருத்துக்களும் ஏற்றுக்கொள்ளப் படுவதில்லை; மதிப்பளிக்கப்படுவதில்லை; அவர் கூறிடும் கருத்துக்கு முற்றிலும் முரணாகக் காரியங்களைச் செய்து கொண்டு போகிறார்கள்.

ஏகப்பட்ட பணத்தைக் கொட்டி ஐந்தாண்டுத் திட்டத்தை நடத்துவது தவறு என்று கூறி, நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தொகை குறைக்கப்பட்டாக வேண்டும் என்று காங்கிரஸ் மாநாட்டில் தலைமை வகித்தபோதே பேசினார்.

நடந்தது என்ன? இவர் பேச்சை ஏற்றுக்கொண்டார்களா? பாரேன், நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்காக எவ்வளவு பெரிய தொகை செலவிடப்போவதாக அறிவித்திருக்கிறார்கள் என்பதை!

எந்தக் கருத்தை ஏற்றார்கள்? ஏத்தி ஏத்தித் தொழு கிறார்களே, எமது காமராஜர்தான் இப்போது இந்தியாவையே நடத்திச் செல்கிறார் என்று; இதுதானா அதற்கான இலட்சணம்?

பாராட்டுதலைப் பெறுவதோடு திருப்திப்படச் சொல்லுகிறார்கள்! பவனி வருவதிலே மகிழ்ச்சி பெறச் சொல்லுகிறார்கள்! கொள்கை - திட்டம் - நிர்வாகம் இவைகளை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் என்கிறார்கள்!

இந்த நிலைமை காமராஜரின் மனத்திலே எவ்வளவு வேதனையை உண்டாக்கும் என்பதனை உணர்ந்திடின், தம்பி! அவருக்கு ஏன் எரிச்சல் ஏற்படுகிறது என்பது புரிந்துவிடும்; அது புரிந்துவிட்டால், அவர் ஏசுவது அவர் தமது எரிச்சலை அடக்கிக் கொள்வதற்கே என்பதும் புரிந்திடும்.

மாஸ்கோ போனால் என்ன, மன்னார்குடி சென்றால் என்ன, அவருக்கு உள்ள எரிச்சல் தீருவதாகக் காணோம்.

நாடு பல சுற்றிவிட்டுத் திரும்புகிறார்; காலடி கீழே வைத்ததும் அவர் காதில் என்ன விழுகிறது? அமீன்சந்த்! அமீன்சந்த் என்று மக்கள் பேசிக்கொள்வது. என்ன இழவு இது இந்த அமீன்சந்த் விவகாரம் என்று கேட்கிறார்! விவரம் கூறுகிறார்கள், வேதனை குடைகிறது. வேதனை வெளியே தெரியாதிருக்க என்ன செய்ய வேண்டும்? யார்மீதாவது பாய வேண்டும். யார்மீது பாய்வார்?

ஏனய்யா இப்படியெல்லாம் வம்புகளை விலைக்கு வாங்கிக் கொள்கிறீர்கள்? மக்களின் மனம் ஏற்கெனவே குமுறிக்கொண் டிருக்கிறது. நாள் தவறாமல் ஒரு பிரச்சினை கிளம்புகிறதே! ஏன்? - என்று கேட்க வேண்டும் அமைச்சர்களை! கேட்டால் சும்மா இருப்பார்களா? சிக்கலான கேள்வி!

எனவே என்ன செய்வது? எரிச்சலைக் குறைத்துக் கொள்ளக் கழகத்தை ஏசுவது!! எளிதான காரியம்! சுவையான காரியம்! பழக்கப்பட்ட காரியம்! ஆகவே அதனைச் செய்கிறார்!

ஏசுவது பொருளற்றது, பயனற்றது, நெடுநாட்களாக நடந்து வருவது என்பதனை நாம் உணர்ந்திருக்கிறோம். ஆகவே, கவலை கொண்டிடவேண்டிய நிலை நமக்கு இல்லை.

யாழோ குழலோ வாசித்திடின், இராக இலட்சணம் பற்றிக் கவனிக்கலாம். கலகலத்துப்போன போக்கு வண்டி கிளப்பிடும் ஓசை, என்ன இராகத்தில் அமைந்திருக்கிறது என்று ஆராய்ந்திடப்போமோ!

அன்புள்ள
அண்ணாதுரை
28-8-66

ஆழமான குழியாம் !

ஆழமான குழி! அறுபத்தேழாயிரம் அடி!
உள்ளத்தில் பட்டதை ஒளிக்காமல் சொல்கிறது கழகம்!
பலர் வாழச் சிலர் சாகலாம்!
கிளர்ச்சிகள் மூட்டிவிடப்படுவன அல்ல!
குழி பறிப்போன் குழியிலேயே வீழ்வான்!

தம்பி!

ஆழமான குழி; மிக மிக ஆழமான குழி - ஆயிரம், இரண்டாயிரம் அடி ஆழமல்ல, 67,000 அடி ஆழமான குழி தோண்டப்போகிறார்களாம், சொல்லிவிட்டார்கள்! எவ்வளவு கஷ்டம் பாவம், இவ்வளவு ஆழமான குழி தோண்ட என்று எண்ணும்போதே எனக்குப் பரிதாபமாக இருக்கிறது.

பரிதாபம் காட்டுவது இருக்கட்டும். எதைப்பெற இவ்வளவு ஆழமான குழி தோண்டுகிறார்கள்? விஞ்ஞான வளர்ச்சிக்குத் தேவைப்படும் ஏதாவது அரிய பொருள் அத்தனை அடி ஆழத்திலே புதையுண்டு கிடக்கிறது என்பதற்காகவா என்று கேட்கிறாயா! தம்பி! அதற்காக அல்ல. நமக்காக, கழகத்தைப் போட்டுப் புதைக்க!! 67,000 அடி ஆழக் குழி தோண்டிப் போட்டுப் புதைக்கப் போகிறோம், தி. மு. கழகத்தை 1967-ஆம் ஆண்டு என்று திருச்சியில் கூடிய காங்கிரஸ் மாநாட்டிலே பேசியிருக்கிறார்கள்.

என்ன செய்கிறார்கள் இந்த காங்கிரஸ்காரர்கள்?

ஐந்தாண்டுத் திட்டம் என்கிறார்கள், சமுதாய நலத் திட்டம் என்கிறார்கள், வட்டார வளர்ச்சித் திட்டம் என்கிறார்கள், இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் - நாட்டிலே ஏழை மக்கள் வாழ்விலே பாராட்டப்படத்தக்க விதமான முன்னேற்றம் எதையும் காணாததால் மனம் நொந்து நீ கேட்டிருக்கிறாய் பல முறை, என்னதான் செய்கிறார்கள் இந்தக் காங்கிரஸ்காரரர்கள்? என்ன செய்யப்போகிறார்கள் இந்தக் காங்கிரஸ்காரரர்கள் என்றெல்லாம். அவர்கள் கூறிவிட்டார்கள் திருச்சி மாநாட்டில் என்ன செய்ய விரும்புகிறார்கள் என்பதை; ஆழமான குழி தோண்டப்போவதாகச் சொல்லிவிட்டார்கள்; 67,000 அடி ஆழம்.

என்ன அண்ணா! நம்மைப் போட்டுப் புதைக்கக் குழி தோண்டப் போவதாக அவர்கள் பேசுகிறார்கள் அத்தனை ஆணவத்துடன்; அதைக் கேட்டு நீ பதறாமல் துடிக்காமல், மகிழ்ச்சியுடன் பேசுகிறாயே என்று கேட்கத் தோன்றும். நான் பதறாததற்கும் துடிக்காததற்கும் காரணம் இருக்கிறது.

67,000 அடி! கவனமிருக்கட்டும்! அத்தனை ஆழமான குழி! ஏன்? அவர்களுக்கு அவ்வளவு அச்சம், அத்தனை ஐயப்பாடு! சாதாரண ஆழமுள்ள குழி, ஆயிரம், இரண்டாயிரம் அடி ஆழமுள்ள குழி தோண்டினால் போதாது, அதிலே போட்டுப் புதைத்தால் பயனில்லை, மீண்டும் எழுந்து வந்துவிடக்கூடும், மிக அதிகமான ஆழம் தோண்ட வேண்டும் என்று தோன்றுகிறதே தம்பி! அவர்களுக்கு; அது எனக்கு நமது கழகம் எத்தனைப் பெரியது, எதிரிகளை எந்த அளவுக்கு அச்சப்படுத்தி வைத்திருக் கிறது என்பதை அறியச் செய்கிறது. அது எனக்கு ஒருவிதமான மகிழ்ச்சி உணர்வைக்கூடத் தருகிறது. தி. மு. கழகம் சாமான்ய மானதல்ல, இந்தியாவை பத்தொன்பது ஆண்டுகளாகக் கட்டி ஆண்டு வரும் காங்கிரஸ் கட்சியினர், இந்த

கழகத்தைப் புதைத்துக் குழியில் போடவேண்டுமென்றால், ஆயிரம், இரண்டாயிரம் அடி ஆழமுள்ள குழி போதாது, 67,000 அடி ஆழமுள்ள குழி தேவைப்படுகிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது அவர்களின் பேச்சு! கழகத்தின் வளர்ச்சியின் அளவை நாடு உணர்ந்து கொள்ளவும் அந்தப் பேச்சு துணை செய்கிறது.

கழகமா? அது எங்கே இருக்கிறது என்று பேசிய காலம் போய், கழகமா? அதைப் பொதுமக்கள் சீந்துவார்களா என்று கூறிய காலம் போய்,

கழகமா? பத்துப் பேர் கூச்சலிடும் இடந்தானே என்று பரிகாசம் பேசிய காலம் போய்,

கழகமா! கொஞ்சம் துள்ளுகிறது, நாலு நாளில் தன்னாலே அடங்கிவிடும் என்று பேசிய காலம் போய்,

கழகமா? அது உட் குழப்பத்தாலே உருக்குலைந்து போய்விட்டது என்று பேசிய காலம் போய்,

கழகமா? அது உடைபட்டுப் போய்விட்டதே! இப்போது அதிலே என்ன இருக்கிறது!! என்று பேசிய காலம் போய்,

கழகமா? நாங்கள் மூச்சுவிட்டால் காற்றிலே பறக்காதா என்று ஏளனம் செய்த காலம் போய்,

கழகமா? எங்கள் கோபப் பார்வையாலேயே அதனைச் சுட்டுச் சாம்பலாக்கிவிட மாட்டோமா? என்று பேசிய காலம் போய்,

கழகமா? எங்களுக்கு அது ஒரு பொருட்டாகுமா! என்று அலட்சியம் காட்டிப் பேசிய காலம் போய்,

கழகமா? அதை 67,000 அடி ஆழமுள்ள குழி தோண்டி அல்லவா புதைக்கப் போகிறோம் என்று பேசும் காலம் வந்திருக்கிறதே!

இது எதைக் காட்டுகிறது? கழகத்தை அலட்சியப் படுத்தியவர்கள், அது தன்னாலே உருக்குலைந்து போகும், உடைபட்டுப் போகும் என்று எண்ணினவர்கள், கழகம் சாமான்யமல்ல, அதைப் போட்டுப் புதைப்பதானாலும், சாதாரணக் குழி போதாது, மிக மிக ஆழமான குழி வேண்டும் என்று கூறிடவேண்டிய அளவுக்குக் கழகம் வளர்ந்து, அவர்களைக் கலங்கிடச் செய்கிறதே, அது தம்பி! எனக்கு ஒருவிதமான மகிழ்ச்சியேகூடத் தருகிறது!

காலஞ் சென்ற சத்தியமூர்த்தி சொல்லிக்கொண்டிருந்தார், ஜஸ்டிஸ் கட்சியை 5,000 அடி ஆழத்தில் குழி தோண்டிப் புதைக்கப் போகிறேன் என்று.

இன்றைய காங்கிரஸ்காரர்கள் அவரை மிஞ்சி விட்டார்கள்; குழி தோண்டுவதில்! வாயால்! 67,000 அடி ஆழக் குழியாம்.

அவ்வளவு கடினமான வேலை செய்ய வேண்டும் என்றாகி விட்டது, கழகம் பெற்றுள்ள வளர்ச்சி.

ஒன்றை மறந்துவிடுகிறார்கள் - கோபம் கண்ணை மறைக்குமாமே, அதனால் என்று எண்ணுகிறேன் - 67,000 அடி ஆழக் குழிதோண்டிக் கழகத்தைப் புதைக்கத்தக்க வல்லமை உள்ளவர்களானால், இந்த வீரர்கள் கழகம் இந்த அளவு வளர்ந்ததே, என்ன செய்துகொண்டிருந்தார்கள்? ஏன் கழக வளர்ச்சியைத் தடுக்க முடியவில்லை?

கழகம் இவர்கள் கண்முன்பாகத்தானே வளர்ந்தது? வேறு எங்காவது ஓரிடத்திலே கட்டப்பட்டு இங்கு திடீரென ஒரு நாள் கொண்டுவந்து இறக்குமதி செய்யப்பட்டதா? இல்லையே! இவர்கள் இப்போது இருப்பதுபோலவே அறிவாற்றலுடன், வீராவேச உணர்ச்சியுடன்

இங்கேதான் இருந்துகொண்டிருந் தார்கள், நாம் வளர்ந்தபோது. ஏன் தடுக்க முடியவில்லை கழக வளர்ச்சியை? வளர்ச்சியைத் தடுத்திட முடிந்திருந்தால் இன்று இத்தனை ஆழமான குழி தேவைப்பட்டிருக்குமா? பாவம்! 67,000 அடி ஆழமல்லவா தோண்டப்போவதாகச் சொல்லுகிறார்கள். ஏன் இத்தனைக் கஷ்டம்? தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிப்பது என்பார்களே, அந்தப் போக்கா?

இப்போது இருப்பதுபோலவே அவர்களிடம் எல்லா வல்லமையும் இருந்தது! பிரசாரம், பண பலம், அதிகார பலம் எல்லாம்! இப்போது இருப்பதுபோலவே அப்போதும் இவர்களே ஆளவந்தார்கள்! இருந்தும்? கழக வளர்ச்சியைத் தடுத்திட முடிந்ததா? இல்லையே! கழகம் வளர்ந்து வளர்ந்து, இவர்களுக்கு மிரட்சி அதிகமாகி, ஆழமான குழி! மிக ஆழமான குழி! என்றல்லவா அலறுகிறார்கள்.

இவர்கள் வேறு முக்கியமான வேலையாக - அமெரிக் காவைச் சீர் செய்ய - புரட்சியால் இன்னல் அடைந்த ரஃயர்மக்ஓ இதம் செய்யச் சென்று பல ஆண்டுகள் அங்கே தங்கிவிட்டது போலவும், இவர்கள் இங்கே இல்லாத நேரமாகப் பார்த்து நாம் வளர்ந்ததுபோலவும், இவர்கள் இங்கே இருந்திருந்தால் நம்மை வளரவிடாமல் அப்பொழுதே செய்து விட்டிருக்க முடியும் என்பதைப்போலவும் எண்ணிக்கொண்டு பேசுகிறார்கள்! இவர்கள் அவ்வளவு பேரும், இங்கே விழித்துக் கொண்டும் வீறாப்புப் பேசிக்கொண்டும் இருந்து வந்த நேரத்திலேயேதான் கழகம் வளர்ந்தது.

67,000 அடி ஆழமான குழி தோண்டப் போவதாகப் பேசும் இந்த வல்லவர்கள் என்ன செய்துகொண்டிருந்தார்கள்?

வளர்ந்தால் வளரட்டும் அது நம்மை என்ன

செய்யும் என்று இருந்துவிட்டார்களா என்றால் அதுவும் இல்லையே! அப்போதும், இதே விதமான பேச்சு.

ஒழித்துக் கட்டுவோம்
குழி தோண்டிப் புதைப்போம்
கூண்டோடு தொலைப்போம்
பூண்டோடு ஒழிப்போம்

என்ற முழக்கங்கள்; உருட்டல் மிரட்டல்கள்!

இன்றைய இந்தியக் காங்கிரஸ் தலைவர் காமராஜர் அன்று சொன்ன திருவாய் மொழி தெரியாதா! கழகத் தாருடைய கை கட்டை விரலை வெட்டி விடுவோம் என்பதல்லவா!!

எத்தனை விதமான எதிர்ப்புகளை,
எத்தனைக் கலவரங்களை மூட்டிவிட்டனர்!

என்னென்ன விதமான வழக்குகளைத் தொடுத்தனர்;

எத்தனை தடிஅடி! சிறைவாசம்!

சதிச் செயல்களுக்குத்தான் குறைவா?

தூத்துக்குடி சாமியிலிருந்து வண்ணை பாண்டியன் வரையில் கொலை செய்யப்படவில்லையா?

ஒடித்த கொடிமரங்கள் கொஞ்சமா? கொளுத்திய கொடிகள் கொஞ்சமா?
இட்டுக் கட்டியதும் இருட்டடிப்பு நடத்தியதும் திறமையுடன் அல்லவா?

கழகத் தலைவர்களை ஏசிப் பேசிட, வசைமொழிகள் சாதாரணமாகவா? தனித் தரமுள்ள நாராச நடையிலல்லவா?

பிறப்பு, வளர்ப்பு, குடும்பம், கொடி வழி என்ற எதையாவதுவிட்டார்களா?

மண்ணாசைக்காரன், பெண்ணாசைப் பேயன், பொன்னாசை பிடித்தோன் என்றெல்லாம் கழகத்தின் முன்னணியினரை ஏசியது கொஞ்சமா?

கூத்தாடிகள்! என்றல்லவா இகழ்ந்தனர் - இன்று "கலைஞர்களை' நாங்களும் காட்டுகிறோம் என்று பேசிடும் இந்தக் குணாளர்கள்!

எத்தனை விதவிதமான எதிர்ப்பு மாநாடுகள், ஒழிப்பு மாநாடுகளை நடத்திக் காட்டினர்!

உள்ளூர்ச் சரக்குப் போதாது என்று வெளியூர்ச் சரக்குகளை வேண மட்டும் வரவைத்துக் கூவிக் கூவி விற்றார்களல்லவா?

கருப்பு கொடியா! காட்டுபவன் கரத்தை ஒடி என்ற அகிம்சைப் பேச்சு வழிந்ததே!

எதைச் செய்யாமல் விட்டார்கள்? எல்லாம் செய்து பார்த்து, கழகம் வளருவதைத் தடுக்க முடியவில்லை.

வெட்ட வெளியில் இருந்த கழகம் சட்ட சபைக்கே வந்துவிட்டது!

சட்ட சபையிலும், கழகம் அதிகாரம் பெற்ற எதிர்க் கட்சியாகிவிட்டது!

இந்த வளர்ச்சியைத் தடுத்திட முடியாத இதே வல்லமை சாலிகள்தாம், இப்போது 67,000 அடி ஆழமான குழி தோண்டப் போகிறார்களாம்!

நாட்டிலே சில ஆயிரம் புதுப் பணக்காரர்களை உண்டாக்கி வைத்துக்கொண்டிருப்பதால், கேட்ட பணம் கிடைக்கிறது என்ற ஒரு தைரியம் தவிர, மக்களின் மனம் மகிழ்ச்சியால் துள்ளுகிறது எமது ஆட்சியின் திறமையால், ஆகவே மக்களின்

பேராதரவு எமக்கே உண்டு என்று பேசிடும் தைரியமா இன்று அவர்களுக்கு இருக்கிறது?

மக்கள் மனம் மகிழ்ந்திடும்படியான ஆட்சி நடத்தியிருந்தால் எதிர்க் கட்சிகள் இந்த அளவு வளர்ந்திருக்க முடியுமா?

குழி தோண்டுகிறார்கள் என்றே வைத்துக்கொள்வோம் தம்பி! ஆழமான குழி! அதைப் பார்த்து மக்கள் கேட்க மாட்டார்களா?

நாடாளும் நல்லவர்களே! எதற்காக இத்தனை ஆழமான குழி தோண்டுகிறீர்கள்?

இதுவா? இது தி. மு. கழகத்தைப் போட்டுப் புதைக்க!

இவ்வளவு ஆழமான குழி தேவைப்படுகிறது என்றால், தி. மு. கழகம் பெரிய கட்சி என்று தெரிகிறதே, அப்படியா? அப்படியானால், எப்படி அது இந்த அளவுக்கு வளர்ந்துவிட்டது?

எப்படியோ வளர்ந்துவிட்டது! இப்போது இந்தக் குழியில் போட்டுப் புதைத்துவிடப் போகிறோம்.

ஏன்? தி. மு. கழகம் என்ன கெடுதல் செய்தது? குழியில் போட்டுப் புதைத்திடவேண்டிய விதமான கெடுதி யாருக்கு என்ன செய்தது?

உனக்குத் தெரியாது! இது மிக மிகக் கெட்ட கட்சி! ஆமாம் பொல்லாத கட்சி! நாட்டையே நாசமாக்கும் கட்சி!

அந்த விவரம்தான் கேட்கிறோம், என்ன செய்துவிட்டது கழகம்? ஊர் மக்கள் சொத்தைச் சுருட்டிக்கொண்டதா? ஆயிரமாயிரம் சம்பளம் வாங்கிக்கொண்டு உல்லாச வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்ததா? கள்ள

மார்க்கட்காரனுடன் குலவிற்றா? கொள்ளை இலாபக்காரனிடம் குலவிக் கிடந்ததா? ஊழல் ஊதாரித்தனம் நடத்திற்றா? - என்ன செய்தது சொல்லுங்கள், கேட்போம். . . .?

இப்படி உரையாடல் இருந்திடின், குழி தோண்டக் கிளம்பிடும் குணாளர்கள் என்ன பதில் கூறுவர்?

போ! போ! உனக்கொன்றும் தெரியாது. நீ மேற்கொண்டு ஏதாவது பேசினால் உன்னையும் இந்தக் குழியில் போட்டுப் புதைத்துவிடுவோம் என்றுதான் பேசுவர்.

ஆனால், பொதுமக்கள் என்ன பேசிக்கொள்வார்கள்?

திராவிட முன்னேற்றக் கழக வளர்ச்சி இந்தக் காங்கிரஸ் காரர்களுக்குக் கிலியை மூட்டிவிட்டுவிட்டது.

திராவிட முன்னேற்றக் கழகம்தான் விழிப்புடன் இருந்து கொண்டு, காங்கிரசாட்சி ஆகாத சட்டம் கொண்டுவந்தால் எதிர்க்கிறது; அநியாய வரி போட்டால் கண்டிக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் காங்கிரசாட்சியிலே நெளியும் ஊழலை, ஊதாரித்தனத்தைக் கண்டிக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம், மக்களிடம் வாங்கிடும் வரித்தொகை எவ்வளவு? மக்களுக்குச் செய்திடும் வசதி எந்த அளவு, காட்டு கணக்கு என்று துணிந்து காங்கிரசைக் கேட்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம், எத்தனையோ பேர் நமக்கென்ன என்றும், நம்மால் ஆகுமா என்றும் வாய் மூடிக் கிடந்திடுவதைக் கண்ட பிறகும், நமக்கு என்ன நேரிட்டாலும் சரி, நம்முடைய உள்ளத்துக்குச்

சரியென்றுபட்டதைச் சொல்லியாக வேண்டும் என்ற தூய்மையுடன் பணியாற்றுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகம், மொழிக்காக, கலை வளத்துக்காக, தொழில் முன்னேற்றத்துக்காக, அந்த முன்னேற்றம் முதலாளிகளிடம் சிக்கிவிடாமல் சமுதாயத்துக்குப் பரவுவதற் காகப் பாடுபடுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகம், முதலாளிகளுக்கும் காங்கிரசாட்சிக்கும் ஏற்பட்டுவிட்டுள்ள எழுதாத ஒப்பந்தத்தை எடுத்துக் காட்டுகிறது.

குட்டுகளை உடைக்கிறது! கொடுமைகளை எதிர்க்கிறது! ஆட்சியில் உள்ள அக்கிரமங்களை அம்பலப்படுத்துகிறது.

அந்த எரிச்சல், காங்கிரசுக்கு! நமது ஆதிக்கத்துக்குக் கழகம் உலை வைக்கிறதே என்ற எரிச்சல்.

பட்டம் உண்டு, பதவி உண்டு, பர்மிட் உண்டு, லைசென்சு உண்டு, பத்திரிகைகளில் நிறைய விளம்பரம் உண்டு, வருக! பெறுக! என்று அழைத்ததும் ஓடோடி வந்து நம்மோடு கூடிக் கொண்டார்கள் பலப் பலர், இந்தக் கழகத்துக்காரர்கள் மட்டும், பசப்புக் கண்டு மயங்க மாட்டோம், பாதை தவறமாட்டோம் என்று இருக்கிறார்களே, பொது மக்களிடம் தோழமைத் தொடர்புடன் இருந்து வருகிறார்களே, இவர்களைத் தொலைத்தாலொழிய நமது ஆதிக்கம் நிலைக்காது, நீடிக்காது என்ற உணர்ச்சி.

இதன் காரணமாகத்தான், காங்கிரசாட்சியினர் கழகத்தைப் புதைக்க வேண்டும், அதற்காக ஆழக் குழி தோண்ட வேண்டும் என்று எண்ணுகிறார்கள் - என்று பேசிக்கொள்ள மாட்டார்களா?

இது அக்கிரமம்! நமக்காக, நாட்டுக்காகப் பாடுபடும் கழகத்தை நாம் காத்திட வேண்டும், துணை நிற்க வேண்டும் என்று பொது மக்கள் எண்ணிடத்தான் செய்வார்கள்.

மக்களுக்கு வயிறாரச் சோறு கிடைக்க வழி செய்திடுக! - என்று கேட்டிடும் கழகத்தை, ஏழை மக்களே! எலி தின்று உயிர் பிழைத்துக்கொள்க என்று பேசிடும் காங்கிரஸ் ஒழித்திட முனைவதா? அதை நாம் பார்த்துக்கொண்டிருப்பதா? நமக்காக வாதாடும் கழகத்தை, நம்மை வதைத்து வரும் வன்கணாளர் குழி தோண்டிப் புதைப்போம் என்று கிளம்புவதா? நாம் வாளாயிருப்பதா - என்று பொது மக்கள் எப்படி எண்ணிடாமலிருந்திட முடியும்,

காங்கிரசாட்சியினர் இப்போதுபோல இறுமாந்து பேசிய ஒவ்வொரு கட்டத்திலும், அவர்களின் முயற்சி பலன் தராமல், கழகம் மேலும் மேலும் வளர்ச்சி அடைந்து வந்ததன் காரணமே இதுதான் - பொது மக்களின் நல்லாதரவு!

தம்பி! அவர்கள் குழி தோண்டுகிற வேலையிலே இருக்கட்டும் - ஆழமான குழி!!

நாம், மக்களிடம் சென்று உண்மை நிலைமையை எடுத்துக் கூறிடும் பணியிலேயே நம்மை முழுக்க முழுக்க ஒப்படைத்துவிட வேண்டும்.

தங்கள் ஆதிக்கத்துக்கு உலை வைக்கிறதே கழகம் என்ற எரிச்சலில், காங்கிரசார் ஆத்திரம் கொள்ளத்தான் செய்வார்கள்; கழி சுழற்றுவார்கள், விழி பெயர்த்திடுவேன் என்பார்கள், குழி தோண்டிப் புதைப்பேன் என்பார்கள்.

பாவிப் பயல்! இன்னும் தூங்கவில்லையே என்று நள்ளிரவு கன்னம் வைத்திட வருபவன், வீட்டுக்குடையானைச் சபித்திடத்தான் செய்வான்.

சனியன் இன்னும் வெளியே போய்த் தொலைக்க வில்லையே என்று கள்ளக் காதலனுக்காக ஏங்கிடும் நாயகி கை பிசைந்துகொள்கிறாள் என்று கதையில் எழுதுகிறார்கள் அல்லவா?

அதுபோல, இவர்கள் ஓயமாட்டேன் என்கிறார்களே! விடாது எதிர்த்து வருகிறார்களே! படிப்படியாக முன்னேறு கிறார்களே! வளர்ச்சி இருந்தபடி இருக்கிறதே! - என்று எண்ணி மனம் புழுங்குகிறார்கள், அவர்களுக்குத் தோன்றத்தான் செய்யும், கழகத்தைக் குழி தோண்டிப் புதைக்க வேண்டும் என்று.

அவர்களின் ஆத்திரப் பேச்சு, நமது பணி ஆற்றலுடன் நடந்து வருகிறது என்பதற்குச் சான்றளிக்கிறது!

நாம் ஓயாமல் உழைத்து வருகிறோம் என்பதுடன், மேலும் உழைத்திட உறுதியும் உற்சாகமும் இருக்கிறது என்பதை நாம் உணருவதற்கு அவர்களின் உருட்டல் மிரட்டல் பேச்சு நமக்குப் பயன்படுகிறது.

அவர்கள் குழி தோண்டியபடி இருக்கட்டும், நாம் மக்களுக்கு நல்வழி எது என்பதனை எடுத்துக் காட்டியபடி இருப்போம்.

அவர்கள் தங்கள் ஆதிக்கம் பறிபோகக்கூடாது என்று பதறுகிறார்கள், அதனால் அவர்கள் பேச்சிலே ஆத்திரம் கொந்தளிக்கிறது.

நாம் மக்களுக்கு ஒரு நல்லாட்சி அமைய வேண்டும் என்பதற்காகப் பாடுபடும் பணியினை மேற்கொண்டிருக்கிறோம். நமது பணி பயனற்றது, நமது முறை தெளிவற்றது, நமது ஆற்றல் தரமற்றது என்றால் நம்மைப் பற்றிய நினைப்பே ஆளவந்தார்களுக்கு எழாது.

இன்றோ நம்மைப் பற்றிய நினைப்பின்றி வேறு

எந்த நினைப்பும் அவர்களுக்கு எழுவதில்லை.

எங்குச் சென்றாலும், எதைச் செய்துகொண்டிருந்தாலும், அவர்களின் மனத்திலே நம்மைப் பற்றியே நினைப்பு!

இதைச் செய்தால் என்ன சொல்லுவார்களோ, அதைச் செய்தால் என்ன செய்வார்களோ என்ற அச்சம் அவர்களைப் பிடித்து வாட்டுகிறது.

அதனால்தான், சுற்றிலும் சீமான்கள் வீற்றிருக்க இலட்சங்கள் காணிக்கையாகக் கிடைத்திருக்க, பத்திரிகைகள் புகழ் பாடி நின்றிருக்க, கொலுவிருக்கும் நிலையிலும் அவர்களுக்கு 67,000 அடி ஆழமுள்ள குழி தோண்ட வேண்டும் என்ற "அபாரமான' திட்டத்தின்மீது நாட்டம் செல்லுகிறது.

நம்மை ஒழிக்க அவர்கள் மேற்கொண்ட முன்னைய திட்டங்களைப்போலவே இந்தத் திட்டமும், பயனற்றதாகிப் போகும்.

முன்பு அவர்கள் நம்மை ஒழிக்கத் திட்டம் போட்டபோது இருந்ததைவிட இன்று அவர்கள்மீது மக்கள் கொண்டுள்ள கோபம் பன்மடங்கு வளர்ந்திருக்கிறது.

ஏதோ சோற்றுக்குக் குறைவில்லை - என்ற நிலையில் மக்கள் முன்பு இருந்தார்கள்.

இன்று, சோறு! சோறு! என்று ஏன் கதறுகிறீர்கள்? கிடைத்ததை வயிற்றில் போட்டு நிரப்பிக் கொள்ளுங்கள் என்று ஆளவந்தார்கள் பேசிடக் கேட்கும் நிலையில் உள்ளனர்.

மக்கள் அடைந்திருக்கிற கோபம், கசப்பு, கொந்தளிப்பு ஒவ்வொரு நாளும் தெரிந்தபடி இருக்கிறதே, தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கும் பேரணிகள்,

ஆர்ப்பாட்டங்கள், கடை அடைப்புகள், வேலை நிறுத்தங்கள் என்பவை மூலம்.

சமூகத்தில் எந்தத் துறையினராவது மனக்கசப்பின்றி, குமுறலின்றி இருக்கின்றனரா?

கிளர்ச்சி என்றாலே அது வெறும் ஆலைத் தொழிலாளி செய்வது, நமக்கு அது ஒத்து வராது என்று எண்ணிக்கொண்டிருந்தவர்களெல்லாம் இன்று தத்தமது அமைப்புகள் மூலம், கிளர்ச்சி நடத்திடக் காண்கிறோமே.

சர்க்கார் அலுவலகப் பணியாளர்கள் சீறி எழுவதைக் காண்கிறோம்.

பாங்குகளில் ஊதியம் பெறுவோர் கிளர்ந்தெழுவதைப் பார்க்கிறோம்.

ஆறாத் துயரில் சிக்கியுள்ள ஆசிரியர்கள் "ஆர்ப்பாட்ட அணிவகுப்பு’ நடத்திடக் காண்கிறோம்.

யார் இந்த ஆட்சியிலே திருப்தியுடன் இருந்திட முடிகிறது? நாடே எமது பக்கம்! என்ற நாப்பறை ஒலித்துக்காட்டு கிறார்கள் ஆளவந்தார்கள்.

இல்லை! இல்லை! - என்ற முழக்கம் எழுப்புகின்றனர் ஒவ்வொரு கிளர்ச்சியின்போதும்.

துப்பாக்கி பேசுகிறது! பிணம் விழுகிறது! பீதிகொண்டு மக்கள் ஓடிடக்கூட மறுக்கிறார்கள்.

வீரன் வீழ்ந்தான்! வீரம் வீழ்ந்துபடாது! ஒருவன் மாண்டான்! மற்றவர் மாண்டிடாதிருக்குமட்டும் அறப்போர் நடந்திடும்!! - என்றல்லவா முழக்கம் எழுப்புகிறார்கள்.

போலீஸ் போதவில்லை! இராணுவம் வரவழைக்கப்படுகிறது! ஏன்? கொந்தளிப்பு அடங்க மறுக்கிறது.

சாகவேண்டி நேரிட்டுவிடுமோ என்ற பயம்கூட இன்று மக்களிடம் வெகுவாகக் குறைந்துவிட்டிருக்கிறது; குறைந்து கொண்டும் வருகிறது.

பலர் வாழச் சிலர் சாகலாம் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்ட தத்துவமாகிவிட்டது.

அந்தத் தத்துவம் நடைமுறைக்கே வந்துவிட்டதோ என்று சொல்லத்தக்க நிலைமைகள் உருவாகிக்கொண்டு வருகின்றன.

தம்பி! ஒன்று கூறுவர் காங்கிரசார் கூறுகின்றனர்; இந்தக் கிளர்ச்சிகளை எதிர்க் கட்சிகள் வேண்டுமென்றே தூண்டி விடுகின்றன - என்று.

எதிர்க் கட்சிகள் கிளர்ச்சிகளைத் தூண்டிவிடுகின்றன என்றே வாதத்துக்காக வைத்துக்கொள்வோம்; மக்கள் என்ன ஏமாளிகளா, அவர்கள் அறியார்களா, கிளர்ச்சியை ஒடுக்கத் தடியடி நடக்கும், துப்பாக்கியால் சுடுவார்கள் என்பதனை? தெரிந்தும் கிளர்ச்சியில் ஏன் ஈடுபடுகிறார்கள்?

அவர்கள் மனத்திலே கொந்தளிப்பு இருக்கிறது. ஆகவே கிளர்ச்சி செய்திடும் துணிவு தன்னாலே பிறக்கிறது.

எந்த எதிர்க் கட்சியும், தடியடிபட வருவீர்! துப்பாக்கிச் சூட்டுக்குப் ப-யாக வருவீர் என்று மக்களை அழைத்து வர முடியாது. ஆனால், நடைபெறும் கிளர்ச்சிகள், ஆட்சியின் அலங் கோலத்தின் விளைவு என்பதை உணராதவர்கள் எதிர்க் கட்சிகள்மீது பழி போடுகின்றனர்.

இதனை முட்டாள்தனம் என்று கண்டித்திருக்கிறார் ஒரு பேரறிவாளர்; இன்றைய ஆட்சியாளர்களும் போற்றித் தீர வேண்டிய

பேரறிவாளர்.

இலட்சியங்களுக்காகவும் பொருளாதார நிலை காரணமாகவும், புரட்சிகள் ஏற்படுகின்றன. அதிகாரத்தில் உள்ள முட்டாள்தனமானவர்கள், தங்கள் எண்ணத்தோடு ஒட்டிவராத எதனையும் காண இயலாத கருத்துக் குருடர்கள் இந்தப் புரட்சிகளெல்லாம் கிளர்ச்சிகளால் விளைகின்றன என்று எண்ணிக்கொள்கிறார்கள். உள்ள நிலைமையில் திருப்தி ஏற்படாமல், மாறுதலை விரும்பி அதற்கான வேலை செய்பவர்களே கிளர்ச்சிக்காரர்கள்! ஆனால், ஆயிரம் ஆயிரம் மக்கள் ஒரு கிளர்ச்சிக்காரன் கூப்பிட்ட குரலுக்கு ஓடிவந்துவிட மாட்டார்கள். பெரும்பாலான மக்கள் பாதுகாப்பாக வாழ விரும்பு பவர்கள், இருப்பதை இழந்துவிட விரும்பமாட்டார்கள். ஆனால், பொருளாதார நிலைமை கெட்டு, அன்றாட வாழ்க்கையில் நலிவு வளர்ந்து, வாழ்வே ஒரு சுமை என்று ஆகிப்போய்விடுமானால், வலிவற்றவர்களும், நடப்பது நடக்கட்டும் என்று துணிந்து கிளர்ச்சியில் ஈடுபட்டு விடுகிறார்கள்.

இன்று நாட்டு மக்களில் மிகப் பெரும்பாலானவர்கள் இந்த நிலைமைக்குத் துரத்தப்படுகின்றார்கள்! நடப்பது நடக்கட்டும்! - என்று துணிந்துவிடும் நிலைமைக்கு. இதை உணராமல், மக்களைச் சிலர் தூண்டிவிடுகிறார்கள் என்று பேசி வருகின்றார்கள் ஆளவந்தார்கள்.

இவர்கள் கருத்துக் குருடர்கள், அறிவற்றவர்கள் என்று கண்டித்திருக்கிறார்.

யார்? பண்டித ஜவஹர்லால் நேருவேதான். அவர் எப்போதோ உணர்ச்சி வயப்பட்டுப் பேசிவிட்ட ஆவேசப் பேச்சு அல்ல; நாடு அறியட்டும், உலகம் உணரட்டும், வழிவழி வந்திடுவோர் பாடம் பெறட்டும் என்ற நோக்கத்துடன் உலக வரலாறு எனும் தமது

நூலிலே எழுதி இருக்கிறார்.

நேருவின் வாரிசுகள் என்று கூறிக்கொள்பவர்களுக்கு, தம்பி! நான் இதனை நினைவுபடுத்தவேண்டி வருகிறது! என்ன செய்வது!!

Ideas and economic conditions make revolutions. Foolish people in authority, blind to everything that does not fit in with their ideas, imagine that revolutions are caused by agitations. Agitators are people who are dis-contented with existing conditions and desire a change and work for it. But tens and hundreds of thousands of people do not move to action merely at the bidding of an agitator. Most people desire security above everything else, they do not want to risk losing what they have got. But when economic conditions are such that their day to day suffering grows and life becomes almost an intolerable burden, then even the weak are prepared to take the risk.

நேருவின் இந்த மணிமொழியை உணர இயலாமல், கிளர்ச்சிகள் மூண்டுவிடுகின்றன - மூட்டிவிடப்படுவன அல்ல - என்பதை அறியாமல், சுட்டுத் தள்ளினால் மக்கள் சுருண்டு பிணமாகக் கீழே விழுந்தால், சமுதாயம் அடங்கிப் போய்விடும் என்று கருதிக் கொண்டு சுட்டுத் தள்ளுகிறார்கள்.

ஆமாம்! ஐம்பது பேர் சுட்டுத்தள்ளப்பட்டார்கள்!! என்று அவருடைய ஆயுட் காலத்திலேயே இதனைவிடப் பெரிய சாதனை இல்லை என்று கருதுபவர்போலப் பேசினாரல்லவா பக்தவத்சலனார் - "பாறைபோல நின்றவர்'' - அந்த நிலை எதைக் காட்டுகிறது?

சுட்டுத் தள்ளிக் கிளர்ச்சியை ஒடுக்குவோம் என்று இவர்கள் கொண்டுள்ள உறுதியை.

ஆகவேதான் தம்பி! 67,000 அடி ஆழமுள்ள குழி தேவைப்படுகிறது.

கழகத்தைப் போட்டுப் புதைக்க என்று பேசினார்களே தவிர, அத்தனை ஆழமான குழி தோண்டப்பட வேண்டும் என்று அவர்கள் எண்ணுவதற்குக் காரணம், அவர்கள் குழியில் போட்டுப் புதைத்துவிட விரும்புபவை, கழகம் மட்டுமல்ல, வேறு பல உள!

காந்தீயம்
ஜனநாயகம்
அறநெறி
மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகள்
கிளர்ச்சியை ஒடுக்க வீழ்த்தப்பட்டவர் பிணம்!

இவ்வளவும் இருப்பதால்தான் அவ்வளவு ஆழமான குழி தோண்ட வேண்டும் என்று தோன்றுகிறது போலும்.

பிறரை வீழ்த்தக் குழி பறிப்போன், வெட்டிய குழியில் தானே வீழ்வான் என்று எங்கோ படித்ததாக நினைவு.

தம்பி! அவர்கள் குழி வெட்டிக்கொண்டே இருக்கட்டும், நீயும் நானும் அதிலே தள்ளப்படுவதாக இருந்தாலும், அந்தக் கடைசி நிமிடம் வரையில் மக்களிடம் சொல்லவேண்டியதைச் சொல்லிக்கொண்டிருப்போம். உண்மைக்கு வெற்றி கிடைக்கிறதா இல்லையா என்பதைத்தான் பார்த்துவிடுவோமே.

அன்புள்ள
அண்ணாதுரை
4-9-66

மலர் மணம்

கழக ஏடுகள் பயன் தரத்தக்க படைக்கலன்கள்!
சுமை அதிகம், பாடும் அதிகம்!
நாட்டுக்கு எழில், ஆட்சிக்கு ஏற்றம் தருவது "காஞ்சி'!

தம்பி!

சிரித்திடும் முல்லையைப் பறித்திடும்போது, அதனைத் தன் உள்ளம் வென்ற எழிலுடையாள் ஏற்றுக்கொள்வாள், மணம் கண்டு மகிழ்வாள், எழில் எழிலுடன் சேர்ந்திடும் என்ற எண்ணம் கொள்ளாத காதலன் உண்டா?

வாளினை வடித்தெடுத்துக் கொடுத்திட உலைக் கூடத்தினில் பணி புரிவோன், இந்த வாள், வீரன் கரம் சேர்ந்து அக்கிரமத்தை வெட்டி வீழ்த்தப் பயன்படும், உரிமை காத்திடத் துணை நிற்கும் என்ற நம்பிக்கை பெற்றிடும்போதுதானே அவன் வேலைத் திறன் நேர்த்திமிக்கதாகும்?

சொல்லழகும் பொருளழகும் இழைந்துள்ள நற்கவிதை இயற்றிடுவோன் அக்கவிதையினைச் சுவைத்திட, பயன்பெற்றிட இசைந்து வந்திடுவோர் உளர் என்ற உணர்வினைப் பெற்றா லொழிய உள்ளத்திலிருந்து கவிதா சக்தி சுரந்திடுமா?

எடுத்துக் கொள்ளும் எந்தச் செயலினையும் பாராட்டி வரவேற்றிடவும், ஏற்றுப் பயன்படுத்திக்கொள்ளவும் தக்கார் உளர் என்ற

எண்ணம் மேற்கொள்ளும் செயலினைச் செம்மை யானதாக்கிடுமல்லவா?

தாயின் அன்பினைப் பெற்றிட வாய்ப்பற்ற குழந்தை எத்தனை அழகுடன் விளங்கியும் பயன் என்ன?

இதழ் நடாத்தப்படுகிறது, மலர் வெளியிடப்படுகிறது. ஆயினும் அவற்றினைப் பெற்றிடுவதில் மகிழ்ச்சியும், பயன் பெறுவதில் சுவையும் தேடிடுவோரின் தொகை மிகுதியாகவும், வளர்ந்த வண்ணமும் இருந்தாலொழிய, எண்ணங்களை வடித்தெடுத்து இதழிலும் மலரிலும் தந்து வருவது எற்றுக்கு என்ற ஏக்கமல்லவா மனத்தினைக் குடைந்திடும் என்பதுபற்றிய எண்ணம், இவைபற்றிய நினைவினைக் கொண்டுவந்து சேர்த்தது.

ஆனால், கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் அத்தகைய கவலை குடைந்திடும் நிலையினை மூட்டிவிடவில்லை. "காஞ்சி' இதழினுக்குத் தொடர்ந்து நல்லாதரவு அளித்து வருகின்றனர். மகிழ்ச்சி! நன்றி.

"காஞ்சி' இதழும், கழகக் கருத்துக்களைப் பரப்பிவரும் மற்றைய இதழ்களும், முழுக்க முழுக்கத் தம்மைக் கழகத்திடம் ஒப்படைத்துவிட்டவர்களால் நடத்தப்பட்டு வருவதாகும்.

ஏழெட்டுத் துணையாசிரியர்கள், மூன்று நான்கு ஓவியர்கள், சுறுசுறுப்பு மிக்க விளம்பரத் துறைக் குழுவினர் ஆகியோர் புடைசூழ ஆசிரியர் அமர்ந்தபடி, கண்களை மூடியபடி இந்த இதழில் என்ன வண்ணம் காட்டிடலாம், எந்தச் சுவையைக் கூட்டிடலாம் என்று சிந்தித்துப் பார்த்து எழில் ஏடுகள் பலவற்றினை ஒப்பிட்டுப் பார்த்து, வனப்பு மிக்க விதமான இதழினைத் தந்திடும் வகை காண்பது என்பதெல்லாம், வேறு இதழ்களில்; கழக இதழ்

நடாத்துவோர் மாலையில் மன்னார்குடி, காலையில் காட்பாடி, மறுநாள் போடி, மற்றோர் நாள் சேலம், பிறிதோர் நாள் ஈரோடு என்ற முறையில் சுற்றிச் சுழல்பவர்கள். உடலிலே அலுப்பு ஏற்படும் என்பதனை எடுத்துக்காட்ட இதனைக் கூறிடவில்லை; ஓய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டு நிம்மதியாகச் சிந்தித்து இதழினுக்குச் சுவைகூட்டிடும் நிலையில் உள்ளவர்கள் அல்லர் என்பதனை எடுத்துக் காட்டத்தான்.

பிற இதழ் நடாத்துவோர்போல, இதனையே தமது முழு நேர வேலையாகவோ, முதல் வேலையாகவோ கொண்டவர்கள் அல்லர்.

கழக இதழ் நடாத்துவோர் மேற்கொண்டுள்ள பணி, ஒரு புத்தரசு காண்பது; அதற்குத் தக்கவிதமான பாசறையாகக் கழகத்தை வலிவுள்ளதாக்குவது.

அந்த நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காக அவர்கள் தேடிக்கொள்ளும் படைக்கலன்களில் ஒன்று, இதழ்!

அந்தப் படைக்கலன் வண்ணம் மிக்கதாக விளங்கிடச் செய்திடவேண்டுமே என்பதிலே மட்டும் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள இயலாத நிலையினர்.

ஆனால், அதேபோது அந்தப் படைக்கலன், பயன் தரத் தக்கதாக இருந்திட வேண்டும் என்பதிலே கண்ணுங் கருத்துமாக உள்ளவர்கள்.

இந்த நிலை காரணமாகவே இதழில் எழிலினை மிகுதியாக்கிட, கண்களைக் கவரத்தக்க வடிவம் கொடுத்திட முடிவதில்லை.

இதழ் நடத்துவது ஒன்றை மட்டுமே மேற்கொண்டிடின், எழில் ஏடு என்று எவரும் வியந்து

பாராட்டிடத்தக்க முறையினில், நமது கழகத் தோழர் எவரும் இதழ் நடாத்திடலாம். இயலாத ஒன்று அல்ல! ஆனால், நாம் மேற்கொண்டுள்ள பணியின் அளவும் தன்மையும் நம்மை ஏட்டுக்கு எழிலூட்டும் வேலையிலே மட்டுமே நாம் பிணைந்துவிட இடம் தருவதில்லை.

இந்த நிலையிலும், கூடுமான வரையில், இதழிலே பொலிவு விளங்கிடச் செய்வதில், இளங்கோவன் ஈடுபட்டு, "காஞ்சி’ இதழினுக்கு ஒரு கவர்ச்சி கிடைத்திடச் செய்து வருவதனைப் பலர் பாராட்டிடக் கேட்டு மகிழ்ச்சி கொள்கின்றேன்.

"காஞ்சி’ இதழின் இந்த இரண்டாம் ஆண்டு மலர், எழில்மிகு வடிவம் பெற்றிட முனைந்து பணியாற்றி அனைவருக்கும் அகமகிழ்ச்சி அளித்திடுவதில் குறிப்பிடத்தக்க வெற்றி பெற்றிருக்கும் நிலையினைக் காண்கின்றீர்கள்.

மலரில், இடம்பெற என்னிடமிருந்து கட்டுரைகளைப் பெறுவதென்பதே ஒரு தனிக் கலை! சற்றுக் கடினமான கலையுங்கூட!

கட்டுரைகளை - அதிலும் மலருக்கு என்று தனித் தன்மை வாய்ந்த கட்டுரைகளை - எழுதிட எனக்குக் கிடைக்கும் நேரமே, நள்ளிரவுக்கும் விடிவதற்கும் உள்ள நேரம் - அதிலேயும் கழகத் தோழர்கள் தங்கள் பிரச்சினைகளுடன் வாராதிருந்திடின்.

ஆனால் இந்த நிலையிலும் இதழ் மூலம் என் உடன் பிறந்தாருடன் தொடர்புகொள்வதிலே எனக்குள்ள பேரார்வம், என்னை எப்படியோ பணிபுரியச் செய்கிறது.

ஒவ்வொன்றையும் கூறிவிடவேண்டும், கூறிடும் ஒவ்வொன்றும் முழு அளவினதாக இருக்க வேண்டும் என்ற துடிப்பு எனக்கு.

கூறித் தீரவேண்டியவைகளோ மிக அதிகம் அளவில்; அந்த அளவு வளர்ந்துகொண்டும் வருகிறது.

உலக நடவடிக்கைகளைப்பற்றி, உள்ளத்து எழும் உணர்ச்சி களைப்பற்றி, ஊராள்வோர் போக்குபற்றி, அதனை மாற்றியாக வேண்டிய முறைபற்றி, கூறிட ஆயிரம் உள.

பிரச்சினைகள் கூவிக் கூவி அழைக்கின்றன.

எந்தக் கருத்துக்கும் இனிமை சேர்த்திட, நான் உளேன் காண்க! என்று தமிழ் இலக்கியம் அழைக்கிறது.

ஆதிக்கத்தை எதிர்த்திடும் ஆற்றலை மக்களிடம் எழச் செய்திட வேறு எதுவும் செய்திட வேண்டாம், நான் உள்ளடக்கி வைத்துக்கொண்டுள்ள கருத்தோவியங்களைப் பார், அவை களைப் பக்குவப்படுத்தித் தந்திடு, அது போதும் என்று வரலாற்றுச் சுவடி கூறுகிறது.

கூறவேண்டியதற்கு வண்ணம் தேவையா? நல்வடிவம் தேவையா? நாடக வடிவினில் கொடுத்திடு, படிப்போர் உள்ளத்தைத் தொடும் என்று கூறுகிறது ஒரு குரல்!

கதை வடிவம் கொடு, எந்தக் கருத்தும் எளிதாகிடும், இனிப்பளித்திடும், இதயம் சென்று தாக்கிடும் என்று கூறுகிறது ஒரு குரல்!

ஒன்றல்ல, இரண்டல்ல, பலப் பல உள எனக்கு ஆவலூட்டுபவை.

ஆனால், நானோ கூறவேண்டியவைகளைக் கூறவேண்டிய முறையில் கூறியிருக்கிறோம் என்ற பெருமிதம் கொண்டிட முடியவில்லை; முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்று மட்டுமே கூறிட

முடிகிறது. ஆனால், அந்த நிலையே ஓர் தனித் தன்மை வாய்ந்த மகிழ்ச்சியினைத் தருகிறது. காரணம், வடிவம் வண்ணம் எந்தத் தரத்தில் உள்ளது என்பதுபற்றி அதிகம் பொருட்படுத்தாமல், நமக்குத் தேவைப்படுவனவற்றினை, நம்முடைய தோழமையிலே மகிழ்ச்சி தந்திடும் அண்ணன் தருகின்றான் என்ற பற்றுடன், இதழினை வரவேற்றிடும் ஆயிரமாயிரம் தோழர்கள் உளர் என்பதுதான்.

"காஞ்சி' இரண்டாம் ஆண்டு மலரும் அதேவிதமான வரவேற்பினைப் பெற்றிடும் என்பதனை உணருகின்றேன்; மகிழ்ச்சி கொள்கின்றேன்.

இந்த மலரில் நெடுங்கதைகள் என்று சொல்லத்தக்க அமைப்புடன், இரண்டு கருத்தோவியங்களைத் தந்துள்ளேன்; இரும்பு முள்வேலி, வண்டிக்காரன் மகன். கழகத் தோழர்களின் நன்மதிப்பினைப் பெற்றுள்ள பலர் தந்துள்ள கவிதைகள், கதைகள், கட்டுரைகள் மலரில் இடம் பெற்றுள்ளன.

இவைகளிலே ஒன்றுகூட, படித்துப் பொழுது ஓட்ட அல்ல! ஒவ்வொன்றும் ஒரு பிரச்சினையை விளக்கிட! இந்தத் தனித்தன்மை இதழ்களை மட்டும் நடத்திடுவோர் கொண்டிடவோ, தந்திடவோ முடியாது; அவர்கட்கு அந்த முறை தேவையுமில்லை.

எடுத்துக்காட்டுக்காக - எரிச்சல் மூட்ட வேண்டும் என்பதற்காக அல்ல - ஒன்று கூறுகின்றேன்; இன்று காங்கிரசாட்சியின் போக்கையும், ஒவ்வொரு நடவடிக்கை யையும், கண்டிப்பதில், கேலி செய்வதில், இதழ்கள் பலவும் ஈடுபட்டுள்ளன ஆர்வத்துடன்.

ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து அன்றாட

நிர்வாகத்திலே நெளியும் ஊழல்கள் வரையில், ஆளுங்கட்சிக்குள் நெளியும் அலங்கோலங்கள் உட்பட கண்டிக்கப்படுகின்றன, இதழ்கள் பலவற்றாலும்.

ஆனால், தாம் வலியுறுத்தும் பிரச்சினைகள், அளித்திடும் விளக்கங்கள், தந்திடும் அறிவுரைகள், விடுத்திடும் எச்சரிக்கைகள், துளியேனும், ஆட்சியின் போக்கை மாற்றிடுவதில் வெற்றி தந்துள்ளனவா என்ற கணக்குப் பார்க்கின்றனரா, இதழ் நடாத்துவோர் என்றால் இல்லை; வேறு கணக்குத்தான் பார்த்துக்கொள்கின்றனர்.

கண்டனத்தைக் கொட்டுகின்றனர், காரணங்களை அடுக்கிக் காட்டுகின்றனர், வாதங்களைத் திறமையாகச் செய்கின்றனர். ஆனால், வழக்கிலே வெற்றி கிட்டிற்றா என்பது பற்றி மட்டும் பார்த்திட முனைவதில்லை. ஏன்? அவர்கள் இதழ் நடாத்துகிறார்கள்; ஆட்சியின் அக்கிரமத்தை ஒழித்திடும் இயக்கம் நடத்தவில்லை. அவர்களிலே சிலர் தமது திறமையை விளக்குகிறார்கள், தீமையை ஒழித்திடும் செயலில் தம்மைத் தீவிரமாக ஈடுபடுத்திக்கொள்ளாமலேயே! அவர்கள் பிரச்சினைகளைப்பற்றி நிம்மதியாகச் சிந்திக்கவும், நேர்த்தியாக விளக்கிடவும் தகுதி பெற்றவர்கள்; நிலைமையை மாற்றிட வேண்டும் என்ற மனத் திண்மை கொள்பவர்கள் அல்லர்.

கழக ஏடுகள் அவ்விதமானவை அல்ல.

அந்த ஏடுகள், கழகம் பெற்றுள்ள படைக்கலன்கள்.

கழகமோ, ஆட்சியின் அக்கிரமத்தை ஒழித்திட அறப்போர் மேற்கொண்டுள்ள பாசறை.

ஆகவேதான் கழக ஏடுகளில் பிரச்சினைகள்

விளக்கப் படுவது மட்டுமல்ல, சிக்கல்கள் போக்கிட வழி கூறப்படுகிறது; அதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் எடுத்துக் காட்டப்படுகின்றன; குறிக்கோள் எடுத்துக் காட்டப்படுகிறது.

ஆக, நல்லாட்சி, காண வேண்டும் என்பதற்கான ஆர்வம் கொண்டோர் எவரும், அதற்கான இயக்கம் அளித்திடும் இதழ்களை, ஏந்தித் தீரவேண்டிய படைக்கலன் என்று கொண்டிட வேண்டும். கழக இதழ்கள் மூலம் பெற்றிடும் பலன், இதனால் தனித்தன்மை வாய்ந்ததாகிறது.

எந்தப் பிரச்சினையை எடுத்துக்கொண்டாலும், அது குறித்து சர்க்கார் மேற்கொண்ட போக்கினைக் கண்டிக்கும் அதே இதழ்கள், சூடு தணிந்ததும், வேறு திசையிலே மக்களின் கவனத்தைத் திருப்பி விட்டு விடுவதிலே முனைவதனைக் காணலாம்.

அதனைவிடத் துணிவாகச் சில இதழ்கள், கண்டனம் வெளியிட்டுவிட்டு, சின்னாட்களுக்குப் பிறகு "கனம்' கள் தந்திடும் கருத்துக்களை அவை முன்னம் தாம் வெளியிட்ட கண்டனத்துக்கு முற்றிலும் ஒத்து வராது என்று தெரிந்திருந்தும் - வெளியிட்டு பிரச்சினையை மடியச் செய்துவிடுகின்றன.

இந்த இதழ்கள் மட்டும், அறப்போர் மனப்போக்குடன், நல்லாட்சி கண்டாக வேண்டும் என்ற துடிப்புடன் பணி புரிந்திடின், ஜனநாயகம் எவ்வளவோ அளவு செம்மைப் பட்டிருந்திருக்கும். ஆனால், அந்த முறையில் அவைகள் வேலை செய்யவில்லை.

அதனால் கழக இதழ்கள், வசதியும் வாய்ப்பும், வல்லமையும், அனுபவமும் கொண்ட மற்ற இதழ்கள் செய்திருக்கக்கூடிய - ஆனால் செய்யாது

விட்டுவிட்டுள்ள - வேலைகளையும் சேர்த்துச் செய்திடவேண்டி இருக்கிறது. சுமை அதிகம்! ஆகவே பாடு அதிகமாகிறது.

நீண்ட பழங்காலந் தொட்டே - பணம் - பதவி - எனும் எதன் காரணமாக ஏற்படுவதாயினும் - செல்வாக்குக் கொண்டவர்களின் சீற்றத்துக்கு அஞ்சுவதும், புன்னகைக்கு விரும்புவதும், நம் நாட்டிலே இயல்பு ஆக்கப்பட்டு விட்டிருக்கிறது.

மந்தம், நிதானம் ஆக்கப்பட்டுப் பாராட்டப்படுவதும், கஞ்சத்தனத்தை சிக்கனம் என்று புகழ்வதும், துடுக்குத்தனத்தை அஞ்சாமை என்று கூறிப் பாராட்டுவதும், களியாட்டத்தில் ஈடுபாடு இருந்திடின் அதனைக் கலை ஆர்வம் என்றும், எவரையும் மதித்துக் கலந்து பேசிடாத போக்கை, சுய சிந்தனை என்றும், அகம்பாவத்தைக் கெம்பீரம் என்றும் கூறிப் பாராட்டுவோர் இருப்பதனைக் காண்கின்றாய்.

இந்தி ஆதிக்கப் பிரச்சினைபற்றித் தமிழக ஏடுகள் காட்டிய ஆர்வமும், தொடுத்த கண்டனமும் கொஞ்சம் அல்ல.

இன்று வரையில் இந்த இதழ்கள் கேட்டுக்கொண்ட அளவிலேகூட ஆட்சி மொழிச் சட்டம் திருத்தப்படவில்லை.

என்ன செய்கின்றன இந்த இதழ்கள்?
அதனையும் எழுதுகின்றன!
எழுதிவிட்டு! எழுதுகின்றன!
அவ்வளவுதான்!!

ஜனநாயகம் வலிவு பெறவேண்டுமானால் என்ன செய்திருக்க வேண்டும்? தட்டாமல் தயங்காமல் இந்த இதழ்கள், மக்களிடம் கூற வேண்டும். இந்தத் தேர்தலில், காங்கிரசுக்கு ஓட்டுப் போடாதீர்கள்! இந்தி

ஆதிக்க நோக்கத்துடனேயே இந்த ஆட்சி இருந்து வருகிறது. எமது வேண்டுகோட்களுக்கு எள்ளளவு மதிப்பும் தரவில்லை. இது அரசியல் அகம்பாவம். இந்த அகம்பாவம், சர்வாதிகாரத்திற்குத்தான் நாட்டை இழுத்துச் செல்லும். ஆகவே, நாட்டினரே! இந்த காங்கிரசுக்கு ஓட்டுப் போடாதீர்கள் என்று எழுத வேண்டும்.

எழுதுகின்றனவா? இல்லை! ஏன்? அவை, அக்கிரமத்தை ஒழித்தாக வேண்டும் என்பதற் காக அமைந்துள்ள படைக்கலன்கள் அல்ல! வண்ணம், வடிவம் பாரீர்! என்று கூறிடும் ஏடுகள்!!

எனவேதான் தம்பி! நான் மிக அதிகமாகவே வலியுறுத்திக் கொண்டு வருகிறேன், நல்லாட்சி காண வேண்டும் என்பதிலே நாட்டம் உள்ளோர், அந்த நோக்கத்துக்காகவே ஆக்கப்பட்டுள்ள படைக்கலன் போன்ற கழக ஏடுகளைப் பெரிய அளவில் ஆதரிக்க வேண்டும் என்பதனை.

வானவில்லின் வண்ணத்தைக் கண்டு வியந்திடலாம்; ஆனால், ஓவியம் தீட்டிட வண்ணக் கலவை நாம் தயாரித்துக் கொண்டாக வேண்டும். வானவில்லில் காணப்படும் வண்ணத்தை வழித்தெடுத்துக்கொள்ள முடியாது.

கழக ஏடுகளின் தனித்தன்மை எவ்வளவுக்கெவ்வளவு அதிக அளவில் உணரப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு வேகம் நமது பயணத்திற்குக் கிடைக்கும்.

இந்தப் பணி சிறப்படைய வேண்டுமெனில், பறித்தெடுத்த சிரித்திடும் முல்லையைப் பெற்றுச் சூடிக்கொள்ள எழில் மங்கை இருந்திட வேண்டும் என்பதுபோல், வடித்தெடுத்த வாளினைக் கரம் கொண்டு களம் சென்றிடத் தகுதி மிகு வீரன் கிடைத்திட வேண்டும் என்பதுபோல, கழக

ஏடுகளைத் தக்க ஆதரவு கொடுத்து வளர்ந்திடச் செய்வதுடன், பயன்படுத்திக் கொள்ளும் பக்குவம் உணர்ந்த பல்லோர் தேவைப்படுகின்றனர்.

அந்தப் பல்லோர், "காஞ்சி' இதழினுக்கு ஊக்கமளித்து வருகின்றனர் தொடர்ந்து; தோழமையுடன், அவர்கட்கு நன்றி கூறிக்கொள்வதிலே மகிழ்ச்சி பெறுகின்றேன்.

"காஞ்சி' இதழுடன் தம்பி! உனக்கு ஏற்பட்டுள்ள அன்புத் தொடர்பு தெம்பு ஊட்டுவது மட்டுமல்ல, இதழின் எதிர்காலத்திற்கான ஒளியும் தந்திடுகின்றது.

போர்டில்லன் எனும் ஆங்கிலக் கவிஞன் கூறியதனை நினைவிற் கொள்ளுகிறேன்:

இரவுக்கு ஆயிரம் கண்கள்,
ஆனால், பகலுக்கு ஒன்றே!
ஆயினும், சூரியன் மறைந்தால்
உலகத்தில் ஒளி இல்லையே!

அறிவுக்கு ஆயிரம் கண்கள்
ஆனால், நெஞ்சுக்கு ஒன்றே!
ஆயினும், அன்பு மறைந்தால்
வாழ்வில் ஒளி இல்லையே!

முத்தமிழும் முத்தும் முழங்கிடும் திருநாடு நம் நாடு. கத்தும் கடல் அடக்கிக் களம் செலுத்திக் கடாரம் சென்றோர் நம் இனத்தார். நாமணக்கப் பா பாடி நற்றமிழை நல்லவையைப் பாமணக்கச் செய்ய வந்த பாவலர்கள் தேனொத்த தீந்தமிழைத் தந்திடும் திருநாடு, நம் நாடு. எனினும். . . . .?

ஓர் ஏக்கம் - ஓர் பெருமூச்சு - ஓர் குமுறல் அன்றோ, அந்த “எனினும்’ என்பதுடன் பிறந்திடக் காண்கிறோம். அந்த ஏக்கம் போக்கிட, பெரு மூச்சு நின்று ஓர் புன்னகை மலர்ந்திடக் குமுறல் அகன்று மனத்திலே ஓர் நிம்மதி எழுந்திட, எடுத்துக்

கொள்ளப்படும் இணையற்ற முயற்சியில், தனது பங்கினைச் செலுத்துவதில் மகிழ்ச்சி கொள்கிறது”காஞ்சி’.

தம்பியாம் நீ திரட்டித் தந்திடும் பேராதரவே, "காஞ்சி’ இதழின் பணி செம்மையுடையதாகிடச் செய்திடும்.

"காஞ்சி’ நடாத்திடும் இளங்கோவனும், உடனிருந்து பணியாற்றும் முத்துராமனும், சுந்தரேசனும் அவ்வப்போது கதை, கவிதை, கட்டுரை வழங்கிடும் நண்பர்களும், ஓவியம் தீட்டித் தந்திடுவோரும், இதழின் எழிலும் பயனும் மிகுந்திடவேண்டுமென விழைகின்றனர்.

எந்த எழிலும் தம்பி! உன் கரம் தந்திடும் எழிலுக்கு நிகராகாதன்றோ! இதோ என்னிடம்! என்னிடமுந்தான்!! - என்று கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் "காஞ்சி’யைக் கரத்தில் கொண்டு கூறிடுவதைக் காட்டிலும் இனிய இசை வேறு எது இருக்க முடியும் - என் செவிக்கு?

அந்த மகிழ்ச்சியினை அளித்துவரும் மாண்புக்கு நன்றி கூறி, “மலர்’ கண்டிடுவாய், மணம் நுகர்ந்திடுவாய் என்று அழைத்துத் தருகின்றேன், நாட்டுக்கு எழிலும் ஆட்சிக்கு ஏற்றமும் தேடித் தந்திடும் முயற்சியினை மேற்கொண்டுள்ள”காஞ்சி’ இதழின், இரண்டாம் ஆண்டு மலரினை.

அன்புள்ள
அண்ணாதுரை
11-9-66

தீ மிதித் திருவிழா!

பிரிவினை கேட்போர்க்குத் தேர்தலில் நிற்க இடமில்லையாம்!
கோலோச்சிகளின் குறுக்கு வழிச் சட்டம்!
உதய சூரியன் நுழைவதைத் தடுத்திடச் சூழ்ச்சி!
குட்டு உடைந்தது! திட்டம் அழிந்தது! ஜனநாயகம் பிழைத்தது!

தம்பி!

அறிவூர் அறிவானந்தர் சொன்ன கதை இது.

இதிலே, மெய்யம்மை கருத்தப்பன், பவுனாம்பாள் வலை விரித்தான், கோட்டையூரான் கோலெடுத்தான், வாக்களிப்பார் தெளிவப்பன், நோட்டூரான், இருட்டூரான் என்போர் உளர்.

உதய சூரியன் கோட்டையூர் நுழைவதைத் தடுத்திடச் சூழ்ச்சி நடத்தப்படுவதும், அது முறியடிக்கப்படுவதும் கதையில் விளக்கப்பட்டிருக்கிறது.

மெய்யம்மையிடம் பவுனாம்பாள் தூபம் போட - வருகிற கட்டத்துடன் கதை துவங்குகிறது. மெய்யம்மை இல்லம் போகத்தான் போறேன், போகத்தான் போறேன்னு சொல்லிக்கொண்டே இருந்தாயே பொழுதுக்கும்; தலையே போறதானாலும் போகாம இருக்கப் போறதில்லே. தீ மிதிக்கிற திருவிழாவுக்குன்னு; போகல்லியா, அமர்க்களமா

நடக்குதாமே ஆட்சியூர் தடியெடுத்தான் கோயி-லே தீ மிதிக்கிற திருவிழா.

போகணும்னு கொள்ளை ஆசைதான். தீ மிதிக்கிற திருவிழாவோட வேடிக்கை பார்க்க மட்டுமல்ல, தீ மிதிக்கிறதுக்கே ஆசைதான். . .

தீ மிதிக்கிறதுக்கா? அடீ ஆத்தே! கால் புண்ணாயிடுமே கண்டவங்க தீ மிதிச்சா. . .!

மிதிக்கிறவங்க காலெல்லாம் என்ன தீஞ்சா போகுது?. . .

அவங்க வேண்டுதலைச் செய்துகொண்டவங்க - விரதம் இருக்கிறவங்க - அவங்களைத் தீ ஒண்ணும் செய்துடாதாம்.

எனக்கு மட்டும் என்னவாம்? நானுந்தான், தீ மிதிக்கிற துன்னு தீர்மானிச்சி வைச்சிருக்கறேன்.

பயம் இல்லையா, உனக்கு?. . . . நெஜமாச் சொல்லு, தீயிலே இறங்கத் துணிவு இருக்குதா?

இருக்கறதாலேதான், சொல்றேன் தீ மிதிச்சே காட்டப் போறேன்னு. . . .

தீர்மானம் செய்துகொண்டிருந்தாச் செய்யத்தான் வேணும்; செய்வதாச் சொல்லிவிட்டுச் செய்யாமப் போனாத்தான், ஏகப்பட்ட பாபமாம், எல்லம்மன் கோயில் பூசாரி ஏழெட்டு நாளைக்கு முன்னாலே சொன்னாரு. . . .

காலையிலே சொன்னாரா, மாலையிலே சொன்னாரா அந்தப் பேச்சு?

அதென்ன என்னமோ ஒரு தினுசாக் கேட்கறே, காலை வேளையிலா, மாலையிலான்னு. . . . ?

காரணத்தோடுதான் கேட்கறேன். அவரோட பேச்சு

பொழுதுவிடிஞ்சாப் போச்சி! புரியல்லையா! அட அவன் மொடாக் குடியன் - போதையிலே பேசினானா, நிதானத்தோட இருந்து பேசினானான்னுதான் கேட்கறேன்.

நீ ஒரு குறும்பு! பூஜாரி, நல்ல கட்டுகட்டா விபூதி பூசிக்கிட்டு, குங்குமம் அப்பிக்கிட்டு, சுத்தமா இருக்கறப்போதான் பேசினாரு. நீ சொல்ற மாதிரியிலே இல்லே. அது கிடக்குது; பொறப்படுறதுன்னா பொழுதோட கிளம்பு.

அதைப்பத்திதான் யோசிக்கறேன். . . .

அஞ்சாறு கல் தொலைவு நடக்க வேணுமே, கால் வலிக்குமேன்னு கவலை இருக்கும். . . .

அந்தக் கவலை கிடையாது - நான் என்ன, மேனா மினுக்கி வாழ்வு நடத்திக்கிட்டா இருக்கறேன், நடந்தா கால் கடுக்க? காடுமேடு சுத்தி உரம் ஏறினதுதான் காலு. . . . ஆனால் . . . .

போறதுக்குள்ளே இருட்டாயிடுமே, அதை எண்ணிப் பயப்படறயா. . . .

அட, அந்தப் பயம் எல்லாம் இல்லை போ! நான் என்ன கழுத்திலே தொங்கத் தொங்கப் போட்டுக்கிட்டா இருக்கறேன், தங்கச் செயினு. உள்ளது மூக்குத்தி. அதுவும் பாட்டி போட்டுக்கிட்டு இருந்தது - பழசு - முழுசா பத்து ரூபாகூடப் போவாது.

வேறே என்ன காரணம் தயக்கத்துக்கு. . .?

அதென்னடி அப்படிக் கேட்டுவிட்டே. . . நான் என்ன ஒண்டிக்கட்டையா, நினைச்ச உடனே பொறப்பட. வீடுன்னு ஒண்ணு இல்லையா, அதிலே தட்டு முட்டுச் சாமான்னு ஏதோ கொஞ்சம் இல்லையா? கொழந்தை இருக்குது, தத்தித் தத்தி நடக்கற வயசு. அதை என்னா செய்யறது. . .

கொழந்தைக்கு என்னா. . . வீட்டிலே இருக்குது; வயத்துக்குப் போதுமானது போட்டுவிட்டா. . . பங்காளி வீட்டிலே பார்த்துக் கொள்ள மாட்டாங்களா. . .?

நல்லாச் சொன்னியே ஒரு பேச்சு; நண்டு சுட்டு நரியைக் காவல் வைக்கற மாதிரி, என் கொழந்தைக்குக் காவலு, என்னோட பங்காளிகளா? அது போதுமே தலைக்குத் தீம்பு.

உன்னோட கொழந்தையை நீ, தீ மிதிக்கிற திருவிழாவுக்குப் போய்த் திரும்பற வரைக்கும், பார்த்துக்கொள்ளவா மாட்டாங்க உன்னோட பங்காளிங்க. . .?

விவரம் தெரியாமப் பேசறே. அந்தப் பங்காளிங்க - என் கொழந்தை பொறந்ததிலே இருந்து, சபிச்சுக் கொட்டிக்கிட்டு இருப்பவங்களாச்சே - உனக்குத் தெரியாதா? விளக்கேத்திக் கும்பிட்டாங்க, கொழந்தை மாந்தத்திலே போயிடாதா, மாரிக்குப் ப-யாயிடாதான்னு எல்லாம். . .

செச்சே! கொழந்தைன்னா கொடியவங்களெல்லாம்கூடக் கொண்டாடுவாங்கன்னு பெரியவங்க சொல்லுவாங்களே. . .

இது, எல்லாக் கொழந்தையும்போல இல்லே, அதைத் தெரிஞ்சுக்கோ முதலிலே. இது அரசாளப் பிறந்தது, ஆமாம். பூவாகிக் காயாகிக் கனியாக வேணும். அதைப் பாதுகாத்து, வளரச் செய்தா, நாங்க இழந்துவிட்ட செல்வத்தை மீட்டுக் கொண்டு வந்து எங்களோட, குலம் விளங்க வழி செய்து வைக்கும், அப்பேர்ப்பட்ட கொழந்தை இது.

இருக்கட்டும். அதனாலே என்ன? பங்காளிங்க என்ன அதைக் கடிச்சித் தின்னுப் போடுவாங்களா?

கையைக் காலை ஒடிச்சிப் போடுவாங்களா. . . .

கால் அரைக்கு வித்துப் போடுவாங்க, வெளியூரானுக்கு காணாமப் போயிட்டுது, தேடாத இடமில்லே, சுத்தாத தெருவு இல்லே; கொழந்தையைக் காணோம்னு நீலிக் கண்ணீர் வடிச்சி கதையை முடிச்சிடுவாங்க.

பைத்தியம் உனக்கு; கொழந்தையைக் கொடுமை செய்ய யாருக்கும் மனசு வராது. . .

அப்படியா சொல்றே?. . . . நெஜமா, நம்பிக்கையோடவா சொல்றே. . . .

சத்யப் பிரமாணமாச் சொல்றேன், கொழந்தைக்கு ஒரு கெடுதியும் வராது. நான் பார்த்துக்கொள்றேன்; நீ பயமில்லாமல் போய் வா.

உன்னோட தைரியத்திலேதான், போக முடிவு செய்யறேன். கொழந்தைக்கு ஒரு கெடுதலும் வராதபடி பார்த்துக்கொள்ளு. தீ மிதிக்கிற திருவிழா முடிஞ்சி, நான் வீடு திரும்ப, முடிய மணி நாலு ஆகுதோ அஞ்சு ஆகுதோ தெரியாது. . .

அப்ப, உன்னோட வீட்டுக்காரரும் அண்ணாவும் வந்ததும் கிளம்பப் போறயா. . .

ஆமாம்; அவரும் வருவாரல்லோ. . .

ஆமாம், குடும்பத்தோட போனாத்தானே, பூஜை பலன் கொடுக்கும். . .

நீ மட்டும் என்ன, நாங்களும்தான் வரப் போறோம்னு அவங்களும் சொல்லிக்கிட்டுத்தான் இருக்கறாங்க. நான் மட்டும் பொறப்பட்டா, போய்விட்டுவான்னா சொல்வாங்க

எல்லோருந்தான் கிளம்புவாங்க. . . . நான், நீ பொறப்படறப்போ வந்து பார்க்கறேன்; வழி அனுப்பி

வைக்கறேன். உனக்குத்தான் தெரியுமே, நான் தீ மிதிக்கிற திருவிழாவுக்குப் போற பழக்கத்தை நிறுத்திப் போட்டது.

பவுனாம்பாள் மெய்யம்மையுடன் பேசிவிட்டுச் சென்றான பிறகு, மெய்யம்மையின் கணவன் கருத்தப்பன் வீடு வர, நடந்த உரையாடலை மனைவி கூறுகிறாள்.

கருத்தப்பன் எதனையும் ஆராய்ந்து பார்த்திடும் இயல்பினன்.

தீ மிதிக்கும் திருவிழாவுக்கப் போக வேண்டும் என்று ஏன் பவுனாம்பாள் தூண்டிவிட முனைந்தாள் என்பது குறித்துச் சிந்திக்கலானான். மெய்யம்மையுடன் அதுபற்றிப் பேசிடலானான்.

பவுனாம்பாளா சொன்னாங்கறே, தீ மிதிக்கிற திருவிழா வுக்குப் போய்வரச் சொல்லி. . . . .

ஆமா, அவதான், சொன்னா, தீ மிதிக்கிற திருவிழா வரட்டும், போகத்தான் போறேன், போகத்தான் போறேன்னு பேசிக்கிட்டே இருக்கிறாயே, ஆட்சியூர் தடி எடுத்தான் கோயில் திருவிழாவுக்குப் போகலியான்னு.

அட, இது அதிசயமா இருக்குது, புள்ளே! பவுனாம்பா வாயாலே, தீ மிதிக்கிற திருவிழா பத்திப் பெருமையாச் சொல்றது. . . . பவுனாம்பாவும் வருதா உன்கூட. . .

இல்லே, இல்லே, அதெப்படி வருவா, அவதான், தீ மிதிக்கிற வழக்கத்தை விட்டுவிட்டதாச் சொல்லியாச்சே. . .

அதைத்தான் சொல்றேன்; தீ மிதிக்கிறது பைத்தியக்காரத் தனம், அதாலே ஒரு பலனும் இல்லேன்னு ஊர் மூச்சூடும் பேசிக்கிட்டு இருக்கிற

பவுனாம்பா, உன்னை ஏன் தூண்ட வேணும், தீ மிதிக்கிற திருவிழாவுக்குப் போகச் சொல்லி

அவபேர்லே குத்தம் கண்டு பிடிக்கறதா நம்ம வேலை, நாம சொல்லிக்கொண்டு இருந்தோமில்லே, தீ மிதிக்கிற திருவிழா வந்தா போகப்போறோம்னு. . .

நாம சொன்னது நெஜந்தான் மெய்யம்மே! அதை நான் மறுக்கல்லே. நம்மை, தீ மிதிக்கிற திருவிழாவுக்குப் போகச் சொல்றதிலே என்ன அக்கறை, ஏன் அந்த அக்கறை தீ மிதிக்கிறதை வெறுக்கிற பவுனாம்பாவுக்கு? அதுதானே புதிரா இருக்குது. நாம, வீட்டைவிட்டு, வெளியே போகணும் என்கிறதிலே அல்லவா பவுனாம்பாவுக்கு அக்கறை ஏற்பட்டிருக்குதுன்னு தோணுது.

உங்களுக்குத் தோணும், எதற்கும் ஒன்பதனாயிரம் சந்தேகம்.

•

மகிழ்ச்சியுடன் வீடு திரும்பிய பவுனாம்பாளை அவள் கணவன், வலை விரிப்பான் கண்டு மகிழ்கிறான்.

மெய்யம்மையிடம் பக்குவமாகப் பேசிக் காரியத்தைக் கச்சிதமாக முடிக்கிறாளோ இல்லையோ என்ற கவலையுடன் இருந்து வந்த வலை விரிப்பான் பவுனாம்பாள் வெற்றிக் களை முகத்தில் ஆட வந்தது கண்டு நடந்ததைக் கூறிடக் கேட்டு பேசுகிறான்.

சந்தேகப்படவே இல்லையா, மெய்யம்மா, உன் பேச்சைக் கேட்டு.

சந்தேகப்படுகிறது போலவா நான் பேசுவேன்? எனக்கு என்ன பக்குவம் தெரியாதா, பழக்கம் கிடையாதா?

பவுனாம்பா! நீயோ இதுவரைக்கும், தீ மிதிக்கிற திருவிழாவுக்குப் போறது தப்புன்னு பேசி வந்திருக்கே. . . .

ஆமாம். இப்பக்கூடத்தான், என்னோட எண்ணம் அது. நான் போகப் போறது இல்லே, தீ மிதிக்க. . .

தீ மிதிக்கப் போகாதவ, எங்களை மட்டும் போகச் சொல்றயே, ஏன்னு மெய்யம்மை கேட்கலியா?

கேட்கவிடுவேனா? தீ மிதிக்கிற திருவிழாவுக்குப் போகப் பயமான்னு கேட்டு ரோஷத்தை மூட்டிவிட்டேன். பாரேன், பிறகு மெய்யம்மை பட்ட பாட்டை! போகத்தான் போறேன், ஆனா கொழந்தை ஒண்ணு இருக்கேன்னு இழுத்தா. . .

மெய்யம்மைக்கு எப்பவும் அந்தக் கொழந்தை கவனம் இருக்குமே தெரியுமே

ரொம்பக் கவலைப்பட்டா கொழந்தைக்கு, பங்காளிங் களாலே, எதாச்சும் கெடுதல் வந்துவிட்டா என்ன செய்யறதுன்னு பொலம்பினா.

பொலம்பி போகப் போறதில்லே தீ மிதிக்கன்னு சொல்லி விட்டாளா? . . .

சொல்லவிடுவேனா? கொழந்தையைப்பத்திப் பயப்பட வேண்டாம்; பார்த்துக்கொள்ள நான் இல்லையான்னு சொன்னேன். ஒப்புக்கொண்டா போக. . .

சாமர்த்தியக்காரி பவுனாம்பா நீ, மெய்யம்மை குடும்பத் தோடத்தானே கிளம்புவா. . .

ஆமாம்; இவமட்டும் போனா, மத்ததுக சும்மா இருக்குமா . . . கொழந்தை மட்டும்தான் வீட்டிலே. . . கொண்டாட்டந்தான் உங்க பாடு. . .

நம்ம பாடுன்னு சொல்லு - பிரித்து வைத்துப்

பேசாதே. . .

எனக்கும் எதாச்சும் தராமலா போவிங்க கிடைக்கறதிலே . . . கொழந்தையோட பேச்சை எடுத்தா, எவ்வளவு உருகிப் போறா தெரியுமா மெய்யம்மை! அடே அப்பா! அது அரசாளப் பிறந்ததாம்!!

அரசு ஆளும், ஆளும்டி பவுனாம்பா, ஆளும், இவ கிளம்பட்டும் தீ மிதிக்க; அந்தக் கோட்டான் என்ன கதி ஆகுது பார்! அரசு ஆளப்போகுதாமா அவ கொழந்தை. . . கிடக்கட்டும். கைக் கொழந்தைக்கு யாருதான் காவலு?

குடும்பத்தோடு கிளம்புறா மெய்யம்மை. கொழந்தைக்கு காவல் இருக்க, பொது ஊரான்தான் கிடைப்பான்.

பொது ஊரானா? அவனுக்குத் தூபம் போட்டு விடலாமே, நாம ஒண்ணு சேர்ந்தா. . .

வழி இருக்குது அதுக்கு. நான் முன்னமேயே யோசனை செய்து வைத்திருக்கிறேன். . .

பலே பலே! என்ன யோசனை? சொல்லு, சொல்லு. . .

பச்சைக் கொழந்தை, பாவம்! அதைத் தனியா விட்டு விட்டு, இவங்களோட போக்கைப் பாரு, தீ மிதிக்கக் கிளம்பி விட்டாங்க; இது முறையா சொல்லு, இது நியாயமா சொல்லு! அப்படி இப்படின்னு பேசினாப் போதும் பொதூரான் உருகிக் போய் விடுவான். தீ மிதிக்கப் போனவங்களை வெறுத்துவிடுவான். . .

கொழந்தைக்குக் காவல் இருக்கமாட்டானா. . .

நாம சொல்கிறபடி அவனைக் கேட்கச் செய்யலாம்.

பாவம், கொழந்தையை உன்னாலே பாதுகாக்க முடியாது. கொடு இப்படி, நான் பார்த்துக்கொள்றேன்னு சொன்னா, கொழந்தையைக் கொடுத்துவிடுவான். . . . .

கழுத்திலே இருக்கிறது எனக்கு, இப்பவே சொல்லிவிட்டேன்.

காலிலே உள்ளதும் கையிலே உள்ளதும் எனக்கு சரிதானே. . .

மெதுவாகப் பேசு, யார் காதிலேயாவது விழுந்துவிடப் போகுது. மெய்யம்மை குடும்பத்தோட கிளம்பறமட்டும் வெளியே மூச்சுவிடாதே விவரத்தை; காரியம் கெட்டுவிடப் போகுது.

•

மெய்யம்மையிடம் பேசிவிட்டு, வெளியே வேறு வேலையாகச் சென்ற கருத்தப்பன் சாவடிப் பக்கத்திலே கோட்டையூரானும் கோலெடுத்தானும் பேசிக்கொண் டிருக்கக் காண்கின்றான்.

ஒரு புறம் ஒதுங்கி நின்று அவர்கள் பேசுவதைக் கேட்கிறான்.

தீ மிதிக்கிறதுக்குத் துணிவு இல்லாத பயன்னு இனிப் பேச முடியாது அண்ணே! கருத்தப்பன் குடும்பத்தோட கிளம்பப் போறான் தீ என்னாதான் செய்துவிடும் பார்க்கலாம்னு கூறிக்கிட்டு. . .

பலே! பலே! அதைத்தானே நான் எதிர்பார்த்தபடி இருந்தேன்! இந்தப்பய தீ மிதிக்கவேண்டியதுதான், தீய்ந்து போகும் இவனோட திட்டம். . . தெரியுமா. . . .?

கோட்டையூர் அண்ணே! விவரமாகச் சொல்லுங்க.

கோலெடுத்தான்! உனக்குத் தெரியுமேல்லோ, கருத்தப்ப னோட திட்டம். . . . . நம்ம கோட்டையூர்லே

அவனுடைய கொழந்தை இருக்கே, உதயசூரியன், அதுக்கு இடம் பிடிக்கிற எண்ணம்.

ஆமாம்! உதயசூரியனுக்குக் கோட்டையூர்லே இடம் கிடைக்கும்னுதான் சொல்றான். . . .

சொல்றானேல்லோ! இப்ப, இவன் தீ மிதிக்கக் கிளம்பப் போறானேல்லோ, அதோட தீர்ந்துபோய்விடும் கோட்டையூர்லே இடம் பிடிக்கிற திட்டம். . . . .

ஏன்! தீ மிதிக்கிறதிலே ஆசாமி தொலைஞ்சு போயிடுவான். அப்படி நினைக்கறியா?

அது அல்ல அப்பா! உனக்கு ஒரு இரகசியம் தெரியாது. நம்ம பெரியவரு இல்லே, தொலைதூரத்தான், அவருடைய பேச்சை மீறிக் கோட்டையூராகட்டும் வேட்டையூராகட்டும், நடக்க முடியுமா?

முடியாது! ராட்டையூர் ராஜா இல்லையா அவரு. அதனாலே!

அந்த தொலைதூரத்தான் என்ன உத்தரவு போட்டிருக்கிறாரு தெரியுமா? தீ மிதித்தவன், கோட்டையூர்ப் பாதையிலே நடக்கக்கூடாதுன்னு உத்தரவு.

தீ மிதிக்கப்போனா, கோட்டையூர் போகக்கூடாதா?

கோட்டையூர் பாதையிலேகூட நடக்கக்கூடாது. அதுதான் புது உத்தரவு.

அப்படியானா, தீ மிதிச்சிவிட்டு, கருத்தப்பன் வீடு திரும்பியதும், கோட்டையூரை அடியோடு மறந்துவிடணும். . .

ஆமாம், ஆமாம்! உதயசூரியன் கோட்டையூர் போய் அரசாளப் போகிறான்னு

பேசிக்கொள்வானேல்லோ கருத்தப்பன், அந்த எண்ணத்திலே மண் விழுந்தது. . .

ஊரார் பாவம், உதயசூரியனோட இவன் கோட்டையூர் போகப்போறான்னு பேசிக்கொள்கிறாங்க. . .

ஆமாம். . . . . தீ மிதித்தா கோட்டையூர் பாதையிலேயே நடக்கக்கூடாதே. புது உத்தரவு!

பாதையிலேயே நடக்கக்கூடாதுன்னா, கோட்டையூர் போய்க் கொலுவிருக்கிறது எப்படி. . . . .?

நடக்காதுங்கறேன். பவுனாம்பாளும் அவளொட புருஷன் வலைவிரித்தானும் திட்டமிட்டு, மெய்யம்மையைத் தூண்டி விட்டாச்சி.

தீ மிதிக்கக் கிளம்பறதுக்கா? ஒத்துக்கிட்டாங்களா. . . .?

ஒத்துக்கொள்ளாம இருப்பாங்களா! பவுனாம்பாதான் பச்சைச் சிரிப்பிலே கெட்டிக்காரியாச்சே! அடி ஆத்தே! நெருப்புன்னா பயமா உனக்கும் உங்க வீட்டுக்காரருக்கும்னு பேசி, மெய்யம்மைக்கு ரோஷமூட்டிவிட்டிருக்கறா. . . .

சரியான ஆசாமிதான்! ஏன் தூண்டுறான்னு யோசிக்க ரோஷம் இடம் கொடுக்காது. . . .

ஆமாம். . . பவுனாம்பாளுக்கு இருக்கிற எண்ணம் தீ மிதிக்க மெய்யம்மையோட குடும்பம் போய்விட்டா, குழந்தை இருக்குமேல்லோ வீட்டிலே, அதோட கழுத்திலே கையிலே உள்ளதைப் பார்த்துக்கொள்ளலாம் என்பதுதான்.

அடடே! அவளோட திட்டம் அதுவா! ஆக, தீ மிதிக்கப் போனா, குழந்தை கோட்டையூர் போக முடியாது. . . .

ஆமாம். . . ஆமாம். . . எல்லாம் இவரோட ஏற்பாடு. . . தெரியுதா. . . என்னமோ பெரிய திட்டம் போட்டானே கருத்தப்பன், இப்ப பார்த்தாயா, அவனோட எண்ணத்திலே மண் விழுது. . . . .

தீ மிதிச்ச தீரன் கருத்தப்பன், அதனாலே அவனோட மகன் உதயசூரியனுக்கு, கோட்டையூர்லே இடம் கொடுக்கணும், அதுதான் மரியாதை என்று நினைக்க மாட்டாங்களா. . . .?

அவனேகூட அப்படித்தான் நினைப்பான்; தீ மிதிச்சது பற்றிப் பேசினா, கேட்கிறவங்க மனசு பாகா உருகும்னு எண்ணிக்கிட்டுத்தான் இருப்பான். அவன் கண்டானா, தீயை மிதிச்சா, கோட்டையூர்ப் பாதையிலேகூட அடி எடுத்து வைக்க முடியாது என்கிற விஷயத்தை. . . ?

எக்கச் சக்கமா மாட்டிக்கிட்டான் பய. . .

கிளம்பட்டும் தீ மிதிக்க. . . பிழைச்சி வந்தாக்கூட, பய இந்தப் பேச்சூரோடு இருந்துவிடவேண்டியதுதான். ஒரு அடிகூட கோட்டையூர்ப் பக்கம் போக முடியாது. . . பாரேன், திண்டாடப் போறதை. . .

•

தீ மிதிக்கும் திருவிழாவில் கலந்துகொள்ளும்படி, ஏன் தூண்டிவிடுகிறார்கள் என்பது கருத்தப்பனுக்குப் புரிந்துவிட்டது.

தீ மிதிப்பதோ, திட்டில் இருப்பதோ, எல்லாம், உதய சூரியன் கோட்டையூர் போய்ச் சேர உதவும் என்பதுதான் அவன் எண்ணம்.

கோட்டையூரில் உதயசூரியன் இடம் பெற்றால் தான், பாலூர் தேனூர் போலாகும் என்று கூறி ஆட்சியைப் பிடித்துக்கொண்ட கோட்டையூரான், கோலெடுத்தானைத் துணைக்கு வைத்துக்கொண்டு

மக்களைக் கொடுமைப் படுத்தும் அக்கிரமத்தை ஒழிக்க முடியும்.

அதற்கு வாய்ப்புக் கிடைக்கவிடாமல் தடுத்துவிட வேண்டும், கோட்டையூர்ப் பாதையிலேகூட நடந்திடக் கூடாது என்று உத்தரவு போடுவது சூதான ஏற்பாடு.

இவ்விதமான சூது சூழ்ச்சிகளைக்கூட முறியடிக்கும் வல்லமை கோட்டையூர் போனால்தான் முடியும்.

ஆகவே, கோட்டையூருக்கு உதயசூரியன் சென்று நாட்டைப் பெருவளநல்லூர் ஆக்கவேண்டுமானால், தீ மிதிக்கச் செல்லக்கூடாது என்ற முடிவுக்கு வந்தான் கருத்தப்பன், சூழ்ச்சிக் காரரின் திட்டம் அறிந்ததால்.

வீடு சென்று மெய்யம்மையிடம் கூறினான், உதய சூரியனைக் கோட்டையூர் நுழைய முடியாமல் தடுத்திடத் தீட்டப்பட்டுள்ள சூழ்ச்சிபற்றி.

மெய்யம்மைக்கு அப்போதுதான் பவுனாம்பாள் பசப்பிப் பேசியதன் காரணம் புரிந்தது.

தீ மிதிக்க முடியுமா என்று கேட்டு, ரோஷமூட்டப் பார்ப்பது, நம்மைக் கோட்டையூர் வரவிடாது தடுப்பதற்காகத் தான் என்பது புரிந்ததும், மெய்யம்மை, தீ மிதிக்கச் செல்லத் தேவையில்லை என்று தீர்மானித்தாள்.

தீ மிதிக்கப் போவதில்லை, தங்கள் சூழ்ச்சி வெற்றி பெறப் போவதில்லை என்று தெரிந்ததும் பவுனாம்பாளும், வலை விரிப்பானும், கோட்டையூரானும் கோலெடுத்தானும் முகத்தைத் தொங்கப்போட்டுக்கொண்டனர்.

மெய்யம்மை தன் குழந்தை உதயசூரியனை உச்சிமோந்து முத்தமிட்டு, அரசாளப் பிறந்தவனே! உன்னை அழிக்க அல்லவா அவர்கள் சூழ்ச்சி

செய்தார்கள், எங்களைத் தீ மிதிக்கச் செல்லும்படி தூண்டிவிட்டு. உண்மை புரிந்தது. உன்னைக் காத்திட முடிந்தது. தீயோர் எண்ணத்தில் தீ விழட்டும் என்று கூறி மகிழ்ந்தாள்.

தீ மிதிக்கமாட்டானாம். . . துணிவு இல்லை. . . என்று தூற்றிப் பார்த்தான் வலைவிரிப்பான்.

அவனோட துணிவுபற்றிப் பேசுவது இருக்கட்டும் நீ ஏன் உதயசூரியனைக் கோட்டையூர் பாதையிலேயே நடக்கக்கூடாது தீ மிதிக்க அவர்கள் சென்றால் என்று ஒரு புது உத்தரவு போட்டாய்? தைரியம் என்றா அதற்குப் பெயர்! சூது! சூழ்ச்சி! அதைக் கருத்தப்பன் புரிந்துகொண்டதால்தான், நீங்கள் மூட்டிய தீயிலே விழ மறுத்துவிட்டார்கள்! இது புரியவில்லையா எங்களுக்கு என்று நாட்டாண்மைக்காரர் தெளிவப்பன் கூறினார்.

நல்ல காரியம் செய்தாயப்பா! பயந்துகொண்டிருந்தோம், அரசாளப் பிறந்தவனை விட்டுவிட்டு நீங்கள் எங்கே தீ மிதிக்கப் போய்விடுவீர்களோ என்று. நல்ல வேளை, உங்களுக்கு அவர்கள் சூழ்ச்சி புரிந்துவிட்டது - என்று வாக்களிப்பர் பாராட்டினார்.

தீயிலே தள்ளி, என்றென்றும் உதயசூரியன் கோட்டையூர் நுழையாதபடி செய்துவிடலாமென்று சூழ்ச்சி செய்தோம், முடியவில்லை; இனி கோட்டையூர் பாதையிலே காவலிருக்க வேண்டும், உதயசூரியனை அழைத்துக்கொண்டு, கருத்தப்பனும் மெய்யம்மையும் வராதபடித் தடுத்திட வேண்டும் என்று கோட்டையூரானும் கோலெடுத்தானும் முனைந்தனர்.

அவர்களுக்குத் துணையாக நோட்டூரான், இருட்டூரான் போன்றார் நின்றனர்.

பயப்படாதே தம்பி! நாங்கள் துணை இருக்கிறோம் என்று கூறி வாக்களிப்பாரும், தெளிவப்பனும் முன் வந்தனர்; உதய சூரியன் புன்னகை புரிந்தான்.

•

அன்பானந்தரே! புதுமையாக இருக்கிறதே உமது கதை! எதற்காக இப்படி ஒரு கதையைக் கூறினீர்கள் என்று கேட்டேன். அவர் சிரித்துக்கொண்டே “ஏனப்பா! கதையைக் கேட்டதும் உனக்கு கருத்துப் புரியவில்லையா?” என்று கேட்டுவிட்டு,”இப்போது நீயும் உன்னுடைய உடன்பிறப்புகளும் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? எந்த முயற்சியிலே மும்முரமாக ஈடுபட்டிருக்கிறீர்கள்? தேர்தல் வேலையிலேதானே” என்று ஒரு கேள்வியை எழுப்பினார்.

"ஆமாம். தேர்தல் வேலையிலேதான்! அது என்ன பாதகச் செயலா? கேவலமானதா” என்று நான் கேட்டேன்.

"ஜனநாயக முறையை ஏற்றுக்கொண்டுவிட்டு, தேர்தல் காரியத்தைக் கேவலமானது என்று கூற முடியுமா? திருமணம் செய்துகொண்டு, குடும்பத்தை நடத்திச் செல்வது கேவலம் என்று சொல்வார் உண்டா? தேர்தல் என்பது ஜனநாயகத்தில் ஏற்பட்டுவிடும் மிக முக்கியமான கடமை. நான் அதைக் குறை கூறவில்லை. இந்தத் தேர்தலில் ஈடுபட்டுப் படிப்படியாக நீங்கள் முன்னேறி வருகிறீர்கள். இல்லையா?” என்றார்.

"ஆமாம்! பொது மக்களுடைய நல்லாதரவு காரணமாக. . .” என்று நான் விளக்கம் தந்தேன்.

"உங்களைப் பொது மக்கள் துளியும் ஆதரிக்கவில்லை என்று கூறிக்கொண்டு வந்த

காங்கிரஸ் கட்சிக்கு, இதனால் ஏமாற்றமும் எரிச்சலும் ஏற்பட்டுத்தானே இருக்கும்?"

"ஆமாம்! கொஞ்சநஞ்சமான எரிச்சல் அல்ல" என்று நான் கூறினேன்.

"அந்த எரிச்சல் காரணமாகத்தான், காங்கிரஸ் கட்சி உங்களைத் தூற்றுகிறது இல்லையா?" என்று கேட்டார்.

"சாதாரணமான தூற்றலா! பண்புள்ள யாரும் பேசக் கூசிடும் பேச்செல்லாம் பேசுகிறார்கள்; பெரிய இடத்தில் அமர்ந்திருப்பவர்கள்கூட!" என்று நான் கூறினேன்.

"வருத்தப்படுகிறாயா? பைத்தியமே! பைத்தியமே! அவர்கள் தூற்றத் தூற்றத்தான், அதனை நீங்கள் தாங்கிக்கொள்ள தாங்கிக் கொள்ளத்தான், பொது மக்களுக்கு உங்களிடம் ஒரு பரிவு பற்று ஏற்பட்டிருக்கிறது. அதனையும் அவர்கள் உணர்ந்துகொண்டனர். ஆகவேதான் உங்களை எப்படியாவது தேர்தலிலே நிற்க ஒட்டாதபடி தடுத்துவிட முயன்றனர். சாதாரண முறைகள் போதவில்லை. ஜனநாயகத்தை நடத்துவதாக உலகத்துக்குச் சொல்லிவிட்டு, ஒரு கட்சியைத் தேர்தலுக்கு நிற்கவிடாதபடி, தடை உத்தரவு போட முடியவில்லை. ஆகவே, நேர்வழி கூடாது என்று குறுக்கு வழி சென்று ஒரு சட்டம் உண்டாக்கிக் கொண்டனர். பிரிவினைக் கேட்பவர்கள் தேர்தலிலே ஈடுபடக் கூடாது என்ற சட்டம். ஆஹா! சட்டம் போட்டா எங்களை மட்டந்தட்டப் பார்க்கிறீர்கள் என்று நீங்கள் கூவிக் கொந்தளித்து, சட்டத்தை மீறுவீர்கள், உடனே தேர்தலில் நிற்கும் உரிமையை அழித்துவிடலாம், போட்டி இருக்காது. போக போக்கியம் தரும் பதவி என்றென்றும் இருக்கும் என்ற சூழ்ச்சி. அதை நீங்கள் உணர்ந்துகொண்டீர்கள், அதனால் ஜனநாயகம் பிழைத்தது. அதைத்தான்

நான் கதையாகக் கூறினேன்! தீ மிதிக்கிற திருவிழாவுக்கு, பவுனம்மாளின் பேச்சைக் கேட்டுக்கொண்டு, மெய்யம்மை போயிருந்தால், அவள் குழந்தைக்கு என்ன கதி நேரிட்டிருக்கும்?" என்று விளக்கினார்.

"பெரியவரே! உம்மைப்போன்றவர்கள் உண்மையை உணர்ந்து ஊராருக்கு உரைப்பீர்கள் என்பதிலே எங்களுக்கு உள்ள நம்பிக்கை காரணமாகவே, நாங்கள், காங்கிரஸ் அரசு தீட்டிய சூழ்ச்சிக்குப் ப-யாகக்கூடாது என்று முடிவெடுத்தோம்" என்றேன் நான்.

"நல்ல முடிவு! உதயசூரியன் நாடாளும் வாய்ப்புப் பெற வழி கிடைத்திருக்கிறது." என்றார் அறிவானந்தர்."உங்கள் பேராதரவும் நல்வாழ்த்துக்களும் வேண்டும் ஐயா!" என்றேன். "தாராளமாக! ஏராளமாக!" என்று அறிவானந்தர் கூறினார் மலர்ந்த முகத்துடன்.

•

யார் அந்த அறிவானந்தர்? ஆறேழு ஆண்டுகள் ஹரித் துவாரத்தில் ஆசிரமம் நடத்திய மகானா? அல்லது கேட்டதும் ஆயிரக்கணக்கான ரூபாய்களை நன்கொடையாக அள்ளிக் கொடுத்திடும் சீமானா? என்று கேட்கிறாயா, தம்பி!

அறிவானந்தர், உழைத்து உருக்குலைந்த நிலையில் உள்ள ஒரு எளியவர்! கவலைக் கோடுகள் படிந்துள்ள முகம்! கள்ளங் கபடமற்ற மனம்!! தான் படுகிற அல்லலையும் தொல்லையையும், தன் பிள்ளைகளாவது படாமல், நிம்மதியான வாழ்வு பெறவேண்டுமே என்ற ஏக்கம். தன்னைப் போன்றவர்கள் கொண்டுள்ள ஏக்கத்தைப் போக்கிடத்தக்க ஒரு நல்லாட்சி அமையவேண்டுமே என்ற எண்ணம் கொண்டவர்.

அமையும் என்ற நம்பிக்கை கொண்டவர்! மிட்டாமிராசு காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக அலையும் திருக்கூட்டத்தினர் அல்ல! உழைப்பின் பலனைப் பெறவேண்டும் என்று எண்ணிடும் தூயவர்.

அவர் பர்மிட்டும் லைசென்சும் கேட்கவில்லை; பாலும் தேனும் ஓடிட வேண்டும், அள்ளி அள்ளிப் பருகிட வேண்டும் என்ற பேராசை கொண்டவர் அல்ல!

செய்திட ஒரு வேலை! அதிலே ஒரு நீதி, ஒரு நிம்மதி! குடியிருக்க ஒரு இடம்! வயிறாரச் சோறு! மானங்காத்திட ஆடை! நோயற்ற வாழ்வு! ஓய்வு நேரம், உள்ளத்துக்குக் குளிர்ச்சி தர! - இவைகளைத்தான் எதிர்பார்க்கிறார்.

எங்கே இருக்கிறார் அந்த அறிவானந்தர்? என்றா தம்பி! கேட்கிறாய். எங்கும் இருக்கிறார்! இந்நாட்டு உழைப்பாளியைத் தான் சொல்கிறேன்.

அவரிடம் பேசிப் பாரேன்! ஆதரவும் புரியும்! நல்வாழ்த்தும் கிடைத்திடும்.

அதனைப் பெற்றிடுவதிலே மட்டும், தம்பி! நீ வெற்றி பெற்றுவிட்டால், பிறகு உன் ஆட்சி அமைவதைத் தடுத்திடும் வல்லமை எவருக்கும் இருக்கப்போவதில்லை.

அவர் ஏழை உழைப்பாளி, கவலை நிரம்பியவர்! ஆனால் தம்பி! மறந்துவிடாதே! அவர் இந்நாட்டு மன்னர்!

அவர் "கோலம்’ பளபளப்பு அற்றது! குரல் வலிவற்றது! ஆனால், அரசுகளை ஆக்கவும் அழிக்கவும் தேவைப்படும் ஆயுதம் அவரிடம் இருக்கிறது! ஓட்டுச் சீட்டு!!

அன்புள்ள

அண்ணாதுரை

18-9-66

மரண அடி கொடுப்பாராம்!

காமராஜரின் கோபத்துக்குக் காரணம் எரிச்சல்!
காமராஜரின் புகழொளி காங்கிரசுக்குப் புதிய வலிவாம்!
நேருவின் புகழொளிக்கே மாய்ந்திடாத கழகம் காமராஜரின் புகழொளி கண்டா மிரண்டிடும்?
ஏமாற்றமடைந்த மக்களின் படைப்புகள் எதிர்க் கட்சிகள்!
காமராஜரின் மரண அடிப் பேச்சு கனதனவான்களுக்குத் தெம்பூட்டுவதற்காகவே!

தம்பி!

மரண அடி கொடுக்கப்போகிறேன் என்று பிரகடனம் செய்துவிட்டுள்ளார் காமராஜர். எதிர்க் கட்சிகளுக்குத்தான்!

இவர் பாசம் பொழிவார், ஆதரவு அளிப்பார் என்றா எதிர்க் கட்சிகள் எண்ணிக்கொண்டிருக்க முடியும்? தாக்குவதற்குத் தான் துடித்துக்கொண்டிருப்பார், அதற்கே திட்டமிடுவார் என்பது எல்லோருக்கும் புரியும்! இதை இவர் சொல்லித்தானா எதிர்க் கட்சிகள் தெரிந்துகொள்ள வேண்டும்? நன்றாகத் தெரியும், மிக நன்றாகத் தெரியும். எதிர்க் கட்சிகளை ஒழித்துக் கட்டினாலொழிய, தனது கட்சிக்கு எதிர்காலம் இல்லை என்ற அச்சம் பிடித்தாட்டும் நிலையில்,

"அகில இந்தியா' இருக்கிறார் என்பது. ஆகவே, அவரிடமிருந்து எதிர்க் கட்சிகள் தாக்குதலைத் தான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும். தட்டிக்கொடுப்பார் என்ற நினைப்புடனா இருக்க முடியும்? அந்நிலையில் காமராஜர் மரண அடி கொடுப்பேன் என்று பேசியிருப்பது, எதிர்க் கட்சிகளை நோக்கி அல்ல!

சஞ்சலமும் சந்தேகமும் கொண்டு, ஆரூடம் பார்த்தபடி இருக்கும் அவருடைய கட்சிக்காரர்களுக்கு, "தைரியம் ஊட்டு கிறார், அஞ்சாதீர்கள்! நான் இருக்கிறேன் - மரண அடி கொடுக்கிறேன் எதிர்க் கட்சிகளுக்கு' என்று பேசுகிறார்.

“பயலின் கையைக் காலை வெட்டிப் போட்டுவிடுகிறேன் பயப்பட வேண்டாம்'' என்று நிலப்பிரபுக்குத் தைரியம் ஊட்டி விட்டு,”செலவுக்கு' வாங்கிக்கொண்டு, உல்லாசத்தைத் தேடிச் செல்லும் உருட்டு விழியினர் உள்ளனர்; அறிவோம் அல்லவா?

வரப்புச் சண்டை, வாய்க்கால் சண்டை, கற்பழிக்க முனைந்ததால் மூண்ட பகை போன்றவைகளிலே சிக்கிக் கொள்ளும் சீமான், என்ன ஆகுமோ ஏது ஆகுமோ என்று அச்சம் கொண்டு நடுங்கிடும்போது, குத்திக் குடலெடுப்போன், குறி பார்த்து வேல் வீசுவோன், மடக்கி அடிப்போன், மறைந்திருந்து வெட்டுவோன் போன்ற பேர்வழிகள், “ஐயா மட்டும் கொஞ்சம் தாராளமாகச் செலவுக்குப் பணத்தைக் கொடுத்தால், ஒரு நொடியிலே தீர்த்துக்கட்டிவிடுகிறேன் - தலை வேறு, முண்டம் வேறு ஆக்கிவிடுகிறேன். ஐயா எதற்கும் கவலைப்படத் தேவையில்லை, நான் காரியத்தைக் கச்சிதமாக முடித்துக் கொடுக்கிறேன், ஐயா மட்டும் செலவுக்குப் போதுமானதைத் தந்து பார்க்கட்டும். . . . . ஐயாவோட வம்புக்கு நின்றவனை உருத் தெரியாமல் செய்துவிடுகிறேன்'' என்று பேசுவர்;

பலர் சொன்னபடி படுகொலையும் செய்வர்; பிடிபட்டால், தப்ப வைக்க”ஐயா’ வருவார், ஏதாவது வழி கண்டு பிடிப்பார் என்று துணிச்சலாகப் பாய்வர். இது கீழ் மட்டத்து நிலைமை.

மேல் மட்டத்தில் - அதிலும் மக்களை நடத்திச் செல்லும் தகுதி பெற்றவர்கள் என்ற விருதுகொண்ட அரசியல் கட்சி மட்டத்தில் - பொது மக்களின் வெறுப்புக்கு ஆளாகியுள்ள தன்னலக்காரர்கள் - தருக்கர்கள் - தங்கள்மீது மக்களின் சீற்றம் பாய்ந்திடும், தங்கள் ஆதிக்கம் சாய்ந்துபடும் என்ற நிலை ஏற்படும்போது, காமராஜர்போல, செல்வாக்கினைப் பெற்றுக் கொண்டுள்ளவர்களை நாடுவர். அப்போது காமராஜர்கள், "பயப்படாதீர்கள் எதிரிகளை ஒழித்துக் கட்டுகிறோம்; உமக்கு ஒரு ஆபத்தும் வராதபடி பார்த்துக்கொள்கிறோம்’’ என்று பேசி தைரியம் அளிப்பார்கள்.

செய்வதற்கான இடத்தில் இத்தனை ஆண்டுகளாக இருந்துகொண்டு, செய்து முடித்திட அந்த வலிவு பயன்படக் காணோம்; வீறாப்புப் பேசுகிறார் - மரண அடி கொடுப்பேன் என்பதாக. என்னமோ இவர் இத்தனைக் காலமாகப் போனால் போகட்டும் என்ற போக்கிலே இருந்தவர்போலவும், தி. மு. கழகம் வளர்ந்து போகட்டுமே என்று கருதி வாளா இருந்தவர்போலவும், இப்பொழுதுதான், கழகத்தை ஒழித்தாக வேண்டும் என்ற நினைப்பே வந்ததுபோலவும் எண்ணிக் கொள்ளச் சொல்லுகிறாரா?

முன்பாகிலும், கழகத்தை ஒழிக்க வேண்டும் என்பதற்கு ஒரு காரணம் காட்டிக்கொண்டிருந்தார்கள். "ஓட்டு’ கேட்கிறது, நாட்டை ஆள விரும்புகிறது என்பது பற்றி எமக்குக் கோபம் இல்லை. ஆனால், இந்தக் கழகம் நாட்டை அல்லவா பிளக்க விரும்புகிறது; பிரிவினை

அல்லவா கேட்கிறது! இது பெரியதோர் ஆபத்தல்லவா? இதனை அனுமதிக்கப்போமா! அதனால்தான் இந்தக் கழகத்தை ஒழித்தாக வேண்டும் என்கிறோம் அறிக! அறிக! - என்று ஆர்ப்பரித்தனர்; கழகமோ, நாட்டைத் துண்டாடும் திட்டத்தை விட்டுவிட்டது. மரண அடி கொடுக்க வேண்டும் என்று இப்போது ஏன் கூற வேண்டும்?

முன்பு, நாடு பிளவுபடாதிருக்கக் கழகத்தை ஒழித்திட வேண்டும் என்று பேசினர்.

இப்போது? கோபத்துக்குக் காரணம்?

பதவியைப் பறித்துக்கொள்ளத் திட்டமிடுகிறார்களே என்பதுதானே!

அதற்கான வலிவும் வளர்ச்சியும் பொது மக்கள் ஆதரவினால் கழகத்துக்குக் கிடைத்துக்கொண்டு வருகிறது என்பதாலே ஏற்பட்டிருக்கும் எரிச்சல்தானே, கோபத்துக்குக் காரணம்?

சரி! கோபம் கொண்டதற்கான காரணம்கூட கிடக்கட்டும்; மரண அடி கொடுக்கிறேன் என்கிறாரே அதற்குத் தேவையான "வலிவு' உள்ளபடி இருக்கிறதா? இருந்திருந்தால் கழகம் இந்த வளர்ச்சி பெற்றபோது, என்ன செய்துகொண்டிருந்தார்கள்?

கழகமா! அதற்குச் செல்வாக்கா! எதைக்கொண்டு சொல்லுகிறீர்கள்? கூட்டத்திற்கு ஆள் சேருகிறதே அதைப் பார்த்தா? பைத்தியக்காரன் பின்னாலேகூடத்தான் பத்து பேர் செல்கிறார்கள், வேடிக்கை பார்க்க! அந்தக் கும்பலைக் கண்டு, அவனுக்குப் பெரிய செல்வாக்கா என்று பேசிப் பார்த்தார் பேட்டைப் பெரியவர் கோட்டையிலே கொலுவிருக்கிறோம் என்ற துணிச்சலால்.

தெருக்கோடியிலே பிச்சைக்காரன் இனிமையாகப் பாடினால், அவனைச் சுற்றி ஒரு கூட்டம் சேரும்;

காசுகள்கூடப் போடுவார்கள்! அதனால் அந்தப் பிச்சைக்காரன் பெரிய மனிதனாகிவிடுவானா என்று கேட்டார் விருதுநகர் வல்லவர்.

ஆனால், பொது மக்கள் இத்தகைய பொறுப்பற்ற முறையிலே நினைக்கவில்லை, கழகத்தை ஆதரிக்கலாயினர்.

கை தட்டுவார்கள், ஆனால், ஓட்டுப் போடுவார்களா?

என்று கேட்டுக் கெக்கலி செய்தார் காமராஜர். கழகம் "ஓட்டு' கேட்டது. பொது மக்கள் முதல் முறை 16,28,598 ஓட்டுகளை வழங்கினர்.

வெட்ட வெளியோடு சரி, இவர்களை எவனாவது சட்டசபைக்கு அனுப்பி வைப்பானா? என்று பேசியவர்கள், பொது மக்கள் கழகத்துக்குத் தந்த ஆதரவின் கணக்குத் தெரிந்த பிறகாகிலும், ஜனநாயகப் பண்பின்படி, கழகத்துக்கு உரிய மதிப்பு அளித்திட முன்வந்தனரா? இல்லை!

கண்டபடி எழுதுகிறார்கள் கழகத்துக்காரர்கள்.

இவர்கள் கை கட்டை விரலை வெட்டிவிடுவேன்!! என்று பேசினார், கண்ணியம் மிக்க காமராஜர்.

அவர் அளவுக்கு ஆத்திரப்படாதவர்கள், "ஐயோ பாவம்' என்று பச்சாதாபப்பட்டு, சிலர் ஓட்டுப்போட்டுவிட்டார்கள். அடுத்து கழகம் என்ன கதியாகிறது என்பதை, மழைக் காலத்துக் காளான் சூரிய வெப்பம் பட்டதும் கருகிப்போவதுபோல, இருக்குமிடம் தெரியாமல் ஒழிந்துபோய்விடும் என்று ஆரூடம் கணித்தார்கள்.

ஆனால், பொது மக்கள் இரண்டாவது முறை கழகத்தை மேலும் அதிக அளவு ஆதரித்து 34 இலட்சம் வாக்குகளை வழங்கினர்.

இவ்விதம் இரு முறை மக்கள் கழகத்தை ஆதரித்தும் பெற வேண்டிய தெளிவைப் பெறாமல், இந்த முறை பாருங்கள்! மரண அடி கொடுக்கிறேன்!! - என்று பேசுகிறார் காமராஜர்.

“பெரியவர்’’ என்ற புதிய பட்டம் சூட்டி இருக் கிறார்கள் அவருக்கு.”பெரியவர்’ ஆனது இதற்குத்தானா?

கூட இருந்து கும்மி கொட்டுபவர்களின் "கோவிந்தா’ கோஷம் இப்படியுமா அவரைப் பாழ்படுத்திவிடுவது?

பாரினில் இவர்போல் யாம் கண்டதில்லை - என்று அவர்கள் பாடிடும் பஜனை கேட்டா இவ்வளவு மயக்கம் இவருக்கு ஏற்பட்டுவிடுவது!

ஆத்திசூடி தெரியுமா ஐயா! என்று இவரைக் கேட்டவர்கள்தான் இன்று அகில உலகில் இவர்போல் ஒரு தலைவர் இல்லை! என்று அர்ச்சிக்கிறார்கள் என்பதை இவர் அறியாரா?

எதனையும் சகித்துக்கொள்வேன், ஆனால், என் தலைவன்மீது ஒரு துளி எச்சில் துப்பினாலும் விட மாட்டேன், ஒழித்திடுவேன் என்று இன்று பேசிடும் "பக்தர்‘கள், என்னைத் தமது தலைவன் என்று கொண்டிருந்தபோது, எவனாவது எங்கள் அண்ணன்மீது வசை உமிழ்ந்தால் "பாதக் குறடெடுத்து பன்னூறு அடி அடிப்பேன்’’ என்று பாடினவர்கள் என்பதை அறியாரா?

சிறுவர்களுக்கான பாடப் புத்தகத்தில், "ராஜபக்தி’க்கான பாடம் ஒன்று உண்டு.

இதோ நமது ராஜா. இவர் மிக நல்லவர்!

இதுதான் பாடம்! ஒரு ராஜா போய், வேறோர் ராஜா பட்டத்துக்கு வந்திடின், பழைய படம் எடுக்கப்பட்டு,

புதிய ராஜாவின் படம் போடப்படும், படம்தான் மாறும்! பாடம் அப்படியேதான் இருக்கும்.

இதோ நமது ராஜா, இவர் மிக நல்லவர்!

இதற்கு ஒப்பான அரசியல் நடத்துபவர்கள் மொழிந்திடும் புகழுரை கேட்டு மயங்கியா, இந்தப் பூலோகமே தன் காலடியில் பந்தாகிக் கிடக்கிறது என்று மயக்கம் கொண்டுவிடுவது? நல்லது செய்யாதே அந்த மயக்கம்!

மரண அடி கொடுப்பேன் என்று பேசுகிறோமே; கேட்டிடும் குட்டிக் குபேரர்கள் கைதட்டி மகிழ்ச்சி காட்டுகிறார்களே; பிறகு அவர்கள் சிந்திக்கமாட்டார்களா, எந்த விதமான வசதியுமில்லாமல், எல்லா முனைகளின் எதிர்ப்பையும் தாங்கிக்கொண்டு இந்தக் கழகம் இவ்வளவு வளர்ந்திருக்கிறதே; இப்போது மரணஅடி கொடுப்பேன் என்று பேசிடும் பெரியவர், முன்பு பல முறை கழகத்தை ஒழித்துக் கட்டுவதாகச் சொன்னவர் தானே; செய்தாரில்லையே; இப்போது மட்டும் எப்படிச் செய்வார் என்று யோசிக்க மாட்டார்களா; யோசித்திடும்போது நமது பேச்சு வெறும் உருட்டல் மிரட்டல்தான் என்பது புரிந்து விடாதா - என்றப்ல்லாம் காமராஜர் எண்ணிப் பார்க்க மாட்டாரா? நேரம் இல்லை பாவம், அவர் என்ன செய்வார்! சூழ்ந்துகொண்டுள்ள "சூடமேந்திகள்’ அவருடைய சிந்திக்கும் சக்தியை பொசுக்கிவிடுகின்றனர்.

தம்பி! 1962-ம் ஆண்டுக்கும் 1967 பிறக்கப் போகிற கட்டமான இப்போதைக்கும் இடையில் காங்கிரசுக் கட்சிக்குத் தானாகட்டும், காமராஜப் பெரியவருக்குத்தானாகட்டும், கழகத்துக்கு மரண அடி கொடுக்கத்தக்க விதமான புதிய வலிவு என்ன கிடைத்துவிட்டது என்பது எப்போதாவது, எங்கேயாவது, எவராலாவது விளக்கப்பட்டுக்

கேட்டதுண்டா?

1962-ம் ஆண்டு காங்கிரஸ் சில இடங்களிலே தோற்றதற்கும், எதிர்க் கட்சிகள் தேர்தல் களத்திலே வெற்றி பெற்றதற்கும் காரணம்,

வரி அதிகமானது
விலைவாசி ஏறியது
உணவு நெருக்கடி
ஏழை எளியோர் துயரம்

போன்ற நிலைமைகள். இதனால் மக்களுக்குக் காங்கிரசிடம் ஒரு கசப்புணர்ச்சி, கோபம், பாடம் கற்பிக்க வேண்டும் என்ற துடிப்பு. அதன் காரணமாகக் காங்கிரசைத் தோற்கடித்தார்கள். ஆனால் 1967-ம் ஆண்டு வேகமாக வந்துகொண்டிருக்கும் இப்போது அந்த மோசமான நிலைமைகள் மாறிவிட்டன; மக்கள் கசப்புணர்ச்சி கொள்வதற்குப் பதிலாகக் களிப்புணர்ச்சி கொண்டுள்ளனர்; அதற்கான முறையில்,

உழுபவனுக்கே நிலம் என்று ஆகிவிட்டது.
தொழிலாளருக்கு நீதியும் நிம்மதியும் கிடைத்திருக்கிறது.
உணவு நெருக்கடி போக்கப்பட்டுவிட்டது.
விலைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.
வரிகளையும் குறைத்தாகிவிட்டது.
ஏழை எளியோர் புன்னகை புரிகிறார்கள்.

ஆகவே, இந்த முறை மக்கள் காங்கிரசிடம் பாசம் காட்டுவர், எதிர்க் கட்சிகளுக்கு ஆதரவு காட்டமாட்டார்கள் - என்று கூற முடியுமா? கூசாது பொய் பேசிப் பழக்கப்பட்டவர்களால் கூட முடியாது.

1962-ம் ஆண்டு இருந்த நிலைமையைவிட மிக மோசமான நிலைமை அல்லவா இப்போது எல்லாத் துறைகளிலும். அப்போது இருந்துவந்த அல்லல்

வளர்ந்தல்லவா இருக்கிறது. எலி தின்று பசி போக்கிக்கொள்ளுங்கள் என்று "உபதேசம்' செய்கிற நிலைமையல்லவா காண்கின்றோம்.

இது மக்களின் கசப்புணர்ச்சியை, கொதிப் புணர்ச்சியை அதிகமாக்கித்தானே இருக்கும்?

இருந்தும், இம் முறை எதிர்க் கட்சிக்கு மரண அடி கொடுப்பேன் என்று பேசும் அளவுக்குத் துணிவு எப்படி வந்தது துரைத்தனம் நடத்தும் கட்சியினருக்கு?

தம்பி! நாம் மட்டும் அல்ல, உண்மையான ஜனநாயகவாதிகள் ஒவ்வொருவரும் தம்மைத் தாமே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி. ஒரு கட்சியை மக்கள் வெறுத்து ஒதுக்குவதற்கு என்னென்ன கொடுமைகளை அந்தக் கட்சி நடத்திடும் ஆட்சி செய்திடவேண்டுமோ அவ்வளவும் செய்தான பிறகு, அந்தக் கட்சித் தலைவர், எதிர்க் கட்சிக்கு மரண அடி கொடுப்பேன் என்று பேசும் துணிவு, எதைக்கொண்டு பெற முடிகிறது?

பணம், தம்பி! பணம்! மூட்டை மூட்டையாகச் சேர்த்து வைத்துள்ள பணம்!

பணம் பாதாளம்வரை பாயும் என்பதிலே உள்ள நம்பிக்கை.

வாய்க் கசப்பைப் போக்க, நாக்கிலே தேன் தடவுவதுபோல, கசப்புணர்ச்சி கொண்டுள்ள மக்களுக்கு, பணத்தாசை காட்டி மயக்கிடலாம் என்ற நம்பிக்கை.

ஏழ்மையும் அறியாமையும் கப்பிக்கொண்டிருக்கும் நிலைமையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, மக்களை மீண்டும் வலைவீசிப் பிடித்துவிடலாம் என்ற நப்பாசை.

இதனை மறுத்திட நினைத்திடும் மகானுபாவர்கள், 1962-ம் ஆண்டிலே இருந்த கசப்புணர்ச்சி போய்விட, இந்த ஐந்து ஆண்டுகளிலே காங்கிரசாட்சி எடுத்துக்கொண்ட முயற்சிகளிலே எந்த அளவு வெற்றி பெற்றிருக்கிறது என்பதை விளக்கிடக் கேட்டதுண்டா?

விளக்கமாவது அவர்களாவது தருவதாவது! ஒரே வீராவேசம் அல்லவா பொங்கி வழிகிறது! பெரியவரே மரண அடி கொடுப்பேன் என்ற தரமான பேச்சுப் பேசும்போது "பொடியர்கள்’ பேசுவது எந்தத் தரம் இருக்கும் என்பதைக் கூறவா வேண்டும்?

ஏடா! மூடா! எமக்கு இதுபோது வந்திருக்கும் புதிய வலிவுக்கான காரணம் புரியாது கிடக்கின்றனையே! கூறுதும் கேண்மின்! இது காமராஜர் சகாப்தம்! அறிந்திடுமின்! அவர் புகழ் அவனியெல்லாம் பரவியுள்ள காலம்! பொருள் புரிந்து கொள்ள முனைமின்! - என்ற முறையில் நாநடமிடுவது தெரியும், தம்பி! நன்றாகத் தெரியும்.

காமராஜப் பெரியவரின் புகழ் இந்தக் காசினி எங்கும் பரவியுள்ள கதை சுவையுள்ளது.

ஆனால் அந்தப் புகழ் காங்கிரசுக்குப் புது வலிவும் பொலிவும் தேடிக்கொடுத்து, மக்களின் கசப்புணர்ச்சியை மாற்றிவிடும் அளவினது அல்லது வகையினது என்றால்,

தம்பி! 1962-ம் ஆண்டுத் தேர்தலின்போது “முடிசூடா மன்னராக’ -”ஆசியாவின் ஜோதியாக’ - மகாத்மாவின் வாரிசாக - இருந்து வந்தாரே பண்டித ஜவஹர்லால் நேரு, அவருக்குப் புகழ் ஏதும் இல்லையோ!!

அந்தப் புகழ் இருந்தும்தானே, எதிர்க் கட்சிகள் வளர்வதைக் காங்கிரசினால் தடுத்திட முடியாமல்

போய்விட்டது?

இன்று இருப்பதைக் காட்டிலும் சிறிதளவு குறைவாகவே அல்லலும் அவதியும் மக்களை வாட்டிக்கொண்டிருந்தபோதே "நேருவின் புகழொளியில் மயங்கி' மக்கள் எதிர்க் கட்சிகளை ஆதரிக்க முடியாது என்று கூறிடவில்லை.

நேருவின் "புகழொளி'க்கு இருந்ததைக் காட்டிலும் வசீகரமும் வல்லமையும் காமராஜர் புகழொளிக்கு உண்டு என்று கூறுவார் உண்டா?

நேருவினால் அவர் நாட்களில் சாதிக்க முடியாது போனவைகளைக் காமராஜர் இன்று சாதிக்கப் போகிறார் என்று கூறுவார் உண்டா?

நேருவைக் காட்டிலும் காமராஜர் உலகமறிந்தவர்; நேருவிடம் உலகம் காட்டிய மதிப்பைவிட அதிக அளவு மதிப்பினைக் காமராஜரிடம் காட்டுகிறது; நேருவின் அறிவாற்றலைக் காட்டிலும் பன்மடங்கு அதிக அறிவு கொண்டவர் காமராஜர்; பிரச்சினைகளை விளக்குவதில், வாதத் திறமையில், சிக்கல்களை நீக்குவதில், நேருவுக்கும் இல்லாத திறமை இவருக்கு உண்டு என்பார் உண்டா?

மக்களைத் தன்வயப்படுத்திடும் ஓர் புன்னகை, கோபத்தையும் கொதிப்பையும்கூட ஓரளவு மறந்திடச் செய்திடும் நடை அழகு, உலகப் பிரச்சினைகளைப் படம் பிடித்துக் காட்டும் தனித்தன்மை, உலகின் பல்வேறு நாட்டுத் தலைவர்களுடன் மட்டுமல்லாமல், கவிஞர்கள், தத்துவ மேதைகள், காவிய கர்த்தாக்கள், விஞ்ஞான வித்தகர்கள், பொருளாதார நிபுணர்கள், புரட்சி பூத்திடச் செய்த மாவீரர்கள் ஆகியோருடன் நேசத் தொடர்பு கொண்டிருந்ததால் ஏற்பட்டிருந்த விசாலமான நோக்கம், தாராளத் தன்மையுடைய சிந்தனை, இதயங்களை ஈர்த்திடத்தக்க இலட்சிய ஆர்வம் இவ்வளவும் கொண்டல்லவா விளங்கி

வந்தார் பண்டிதர்?

அவர் புகழ் பாடாத ஏடுண்டா? பரவாத நாடுண்டா?

படம் இல்லாத வீடு உண்டா? எத்தனை எத்தனை கோலத்தில் அவர் படம்; நித்தநித்தம் இதழ்கள் மூலம்!

சிந்திக்கும் நேரு, சிரித்திடும் நேரு, சீறிடும் நேரு, குழந்தைகளுடன் கொஞ்சிடும் நேரு, விளக்கிடும் நேரு, வினவிடும் நேரு, மாபெருங் கூட்டம் கண்டு நெஞ்சு நெகிழ்ந்திடும் நேரு, ஊர்வலத்தில் முகம் மலர்ந்திடும் நேரு, விமான நிலையத்தில் நேரு, விஞ்ஞானக் கூடத்தில் நேரு, குதிரைமீது நேரு, குதூகல நடனமிடும் நேரு, ஜொ-க்கும் நட்சத்திரங்களுடன் நேரு, உழைக்கும் பாட்டாளிகள் மத்தியில் நேரு, பத்திரிகை நிருபர்களிடம் நேரு, வணிகர் விழாவில் நேரு, பக்ரா பக்கத்தில் நேரு, குலு பள்ளத்தாக்கில் நேரு, நாகநாடு உடையில் நேரு, பர்மியக் கோலத்தில் நேரு, ஆங்கில உடையில் நேரு, கேக் வெட்டும் நேரு, பாங் அதிபருடன் நேரு, சோ-இன்-லாயுடன் நேரு, கெனியாடா வுடன் நேரு, நைல் நதி தீரத்தில் நேரு, வோல்கா கரையில் நேரு, ஐ. நா. சபையில் நேரு, ஆல்ப்ஸ் குன்றில் நேரு, வெசுவயஸ் எரிமலை காணும் நேரு, லால் பகதூர் தோளைத் தடவிக் கொடுத்திடும் நேரு, தம்பி! ஒன்றா இரண்டா, ஓராயிரம் மட்டுமா? ஓராண்டா, ஈராண்டா? முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக அல்லவா, அவர் திரு உருவம் கண்டு, நாட்டு மக்கள் சொக்கினர்!

இருந்தும்? அவர் நடாத்திய ஆட்சி, மக்களுக்கு நல்வாழ்வு தரவில்லை என்று மனராத நம்பிய எதிர்க் கட்சிகள் அந்தப் புகழொளி கண்டு மயங்கி, முடங்கிக் கிடந்தனவா? இல்லையே!

அந்தப் புகழொளி எதிர்க் கட்சிகளை இருக்கும் இடம் தெரியாமலா செய்துவிட்டது? இல்லையே!

அவருடைய புகழ் ஒளி போதும் தனி மராட்டிய மாநிலம் வேண்டாம் என்றா கூறிவிட்டனர்? இல்லையே!

அந்தப் புகழொளி இருக்கும்போது நாம் எதற்கும் கவலைப்படத் தேவையில்லை - இந்தி வந்தால் வரட்டும் என்றா இருந்துவிட்டனர்? இல்லையே!

குறைகளைக் கூறிட, கருத்து வேற்றுமைகளை எடுத்துரைத்திட, கிளர்ச்சி நடத்திட, கருப்புக் கொடி காட்டிட முடிந்தது எதிர்க் கட்சிகளால் - புகழொளி இருந்தும்.

நேருவின் புகழொளிக்கு இல்லாத வசீகரமும் வல்லமையும், காமராஜரின் புகழொளிக்கு இருக்கிறது என்று கூறிடக் கூசுவர் எவரும்; கூறிடத் துணிவோர், நேருவின் நினைவுக்கே கறை பூசிடும் காதகராவர்.

நேருவின் புகழொளியையே இவ்வளவு விரைவிலே மறந்து, வேறோர் புகழொளி அவருடையதைவிட வலிவுள்ளது என்று பேசிடத் துணிவோர், இந்தப் புதிய புகழொளியை எத்தனை சடுதியில் மறந்திடத் துணிவர் என்பதை எண்ணும்போது, தம்பி! எவருக்கும் நடுக்கம் எடுக்கும்.

என்றாலும் கூசாமல் கூறுகின்றனர், காமராஜரின் புகழொளி காங்கிரசுக்குப் புதிய வலிவைக் கொடுத்துவிட்டது; எதிர்க் கட்சிகளுக்கு இனி எதிர்காலம் இல்லை, கசப்புணர்ச்சி கொண்டிருந்த மக்கள் இப்போது களிநடமிடுகின்றனர் என்றெல்லாம்.

அதுபோலக் கூறுபவர்களின் "போற்றி! போற்றியை'ப் பொருள் உள்ளது என்று எண்ணிக்கொண்டு காமராஜப் பெரியவர் "மரண அடி

கொடுப்பேன்' - என்று முழக்கமிடுகிறார்.

தி. மு. கழகம் 34 இலட்சம் வாக்குகளைப் பெற்றபோது "ஆசிய ஜோதி' ஒளிவீசிக்கொண்டிருந்திடக் கண்டோம்.

அந்தப் புகழொளி கண்டு மயங்கிடாத கழகம், மாய்ந்திடாத கழகம், காமராஜரின் "புகழொளி'யைக் கண்டா மிரண்டிடும்?

"புகழொளி' - தனி மனிதர்களின் அறிவாற்றலைக்கொண்டு அமைகிறது!

ஏழையின் இதயத்துக்கு நிம்மதியும் இல்லத்துக்கு நல்வாழ்வும், இதழுக்குப் புன்னகையும் தரத்தக்க ஆட்சிக்காக போரிடுபவர்கள், "புகழொளி' போதும் என்று இருந்துவிடமாட்டார்கள்.

அத்தனை புகழொளியும் எமது பசியைப் போக்கிட வில்லையே, குமுறிக் கிடக்கின்றோம் வாழ்வு நிமிர்ந்திட வழி காணோமே என்ற ஏக்கக் குரலே எழுப்புவர்.

எதிர்க் கட்சிகள், ஏமாற்றமடைந்த, எரிச்சல் கொண்ட ஏக்கப் பெருமூச்சு எழுப்பும் மக்களின் படைப்புகள். எங்கிருந்தோ வந்து குதித்திடுபவைகள் அல்ல!

புகழொளிகளைப் புதிது புதிதாக உண்டாக்கிக் காட்டு வதால், எதிர்க் கட்சிகள் மடிந்திடா; மக்களின் முகத்தில் படிந்துள்ள கவலைக் கோடுகள் துடைக்கப்பட்டு, வறுமை தாக்கியதால் ஏற்பட்ட புண் ஆற்றப்பட்டு கண்ணீர் துடைக்கப் பட்டாலொழிய, எத்தனை பெரிய எக்காளம் கிளப்பி, மரண அடி கொடுப்பேன் என்று உரத்த குரல் எழுப்பினாலும் விம்மும் மக்கள் கட்டிக் காத்துவரும் எதிர்க் கட்சியினை ஒழித்திடுவது முடியாத காரியம்.

இதனைக் காமராஜர் அறியாமல் இருக்க முடியுமா? அறிவார்!! ஆனால், அவரை நம்பிக்கொண்டு, ஆனால், கழக வளர்ச்சி கண்டு நடுங்கிக்கொண்டுள்ள "கனதனவான்களு’க்குத் தெம்பு தர, தைரியம் ஊட்ட மரண அடி கொடுக்கிறேன்! - என்று பேசுகிறார், பேசட்டும்.

அன்புள்ள
அண்ணாதுரை
25-9-66

படமாம் படம்!

காங்கிரசு எடுக்கப்போகும் படம் கழகத்துக்கும் சேர்த்துத்தான்!
புகழ்ந்தவர்களே புதைக்கவும் செய்வர்!
ஏழையர் இதயத்தில் என் சொல் பதிகிறது!
உணவு உண்டு வாழ்ந்திடலாம்! புகழ் புசித்து வாழ்ந்திட முடியுமா?

தம்பி!

படம் எடுக்கப் போகிறார்களாம் - ஒன்று அல்ல, மூன்று! “உண்டானபோது கோடான கோடி” என்று பழமொழி சொல்லுவார்களல்லவா, அதுபோலச் செல்வமும் செல்வ வான்களின் ஆதரவும் இருக்கும்போது மூன்றா, முப்பது படம்கூட எடுக்கலாம். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்! பட முதலாளிகளின் பார்வை குளிர்ச்சியாக இருக்கும்போதே, படங்களை”மளமள’வென்று எடுத்துவிடவேண்டியதுதானே!! செய்யப் போகிறார்கள்! அறிவித்து விட்டார்கள். சென்னையில் உள்ள மூன்று படப்பிடிப்புத் துறை முதலாளிகள், காங்கிரஸ் கட்சிக்காகத் தேர்தல் பிரசாரப் படம் தயாரித்துத் தர முன் வந்துள்ளார்கள்!

சினிமாக் கட்சி, சினிமாக் கட்சி என்று நமக்குப் பெயர் தம்பி! - பெயரா? - ஏளனப் பேச்சு வீச்சு - ஆனால், நாமல்ல, காங்கிரசுதான் சினிமாப் படங்களைத் துணையாகப் பெறப் போகிறது - நடிக நடிகையர் - படப்பிடிப்புத் துறைத் தொழில்

நிபுணர்கள் தயாரிக்கப் போகும் படங்கள் அல்ல - மூன்று வளமான படப் பிடிப்பு அமைப்புகள் தயாரிக்கப்போகும் படங்கள்!

முதலாளிகள் தயாரிக்கும் படங்களா? என்று முகத்தைச் சுளித்துக்கொள்ளாதே! தம்பி! சோஷியலிசத்துக்கு ஆதரவான படமாகத்தான் எடுக்கப் போகிறார்கள்!

முதலாளிகளை ஒழிப்போம்! தொழிலாளிகளை வாழ வைப்போம்! - என்ற ஊர்வலக் காட்சியைக்கூடக் காணக்கூடும். படம், தம்பி! படம்!

பணம்! அண்ணா! பணம்!! - என்று நீ கூறுவது என் காதிலே விழத்தான் செய்கிறது. ஆனால், எனக்கு இதிலே உள்ள மகிழ்ச்சிக்குக் காரணம் தெரியுமா? சினிமாவைக் கேவலமாகவும், சினிமாத் துறையினருடன் தோழமைத் தொடர்பு கொள்வதை இழிவானதாகவும், தரக்குறைவான அரசியல் கட்சிகளே அப்படிப்பட்ட தொடர்பு கொள்ளும் எனக் கூறிக்கொண்டு வந்த காங்கிரஸ் கட்சி, இப்போது கலை உலகின் தயவைப் பெற முனைவது இருக்கிறதே, அது கலை உலகின் வெற்றி! கலைஞர்களின் வெற்றி! என் பாராட்டுதல் அந்தக் கலைஞர்களுக்கு. என்னையும் கழகத்தையும் எதிர்க்கும் கலைஞர்களுக்குக்கூட! "இருமல் தும்மல்' எல்லாம் என்னை ஏசும்போது, கலை உலகினர் நாலு வார்த்தை என்னையும் கழகத்தையும் ஏசிப் பேசுவதாலா எனக்கு எரிச்சல் வரப்போகிறது? இராகம் - தாளம் - பாவம் குறையாத பேச்சாகவாவது இருக்குமல்லவா!

சினிமாக் கட்சி, சினிமாக் கட்சி என்று நமது கழகத்தை, ஏ! அப்பா! அங்கு இடம் கிடைக்காத எரிச்சல் கொண்டது களெல்லாம் முன்பு பேசுவார்களே! அவர்களுடைய முழக்கத்தில் சரிபாதி இதுபற்றித்தானே! இப்போது எப்படிப் பேச முடியும்?

ஆகவே, தம்பி! நன்றாக ஆராய்ந்து பார்த்திடின், காங்கிரஸ் கட்சியிலே சேர்ந்துள்ள கலைஞர்கள் நம்மீது அந்தக் கட்சி பூசி வைத்த கறையைத் துடைத்திடும் தொண்டாற்றி, கழகத்துக்குத்தான் நல்லது செய்கிறார்கள்! அதனால்தான், நான் எங்கிருந்தாலும் வாழ்க! - என்று உளமாரக் கூறி வருவது.

சினிமாப் படங்களைக் காங்கிரசின் தேர்தல் பிரசாரத் துக்குப் பயன்படுத்த முனைவது, ஒரு வகையில், கலை உலகின் வெற்றி, கலைஞரின் வெற்றி. நமக்கு அந்த வாய்ப்புக் கிடைத்திட வில்லையே என்பதால், அதனைக் குறைத்து மதிப்பிட, நாம் யாரும் ஏமாளிகள் அல்ல.

கலைஞர்களின் தோழமையையும் தொடர்பையும், குறைத்து மதிப்பிட்டவர்கள், கேவலமாகப் பேசியவர்கள் அவர்கள், நாம் அல்ல! இன்று அந்த தொடர்பு தக்க பலன் தரும் என்ற பூரிப்புடன் உள்ளவர்கள் அவர்கள்!! கலைஞர்களின் தொடர்புபற்றி மிகக் கேவலமாகக் காங்கிரஸ் தலைவர்கள் - பேச்சாளர்கள் மட்டுமல்ல - பெருந் தலைவர்கள் தாக்கியபோது தம்பி! நாம் நினைவுபடுத்தினோம், காங்கிரஸ் தூய்மையான விடுதலை இயக்கமாக இருந்தபோது நாடகத்துறை வித்தகர் விசுவநாததாசும், கொடுமுடி சுந்தராம்பாள் அவர்களும், வேறு பல கலைஞர்களும் காங்கிரசுக்காகப் பாடுபட்ட பான்மையை! அப்போதும் காங்கிரசின் பெருந் தலைவர்கள் கலைஞர்களை மதிக்க மறுத்தனர்; "கூத்தாடிகள்' என்று கேவலமாகப் பேசினர்! இன்று? கலையின் வலிவை உணருகிறார்கள்! கலைஞர்களின் தொடர்பைப் போற்றுகிறார்கள்! வரவேற்கத்தக்க வெற்றி - கலை உலகுக்கு. படம் காட்டப்போகும் பாடம் இதுவே.

காங்கிரசின் சாதனைகளை இந்தப் படங்கள் எடுத்துக் காட்டுமாம். காட்டட்டும்; ஆனால், சர்க்காரைக் காங்கிரஸ் கட்சி நடத்திக்கொண்டு வருவதால், சர்க்கார் செய்திடும் சாதனைகள் பற்றி அணைக்கட்டுகளிலிருந்து ஆரம்பப் பள்ளிகள் வரையில் செய்தித்துறை தொடர்ந்து படங்களை வெளியிட்டு வருகின்றனவே - அவை போதாமலா, புதிதாகத் தேவைப் படுகிறது? விந்தைதான்! தரமாகவே அமைந்திருக்கிறது செய்தித்துறைப் படம்!

உருக்கமான குரலொ- கேட்கிறது, வறண்ட பூமி! வெடித்துக் கிடக்கும் வயல்கள்! துடித்திடும் மக்கள்! வானத்தை அண்ணாந்து பார்க்கிறார்கள்! கண்ணீர் வடிக்கிறார்கள்!!

உடனே ஒரு அணைக்கட்டுக் காட்சி! தண்ணீர் குபுகுபு வெனப் பாய்ந்தோடி வருகிறது!! பூமி குளிர்கிறது! பயிர் வளர்கிறது! இப்படி ஒரு இன்பக் காட்சி!

இவைகளைப் பார்க்கவில்லையா மக்கள்? நிரம்ப! பார்த்து, படத்திலே உள்ள பசுமை வாழ்க்கையிலே இல்லையே என்று ஏக்கம் கொள்கின்றனர்.

புதிதாக இதுபோன்ற படங்களை வெளியிட்டு, மக்களின் ஏக்கத்தைத் துடைத்திடவா முடியும்?

தம்பி! நகைச்சுவை மன்னர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் "50 - 60’ என்று ஒரு காட்சியைத் தமது படம் ஒன்றில் இணைத்துக் காட்டினார். பலர் பார்த்திருக்கக்கூடும்!

சுதந்திரம் வந்ததென்று சொல்லாதீங்க,
சும்மா சும்மா வெறும் வாயை மெல்லாதீங்க

என்று திருமதி டி. ஏ. மதுரம் பாட, நகைச்சுவை மன்னர் பத்தே வருடங்களில் சுதந்திரத்தின் பலனாக

நாடு எத்தகைய பூந்தோட்ட மாக மாறப் போகிறது பார் என்று பெருமிதத்துடன் கூறி, எதிர்கால வளம்பற்றிய எழில்மிக்க காட்சிகளைக் காட்டுவார். பார்த்தவர்கள் மறந்திருக்க மாட்டார்கள். ஆனால், நல்லவர்கள் கொண்டிருந்த நம்பிக்கைகள் நாசமாகிவிட்ட நிலையில், காங்கிரசின் சாதனைகளை விளக்கிட மூன்று புதிய படங்களை எடுத்துப் போட்டுக் காட்டிவிடுவதால், மக்கள் குதூகலமடைந்து காங்கிரசுக்கே எமது ஓட்டு என்றா கூறிவிடுவர்?

படம் பார்த்துவிட்டு வந்ததும், படி அரிசி எட்டணா என்ற அளவுக்காவது விலை கட்டுப்படுத்தப்பட்டிருக்கும் நிலையும் கண்டால் மகிழ்ச்சி அடைவார்கள்!

புதிய புதிய அணைக்கட்டுகளைக் காண்க! அமோகமான விளைச்சல் காண்க! என்ற பேச்சும் காட்சியுமா, காய்ந்த வயிறுக்குத் திருப்தி தந்துவிடும்? பார்த்தால் பசி தீருமா?

இது காங்கிரஸ் தலைவர்களுக்கும் தெரியும். பட முதலாளிகளுக்கும் தெரியும். ஆகவே, அந்தப் படங்கள், காங்கிரசின் சாதனைகளை எடுத்துக் காட்டுவதாக மட்டும் இருந்திடப்போவதில்லை; எதிர்க் கட்சிகளை - குறிப்பாகக் கழகத்தை - வெகு சிறப்பாக என்னைக் கேவலப்படுத்திடும் கேசெய் திடும் காட்சிகள் கொண்டதாக இருக்கும்.

சென்ற பொதுத் தேர்தலின்போதும் இதுபோன்ற "படம்' காட்டினார்கள்! முறை, பழையதுதான்! பலனும் முன்பு போலத்தான் இருக்கும். ஆனால், இம் முறை, நம்மைத் தாக்குவதில் சற்று வேகம் - காரம் - சூடு - அதிகம் இருக்கும். அதாவது நம்மைத் தாக்குவதற்காக அவர்கள் தமது படைக்கலன்களை மேலும் கூர்மையுள்ளதாக்கிக் கொள்ள வேண்டி வருகிறது!! இந்நிலை, படைக்கலன்களுக்கு அல்ல,

நமக்குக் கிடைத்துள்ள”தாங்கும் சக்தி’க்குத்தான் பெருமை தருவதாகும்.

அண்ணா! அவர்கள் படம் எடுக்கப் போகிறார்களாமே, நாம்? - என்று ஆவலோடு கேட்டார் ஒரு தம்பி!

நமக்கும் சேர்த்துத்தானே அந்தப் படங்கள்? என்றேன் நான்.

என்ன அண்ணா! புதிர் போடுகிறீர்கள் - என்று கவலை ததும்பக் கேட்டார், தம்பி.

தம்பி! படம் பார்த்தவர்கள், பகலில், கடைவீதி போவார்கள் அல்லவா? விலை ஏற்றம் கொட்டுமல்லவா? அப்போது அவர்கள் என்ன எண்ணிக்கொள்வார்கள்? படம் காட்டினார்கள் படம்! பாலும் தேனும் ஓடுகிறது! நாங்கள் சாதிக்கவேண்டியவை களைச் சாதித்துவிட்டோம் என்று பாடிக் காட்டினார்கள். இங்கேயோ. . .! - என்று பேசி பெருமூச்சு விடுவார்கள் அல்லவா? - என்றேன். ஆமாம் என்றார் தம்பி. அந்தப் பெருமூச்சு, காங்கிரசுக்கு ஓட்டா வாங்கித் தரும்? என்று கேட்டேன். தம்பி புன்னகை புரிந்தார். அதனால்தான் தம்பி! நான் கூறினேன், படம் நமக்கும் சேர்த்துத்தான் என்று - சரிதானே?

தம்பி! ஒரு கட்சி, ஆட்சியை நடத்திய நிலையில், தன் சாதனைகளை எடுத்துச் சொல்ல முனைவது ஒன்றே மக்கள் அந்தச் சாதனைகளைச் சாதனைகள் என்று ஒப்புக்கொள்ள வில்லை அல்லது உணரவில்லை என்பதற்குச் சான்றுதானே?

போகட்டும் தம்பி! காங்கிரசின் சாதனைகளைப் படம் பிடித்துக் காட்டுவதுபோல, காங்கிரசாட்சியிலே நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ள வேதனைகளைப் படம் பிடித்துக் காட்டினால், "கத்தரிக்கோல்’ சும்மா

இருக்குமா?

மூன்று படம் எடுக்கப் போகிறார்களே முதலாளிகள், அவர்களுக்கே தெரியும்! மிக நன்றாகத் தெரியும்!!

ஒருபுறம் நான்! எதிர்ப்புறம் கனம் சுப்பிரமணியம்! அவர் ஆத்திரத்துடன்! நான் அச்சத்துடன்! அவர் கேட்கிறார், "ஏ! அண்ணாத்துரை, என்னைக் கசாப்புக் கடையா வைக்கச் சொல்லுகிறாய் என்று' - உடனே ஒரு காங்கிரஸ் படை, இடி இடியெனச் சிரிக்கிறது - கையொ- எழுப்புகிறது. ஒரு காட்சி! அதை அடுத்து"இதோ பாரீர்!" என்று ஒரு குரல்! மலர்ந்த முகத்துடன் ஒரு காங்கிரஸ் தலைவர் - ஆவல் ததும்பும் கண்களுடன் மக்கள் - என்ன? என்ன? என்ற கேள்வி ஒலி! "எமது சாதனை! நாலாவது திட்டத்தில்!!" என்று பெருந் தலைவரின் பெருமிதப் பேச்சு! எதிரே பார்த்தால், குட்டிகள் பலவற்றுடன் பன்றிகள்!! என்ன இது? என்று ஒருவரின் கேள்வி - தயக்கத்துடன்! பன்றிப் பண்ணை! பன்றி இறைச்சிக்கு நிரம்பக் கிராக்கி. ஆகவே பன்றிப் பண்ணை! இரு துறையிலும்! தனியார் துறையிலும்! பொதுத் துறையிலும்!! - என்ற விளக்கம். காட்சி, படமாக்குவது எளிது! பொய் அல்ல; புனைசுருட்டு அல்ல! நாலாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பல இடங்களில் பன்றிப் பண்ணைகள் வைக்கப்போவதாக, பல திங்களுக்கு முன்பே இதழ்களில் செய்தி வெளிவந்தது. உண்மையைத்தான் படமாக்குகிறோம். ஆனால் கத்தரிக்கோல்? சும்மா இருக்குமா? கலை உலகினர் அனைவரும் அறிவர்!

ஆகவே அவர்கள் படங்கள் மூலம் எதிர்க் கட்சிகளைக் கேவலப்படுத்த முயலுவது, கட்டுடல் படைத்த காளையை இரும்புத் தூணிலே இறுகக்

கட்டி வைத்துவிட்டு, வலிவும் துணிவுமற்ற பேர்வழி, "அடி அடி'யென்று அடிப்பதற்கு ஒப்பானது. கலைஞர்கள் அறிவார்கள்!!

பாலோ பால்! என்று அழும் தாயைக் காட்டலாம்; பால் கிடைக்காது அலைந்து அலுத்துப்போன தகப்பனைக் காட்டலாம்! ஒரு காங்கிரஸ் தலைவர் படத்தைக் காட்டலாம். பாலும் தேனும் கலந்து ஓடும்! - என்று அவர் முன்பு முழக்க மிட்டது அந்த ஏழையின் காதில் விழுவதுபோன்ற நிலையைக் காட்டலாம். எங்கிருந்தோ ஒரு கழுதைக் குரல் கிளம்புவதைக் காட்டலாம். அன்றைய இதழில், கொட்டை எழுத்தில் கழுதைப் பாலைச் சாப்பிடலாம் - ருசியானது - வலிவு தரவல்லது என்று அமைச்சர் ஒருவர் பேசியிருப்பது வெளிவந்திருப்பதைக் காட்டலாம். ஏழை, தன் வேதனையையும் மறந்து, கழுதைப் பால்! கழுதைப் பால்! காங்கிரஸ் நமக்குத் தருவது கழுதைப் பால்!! - என்று கூவிச் சிரிப்பதைக் காட்டலாம். எளிதான காரியம்! எடுக்க விடுவார்களா? கத்தரிக்கோல் சும்மாவா இருக்கும்?

அதிகமாகக்கூட நாம் கஷ்டப்பட்டு கற்பனை செய்து கொண்டிருக்கத் தேவையில்லையே, தம்பி! கொடி பிடித்த வீரர்கள், நாலாவது ஐந்தாண்டுத் திட்டம்! நாட்டுக்கு சுபிட்சம் தரும் திட்டம்! என்று முழக்கமிட்டபடி ஊர்வலம் செல்லுவதைக் காட்டிவிட்டு, ஒரே ஒரு எ-, பயத்துடன் வளைக்குள்ளே நுழைவதையும், அதை ஆவலோடு ஒரு காங்கிரஸ்காரரும், ஒரு பூனையும் பார்த்திடும் காட்சியையும் காட்டி, அன்றைய இதழில், காங்கிரஸ் அமைச்சர் கெண்டா சிங் என்பவர், "எ- சத்துள்ள உணவு', சாப்பிடலாம்! என்று உபதேசம் செய்தாரே அந்தச் செய்தி வெளி வந்திருப்பதையும் காட்டினால் போதுமே! கொட்டகை அதிருமே!! ஆனால் எடுத்திடவிடுவார்களா?

ஆக, நமது கரங்களைக் கட்டிப் போட்டுவிட்டு, அவர்கள் தமது சாதனைகளை விளக்கிடும் படம் காட்டப் போகிறார்கள். காட்டட்டும்! பாவம்! அந்த ஆசையும் தீர்ந்து போகட்டும்!

நாம் படம் எடுத்துக் காட்டாமலேயே, நாட்டிலே உள்ள வேதனைக் காட்சிகளைக் கண்டு கண்டு வெதும்பிப் போயுள்ள மக்கள் இதயத்தில் அந்தக் காட்சிகள், துளியும் கலையாமல் இருக்கத்தான் செய்கின்றன!!

ஏதோ ஒரு பத்திரிகையில் - தமிழ்நாட்டு இதழிலேதான் - பார்த்தேன் - என்னையும் ராஜாஜி, காயிதே மில்லத் ஆகியோரையும் ஒரு கழுதைமீது உட்காரவைத்திருப்பதுபோல, ஒரு கேலிச் சித்திரம். என்னோடு தோழமைத் தொடர்பு கொண்டதற்காக, மதிப்பிற்குரிய அந்த இரு பெரியவர்களுக்கும் ஒரு இதழ் இத்தகைய கேவலத்தை ஏற்படுத்திக் காட்டி இருக்கிறதே என்று எண்ணி மெத்த வருத்தப்பட்டேன்.

இதழிலே இது என்றால், படத்திலே இதனைவிடக் கேவலமான காட்சிகளையெல்லாம்கூட இணைத்துக் காட்ட லாம் - காட்டட்டும்! எடுத்துக்கொண்டுள்ள காரியத்துக்குத் தரவேண்டிய "விலை' இவை என்றுதான் கருதிக்கொள்வோம். ஆனால், மக்கள்? காங்கிரசின் காவலர்களாகத் தம்மைக் கருதிக்கொண்டுள்ளவர்கள் மேற்கொள்ளும் இத்தகைய செயலை, கண்ணியமானது என்றா கருதுவார்கள்? மக்கள் அவ்வளவு இழிதன்மை கொண்டவர்கள் அல்ல!

தம்பி! நான் மக்களுடைய அந்தப் பண்பிலேதான் நம்பிக்கை வைத்திருக்கிறேன்; மிகுந்த நம்பிக்கை; அவர்களிடந்தான் முறையிடுகிறேன். மக்களிடம், அவர்கள் உணரும்படியான அளவிலும் முறையிலும் இந்த முறையீடு போய்ச் சேருமானால், அவர்கள் நீதியின் பக்கம் திரண்டெழுந்து வந்து நிற்பார்கள்

என்று திடமாக நம்புகிறேன். வரலாற்று ஏடுகள் எனக்குள்ள அந்த நம்பிக்கையை மேலும் வலிவுள்ள தாக்குகின்றன. ஆகவேதான், இந்தத் தொண்டு வெற்றி பெற, தம்பி! நீ உன்னை முழுக்க ஒப்படைத்துவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சாதனைகள்! தம்பி! சாதனைகளை மதிப்பிடவேண்டு மானால், ஒரு கட்சி நடத்திக் காட்டிய சாதனைகளுடன் வேறோர் கட்சி நடத்திக் காட்டிய சாதனைகளை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்; அந்த இரு கட்சிகளும் ஆட்சி நடத்திய நிலை இருந்திட வேண்டும்.

திறமை - வலிவு - செல்வாக்கு - அறிவு - பண்பு எனும் எவை பற்றிய மதிப்பீடு போடுவதென்றாலும் குறைந்தது இருவர்களின் நிலையையாவது கணக்கில் எடுத்துக்கொண்டு, ஒப்பிட்டுப் பார்த்து, இவரைவிட அவர் திறமைசாலி, ஆனால், வலிவு இவருக்குத்தான் அதிகம் என்ற இந்த முறையில்தான் மதிப்பீடு தர முடியும்; அதுதான் பொருள் உள்ளதாகவும் - பொருத்தமானதாகவும் இருக்கும்.

எடுத்துக்காட்டு வேண்டுமெனின் இதனைக் கூறலாம். இங்கிலாந்து நாட்டில் இன்று அரசாளும் தொழிற் கட்சியின் சாதனைகளை, முன்பு அரசாண்ட கன்சர்வேடிவ் கட்சியின் சாதனைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து எந்தக் கட்சியின் சாதனைகள் சிலாக்கியமானவை என்று கண்டறிந்து கூறுவது?

இந்த வாய்ப்பு, பிற நாடுகளிலே உள்ளதுபோல் இங்கு இல்லை.

இங்கு தொடர்ந்து காங்கிரஸ் கட்சியே ஆட்சியில் இருந்து வருகிறது. ஆகவே மக்களுக்கு நலன் தரத்தக்க சாதனைகள் செய்தளிப்பதில் எந்தக் கட்சி தரமானது, எந்தக் கட்சி அவ்வளவு தரம் இல்லாதது

என்று கூறிட இயலாது; ஒப்பிட்டுப் பார்த்திடும் வாய்ப்பு இல்லாததால்.

ஆகவே காங்கிரசாரும் அவர்தம் ஆதரவாளரும், சாதனைகள் - சாதனைகள் - என்று பேசும்போது, ஒட்டப் பந்தயத்தில கலந்துகொண்டவர்கள் - ஒன்பது பேர், அதிலே முதலாவதாக வந்தவன் முத்துச்சாமி, இரண்டாவதாக வந்தவன் இருதயசாமி என்று கண்டறிந்து கூறுவதுபோலக் கூறவில்லை; கூறிடும் வாய்ப்பு இல்லை.

ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை - என்பார்கள்! அதுபோல, வேறு எந்தக் கட்சியும் ஆட்சிப் பொறுப்பினைப் பெற்றிடாத நிலையில், ஆட்சி நடத்திடும் ஒரே கட்சியான காங்கிரஸ், சாதனை! சாதனை! என்று கூறி வருகிறது.

உண்மையான மதிப்பீடு தெரியவேண்டுமானால், இன்று காங்கிரஸ் நடத்திடும் ஆட்சி, வேறோர் கட்சியிடம் கிடைத்து, அந்தக் கட்சி என்னென்ன சாதனைகளைப் பெற்றுத் தருகிறது என்று பார்த்து, இரண்டையும் ஒப்பிட்டு, எது தரமுள்ளது என்று தீர்மானிக்க வேண்டும். அதற்கு இந்த இருபதாண்டுகளாக வழி இல்லை. இன்னும் இருபது ஆண்டுகளுக்கும் வழி இல்லை என்கிறார் காமராஜப் பெரியவர்.

அதாவது வேறோர் கட்சியின் திறமையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் வாய்ப்பு மக்களுக்குக் கிடைக்கக் கூடாது என்று விரும்புகிறார். அந்த விருப்பத்தின் அடிப்படையிலேயே திட்டமிட்டு வேலை செய்து வருகிறார்.

மக்கள் அளித்திடும் தீர்ப்பைப் பொறுத்து இருக்கிறது அவர் திட்டம். ஆனால், "போட்டி’ கூடாது!! - என்கிறார்.

குழந்தை இல்லாத வீட்டில் கிழவன் துள்ளி விளையாடு கிறான் என்பார்கள்; வேறு எந்தக் கட்சியும் ஆட்சி நடத்தவிடக் கூடாது என்று திட்டமிடுவது, அத்தகைய விளையாட்டிலே உள்ள விருப்பம் காரணமாகப் போலும்!

அது எப்படியோ போகட்டும்; ஆனால், வேறு ஒரு கட்சியின் ஆட்சி ஏற்பட்டு, அப்போது கிடைத்திடும் சாதனை களுடன் ஒப்பிட்டுப் பார்த்தாலொழிய காங்கிரசின் சாதனை களைப்பற்றிப் பெருமிதத்துடன் பேசுவதிலே பொருள் இல்லை! ஆனால் பேசுகிறார்கள்!

"பயலே! என்னைப்போல மீசையை முறுக்கிவிட உன்னால் முடியுமா?'' என்று கேட்டான் பக்கிரி, வயது நாற்பது, பனிரெண்டு வயது சிறுவனைப் பார்த்து.

"சித்தப்பா! எனக்கு இப்போதுதான் மீசை கருக்குவிடுகிறது! இதற்குள்ளே வம்பு பேசுகிறாயே! காலம் வரட்டும்! மீசை கொத்து கொத்தாக வளரும். அப்போது நான் முறுக்கிக் காட்டுகிறேன். அப்போது தெரியும், மீசையை முறுக்கிவிடுவதில், நம் இருவரில் யார் வல்லவர்கள் என்பது. இப்போது பேசி என்ன பயன்? ஆனால் சித்தப்பா! இதையும் தெரிந்துகொள் எனக்கு, முறுக்கிவிடும் அளவு மீசை வளரும் காலத்தில், உனக்கு உள்ளது உதிர்ந்து போய்விடும்'' என்றான் சிறுவன் கதையில்!

நம்மைப் பார்த்துக் கேட்கிறார்கள், நாட்டு மக்களை விவரம் அறியாதவர்கள் என்ற நினைப்பில் - "இதோ பார், காங்கிரசின் சாதனைகளை! காட்டு உன் சாதனைகளை!!' - என்று!

ஆட்சி என் கரம் வரட்டும், அப்போது நான் செய்தளிக்கும் சாதனைகளைக் காணலாம்; உன் சாதனைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம் என்று கழகம் கூறுகிறது. உடனே காமராஜர் கடுங்கோபம்

கொண்டு, "மூஞ்சியைப் பார்! முகரக் கட்டையைப் பார்!" என்று பேசுகிறார். உலகிலே பாதி சுற்றிவிட்டாரல்லவா! அதற்கு அடையாளம்போல விளங்கும் உயர்தரமான பேச்சு!!

இவர்கள் இந்த நினைப்புடன் இருப்பது மட்டுமன்றி, மக்களிடம் சென்று, நாடாள காங்கிரஸ் தவிர வேறு எந்தக் கட்சிக்கும் யோக்யதை கிடையாது என்று பன்னிப் பன்னிப் பேசி வருவதைக் கேட்ட பிறகுதான் நான் சென்னை சூளையில் நடைபெற்ற கூட்டத்தில் கேட்டேன், வேறு எந்தக் கட்சிக்கும் நாடாளும் யோக்யதை இல்லையென்றால், எதற்காக 8 கோடி ரூபாய் செலவிட்டு, பொதுத் தேர்தல் நடத்துகிறீர்கள் என்று. உடனே “பத்து ஆண்டுகளுக்கு முன்பே”சஷ்டியப்த பூர்த்தி’யைக் கண்ட பேட்டையார் சே! சே! இது கூடவா தெரியவில்லை! மக்களுடைய கருத்தை அறியத்தான் பொதுத் தேர்தல் நடத்துகிறோம் என்று பேசுகிறார். திண்ணைப் பள்ளிக்கூடம் நடத்துகிறார்.

நாடாளும் யோக்யதை எந்தக் கட்சிக்கும் இல்லை என்ற பேச்சு, ஜனநாயகத்துக்கு உகந்தது அல்ல என்பது என் வாதம்.

அதனைப் புரிந்துகொள்ளவிடவில்லை. பதவி! எதை எதையோ பேச வைக்கிறது. எது பேசினாலும் "ஜீரணமாகும்’ - பதவி காரணமாக!!

சாதனைகளைக் கணக்கிட, மதிப்பிட, தேவையான சூழ்நிலை இல்லாதபோது, காங்கிரஸ் தன் சாதனைகளை படமாக்கினாலும் சரி, பாட்டு ஆக்கினாலும் சரி, அது பாதிக் கதையே தவிர, "முழுவதும்’ ஆகாது.

ஒப்பிட்டுப் பார்க்கும் வாய்ப்பைப் பெற மக்கள் இம் முறை முனைந்திருக்கிறார்கள் என்பது என் கருத்து.

மற்றோர் கட்சியுடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியாத நிலையிலும், இந்தச் சாதனைகளை மதிப்பிட, ஒரு வழி இருக்கிறது. என்ன அவ்வழி எனில், இவர்கள் அரசாண்டு வரும் இதே காலத்தில், பிற நாடுகளிலே அரசாள்பவர்கள் பெற்றுள்ள சாதனைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து மதிப்பிடலாம்.

அதற்கு அழைத்தாலோ, அவர்கள் அதெப்படி ஒப்பிட லாம்! வேறு நாடு! வேறு சூழ்நிலை! அந்த மக்களே வேறு! அவர்களுக்கு இருந்த சூழ்நிலையே வேறு! என்று பேசுகிறார்கள் சிலர்; சில வேளைகளில்.

இவர்கள் குறிப்பிடுவனவற்றையெல்லாம் கணக்கில் வைத்துக்கொண்டு ஒப்பிட்டுப் பார்த்து, இந்த நாட்டிலே இவர்கள் மூலமாகக் கிடைத்த சாதனைகளை மதிப்பிட்டவர்கள் என்ன கூறி இருக்கிறார்கள்? அவர்கள், ஆட்சியைப் பிடித்திட அலைபவர்கள் அல்ல!

நாற்காலிப் பைத்தியம் பிடித்தவர்கள் அல்ல!! மேற்கத்திய நாடுகளைக்கூட கணக்கில் எடுக்காமல் புதிதாக விடுதலைபெற்ற கிழக்கத்திய நாடுகளை மட்டும் கணக்கில் எடுத்துக்கொண்டு மதிப்புப் போட்டதில், இந்ன்தர்ஊபயர் தவிர பிற எல்லா நாடுகளையும்விட, நம் நாடு எல்லாத் துறைகளிலும் ஒரு சேர, பிற்போக்காக இருக்கிறது என்றும், இதே வேகத்தில் முன்னேற்றம் இருந்திடுமானால், ஜப்பான் அளவுக்கு இந்தியா வளம்பெற 130 ஆண்டுகளுக்கு மேல் ஆகுமென்றும், புது டில்லியில் சில திங்களுக்கு முன்பு கூடிய, பல்வேறு நாட்டுப் பொருளாதார நிபுணர்கள் கூறியுள்ளனர்.

இதற்கென்ன சொல்லுகிறார்கள்? சாதித்தோம், சாதித்தோம் என்று சொன்னால் போதுமா? சாதித்திடும் திறமை இருந்தால் இவர்களைப்போலவே, ஏகாதிபத்தியப் பிடிப்பில் இருந்து விடுதலை பெற்று, சுதந்திர வாழ்வு பெற்று,

ஆட்சி நடத்திய பல கிழக்கத்திய நாடுகள் பெற்ற வளர்ச்சியை ஏன் இங்கு பெற முடியவில்லை? திறமைக் குறைவுதானே காரணம்? பொருத்தமான திட்டம் இல்லாததுதானே காரணம்?

அந்த ஆய்வாளர்கள் கணக்கில் எடுத்துக்கொண்ட எந்த நாட்டிலாகிலும் போட்ட திட்டங்கள் ஏழைகளுக்குப் பலன் அளிக்கவில்லை; பணக்காரர்களுக்கே அந்தப் பலன் போய்ச் சேர்ந்தது என்று கூறிக் கைபிசைந்து கொள்கின்றனரா?

இங்குதானே, காமராஜரே கூறுகிறார், "ஆமாம்! திட்டத்தின் பலன் ஏழைக்குக் கிடைக்கவில்லை" என்று. வேறு யாரோ, திட்டத்தை நடத்தியதுபோலவும் இவர் வேறு மண்டலங்களிலே சஞ்சரித்துவிட்டு இப்போதுதான் இங்கு வந்திருப்பதுபோலவும்!!

சமைக்கவே தெரியாதவள்; அவள் தயாரித்த சாப்பாட்டைச் சாப்பிட்டுச் சாப்பிட்டு, கணவன் சலித்துப் போனான்; முகத்தைச் சுளித்துக்கொண்டான். அப்போது அவள் சொன்னாளாம். "நான் சமைப்பது நன்றாகத்தான் இல்லை! எனக்கேகூடத்தான் பிடிக்க வில்லை. அதற்காக நான் உங்களைப்போலவா முகத்தைச் சுளித்துக்கொள்கிறேன்" என்று.

அது கணவன் - மனைவி கதை! இவருமா அதுபோலப் பேசுவது?

ஆமாம்! திட்டத்தின் பலன், ஏழைக்குக் கிடைக்க வில்லை. எனக்கேகூடத்தான் தெரிகிறது. ஆனால் அதற்காகக் குறை கூறுவதா? நான் குறை கூறுகிறேனா?

என்று. ஆனால் பேசுகிறாரே! அதைச் சாதனை என்றும் காட்டுகிறாரே! ஆய்வாளர்களோ, வேறு எந்த நாட்டிலும் இல்லை, இந்த அளவுக்குத் திறமைக்

குறைவு என்கிறார்கள்.

இத்தகைய ஆய்வுரைகளை உரைகல்லாகக் கொள்ளலாம்; இவர்களின் சாதனைகளை மதிப்பிட!

இந்த முறையிலே மதிப்பிடத் தேவைப்படும் அரசியல் தெளிவு அதிக அளவில் இங்கு இல்லை என்ற ஒரே தைரியத்திலா, இத்தனை பதட்டமாகப் பேசிக்கொண்டிருப்பது?

நான், தம்பி! நமது நாட்டு மக்களுக்கு அரசியல் தெளிவு வளரவில்லை என்ற எண்ணம் கொண்டவன் அல்ல. தெளிவு இருக்கிறது, அது வளர்ந்துகொண்டும் வருகிறது என்று நம்புகிறேன்.

அந்த நம்பிக்கையுடனேயே மக்களை அணுகி, கழகக் கருத்தைக் கூறி வருகிறேன்.

சாதனைகளைக் கணக்கில் எடுங்கள் - மற்ற இடங்களின் சாதனைகளுடன் ஒப்பிட்டுப் பாருங்கள் - அப்போதுதான் உண்மையான மதிப்பீடு தெரியும் என்று கூறி வருகிறேன்.

என் சொல் அவர்களின் செவி புகாமலில்லை.

அவர்கள் இதயத்திலே உண்மை பதியாமலில்லை.

பிற நாடுகளுடன் ஒப்பிடவும் மனம் இல்லையென்றால், தம்பி! இவர்களின் சாதனைகளை மதிப்பிட மற்றும் ஓர் வழி இருக்கிறது. இதற்காவது இவர்கள் இணங்குகிறார்களா என்று பார்த்தால் காணோம்.

இவர்கள் காட்டும் சாதனைகளை, இவர்கள் செய்தளிப்பதாகச் சொன்ன சாதனைகளுடன் ஒப்பிட்டுக் காட்டி, எந்த அளவு வெற்றி கிட்டிற்று என்பதையாவது கணக்கிடக்கூடாதா? அது ஒரு

விதமான மதிப்பீடாக இருக்குமே! செய்வார்களா? செய்தார்களா? இல்லையே! உணவுப் பிரச்சினை பற்றிய, ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்தின் போதும், என்னென்ன சாதிப்பதாகச் சொன்னார்கள்? இன்று அந்த முறையிலே இவர்கள் பெற்றுள்ள சாதனை எப்படிப் பட்டது? எலியைக் காட்டி, எமது வேலை முடிந்தது என்று சொல்லும் அளவுக்கு அல்லவா ஆகிவிட்டது!

இதுவரையில், ரூபாய்க் கணக்கிலே உணவுப் பொருள் விலைக்குக் (கடனுக்கு) கொடுத்துக்கொண்டு வந்த அமெரிக்கா, இனி டாலர்தான் தர வேண்டும் என்று சொல்லி நிர்ப்பந்தப்படுத்தும் நிலை வந்திருக்கிறதே. இது சாதனைக்குச் சான்றா?

கடன் கொடுக்கத் தயக்கமாக இருக்கிறது; ஏனெனில் கடனைத் திருப்பித் தந்திடும் சக்தி இந்தியாவுக்கு இருக்கிறதா என்பதிலே எங்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது என்று ஜப்பானியப் பொருளாதார நிபுணர்கள் கூறிவிட்டிருக்கிறார்களே, இது சாதனைக்குச் சான்றா?

ரூபாயின் மதிப்பைக் குறைத்தாலொழிய நெருக்கடியைச் சமாளிக்க முடியாது என்று இவர்களே கூறி விட்டார்களே! சாதனைக்குச் சான்றா?

செல்வம் - வருவாய் - ஒரு சிலரிடம் சிக்கிக் கொண்டது என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனரே - இது சாதனைக்குச் சான்றா?

இல்லை! இல்லை! இல்லை! - என்று ஏழையின் இதயம் கூறுகிறது. இதை மாற்ற, அவர்களை மயக்கத்தில் ஆழ்த்த, வளைவுகள், வண்ணங்கள், உலாக்கள், உற்சவங்கள், பேரணிகள், முழக்கங்கள்! இவை போதாதென்று படங்கள்!!

புனுகு பூசுகிறார்கள், புண் மறையும் என்று!!

அதிலே மிகவும் மணமுள்ளது என்ற நினைப்புடன் காமராஜர் புகழ் பாடுகிறார்கள். அது போதும், மக்களை மயக்க என்று!

இரண்டு நாட்களுக்கு முன்பு, ஜெர்மன் நாட்டவர் ஒருவர் வந்து பேசிக்கொண்டிருந்தார். இந்தப் பிரச்சினை எழுந்தது. நான் சொன்னேன்.

எங்கள் நாட்டில் இப்படி ஒருவரைப் புகழ் பாடி பூஜிக்கும் பழக்கம் நெடுங்காலமாக இருந்து வருகிறது. ஆனால், அதே மக்கள் தங்கள் இன்னல் போகவில்லை என்று தெரியும்போது "பூஜா விக்ரஹங்களை’த் தூக்கிப் போட்டுவிடுவார்கள். இதுவும் நெடுங்காலமாக இங்கு இருந்து வருவதுதான் என்று கூறினேன்.

தம்பி! நேருவைப்போலக் காமராஜரை வடிவம் கொள்ளச் செய்திடுவோம்; அந்த வடிவத்தைக் கண்டு, மக்கள் மயங்கிடும் சமயத்தைப் பயன்படுத்திக்கொண்டு, ஓட்டுகளைப் பறித்துக் கொள்வோம் என்று கருதுகின்றனர்.

நெடுங்காலமாக யாராவது ஒரு வடநாட்டுக்காரரே பெருந் தலைவராக - உற்சவ மூர்த்தியாக - இருந்து வருகிறார் என்பதிலே தென்னாட்டவருக்கு இயல்பாகவே இருந்துவரும் மனக்குறையை காமராஜரை அகில இந்தியப் பெருந்தலைவர் ஆக்குவதன் மூலம் போக்கிக்கொள்ளலாம் என்ற ஆசைகூட உலவிக்கொண்டிருக்கிறது.

ஆனால், ஒரு தலைவரின் புகழ் பாடி, ஒரு கட்சியோ, அதனால் நடத்தப்படும் ஆட்சியோ, மக்களுக்கு என்றென்றும் மயக்கத்தை ஊட்டிட முடியாது.

சுகர்ணோவின் புகழ் பாடப்பட்டதைவிடவா?

கானா நாட்டு அதிபர் நிக்ரூமாவின் புகழ் பாடப் பட்டதைவிடவா?

இவர்கள், அந்த நாட்டு மக்களால் மட்டும் அல்ல, வெளி நாட்டு மக்களாலும் பாராட்டப்பட்ட நிலையில் இருந்தனர் முன்பு! இப்போது? இவர்கள், அடிக்கடி நிலைமை மாறக்கூடிய ஜனநாயகச் சூழ்நிலையில்கூட அல்ல, "ஒரே கட்சி' என்ற கவசம் அணிந்துகொண்ட நிலையில் இருந்து வந்தனர்! அவர்களே, மக்கள் தெளிவு பெற்று சீறி எழுந்தபோது நிலைகுலைந்து போயினர்.

ஒரு நாட்டு ஆட்சியிலே என்றாலும் சரி. ஒரு கட்சியிலே என்றாலும் சரி, புகழ் மிக்க இடம் கிடைத்துவிட்டால் மட்டும் போதும், அது என்றென்றும் அவர்களை "வல்லவர்களாக' வைத்திருக்கும் என்று கூறிவிடவும் முடியாது.

சந்தனம் பூசிக்கொள்ளப் பயன்படும், தாக விடாய் தீர்க்க அல்ல.

கடுகு தாளிக்கப் பயன்படும், அதனையே தின்று கொண்டிருக்க முடியாது.

பெருங்காயம் குழம்புக்கு மணமளிக்கும்; அதனையே கரைத்துக் குடித்துக்கொண்டிருக்க முடியாது.

ஆனால், காங்கிரசார், காமராஜரின் புகழ் பாடினால் போதும், மக்கள் தமது மனக்குறை எல்லாம் தீர்ந்து போய்விட்டதாகக் கருதிக்கொள்வார்கள் என்று நம்புகிறார்கள்.

அவருக்கே அந்த நம்பிக்கை வந்துவிட்டதாகவும் சொல்லுகிறார்கள்! புகழ் பொழியப் பொழிய, ஒருவிதமான மன மயக்கம், புகழ் பெறுபவர்களுக்கு ஏற்பட்டுவிடும். ஏற்பட்டுவிடும்போது அவர்கள் தம்மைப்பற்றிப் போடும் கணக்கு, நாளாவட்டத்தில் -

உடனே அல்ல - பொய்த்துப் போகும். அதிலும், பலனை எதிர்பார்த்து செய்யப்படும் அர்ச்சனைக்கு மயங்கிவிடுவது மிகவும் ஆபத்தை மூட்டிவிடக்கூடும்.

அதனால்தான் ஆன்றோர் ஒருவர், கழுகு பிணத்தைத் தான் கொத்தித் தின்னும். "முகஸ்துதி' செய்பவர்கள் உயிருடன் இருக்கும்போதே கொத்தித் தின்பார்கள் என்று கூறி எச்சரித்தார்.

நெடுங்காலத்திற்குப் பிறகு, தமக்குக் கிடைத்துள்ள “புகழ்'”நிலை' “செல்வாக்கு' காமராஜருக்கு, ஒரு மயக்கத்தைத் தந்திருக்கிறது என்பது, அவருடைய பேச்சிலேயே தெரிகிறது; எதிர்க் கட்சிகளை ஏசுவதிலும், மக்கள் படும் இன்னலைப்பற்றி அக்கறையற்றுப் பேசுவதிலும் புரிகிறது. இந்த நிலையை அவருடைய கட்சியே எத்தனை நாளைக்குத் தாங்கிக் கொள்ளப் போகிறது என்பது, அலட்சியப்படுத்த முடியாத ஒரு கேள்வியாகும். இவர்மீது பொழியப்படுவதைக் காட்டிலும் மிக அதிகமான அளவு புகழ் பொழியப்படும் நிலையில் இருந்த தலைவர்கள், திடீரென்று, நமது கட்சியினராலேயே,”கை கழுவி' விடப்பட்ட காதைகள் நிரம்ப உள்ளன; கருத்துள்ளவர்கள் பாடம் பெற்றிடலாம்.

எல்லோராலும் விரும்பத்தக்க ஒரு திறமையான தலைவர். அவரைச் சந்திக்கும் வாய்ப்புப் பெற்ற அமெரிக்கர்கள் அவர் ஒரு சிறந்த மனிதர் என்பதை ஒப்புக்கொள்வார்கள். இதை யாரும் மறுப்பதற்கில்லை.

இவ்விதம் புகழ்ந்தார், அமெரிக்க குடியரசுத் தலைவர் ஐசனோவர், செப்டம்பர் 39, 1959-ல்.

அவருடைய குரல் உண்மையிலேயே சமாதானத்தின் குரலாகும்

என்று நெஞ்சு நெக்குருகப் பேசினார் கானா நாட்டு அதிபர், 1961 ஜூலை 24-ம் நாள்.

அவர் சாதாரண மனிதரல்ல! அவர் மிகவும் ஆற்றலும், அஞ்சா நெஞ்சமும், ராஜதந்திர அனுபவமும், உறுதியும் படைத்தவர்.

இவ்விதம் புகழ் பாடினார், பின்லந்து ஜனாதிபதி 1963, டிசம்பர் நாலாம் நாள்.

அறிவுக் கூர்மையும், விஷய ஞானமும், திட சித்தமுமுள்ள மனிதராகக் கருதுகிறேன். மேலும் அவரது நாட்டைத் தலைமை தாங்கி நடத்திச் செல்லக்கூடிய ஆற்றல் படைத்த ஒரே மனிதர் அவர்தான்!

என்று அமெரிக்கத் தொழிலதிபர் ஒருவர் புகழ்ந்து பேசினார் 1964 ஜனவரி 8-ல்.

மேதாவிலாசமும், நிதானமும், விடாமுயற்சியும் மிக்கவர். அதோடு விழிப்புணர்வும் அசைக்க முடியாத உறுதியும் படைத்தவர் என்று புகழ்ந்தார் அமெரிக்க இதழ் அதிபர் ஒருவர் - 1959 பிப்ரவரி 22-ல்.

அவர் மக்கள் மத்தியில் இருந்து வந்தவராதலால், ஜனரஞ்சகமான ஞானத்தை அறிவார்.

என்று ஜப்பானியப் பத்திரிகையாளர் ஒருவர் புகழ்ந்து எழுதினார் - 1963 டிசம்பர் 27-ல்.

அவரது விவேகத்தையும் பெருந்தன்மையையும் புகழ்வதற்கு உண்மையில் எனக்கு வார்த்தைகளே கிடைக்கவில்லை.

தத்துவப் பேராசிரியர், பெர்ட்ராண்டு ரசல், 1962 அக்டோபர் 28-ல் இதுபோலப் புகழ்ந்துரைத்தார்.

இவ்வளவும், யாரைப் பற்றித் தெரியுமா? தம்பி! இன்று எல்லாம் இழந்து எவருடைய பார்வையிலும்

படாமல் இருந்துவரும் குருஷேவ் பற்றி!

அதிபராக இருந்தபோது இத்தனை புகழ் மாலைகள்! இவ்வளவு புகழ் கிடைக்கும்போது நமக்கென்ன குறை, என்றென்றும் நாம்தான் அதிபர், நாம்தான் தலைவர் என்றுதானே குருஷேவ் எண்ணிக்கொண்டிருந்திருப்பார்!

அத்தனை புகழும், அவரைக் காப்பாற்றிற்றா? இல்லையே!

அத்தனை புகழ்மாரி பொழிந்தவர்களும், அவருக்கா இந்தக் கதி என்று ஒரு வார்த்தை கேட்டிட முன்வந்தனரா? இல்லையே!!

ஆகவே புகழ் பொழியப்பட்டால் போதும் நமக்கு, அசைக்க முடியாத நிலை என்றென்றைக்கும் உண்டு என்று யாரும் இருந்துவிட முடியாது, கூடாது.

பெறுபவர் நிலை எப்படியாயினும், ஒரு தலைவர் பெற்றுவிடும் புகழ், மக்களுக்கு, செவிக்கு உணவு, அதுவும் சிறிது காலத்துக்கு!

மக்கள், வாழ்வு கேட்கிறார்கள், உழைத்துவிட்டு!

கேட்பது ரொட்டி! கிடைப்பது கல்! - என்றார்கள் கவிக்குயில் சரோஜினி அம்மையார்.

புசித்திட மக்கள் உணவு கேட்கிறார்கள், புகழ் புசித்து அவர்கள் வாழ்ந்திட இயலாதே!!

அவர்கள் வாழ்வு கேட்கிறார்கள், வண்ணப் படங்கள் அல்ல!

படம் காட்டி, மக்களை மயக்கிட முனைகிறார்கள்! நாமும் படம் எடுக்க முடியும் தம்பி! மக்கள் கண்டு உண்மையை உறுதியாக உணர்ந்திட மட்டுமல்ல, ஊராளும் காங்கிரசாரே, பார்த்துவிட்டு, உண்மைதானே! உண்மைதானே! என்று கூறிக்

குமுறிடும் நிலை பெற்றிடக்கூட!

ஐயோ! உன் மகனை. . .
என் மகனை. . .
அநியாயக்காரப் பாவிகள், பாவிகள்!. . .
சுட்டுக் கொன்றுவிட்டார்களடி
அம்மா! அய்யய்யோ!
என் மகனையா. . .
எங்கே? எங்கே?. . .

தம்பி! மொழிக் கிளர்ச்சியின்போது மூண்டுவிட்ட விரும்பத் தகாத நிலைமையின்போது சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞனைப் பெற்றெடுத்த தாய், சேதி கேட்டு, துடியாய்த் துடித்து, எங்கே? எங்கே? என்று அலறி ஓடிடும் காட்சி போதாதா? அனுமதி கிடைக்குமா? ஒரு ஐம்பது அடி, இந்தக் காட்சி!!

தமிழ் வாழ்க!
தமிழ் வாழ்க!
இந்தி ஆதிக்கம் ஒழிக!
இந்தியை எதிர்த்துச் செந்தீயில் சாகிறேன்!

இந்த முழக்கம்! ஒரு தீக்குளிப்புக் காட்சி! கண்ணீரைத் துடைத்துக் கொள்ளவும் இயலாமல் மக்கள் திகைத்து நிற்பது! எடுத்துக் காட்டவிடுவார்களா?

படம் எடுக்கிறார்களாம் படம்! சாதனைகளை விளக்கிட!

சாதனைகள்தான், ஏழையின் முகத்தில் கவலைக் கோடு களாகப் பதிந்து கிடக்கின்றனவே! படம் வேறு வேண்டுமா?

அன்புள்ள
அண்ணாதுரை
2-10-66

போஜராஜனும் காமராஜரும்

சிட்டுகள் வல்லூற்றை எதிர்க்கும் காலம்!
காமராஜர் நுனியில் இருந்துகொண்டு அடிமரத்தை வெட்ட முனைகிறார்!
ஜனநாயக சோஷியலிசம் பேசும் காமராஜர் தங்குவது மாளிகையில்! குலவுவது சீமான்களுடன்!
தர்மகர்த்தா தத்துவம் இந்தக் காலத்துக்கு ஒத்து வராது!
இன்றைய சீமான்கள் நேற்றைய தர்மகர்த்தாக்களே!
மகாத்மாவால் முடியாததையா காமராஜர் தந்திடப் போகிறார்?
திருடர்களை "நள்ளிரவு உழைப்பாளர்' எனலாமா?
இரும்புப் பெட்டிக்கும் இதயத்துக்கும் இறைவன் தொடர்பு வைக்கவில்லையே!

தம்பி!

"நானோ என் மனைவியோ ஒரு குற்றமும் செய்யாத போது என் தாயாருக்குக் கோபம் வருகிறது.

நானோ என் தாயாரோ ஒரு தவறும் செய்யாத போது என் மனைவிக்குக் கோபம் வருகிறது.

என் தாயாரோ மனைவியோ ஒரு பிழையும் செய்யாதபோது எனக்குக் கோபம் வருகிறது.

இது யாருடைய குற்றம் அரசே?”

இப்படி ஒரு கேள்வியைப் புலவர் கேட்டபோது மன்னன் திகைத்துப்போயிருப்பான் என்றுதானே எண்ணிக் கொள்வாய்.

ஐயம் அகற்றுக! என்று புவியாளும் மன்னன் புலவரிடம் கேட்பது இயல்பு. இஃதோ அஃதன்று, புலவர் கேட்கிறார் விடை தரும்படி மன்னனை நோக்கி.

நிதி மட்டும் படைத்தவனாக இல்லை அம் மன்னன்; நிரம்ப மதி படைத்தவன். கேள்விக்கான விடை புரிந்துவிட்டது. பணியாளை அழைத்து, புலவருக்குத் தேவைப்படும் பணம் கொடுத்தனுப்பக் கட்டளையிட்டான்.

மன்னனுடைய மதிநுட்பத்தைக் கண்ட புலவர் பெரிதும் பாராட்டினார்.

காரணமற்ற கோபம் ஒவ்வொருவருக்கும்! ஒருவர்மீது ஒருவருக்கு - புலவர் அந்த நிலையைத்தான் எடுத்துரைத்தார்.

வறுமை நோய் வாட்டும்போது மட்டுமே இந்த நிலைமை இருக்க முடியும். கோபம் - ஒருவர்மீது ஒருவருக்கு. தன் குடும்பத்தை வறுமை வாட்டி வதைக்கிறது என்பதைத்தான் புலவர் எடுத்துரைத்தார் என்பதனை உணர்ந்துகொண்ட மன்னன், பரிசுப் பணம் கொடுத்துப் புலவரின் வறுமையை நீக்குவதன் மூலம் அவர் குடும்பத்தில் குதூகலம் மலர்ந்திடச் செய்தான்.

போஜராஜனுடைய அறிவுத் தெளிவையும், அவர் புலவர்களை ஆதரித்த பண்பினையும் விளக்கிட இந்தக் கதையினைக் கூறுவர். ஆனால் தம்பி! நான் இதனை எடுத்துக் காட்டுவது அதற்காக அல்ல; வறுமை என்னென்ன செய்து விடும், எவரெவருக்குக் கோபம் எழ வைத்துவிடும் என்பதை விளக்க.

புலவர், கற்றறிவாளர் காரணமற்றுக் கோபம் கொள்ளக் கூடாது என்பதனை நன்கு அறிவார். ஆயினும் புலவரே சொல்லுகிறார், ஒரு குற்றமும் செய்யாத என்மீது என் தாயாருக்கும் மனைவிக்கும் கோபம் வருகிறது, என் தாயாரும் மனைவியும் ஒரு பிழையும் செய்யாதிருக்கும்போதே எனக்கு அவர்கள்மீது கோபம் வருகிறது - என்பதனை.

உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளத்தக்க அறிவாற்றல் பெற்ற புலவருக்கே வறுமை, இந்த நிலைமையை உண்டாக்கிவிட்டது என்றால், பாட்டாளிகளையும் ஏழை எளியோரையும் நடுத்தர வகுப்பினரையும் வறுமை என்னென்ன எண்ணிட வைத்திடும்? என்னென்ன செய்திட வைத்திடும் என்பதனை விரிவாகவா விளக்கிட வேண்டும்?

அதிலும் தம்பி! கடினமாக உழைத்திடும் உத்தமன், வாழ முடியாமல் தவித்திடும்போது, அவன் மனம் என்ன பாடுபடும்?

தன்னை உருக்குலையச் செய்திடும் விதமான உழைப்பு, தனக்கு வாழ்வு அளிக்காமல், வேறு எவரெவரோ பளபளப்புப் பெற்றிடவே பயன்படுகிறது என்பதை உணரும்போது அவன் உள்ளம் எரிமலையாகாமலிருக்க முடியுமா?

அந்த எரிமலை வெடித்து ஆத்திரக் குழம்பு குபுகுபுவெனக் கிளம்பி வரும்போது, அதனைத் தடுத்திட தணியச் செய்திட எத்தனை நல்லுரைகள் தந்திடினும் என்ன பயன்?

பொறுத்துக்கொள்! பொழுது புலரும்!! - என்று கூறி எத்தனைக் காலத்துக்கு நம்பிக்கையை ஊட்டிக்கொண்டிருக்க முடியும்?

போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்ற போதனை செய்து எத்தனை காலத்துக்கு

அவனை இல்லாமை கொட்டுமிடத்தில் அடைத்து வைக்க முடியும்?

அவனைச் சுற்றிலும் சுகபோகிகள், களியாட்டம்! அவன் உள்ளத்தில் மட்டும் குமுறல்! எத்தனைக் காலம் அவன் சகித்துக் கொள்வான்?

அன்றலர்ந்த மலரின் கவர்ச்சி, அந்தி வானத்தின் அழகு, ஓவியத்தின் நேர்த்தி, மணிமாடத்தின் எழில் ஆகியவைபற்றி மகிழ்ச்சியுடன், கண்டவர் பேசிக்கொண்டிருப்பதை, எப்படி விழி இழந்த ஒருவன் கேட்டுக்கொண்டிருக்க முடியும்? ஏழையின் நிலையும் அது போன்றதே.

அவன் கொதிப்படைகிறான், குமுறுகிறான்; வெறுப் புணர்ச்சி கொள்கிறான்; தன்னை இந்த நிலையில் தள்ளி வைத்துவிட்டு, உல்லாச புரியினர் உண்டு களித்துக் கிடந்திடும் கொடுமையினை அழித்தொழிக்க வேண்டும் என்று ஆவேசம் கொள்கிறான்.

அவனுடைய கண்கள் பல காலம் புனலைக் கொட்டிக் கொட்டிக் இறுதியில் வறண்டு போகின்றன; அவைகள் பிறகு கனல் கக்கத் தொடங்குகின்றன! அப்போது அவனைப் பார்த்து ஆத்திரம் ஆகாது! வெறுப்புணர்ச்சி பெருந் தீது! இதனை ஆண்டவன் பொறுத்துக்கொள்ளமாட்டார் என்றெல்லாம் எவரேனும் பேசிட முற்படின், அவன் ஓர் ஏளனச் சிரிப்பொலி கிளப்பிடுவான்; அந்த ஓசை எந்த பீரங்கிச் சத்தத்தையும் அடக்கிவிடத் தக்கதாகிவிடும்.

ஏர் பிடிப்பவன்தானே! ஏனோதானோதானே! இடுப் பொடிந்தவன்தானே! என்று அவனைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்தவர்களின் கண்களில் அச்சம் கப்பிக்கொள்ளும் வடிவம் கொண்டிடும் நிலை பெறுவான், சாவுக்கு அஞ்சாத நிலையினனாகிவிடுவான்! எதனையும் அழித்திடும்

வல்லமை பெறுவான். விம்மிக் கிடந்த ஏழை, விழித்துக்கொண்டான் என்பது அதன் பொருள். சிட்டுகள் வல்லூறை எதிர்த்திடும் காலம் என்று கவிஞர் இக்பால் இதனைத்தான் குறிப்பிடுகிறார்.

விம்மிக் கிடந்திடும் ஏழை விழித்துக்கொள்ளும் நிலை பெறும்போது, அவனிடம் இதமாகப் பேசியும், அவனுக்காகப் பரிவு காட்டியும், அவனைக் காத்திடும் உறுதி தெரிவித்தும், அவனை அந்தக் கதிக்கு ஆளாக்கிய செல்வவான்கள்மீது சீற்றத்தைக் கொட்டுவதுபோலக் காட்டியும் நிலைமை மோசமாகிவிடாமல் தடுத்திட முனைபவர் சிலர் உண்டு.

காமராஜர் தம்மை அந்தப் பணிக்கு ஒப்படைத்துவிட்டார்!

ஏழை பங்காளர் என்றும், எளியோருக்காக வாதாடுபவர் என்றும், அவருக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன. பணக்காரர்களின் ஆதிக்கத்தை அவர் அடக்கிடுவார், ஒடுக்கிடுவார் என்று பேசப்படுகிறது.

அவரேகூட, ஏழையைக் காத்திட வேண்டும் என்ற ஆர்வமும், உறுதியும் கொண்டவராக இருக்கக்கூடும்.

போலி நாடகம் ஆடுகிறார் என்றுகூடக் கூறத் தேவையில்லை.

உள்ளபடி ஏழைகளை ஈடேற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்டவராகவே இருக்கிறார் என்றே வைத்துக்கொள்வோம்.

ஆனால் அவரால் அதனைச் சாதிக்க முடியாது.

ஆற்றலற்றவர் என்று கூறவில்லை, கொள்கை நாணயமற்றவர் என்றும் கூறவில்லை; அவர் உள்ள இடம், தனக்கென ஏற்படுத்திக்கொண்ட சூழ்நிலை,

அவருடைய வல்லமையைச் சொல்லளவு ஆக்கிவிடுகிறது.

அவர் எவ்வளவு ஆர்வத்தை வரவழைத்துக்கொண்டு பேசினாலும், சீமான்கள் அதுபற்றித் துளியும் அஞ்சாமலும், கவலைப்படாமலும் இருப்பதற்குக் காரணம், பணக்காரர் ஆதிக்கத்தை ஒழித்துக் கட்ட அவரால் முடியாது என்ற உணர்வுதான் நம்பிக்கைதான்.

பணக்காரர்களை நடுக்கூடத்தில் உட்கார வைத்துக் கொண்டு அவர் சோஷியலிசம் பேசுவது, நுனிமரத்தில் இருந்துகொண்டு அடிமரத்தை வெட்ட முனைவது போன்றதாகும்.

இதனை இங்குள்ள செல்வவான்கள் மட்டுமின்றி, வெளி நாட்டுச் சீமான்கள் குறிப்பாக அமெரிக்க நாட்டு கோடீஸ்வரர்கள் மிக நன்றாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் அவர் பேசிடும் ஜனநாயக சோஷியலிசம்பற்றி அவர்கள் துளியும் பொருட்படுத்தவில்லை.

ஏழைகளை மயக்க மட்டுமே அவருடைய ஜனநாயக சோஷியலிசப் பிரசாரம் பயன்படும் என்பதை சீமான்கள் மிக நன்றாக உணர்ந்துகொண்டுள்ளனர்.

அதனால்தான் கோடீஸ்வரரான பிர்லா, மறுபடியும் காங்கிரஸ் கட்சிதான் நாடாள வேண்டும் என்ற தமது விருப்பத்தை ஒளிவு மறைவு இல்லாமல் சில திங்களுக்கு முன்பு வெளியிட்டார்.

ஏழையின் மனம் எரிமலை ஆகி, புரட்சித் தீ கிளம்பிடாது தடுத்திடவேண்டுமானால், அந்த ஏழை, தனக்காக வாதாடவும் போராடவும், தன் நிலையைச் செம்மைப்படுத்தவும் பணியாற்றிட ஒருவர் இருக்கிறார், அவர் ஆற்றல் மிக்கவர், அஞ்சா

நெஞ்சினர் என்ற நம்பிக்கையைப் பெற வேண்டும்.

இன்று காமராஜர் மூலம் அந்த நம்பிக்கை ஊட்டப் படும் முயற்சி நடைபெற்று வருகிறது.

சமூக அமைப்பும் பொருளாதார முறையும் புரட்சி கரமாக மாறாதிருக்கச் செய்திட, இப்படி ஒருவர் தேவைப்படுகிறார்.

ஆகவே, செல்வவான்களே இன்றைய தினம், காமராஜரின் செல்வாக்கை வலிவுள்ளதாக்கும் காரியத்தில் ஈடுபட்டுள்ளனர்.

உண்மையிலேயே காமராஜரால் தங்கள் ஆதிக்கத்துக்கு ஆபத்து ஏற்படும் நிலை இருந்திடின், சீமான்கள் காமராஜரை கவிழ்த்திட முனைவர், உச்சி மோந்து முத்தமிட மாட்டார்கள்.

ஜனநாயக சோஷியலிசம் பேசும் காமராஜர் தங்குவது மாளிகையில், குலவுவது சீமான்களுடன்!

அவர்களுடன் குலவிக்கொண்டே அவர்களின் கொட்டத்தை அடக்க முடியாதா என்று கேட்பரேல் தம்பி! முடியாது என்று கூறிட, "மாமேதை’ தேவையில்லை.

அதுமட்டுமல்லாமல், ஒரு சில பணக்காரர்கள் பீதி கொண்டுவிடப் போகிறார்கள் என்ற கவலையுடன் அவர் வெளிப்படையாகவே, தாம் பேசும் சோஷியலிசத்தில் பணக்காரர்கள் இருக்கலாம், பணம் திரட்டலாம், ஆனால், அவர்கள் ஏழைகளின் தர்மகர்த்தாக்களாக இருக்க வேண்டும் என்று அறிவித்துவிட்டார்.

இந்த "தர்மகர்த்தா’ தத்துவம் இன்று நேற்று ஏற்பட்டது அல்ல! பலப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே உலவிக் கொண்டிருக்கிறது.

சீமான் ஆடம்பரமாக உடுத்திக்கொண்டிருக்கிறானே என்று எண்ணி அருவருப்பு அடையாதே! நேர்த்திமிக்க நெசவாளர்களின் வாழ்க்கை உயருவதற்காகவே அவர் விலையுயர்ந்த வேலைப்பாடுமிக்க ஆடைகளை உடுத்திக் கொள்கிறார்.

கோட்டைபோன்ற மாளிகையில் கொலுவிருக்கிறாரே என்றெண்ணிக் கொதிப்படையாதே! கட்டடக் கலைஞர்கள் புகழ்பெற்றிடட்டும் என்ற நோக்கத்தால்தான் மாட மாளிகை கட்டினார்; தன் சுகபோகத்துக்கு அல்ல! - என்று தத்துவம் பேசப்பட்டது.

இவைகளுக்கெல்லாம் ஒரு காலத்தில் மதிப்பு இருந்தது! இன்று? இவைகளை ஏற்பார் இல்லை.

காலமும் கருத்தும் மாறிவிட்டிருப்பதை அறியாததால் காமராஜர், இந்தத் தர்மகர்த்தா தத்துவம் பேசிக் கொண்டிருக்கிறார்.

தர்மகர்த்தா வேலை பார்ப்பதே ஒரு புண்ணிய காரியம் என்றும், தர்மகர்த்தாவைத் தட்டிக் கேட்பதே பாப காரியம் என்றும்,

தர்மகர்த்தாவின் பொறுப்பிலேயே சொத்து இருக்க வேண்டும், அதுதான் முறை என்றும் நம்பப்பட்டு வந்த காலம் அல்ல இது.

அத்தகைய நம்பிக்கை இருந்து வந்த நாட்களிலேயே கூட தர்மகர்த்தாக்களாக இருந்துவந்தவர்கள், நெறி தவறி நடந்து கொண்டனர், சுயநலக்காரராயினர் என்ற குற்றச்சாட்டுகள் பலமாக உலவின. அந்த நிலை இன்று மேலும் எந்த அளவுக்கு ஆகிவிட்டிருக்கும் என்று கூறத் தேவையில்லை.

செல்வவானாக ஒருவன் இருப்பது அவன் செய்த

புண்ணியத்தால் என்றும், ஏழையாக ஒருவன் நெளிவது அவன் செய்த பாபத்தால் என்றும் நம்பப்பட்டு வந்தது முன்பு. இன்று அந்த விதமான பேச்சு ஏளனம் செய்யப் படும் கட்டம் பிறந்துவிட்டிருக்கிறது.

ஆனால் காமராஜர் மூலம் அந்தப் பத்தாம்பசநம் பிக்கையை மீண்டும் புகுத்திடலாம் என்று அரசியலில் இடம்பெற்றுக்கொண்டுள்ள செல்வவான்கள் எண்ணுகின்றனர்.

நெறி தவறாதவராக ஒரு தர்மகர்த்தா இருக்கிறார் என்றே வைத்துக்கொள்வோம்; அத்தகையவர் என்ன செய்திடுவார் என்று நாம் எதிர்பார்க்கலாம்?

உள்ள சொத்து தன் சுகபோகத்துக்கு என்று கருதி விடாமல், பொது நன்மைக்கு, அதிலும் குறிப்பாக ஏழை எளியோர்களின் நன்மைக்காகச் செலவிடப்பட வேண்டும். அதற்காகவே அந்தச் செல்வம் தன்னிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது என்று கருத வேண்டும்.

அந்தக் கருத்தின் அடிப்படையில், ஏழைக்கு இதம் செய்யத்தக்க ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

அன்னதானம், சத்திரம் சாவடி கட்டுதல், பண உதவி தருவது போன்றவைகளை மேற்கொள்ள வேண்டும்.

வானமே கூரையாய், விண்மீன்களே விளக்காய், தரையே பஞ்சணையாகக் கொண்டு தத்தளிக்கும் தரித்திரவானுக்கு வீடு கட்டித் தர வேண்டும்

அவன் பிழைக்க வழியின்றி வேதனைப்படும்போது, காப்பாற்றுவதற்காகப் பண உதவி செய்திட வேண்டும்.

ஐயோ பாவம்! அவனும் மனிதன்! அவன் வதைபடப் பார்த்திடப் போமா! என்று எண்ணி,

ஏழையின் வேதனையைத் துடைத்திடத் தன்னிடம் உள்ள செல்வத்தைத் தந்துதவ வேண்டும்.

இருளும் அழுக்கும் நிரம்பிய இடத்திலே ஏழையை இடர்ப்படவிடாமல், அவன் வாழ்வுக்கு ஒளியும் நறுமணமும் கிடைத்திடச் செய்திட வேண்டும். தன்னிடம் உள்ள பணத்தைக்கொண்டு, தன் மூன்றடுக்கு மாடியை நான்கு அடுக்கு உள்ளதாக மாற்றிக்கொள்ளாமல், இருட்குகை போலுள்ள இடத்திலிருந்து ஏழையை விடுவித்து அவனுக்கு இல்லம் அமைத்துத் தரச் செலவிட வேண்டும்.

தன்னிடம் உள்ள செல்வத்தைக்கொண்டு, செயற்கைக் குளம் அமைத்து அதிலே பன்னீரைத் தேக்கி வைத்து, அதிலே நீந்தி விளையாடி மகிழ்ந்திட முனையாமல், அந்தப் பணத்தைக் கொண்டு, ஏழைக்குப் போதுமான குடிதண்ணீர் கிடைத்திட ஊருணி அமைத்தளிக்க வேண்டும்.

உள்ள பணத்தைக்கொண்டு தனக்கொரு மணிமுடி தயாரித்துக்கொள்ள முனையாமல், ஏழையின் பிணி போக்க அப்பணத்தைச் செலவிட வேண்டும்.

தம்பி! யோசித்துப் பார்த்தால் இப்படிப் பல செய்திடலாம் என்பது புரியும்.

செல்வவான்கள் இவ்விதமாகவா தமது செல்வத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்று ஆராய்ந்து பார்த்திடின், நம்மைக் கவலை கப்பிக்கொள்ளும். ஆனால் நான் உன்னை அது பற்றிக்கூட ஆராந்திடச் சொல்லவில்லை. நான் கூறுவது வேறு; ஒரு அடிப்படைப் பிரச்சினை.

தர்மகர்த்தா, நெறி தவறாது நடந்திடினும் சமூக அமைப்பு மாறாது!

ஒருவர் தர்மகர்த்தாவாக இருக்கும் நிலை எதைக்

காட்டும் என்றால், அவர் போன்ற ஒருவருடைய தரும சிந்தனையை எதிர்பார்த்துப் பலர் ஏழைகளாக இருந்தாக வேண்டும் என்பதனை

ஏழ்மை இருந்து தீர வேண்டும்; அப்போதுதான் ஏழைப் பங்காளர் என்று ஒருவர் திகழ்ந்திட முடியும்; ஆக, தர்மகர்த்தா முறை என்பது, ஏழை என்றும் பணக்காரர் என்றும் சமூகம் இரு பிரிவாக இருப்பதையும் அதனால் விளைந்திடும் வேதனையையும் மாற்றிவிடாது! சொல்லப் போனால் அந்த முறை இருந்து தீரும்.

இதனைப் பல நூற்றாண்டுகள் பார்த்தான பிறகுதான் சிந்தனையாளர்கள், தானம் - தருமம் - என்பவைகள் ஏழை பணக்காரன் என்ற பேதத்தை அடியோடு போக்கிடா என்பதை அறிந்தனர்; அவனிக்கு எடுத்துரைத்தனர்!

ஏழை என்று ஒரு பிரிவும் பணக்காரர் என்றோர் பிரிவும் ஏன் ஏற்படுகிறது என்பதைக் கண்டறிந்து, அந்த நிலை ஒழிந்திட வழி செய்தாக வேண்டும் என்று தெரிவித்தனர்.

அதன் விளைவாக மனித குலத்துக்குக் கிடைத்த கருத்துக் கருவூலமே சோஷியலிசம் என்ற தத்துவம்.

தருமகர்த்தா முறை பரீட்சிக்கப்பட்டு அது போதுமானதாக இல்லை என்பது மெய்ப்பிக்கப்பட்ட காரணமாகவே, புதிய முறை வகுக்கப்பட்டது.

அந்தப் புதிய முறையே சமதர்மம் - சோஷியலிசம். இந்தப் புதிய முறையை எப்படி நடத்திச் செல்வது என்பதைச் சிந்தித்துச் செயலாற்றவேண்டிய காலம் இது. ஆனால், இந்தக் காலத்தில், மக்களைப் பின்னோக்கித் துரத்தும் விதமாக, "தர்மகர்த்தா’ முறை பற்றிப் பேச முற்படுகிறார் காமராஜர்.

இன்று பிரபுக்கள் பலரிடம் சேர்ந்துள்ள

சொத்திலே பெரும் பகுதி, ஒரு காலத்தில் தரும காரியத்துக்காக அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு, மெள்ள மெள்ள அந்தச் சொத்தினை அவர்கள் தங்கள் சுகபோகக் கருவியாக்கிக்கொண்டனர் என்பதனைப் பொது மக்கள் நன்கு புரிந்துகொண்டுள்ளனர்.

கோயிலுக்காக, வேத பாடசாலைக்காக, அன்னதானத்துக் காக, அனாதைகளின் பராமரிப்புக்காக என்று குறிப்பிடப்பட்டு ஒப்படைக்கப்பட்ட பெரு நிதி, பிறகு சீமான்களின் சொந்தச் சொத்து ஆகிவிட்ட கதை பலப் பல.

இன்றைய சீமான்களிலே பலர், நேற்றைய தரும கர்த்தாக்கள்!

இப்படித் தோற்றுப்போய்விட்ட ஒரு தத்துவத்தை, புதை குழியிலிருந்து வெளியே எடுத்து வைத்துக்கொண்டு, தமது புதிய கண்டுபிடிப்பு இது என்று பேசிப் பார்க்கிறார் காங்கிரஸ் தலைவர்.

சிலர் செல்வத்தைக் குவித்துக்கொள்வதற்கான ஏற்பாட்டினை வைத்துக்கொண்டு, பலர் பஞ்சைகளாகித் தவித்திடும் நிலையையும் வைத்துக்கொண்டு, இல்லாதாரின் இன்னலை உடையவர் துடைத்திடுவார் என்று உபதேசம் பேசி வருவது, கண்ணைப் பறித்துவிட்டு, கைக்கோல் தருவதற்கு ஒப்பானதாகும்; பாம்புப் புற்றுக்குப் பக்கத்தில் பச்சிலைச் செடி நட்டு வைத்துக் காட்டுவதுபோன்றதாகும்; கூரையைக் கொளுத்திவிட்டு, குடம் குடமாகத் தண்ணீர் தர முனைவதுபோன்றதாகும்.

இது பிரச்சினையைத் தீர்த்திடும் முறை அல்ல; மூடி மறைக்கும் முயற்சி.

ஆகவேதான் தம்பி! நாம் இந்தத் தர்மகர்த்தா

முறைபற்றிய பேச்சினை ஏற்க மறுக்கிறோம்.

மேலும், தம்பி! இந்தப் போதனையை இவருக்கு முன்னாலே எப்படிப்பட்டவர்களெல்லாம் செய்து பார்த்துப் பலன் காணாது வாடிப் போயினர் என்பதை எண்ணிப் பார்த்திடும்போது கவலை அதிகமாகித்தான் தீரும்.

மகாத்மா காந்தியார் தமது ஆயுட்காலம் முழுவதும் இந்த போதனையைத்தான் செய்து வந்தார்!

ரஷ்ய நாட்டு தத்துவ மேதை டால்ஸ்டாய் - வேதாந்த வித்தகர் இந்தப் போதனை நடத்தியவர் - அறிவோமே.

அவர்களின் உபதேசங்கள் "பூஜ மாட' ஏடுகளாக்கப்பட்டு விட்டனவேயன்றி, புதிய முறையையா, சமூகத்திலே புகுத்தின? இல்லையே!

மகாத்மாவின் உபதேசம் சாதித்துக் கொடுக்காத தர்மகர்த்தா முறையையா, புதிய பெரியவரின் பேச்சு தந்திடப் போகிறது? அப்படிச் சொல்லிட ஒன்று நெஞ்சழுத்தம் நிரம்ப வேண்டும் அல்லது ஏய்க்கும் திறமை மிகுந்திருக்க வேண்டும்.

தருமகர்த்தா முறை செயல்பட்ட காலத்திலே கட்டப்பட்ட சத்திரங்களும் சாவடிகளும் ஏராளம். ஆனால் வளர்ந்துவிட்ட ஏழையின் தொகையோ அதனினும் ஏராளம்.

தருமகர்த்தாக்களாகச் சிலர் விளங்கிடவேண்டு மென்றால், அவர்களிடம் பெரு நிதி சேர்ந்திடவேண்டு மென்றால், நாட்டிலே உற்பத்தியாகிற செல்வத்திலே பெரும் பகுதி அவர்களிடம் போய்ச் சேர்ந்தாக வேண்டும்; பெரும் பகுதிச் செல்வம் செல்வர் சிலரிடம் சேர்ந்திடுமானால், சமூகத்தில் பெரும் பகுதி வறண்டுதானே கிடந்தாக வேண்டும்.

இதனால்தான், தம்பி! ஏழை பணக்காரன் பேதம் நீடித்துக் கொண்டு வருகிறது. இதனால்தான் தம்பி! வறுமையால் தாக்குண்டோர் தொகை வளர்ந்தபடி இருக்கிறது. இதனால்தான் தம்பி! வறுமையின் தாக்குதல், குடும்பங்களிலே குமுறலை, காரணமற்ற கோபம் கொண்டிடும் நிலையினை மூட்டி வைக்கிறது. இதனை உணர்ந்தோர், உயர் பதவியினர் தர்மகர்த்தா தத்துவம் பற்றிப் பேசுவதைக் கேட்கும்போதே எள்ளி நகையாடத் தான் செய்வர்.

தருமகர்த்தா தத்துவத்தைப் பற்றிக் காமராஜர் பேசி அது கேட்டு செல்வவான்கள் மனம் உருகி, ஐயகோ! நாம் சுகபோகத்தில் இருக்கிறோம், நமது உடன் பிறந்தோர் வறுமையிலே உழல்கிறார்களே! நாம் கனிச்சாறு பருகுகிறோம், அவர்கள் கால்வயிற்றுக் கூழும் கிடைக்காமல் தவிக்கிறார்களே! நமக்குப் பஞ்சணை, அவர்களுக்குக் கட்டாந்தரை! நாம் மாளிகையில், அவர்கள் மரத்தடியில்! நாம் புதுப்புது இன்பம் தேடிப் பெறுகிறோம், அவர்கள் புழுப்போலத் துடிக்கிறார்களே! இது சரியா, முறையா? மக்களிலே பெரும் பகுதியினர் வேதனையில் உழலும்போது, நாம் வாழ்க்கையையே விழாவாக்கி மகிழ்ச்சியில் மூழ்கிக் கிடப்பதா? மனிதாபிமானமாகுமா இது? சேச்சே! என்ன கொடுமை! என்ன கொடுமை! இரும்புப் பெட்டியிலே பணம்; ஏழை குடிசையில் பிணமாகிறான், பசி நோயினால்! எதற்கு இந்தப் பணம்? என்னிடம் உள்ள பணம், என்னிடம் உள்ள பணம் என் பணமா? ஏழையின் வியர்வை அல்லவா பணமாக மாறி என்னிடம் வந்தது? அந்த ஏழைகளைக் காத்திட இந்தப் பணம் பயன்படட்டும் என்றல்லவா இத்தனை பணம் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது? குளத்திலே நீரைத் தேக்கி வைப்பது எதற்கு? ஊரார் பருகிட உதவ வேண்டும் என்பதற்கல்லவா? முதலைகள் புரண்டிடவா தடாகம்!! நான் தனவான்! கனவான்! சீமான்!

பொருள் என்ன? தனவான் என்பது தருமவான் என்பதன் மறு பெயரல்லவா? கனவான் என்றால் மக்களைக் கவனிப்பான் என்றல்லவா பொருள்? சீமான் என்றால் சீர்செய்வோன் என்றல்லவா பொருள்? இதுதானே தருமகர்த்தா முறை! இதனை இதுநாள்வரை மறந்து கிடந்தேனே! மக்கள் துரோகியாகிக் கிடந்தேனே! இப்போதல்லவா உண்மையை உணர்ந்தேன்! கண் திறந்தது! இதயம் மலர்ந்தது! எல்லாம் பெரியவர் காமராஜர் தந்த தருமகர்த்தா உபதேசம் கேட்டதனால். இதோ, இனி என் செல்வம், ஏழைக்கு இதம் அளிக்க! என் கடன் பணி செய்து கிடப்பதே! யான் பெற்ற செல்வம் யாவர்க்கும் சொந்தம்! தந்தேன்! தந்தேன்! நான் தருமகர்த்தா! தருமகர்த்தா - என்றெல்லாம் நெஞ்சு நெக்குருகக் கூறி, தம்மிடம் உள்ள செல்வத்தை அள்ளித் தந்து ஏழையின் அல்லலைப் போக்கிடவா கிளம்புகின்றனர்? இல்லையே! ஒரு புன்னகையை உதிர்க்கின்றனர்; புதுத் தெம்பு கொள்கின்றனர்!

மதியற்றோரே! கேட்டீரா காமராஜர் பேச்சை! பணக்காரர்கள் என்றாலே பாதகர்கள் என்று பேசி வந்தீரே! சீமான் என்றால் ஏழைக்கு வைரி என்று ஏசி வந்தீரே! முதலாளி என்றால் பாட்டாளிக்குப் பகையாளி என்று பழி சுமத்தி வந்தீர்களே! காமராஜர் பேச்சைக் கேட்டீர்களா? நாங்கள் தர்மகர்த்தாக்கள்! ஆமாம்! தர்மகர்த்தாக்கள்! எம்மிடம், எமது தகுதி, திறமை, பண்பு பார்த்துச் செல்வம் வந்து குவிந்திருக்கிறது. இந்தப் பணம் எமக்கேவா சொந்தம்? இந்தப் பணத்தைக் கொண்டு நாங்களா சுகபோகத்தில் மூழ்கிடப்போகிறோம்? நீரைத் தன்னிடத்தில் நிரப்பி வைத்துக்கொண்டிருக்கும் குளம் எப்படி ஊராருக்குப் பயன் தருகிறதோ அப்படி ஏழைகளுக்கு இதம் செய்திட இந்தச் செல்வம். எம்மிடம் பணம் இருக்கிறதே என்பதற்காக பகைத்துக்கொள்ளலாமா? உங்கள் நலனுக்காக அல்லவா இந்தப் பணம் எம்மிடம்

ஒப்படைக்கப்பட்டிருக்கிறது! நாங்கள் தந்திட! நீங்கள் பெற்றிட! நாங்கள் தந்திடவேண்டு மானால், எம்மிடம் பணம் சேர்ந்திடவேண்டுமல்லவா? அப்படிச் சேர்ந்திடும்போது, அடிக்கிறான் கொள்ளை, குவிக்கிறான் கோடி என்று கொக்கரிக்கிறீர்களே நியாயமா? நாங்கள் குவித்திடா விட்டால், உங்களுக்கு உதவி யார் செய்திடுவர்? எப்படிச் செய்திட முடியும்? தருமகர்த்தா இல்லாவிட்டால் தருமம் எப்படி நடக்கும்? தருமம் நடக்காவிட்டால், தரித்திரத்தால் தவித்திடும் உங்கள் வேதனை எப்படிப் போகும்? ஆகவே இனியாகிலும், அருவருப்பு, பொறாமை, பகை கொள்ளாதீர்கள்! மாளிகையில் மந்தகாசமாக வாழ்கிறான் என்று கோபம் கொள்ளாதீர்! மாளிகை வாசியினால்தானே மண் குடிசைக்காரரின் இன்னலைத் துடைக்க முடியும். உங்கள் இன்னலைத் துடைக்கத்தானே எம்மிடம் இலட்சங்கள் உள்ளன! நாங்கள் தர்மகர்த்தாக்கள்! எங்களை வாழவிடுங்கள், வளரவிடுங்கள்!! வாழ்த்துங்கள்! வணங்குங்கள்! உமக்கு வாழ்வளிக்கும் வல்லமையாளர் நாங்கள்!! என்று ஏழையைப் பார்த்துக் கூறிடும் துணிவு பெறுகின்றனர்.

சுயநலக்காரன்
சுரண்டல்காரன்
சுகபோகி
பணம் பெருத்தான்
இரும்புப் பெட்டிக்காரன்

என்றெல்லாம் பணக்காரர்கள் கண்டிக்கப்பட்டால், ஒரு கொதிப்பு எழும்; குமுறிக் கிடந்தவர்கள் சீறி எழுவர்; கூப்பிய கரங்கள் தாக்கிட எழும்; புனல் சொரிந்த கண்கள் கக்கும், புரட்சி மூளும், நமது நிலை அழியும். ஆனால் நாம் தர்மகர்த்தாக்கள் என்று காமராஜரே கூறிவிட்டார். ஆகவே ஏழை எளியோர் நம்மை வாழ்த்துவர், வணங்குவர்! நமக்கு எதிர்ப்பு எழாது, பகை

மூண்டிடாது, நமது ஆதிபத்தியம் அழிந்துபடாது!! - என்று எண்ணுகின்றனர். அந்த எண்ணம் ஒரு துணிவைத் தருகின்றது.

காமராஜரின் தர்மகர்த்தாப் பேச்சு எதிர்காலத்தைப் பற்றி எண்ணி எண்ணி அஞ்சிக் கிடந்த பணக்காரர்களுக்குப் புதுத் தெம்பும், துணிவும் தந்துவிட்டது.

முதலாளித்துவ முறைக்கு இருந்து வரும் எதிர்ப்பு முறிந்திட வழி செய்கிறது.

ஏழையைச் சீமானிடம் பணிந்திடச் செய்கிறது.

தம்பி, இவைகளை அறிந்து திட்டமிட்டுக் காமராஜர் இந்தத் தர்மகர்த்தா முறை பற்றிப் பேசுகிறார் என்று நான் கூறவில்லை. தமது பேச்சு எதற்குப் பயன்படுத்தப்பட்டுவிடும் என்பதை உணர்ந்தறியாமல், - தித்திப்புப் பேச்சுப் பேசி வைப்போம், ஏழையின் உள்ளக் குமுறல் குறையட்டும் என்ற எண்ணத்தில் பேசுகிறார். தம்மீது வீசப்பட்டு வந்த பகைச் சொற்களும், எறியப்பட்ட எதிர்ப்புகளும் மாறி, மதிப்புமிக்க ஒரு பட்டப் பெயர் - தர்மகர்த்தா - என்ற பெயரல்லவா கிடைக்கிறது, இந்தப் பெருமையை நமக்கு அளித்தவர் காமராஜர் அல்லவா? அவரல்லவா நமக்கு உண்மை நண்பர்! அவர் வாழ்க! அவர் கூறிடும் தர்மகர்த்தா தத்துவம் வாழ்க! - என்று வாழ்த்துகின்றனர். “சோடசோபசாரம் செய்யவும் சொர்ணாபிஷேகம் செய்யவும்’ முனைகின்றனர்! திருடர்களுக்கு நடுநிசி உழைப்பாளர் என்று சிறப்புப் பெயர் கொடுத்திடுவார் உண்டா? இல்லையல்லவா? அப்படி யாரேனும் துணிந்து கூறிடின், கூறுபவர் பெருந்தலைவர் வரிசையினராகவுமிருப்பின்,”நடுநிசி உழைப்பாளிகள்’ திருவிழா அல்லவா கொண்டாடுவர்!

காமராஜர் நடத்தும் ஜனநாயக சோஷியலிச விழாவில், சீமான்கள் மகிழ்ச்சியுடன் கலந்துகொள்வதன் காரணம், தமக்கு மதிப்புமிக்க ஒரு பட்டத்தை - தருமகர்த்தா என்ற பட்டத்தைச் சூட்டினாரே, நம்மை எதிர்த்திடுவோரை அழைத்து, ஏமாளிகளே! இவர்களை யாரென்று எண்ணிக்கொண்டு எரிச்சல் கொள்ளுகிறீர்கள்? இவர்கள் தர்மகர்த்தாக்கள்! என்று கூறுவதன் மூலம், நமக்கு ஒரு எதிர்காலத்தை உறுதிப்படுத்தியிருக்கிறாரே! இவருக்கல்லவா விழா எடுக்க வேண்டும் என்று கருதுகின்றனர்.

ஆனால், அவர்களும் உண்மையைக் கண்டறிய முனையவில்லை. இந்த "தர்மகர்த்தா’ தத்துவம் சாஸ்திரமாக, காப்பியமாக, கதையாக, கவிதையாக, எப்படிப்பட்ட மாமேதைகளால் முன்பு தரப்பட்டது! எவ்வளவு சடுதியில், எளிதாக ஏழை மக்கள் அதனை மறந்துவிட்டார்கள்! முன்பு தத்துவம் பேசியவர்கள், இன்றைய காமராஜரைக் காட்டிலும் பெரியவர்களல்லவா? அவர்களில் அருளாளர்கள் இருந்தனர்; கவிவாணர்கள் இருந்தனர்; புலமை மிக்கோர் இருந்தனர்; புவி எங்கும் உள்ள நிலைமைகளைத் தெரிந்த அறிவாளர்கள் இருந்தனரே! அவர்கள் அன்று பேசினர் தருமகர்த்தா முறை பற்றி. பேசி? கேட்டனர், தலை அசைத்தனர்! ஆனால், மீண்டும் மீண்டுமல்லவா அறம் அழிந்துபட்டது, செல்வச் செருக்கு கொக்கரித்துக் கூத்தாடிற்று.

அகவலாகவும் வெண்பாவாகவும் அறுசீராகவும் பிற வகையினதாகவும், உரைநடையாகவும் உரையாடலாகவும் பேரறிவாளர்கள் எடுத்துக் கூறிவந்த தர்மகர்த்தா முறையினை - மிக எளிதான முறையில்,

அறம் செய விரும்பு

என்று நம் ஆன்றோர் சொல்லிவைக்கவில்லையா? அதனைத் திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டிருப்பதால் விளையப்போகும் பலன் என்ன?

செல்வவான்கள் தர்மகர்த்தாக்கள் என்ற பேச்சு, சமூகப் புரட்சி ஏற்படுத்தத் துணிவற்றவர்கள் நடத்திக் காட்டும் கண்ணாமூச்சி விளையாட்டு!

செல்வவான்களை தர்மகர்த்தாக்கள் என்று நாடாளும் பெரியவர்கள் கூறுவதைப் பயன்படுத்திக்கொண்டு முதலாளிகள் தங்கள் ஆதிக்கத்தைக் கெட்டிப்படுத்திக்கொள்வர்.

இன்று காங்கிரசின் துணைகொண்டு முதலாளிகள் அந்தக் காரியத்தைத்தான் நடத்திக்கொண்டுள்ளனர்.

பணம் சிலரிடம் குவிந்திருக்கும்போது அதனை தருமகர்த்தா முறை என்று பேசி, பூசி மெழுகுகிறார்கள். ஏராளமான நிலபுலன்களைத் தமதாக்கிக்கொண்டிருந்த ஜெமீன்தாரர்களை ஒழித்தபோது இந்தத் தர்மகர்த்தர் தத்துவம் எங்கே போய்விட்டிருந்தது?

ஐநூற்றுச் சொச்சம் சமஸ்தானாதிபதிகளின் பட்டத்தைத் தட்டிவிட்டபோது, இந்தத் தர்மகர்த்தா தத்துவம் ஏன் பதுங்கிக் கொண்டது?

செல்வவான்கள், தர்மவான்கள் என்றால் ராஜாக் களும் ஜெமீன்தாரர்களும், கடவுளின் பிரதிபிம்பங்கள் அல்லவா!! ஒப்புக்கொள்வார்களா?

பணக்காரர்கள் ஏழைகளுக்காகவே சொத்தைப் பயன்படுத்தும் தர்மகர்த்தாக்களாக உள்ளனர் என்ற தத்துவம், அரசன் ஆண்டவனின் பிரதிநிதி, மகாவிஷ்ணுவின் அவதாரம் என்ற தத்துவத்தோடு சேர்ந்து பிறந்ததாயிற்றே; அரசன் ஆண்டவனின்

பிரதிநிதி என்ற தத்துவம் தகர்க்கப்பட்டுப்போனது போலவே, சீமான்கள் தர்மகர்த்தாக்கள் என்ற தத்துவமும் தூளாகிப் போகாமல் தப்பித்துக்கொள்ள முடியுமா?

ஆனால் பலிக்கிற வரையில் பார்க்கலாம் என்ற முறையில் காமராஜர் இந்தத் தருமகர்த்தா முறை பற்றிப் பேசி வரலாம் என்று இருக்கிறார். இந்தத் தத்துவத்தில் முன்பு மக்களுக்கு இருந்துவந்த மயக்கம் இன்று பெருமளவு போய்விட்டிருக்கிறது. ஆகவே அவர்கள், காமராஜர், தருமகர்த்தா தத்துவம் பற்றிப் பேசிடக் கேட்டுக் கேலிப் புன்னகை செய்கின்றனர்.

பணக்கார ஆதிக்கத்தை ஏன் இன்னமும் விட்டுவைக்கிறீர்கள் என்று மக்கள் சீற்றத்துடன் கேட்கும்போது, அவர்களைச் சாந்தப்படுத்த காமராஜர்கள் இந்தத் தருமகர்த்தா தத்துவத்தைப் பேசிடலாம்.

பணக்காரர்களிடம் ஏழைகள் பகை உணர்ச்சி காட்டும்போது, அதிலிருந்து தப்பித்துக்கொள்ளப் பணக்காரர், இந்தத் தருமகர்த்தா தத்துவத்தைப் பயன்படுத்திட முனையலாம்.

ஆனால், இதே தருமகர்த்தா தத்துவத்தை எடுத்துக் காட்டி ஏழை, பணக்காரனை அவனிடம் உள்ள செல்வத்தை ஏழைக்கு இதம் செய்திடச் செலவிடும்படிக் கேட்க முடியுமா? கேட்டிடின், பணக்காரர்கள் தருமகர்த்தா தத்துவத்தின்படி நடந்துகொள்ள முன் வருவார்களா? வரமாட்டார்கள்! சீறுவர்! கொதித்தெழுவர்.

தருமகர்த்தா என்ற பட்டத்தை, தனவான், கனவான், சீமான்! என்ற பழைய பட்டங்களுடன் சேர்த்து இணைத்துக்கொள்ள மட்டுமே பணக்காரர்கள் இசைவார்கள். அந்தத்

தத்துவத்தின்படி, தன் சொத்து தனது சுகபோகத்துக்கு அல்ல, ஏழையின் நன்மைக்கு என்று கருதிச் செலவிட்டுக்கொண்டிருக்க மாட்டார்கள்.

காமராஜர் பேசிடும் தருமகர்த்தா தத்துவத்தை நம்பிக்கொண்டு ஏழையர், செல்வர்களை அணுகி, ஐயன்மீர்! உலவிடும் மாளிகையும் அதிலுள்ள பெருநிதியும், வயலும் வளமும் அணிவனவும் பெறுவனவும், உம்முடையதன்று; எமக்காக உம்மிடம் ஒப்படைத்த செல்வமேயாகும்; நீவிர் எமக்காக இறைவனால் தருமகர்த்தா ஆக்கப்பட்டவர். எனவே, எடும் செல்வத்தை, கொடும் ஏழையர் துயர் போக்க என்று கேட்டிடின் என்ன கிடைத்திடும்?

தடியடி
சிறை
துப்பாக்கிச் சூடு!

"கேட்பதும் கிடைப்பதும்' என்ற தலைப்புடன், சிங்கைத் தோழர் உலகநாதன் என்பார் தந்துள்ள கவிதையின் பகுதி, செல்வவானின் போக்கை நன்கு எடுத்துக் காட்டுகிறது என்பதனால் அதனைத் தருகிறேன்.

"வாழ்வில்லை வளமில்லை
வலிவில்லை செழிப்பில்லை
சூழ்தொல்லை சிறிதில்லை
சுகமில்லை நலமில்லை" என்றால்
மரமுண்டு கயிருண்டு
மரணத்தில் சுகமுண்டு
பிறகென்ன துயருண்டு?
பேசாதே போவென்று சொல்வார் - இவர்
கூசாமல் சாவென்று சொல்வார் - இங்கே
வாழ்வுக்கு வழி கேட்டால்
சாவுக்கு வழி காட்டிச் செல்வார்!

அவர்கள் கிடக்கட்டும் தம்பி! இரும்புப்

பெட்டிக்கும் இதயத்துக்கும் ஈஸ்வரன் சம்பந்தம் வைக்கவில்லையே அம்மா என்று உழவன் கூறுவதாக நான் "ஓர் இரவு’ என்ற கதையில் எடுத்துக் காட்டினேன், ஆண்டு பலவற்றுக்கு முன்பு. அவர்கள் அப்படித்தான் இருப்பார்கள். ஆனால் காமராஜருமா அப்படி இருக்க வேண்டும்?

வாழ்வுக்கு வழி கேட்டால், வகையற்ற பேச்சைத் தத்துவமாக்கியா தருவது?

இதென்ன புதிதா? மிக மிகப் பழையது! பலன் தருவதா? இல்லை! உபதேசக் குவியலுடன் சேர்த்து வைக்கத்தக்கது! அதைத்தான் தர முடிகிறது அவரால்! அதற்கு மட்டுமே அவருக்கு அனுமதி கிடைத்திருக்கிறது.

தம்பி! துவக்கத்தில் காட்டினேனே புலவர் கேள்வி, அதனை மறுபடியும் படித்துப் பார்!

ஒருவர்மீது ஒருவருக்குக் காரணமற்றுக் கோபம் வருகிறது அரசே! அதற்கு என்ன காரணம்? என்றல்லவா புலவர் கேட்டார். அதற்கு இதயம் படைத்த மன்னன் என்ன பதில் அளித்தான்? நிலைமையை உணர்ந்து, பரிசுப் பணம் கொடுத்துப் புலவரின் வறுமையைப் போக்கினான்.

போஜராஜன் காலத்தில் காமராஜர் இருந்திருந்து, போஜராஜனிடம் போய் நிற்காமல் அந்தப் புலவர் காமராஜரிடம் போய்க் கேட்டிருந்தால், பதில் என்ன கிடைத்திருக்கும்? கோபமா! உமக்கும் வருகிறது, உம் மனைவிக்கும் வருகிறது, உமது தாயாருக்கும் வருகிறதா? காரணமற்றுக் கோபம் வருகிறதா? சரி! சரி! அதற்கு என்ன சொல்லுகிறீர்கள் என்றா என்னைக் கேட்கிறீர்கள்? சரி! சரி! கூறுகிறேன் கேள் ஐயா புலவரே! ஆறுவது சினம்!! - என்ற இந்தப் பதிலைத்தானே தந்திருப்பார்!!

அன்புள்ள
அண்ணாதுரை
9-10-66

ஒளி படைத்த கண்ணினாய்!

வா! வா! வா!

தேர்தலும் அரசியல் கட்சியும் -
பிராங்கோவும் சட்டமும் -
க்யூபாவின் காஸ்ட்ரோ -
இந்திக்கு வங்காளிகள் எதிர்ப்பு

தம்பி!

வருகிறாயா, ஒரு திருமணக்காட்சி காண! அடே அப்பா! அண்ணனுக்கு எப்படித்தான் இந்த "மனம்' வந்தது, எப்போது பார்த்தாலும், பாடிவீடு வருகிறாயா, களம் வருகிறாயா, சிறைச்சாலைக்கு வருகிறாயா, வழக்குமன்றம் வருகிறாயா என்று அழைப்பு விடுத்தவண்ணம் இருப்பவராயிற்றே, அப்படிப்பட்ட கல்மனக்கார அண்ணன், இவ்வளவு கனிவுடன் திருமண வீட்டுக்கு அழைக்கிறாரே வியப்பான நிகழ்ச்சிதான் என்றுதானே எண்ணிக்கொள்கிறாய். திடுக்கிட்டுப் போய்விடாதே, தம்பி! திருமண வீட்டுக்கு உன்னை அழைப்பது, களித்திட, சுவைத்திட அல்ல; கருத்துக் கண்டு பெறத்தான்.

திருமணத்தன்று, மணமக்கள் இருவரும் வேண்டுமானால், எழில் தரும் ஆடை அணி அதிகமின்றிக்கூட இருக்கலாம் - அன்றுதான்

அவர்களை எழிலுருவாக்கிடும் இன்ப நினைவு பெருக்கெடுத்து, புது மெருகு கொடுத்திருக்குமே - செயற்கைஅழகு தேடிக் கொள்வானேன். பெற்றோர் - உற்றார் - உறவினர் - உடனிருக்க வந்தோர் இவர்கள், மகிழ்ச்சி தரும் நாளன்று, புதிய கோலம் புனைந்துகொள்ளத் தவறமாட்டார்கள்! நானே, கண்டு கேட்டுவிட்டும் வந்தேன்; தன் அருமைத் திருக்குமாரிக்குத் திருமணம் நடத்தினார், திருவண்ணாமலை சண்முகம். அடே! அப்பா! பட்டுப்பட்டாடை! சரிகை வேட்டி! புத்தம் புதிய சட்டை! மாப்பிள்ளைக் கோலம்! யார்? மாமனார்!! நம்ம சண்முகம்!! சரி! இதோ, பார் திருமணக் காட்சியை.

"வாங்க! வாங்க! இதோ, இப்படி! இங்கு வந்து, குழந்தைகளை ஆசீர்வாதம் செய்யுங்க' - என்று குழையக் குழைய அழைக்கிறாரே, அவர்தான் மாமனார்!

இருக்கட்டும்! இருக்கட்டும்! என்று கூறியபடி, புகைக்குப் பயந்துகொண்டு, சற்று தொலைவிலேயே உட்காருகிறாரே, அவர், வருமானவரி அலுவலகத்திலே மிகுந்த செல்வாக்குப் படைத்தவர். திருமண நாளிலும், "வியாபார தோரணை' இல்லாமலா, போகும்! அதுதான், உபசாரமாக வடிவெடுத்திருக்கிறது.

பலர் வரவேற்கப்படுகிறார்கள்; மன்றத்திலே முன்னிடம் பெறுகிறார்கள். அதோ பார், ஒரு முதியவர், தள்ளாடியபடி தவிக்கிறார் - வழி கிடைக்காமல், இடம் தேடிக்கொண்டு. திருமண வீட்டுக்குப் போகிறோம், நாலுபேர் வருகிற இடம், பச்சென்று வருகிறவர்களெல்லாம் வருவார்கள், அந்த இடத்துக்கு நான் மட்டும் பக்கிரிபோலப் போகலாமா - "திருஷ்டி பரிகாரம்' போல! - என்ற நினைப்பு அந்த முதியவருக்கு.

வேட்டி வெண்ணிறமாக இருக்கிறது - ஆனால் தம்பி அதற்காக அவர், அதை ஒரு நாள் முன்னதாகவே தோள் வளடுக்குமள வு துவைத்து, அழுக்குப் போக்கி, உலர்த்தி "பெட்டி' போட்டு, பாதுகாத்து, உடுத்திக் கொண்டார். நாட்டு வேட்டி - சரிகையுமில்லை, கரையின் சாயம்கூடக் கலைந்துபோயிருக்கிறது. என்றாலும், உள்ளதை நல்லதாக்கி உடுத்திக்கொண்டு வந்திருக்கிறார்.

அதோ, "தங்கப்பல்' தனவானைப் பார்! சந்தனம் கீழே சிந்திவிட்டதைக் கவனிக்காமல் உட்கார்ந்து விட்டார் - இருபது ரூபாய்க்குமேல் விலை உள்ள வேட்டி - கறைபட்டு விட்டது. திருமண வீட்டுப் பெரியவர், பரிதாபம் காட்டுகிறார் - அவர் அலட்சியமாகப் பரவாயில்லை' - என்று கூறுகிறார். ஆமாம்,அவருக்கு அது பரவாயில்லை! ஆனால், தம்பி! முதியவர் முகத்தைப் பார்த்தாயா, அச்சம்! எங்கே, தன் வெண்ணிற வேட்டி கெட்டுவிடுகிறதோ என்ற பயம். உள்ளதில், நல்லது அது. அதுவும் கெட்டுவிட்டால், என்ன செய்வது என்ற கவலை அவருக்கு.

மேலே கவனித்தாயா, சரிகை வேட்டி! மடிப்புக் கலையாமல்! அழகாக இருக்கிறதல்லவா!

பார்த்து விட்டார், திருமணவீட்டுப் பெரியவர், முதியவரை. ஒரு மகிழ்ச்சியற்ற சிரிப்பு!

"வாய்யா, வாய்யா, வரதப்பமொதலி! வா! வா! எங்கே, நீ வராமலிருந்து விடுகிறாயோன்னு பார்த்தேன்'' - என்கிறார்.

பெருமைப்படுத்திப் பேசுகிறாரா, கேலி செய்கிறாரா, அல்லது வேற்றுமையா என்று புரிந்துகொள்ள முடியவில்லை.

அருகே செல்கிறார், பார்! கழுத்திலே

போட்டிருக்கும், சரிகை வேட்டியைத் தொட்டிழுக்கிறார், கவனித்தாயா! “சரிகை வேட்டியா! பலே! பலே! கடுகு சிறுத்தாலும் காரம் போகுமா! வரதப்பமொதலி, வாங்கின கடனைக் கொடுக்க முடியாமல், திண்டாடினாலும் திண்டாடுவாரே தவிர, இந்தச் சரிகை வேட்டி போடுவதை மட்டும் மறக்கவே மாட்டார்!” - என்று கூறியபடி, முதுகிலே ஒரு தட்டுத்தட்டி, ஒரு மூலையைக் காட்டுகிறார் போய், உட்காரச் சொல்லி. இதைக் கண்டுதான் தம்பி! அதோ அந்த வைரக் கடுக்கன், பச்சைக்கல் மோதிரம் இவர்களெல்லாம் இடி இடி என்று சிரிக்கிறார்கள் தெரிகிறதல்லவா, தம்பி! வந்தவர், கேலிப் பொருளாகிறார்! அவர் செய்து கொண்டிருக்கும் அலங்காரமே, கனவான்கள்”கிண்டல்’ செய்து மகிழ, வழி செய்கிறது. துல்லியமாக உடுத்திக்கொண்டு போவதுதான் முறை - இடம் அப்படிப்பட்டது - நேரமும் அதுபோல் - என்று எண்ணிக்கொண்டு அதற்காகவே முயற்சி எடுத்துக்கொண்டு, நாலுபேர் வருகிற இடத்துக்கு, நல்லபடி உடுத்திக்கொண்டு, போகவேண்டுமே என்றுதான், வரதப்பர், இவ்விதம் வந்தார்! ஆனால், பார்த்தாயல்லவா, அவரைக் கேலி செய்கிறார்கள். ஏன்? வரதப்பர் வாழ்ந்து கெட்டவர்!!

வாழ்ந்து கெட்டவர்கள், தமது நிலைமை வெளியே தெரியாதபடி, மூடி மறைத்தாலும், பூசி மெழுகினாலும் மற்றவர் கண்களுக்கு, உண்மை நிலைமை பளிச்செனத் தெரிந்துவிடும். உடையை, நிலைமையை மாற்றிக் காட்டும் வகையிலே அணிந்துகொள்ளலாம் - ஆனால் உடை உண்மை நிலைமையையா, மூடிடும், உடலை மட்டுந்தானே!

எனக்கு இங்கு இருக்கப் பிடிக்கவில்லை, அண்ணா! இளைத்தவர்களை இறுமாப்பாளர்கள் ஏளனம் பேசி, இழிவாக நடத்தும்போது, என்னால் கண்டு தாங்கிக்கொள்ள முடிவதில்லை. நினைப்பு எப்படி எப்படியோ மாறுகிறது. இந்த முதியவர்,

வறுமையால் வாடிடலாம் - அதற்காக மனிதத் தன்மையற்றா, இந்த மமதைக்காரர் நடந்துகொள்வது? வாழ்ந்துகெட்டவர், சரி! அதனால்? கேலி செய்வதா? கேவலமாக நடத்துவதா, இதுதான் முறையா? இதைக் காண, என்னை வேறு அழைத்து வந்தாயே! - என்றெல்லாம் கேட்கத் தோன்றுகிறது, உனக்கு. தம்பியின் உள்ளம் அறியாதவனா, நான். கோபமாகத்தான் இருக்கும். சரி! காணவேண்டியதைக் கண்டாகி விட்டது, இனி நமக்கு இங்கென்ன, வேலை? வா, தம்பி, போகலாம்.

வருத்தமாக இருக்கிறதல்லவா! கோபம் குறையவில்லை அல்லவா! நினைக்க நினைக்க ஆத்திரம் பீறிட்டுக்கொண்டு வருகிறதல்லவா! ஆமாம், அப்படித்தான் இருக்கும். நான் பட்டிருக்கிறேன், அந்த வேதனையை, பல முறை!

ஆனால், தம்பி! வாழ்ந்துகெட்டவருக்குக் கிடைப்பது இதுதான்; திருமண வீட்டில் மட்டும் என்று எண்ணாதே; எங்கும்; எப்போதும்.

வாழ்ந்துகெட்ட வரதப்பர், கால் வீக்கத்தால் நடக்க முடியாமல் வண்டியிலே போகிறார் என்றால், கேலியாகத்தான் பார்க்கிறார்கள்!

"குதிரை வண்டியிலே போகிறாரே. வரதப்பமொதலி!' - என்பார், ஒருவர்.

குதிரை வண்டியிலா? வரதப்பனா - என்று திரும்பத் திரும்பக் கேட்பார், இன்னொருவர்.

வண்டிக்காரன் தெரிந்தவனாக இருப்பான் - காசு கேட்டிருக்க மாட்டான் - என்று கேலி செய்வார் வேறொருவர்.

மூவரும் சிரிப்பார்கள்! வாழ்ந்துகெட்டவர்கள், இருப்பது போனதால் ஏற்பட்ட வருத்தத்தை மட்டுமல்ல, இப்படிப்பட்ட கேலி கிண்டலையும்

சுமந்து தீரவேண்டி இருக்கிறது.

வாழ்ந்து கெட்டவர்களுக்கு மட்டுமல்ல, அப்படிப்பட்ட இடங்கள், இனங்கள், நாடுகள், எல்லாவற்றுக்குமே, இந்தக் கதிதான், என்ன செய்வது?

பத்து பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு, நான் செஞ்சிக் கோட்டை சென்றேன் - தேசிங்கு ராஜனின் வீரத்தை எண்ணி வியப்புற்றவண்ணம், கோட்டை உட்புறம் நடந்தேன் - நிழலுக்காகப் படுத்து உறங்கிக் கொண்டிருந்த நாய் ஒலி கேட்டு விரண்டு, ஓடிற்று. நாய், தம்பி! சொறிபிடித்த நாய்! எனக்கு, உள்ளபடி துக்கம் துளைத்தது. செஞ்சிக் கோட்டையிலே, தேசிங்கு மன்னன் கோலோச்சிக்கொண்டிருந்த நாட்களில், “பாராசாரியும்’”நீலவேணியும்’ அல்லவா அங்கு உலவி இருக்கும் - கவிதைப் புகழ்பெற்ற அந்தப் புரவிகள் கெம்பீரநடை போட்ட இடத்தில், சொறி நாயல்லவா ஓடிற்று.

மனிதர்களைத் தள்ளு, தம்பி! அந்தக் கோட்டைக்கு வந்த "கதி’யை பார்த்தாயா? வாழ்ந்துகெட்டால், இதுதான் நிலைமை வாழ்ந்து கெட்டவர்கள் மீண்டும் வாழ வழிகாண வேண்டும் இல்லை மாண்டொழிய வேண்டும்; இல்லையெனில், உலகிலே சிறுகச்சிறுக மானம் அழிந்து, உள்ளம் நொந்து, உருக்குலைந்து போக நேரிடும்!

தனி மனிதரானால், வாழ்ந்து கெட்ட நிலையால் ஏற்படும் இழிவைத் தாங்கிக்கொள்ள முடியாமல், தனக்கு நிரம்பத் தெரிந்தவர்கள் இருக்கும் இடத்தை விட்டு, அவர்கள் “கண்காணா’ இடம் சென்று காலத்தை ஓட்டுவர். ஒரு நாள், தம்பி! திருக்கழுக்குன்றம் சென்றேன்; குளத்திலே குளித்துவிட்டுத், தங்குமிடம் திரும்பினேன், நண்பர்களோடு. கடைவீதிப் பக்கம் வருவோர் போவோரிடம் பிச்சை கேட்டுக்கொண்டு,

அலங்கோலமான நிலையில் ஒரு மாது இருந்திடக் கண்டேன். பத்தாண்டுச்"சுயராஜ்யம்' இந்த இலட்சணத்தில் இருக்கிறது என்று எண்ணிக்கொண்டேன் அந்த மாது, என்னை மிரள மிரளப் பார்த்துவிட்டு, சரேலென நழுவி, வேறு பக்கமாக ஓட்டம் பெருநடையாகச் சென்றிடக் கண்டேன். திகைத்துப் போனேன். நம்மைக் கண்டதும் அந்த மாது முகத்திலே மிரட்சி! நான் காணக்கூடாது என்பதுபோல ஓடி மறைகிறார்களே, என்ன காரணம்? என்று ஒரே குழப்பம் எனக்கு - ஒரு கணம் - பிறகோ, தம்பி! என் கண்களில் நீர் துளிர்த்தது. என்னைக் காணக் கூடாது என்று ஓடி மறைந்த மாது, எனக்குத் தெரிந்தவர், வாழ்ந்து கெட்டவர் - பிச்சை எடுத்திடவேண்டியநிலை பெற்றதை நான் காணக்கூடாது என்று, பீதிகொண்டு, ஓடி மறைந்திருக்கிறார்கள், பாபம், ஆணாக இருந்தாலாவது, காவிகட்டிக்கொண்டு "அண்ணாமலைக்கு அரோகரா' கூறிக்கொண்டு, பிச்சை அல்ல எடுப்பது, சம்சார பந்தத்தை அறுத்துக் கொண்டேன் என்று பேசி இருக்க முடியும் - மாது - என்ன பேச முடியும். ஓரளவு நிம்மதியாக வாழ்ந்தவர்கள் - அதைக் கண்டவன் நான். வாழ்ந்து கெட்ட அந்த மாது, பிச்சை எடுத்துக்கொண்டிருப்பதை நான் காண்பது என்றால், அதைவிடக் கொடுமையான காட்சி வேறென்ன இருக்க முடியும்! எனக்கு அந்தக் கஷ்டம் வரக்கூடாது என்றுதான், அந்த மாது, ஓடி மறைந்திருக்க வேண்டும். மறைந்த மாது, மற்றவருக்குப் பிச்சை போட்டதைக் கண்ட கண்களால் அவர்கள் பிச்சை எடுப்பதைக் காண்பதென்றால், எத்துணை வேதனை ஏற்படும். தம்பி! விளக்கவா முடியும்?

வாழ்ந்துகெட்ட வரதப்பன், மறைந்து அலையும் மாது இடிபாடான கோட்டை - இவை நான் காண்பனவாக மட்டு மின்றி, நம்மோடு தொடர்பு

கொண்டனவாக இருந்திடின், வேதனை எத்துணை கொடுமையுள்ளதாகிடும்.

சுவர் இருந்த இடத்திலே, ஓலை வைத்து மறைத்திருக்கும் இடிந்த வீடுகளைப் பார்த்திருக்கிறோம்.

ஓட்டையான பாண்டத்தில், எதையோ ஒட்டிவைத்து, உபயோகப்படுத்துவதைப் பார்த்திருக்கிறோம்.

இவ்வளவுக்குப் போவானேன், தருமமிகு சென்னையில், நித்தம் காணலாமே, கன்றாகத் துள்ளிக் கொண்டிருந்ததை, கைக்கு அடக்கமான தோல் பொம்மையாக்கி, பசுவிடம் காட்டிப் பாலைக் கறந்தளிக்கும் காட்சியினை.

இவைகள், ஒன்றுகூட இப்போது, நம் கண்முன் - மனக்கண் முன் - நின்று நைந்துருக வைத்திடும் காட்சிக்கு ஈடாகாது, வெட்கம், துக்கம் தருவதிலே.

வாழ்ந்துகெட்ட வரதப்பன், திருமண வீட்டுக்கு வந்தானல்லவா, சரிகை வேட்டியுடன் - கேலி மொழி கேட்டிட - தம்பி! தமிழ்த்தாய் காலில் சிலம்பு ஒலிக்க, மேகலை மின்னிட, மணி ஆரத்துடன், உலகம் காண நிற்கிறாள் - ஆனால் நெற்றியில் பொட்டு இல்லை, கூந்தலில் நெய் இல்லை, கண்களிலே நீர் கசிகிறது; காலிலே தளைகள்!! ஆமடா, தம்பி, ஆம்! வாழ்ந்துகெட்ட நிலையில்தான், தமிழ்த்தாய் இருந்திடக் காண்கிறோம்.

வாழ்ந்துகெட்ட வரதப்பனை மண்டைக் கனம் கொண்டவன் கேலி பேசியபோது, வரதப்பனின் மகன், அங்கு இருந்திருந்தால்? மணவீடாகவா இருக்கும்! பெருத்த அமளி மூண்டுவிடாதோ?

மறைந்தோடிய மாதை, அவன் பேரப்பிள்ளை தற்செயலாகக் காண நேரிட்டால், கசிந்து, கண்ணீர்

மல்கி நான் இருக்கும்போது உனக்கேன் இந்தக் கதி? என்று கேட்டுக் காலடி வீழ்ந்து, கல் உடைப்பேன், குப்பை கூட்டுவேன், மாடு போல் உழைப்பேன், எப்பாடுபட்டேனும், உன்னைக் காப்பாற்றுவேன், பாட்டி! உன்னை இந்தக் கோலத்திலா, நான் காண வேண்டும்.

வா, என்னுடன் என்று அழைத்துக்கொண்டு போவானல்லவா?

செஞ்சி, தேசிங்கு மன்னன் வழிவழி வந்தவர்களுக்கு என்று ஆகி, அந்தக் குடும்பத்தினன் ஒருவன், சொறி நாய் கோட்டையில் உலவக் கண்டால், வாளா இருப்பானா?

ஆனால், தம்பி! நாம், நீயும் நானும், நம்மைப்போல உள்ள மூன்றுகோடி தமிழர்களும், தமிழ்த்தாய் தலைவிரிகோலமாகி, தளைகள் பூட்டப்பட்டிருப்பதைக் காண்கிறோம். தளைகளும் உடைபடவில்லை, நமது உடலிலும் உயிர் இருந்துகொண்டிருக் கிறது. வாழ்கிறோம் தமிழர் என்ற பெயரையும் சூட்டிக் கொண்டு!!

வாங்கின கடனைக் கொடுக்க வக்கு இல்லாவிட்டாலும், சரிகை வேட்டிக்குக் குறைவில்லை! என்று வரதப்பனைக் கேபேசி, மூலையைக் காட்டி உட்காரச் சொன்னானே, திருமண வீட்டில். அதுபோலத்தான், உலக அரங்கிலே, உரிமையுடன் அதனால் உவகையுடன் அரசோச்சி வாழ்கிறார்களே, அவர்களெல்லாம், தமிழ் அன்னை பூண்டிருக்கும் அணிபணி கண்டு கேலி பேசுகிறார்கள் - திருக்குறள் என்றோர் அறநூல், உலகிலே வேறு எங்கும் இல்லை அதற்கு ஈடு! சிலப்பதிகாரம், சுவைமிகு காவியம்! அதிலே முத்தமிழ் ஒளி விடுகிறது! - என்று, வரதப்பன் போட்டிருக்கும் சரிகை வேட்டிபற்றிப் பேசியது போலப் பேசிவிட்டு, அவனை மூலையில் உட்காரச்

சொன்னது போல, தமிழ்த் தாயை, அடிமைச் சாவடியில் தள்ளி வைத்திருக்கிறார்கள், அவனியோர் - அவள் ஈன்றெடுத்த அருமருந்தன்ன மக்கள், மூன்று கோடி! குன்றெடுக்கும் நெடுந்தோளும், கொடை கொடுக்கும் கரமும் கொண்டோராக இருக்கலாம் - இருக்கிறார்கள். செந்தமிழ் பயின்ற வாயினர் - ஆம்! அதிலே குறைவு இல்லை. ஆனால், தாயின் தாளிலேபூட்டப்பட்டுள்ள தளைகளை நொறுக்கிடத் துணிகின்றனரோ? அதுதான் இல்லை!

காஞ்சிபுரம் குண்டஞ்சி! வெள்ளிச் சரிகை, கருக்காது! நூறாம் நம்பர் மிக நேர்த்தியானது - என்று வரதப்பன், தன் சரிகை வேட்டிபற்றிப் பெருமை பேசுகிறான் என்று வைத்துக் கொள், தம்பி! அதைக் கேட்பவர்கள், ஆமாம்! என்று கூறி, அந்தச் சரிகை வேட்டியைப் போட்டுக்கொண்டிருப்பதற்காகப் பாராட்டவா செய்வார்கள்?

சரிகை வேட்டியின் பெருமை போதுமய்யா, மறைக்காமல் சொல், நேற்றிரவு, பட்டினிதானே? உண்மையைச் சொல்! வட்டித் தொகை கட்டாததற்காகக் கடன்காரன், வீடு புகுந்து பெட்டியையும் தட்டுமுட்டுச் சாமான்களையும் எடுத்துக் கொண்டு போனானாமே, உண்மைதானே! வேறு வேலை கிடைக்காததால், விறகுக் கடையிலே எடுபிடியாக இருக்கிறாய் - மறுக்க முடியுமா? - என்றெல்லாமல்லவா கேட்பார்கள். அதுபோலத்தான் தம்பி! தாழ்நிலை பெற்று, தருக்கரின் பிடியில் சிக்கி, கட்டுண்டு கிடக்கும் தமிழகத்தின் தனிச் சிறப்புகள் எனப்படும், அகம், புறம், குறள் போன்றவைபற்றி, பெருமிதத் துடன் கூறிடும்போது, உலக அரங்கிலே, கேட்கிறார்கள்.

அத்தகைய தமிழகம் இந்தியப் பேரரசில் பெற்றிருப்பது அடிமை நிலைதானே?

அவ்வளவு இலக்கிய வளம் இருந்தும், தமிழ் தாழ்நிலைதானே பெற்றிருக்கிறது?

முன்னாள் கொடிகட்டி வாழ்ந்த தமிழர், இன்று கூலிகளாகித் தானே உழல்கிறார்கள்?

எல்லா வளமும் கொண்டது தமிழ் என்கிறீர்கள்; உங்களுக்கும் ஆட்சிமொழி இந்திதானே?

என்றெல்லாம் கேட்கிறார்கள். வாழ்ந்து கெட்ட வரதப்பனைக் கண்டே, துக்கம் துளைத்ததே, இந்தக் காட்சியைக் காணும்போது, வேதனை எத்துணை வேகமாகத் தாக்கும். நாம் அதனால் தத்தளிக்கிறோம் - ஆனால் வேறு சிலர் இருக்கிறார்களே, இதுபற்றிய நினைப்புமற்று - அந்தக் கொடிய குற்றம் இழைப்போர்களை, தாய்த் திருநாட்டுக்காக வரிந்து கட்டிக்கொண்டு பரிந்து போராட முன்வராதவர்களை, போரிடுவோரை முதுகில் குத்தவும் துணிந்திடும் ஈனர்களை -இழி தன்மைமிக்க குற்றம் செய்து, கொழுத்து வாழ்ந்திடும் போக்கினரை, யார், கூண்டிலேற்றி, விசாரணை நடத்தித் தண்டனை தரப்போகிறார்கள்! என்னைப் பிடித்திழுத்து நிறுத்துகிறார்கள், வழக்கு மன்றத்தில்!! ஓராண்டுச் சிறையாம்! ஆயிரம் ரூபாய் அபராதமும் உண்டாம்!! துரைத்தனத்தார் நடமாடவிட்ட அவசரச்சட்டம், வேலைசெய்கிறது!! போகட்டும், இவ்வளவு பெரிய வேலை நிறுத்தம் நடைபெற்றதே, அதனால் நேரு சர்க்காருக்கு ஏற்பட்ட மானக்குறைவும், அது மூட்டிவிட்ட மன எரிச்சலும், என்னை ஓராண்டு உள்ளே தள்ளிவைப்பதனால், ஓரளவுக்குக் குறையும் என்றால், நான், மகிழத்தானே வேண்டும். அவ்வளவு பெரிய மனிதருக்கு, என்னால் இந்த அளவுக்காகிலும் "உபகாரம்’ செய்ய முடிகிறதல்லவா! அதுவும் நல்லதே - மகிழத்தக்கதே, நானும் அந்த மகிழ்ச்சியுடனேதான், வழக்குமன்றம் சென்றேன், - மீண்டும் செல்வேன்.

தம்பி! அண்ணன் உள்ளேபோய் உட்கார்ந்து

விட்டால், கிழமைதோறும் வரும் கடிதம் வாராதோ என்று எண்ணி இப்போதே மனம் குழம்பாதே! உன் நிலை என்ன ஆகிறதோ, விரைவில், யார் கண்டார்கள்? உன்னை மட்டும், வெளியே உலவவிட்டு வேடிக்கை பார்ப்பார்களா!! அப்படி வெளியே இருப்பதானாலும் - இருக்கும் வரையிலும் - என் கருத்துரைகள் கிழமை தோறும் கிடைக்க, ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறேன் - வெளியே இருக்கும் வாய்ப்பிலே பெருமளவு, உனக்காக எழுதி அடிகளிடம் சேர்ப்பித்துவிட்டுச் செல்லவே; - ஆகவே அந்தக் கவலை வேண்டாம்.

உனக்கும் எனக்கும் இருக்கவேண்டிய கவலை எல்லாம் என்ன வழக்குத் தொடுக்கிறார்கள், தண்டனை எவ்வளவு கடுமையாகத் தருகிறார்கள் என்பதுபற்றி ஏன் இருக்கப்போகிறது - நாம் கவலைப்படவேண்டியதெல்லாம், நாம் ஈடுபட்டிருக்கும் காரியம் நியாயமானதுதானா, கொண்டுள்ள கொள்கை ஏற்புடையதா என்பதுபற்றித்தான், பெறநினைக்கும் பொருளுக்குத் தக்க விலை கொடுக்க எவர் தயங்குவர்; தயங்கிடின் தரணி இந்த அளவு செழித்திருக்கத்தான் முடியுமா?

ஆதிக்கக்காரனெல்லாம் கோலாகல வாழ்வு நடத்துகிறான் - சுவைமிகு வாழ்க்கை - ஆளப்பிறந்தவன், கட்டுண்டு கிடக் கிறான். உல்லாசபுரியிலே உலவி, மாளிகையிலே மகிழ்ந் திருக்கிறான், ஆதிக்கம் செலுத்துவோம். அவனை நத்திப் பிழைத்திடும் நாட்டுப்பற்று அற்றதுகளும், அவன் வீசியதைவிலாப் புடைக்கத்தின்று, அதுவும் வாழ்க்கை என்று பெருமைப் பட்டுக்கொள்கின்றன. ஆனால் நாட்டுமக்களின் வாட்டம் போக்கிடப் பணியாற்றியவன், அடிமைகளாகிக் கிடந்த மக்களை ஆண்மையாளராக்கியவன், உரிமைக் குரலெழுப்பி ஊமைகளையும், என் நாடு, என் அரசு என்று பேசவைத்தவன், நாட்டுக்கு உழைப்பதன்றி

நமக்கு வேறு வேலை இல்லை என்று கூறி, தன்னைத்தானே அந்தத் திருப்பணிக்கு ஈடுபடுத்திக் கொண்டவன், கொடுமை பலவற்றைத் தாக்கிக் கொண்டவன், மனம் குலையா மாவீரன், இன்று பாலைவனப் பகுதியில், பட்டியொன்றிலே, சிறைப்பட்டுக் கிடக்கிறான்; ஆண்டுபல ஆகின்றன; அவன் மூட்டிய விடுதலைக் கனல் பெருந்தீ ஆகிவிட்டது; நாட்டுமக்கள் ஆர்த்தெழுந்து அவன் ஆணைக்கு எதிர் நோக்கி நிற்கிறார்கள், அவனோ, நாட்டைவிட்டுக் கடத்தப்பட்டு, உரிமைகள் பறிக்கபட்டு, "கைதி' என்ற நிலையில் உழல்கிறான். உண்ணலாம், உலவலாம், உறங்கலாம், இதழ் படிக்கலாம், கடிதம் எழுதலாம், ஆனால் தாயகம் வரக்கூடாது! தம்பி! கெனியா நாட்டு மக்கள், கண்கண்ட கடவுள் என்று போற்றிக்கொண்டாடும், விடுதலை வீரன், ஜோமோ கெனியாடாவைப் பற்றிக் கூறினேன், அத்தகைய கஷ்ட நஷ்டங்களைத் தாயகத்துக்காக ஏற்றுக்கொள்ளும் துணிவு, நமது கொள்கையிலே நமக்கு ஏற்பட்டுள்ள தூய்மைமிகு பற்றுதல் ஏற்படுத்திவைத்திருக்கிறது.

உலகிலுள்ள பல்வேறு நாடுகளும், எந்த அமெரிக்கப் பேரரசிடம் கெஞ்சி நிற்கின்றனவோ, அந்தக் “குபேரபுரி’யைக், கொள்கை வீரம் கொழுந்துவிட்டெரியும் செஞ்சினன் ஒருவன் துச்சமாக மதித்துப் பேசி வருகிறான்! ஏழை நாடு! இன்னும் சரியாக எழுந்து நிற்கக்கூடிய வலிவுகிடைக்காத நிலையில் உள்ள நாடு! எனினும், அந்நாட்டுத் தலைவன்,”என் நாட்டை அடிமைப் படுத்த எண்ணும் நாடு, எத்துணை பெரிதாக இருப்பினும் எனக்கென்ன? அங்கு தங்க ஓடுகள் வேயப்பட்ட மாடமாளிகைகள் இருக்கலாம், சீமான்கள் பவழம் பதிக்கப்பட்ட கோப்பையிலே பழரசம் ஊற்றி, வைரம் ஜொலிக்கும் உடலினள் மின்னிடும் கண்ணினாள், இடை துவள நடையழகு காட்டிவந்து கொடுக்கலாம். மலைமலையாகப்

பண்டங்கள் இருக்கலாம் பாளம் பாளமாகத் தங்கம் இருக்கலாம். என்ன இருந்தால் என்ன? என் நாட்டில் உரிமைக்கு ஈடோ, அவை? என்ற நினைப்பால் உந்தப்பட்டு, எதிர்த்து நிற்கிறான், எடுத்தேன் கவிழ்த்தேன் என்றுகூடப் பேசுகிறான்.

என் நாட்டுச் சர்க்கரை வாங்குவதைக் கொஞ்சம் கொஞ்சமாக, அமெரிக்கா குறைத்துக்கொண்டு வம்புக்கு நின்றால், என் நாட்டிலுள்ள, அவர்களுக்குச் சொந்தமான சர்க்கரை ஆலைகளை ஒவ்வொன்றாகக் கைப்பற்றிக்கொண்டு விடுவேன்!

அவர்கள் இங்கு தொழிலில் போட்டிருக்கும் மூலத்தனத் தைப் பறிமுதல் செய்து செய்து, கடைசியில் அவர்களுக்கு ஒரு காசும் மிச்சமில்லாதபடி செய்துவிடுவேன்.

வணிகத் துறையில் வஞ்சகத் திட்டத்தைப் புகுத்தி, என் நாட்டுப் பொருளை வாங்காமல் முடக்கிப், பணத்தட்டு ஏற்படச் செய்து, எங்களை பட்டினிபோட்டுப் பணியவைக்கலாம் என்று சூது நிரம்பிய அமெரிக்க நாடு கருதினால், அமெரிக்க நாட்டுப் போர்வீரர்களின் கால் செருப்பிலே அடித்திருக்கும் ஆணிகூட அவர்களுக்குக் கிடைக்க முடியாதபடி செய்துவிடுவேன்!

உலகையே அழித்திடக்கூடிய அணுகுண்டுகளைக் குவித்து வைத்திருக்கிறது அமெரிக்கா - கால் செருப்பாணிகூட மிஞ்சாதபடி செய்துவிடுவேன் என்று பேசுகிறான், அளவில், அரசிடம் செல்வாக்கில், பொருளாதாரத் துறையில், குறைந்த நிலையில் உள்ள, க்யூபா நாட்டுத் தலைவன், காஸ்ட்ரோ.

வீரம் நிரம்ப இருக்கிறது - அளவுக்கு அதிகமாகவேகூட - ஆனால் விவேகம் அல்லவே. இப்படிப் பொறிபறக்கப் பேசுவது, என்று

தொல்லைகளால் தாக்கப்படாமல் தொலைவிலே உள்ள பார்வையாளர்கள், அறிவுரை கூறலாம். ஆனால், அல்லலை அனுபவித்துக்கொண்டிருப்பவன், அந்த நாட்டுத் தலைவன் - அவன் மனக்கொதிப்புக்கான காரணத்தை, அவனன்றி வேறு யார், உணர முடியும்!

இன்று, காஸ்ட்ரோ கனல் கக்குகிறானே! என்று கடிந்துரைக்கப் பலர் உளர்; ஆனால், அவன் க்யூபா நாட்டைக் கெடுத்தழித்துக் கொண்டிருந்த ஆட்சியை ஒழிக்கக் கடும் போர் நடாத்திய காலை, அவனைச் சூழ்ந்துகொண்டிருந்த ஆபத்தை, யார் அப்போது அறிந்து ஆறுதல் கூற முன்வந்தனர்? வாலிபப் பருவம்! வழக்கறிஞர் தொழில்! காஸ்ட்ரோ "கனவானாகி' விட வழிபல இருந்தன. ஆனால் அவன், காட்டுப் பாதையிலே சென்றான், நாட்டைக் காக்க! தன் இளவலுடன், துணைவர்கள் சிலருடன். காஸ்ட்ரோ புரட்சிக் கொடியை உயர்த்தியபோது, வேட்டை நாய்களால் விரட்டப்படும் மானினம் போன்றதல்லவாநிலைமை! சிக்கினால், சித்திரவதை! பிடிபட்டான், சிறைப்பட்டான் - 15 ஆண்டுகள் சிறை!! ஆமாம், தம்பி, பதினைந்து ஆண்டுகள்! ஆணவ அரசு அவ்வளவு காலம், தன் ஆதிக்கம் இருக்குமென்று எண்ணி மனப்பால் குடித்தது. ஆனால், இடையிலேயே ஆட்சி கலகலத்துப் போயிற்று. அடித்தளத்தில் ஏற்பட்டுவிட்ட அழிவு கண்ணுக்குத் தெரியாததால், ஆட்சியாளர், போனால் போகட்டும், போட்டடைத்து வைப்பானேன் இந்தப் போக்கத்ததுகளை; திறந்து வெளியே துரத்துங்கள், எதையோ தேடித் தின்று பிழைத்துப் போகட்டும், என்று இறுமாப்புடன் எண்ணிக்கொண்டு, காஸ்ட்ரோவை விடுதலை செய்தனர். வெளியே வந்த வீரன், பட்டது போதும், இனிப் பட முடியாது துயரம் என்றல்ல, பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகல்லவா, தாயகத்துக்குப் பணிபுரிய முடியும் என்று எண்ணி, மனம் நொந்து கிடந்தேன் - இதோ

வாய்ப்புக் கிடைத்துவிட்டது, விட்ட இடத்திலிருந்து வேலையைத் தொடங்க, என்றான். படைதிரட்டினான், பாய்ந்து தாக்கினான், பகை அழிந்தது, க்யூபாவின் தலைவனானான்.

தம்பி! காஸ்ட்ரோ என்னென்ன முறைகளைக் கையாண்டான் என்பது அல்ல, நாம் கவனிக்கவேண்டியதும், கையாள வேண்டியதும். நாம் கூர்ந்து பார்த்திடவேண்டியது, அவன் எத்துணை கடுமையான விளைவுகளுக்குத் தயாரானான், ஈடுகொடுத்தான் என்பதுதான்.

விடுதலை! விடுதலை! விடுதலை! என்று ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நாடு, பண்ணிசைத்து வருகிறது, பார்க்கிறோமல்லவா!!

கானா, டோகோலாண்டு, மாலி, சோமாலிலாந்து, மடகாஸ்கர் - என்று பட்டியல் வளர்ந்தபடி இருந்திடக் காண்கிறோம்.

அந்த நாடுகளிலெல்லாம், விடுதலை ஆர்வம், உரிமை உணர்ச்சி, எழுந்த விதம், வளர்ந்தவகை, எம்முறையிலிருந்தன என்பதுகூட, இனித்தான், உலகு தெரிந்துகொள்ள வேண்டும். அந்த நாட்டு விடுதலை வீரர்கள் பற்றிய குறிப்புகள், அவர்கள் அமைத்த அணிவகுப்புகள் பற்றிய விவரம் இனி வெளியிடப்பட வேண்டிய வீரக் காதைகள்! அந்த நாட்டுக்காக உழைத்தவர்கள், உழைப்பின் பலன் காணா முன்பே கொல்லப்பட்டவர்கள், உழைத்து உருக்குலைந்தவர்கள், அவர்களைத் தீண்டிய ஆபத்துகள், சூழ்ந்துகொண்ட தீச்சுழல்கள் போன்றவை பற்றியவிவரங்கள், இனி வெளியிடப்படவேண்டிய காப்பியங்கள். விடுதலை கிடைக்கும் வரையில், அந்த நாடுகளைப்பற்றி, இதழ்கள், இருட்டடிப்பு நடத்தி வந்தன! இன்று தேடித்தேடிச் சென்று பேட்டி காண்பதும், பெரிது பெரிதாகப் படங்களை எடுப்பதும், பக்கம் பக்கமாகச்

செய்திகளைத் தருவதுமாக உள்ளன, ஏடுகள்! நாடு மீட்டிட, நடத்தப்பட்ட போரின்போது, கேட்பாரற்று, கவனிப்பாரற்றுக் கிடந்தனர் - இன்று அந்த விடுதலை வீரர்கள் வெற்றிபெற்றனர். எனவே அவர்களைச் செய்தி தேடுவோர், மொய்த்துக்கொள்கின்றனர்.

விடுதலை முழக்கம் எழுப்புபவனை, வெறியன் என்று ஏசுவதும், அவன் கையாளும் முறைகளைக் காட்டுமிராண்டித் தனம் என்று கூறுவதும், கூர்த்தமதியற்ற காரணத்தால், மிகப் பலருக்கு வாடிக்கையாகிவிட்டது. வெற்றி கிட்டியதும், வியர்க்க ஓடோடிச் சென்று, வீரனே! தீரனே! என்று புகழ்பாடி, புன்னகைக்குக் காத்துக் கிடப்பதும், அத்தகையோரின் வாடிக்கை.

ஆனால், விடுதலை இயக்கம் இருட்டடிப்பினால் மாய்ந்து போகாது; புகழ்பாடுவோர் கிடைக்காததால், புகைந்து போய் விடாது.

விடுதலை இயக்கம், பலி கேட்கும் - தன்னிடம் பற்றுக் கொண்டவர்களை. பலி, பயங்கரமானதாகக்கூட இருக்கும். பலர், பலியான பிறகு, கடைசி அணிவகுப்புக்கு வெற்றி கிடைக்கக் கூடும்.

அந்த அணிவகுப்புத்தான் உலகிலே, பளிச்செனத் தெரியும்.

முன்னால் அழிக்கப்பட்ட அணிவகுப்புகளைப் பற்றி, உலகம் கவனம் செலுத்தி இருக்காது, வாடிக்கை இல்லை.

முதல் தாக்குதலில் கொல்லப்பட்ட கொள்கை வீரர்களின் புதைகுழிகளை, வெற்றிக்குப் பிறகு, நாட்டவரும், மற்றவரும் தேடிக்கண்டறிவார்கள். பிறகு, அவை வழிபடும் இடங்களாகும்

திருத்தலங்களாகும்!

தம்பி! எப்படிப்பட்ட இடம் பெறத்தக்க வாய்ப்பு, நமக்கு இருக்கிறது என்பதை எண்ணும்போதே, இணையற்ற ஓர் எழுச்சி பெறுகிறோமல்லவா! அதை உணரமுடியாதவர்கள்தான், இடுக்கணும் இன்னலும் தாக்கினால், நாம் தகர்ந்து போவோம் என்று தப்புக் கணக்குப் போடுகிறார்கள்.

ஒரு அரசியல் கட்சி நடத்தி, அதிலே தேர்தல் பலன் கிட்டவில்லை என்றால், அந்தக் கட்சி கலகலத்துப்போகும். விடுதலை இயக்கம் அப்படி அல்ல. ஒரு அணிவகுப்பு அழிக்கப்பட்டால், புதியதொன்று எழும்! அழிப்பவனின் கரம் துவண்டுவிழும் வரையில் அணிவகுப்புகள் எழுந்தவண்ணம் இருக்கும் - வெற்றி கிட்டும் வரை!

காங்கிரஸ் கட்சியில் உள்ளோர் ஒரு பெரும் தவறு செய்கிறார்கள்; நாம் ஒரு வெறும் அரசியல் கட்சி நடத்துகிறோம், ஆகவே, இருட்டடிப்பால், ஏளனத்தால், சதிச் செயலால், கலாம் மூட்டிவிடுவதால், வழக்குகள் தொடுப்பதால், தேர்தலில் தோற்கடிப்பதால், நம்மை ஒழித்துவிடலாம் என்று எண்ணுகிறார்கள்.

சின்னாட்களுக்கு முன்பு, நான் எப்போதும் அளந்துதான் பேசுவேன் என்று கூறிக்கொள்ளும் அமைச்சர் பக்தவத்சலனார் பேசினாராமே, தி. மு. க. வினருக்கு, அரசியல் ஞானமே இல்லை என்று!

ஏன், அவ்விதம் சொன்னார்? அவ்விதம் ஏளனம் பேசி னால், எரிச்சல் ஏற்படும்; அந்த எரிச்சலைத் தாங்கிக்கொள்ள மாட்டார்கள் - துளைக்கப்பட்டுப் போய் விடுவார்கள் என்று நினைக்கிறார்.

அவர்கள், நாம் ஒரு விடுதலை இயக்கத்தை நடத்துகிறோம் என்பதை உணரவில்லை.

விடுதலை இயக்கம் நடத்துவதற்கான காரணம், ஆயிரம் உள்ளன என்பதையும் அறியவில்லை.

அவர்கள்தான், தம்பி! தமிழ் மொழியினைச் சூழ்ச்சித் திட்டத்தால் அழித்தொழிக்க முற்படும்போதுகூடத் தமிழர்கள், வாய்திறவாதிருப்பர், கைகட்டிக் கிடப்பர் என்று எண்ணுகிறார்களே! அவர்களின் அரசியல் “ஞானம்’ அவ்வளவு”அபாரம்!!’ நம்மால் முடியுமா, அவர்களுடன் போட்டியிட! கடினம்! மிகக் கடினம்!

அவர்கள் கிடக்கட்டும், தம்பி! தமிழ்மொழி கற்றறிந்தோர்! உரிமை வேட்கை குறித்து, நாடு பல சுற்றியும் ஏடு பல படித்தும் வித்தகரானோர்! இவர்களாகிலும் மொழிக்கு வர இருக்கும் ஆபத்தை அறிந்து துடித்தெழக், காண்கிறோமா? இந்தி ஆதிக்கம், வெறி அளவு வளர்ந்திருக்கிறது, இது ஆகாது கூடாது, தீது, என்று எடுத்துரைத்தால், என்ன கெட்டுவிடும்.

பிராங்கோவின் ஆட்சியிலே, சர்வாதிகார நோய் பிடித்துக் கொண்டிருக்கிறதைக் கண்டித்துப் பேச்சுரிமை இல்லை என்பதைச் சுட்டிக்காட்டி, 329 மதகுருமார்கள் கையொப்ப மிட்டுக் கடிதம் அனுப்பினார்கள் என்று மாட்ரிட் செய்தி அறிவிக்கிறது.

பிராங்கோவின் ஆட்சிமுறையைக் குறை சொன்னால், என்ன நடக்கும்? தெரியாதா, அவர்களுக்கு? துணிந்துதான், கண்டிக்கிறார்கள், சிலராகிலும், துணிந்து எதற்கும் தயாராகி உண்மைக்காகப் பரிந்து பேசாவிட்டால், உலகில் அறம்தான் தழைக்குமா? நீதிதான் நிலைக்குமா? எனவேதான், அந்த மதகுருமார்கள், ஆபத்தைத் துச்சமென்று கருதி, பிராங்கோ ஆட்சிமுறையைக் கண்டித்துள்ளனர்.

இங்கு? சீவக சிந்தாமணியில் குறிப்பிடப்பட்டிருக்கும் வானவூர்திக்கும், இப்போது விஞ்ஞானம் சமைத்தளித்துள்ள வானவூர்திக்கும் ஒப்புவமை காட்டிப் பேசச் சொல்கிறீர்களா? உம்! மணி மூன்றுக்குக் குறையாமல் மூச்சைப்பிடித்துக் கொண்டு பேச, மேதைகள் இருக்கிறார்கள். முகவரி வேண்டுமா?

நாட்டுப்பற்று எப்படி ஏற்படுகிறது என்பதுபற்றி விரிவுரை வேண்டுமா, உலகப்பெரும் பேராசிரியர்களின் மேற்கோள் களுடன் ஒன்றரை மணி நேரம் பேசிவிட்டுப், பிறகு ஒன்பது நாள், நண்பர்களிடம் அந்தப் பேச்சின் அருமை பெருமைபற்றிப் பேசிட ஆசாமிகள் இருக்கிறார்கள்!

ஆனால், ஆட்சிமொழியாக இந்தி வந்தே தீரும் என்று குடியரசுத் தலைவர் ஆணை பிறப்பித்துவிட்டார், குமுறுகிறார்கள் நாட்டு மக்கள், ஒரு குரல் கேட்கிறதா, அதைக் கண்டித்து அந்த மேதைகளிடமிருந்து!

பிராங்கோவை எதிர்த்தால் மரணதண்டனை கிடைக்கக் கூடும்.

இந்தி ஆட்சிமொழி ஆகக் கூடாது என்று கூறினால், ஆக்கக் கூடாது என்று உறுதி பேசினால், ஆக்கினால் ஆபத்து விளையும் என்று எச்சரிக்கை விடுத்தால், இந்த மேதைகளுக்கு என்ன ஆபத்து வந்துவிடும்!

கை குலுக்குவதும், கனவானே! நலமா? என்று கேட்பதும், குறையக்கூடும- அடியோடு நின்றுவிடாது! இதைக்கூடவா தாங்கிக்கொள்ளக் கூடாது.

பாகிஸ்தானில், நடப்பது, இராணுவ ஆட்சி, அயூப்கான் மிக்க கண்டிப்பானவர். அரசியல் தலைவர்களை எல்லாம் அடைத்துவிட்டார்

சிறையில்!

எனினும், பாகிஸ்தானில் மக்களாட்சி முறை ஏற்பட்டாக வேண்டும். கட்சி அரசியல் முறை தோற்றுப்போய்விட்டதாக அயூப்கான் சொல்வது சரியல்ல.

புதிய அரசியல் சட்டத்தை மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள்தான், தீட்ட வேண்டுமே தவிர, அயூப்கானால் நியமிக்கப்படும் குழு தீட்டுவது சரியல்ல என்று அறிக்கை வெளியிட்டு, ஆயிரக்கணக்காக அந்த ஏடுகளை, நாடெங்கும் பரப்பி இருக்கிறார்கள், பாகிஸ்தானில் உள்ள 19 உலமாக்கள் - மதத்தின் வித்தகர்கள்.

பயம் அவர்களைப் பிய்த்துத் தின்றதா? இங்கு? பேசச் சொல்லுங்கள், துணிவுடன்! ஏ! அப்பா! என்ன பயம்! எவ்வளவு நடுக்கம்! நமக்கேன் வம்பு என்ற போக்கு.

பாகிஸ்தானில், உலமாக்கள் போலவே, உயர்நீதி மன்ற நீதிபதியும், இப்போதைய ஆட்சி முறையைக் கண்டித்திருக்கிறார்.

சர்வாதிகார நாடுகளில் ஏற்பட்டிருக்கும், இந்த நெஞ்சுரம், பேச்சுரிமை, எழுத்துரிமை தரப்பட்டுள்ள "ஜனநாயக’ நாட்டிலே உள்ள மேதைகளுக்கு ஏற்படவில்லையே! வெட்கப்படுவதா, வேதனைப்படுவதா? சொல்லு, தம்பி!

இந்த கழகத்துக்காரர்கள், வீணாகப் பயம் காட்டு கிறார்கள்; இந்தி ஆட்சிமொழியாகி, ஆங்கிலம் அறவே ஒழிந்துபோய் விடாது; தமிழ்தான் வளரும்; வழக்கு மன்றங்களே கூடத் தமிழில்தான், நடவடிக்கைகளை நடத்தும் என்று சுவை சொட்டச் சொட்டப் பேசுகிறார் சுப்பிரமணியனார் - அமைச்சர்!

சரியான போடுபோட்டார், பயல்கள்

திணறுவார்கள் என்று, தெந்தினம் பாடிடுவோர் பேசினர். ஆனால், அமைச்சர் சுப்பிரமணியம் சுருண்டு கீழே விழத்தக்க, அறை கொடுத்தார், டில்லியில் அரசோச்சும் சட்டத்துறை அமைச்சர், சென்.

சுப்பிரமணியனார் செப்பினார், தமிழிலேயே, வழக்குமன்ற நடவடிக்கைகள் இருக்கும் என்று. டில்லி அமைச்சர், இது யார் பைத்தியக்காரத்தனமாகப் பேசுபவர்! என்ற எண்ணிக் கொண்டவர்போல உண்மையைக் கக்கிக் காட்டினார்.

சுப்ரீம் கோர்ட்டிலே இந்தி மொழியில்தான் 1965-க்குப் பிறகு நடவடிக்கைகள் இருக்க வேண்டும்.

அப்போது, இராஜ்யங்களில் அந்தந்த இராஜ்ய மொழியில் வழக்குமன்ற நடவடிக்கைகள் இருந்தால் குழப்பமாகி விடும்.

எனவே, இராஜ்யங்களில் உள்ள வழக்குமன்றங்களிலும், இந்தி மொழியிலேயே நடவடிக்கைகள் இருக்க வேண்டும்.

எனவே, சட்டங்களையும், வழக்காடலில் தேவைப்படும் நுணுக்கச் சொற்களையும், ஆங்கிலத்தில் உள்ளதை, இந்தி மொழியில் பெயர்த்திடக், குழு விரைந்து வேலை செய்ய வேண்டும்.

கனைத்தாவது காட்ட வேண்டுமே, கனம் சுப்ரமணியம்; உஹூம்! கப்சிப்! வாய் திறக்கவில்லை! நம்மைப்பற்றிப் பேசச் சொல்லுங்கள். நாராசம், தாராளமாக, ஏராளமாக! “எஜமானர்’ இடிக்கிறார். இவர்”படிதாண்டாப் பத்தினி’யாகக் கோலம் பூண்டாக வேண்டுமே! எனவே, வாய்திறந்து அழக்கூட மறுக்கிறார்.

தமிழ் மொழி, இராஜ்ய வழக்குமன்றத்தில் அரசோச்சும் என்று பேசிவிட்டோமே, - நமது பேச்சினைத் துச்சமென்றாக் கிடும் முறையில், தமிழாவது தெலுங்காவது, இந்திதான் இராஜ்ய வழக்குமன்றங்களில் என்று டில்லி அமைச்சர் சென் அறைகிறாரே, மக்கள் நம்மை மதிப்பார்களா? என்று எண்ணினாரா?

ஐயோ! ஆபத்தான எண்ணமல்லவா அது! அது வேகமாக வளர்ந்தும் விடுமே! வளர்ந்துவிட்டால், என்ன கதி ஆவது? அரும்பாடுபட்டுப் பெற்ற பதவி அல்லவா பறிபோய்விடும் - என்று நினைக்கிறார், நடுக்கமெடுக்கிறது. பல்லைக் கடித்துக் கொண்டு இருக்கிறார் - பிறகு இருக்கவே இருக்கிறது, வாய்க்கு வேலை, கழகத்தைத் தாக்குவது!

ஸ்பெயினில், பாகிஸ்தானில் உயிர்போவது பற்றிக்கூடக் கவலைப்படாமல் உண்மைக்குப் பரிந்து பேசுகிறார்கள்.

இங்கு, இருக்கும் பதவி பறிபோய்விடுமே என்ற பயத்தால் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசித் திரிகிறார்கள்.

பதவிதானே! பறிபோனால்தான் என்ன? என்று, தம்பி! நீ, வெகு எளிதாகச் சொல்லிவிடுவாய்: அவர்களுக்கல்லவா,அதனுடைய அருமை தெரியும்! அது போய்விட்டால், பிறகு இவர்கள் இருக்குமிடம் நோக்கி, யார் திரும்பிப் பார்ப்பார்கள்? இவர்கள் சென்று சென்று பார்த்தாலும், யார் முகம் கொடுத்துப் பேசுவார்கள்? நீ கூறிவிடலாம், பதவியா பெரிது என்று! பதவிதானே, அவர்களின் நிலையைப் பெரிது ஆக்கிற்று! அதைப்போய் இழப்பது என்றால்!!

தம்பி! இங்கு இருப்பதுபோலத்தான் எங்கும் என்று எண்ணிவிடாதே.

நரேஷ்சென் குப்தா
நரேந்திர தேவ்
திரிகுண சென்
சுபீந்திரநாத் தத்தா
ராதாராணி தேவி
பேராசிரியர் குகா
புத்ததேவ போஸ்
பிரமாதநாத் பிசி
நிர்மல்சௌத்ரி பட்டாச்சாரியா
காஜிஅப்துல் வாதுத்
சுஜேந்திரநாத் சென்
அபு சையத் அயூப்
டாக்டர் அதீந்திரநாத் போஸ்
விவேகானந்த முகர்ஜி
மைத்ரேயி தேவி
புரோதீவா போஸ்
சாகராமாய் கோஷ்
அமலன் தத்தா
கே. கே. சின்கா
ஹிரேன் குமார் சன்யால்

இவர்கள், தம்பி! வங்காளத்திலே உள்ள மேதைகள். ஒவ்வொருவர் ஒவ்வொரு துறையில் வித்தகர்கள், புலவர்கள், பெரும் பேராசிரியர்கள், கல்வித்துறை நிபுணர்கள்.

இவர்கள் கையொப்பமிட்டு, ஒரு அறிக்கையை இந்தத் திங்கள் துவக்கத்திலே வெளியிட்டிருக்கிறார்கள்.

இந்திய தேசிய மொழிகளின் வளர்ச்சிக்கான மன்றம் ஒன்று, பணியாற்றி வருகிறது; அந்த மன்றத்தின் சார்பில், இந்தஅறிக்கை. அதிலே இந்தி ஆட்சிமொழி ஆவது பற்றிக் குடியரசுத் தலைவர் விடுத்துள்ள ஆணை கண்டிக்கப்பட்டிருக்கிறது.

ஆணை கண்டோம், ஏமாற்றமடைந்தோம்.

ஆணையில் தெளிவு, விளக்கம் சரியாக இல்லை.

இந்தி மொழியின் சார்பில் ஒருதலைப்பட்சமான அக்கறை காட்டப்பட்டிருக்கிறது.

இந்தி பேசுவோருக்குத் தனிச்சலுகை, மேலிடம் அளிக்கப் படுகிறது.

இந்தி அல்லாத மற்ற மொழி பேசுவோருக்கு, இது பெருத்த அநீதி இழைப்பதாகும்.

இந்தி பேசாத மக்களுடைய ஒப்பம் பெறாமல், ஆங்கிலத்தை அகற்றிவிட்டு, இந்தி ஆட்சி மொழியாகப் புகுத்தமாட்டோம் என்று 1959-ம் ஆண்டு செப்டம்பர் நாலாம் நாள், பாராளுமன்றத்தில் பண்டித நேரு வெளியிட்ட கொள்கை, திட்டவட்டமாகக், குடியரசுத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப் பட்டுவிடும் என்று இந்த மன்றம் எதிர்பார்த்தது; ஏமாற்ற மடைந்தது.

குறுகிய கால அளவுக்குப் பிறகு, அகில - இந்தியத்துறை அலுவலகப் பணிகளுக்கான தேர்வுகள், இந்தியில் நடைபெறும் என்று ஆணையில் குறிப்பிட்டிருப்பதை இந்த மன்றம் பலமாகக் கண்டிக்கிறது.

இந்தத் தேர்வுகளில், இந்தியாவின் மற்றத் தேசிய மொழிகள் குறித்து யோசிக்கக்கூட இல்லை என்பது கண்டிக்கத்தக்கது.

இந்த ஏற்பாட்டினால் இந்தி பேசும் மக்களுக்குத்தான் மற்றவர்களை மிஞ்சக்கூடிய சலுகை கிடைக்கும்.

இந்த நிலைமையினால் இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கே ஆபத்து விளையக்கூடும்.

முதலமைச்சர் நேரு கொடுத்த வாக்குறுதியின்படி,

காலக் கெடுவின்றி, ஆங்கிலம் துணை ஆட்சிமொழியாக இருக்கும் விதத்தில், குடிஅரசுத் தலைவர் தமது ஆணையைத் தெளிவாக்கும்படி இம்மன்றம் கேட்டுக்கொள்கிறது.

தம்பி! குமாரபாளையத்திலே, நாம் கூடி, குடியரசுத் தலைவரின் ஆணை குறித்து, என்ன கருத்தினை வலியுறுத்தி னோமோ, அது ஏதோ “பக்தவத்சலனாரின் பாஷைப்படி”அரசியல் ஞானம்’ அற்றவர்களின் போக்காக இருக்கட்டும்; மந்திரி சுப்ரமணியத்தின் வாதப்படி, விவரம் தெரியாதவர்களின் பேச்சாக இருக்கட்டும்; எல்லாமறிந்த காமராஜரின் பேச்சுப்படி, விளையாட்டுத்தனமாக இருக்கட்டும்; இதோ, வங்க நாட்டு வித்தகர்கள் அதே கருத்தினைத் தெளிவுடன், துணிவுடன், எடுத்துக்காட்டி அறிக்கை வெளியிட்டனரே, இதற்கு என்ன பதில் அளிக்கப்போகிறார்கள், பதவி பெற்றவர்கள்! இத்தனை வித்தகர்களும், அரசியல் ஞானமற்ற, விவரம் தெரியாத விளையாட்டுக்காரர்களா? நிந்தித்து நிந்தித்துப் பழகிப்போன மந்திரிகளின் நாக்குக்கூடக் கூசுமே, அப்படிச் சொல்ல! இவர்கள் ஒவ்வொருவரும், தத்தமது துறை, தொழில், கொள்கை ஆகியவைகளைப்பற்றிக் கவலைப்படாமல், பதவியில் உட்காரவேண்டுமென்றால், காமராஜர்கள் ஆகிவிடலாமே! அதாவது மந்திரிகளாகலாமே! இவர்களல்லவா குடியரசுத் தலைவரின் ஆணையைக் கண்டிக்கிறார்கள்; குலைநடுக்க மல்லவா எடுக்கிறது இங்கு உள்ள கற்றறிவாளர்களுக்கு!!

தம்பி! இந்த மன்றத்தார் நம்மைவிட ஒரு படி மேலே சென்றுவிட்டார்கள்.

மற்ற மொழிகளின் வளர்ச்சிக்காக

அளிப்பதைவிட மிக அதிகமான தொகையை இந்தி மொழி வளர்ச்சிக்காக, இந்திய சர்க்கார் தரக்கூடாது என்பதை அறிக்கை வலியுறுத்துகிறது.

இந்த நாட்டு வித்தகர்கள், தங்களை மெத்தச் சொத்தை உள்ளத்தினர் என்று காட்டிக்கொள்வது கண்டு, வருந்திக் கிடக்கும் வேளையில், வங்கத்திலிருந்து இந்தத் தேன்மொழி கிடைக்கிறது. தம்பி! நாம் கொண்ட கருத்துக்கு மேற்கொண் டுள்ள போக்குக்கு, எத்தகைய நேர்த்தியான இடமிருந்தெல்லாம் இசைவு இருக்கிறது என்பதைக் காணும்போது, புதியதோர் எழுச்சி பிறக்கிறதல்லவா!

அந்த எழுச்சி நிரம்பிய உள்ளத்தினராக நாமிருக்கும் போது அடக்குமுறை காட்டியா, நமது உறுதியை அழித்துவிட முடியும்.

நான்தான், காணப்போகிறேனே உறுதிபடைத்த நெஞ்சினரை! ஒளிபடைத்த கண்ணனரை! பலப்பல ஆயிரக் கணக்கில்! இந்தி எதிர்ப்பு மாநாட்டில்!

இந்தத் திங்கள் 30-ல் என்னை வழக்குமன்றம் காணப் போகிறது.

மறுநாள், 31-ந் தேதி நான், என் எண்ணற்ற உடன்பிறந்தார்களைக் காண இருக்கிறேன்.

வழக்குமன்றத்திலே இருக்கும்போது, உன்னைத்தானே காண்கிறேன்.

நான் கண்டு களித்திட, பெருமைப்பட, உணர்ச்சி பெற உறுதிபெற, எழுச்சிபெற, வேறு என்ன வேண்டும்?

நீ செல்லும் பாதை சரியானதுதான் என்று உலகிலே நடைபெற்ற, இன்றும் நடைபெறும் உரிமைக் கிளர்ச்சிகள் விடுதலை இயக்கச் செய்திகள் எடுத்துக்காட்டுகின்றன.

வழக்குமன்றமோ, நீ கவனிக்கப்படுகிறாய் என்று கூறுகிறது.

தம்பி! நீயோ? தம்பி உடையான் படைக்கு அஞ்சான் என்று நீதானே அண்ணா!

கூறினாய் என்று கேட்கிறாய். எனக்கோ, எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்ற கவிதை மனப்பாடம்.

ஆயினும், கவிதைகள் கட்டுரைகள், வீரக்காதைகள், வெற்றிக் காப்பியங்கள், ஆகியவைகளால் கூட அளித்திட முடியாத எழுச்சியை, உன் கண்ணொளி எனக்கு அளிக்கிறது, அந்த ஒளியைக் காட்டிட, 31-ந் தேதி, சென்னை வருகிறாயல்லவா?

அன்புள்ள
அண்ணாதுரை
24-7-1960

நரி பரியான கதை!

அமெரிக்க ஆதிக்கத்தை ஆதி நாளிலேயே கண்டித்தவன் நான்!
ஆலும் வேலும் பிளக்கப் பயன்படும் கோடரி வாழைக்குப் பயன்படுவதில்லை!
கிளிப் பொந்துக்குள் கருநாகம் குடி புகுந்து விட்டது!
“கேட்டால் கேள்! விட்டால் விடு!’ என்பதல்ல நமது முறை!
”துக்க தினம்’ என்ற பெரியார் காங்கிரசுக்கு வேண்டியவர்!
"விழா நாள்’ என்ற நான் காங்கிரசால் கண்டிக்கப் படுபவன்!
வேடத்தைக் கண்டு ஏமாறலாகாது!
மரக் கட்டைகளாக இருத்தலல்ல மாந்தர்க்கழகு!
ஜனநாயக சோஷியலிசம் பாறைமீது தூவிய விதை
காமராஜர் முதலாளி நரிகளைச் சோஷியலிசப் பரிகளாக்கிக் காட்ட முனைகிறார்!

தம்பி!

காங்கிரஸ் நண்பரொருவர் சில நாட்களுக்கு முன்பு என்னிடம் பேசிக்கொண்டிருந்தார். “ஆமாம் அண்ணாத்துரை! என்ன நீங்கள்கூட அமெரிக்காவைத் தாக்க ஆரம்பித்து விட்டீர்களே?’ என்று கேட்டார். நான் சிறிதளவு விவரம் புரியாமலிருக்கக் கண்டு அவரே விளக்கமும் தந்தார்;”அதாவது அமெரிக்காவிடமிருந்து இந்தியா உதவி பெறுவதைக் கண்டிக் கிறீர்களே - கடன் சுமை

ஏறுகிறது என்றும் இந்தியாவின்மீது அமெரிக்காவின் ஆதிக்கம் வளர்ந்துவிட்டது என்றும் பேசுகிறீர்களே? இது என்ன புதிய போக்காக இருக்கிறதே'' என்று கேட்டார்.

நீண்ட நேரம் பேச வேண்டுமே என்பதனால், அவருடைய கேள்வி பற்றிக் கவலை காட்ட வேண்டாம் என்று எண்ணிக் கொண்டு, நான் சுருக்கமாக, "ஆமாம்! அமெரிக்காவின் ஆதிக்கம் வளர்ந்துவிட்டிருப்பதாகத்தான் நான் கருதுகிறேன்; அது தீதானது என்றும் எண்ணுகிறேன்; அதனால்தான் கண்டிக்கிறேன். ஆனால், இது புதிய போக்கு அல்லவே!'' என்று கூறினேன், விவாதம் வளராது என்ற நினைப்புடன்.

நண்பர் விடவில்லை; "இல்லை! இல்லை! இப்போதுதான் இந்தப் போக்கு ஏற்பட்டிருக்கிறது; அதற்குக் காரணமும் எனக்குத் தெரியும்; எல்லாம்"சகவாசதோஷம்'' என்றார்.

"அதென்னய்யா சகவாசதோஷம்! பெண்களுக்கு என்னவோ செவ்வாய்தோஷம் என்று ஜோதிடர்கள் கூறுவார்களே, அதுபோல இருக்கிறதே உமது பேச்சு!'' என்று நான் கூற, நண்பர்,"பெண்களிலே சிலருக்கு இருக்கும் செவ்வாய்தோஷத்தைக்கூடப் போக்கிவிடலாம். ஆனால் இந்த சகவாசதோஷம் இருக்கிறதே அது இலேசிலே போகாது'' என்று சற்று சூடாகவே கூறிவிட்டு, "சுற்றி வளைத்துப் பேசுவானேன், உங்கள் கழகம் கம்யூனிஸ்டு கட்சியுடன்"சரசமாட' ஆரம்பித்ததால் ஏற்பட்டதுதான் இந்த "அமெரிக்க எதிர்ப்பு' - சகவாசதோஷம்தான் காரணம்'' என்று கூறிவிட்டுக் கடுமையான பார்வையை என்மீது செலுத்தினார்.

"ஓஹோ! இப்படி ஒரு கருத்து உலவுகிறதா? நண்பரே! இதை எடுத்துக் காட்டியதற்கு நன்றி. நாங்கள் அமெரிக்காவிடம் இந்தியா அதிக அளவிலே

கடனும் - உதவியும் - பெற்றுக் கொள்வது எதிர்கால ஆபத்தாகிவிடக்கூடும் என்ற எண்ணத்தை, இன்று நேற்றல்ல, கம்யூனிஸ்டு கட்சியின் தோழமைத் தொடர்பு ஏற்பட்ட பிறகு அல்ல, துவக்க முதலே கூறி வந்திருக்கிறோம். அமெரிக்காவின் தொடர்பை, கம்யூனிஸ்டு கட்சி எதிர்க்கிறது, நாங்கள் கம்யூனிஸ்டு கட்சியுடன் தோழமை கொண்டிருக்கிறோம், ஆகவேதான் அமெரிக்கத் தொடர்பைக் கண்டிக்கிறோம் என்று வாதாடுவது தவறு" - என்று நான் விளக்கமளித்துவிட்டு அமெரிக்காவின் ஆதிக்கத்தைத் துவக்க நாளிலேயே நான் கண்டித்து இதழிலே எழுதிய ஒரு கட்டுரையை - கதை வடிவம் - தந்து படிக்கச் சொன்னேன். தம்பி! அதனை உன்னிடமும் தருகிறேன் - நமது போக்கு புதிது அல்ல என்பதனை எடுத்துக் காட்ட.

காட்சி - 1

இடம்: கொஞ்சம் கலனான ஓர் மாளிகை வெளிப்புறம்

காலம்: காலை

உறுப்பினர்: வாயில் காப்போன், ஒரு சீமான்.

மாளிகை கலனாகி இருக்கிறது! சுற்றுச் சுவர், இரு புறமும் பிளக்கப்பட்டுக் கிடக்கிறது. நெடு நாட்களாக, சுண்ணாம்பு அடிக்காததாலும், பழுது பார்க்காததாலும், மாளிகையின் வெளித்தோற்றம், கவர்ச்சி அளிப்பதாக இல்லை; வாயிற்படி, தெருத்திண்ணை இவைகளின்மீதெல்லாம், புழுதியும் கற்களும் நிரம்பியுள்ளன. ஆனால் மாளிகை பெரிய அளவுடையது. பழுதுபார்த்து, வர்ண வேலைகள் செய்து முடித்தால், அழகாக விளங்கக்கூடியது என்று தெரியும் நிலை இருக்கிறது.

மாளிகையின் முன் வாயிற்படியில், ஒரு

காவலாளி களிப்புடன் நிற்கிறான், கையில் சந்தனக் கிண்ணமும் பன்னீர் செம்பும் வைத்துக்கொண்டு. மாவிலைத் தோரணங்கள், வாழை மரம் ஆகியவை கட்டப்பட்டுள்ளன. ஒரு புறம் முட்செடிகள் உள்ளன.

வீதி வழியாக, ஒரு சீமான் செல்கிறார். பருத்த உடல்! மலர்ந்த முகம்! எதையும் ஊடுருவிக் காணக்கூடிய கண்கள்! கெம்பீர நடை! மாளிகையை அலட்சியமாகப் பார்க்கிறார். ஏதோ கீதம் கேட்கிறது உள்ளேயிருந்து.

ஜெய! ஜெய! வந்தேமாதரம்
ஜெய ஜெய வந்தேமாதரம்!

என்ற கீதம் கேட்டதும், சீமான், மறுபடி, சற்று உன்னிப்பாக மாளிகையைப் பார்க்கிறார். பெரிய அளவினதாகவும், விழாக் கோலத்துடனும் மாளிகை இருக்கக் கண்டு, மேலும் உன்னிப்பாகப் பார்த்தபடி நிற்கிறார். சீமானின் பார்வை மாளிகைமீது வீழ்வது கண்ட காவலாளி, முக மலர்ச்சியுடன் வரவேற்கிறான்.

காவ: நமஸ்தே!

சீமான்: நமஸ்தே. . . . .

காவ: வாருங்கள்!

(வரவேற்றுக்கொண்டே சந்தனம் தருகிறான். அதைத் தொட்டதும் தொடாததுமாக)

சீ: சந்தனக் கட்டை இங்கு ஏராளமாகக் கிடைக்குமோ?

கா: நிறையக் கிடைக்கும்.

சீ: இதை இப்படி அரைப்பது தவிர வேறு என்ன செய்கிறீர்கள்?

கா: அரைக்கிறோம் - யாராவது பெரியவர்கள் இறந்து விட்டால், அவர்களை எரிக்க இதை உபயோகிக்கிறோம் - கொஞ்சம் தைலம் - சோப். . . .

சீ: (பயந்து) தைலம், சோப் செய்கிறீர்களா? கா: ஆமாம், கொஞ்சம் - அதிகமல்ல.

சீ: அதிகமில்லையா! சரி, இந்த மாளிகையை ஏன் ரிப்பேர் செய்யக்கூடாது?

கா: செய்ய வேண்டும். செய்யப் போகிறார்கள். உள்ளே போய்ப் பாருங்கள், அங்கே அதைப்பற்றித்தான் பேசுகிறார்கள்.

சீ: பேசுகிறார்களா? யார்? கா: மாளிகைக்குச் சொந்தக்காரரர்கள்!

(சீமான் வேகமாக உள்ளே போகிறார்)

காட்சி - 2

இடம்: மாளிகை உட்புற மண்டபம்.

உறுப்பினர்: மாளிகைவாசிகளின் சிறு கூட்டம்.

ஒருவர் பேசுகிறார்: எவ்வளவோ கஷ்டப்பட்டு, மாளிகையை நம் வசப்படுத்திவிட்டோம். நமது மாளிகையோ மிகப் பெரியது. . . .

(ஒரு குரல், முழுவதும் கிடைக்காது போய்விட்டதே என்று கூவுகிறது).

பேசுபவர்: பரவாயில்லை ஒரு சிறு கொல்லை! போகட்டும். இந்த மாளிகையை நாம் பெற்ற பெருமையும் சந்தோஷமும் - எவ்வளவு தெரியுமா? இந்தச் சுபதினத்தைப் பாராட்டாதவர்கள் இல்லை.

(உள்ளே நுழைந்த சீமான்)

சீ: உலகமே பாராட்டுகிறது. பேசு: நமஸ்தே!

உட்காருங்கள்! இவர்போன்ற உத்தமர் களெல்லாம் நமக்கு உற்ற துணையாக இருப்பார்கள்.

(ஒரு குரல்: யார் இவன்? ஓடிப்போனவனின் ஒன்றுவிட்ட சகோதரன்போல இருக்கிறான்)

பேசு: இனி இம்மாதிரி பேசக்கூடாது. நமது மாளிகையை இனிச் சண்டை சச்சரவுக்குள்ளாக்கக் கூடாது. இவர். . . .

சீ: மனிதன்; சர்வ தேசத்தான் - மாளிகையின் மகிழ்ச்சியைக் கண்டு மனமாரப் பாராட்ட வந்தவன். மாசற்ற மனமுடையவன்; காசூர் என்பது எமது தேசத்தின் பெயர். பேசு: காசூர்க் கண்ணியருக்கு எமது வணக்கம்.

சீ: மாளிகையில் மகிழ்ந்துள்ள உமக்கு எனது மகிழ்ச்சியுரை. எம்மாலான உதவியைச் செய்வேன். காசூரின் நோக்கம், மாசு துடைத்து, எங்கும் மகிழ்ச்சி வளரச் செய்வதுதான். உங்கள் மாளிகை, பிரம்மாண்டமானது - ஆனால் கவர்ச்சியில்லை - கவர்ச்சிகரமானதாக்க முடியும் - பழுது பார்க்க வேண்டும் - பல வர்ணம் தீட்ட வேண்டும் - சுற்றுச் சுவரைக் கட்ட வேண்டும்...

பே: ஆமாம், பூந்தோட்டம் அமைக்க வேண்டும்

சீ: பழத்தோட்டம் நல்லது.

பே: பூவிலிருந்துதானே பழம். . . .?

சீ: பழம் தராத பூ உண்டு.

பே: ஆமாம், ஆமாம் - நல்லவிதமாகத் தோட்டம் அமைக்க. . . .

சீ: தக்க திட்டம் வேண்டும்.

(ஒரு குரல்: பணம் வேண்டுமே, இவ்வளவு பெரிய

மாளிகையைத் திருத்த ஏராளமாக வேண்டும்)

பே: (ஆர்வத்துடன்) பயம் வேண்டாம்! நமது மாளிகையிலே, ஏராளமான பணம் புதைத்து வைக்கப்பட் டிருக்கிறது. இடத்தைக் கண்டுபிடித்து, செல்வத்தை எடுத்து, மாளிகையைச் சீரும் சிறப்புமுள்ளதாக்குவோம்!

(பலர் சபாஷ், பலே! என்று களிப்புடன் கூவுகின்றனர்.)

சீ: (களைத்துக்கொண்டு) முடியும், செய்யலாம். ஆனால். . . .

பே: செய்ய முடியாது என்ற பதமே எம்மிடம் கிடையாது. இந்த மாளிகையைக் கைப்பற்ற முனைந்தபோது காட்டிய மாவீரம் மங்கிவிடவில்லை. . .

சீ: அந்த ஆர்வத்தையும் நம்பிக்கையையும் நான் பாராட்டுகிறேன். ஆனால், புதைந்துள்ள பொருளைக் கண்டுபிடித்து, பிறகு மாளிகையைத் திருத்துவது என்றால் காலம் அதிகமாகும். அதற்குள் கலனான பகுதி மேலும் கலனாகக்கூடும். காசூர் உதவியைப் பெற்றால், இப்போதே மாளிகையைப் பழுது பார்க்கலாம்.

(ஒரு குரல்: காசூர் உதவி, வெள்ளையூர் வேலையாக முடிந்தால் என்ன செய்வது?)

சீ: பழைய பயத்தை மறந்து, இந்தக் காரியத்தைத் துவக்க வேண்டும். (ஒரு குரல்: அது எங்களுக்குத் தெரியும்)

சீ: தெரியாமலென்ன! நீங்கள் மாவீரர்கள்! உங்கள் மூதாதையர் ஞானிகள்! இதோ பேசுகிறாரே உங்கள் தலைவர், அவர் அஞ்சா நெஞ்சு படைத்தவர். உங்கள் மாளிகையோ, பிரம்மாண்டமானது. ஆஹா! இதை

மட்டும், திட்டமிட்டுக் கட்டி முடித்தால் காண்போர் களிப்புக் கடலில் மூழ்குவர். காசூர், இப்படிப்பட்டவர்களுக்கு உதவி செய்வதை, ஓர் கைங்கர்யமாகக் கருதுகிறது. காசூருக்கு, வெள்ளையூரார்போல, பிறர் மாளிகையில் புகுந்துகொண்டு, ஆதிக்கம் செலுத்தும் எண்ணமே கிடையாது. . .

பே: அதுதான் சிலாக்கியமான கொள்கை. எந்த ஆட்சியும் சொந்த ஆட்சிக்கு ஈடாகாது. . .

சீ: இதையே எங்கள் தலைவர் எழுபத்தெட்டு தடவை சொல்லியிருக்கிறார். உங்களுடைய மாளிகையை உங்கள் மாளிகையிலேயே எங்கெங்கோ புதைத்து வைக்கப்பட்டுள்ள பொருளைக்கொண்டு, புதிதாக்குவது சிரமம், காலக்கேடு நீங்கள் விரும்பினால், காசூர் பணம் தரும். பழுதுபார்த்து, அழகிய வேலைப்பாடுகள் செய்து முடித்து, அதிலே நீங்கள் குதூகலமாக இருப்பதைக் கண்குளிரக் கண்டு களிக்கும் நோக்கந்தான் காசூருக்கு. . . .

பே: நேர்மையான நோக்கம் நெஞ்சிலே வஞ்சமின்றி.

சீ: வஞ்சகமா! அது பஞ்சையர்களின் குணம். காசூர், நேசர்களின் கொஞ்சுதலைப் பெற, தன்னையே அர்ப்பணிக்குமளவு நல்ல நோக்கம் கொண்டது.

பே: ஆஹா! மகிழ்ந்தேன்! பூரித்தேன்! இப்படிப்பட்ட உதவி கிடைத்ததற்காக இறைவனை வணங்குகிறேன்.

சீ: நன்று! நான் சென்று வருகிறேன். காசூர் சென்று, மாசுமறுவற்ற உமது மனத்தை எடுத்துக் கூறி, இந்த மாளிகை பழுது பார்க்கும் மகத்தான

கைங்கரியத்தை, தெய்வ காரியமாக மேற்கொள்ளும்படி வற்புறுத்திக் கூறுவேன். பே: மெத்த சந்தோஷம். ஜெயவிஜயீபவ!

சீ: சந்தேகம் வேண்டாம். எதற்கும், காசூருக்கு உதவி கோரி, இங்கிருந்து யாரையாவது அனுப்பிவைத்தால். . . .

பே: ஆகா! செய்வோம்! பாபாஜீ! பாபா: இதோ, கிளம்புகிறேன்.

(சீமான் விடைபெற்றுக் கொள்கிறார்)

காட்சி - 3

இடம்: காசூர்

உறுப்பினர்: கோடீஸ்வரர்

ஒரு கோடீஸ்வரர், கடிதமொன்றைப் பிரித்துப் படித்து விட்டுப் புன்சிரிப்புடன், அதை மற்றவரிடம் தருகிறார். சுமார் அறுபதுபேர் கூடியிருக்கிறார்கள் அங்கு. ஒவ்வொருவராகக் கடிதத்தைப் படித்து மகிழ்கிறார்கள்.

ஒரு கோடி.: தூதர். . .

இன். கோ.: சாமர்த்தியசாலி! வேறு.

கோ.: அனுபவசாலி!

ஒரு கோ.: பக்குவமாகக் காரியத்தை முடித்திருக்கிறார்.

வேறு கோ.: பழைய மாளிகையைப் புதிதாக்கும் உதவி செய்வதென்றால், அவர்களுக்கு உச்சி குளிர்ந்துதானே போகும்.

ஒரு கோ: நன்றாகக் குளிரட்டும்! பழைய மாளிகையைப் புதிதாக்கப் பண உதவி

செய்யும்போது மாளிகையை அடமானமாக வைத்தாக வேண்டுமே! பிறகு கடனைப் பைசல் செய்து மீட்டுக்கொள்வதைப் பார்த்துக்கொள்வோம்.

வேறு கோ: தவறு உமது திட்டம். பண உதவி செய்யும் போதே அடமானப் பத்திரம் எழுதச் சொல்லக்கூடாது, விழிப்பும், பயமும் பிறந்துவிடும். பணம் ஏறின பிறகு பத்திரம் தயாரிக்க வேண்டும்.

மற். கோ: அதுதான் சரியான யோசனை, வரட்டுமே போன ஆசாமி.

காட்சி - 4

இடம்: மாளிகை வாசல்

உறுப்பினர்: பேசினோர் பிணியாள்.

பிணியாள்: ஆமாம். என்னவோ மாளிகையின் ரிப்பேருக்குக் கடன் வாங்கப்போவதாக

பே: எவன் கலகமூட்டினான்?

பி: கலகமா! சேதி சொன்னான்.

பே: சேதி முழு உண்மையல்ல. பணம் வாங்கப் போகிறோம் ரிப்பேர் செலவுக்கு. ஆனால் அது கடன் அல்ல, உதவித் தொகை.

பி: உதவித் தொகையா? பே: உனக்குச் சூட்சுமம் புரியாது போ!

பி: புரியத்தான் இல்லை. அன்னியர்கள் ஏதேனும் சாக்குக் கூறிக்கொண்டு உள்ளே நுழைவார்கள் - பிறகு தங்கள் ஆதிக்கத்தைப் புகுத்துவார்கள் என்றெல்லாம் முன்பு. . .

பே: சொன்னேன். ஆமாம். அது பழைய கதை. மறந்துவிடு.

பி: மறக்க முடியவில்லையே! உதவித் தொகை தருவதாகக் காசூரான் சொல்கிறான் இப்போது; பிறகு மாளிகை அவன் வசம் போய்விடுமோ என்று பயமாக இருக்கிறதே.

பே: சுத்த பயந்தாங்கொள்ளி! போமய்யா, எனக்கு நேரமில்லை உன்னிடம் வம்பளக்க.

மாளிகை - இந்தியா
பேசுபவர் - காங்கிரஸ் கட்சி
சீமான் - கிரேடி
காசூர் - அமெரிக்கா
பிணியாள் - ஏழை ந

நாடகத்தின் பொருள் இப்போது விளக்கமாகும் என்று நம்புகிறோம். இப்படி மனம்போன போக்கிலே, ஒரு நாடகம் தீட்டுவதா என்று கோபிக்கத் தோன்றும் அன்பர்களுக்கு.

இந்திய விடுதலை விழாவிலிருந்து அமெரிக்க நாட்டுத் தூதுவர், ஹென்றி கிரேடி இந்தியாவிடம் காட்டிவரும் "அக்கறை' அனைவரும் அறிந்த விஷயம். அதை ஆதாரமாக வைத்து இந்நாடகம் தீட்டப்பட்டது. போதாது என்கிறீர்களா? சரி! இதோ, மேலும் இரண்டு ஆதாரங்கள்.

கிரேடி பேசியிருக்கிறார், சின்னாட்களுக்கு முன்பு. "வெளி நாடுகளிலிருந்து, மூலதனம் உதவி பெறாமலேகூட நீங்கள் நாட்டை அபிவிருத்தி செய்துகொள்ள முடியும் - ஆனால் மூலதனம் ஏராளமாக ஏற்கனவே உள்ள நாடுகளின் உதவியைப் பெறாவிட்டால், உங்கள் நாட்டு அபிவிருத்தி, தாமதப்படும். தக்க நிபந்தனைகளுடனும், சரியான நிலைமையிலும், பலர் பணம் கடன் கொடுக்கத் தயாராக உள்ளனர் என்பதை, என் நாட்டு முதலாளிமார்கள் சார்பாக நான் கூற முடியும். ஆனால், இந்த நாட்டிலேயோ வேறு நாட்டிலேயோ

சென்று, எங்களிடம் கடன் வாங்கிக்கொள்ளுங்கள்'' என்று கெஞ்சமாட்டோம்.

அதற்கு ஒத்து ஊதும் முறையில் சாகல் சந்ஷா எனும் வடநாட்டு வணிகத் தலைவர்

"வெளிநாட்டுத் தொழிலரசர்கள், இங்கு பெரிய தொழிற் சாலைகளை எல்லாம் சில வருஷங்களுக்குள் சர்க்கார் ஏற்றுக் கொள்ளும் என்று பயப்படுகிறார்கள், சந்தேகிக்கிறார்கள் - இந்திய சர்க்கார், உடனடியாக இந்த பயத்தையும் சந்தேகத்தையும் போக்க வேண்டும்'' என்று பேசினார். நாடகம் தவறா?

•

படித்து முடித்த நண்பர், "அது சரி! சுவையைக் கூட்டித் தந்திருக்கிறாய் புரிகிறது; எதிர்பார்க்காததுமல்ல'' என்றார்.

“கோபம் குறையாமலே இருக்கிறது. அதனால்தான் விளக்கம் தரும் கட்டுரையைப் படித்த பிறகும் சுமத்திய குற்றச்சாட்டை விடாமல் வைத்துக்கொண்டிருக்கிறீர். போகட்டும், கட்டுரையின் சுவை கிடக்கட்டும், அந்தச் சுவை இருக்கும் என்று எதிர்பார்த்த தன்மை இருக்கட்டும், கட்டுரை எப்போது எழுதப்பட்டது என்பதைக் கவனியும்'' என்றேன். நண்பர் கவனித்துப் பார்த்துவிட்டு,”அப்போதே எழுதியதா இது?'' என்று கேட்டார். “ஆமாம். கட்டுரை, இப்போது கம்யூனிஸ்டு கட்சியின் தொடர்பு காரணமாக எழுதப்பட்டது அல்ல; தேர்தலுக்காக எழுதப்பட்டதும் அல்ல மனதிலே பட்டது, அதனால் எழுதப்பட்டது. அமெரிக்காவின் பிடி இந்த அளவு அழுத்திக்கொண்டிருப்பதனால் ஏற்பட்ட வேதனையால் எழுதப்பட்டது அல்ல. அமெரிக்காவின்”பிடி' விழ ஆரம்பித்த போதே

எதிர்காலம் இடர்மிக்கதாகிவிடுமே என்று தோன்றிற்று, அதனால் அவ்விதம் எழுதினேன். கட்டுரை வெளிவந்தது 21-12-47லில்! இப்போதாவது புரிகிறதா, இது புதிய போக்குமல்ல, கம்யூனிஸ்டு கட்சியின் தோழமையால் ஏற்பட்டதும் அல்ல என்பது?'' என்று கேட்டேன். நண்பரின் கோபம் குறைந்தது. இலேசாகக் கவலை அவரைக் கப்பிக்கொண்டது.

தம்பி! அந்த நண்பரை நான் குறிப்பிட்டபோது "காங்கிரஸ் நண்பர்' என்று கூறியிருக்கிறேன் கவனித்தனையா? காரணத் தோடுதான் கூறினேன். அவர் காங்கிரஸ் கட்சிக்காரரர் அல்ல, காங்கிரசிலே இடம்பிடித்துக்கொண்டவருமல்ல. விடுதலைப் போர் நடத்திய காங்கிரசிடம் அவருக்கு ஒரு பக்தி - பற்று - பாசம். அதனால் அவர் காங்கிரஸ்காரராக இருக்கிறார்.

காங்கிரஸ் கட்சியினர் என்பதற்கும் காங்கிரஸ்காரரர் என்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது. ஆறாம் நம்பர் வீட்டிலே குடி இருக்கிறேன் என்பதற்கும், என்னுடைய வீட்டு நம்பர் ஆறு என்பதற்கும் வித்தியாசம் இல்லையா? அதுபோல இவர் காங்கிரஸ் என்ற அமைப்புக்குத்தான் பற்றுக் காட்டுபவர்; காங்கிரஸ் கட்சி என்ற தேர்தல் சூதாட்ட இயந்திரத்துக்கு அல்ல. அதனால்தான் நான் விளக்கம் அளித்ததைக் கேட்டுக்கொள்ள அவருக்கு முடிந்தது. காங்கிரசில் இடம் பிடித்துக்கொண்டவராக இருந்தால், இப்படி என்னிடம் பேசவே சம்மதிக்கமாட்டாரே! என்ன தெரியும் அந்தப் பயலுக்கு என்றல்லவா கொக்கரிக்கத் துடித்திடுவார். இவர். காங்கிரசிலே இடம் பிடித்தவர் அல்ல. இவருடைய மனத்திலே காங்கிரஸ் ஒரு இடம் பிடித்துக் கொண்டிருந்தது!

காங்கிரசுக்கும் காங்கிரஸ் கட்சிக்கும்,

காங்கிரசிடம் பற்றுக் கொள்வதற்கும் காங்கிரஸ் கட்சிக்காக ஓட்டு வேட்டை ஆடுவதற்கும் இடையே உள்ள வித்தியாசத்தை உணராததன் விளைவாகவே, இந்த என் நண்பர் போன்றார், இன்றும் காங்கிரசிடம் “பக்தி’ காட்டி வருகின்றனர். இந்த”பக்தியை’ காங்கிரசில் இடம் பிடித்துக்கொண்டவர்கள் தமக்குச் சாதகமாக்கிக்கொள்கின்றனர்.

•

ஆளைப் பார்க்காதே! அகிம்சா மூர்த்தியின் படத்தைப் பார்! "ஓட்டு” அவருக்கு! அதைத் தெரிந்துகொள்.

என்ன செய்வார்? என்ன சாதிப்பதற்காக இவர் போகிறார்? இவருடைய திட்டம் என்ன? திறமை எப்படிப்பட்டது? என்றெல்லாம் கேட்காதே! இவர், காங்கிரஸ் கட்சி - அவ்வளவுதான் நீ தெரிந்துகொள்ள வேண்டியது - மற்றவை பற்றி எண்ணி மனதைக் குழப்பிக்கொள்ளாதே!

இவருக்குப் போடும் “ஓட்டு” இவருக்காக அல்ல - காங்கிரசுக்காக! - இவர் முன்பு”ஒரு மாதிரி” ஆளாக இருந்தாரே - வட்டித் தொழிலால் கொழுத்தவராச்சே - அதிகாரிகளிடம் குயிலாகி, ஏழைகளிடம் குக்கலாகிவிடும் குணவானாயிற்றே! - என்றெல்லாம் யோசிக்காதே! இவர் இப்போது காங்கிரஸ் கட்சி - சாக்கடைத் தண்ணீரானாலும், கங்கையில் கலந்துவிட்டால், "பரிசுத்தமான புண்ணிய தீர்த்தம்’ - மறவாதே!

நெடுங்காலமாகக் காங்கிரசில் ஈடுபட்டு, நாட்டுக்கு உழைத்த பலருடைய கோரிக்கைகளைக் குப்பைத் தொட்டிக்குள் போட்டு விட்டு, இவருடைய பண பலத்தின்மீது ஏற்பட்ட பாசத்துக்குக் கட்டுப்பட்டு, காங்கிரஸ் கமிட்டி இவரைத் தேர்தலில் அபேட்சகராக நிறுத்தி வைக்கிறதே, இது அநியாயமல்லவா என்று

பேசாதே! காங்கிரஸ் முத்திரையை இவர் “தேச சேவை டைரியைக் காட்டி அல்ல, தமது”செக் புத்தகத்தை‘க் காட்டிப் பெற்றாராமே’ என்று பேசாதே!

எப்படிப்பட்டவரானால் உனக்கென்ன? என்னென்ன செய்து காங்கிரஸ் முத்திரையைப் பெற்றிருந்தால்தான் உனக்கென்ன? ஏன் அவைகளைப்பற்றி யோசிக்கிறாய்? அவருக்கு எப்போது காங்கிரஸ் முத்திரை விழுந்துவிட்டதோ, அப்போதே அவர், "உங்கள் ஓட்டுக்களை’ப் பெறும் யோக்யதையைப் பெற்று விட்டார் என்பது பொருள்! இதிலே வாதத்துக்கு இடமில்லை.

தேர்தல் காலத்திலே, இதுபோலப் பேசித்தான் "வெற்றி’ பெற்றனர். தேர்தலில் வெற்றி பெறுவதன் மூலம், அந்தத் திருவாளர் என்ன நன்மையைச் செய்யப் போகிறார்? அவருக்குள்ள ஆசாபாசங்கள் யாவை? திறமை அனுபவம் என்ன? என்பது பற்றிய நினைப்பே மக்கள் மனத்திலே இருக்க முடியாத படியான, பிரசாரம் நடைபெற்றது. இது ஒரு கட்சியின் மகத்தான வெற்றிக்கு உதவிற்று - ஆனால் அதே வெற்றி, பொதுமக்களின் நலனைக் கோரி அமைக்கப்பட்ட மக்களாட்சி முறைக்கு ஊறு செய்தது. காங்கிரஸ் கட்சி வெற்றி மாலை அணிந்து - மக்களாட்சி முறைக்கு அதுவே மரண ஓலையாகவுமாகிவிட்டது.

சில “தொகுதிகளில்’ காங்கிரஸ் சார்பில் நிறுத்தப்பட்ட அபேட்சகர்களின் அறிவுச் சூன்யத்தைப் பற்றி மக்கள் வேடிக்கையாகப் பேசிக்கொண்டே,”ஓட்டு” அளித்தனர் - காரணம், அவர்கள், தாங்கள் தரும் "ஓட்டு’ அந்த ஆசாமிக்கு அல்ல, காங்கிரஸ் கட்சிக்கு - என்று நம்பினர் - நம்பும்படி செய்யப்பட்டனர்.

“இது வெறும்”கைகாட்டி’ தானேப்பா!”

"கல்லுப்பிள்ளையார்போல இருக்கும் - வாயைத் திறக்காது".

"திறவாமலிருந்தால்தானய்யா நல்லது! திறந்தால் தெரிந்துவிடும், இது வெறும் பாண்டம் என்பது."

"ஆமாம். ஆமாம். புகையிலை விரித்தால் போச்சு! புண்ணியவான் பேசினால் போச்சு"

"உப்புச் சத்தியாக்கிரகத்தின்போது இந்த ஆசாமி காங்கிரசைக் கண்டபடி திட்டிக்கொண்டு இருந்தாரே. . ."

"இப்போது எப்படிக் காங்கிரசில் சேர்ந்தார் என்று கேட்கிறாயா? இது தெரியவில்லையா உனக்கு? காங்கிரசில் சேர்ந்தால்தான், சட்ட சபைக்குப் போக முடியும் என்பதனால் தான்."

"அது சரி - இப்படிப்பட்ட ஆளை, ஏன் காங்கிரஸ் கட்சி சேர்த்துக்கொண்டது?"

"ஊரிலே பெரிய ஆள் - பணக்காரன் என்பதனாலேதான்."

"பாவம்! பண்டரி, படாதபாடு பட்டு வந்தான் காங்கிரசுக்கு - அவனை நிற்க வைத்திருக்கலாம்."

"ஆமாம். அவன்கூடக் கேட்டானாம் - கெஞ்சினானாம்."

“கடைசியில்,"எதற்கும் உதவாததை‘ப் பிடித்து நிற்கவைத்து விட்டார்கள்."

"இது போய் அங்கே என்ன செய்யும்?"

"செய்வதாவது, மண்ணாவது! தூக்கு கையை என்றால் தூக்கும்! மற்ற நேரத்தில் தூங்கி விழும்."

•

பல தொகுதிகளில், பொதுமக்கள் இதுபோலப் பேசிக் கொண்டனர் - அபேட்சகர்களின் “யோக்யதாம்சங்களை‘ப் பற்றி. “ஓட்’ மட்டும் போட்டனர் - ஆளுக்காக அல்ல, கட்சிக்காக. இது கட்சிக்குள்ள சக்தியை, பிரசாரத்துக்குள்ள பலத்தை விளக்கிற்று - ஆனால் அதேபோது மக்களாட்சி முறையின் மாண்பையும் மாய்த்துவிட்டது. குன்றின்மீது மூ-கையும் உண்டு, முள்ளும் உண்டு. ஆனால் குறைமதியாளர் தவிர மற்றையோர், குன்றின்மீது உள்ளதெல்லாம் மூலிகை என்று கொள்ளார் - மூலிகை இது, முள் அது என்று பிரித்து எடுத்துப் பயன்படுத்துவர்! ஆனால்”குன்றுக்கு’ ஒரு”மகிமை’ கற்பித்து, அதன்மீது இருக்கும் “எதை’ எடுத்து உபயோகித்தாலும்”புண்யம்’ என்று கூறிவிட்டால், பெரும்பாலான மக்கள், மூலிகையா முள்ளா என்று ஆராய மாட்டார்கள், கிடைத்ததைக்கொண்டு களிப்படைவர். அதுபோல ஆயிற்று தேர்தல்! யாரும் "வர முடிந்தது’ முலாம் பூசிக் கொண்டதும்!

மக்கள் அளித்த “ஓட்டு’ தமக்கு அல்ல, தம்மைத் தழுவி உள்ள கட்சிக்கு - என்பது அபேட்சகர்களுக்கும், ஒரு அசட்டுத் தைரியத்தைக் கொடுத்தது - யாரும் தம்மை ஏதும் கேட்க முடியாது என்ற தைரியத்தை! அவர்களில் பலர் வெளிப்படையாகவே”எனக்கா "ஓட்டு’ தந்தனர் - என்ன செய்தாய்? ஏது செய்தாய்? என்று என்னைக் கேட்க! காங்கிரஸ் கட்சிக்குத் தந்தனர்!!” என்று பேசிக்கொண்டனர்.

தேர்தல் முடியும் வரையில் இந்தக் கருத்தை அடக்கத்துக்குப் பயன்படுத்தினர். பிறகு, ஆர்ப்பரிப்புக்குப் பயன்படுத்தினர். “நான் சாமான்யன் - எனக்காக ஓட்டுக் கேட்கவில்லை - மகத்தான காங்கிரஸ் கட்சிக்காக கேட்கிறேன்” என்று அடக்கமாகப் பேசி”ஓட்டு’ பெற்றனர் - பிறகு,

“என்னய்யா இது, ஓயாமல் வந்து, என் பிராணனை வாங்குகிறாய், ஓட்டு போட்டேன் ஓட்டு போட்டேன் என்று சொல்லிச் சொல்லி, பாத்யதை கொண்டாடுகிறாய்! இதோ பார்! நீ, ஒன்றும் எனக்குப் போடவில்லை ஓட்டு! தெரிகிறதா? காங்கிரஸ் கட்சிக்குப் போட்டாய். ஆமாம். போய் உன் குறைகளைக் கட்சியிலே சொல்லிக்கொள் - போக்கும்படி சொல்லு - இங்கே வந்து என் உயிரை வாங்காதே போ” என்று கடுகடுப்புடனும் பேசலாயினர். மக்களாட்சி கேலிக்கூத்தாக்கப் பட்டது. பெரும்பாலான தொகுதிகளில், பொதுமக்களுக்கு,”ஓட்டு’ பெற்றுக்கொண்டு போய், வெல்வெட்டு மெத்தைமீது உட்கார்ந்து கொண்டிருக்கும் “உயர்ந்தவர்களின்’ உருவம்கூடச் சரியாகத் தெரியாது! இப்படிப் பெட்டிக்குள் புகுந்துகொண்டு சட்டசபை சென்ற”பெருமான்களின்’ ஆட்சியிலேதான் நாடு இருக்கிறது.

கழைக்கூத்தாடி, நாம் நமது கழுத்து வலியெடுக்கும் விதமாகப் பார்க்கவேண்டிய அளவு உயரமுள்ள கம்பின்மீது ஏறிக்கொண்டு ஆடிக் காட்டுகிறான் - கத்தி கொண்டு வயிற்றில் குத்திக் காட்டுகிறான். அதைக் காணும் நாம் கைகொட்டுகிறோம் - சபாஷ் கூறுகிறோம் - ஆச்சரியமடைகிறோம் - அவன் திறமையை மெச்சுகிறோம்! அதுகேட்டு அவன் “என் திறமையைக் கண்டீர்களல்லவா? இப்படிப்பட்ட என்னை ஏன் நீங்கள் உங்கள் ஊர்த் தலைவனாகக் கொள்ளக்கூடாது?’ என்று கேட்கமாட்டான் - கேட்கத் துணிந்தால் கம்பின்மீது ஏறி வித்தை பல செய்தவன், தரையின்மீது நிற்கவும் முடியாதபடி, புத்தி கற்பிக்கும் வித்தையில் மக்கள் ஈடுபடுவர்! வைத்தியத்தில் நிபுணர் ஒருவர் - ஆனால் அதற்காக அவரிடம் நோயாளியைக் கொண்டுபோய்க் காட்டுவார்களேயொழிய, இடிந்த பாலத்தைக் காட்டி,

இதை எப்படிப் புதுப்பிப்பது என்று கேட்கமாட்டார்கள்! நூ-லுள்ள சிக்குகளைச் சுலபத்திலே நீக்கும் நிபுணர் இவர், இப்படிப் பட்டவருக்கு, எதுதான் சாத்யமாகாது? எல்லாம் செய்ய வல்லவர் என்று எண்ணமாட்டார்கள். போருக்குப் பயன்படும்”வீரன்’ சோறு செய்யப் பயன்பட்டே தீருவான், ஏனெனில் அவன் அவ்வளவு தீரமாகப் போராடியவன் என்று கருதமாட்டார்கள் - ஏமாளிகள் தவிர. ஒரு துறைக்குத் தேவையான பண்பும் பயிற்சியும் பெற்று நிபுணராகி விடுபவரைக்கொண்டு, எல்லாத் துறைகளிலும் பணி புரியவைத்துப் பயன் காணலாம் என்று எண்ணுவது பேதமை. ஆலும் வேலும் பிளக்க உபயோகமாகும் கோடரி வாழைக்குப் பயன்படுவதில்லை! பாறையைப் பிளக்கும் உளி கொண்டு, பச்சைக் காய்கறியை நறுக்கமாட்டார்கள்! ஒவ்வோர் துறைக்கும், ஒவ்வோர் செயலுக்கும் ஏற்ற தேவையான கருவியும் வேறு வேறு! ஒன்று, மற்றெல்லாவற்றுக்கும் பயன்படும் என்று எண்ணுவது ஏமாளித்தனம். ஏகாதிபத்யத்தை எதிர்த்துப் போர் புரியும் பயிற்சியும் பக்குவமும் பெற்ற ஒரு கட்சி, நாட்டை ஆளவும் பயன்பட்டே தீரும் - போரில் பெற்ற வெற்றிபோலவே, ஊராள்வதிலும் வெற்றி கிடைக்கும் என்று எண்ணுவது, "தேசியமாக’ கருதப்பட்டது! அதனாலேதான், யாரும் வர முடிந்தது - ஏதும் செய்யாதிருக்கும் போக்கு வளர்ந்தது - மக்களாட்சி முறை கேலிக் கூத்தாயிற்று.

•

பெரும் போர் முடிந்ததும் படை கலைக்கப்படுகிறது. - சமையல் காரியம் முடிந்ததும், நம் வீட்டு அடுப்பு நெருப்பைக் கூடத்தானே அணைத்துவிடுகிறோம்! அதுபோலவே ஏகாதிபத்ய எதிர்ப்புக்காகவெனத் திரட்டப்பட்ட "படை’யை அந்தக் காரியத்துக்கு மட்டும் பயன்படுத்திக்கொண்டு, பிறகு கலைத்து

விட்டிருக்க வேண்டும் - ஆனால், நடந்தது வேறு - விபரீதமானது - அந்தப் படை கலைக்கப்படவில்லை என்பது மட்டுமல்ல, மக்களின் வாழ்வு அந்தப் படையிடம் ஒப்படைக்கப்பட்டது என்பது மட்டுமல்ல, அந்தப் படைக்கு என ஏற்பட்ட சின்னத்தைப் பொறித்துக்கொண்டு கிளம்பிய கழுகுகளை எல்லாம் கிளிகளெனக் கருதிக்கொண்டனர் மக்கள் - நயவஞ்சகர்கள் பலர், அந்தச் சின்னத்தைப் பொறித்துக்கொண்டு, நாடாளும் வாய்ப்பைப் பெற்றனர்! கிளிக்கென இருந்த பொந்துக்குள் கருநாகம் குடிபுகுந்த கதைபோலாயிற்று! நல்லாட்சி முறை பற்றிய அக்கறை அடியோடு அழியலாயிற்று. காற்றுள்ள போதே தூற்றிக்கொள், கதர் உள்ளபோதே தேடிக்கொள் என்று இலாப வேட்டை ஆடக் கிளம்பிவிட்டனர்.

வாய்ப்பைப் பெற்ற இதிலே, யானையிடம் மாலையைக் கொடுத்து, அது யார் கழுத்தில் மாலையைப் போடுகிறதோ அவரை அரசனாகக்கொண்டு அந்த அரசனை ஆண்டவனுக்கு அடுத்தபடி என்று நம்பி அடக்க ஒடுக்கமாக நடந்துகொள்ள வேண்டும் என்ற விதமான அரசியல் தத்துவத்தில் நம்பிக்கை கொண்டவர்களும் உள்ளனர். அமெரிக்க நாட்டு அரசியல் முறையைத் திருத்தி, ஆஸ்திரே-ய நாட்டு ஆட்சி முறையில் ஒரு பகுதியைப் புகுத்தி, சோவியத் முறையைச் சிறிதளவு கலந்து பிரிட்டிஷ் பிடிவாதத்தையும் பிரஞ்சுப் பசப்பையும் சம எடையாகக் கலந்து புகுத்தி, அதேபோது "இந்தியப் பண்பாட்டை" இழந்துவிடாதபடியும் பார்த்துக்கொள்ளும் விதமான அரசியல் தத்துவத்தை நாடுபவர்களும் இருக்கிறார்கள். ஊராட்சி அமைப்புகள் ஒழிய வேண்டும் என்று கூறுபவர்களும் இருக்கிறார்கள். ஒழியக்கூடாது மேலும் அதிகமான அதிகாரம் அளித்து அமைக்க வேண்டும் என்பவர்களும் இருக்கிறார்கள்.

அரிசியைத் தீட்டிச் சாப்பிட வேண்டும் என்பார் உண்டு! தீட்டுவது தீது என்பாரும் உண்டு, ஆலைகள் வேண்டாம் என்பார் உளர், விவாக விடுதலை என்ற பேச்சே நாசகாலத்தால் ஏற்படும் விபரீத புத்தியின் விளைவு என்று பேசுபவர் உண்டு! தசரதனைக் காட்டி,"ஏகதாரம்' என்று கட்டுப்பாடு கூடாது என்று வாதிடும் பேர்வழிகள் உண்டு, அவர் மகன் ராமன்மீது ஆணையிட்டு "ஏகதாரம்' எனும் முறைதான் சட்டமாக வேண்டும் என்று கூறுவோர் உண்டு! ஜான்சி ராணியை சாட்சிக்கு அழைக்கும் வீரர்களும், சாவித்திரியைச் சாட்சிக்கு அழைக்கும் பக்தர்களும் புதுமை விரும்பிகளும் பழமைக்கொள்கையினரும், சகல வகையினரும் கொண்டதாகிவிட்டது காங்கிரசு கட்சி. ஆகவே, அதன் ஆட்சிக்கு உட்பட்ட நாடு, என்ன உருவம் பெறும் என்று எவ்வளவு பெரிய நிபுணராலும் கணிக்க முடியாத நிலை ஏற்பட்டது. அவர்கள் எல்லோருமே கதருடையினர், காங்கிரஸ் கட்சியினர். எனவே ஒவ்வொருவரும் தமது நினைப்பே சரி என்று கருதுகிறார் - அந்த நினைப்பின்படி நாடு ஆளப்பட்டால்தான் நன்மை கிடைக்கும் என்று எண்ணுகிறார். அந்த முறைதான் காங்கிரசின் உண்மையான திட்டம் என்று கருதுகிறார். இது, மக்களை மருளச் செய்யும் முறை - வாழ வைக்கும் முறையல்ல! என்பதுபோல, எல்லோரும் ஒரே கட்சியின் பெயரைக் கூறிக்கொண்டு சென்றவர்களே தவிர, அவர்களில், பல வகையினர் உண்டு - அவரவர்களின் திறமைக்கு ஏற்றபடி பலனையும் தேடிக் கொள்கிறார்கள்.

கலெக்டரையும் கன்ட்ரோல் ஆபீசரையும் மிரட்ட கதர் பயன்படுகிறது போதாதா இது என்று எண்ணிப் பூரிக்கும் "புண்ணியவான்கள்' மிகுந்துவிட்டனர். மந்திரிகளை மடியில் வைத்திருக்கிறேன் - கவர்னரைக் கைக்குள் வைத்திருக்கிறேன் - பக்தவத்சலம், என்னைப் பார்க்காவிட்டால் தூங்கமாட்டார் அவ்வளவு பிரியம் என்னிடம் என்று

அதுபோன்ற பல வகைப் பேச்சுப் பேசி, மிரட்ட, மயக்க, பயிற்சி பெறும் அளவுக்கு, பிரச்சினைகளை விவாதிக்க, திட்டங்களைத் தீட்ட, மசோதாக்கள் தயாரிக்க, பயிற்சி பெற்றனரா என்று யோசித்தால் நேர்மையுள்ள எந்தக் காங்கிரஸ்காரரும் வெட்கமும் துக்கமுமடைய வேண்டியது தான்; பண்பற்றவர், பயிற்சியற்றவர், பொறுப்பை மறந்தோர், பொதுமக்களைக் காணாதார், அக்கறையற்றவர், ஆள் விழுங்கிகள், இச்சகம் பேசுவோர், உருமாறிகள் என்று இவ்விதமாக ஒரு பட்டியலே தயாரிக்கலாம், ஆள வந்தோம் என்று கூறிக் கொண்டவர்களை. இது மக்களாட்சி முறையல்ல - கட்சிப்பற்று காரணமாக இந்த நிலையை வளரவிடுகிறார்கள்.

•

காங்கிரஸ் கட்சி எவ்விதமான முறையிலே மாறிவிட்டது என்பதையும், எத்தகைய போக்கினர்களெல்லாம் அதிலே இருந்து வருகின்றனர் என்பதையும், எப்படிப்பட்ட சுயநலக்காரரெல்லாம் இடம் பிடித்துக்கொண்டு, இலாப வேட்டை ஆடுகின்றனர் என்பதையும் உணர்ந்து, மனம் வெதும்பி, காங்கிரசை விட்டு வெளியேறிவிட்டவர் பலர்! என் நண்பரும் அதுபோல ஆக வேண்டியவர்; அவர் மட்டுமா! வேறு பலரும் உளர்.

ஆகவேதான் தம்பி! அவர்கள் நம்மிடம் கோபம் கொண்டாலும் வெறுப்பைக் காட்டினாலும், நாம் பொறுமையை இழந்திடாமல், நமது பொறுப்பு பெரிது என்பதனை உணர்ந்து அவர்களின் மனத்திலேயும் நமது கருத்துக்கள் பதிந்திட வேண்டும் என்ற நோக்கத்துடனும் அதற்குத் தேவைப்படும் பக்குவத்துடனும் நடந்துகொள்ள வேண்டும் என்பதனை நான் வலியுறுத்தியபடி இருக்கிறேன்

கேட்டால் கேள், விட்டால் விடு!

என்ற போக்கிலே நம்முடைய பேச்சு இருந்திடவே கூடாது. நாம் கூறுவதை அவர்கள் ஏற்றுக்கொள்ளாமலிருப்பதை காணும்போது,

நமது பிரசார முறை மேலும் நேர்த்தியானதாக வேண்டும்,

என்ற எண்ணம் தோன்றவேண்டுமே தவிர எரிச்சல் எழக் கூடாது.

எடுபிடியாகிலும் இனிப்புப் பெற்றிட வேண்டும் என்ற நோக்குடன் ஒட்டிக்கொண்டவைகளை அல்ல நான் குறிப்பிடுவது; ஒரு காலத்தில் காங்கிரஸ் நாட்டு விடுதலைக்காகப் போராடிய அமைப்பாயிற்றே என்பதனை எண்ணி எண்ணி நெஞ்சு நெகிழ்ந்திடும் நல்லோர் பற்றிக் குறிப்பிடுகிறேன்.

வேடிக்கை என்பதா? வேதனை தருவது என்பதா? பாரேன், தம்பி! 1947லில் சுயராஜ்யம் கிடைத்ததே அதனை "துக்க தினம்' என்று அறிவித்த பெரியார் இன்று காங்கிரஸ் கட்சிக்கு மிகவும் வேண்டியவர்! ஆகஸ்டு 15, துக்க தினம் அல்ல; விடுதலை நாள்! விழா நாள்! என்று (எதிலும் பெரியாரிடமிருந்து மாறுபடாமலிருந்து வந்த) தெரிவித்து அவருடைய கோபத்துக்கு ஆளான நான் காங்கிரசாரால் கடுமையாகக் கண்டிக்கப்படும் நிலையிலே இருந்து வருகிறேன்.

விடுதலைப் போர் நடாத்திய காங்கிரசிடம் எனக்கும் உனக்கும் தம்பி! மதிப்பு இருக்கிறது; இருப்பதுதான் முறை! ஆனால் விடுதலைப் போர் நடாத்திய காங்கிரசிலே - போர் முடிந்து அறுவடை ஆரம்பமான பிறகு இடம் பிடித்துக் கொண்டுள்ள வர்கள் செய்திடும் செயலை எப்படி நாம் போற்ற முடியும் பாராட்ட முடியும்?

காங்கிரஸ் விடுதலைப் போர் நடாத்தி நாட்டுக்கு

சுயராஜ்யம் வாங்கிக் கொடுத்ததற்காக மதித்திட போற்றிட மனமற்றவர்கள் காங்கிரஸ் ஆட்சியை நடத்த ஆரம்பித்த பிறகு மதித்திட, போற்றிட முன் வந்திடின், என்ன பொருள்? உள்ளன்பு என்றா அதனைக் கூற முடியும் ஆசையோ அச்சமோ அதற்கு காரணமாக இருக்க முடியுமே தவிர பாசம் - பற்று - என்றா கூற முடியும்? பேதையும் கூறிடானே!

காங்கிரசில் இடம் பிடித்துக்கொண்டவர்களின் இயல்புக்குத் தக்கபடி, அந்தக் கட்சியும் அதனால் நடத்தப்படும் ஆட்சியும் இன்று இயல்புகளைப் பெற்றுக்கொண்டுவிட்டது.

அந்த இயல்புகளைத்தான் நாம் வெறுக்கிறோம், கண்டிக்கிறோம்.

தம்பி! சர்க்கரைப் பொங்கலிலே முந்திரிப் பருப்பு போடுவது முறை, தேவை. ஆனால் சர்க்கரைப் பொங்கலிலே இலுப்பைக் கொட்டைகளைப் போட்டிடின், எவர் விரும்புவர்? என்ன ஆகும் அந்த இனிப்புப் பண்டம்! முக்கனிச் சாற்றினிலே ஒரு பிடி தெருப் புழுதியைக் கலந்திடின் பருகிட எவர் இசைவர்?

இன்றையக் காங்கிரசின் இந்த நிலையினை உணர்ந்ததால் தான், பலர் அந்தக் கட்சியைவிட்டு வெளியே சென்றுவிட்டனர்; பலர் இருக்கின்றனர் ஒப்புக்கு; கட்சியில் இடம் பிடித்துக் கொண்டவர்கள் செய்திடும் பாதகங்களுக்கு உடந்தையாக இருந்து தீரவேண்டி நேரிட்டுவிட்டதே என்ற வேதனையைச் சுமந்துகொண்டு.

இன்றையக் காங்கிரஸ், எவருக்குப் பயன்பட்டு வருகிறது என்பதைக் கண்டதாலேதான், பொதுமக்கள் இன்று கழகத்தை ஆதரிக்கின்றனர்.

இன்றையக் காங்கிரசிடம் சுவைமிக்க பலன்

எதிர்பார்த்து இளித்துக் கிடப்போரே அதிகம் உளர். பற்றுவைத்துள்ளவர் அதிகம் இல்லை என்பதை உணர்ந்ததால்தான், மக்களுக்கு மன மயக்கம் தரத்தக்கது எதையாகிலும் சொல்லித் தீரவேண்டிய நிலைமைக்குக் காங்கிரஸ் "சூத்திரதாரிகள்’ வந்துள்ளனர்.

அத்தகைய மன மயக்கத்தை ஊட்டவே, "சோஷியலிசம்’ பேசுகின்றனர்.

•

நெற்றியிலே திருநீறு! கழுத்திலே உருத்திராட்சமாலை! கட்கத்தில், எதையோ பட்டுத் துணியால் போர்த்து வைத்திருக்கிறார்! சிவக்கோலத்துடன் விளங்கும் அவரை மன்னர் அன்புடனும், பக்தியுடனும் வரவேற்கிறார்; கட்கத்தில், ஏதோ சிவாகம ஏடு இருக்கிறது; அடியார், நமக்கு அதனைக் காட்டி, நாதனின் நற்பாதத்துக்கு வழிகாட்டப் போகிறார். நமக்கு இது ஓர் நன்னாள்! நல்லாசான், நம்மைத் தேடி வந்துள்ளார் என்று எண்ணிய மன்னன், வருக! வருக! சிவக்கோல பெரியீரே வருக! என்னை வாழ்விக்க வந்துள்ள பெம்மானே வருக என்று கூறி வரவேற்கிறார் - வந்தவர் குறுநகை புரிகிறார் - வணங்கியவர், அது அவருடைய அருள் நெறியின் விளக்கம் என்று எண்ணு கிறார்; வந்தவர், கட்கத்திலிருந்த மூட்டையை அவிழ்க்கிறார் - கூரிய வாள் மின்னுகிறது - மன்னனின் மார்பில் பாய்கிறது - அவர் சாய்கிறார் - சதிகாரன் களிக்கிறான் - வேடம் ப-த்தது - வெற்றி கிடைத்தது! வீர வேந்தனைக் களத்திலே வீழ்த்துவது முடியாத காரியமாக இருந்தது - இதோ முடித்துவிட்டேன் காரியத்தை. மன்னனின் கருத்தை மயக்க ஒரு சிறு கபட நாடகமாடிக் காரியத்தைச் சாதித்துவிட்டேன் என்று களிக்கிறான்.

இரு மன்னர்கள் போரிட்டனர். அதிலொருவன் போரில் புலி - மற்றவன் குணத்தால் நரி. புலி எனப்

போரிடும் மன்னன் சிவனடியார்களைக் கண்டால் போதும், அவர்கள் பாதத்தைச் சிரமீது கொள்ளவும் தயங்காக் குணமுடையவன். இது தெரிந்த முத்தநாதன் என்ற நரிக்குணத்தான், நன்றாகக் குழைத்து நீறுபூசிக் கொண்டான். உருத்திராட்சத் தாவடங்கள் அணிந்துகொண்டான். கூரிய கட்கத்தைப் பட்டுத் துண்டுகொண்டு மறைத்தெடுத்துக் கொண்டான். வீர வேந்தனைத் தனியாகக் கண்டு சில பேச அனுமதி கோரினான்; வேடத்தைக் கண்ட வேந்தன் ஏமாந்தான். மெய்ப்பொருள் உணர்த்த வந்தேன் என்றான் வேடதாரி - தன்யனானேன் என்றான் சூதறியா மன்னன், உயிரை இழந்தான்.

மெய்ப்பொருள் நாயனார் கதை என்று கூறுவர் இதனைப் பெரிய புராணத்தில் - வேடத்தைக் கண்டு ஏமாறலாகாது என்ற அறிவுரைக்குப் பயன்படுத்துவதுமில்லை. இதனைச் சிவ பக்தியின் மேன்மைக்கு ஒரு எடுத்துக்காட்டாகவே பயன்படுத்துகின்றனர். கதைகளைப் பக்தர்கள், எங்ஙனம் பயன்படுத்துகிறார்கள் என்பதைக் கூற அல்ல, இதனை நாம் இங்குத் தீட்டுவது, சைவத்தின்மீது அளவு கடந்த பற்றுக் கொண்டவரை "சிவ வேடம்' பூண்டு ஏய்த்து மாய்த்த, அந்தப் பெரிய புராணத்தின் மறு பதிப்பென, இப்போது நமது நாட்களிலே, அரசியல் துறையிலே நடைபெறும், உரிமைப் படுகொலைகளைப் பற்றிக் குறிப்பிடவே இதனைக் கூறினோம்.

நெற்றியிலே நீறு, எனவே நேர்மையிலே நாட்டமிருக்க வேண்டும். கழுத்திலே சிவச் சின்னம், ஆகவே அதை அணிந் திருப்பவரின் உள்ளம் தூய்மையானதாக இருந்தே தீரவேண்டும். கட்கத்திலே ஏதோ இருக்கிறது, சிவ கோலத்தவரிடம், சிவாகம் ஏடுதான் இருக்கும் - என்ற முடிவுக்கு, பக்தியின் காரணமாக வந்து உயிரை இழந்த மன்னன்போல,

வேடத்தைக் கண்டு ஏமாந்து, உரிமையை இழந்துவிடும் பரிதாபத்துக்குரிய மக்கள் அரசியல் துறையிலே அநேகர் உள்ளனர்.

மெய்ப்பொருள் உரைக்க வந்துள்ளார் என்று எண்ணி வேந்தன் உயிரிழந்ததுபோலவே அரசியலில், வேடத்தைக் கண்டு மயங்கி, அந்த வேடதாரிகள், நற்பொருள் தர வந்திருக்கிறார்கள் என்று நம்பிக்கைக்கொண்டு, பிறகு தமது உரிமையை நாசம் செய்துகொள்ளும் மக்கள், இதுபோது உள்ளனர்.

யாருக்கும், ஏதேனும் ஓர் பொருளின்மீது பற்று மிகுதியாக இருப்பின், அவர்களை, எத்தர்கள் ஏய்க்க எண்ணும்போது, எதன்மீது அவர்களுக்குப் பிரியம் அதிகமோ, அதேபோல் கோலம் பூண்டு வந்தே ஏய்ப்பர் - ஏய்த்திருக்கின்றனர் - ஏமாளிகள் உள்ளவரையில் இத்தகைய எத்தர்கள் இருக்கத்தான் செய்வர். பற்று இருக்கத்தான் வேண்டும் ஏதேனும் ஓர் கொள்கையினிடம் - மரக்கட்டைகளாக இருத்தலல்ல மாந்தர்க்கழகு - ஆயினும் பற்று, நமக்குப் பகுத்தறிவையும் பாழாக்கும் மூடுபனியாகும் படியாக மாறிவிட அனுமதிக்கலாகாது.

இந்த மூடுபனியை ஓட்டித்தான் தம்பி! நாம் அறிவொளியைத் தந்திட வேண்டும்.

நெற்றியிலே உள்ள நீறு சரி; கழுத்திலே உருத்திராட்ச மாலை சரி; மகிழ்ச்சி, மதித்திடுவோம்; ஆனால் கட்கத்தில் மூட்டையில் உள்ளது என்ன? என்று மட்டும் மன்னன் கேட்டிருந்திருப்பின், படுகொலை நேரிட்டிருக்காதே! அது போலவேதான் தம்பி! ஜனநாயகமா? மகிழ்ச்சி! வரவேற்கிறோம்! சோஷியலிசமா? மிக்க மகிழ்ச்சி! வரவேற்கிறோம்! ஆனால், இவர் யார்? அதோ அவர் யார்? இவருடைய நிலை என்ன? விலை என்ன ? வேலை என்ன? அதோ அவருடைய இயல்பு என்ன? இருப்பு எவ்வளவு? இவர் போன்றார் உள்ள இடத்திலா சோஷியலிசம்

வளரும், மலரும்? என்று கேட்டிடத் தெளிவும் துணிவும் வேண்டும்! இல்லையேல், உரிமை படுகொலை செய்யப்பட்டுவிடும்!

விதை தூவினால் மட்டுமே பயிர்! ஆனால் எங்கே தூவினால்? பாறைமீது தூவிய விதை பறவைகளுக்கு; பயிர் ஆகிடாது!

நெல்லும் பதரும், ஒரே வடிவம்! நெல்லென்று எண்ணிக் கொண்டு பதரினை விதையாகத் தூவிடின், நிலம் தரமாக இருந்திடினும் முளை கிளம்பிடுமோ ?

பாறைமீது தூவிய விதைபோலவே இன்று காமராஜர் பேசிடும் ஜனநாயக சோஷியலிசம் உளது. இதனை உணருவதற்கு அதிகமான முயற்சியும் தேவையில்லை. அவருடைய உலாவின் போது உடன் இருப்போரைக் கண்டாலே போதும்.

உடன் இருப்போர் ஊர்க் குடி கெடுப்போர் என்று மக்கள் அறிவர்! உடனிருப்போர், பிறர் உழைப்பின் பலனை உண்டு கொழுப்போர்; இதனை ஊரறியும்.

ஆனால் அந்த உத்தமர்களை வைத்துக்கொண்டு சோஷியலிசம் பேசுகிறார் பெரியவர்! அவர்களும், ஆமாம்! சோஷியலிசத்தைத் தான் நாங்கள் ஆதரிக்கிறோம்!! - என்கிறார்கள்.

இந்தியாவுடன் நட்பு வேண்டும் என்றுதான் சீனா கேட்கிறது!! எல்லையைக் கொத்திக்கொண்டே!!

இங்குள்ள முதலாளிமார்களும், ஏழையின் வாழ்வை வதைத்துக் கொண்டே, சோஷியலிசக் கீதம் பாடுகிறார்கள். மெய்ப் பொருள் நாயனார் கதைபோலவே இருக்கிறது அவர்கள் ஏழை எளியோரிடம் காட்டிடும் சோஷியலிசக் கோலம்!!

காமராஜர், வேண்டுமென்றே கபட நாடகமாடி

ஏழை எளியோர்களை ஏய்க்கிறார் என்று நான் கூறவில்லை, தம்பி! எத்தனை அரசியல் கருத்து வேற்றுமை இருந்திடினும், அவர்மீது பழி சுமத்திடும் அளவுக்குத் தாழ்ந்துபோகவும், தரக் குறைவு கொள்ளவும் நான் தயாராக இல்லை.

அவர் நரியைப் பரியாக்கிக் காட்ட முயலுகிறார், முதலாளிகளை சோஷியலிஸ்டுகளாக்கிக் காட்டுகிறார்.

தென்பாண்டி மண்டலத்துக் காமராஜருக்கு நரி பரியான கதை தெரிந்திருக்க வேண்டும்!

திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள், குதிரை வாங்கக் கொடுத்த பணத்தைக் கோயிலுக்காகச் செலவிட்டு மன்னனின் சீற்றத்துக்கு ஆளாகி மருண்டு கிடந்த "பக்தனை'க் காத்திட, நரி பரியாகும் திருவிளையாடலை நடாத்திக் காட்டினார் என்பர் புராணம் படிப்போர்.

குதிரை வாணிபனாக வடிவம் கொண்டு, காட்டினில் கிடந்த நரிகளைப் பரிகளாக்கி, மன்னனிடம் தந்து, அவன் மகிழ்ச்சி கொண்டு, அந்தக் குதிரைகளைக் கொட்டிலில் கட்டி வைத்திட, இரவு பரியாக மாறிக் கிடந்த நரிகள் பழையபடி நரிகளாகி, ஊளையிட்டுப் பாய்ந்து, ஏற்கனவே ஆங்கு இருந்த பரிகளைக் கடித்துக் குதறிவிட்டுக் காடு நோக்கி ஓடிவிட்டன என்பர்.

கண்ணுதற் பெருங் கடவுளாலேயே, நரியைப் பரிபோல் வடிவம் கொண்டிட மட்டுமே செய்திட முடிந்தது.

நரிகள் பரிகளாகிவிடவில்லை, நாதன் நடத்திய திருவிளையாடலின் போதேகூட!

ஆனால் காமராஜர், கனதனவான்களை, கள்ளச் சந்தையினரை, கொள்ளை இலாபமடித்திடுவோரை,

சோஷியலிஸ்டுகளாக்கிட முடியும் என்கிறார்; நம்பச் சொல்கிறார்!!

ஆண்டவனே முயன்றாலும் நரி, பரியாகிவிடாது என்பதனைத் திருவிளையாடல் பற்றிய திருக்காதையே காட்டு கிறது - காமராஜரின் திருவிளையாடலிலா நம்பிக்கை கொள்ள முடியும்?

மக்களுக்கு நம்பிக்கை எழாது நிச்சயமாக! ஆனால் ஒரு மயக்கம் ஏற்படும் அல்லவா? அதுபோதும் ஓட்டுகளைத் தட்டிப் பறித்திட என்று அவர் திட்டமிடுகிறார்.

அந்த மயக்கத்தைப் போக்கிடும் தொண்டினில் நாம் நம்மை ஈடுபடுத்திக்கொண்டிருக்கிறோம். தன் திட்டத்தைத் தாக்குகிறார்களே என்பதாலே அவருக்கு நம்மீது ஆத்திரம்! விநாடிக்கு விநாடி அந்த ஆத்திரம் வளருகிறது, பொங்குகிறது.

காமராஜர் தயவால் ஒரு புதிய வேட்டை கிடைக்க இருக்கிறதே, அதனை இந்தப் "பாவிகள்' கெடுத்துத் தொலைக் கிறார்களே என்பதை எண்ணிடும்போது முதலாளிமார்களுக்கு நம்மீது கோபம் - கொதிப்பு!

இந்த இரண்டு எதிர்ப்புகளையும் தாங்கிக்கொண்டுதான் நாம் பணியாற்றவேண்டி இருக்கிறது. நமது பணி பெரிது! பொறுப்பு அதனைவிடப் பெரிது! எதிர்ப்பு, பல வகையின, மிகப் பெரிய அளவினதுமாகும்!

"அப்படியா அண்ணா!" என்று ஆயாசக் குரலிலே கூறிடமாட்டாய். அதனால் என்ன அண்ணா நான்தான் அந்தப் பணிக்கு என்னை ஒப்படைத்துவிட்டேனே! அஞ்சாதே அண்ணா! அறம் வெல்லும்!! என்று உறுதியுடன் பேசிடுவாய் என்பதை உணர்ந்தே தம்பி! உன்னை அழைக்கிறேன். வேறு யாரை நான் அழைப்பேன்?

அன்புள்ள

அண்ணாதுரை

23-10-66

எல்லாம் தருமத்துக்கு!

“எல்லாச் சொத்தும் தருமத்துக்கு எழுதி வைத்து விட்டேன்’ - சீமான்.
”பாங்குகளைச் சமுதாயக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் போகிறோம்.’ - காங்கிரஸ்
ஏழைகளின் ஓட்டும் வேண்டும்! முதலாளிகளின் நோட்டும் வேண்டும்!
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகிறார்கள்
பாங்குக் கட்டுப்பாட்டுத் திட்டம் வெடிகுண்டு அல்ல! வெறும் புஷ்வாணம்!

தம்பி!

எங்கோ படித்ததாக நினைவு. நகைச்சுவைக்காக எழுதப்பட்டதுதான் என்றாலும் நான் கூற நினைக்கும் பிரச்சினைக்குப் பொருத்தமாக அமைந்திருப்பதால் அதனைச் சொல்லுகிறேன்.

ஒரு சீமான், பிள்ளை குட்டிகள் இல்லை. பெரிய சொத்து! இவ்வளவு சொத்தும் யாருக்குப் போய்ச் சேரப்போகிறதோ, யார் அனுபவிக்கக் கொடுத்து வைத்தவர்களாக இருக்கிறார்களோ என்று ஊரார் பேசிக்கொண்டனர்.

ஒரு நாள் அந்தச் சீமான் பத்திரிகை நிருபரிடம் சொன்னார்,

என் சொத்து முழுவதையும் தருமத்துக்கு எழுதி வைத்துவிட்டேன் என்று.

துள்ளிக் குதித்தோடினார் நிருபர், இதழகத்துக்கு. கொட்டை எழுத்தில் செய்தியை வெளியிட்டார். இன்ன சீமான் தன் சொத்து முழுவதையும் தருமத்துக்கு எழுதி வைத்துவிட்டார் என்று.

சீமானின் படம், புன்னகை பூத்த முகத்துடன்!

பாராட்டுக் குறிப்பு அவருடைய இயல்பை மெச்சி.

மற்ற இதழ் நிருபர்களுக்குக் கிடைக்காத வாய்ப்பைத் தட்டிப் பறித்துக்கொண்டாரே இந்த நிருபர் என்று அவருக்குப் பாராட்டு!

இவ்வளவு பரபரப்பு மூண்டுவிட்டது. மற்ற நிருபர்கள் சீமானை மொய்க்கத் தொடங்கினார்கள் விவரம் கேட்டறிய. என்னென்ன தரும காரியத்துக்குச் சொத்தினை எழுதி வைத்திருக்கிறார்? சிவன் கோயிலுக்கு எவ்வளவு? மடத்துக்கு எவ்வளவு? பஜனைக் கூடத்துக்கு என்ன சொத்து? பள்ளிக் கூடத்துக்காக ஏதாகிலும் உண்டா? அனாதைப் பிள்ளைகளுக்காக? - என்று இப்படிக் கேள்விகள் அடுக்கடுக்காக!

சீமான், கேள்விக் கணைகளைத் தொடுத்தவர்களைப் பார்த்த பார்வையில், ஒரு திகைப்பே இருந்தது.

"என்ன கேட்கிறீர்கள்? இதெல்லாம் என்ன கேள்வி?" என்று கேட்டார் சீமான்.

"தொல்லை கொடுப்பதாகக் கருதக்கூடாது. ஊரே எதிர்பார்க்கிறது விவரம் அறிய. அதனால்தான் கேட்கிறோம்" என்றார் நிருபர்.

"என்ன விவரம்?" - என்று கேட்டார் சீமான்.

"தாங்கள் தங்கள் சொத்து முழுவதையும் தருமத்துக்கு எழுதி வைத்திருக்கிறீர்களே, அதற்கான

விவரத்தைத்தான்" என்றார்கள் நிருபர்கள்.

ஒரு வெடிச் சிரிப்புக் கிளம்பிற்று சீமானிடமிருந்து, "அட இழவே! நான் சொன்னதைத் தப்பர்த்தம் செய்துகொண்டீர்கள் என்றல்லவா தோன்றுகிறது. ஐயா! நான் என் சொத்து முழுவதையும் தருமத்துக்கு எழுதிவைத்துவிட்டேன் என்றேன். உடனே உங்களுக்குக் கோயில், குளம், சத்திரம், சாவடி இவைகளின்மீது கவனம் போயிற்று; நான் அந்தத் தருமத்தைச் சொல்லவில்லை ஐயா! சொத்து முழுவதையும் என் பங்காளிகள் ஏதாகிலும் பிற்காலத்திலே பற்றிக்கொள்ளக் கிளம்புவார்களோ என்ற பயத்தில், இப்போதே என் மனைவி பேருக்கு எழுதிவைத்து விட்டேன். அதைத்தான் நான் சொன்னேன், சொத்து முழுவதையும் தருமத்துக்கு எழுதி வைத்துவிட்டேன் என்று. என் மனைவி பெயர் தர்மாம்பாள் - செல்லமாக தருமு! தருமு! என்று அழைப்பேன்! அதனால் சொத்து அவ்வளவும் தருமத்துக்கு எழுதி வைத்துவிட்டேன் என்று சொன்னேன் என்றார். நிருபர்கள் திணறிப் போயினர்! விஷயம் இப்படி இருக்கும் என்று எண்ணிப் பார்க்காமல், சீமானை, வள்ளல் என்றும், தருமவான் என்றும் ஏகப்பட்ட தூக்கு தூக்கிவிட்டோமே! ஆசாமி நம்மைப் பைத்தியக் காரராக்கிவிட்டாரே! என்று எண்ணி வெட்கப்பட்டனர்.

தருமாம்பாளுக்கு என்று சொல்வதற்குப் பதிலாக தருமத்துக்கு என்று சொன்னதால் இத்தனை விபரீதமான அர்த்தம் எழும்பிவிட்டது.

இந்தக் கதைதான் தம்பி! நினைவிற்கு வருகிறது, காங்கிரஸ் கட்சி இப்போது பேசிக்கொண்டு வரும் பேச்சைக் கேட்கும்போது.

மறை பொருள்
இரு பொருள்

குறை பொருள்

இந்த முறையிலே கொள்கைகளையும் திட்டங்களையும் பற்றி அவர்கள் பேசுவதால், முழுப் பொருளை, உண்மைப் பொருளை அறிந்து கொள்ளாதவர்கள் மயங்குகின்றனர். வேறு விதமான பொருள் கொள்ளுகின்றனர்.

இதனைத் தனக்குச் சாதகமாக்கிக்கொள்ள முனைகிறது காங்கிரஸ் கட்சி.

இந்த விதமான "இரு பொருள்’ தரும் பேச்சை ஒரு பொறுப்புள்ள கட்சி பேசுவதை ஜனநாயகத்தில் நன்கு தேர்ச்சி பெற்ற நாட்டினர் ஏற்கமாட்டார்கள். இங்கு?

தேள் கொட்டிற்று
தேனாக இனித்தது

என்று பேசிடக்கூட அவர்கள் துணிவு பெறுகிறார்கள். என்ன விபரீதமான பேச்சய்யா இது! - என்று கேட்டிடினோ, புருவத்தை நெறித்தபடி கேட்கவும் முனைகின்றனர்.

தேள் கொட்டாதா?
தேன் இனிக்காதா? - என்று.

வேடிக்கைக்காகச் சொல்லுகிறேன் என்றோ, அவர்களிடம் பகை உணர்ச்சி கொண்டதால் அவ்விதம் பேசுகிறேன் என்றோ எண்ணிக்கொள்வர். அவ்விதம் நான் பேசுபவன் அல்ல.

தீவிரத் திட்டம்
அதிதீவிரத் திட்டம்
புரட்சித் திட்டம்
புதுமைத் திட்டம்
பொது உடைமைத் திட்டம்

என்றெல்லாம் பாராட்டினர் பலர். சீமான் தன் சொத்து அவ்வளவையும் தருமத்துக்கு எழுதிவைத்துவிட்டதாகச் சொன்ன உடன் பாராட்டியதுபோல.

எப்போது கிடைத்தது அந்தப் பாராட்டு?

காங்கிரஸ் எர்ணாகுளத்தில் கூடி, நாட்டிலுள்ள பாங்குகளை இனி சர்க்கார் உடைமையாக்கிக்கொள்ளும் என்ற கருத்துப்பட, ஒரு தீர்மானம் நிறைவேற்றி, அதனைத் தேர்தல் அறிக்கையிலே இணைத்தபோது.

பாங்குகளைத் தேசீய உடைமையாக்க வேண்டும்; இன்று அந்த அமைப்புகள் முதலாளிகளின் ஆதிக்கத்தை வளர்க்கும் கருவிகளாக உள்ளன; உண்மையான நாட்டு முன்னேற்றத்துக்கு, மக்களின் நல்வாழ்வுக்குப் பயன்படுவதில்லை; முதலாளிகள் மேலும் மேலும் தங்கள் தொழில்களைப் பெருக்கிக்கொள்வதற்கே பயன்பட்டு விடுகின்றன என்ற கருத்து பல ஆண்டுகளாக வலியுறுத்தப்பட்டு வருகிறது.

துவக்கத்திலே இந்தக் கருத்தைத் துடுக்குத்தனம் என்றும், பொருளாதாரச் சீர்குலைவு உண்டாக்க வல்லது என்றும், தனி நபர் உரிமையைத் தகர்த்துவிடுவது என்றும் கூறித் தாக்கினர் காங்கிரஸ் அரசினர்.

விவரம் அறியாதார் பேச்சு என்றும், வீண் குழப்பம், மனப் பிராந்தி என்றும் கூறினர், கண்டித்தனர்.

ஆனால் இந்தக் கருத்து மக்களாலே வரவேற்கப்பட்டு வலிவு பெற்றது.

இந்தக் கருத்தினைக் கூறி, மக்களைத் தம் பக்கம் முற்போக்குக் கட்சிகள் இழுத்துக்கொண்டு விடுமோ

என்ற அச்சம் ஆளவந்தார்களுக்கு ஏற்பட்டது.

அதனால்தான் ஆளவந்தார்கள், மக்களை மயக்கிட, பாங்குகளைத் தேசிய உடைமையாக்கத் திட்டமிட்டு விட்டிருப்பதாக அறிவித்தனர்.

எர்ணாகுளத்தில் இந்தப் பேச்சு திட்ட வடிவம் கொண்டது; ஆனால் அதற்கு முன்பே தமிழகத்தில் "நிலை அறிய'ச் சுற்றுப் பயணம் நடத்திய முன்னாள் நிதி அமைச்சர், டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், அழுத்தந் திருத்த மாகக் கூறினார் பாங்குகள் தேசிய உடைமைகளாக்கப்பட வேண்டும் என்று.

அவர் சொன்னதன் விளைவுதான் எர்ணாகுளத்தில் எடுக்கப்பட்ட முடிவு என்று கருத இடம் இருந்தது. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், பொருளாதாரத் துறையிலே புலி! நிதி அமைச்சராக ஒரு முறைக்கு இரு முறை வேலை பார்த்தவர்; வித்தகர் என்று பாராட்டப் பட்டவர்; அவர் கூறுகிறார், பாங்குகள் தேசிய உடைமையாக்கப் படவேண்டும் என்று.

காங்கிரசின் நடுநாயகர் அவர்!
பொருளாதாரத் துறையிலே நிபுணர் அவர்!

அவரே கூறவிட்ட பிறகு, அது பற்றி ஐயப்பாடு கொள்ளப் போமோ! பாங்குகளைத் தேசிய உடைமையாக்கினால் பொருளாதாரச் சீர்குலைவு ஏற்படும் என்ற அச்சத்தைக் கிளப்பிடுவோர் இனி வாய் மூடிக்கொள்வர் என்று காங்கிரஸ் பேச்சாளர்கள் விளக்கமளித்தனர்.

இதனைவிடத் தீவிரமான திட்டம் வேறு இருக்க முடியுமா?

இதைப்போன்ற புரட்சிகரமான திட்டத்தைக் காட்டிலும் வேறு என்ன திட்டம் காட்ட முடியும் எதிர்க் கட்சிகளால்?

என்றெல்லாம் எக்காளமிட்டனர்.

தம்பி! நம்மைப்போல விளக்கம் வேண்டும், இரு பொருள் கூடாது என்று கருதுபவர்கள், எர்ணாகுளத்துத் தீர்மானத்தில் பாங்குகளை தேசிய உடைமையாக்கிவிடப் போகிறோம் என்று திட்டவட்டமாகக் கூறக் காணோமே என்று கேட்டபோது சீறி விழுந்தனர், ஆளுங் கட்சிச் சீலர்கள். ஏடா! மூடா! தேசிய உடைமையாக்குவோம் என்று இவ்வளவு வெளிப்படையாகச் சொன்னால்தானா - ஏன்! - கோடிட்டுக் காட்டினால் போதாதா?

Social Control - சமுதாயக் கட்டுப்பாடு

என்று கூறியிருக்கிறோமே. அதன் பொருள் என்ன என்று அறிந்துகொள்ளக்கூடவா முடியவில்லை? அத்தனை மந்த மதியா? - என்றெல்லாம் பேசிக் கேலி செய்தனர்.

Social Control - சமுதாயக் கட்டுப்பாடு என்பதற்கும், Nationalisation - சர்க்கார் உடைமையாக்குவது என்பதற்கும் வித்தியாசம் இல்லையா? நிரம்ப!!

அதனைச் சிலர் எடுத்துக்காட்டியபோதுகூட, மறுத்தனர் இந்த மகானுபாவர்கள்.

பாங்குகளைத் தேசிய உடைமையாக்க வேண்டும் என்று வலியுறுத்திக்கொண்டிருக்கும் கிருஷ்ணமேனன், Social Control சமுதாயக் கட்டுப்பாடு என்பதற்கு உண்மையான பொருள், நடைமுறைப் பொருள் - Nationalisation தேசிய உடைமை யாக்குவது என்பதுதான் என்று விளக்கம் கூறினார்.

அப்போதுகூட ஆளவந்தார்கள், இல்லை! இல்லை! நாங்கள் கூறும் சமுதாயக் கட்டுப்பாடு வேறு, தேசிய உடைமையாக்குவது என்பது வேறு என்று அறிவிக்கவில்லை.

சொத்து அவ்வளவும் தருமத்துக்குத்தான் என்று கூறிய சீமான்போல இருந்துவிட்டனர்.

ஏழை எளியோர்களின் செவிகளுக்கு பாங்குகள் சர்க்கார் உடைமையாக்கப்படும் என்ற பேச்சு இசையாக அல்லவா இருந்திடும்? இனிப்பு கொஞ்சமா! மன மயக்கம் ஏற்படுமல்லவா? அந்த நேரமாகப் பார்த்து ஓட்டுக்களைத் தட்டிப் பறித்துக் கொள்ளலாமல்லவா? அந்த நினைப்புடன் இந்தப் பேச்சை உலவவிட்டனர்.

உண்மையிலேயே இவர்களுக்கு, பாங்குகளைத் தேசிய உடைமையாக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தால், அதனை இரு பொருள்கொண்ட பேச்சாக்காமல், திட்டவட்டமாகத் தெரிவித்திருப்பர்.

ஆனால் காங்கிரஸ் கட்சியினரின் நோக்கம் வேறு!

ஏழைக்கு இனிப்பு அளிப்பதாகவும் இருக்க வேண்டும், அதேபோது முதலாளிகளுக்குக் கோபமோ ஐயப்பாடோ ஏற்படாமலும் இருக்க வேண்டும்.

ஏழைகளின் ஓட்டுகளும் வேண்டும், முதலாளிகளின் நோட்டுகளும் வேண்டும்.

சொல்லும் செயலும் இதற்குத் தகுந்ததாக அமைய வேண்டும்.

ஏழை எளியோர்களே! எப்படிப்பட்ட புரட்சித் திட்டம் கொண்டுவரத் தீர்மானித்திருக்கிறோம் பார்த்தீர்களா? பாங்குகளை இனி முதலாளிகளிடம் விட்டுவைக்கப் போவதில்லை, சர்க்காரிடம் அவை வந்து சேரும் என்று கூறவும்,

முதலாளிகளே! பயம் ஏன்? சந்தேகம் ஏன்? பாங்குகளைச் சர்க்கார் எடுத்துக்கொள்ளாது! எடுப்பதாக இருந்தால், Nationalisation - நாட்டுடைமையாக்குவது என்றல்லவா

கூறியிருப்போம்; இப்போது நாங்கள் சொல்வது என்ன? கவனித்தீர்களல்லவா? கருத்துப் புரியவில்லையா? Social Control சமுதாயக் கட்டுப்பாடு என்றுதான் கூறினோம், வேறில்லை. ஆகவே வீண் குழப்பம் கொள்ளாதீர்கள் என்று கூறிடவும்,

ஏழைகளே! உங்களுக்காகப் பாடுபடும் எமக்கு உமது ஓட்டுகளைத் தாருங்கள்!! என்று கேட்டிடவும்,

முதலாளிகளே! உங்கள் ஆதிக்கத்தை அனுமதித்து வருகிறோம்; அது நிலைத்திருக்க வேண்டுமாயின் ஆட்சியில் நாங்கள் இருந்திட வேண்டும்; முற்போக்காளர் வந்திடின் Nationalisation - நாட்டுடைமையாக்கிவிடுவர் உம்மிடமுள்ள பாங்குகளை; நாங்கள் ஆட்சியில் இருந்திட வழி செய்திடின், Nationalisation - நாட்டுடைமையாக்குவது அல்ல, Social Control - சமுதாயக் கட்டுப்பாடு மட்டுமே திட்டமாக இருக்கும். ஆகவே எடும் நோட்டுகளை! கொடும் தாராளமாக!! என்று கேட்டிடவும், வழி செய்துகொள்ளவே இந்த முயற்சி.

நாணயக் குறைவான முயற்சி அல்லவா என்று கேட்கத் தோன்றும்; ஆனால் தம்பி! நாணயத்தின் மதிப்பையே குறைத்திடத் துணிந்தவர்கள் இதற்கா கூச்சப்படப் போகிறார்கள்!

அதெல்லாம் இல்லை உங்கள் அண்ணாத்துரை பழி போடுகிறான், எங்கள் நோக்கம் இரு பொருள் கொண்ட பேச்சுப் பேசி இரு தரப்பினரின் ஆதரவையும் பெறுவது என்பதல்ல; சமுதாயக் கட்டுப்பாடு என்றாலே நாட்டுடைமையாக்குவது என்பதுதான் பொருள் என்று தம்பி! யாரேனும் நாவாணிபம் புரிந்திடுவோர் வாதாட முன்வந்திடின் - அதற்காகவே தம்மை ஒப்படைத்துவிட்டோர் உளர் - அவர்களைக் காங்கிரஸ் மூலவர்களிலே ஒருவரும், இரயில்வே அமைச்சருமான எஸ். கே. பட்டீல் பேசியிருப்பதனைப் படித்துப் பார்க்கும்படி வேண்டிக்

கேட்டுக்கொள்.

பட்டீல், இவர்களின் குட்டு உடைபட்டுப் போகும் விதமாகப் பேசி இருக்கிறார்.

இவரும் எர்ணாகுளத்தில் இருந்தவர்தான்! பாங்குகள் பற்றிய திட்டத்தை எதிர்த்தவரும் அல்ல!

இவருடைய வார்த்தை கவனிக்கத் தக்கதல்ல என்று கூறிடவும் முடியாது.

இவருடைய "தயவு' தேவை இல்லை என்று காங்கிரசும் கூறிவிட முடியாது. இவர் மூலமாகவே, பெரிய புள்ளிகளிடம் பணம் பெறப்படுகிறது தேர்தல் நிதிக்கு-பொருளாளர்!

ஆகவே எஸ். கே. பட்டீல், பாங்கு சம்பந்தமாக ஏற்பட்ட தீர்மானத்தை விளக்கிக் காட்டியிருப்பது, உண்மை நிலைமையை எடுத்துக் காட்டுவதாகும்.

பேசவேண்டிய இடத்தில்தான் பட்டீல் பேசி இருக்கிறார்.

மகாராஷ்டிர கவர்னர் செரியன் தலைமை வகித்திட, செல்வ புரியினர் நாலாயிரவருக்கும் அதிகமாகக் கொலுவிருக்க, பம்பாய் நகர மணி மண்டபத்தில் இந்தத் திங்கள் இருபத்தி இரண்டாம் நாள் "சிறப்பு விருந்தினர்'ராக அழைக்கப்பட்டிருந்த பட்டீல், திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்.

பாங்குகள் தேசிய உடைமையாக்கப்பட மாட்டா என்று உறுதி அளிக்கிறேன் என்று.

கனரா பாங்கியின் வைர விழா கொண்டாட்டத்திலே அவர் சிந்திய முத்து இது!

எர்ணாகுளம் தீர்மானம் பற்றி, பலர் பலவிதமாகப் பேசிக்கொள்கிறார்களே, தீவிரவாதிகள், பாங்குகளைக் காங்கிரஸ் அரசு

நாட்டுடமையாக்கிவிடும் என்று பொருள் கூறுகிறார்களே, பட்டீல் இதுபற்றி என்ன கூறுகிறார் கேட்போம் என்ற நோக்குடனேயே வைர விழா சொற்பொழிவாற்ற அழைத்தனர்.

எர்ணாகுளம் தீர்மானம் பற்றிய உண்மையான பொருளைக் கேட்டறிந்து கொள்வோம் என்ற நோக்கத்துடன் செல்வபுரியினர் நாலாயிரவர் கூடினர்.

எதற்கு அழைத்தார்கள் என்பதையும் அவர்கள் மனத்திலே எந்தவிதமான சந்தேகமும் அச்சமும் புகுந்திருக்கும் என்பதையும், அவர்களுடைய அச்சத்தைப் போக்காவிட்டால் தன் ஆட்சிக்கும் கட்சிக்கும் எத்தகைய இன்னலும் இழப்பும் ஏற்படும் என்பதையும் நன்றாகப் புரிந்துகொண்டே பட்டீல் பேசியிருக்கிறார்.

Mr. Patil asked Bankers not to entertain the fear that because the Congre election manifesto mentioned Social Control over banks and life-Insurance it had armed itself with blanket powers to nationalise banks overnight. There need be no such fear.

காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் பாங்குகள், இன்ஷூரன்ஸ் அமைப்புகள் ஆகியவைமீது சமுதாயக் கட்டுப்பாடு ஏற்படுத்தப் படும் என்று குறிப்பிடப்பட்டிருப்பதனால், திடுமென இவைகளை நாட்டுடைமை ஆக்கிவிடும் அதிகாரத்தைக் காங்கிரஸ் அரசு பெற்றுக்கொண்டுவிட்டிருக்கிறது என்று எண்ணி அச்சம் கொள்ளவேண்டாமென்று பட்டீல் பாங்குக்காரர்களைக் கேட்டுக்கொண்டார்! அவ்விதமான அச்சம் இருக்கத் தேவை யில்லை என்று அவர் கூறினார்.

தம்பி! எப்படி இருக்கிறது பார்த்தனையா, இவர்கள் போக்கு?எர்ணாகுளம் தீர்மானத்தைத்

தூக்கிக்கொண்டு சந்தைச் சதுக்கம் சென்று சிந்து பாடுகிறார்கள் காங்கிரஸ் பேச்சாளர்கள்,

தீவிரமான திட்டம்
புரட்சித் திட்டம்
புதுமைத் திட்டம்
பொது உடைமைத் திட்டம்

என்றெல்லாம். ஆகவே எமக்கு "ஓட்டு’ - என்று இரைச்சலிடுகின்றனர்.

பட்டீலோ, செல்வபுரியினரைக் கூட்டிவைத்து தேர்தல் அறிக்கையிலே ஏதோ நாலு வார்த்தை எழுதிவிட்டதால் என்ன குடி முழுகிவிடும்! ஏன் இந்தப் பயம்? யார் உங்கள் பாங்குகளை எடுத்துக்கொள்ளப் போகிறார்கள்? ஒரு பேச்சுக்குச் சொன்னோம், Social Control சமுதாயக் கட்டுப்பாடு என்று! அதற்காகவா அச்சம்! இப்போது என்ன, பாங்குகளை எடுத்துக்கொள்ளும் அதிகாரத்தையா, அந்தத் தீர்மானம் கொடுத்துவிட்டிருக்கிறது? பயம் வேண்டாம் என்று கூறுகிறார்.

அதிகாரத்தில் உள்ளவர்களைக் கண்டு மயங்கிடுவோரும் மிரண்டிடுவோரும் அதிக அளவு இல்லாமல், ஆள்பவர்கள் நமது ஊழியர்கள், நம்மை ஆட்டிப் படைக்கும் தேவதைகள் அல்ல என்ற உணர்வு கொண்டோர் பெருமளவும் உள்ள எந்த நாட்டிலும், இப்படி "இரட்டை நாக்கு’க் கொண்ட ஒரு கட்சியை ஆட்சியிலே வைத்திருக்கமாட்டார்கள். இங்குதான் இடம் இருந்திட முடியும். அதுவும் அதிக நாட்களுக்கு அல்ல - இப்படி உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோர்களுக்கு.

காங்கிரசின் தேர்தல் அறிக்கை நாணயமானதாக இருந்திடின், பட்டீல் இப்படியா பேசியிருப்பார்?

ஆமாம். நண்பர்களே! பாங்குகளைத் தனியாரிடம்

விட்டு வைப்பதாலே, நாட்டின் வளர்ச்சி, மக்களின் வாழ்வு குலைகிறது. பாங்குகள் முதலாளிகளின் ஆதிக்க வளர்ச்சிக்கே இயங்கி வருகின்றன. ஆகவே நாட்டு நலனைக் கருதி பாங்குகளை நாட்டுடைமை ஆக்கிடக் காங்கிரஸ் முடிவெடுத்திருக்கிறது - என்றல்லவா பேசியிருப்பார்?

அந்தவிதமான பேச்சை சந்து முனையில் சத்தம் எழுப்புவோருக்கு விட்டுவிட்டார்!

முதலாளிகளின் மனம் குளிரும் பேச்சை பட்டீல் பேசுகிறார்.

பட்டீல்தானே? அவர் அப்படித்தான்! - என்று கூறுவரோ! கூறிடின், கேள் தம்பி! பட்டீல் பேசியது தவறு! பாங்குகளை நாட்டுடைமையாக்கத்தான் போகிறோம் என்று இந்திரா அம்மையார் அறிக்கைவிடத் தயாரா என்று! பாராளுமன்றத்தில், பாங்குகளை நாட்டுடைமையாக்குவதற்கான சட்டம் கொண்டு வரச் சம்மதமா? கேளேன்!

பட்டீல், மேலும் உடைக்கிறார் குட்டுகளை.

அச்சம் வேண்டாம் என்று சொன்னால் மட்டும் போதாது; பாங்குகளை நாட்டுடைமையாக்கிடும் நோக்கம் இல்லை என்றால் எதற்காகத் தேர்தல் அறிக்கையில் பாங்குகள்மீது சமுதாயக் கட்டுப்பாடு விதிக்கப்படும் என்று குறிப்பிட வேண்டும் என்று செல்வபுரியினர் கேட்பார்களே என்று தோன்றுகிறது பட்டீலுக்கு.

அந்தக் கேள்விக்கும் சமாதானம் சொல்லிவிடவேண்டும். (இது அக்டோபர் - பிப்ரவரியில் பொதுத் தேர்தல்) என்ற நினைவு உறுத்துகிறது.

ஆகவே அவர் வெளிப்படையாகவே பேசுகிறார்.

சமுதாயக் கட்டுப்பாடு என்ற சொற்றொடர் காங்கிரசின் பழைய தேர்தல் அறிக்கைகளிலேயே இருக்கிறது. அதுவேதான் இந்த அறிக்கையில் திரும்பவும் சொல்லப்பட்டிருக்கிறது. அதனாலேயே அதற்கு ஒரு புது அர்த்தம் வந்துவிடுமா? அதனுடைய தாத்பரியம் என்ன என்றால் பாங்குகள், இன்ஷூரன்ஸ் கம்பெனிகள் பிரம்மாண்டமான பொருளாதார அமைப்புகள். ஆகவே அவைகளிலே மிக மோசமான ஊழல் நிர்வாகமோ, பணத்தை மோசடி செய்யும் போக்கோ தலைதூக்கு மானால் சர்க்கார் தலையிடும்! - என்பதுதான்!

தம்பி! எவ்வளவு தேன் தடவுகிறார் பார்த்தாயா? எவ்வளவு அக்கறை கவனித்தாயா? செல்வபுரியினரின் நேசத்தை உறுதிப் படுத்திக்கொள்ள.

ஒப்புக்கு ஒரு வார்த்தை என்பதோடு விடவில்லை பட்டீல்! இது எப்போதும் பேசுகிற பேச்சு! இதற்கு இப்போது என்ன புதிதாகப் பொருள் வந்துவிட்டது? உங்களை யார் என்ன செய்யப் போகிறார்கள்? மோசடி நடந்தால்தானே சர்க்கார் குறுக்கிடும் என்கிறார்.

மோசடி எங்கு நடந்தாலும் தம்பி! எப்போது நடந்தாலும் குறுக்கிடும் அதிகாரம் சர்க்காருக்கு உண்டு!

சர்க்கார் என்ற அமைப்பு இருப்பதே எந்தத் துறையிலும் மோசடி நடந்திடாமல் தடுக்கவும், மோசடி நடந்துவிட்டால் தண்டிக்கவும்தான்.

இதைத் தேர்தல் அறிக்கையிலே சேர்த்து, இதனைப் புரட்சித் திட்டம் என்று விளம்பரப்படுத்துவானேன்?

தம்பி! பட்டீலின் பேச்சைத்தான் படித்துப் பாரேன்.

The expreion Social Control was to be found in the previous Congre manifestos and merely because it was repeated it did not acquire a new meaning. It meant that banking and insurance were institutions of such financial magnitude that it would be only in the case of gro mismanagement and misuse of funds that the Government might step in.

இவ்வளவு பேசியும் விளக்கம் தருகிறார், சரியாகத்தான் இருக்கிறது. ஆனால் பாங்குகளை நாட்டுடைமை ஆக்குவது என்ற திட்டத்தைக் கண்டிக்கக் காணோமே, ஒரு சமயம் மனத்திற்குள் அந்தத் திட்டத்தை ஆதரிக்கிறாரோ என்று எங்கே முதலாளிகள் எண்ணிக்கொள்ளுவார்களோ என்று கவலைப்பட்டு பட்டீல், பாங்குகளை நாட்டுடைமையாக்கும் திட்டமே, ஒரு கேலிக் கூத்தான திட்டம் என்று சாடியிருக்கிறார்.

a ridiculous proposition என்றே கூறியிருக்கிறார்.

தம்பி! வேறோர் நாடு தாங்கிக் கொள்ளாது இப்படிப்பட்ட போக்கினை.

ஏழைகளை மயக்க தீவிரமான திட்டம் - ஏட்டில்!

முதலாளிகளிடம் சென்றோ முகத்தைத் துடைத்துவிடுவது!

மிகப் பெரியவர்கள் அங்கு உள்ளவர்கள் என்பதால் முகத்தைத் துடைத்துவிடுவது என்று மட்டுமே கூறுகிறேன்.

நமது பேச்சின் தரம் கெட்டுவிடக்கூடாதே என்பதற்காக இவர்கள் மேற்கொள்ளும் போக்குக்கு ஏற்ற வார்த்தைகளைச் சொல்லாமலிருக்கிறேன்.

திட்டம் என்று ஒன்றைக் காட்டுகிறார்கள். இது முதலாளிக் கோட்டையைத் தகர்த்திடும் வெடிகுண்டு என்று வீரம் பேசுகிறார்கள். பிறகு அவர்களே, அது

வெடிகுண்டு அல்ல, வெறும் புஸ்வாணம் என்று எடுத்துக் காட்டுகிறார்கள். ஏன்?

எதைச் சொன்னாலும் கேட்டுத் தீரவேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுவிட்டார்கள் என்ற நினைப்பினாலா?

இதுவா மக்களாட்சியின் மாண்பு? இந்த மோசடியா காந்தியாரின் அறநெறி அரசியல்?

தம்பி! பாங்குக்காரர்களையும் செல்வபுரியினரையும் கூட்டி வைத்துப் பேசுகிறாரே பட்டீல். பயம் வேண்டாம், உங்கள் அமைப்புக்கோ ஆதிக்கத்துக்கோ ஆபத்து ஏற்படாது என்று. அவர்கள் எந்த அளவு ஆதிக்கம் இன்று செலுத்துகிறார்கள் தெரியுமா? பொருளாதாரத் துறையில், தொழில் துறையில் திடுக்கிட வைக்கத்தக்க அளவு! ஒரு கணக்குத் தருகிறேன், பார் தம்பி! பாடமும் அறிந்துகொள்.

தொழில் வளர முதல் வேண்டும். “முதல்’ யாருடைய ஆதிக்கத்தில் இருக்கிறதோ அவர்கள்”தொழில் உலகை’த் தம் கரத்தில் கொண்டு வர முடியும். இதற்கு விளக்கம் தேவையில்லை. இந்தப் பொருளாதாரப் பிடிக்குப் பயன்படும் கருவிகள், பாங்குகள்! ஆங்கு உள்ள பணம் எவ்வளவு? பாரேன் கணக்கினை.

1962-ம் ஆண்டு கோட	ிகள்
பம்பாயில்	442.83
டில்லி	316.11
கல்கத்தா	289.26
சென்னை	63.09

பாங்குகளில் சேர்க்கப்பட்டிருக்கும் "டிபாசிட்டு’ பணத்தின் அளவு.

பம்பாயில் 442 கோடி ரூபாய். வளம் கொழித்திடும்

விதமாகத் தொழில் அமைச்சர் வெங்கடராமனால் ஆக்கப் பட்டிருக்கிறதாமே தமிழகம், அங்கு பாங்குகளில் உள்ள டிபாசிட்டுத் தொகை 63 கோடி.

442

63 !

இடத்தின் இயல்பு ஒரு புறம் இருக்கட்டும், பிடி எவரிடம் என்பதைக் கவனிப்போம்.

தம்பி! எல்லா பாங்குகளிலும் சேர்ந்துள்ள "டிபாசிட்" தொகை, 1960-ம் ஆண்டுக் கணக்குப்படி

1550 - கோடி ரூபாய்.

இந்தத் தொகையில் ஐந்தே ஐந்து பாங்குகளில் மட்டும்

625 - கோடி ரூபாய்!

மிச்சத் தொகை நாட்டிலே உள்ள எல்லா பாங்குகளிலும்! இந்த ஐந்து பாங்குகள் எவை?

1. சென்ட்ரல் பாங்க்
2. பாங்க் ஆப் இந்தியா
3. யுனைடெட் கமர்ஷியல் பாங்க்
4. பரோடா பாங்க்
5. பஞ்சாப் நேஷனல் பாங்க்

பெயர்கள் இருக்கட்டும். நாட்டிலே திரட்டப்படும் டிபாசிட் தொகையில் கிட்டத்தட்ட பாதி - 625 கோடி ரூபாயைக் கைவசம் வைத்துக்கொண்டு, அதன் மூலம் தொழில் உலகில் பிடியை அழுத்திக்கொண்டிருக்கும் இந்த ஐந்து பாங்குகளின் அதிபர்கள் யார்?

சென்டிரல் பாங்க், பாங்க் ஆப் இந்தியா
இவை இரண்டும் டாடாவின் கரத்தில்!

யுனைடெட் கமர்ஷியல் பாங்க், பரோடா பாங்க் இவை இரண்டும் பிர்லாவின் ஆட்சியில்!

பஞ்சாப் நேஷனல் பாங்க், டால்மியா ஜெயின் குடையின் கீழ்!

இவ்விதமான பொருளாதாரத்துறை ஆதிக்கத்தைத் தகர்த்திடத்தான், பாங்குகளை நாட்டுடைமையாக்க வேண்டும் என்று முற்போக்காளர் வலியுறுத்துவது.

1962-ம் ஆண்டு, நமது கழகத் தேர்தல் அறிக்கையிலே நாம் இதனை ஆதரித்திருக்கிறோம்.

காங்கிரஸ் அரசும் கட்சியும் இந்த முதலாளிகளுக்குக் கட்டியம் கூறிக்கொண்டும் மக்களிடம் மயக்கமொழி பேசிக் கொண்டும் வருகிறது.

பாங்குகளை சமுதாயக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப் போகிறோம் என்ற பேச்சு, இப்போது யோசித்துப் பார் தம்பி! கதையிலே சீமான் சொல்கிறானே, எல்லாச் சொத்தும் தருமத்துக்கு எழுதி வைத்துவிட்டேன் என்று. அதுபோன்ற விந்தைப் பேச்சா, வேறா?

உனக்கும் எனக்கும் புரிந்திருக்கிறது. பயன்? நாட்டுக்கல்லவா புரியவேண்டும்?

அன்புள்ள
அண்ணாதுரை
30-10-66

சிங்கத்தை அடக்கினேன்!

தடுத்தது யார்? துடிப்பது ஏன்?
ஆடுகளுக்கு ஓநாய் இரத்ததானம் தரப் போகிறதாம்!
ஏழையின் பெருமூச்சு பேச்சைவிட வலிவு மிக்கது!
முதலாளிகளிடம் காங்கிரஸ் சிக்கிக்கொண்டது!
சோஷியலிசம் பேசலாம், செயல்படுத்த முடியாது!

தம்பி!

இப்படி ஒரு உரையாடல் உன் செவியில் விழுந்தால் என்ன எண்ணிக்கொள்வாய்?

ஒரு குரல்:- நான் சிங்கத்தின்மீது சவாரி செய்தேன்.

மற்றோர் குரல்:- நான் யானைமீது உட்கார்ந்தேன்.

வேறோர் குரல்:- ஜோரான குதிரைமீது நான் உட்கார்ந்து கொண்டேன்.

இன்னோர் குரல்:- நான் அன்னப்பட்சிமீது உட்கார்ந் திருந்தேன்.

மற்றோர் குரல்:- அழகான மயில்மீது நான் உட்கார்ந்து கொண்டேன்.

இவ்விதமாகக்கூட ஒரு உரையாடல் நடைபெற்றிருக்க முடியுமா? கற்பனை இருக்கவேண்டியதுதான். ஆனால் இப்படியா சிங்கத்தின்மீது அமர்ந்தேன், யானைமீது அமர்ந்தேன்

- என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளும் நிலைமை எங்கே இருக்க முடியும்? - என்று கேட்கத் தோன்றும்.

இப்படி ஒரு உரையாடல், நடைபெற்றிருக்கவே முடியாது என்று அடித்துப் பேசிவிடாதே தம்பி! நன்றாக யோசித்துப் பார்த்துச் சொல்லு. இவ்விதமான பேச்சு உன் காதில் விழுந்தால், என்ன எண்ணிக்கொள்வாய்? யார் இப்படிப் பேசியிருக்க முடியும்? எந்த இடத்தில் இவ்விதமான பேச்சு இருந்திருக்க முடியும்? விளங்கவில்லையா? சரி! நானே கவனப்படுத்துகிறேன்.

திருவிழா பேரூரில். உள்ளூர் வெளியூர் கூட்டம் நிரம்ப. மகிழ்ச்சி ஆரவாரம்! கடைகள் அலங்காரமாக! களியாட்டம்! கரக ஆட்டம்! மயிலாட்டம்! ஒயிலாட்டம்! சிறுவர் சிறுமியர் ஓடி ஆடி விளையாடுகிறார்கள்! இங்கு ஒரு பக்கத்தில் குடை ராட்டினம் - (சில இடங்களிலே ரங்கராட்டினம் என்பார்கள்) அமைத்திருக்கிறான் ஒருவன், சிறார்களுக்காக. குடைராட்டினம் தெரியுமல்லவா? சிங்கம், புலி, யானை, குதிரை, அன்னம், மயில், மாடு, ஆடு, கட்டில், தொட்டில், சோபா இப்படி மரத்தால் செய்யப்பட்டு வண்ணம் தீட்டப்பட்ட பொம்மைகள் தொங்க விடப்பட்டிருக்கும். காசு கொடுத்துவிட்டு அவரவர் தத்தமக்கு விருப்பமானதன்மீது உட்கார்ந்துகொள்ளலாம். கீழே நின்றபடி, குடைராட்டினக்காரன், அவைகள் சுற்றுவதற்காக அமைக்கப் பட்டுள்ள விசையைத் திருப்பிவிடுவான். உடனே ரங்கராட்டினம் சுழலும் வேகமாக. வேடிக்கையாக சிங்கத்தின்மீது சவாரி செய்வதுபோல, யானைமீது ஏறி ஓட்டுவதுபோல, சிறார்களுக்கு ஒரு மகிழ்ச்சி, குடைராட்டினம் சுற்றச் சுற்ற, சிறார்களுக்குத் தாங்கள் ஏறி உட்கார்ந்துகொண்டிருக்கும் சிங்கம், புலி, யானை, குதிரை ஆகியவைகளைத் தாமே வேகமாக

ஓட்டிக்கொண்டு போவதாக ஒரு நினைப்பு. அதிலே ஒரு மகிழ்ச்சி, ஒரு ஆரவாரம்.

அந்த மகிழ்ச்சி ஆரவாரத்தின் விளைவாக சிறுவர் களுக்கிடையே எழும் உரையாடல்தான், நான் முதலில் குறிப்பிட்டிருந்தது.

இப்போது மறுபடியும் துவக்கத்தைப் படித்துப் பார், தம்பி! இவ்விதமான உரையாடல் நடைபெற்றிருக்கவா முடியாது? சொல்லு. இவ்விதமான உரையாடல் உன் காதிலே விழுந்ததும் என்ன தோன்றும்? சிறுவர்கள் மகிழ்ச்சியால் பேசுகிறார்கள்! - என்று தோன்றுமே தவிர, ஏ! அப்பா! எத்தனைப் பெரிய வீரனாக இருக்க வேண்டும் சிங்கத்தின்மீது சவாரி செய்தவன்!! என்று வியந்து, அவன் எதிரே அஞ்சி நின்றிட வேண்டும் என்றா தோன்றும்? குழந்தைகள் பேசுகின்றன! குடைராட்டினத்திலே உட்கார்ந்து மகிழ்ச்சி பெற்றதால் பேசுகிறார்கள்! - என்றுதான் எண்ணிடத் தோன்றும்.

சிறார்கள் மகிழ்ச்சி காரணமாக இதுபோலப் பேசுவதைக் கேட்கும்போது, நமக்கேகூட இனிப்பாக இருக்கும்.

போயும் போயும் உனக்கு ஆடுதானா கிடைத்தது? ஏன் யானை கிடைக்கவில்லையா? என்று கேட்டு மகிழ்வோம்.

ஏ! பயலே! நீ பெரிய போக்கிரியடா! கொஞ்சம்கூடப் பயப்படாமல், அவ்வளவு பெரிய யானைமீது உட்கார்ந்து கொண்டாயே!! என்று கேட்டுக்கொண்டே கன்னத்தைக் கிள்ளிவிடுவோம்.

கேட்டாயா சேதி! நம்ம மகனை என்னமோ மட்டமாகக் கணக்குப் போட்டாயே! தெரியுமா விஷயம்? சிங்கத்தையே அடக்கி, அதன்மீது ஏறி உட்கார்ந்து, பிடரியைப் பிடித்து உலுக்கி

எடுத்துவிட்டான் நம்ம மகன்! என்று பெருமிதத்துடன் கூறி மகிழ்வோரும் உண்டு!

ஆனால், சிறார்கள் அல்ல, பெரியவர்கள் - மிகப் பெரியவர்கள் - குடைராட்டினத்துப் பொம்மைகளின்மீது உட்கார்ந்து சுற்றிவிட்டு, உண்மையாகவே சிங்கத்தையும் யானையையும் அடக்கிய மாவீரர்போலப் பேசிடக் கேட்டால் எப்படி இருக்கும்? தாங்கிக்கொள்ள முடியாத எரிச்சலைத்தானே மூட்டிவிடும்?

எவனும் என்னைக் கவிழ்க்க முடியாது!
யாருக்கும் நான் பயப்படமாட்டேன்!
எல்லாப் பணக்காரர்களையும் ஒழித்துக் கட்டிவிடப் போகிறேன்!

இவ்விதம் காமராஜர் பேசுகிறார். குடைராட்டினத்தில் ஏறி, வேடிக்கை பெற்ற குழந்தைப் பருவத்தினரா இவர்? இவரா இப்படி, சிங்க பொம்மைமீது உட்கார்ந்து நான் சிங்கத்தின்மீது சவாரி செய்தேன் என்று குதூகலமாகக் கூவிடும் குழந்தைபோல, பணக்காரர்கள் அமைத்துக் கொடுத்திருக்கும் குடைராட்டினம் போன்ற செல்வாக்கின்மீது அமர்ந்து சுற்றிக்கொண்டு, நான் பணக்காரர்களை ஒழித்துக் கட்டுவேன், ஒருவருக்கும் பயப்பட மாட்டேன் என்று வீராவேசப் பேச்சுப் பேசுவது? ஆனால் பேசு கிறார்! அந்தப் பேச்சு கேட்டு, நாடே, தமது வீர தீரத்தை வியந்து பாராட்டும் என்று வேறு எதிர்பார்க்கிறார்! நாட்டு மக்களை ஏமாளிகள் என்றே தீர்மானித்துவிட்டார்போல இருக்கிறது.

நான் எப்படியும் சோஷியலிசத்தை நடத்தி வெற்றி காணத்தான் போகிறேன்! யாரும் தடுக்க முடியாது! - என்கிறார்.

யாரய்யா பெரியவரே! சோஷியலிசத்தைத் தாங்கள் கொண்டு வருவதைத் தடுக்கிறார்கள்?

என்று கேட்டால், எல்லோருந்தான்! கம்யூனிஸ்டு கட்சிகள், பிரஜா - சோஷியலிஸ்டு கட்சி, தி. மு. க., தமிழரசுக் கழகம், சுதந்திரா கட்சி எல்லாமேதான், நான் சோஷியலிசத்தைக் கொண்டு வருவதைத் தடுக்கப் பார்க்கின்றன, கெடுக்கப் பார்க்கின்றன! - என்று இடி முழக்கம் செய்கிறார்.

இந்த நாட்டிலே உள்ள எல்லாக் கட்சிகளுமே, சோஷியலிசத்தை இவர் கொண்டு வருவதைத் தடுக்கின் றனவாம், எதிர்க்கின்றனவாம். இவருடைய கட்சியில் உள்ள முதலாளிகள் தவிர, மற்ற எல்லோரும் சோஷியலிச விரோதிகளாம்!!

தம்பி! குடைராட்டினம் ஏறி மகிழ்ந்திடும் குழந்தைகள்கூட இப்படி ஒரு வேடிக்கை காட்ட முடியாது! அவ்வளவு வேடிக்கை காட்ட இந்த அகில இந்தியா! தம்மைச் சுற்றிலும், பகைவர்கள் நிற்பதுபோலவும், தமது வீர தீரத்தால் மட்டுமே அந்தப் பகையை வீழ்த்தி, சோஷியலிசத்தை வெற்றி பெறச் செய்ய முடியும் என்பது போலவும் பேசிக்கொண்டிருக்கிறார்; அவருடைய பேச்சைக் கேட்டு, அகமகிழ்கிறார்கள். காந்தியார் காட்டிய வழி நடந்த தொண்டர்கள், தியாகிகள் அல்ல, பிரிட்டிஷ் அடக்கு முறைக்கு ஆளான வீரர்கள் அல்ல; சோஷியலிசம் மலர்ந்திடின், புதுவாழ்வு பெறக்கூடிய ஏழை எளியோர் அல்ல; சோஷியலிசம் எனும் திட்டத்தை நிறைவேற்றி வைக்க எதனையும் இழந்திடவும், எவ்வளவு இன்னலையும் தாங்கிக்கொள்ளவும் தயாராக உள்ள இலட்சியவாதிகள் அல்ல. யார் மகிழ்கிறார்கள் தெரியுமா?

வாண்டையார்
வடபாதிமங்கலத்தார்
வாண்டையார்
வடபாதிமங்கலத்தார்

நெடும்பலத்தார்
குன்னியூரார்
மூப்பனார்
மன்றாடியார்
மகாலிங்க ஏழையார்
பேட்டையார்
பெரும்பண்ணையார்
செய்யூரார்
வலிவலத்தார்
இலஞ்சியார்
ராமநாதபுரத்தார்
செட்டிநாட்டார்
சிவகெங்கைச் சீமையார்
மோட்டார் மன்னர்
சிமிட்டிச் சீமான்
இரும்புக் கோமான்
அலுமினிய அதிபர்
ஆலை ஆள்வோர்

இவர்களெல்லாம் தம்பி! ஆனந்தத் தாண்டவமாடுகிறார்கள். ஈடு எதிர்ப்பற்ற எமது மாபெருந் தலைவர், பணக்கார ஆதிக்கத்தை அழித்து ஒழித்து, சோஷியலிசத்தைக் கொண்டுவரப் போகிறார்! யார் தடுத்தாலும், அஞ்சமாட்டார்! எவர் எதிர்த்திடினும் முறியடித்தே தீருவார்! சோஷியலிசம் வெற்றிபெற்றே தீரும்! எமது மாபெரும் தலைவர், எமது உள்ளம் குளிர்ந்திட, உவகை பெருகிட, சோஷியலிசம் கொண்டுவரப் போகிறார்! கம்யூனிஸ்டுகளே, உமது எதிர்ப்பு எமக்குக் கடுகு! சுதந்திராக்களே, உமது எதிர்ப்பைச் சுட்டுப் பொசுக்கிச் சூரணமாக்கிப் போடுவோம்! ஏ! தீனாமூனாக்களே! தீர்த்துக்கட்டிவிடுகிறோம் உங்களை! சோஷியலிஸ்டுகளே! உங்களை ஒழித்துக்கட்டப் போகிறோம் என்றெல்லாம் பாடுகிறார்களாம்; ஆனந்த நடனம் ஆடுகிறார்களாம்; எப்போது வரும் இந்த சோஷியலிசம்! கண் குளிரக்

காண வேண்டும் - என்று வழிமேலே விழி வைத்துக் காத்துக்கொண்டிருக்கிறார்களாம்; நம்பச் சொல்லுகிறார் காமராஜப் பெரியவர்.

மதப் புரட்டுகளை ஒழிக்கப் போகிறேன் என்று ரஸ்புடீன் சொன்னதில்லை.

கொடுங்கோலாட்சியை வீழ்த்தப் போகிறேன் என்று ஜார் சொன்னதில்லை.

எதேச்சதிகாரத்தை அழித்திடப் போகிறேன் என்று பிரஞ்சு நாட்டு மன்னன் லூயி சொன்னதில்லை.

ஆனால், காங்கிரசிலே உள்ள முதலாளிகள், சோஷியலிசத்தைக் கொண்டுவரப் போகிறோம், சோஷியலிசத்தைக் கொண்டுவரச் சொல்லி, எமது தலைவர் காமராஜரை வற்புறுத்திக்கொண்டு வருகிறோம், அவர் சோஷியலிசம் கொண்டுவர அரும்பாடுபடுவதற்கு நாங்கள் துணையாக நிற்கிறோம், அவருடைய துணைகொண்டு சோஷியலிசத்தைக் கொண்டு வந்தே தீருவோம் - என்று சொல்லுகிறார்களாம். நம்பச் சொல்லுகிறார்கள், காங்கிரஸ் கூடாரத்தில் நாவாணிபம் நடாத்திடும் நல்லோர்கள்!!

இரத்த சோகை நோயால் பீடிக்கப்பட்டுள்ள ஆடுகளுக்கு, ஓநாய் "இரத்த தானம்' தரப் போகிறதாம்! டாக்டர் காமராஜர் இரத்தம் எடுத்து, ஆடுகளுக்குச் செலுத்தப் போகிறாராம்! நம்பச் சொல்லுகிறார்கள், நாட்டு மக்கள் எதைச் சொன்னாலும் கேட்டுக் கொள்ளுவார்கள் என்று ஒரு தவறான கணக்குப் போட்டுக் கொண்டு.

நிலமில்லாத உழவன்
நிம்மதியில்லாத பாட்டாளி
மாடாய் உழைக்கும் தொழிலாளி
வறண்ட தலையினன்

இருண்ட கண்ணினன்
இல்லையே! இல்லையே! என்று ஏங்குபவன்
கொண்டு போய்விடு கடவுளே என்று இறைஞ்சுபவன்
குளம் தேடுபவன்! மரக்கிளை நாடுபவன்!
குமுறிக் கிடப்பவன்! குற்றுயிரான்!

தம்பி! இவர்களெல்லாம்கூடப் பெற முடியாத ஆனந்தத்தை ஊரை அடித்து உலையிலே போட்டிடும் உத்தமர்கள், ஒன்றை ஒன்பதிற்கு விற்றுக் கொள்ளை இலாபம் அடித்திடும் குணாளர்கள், இருப்பை மறைப்போர், இருப்பதை மறைப்போர், இலாபத்தை மறைப்போர் போன்ற திருவாளர்கள் பெறுகின்றனராம், சோஷியலிசத்தை எப்படியும் கொண்டு வந்தே தீருவேன், எந்த எதிர்ப்புக்கும் அஞ்சமாட்டேன் என்று காமராஜர் கூறுவது கேட்டு நம்பச் சொல்லுகிறார்கள்!

இவர்களை உடன் வைத்துக்கொண்டுதான் காமராஜர் பேசுகிறார், நான் பணக்காரர்களை ஒழித்துக் கட்டுவேன் என்று!

இவருக்குச் சீடர்களாக நின்றுகொண்டுதான், இந்த முதலாளிமார்கள் கூறுகிறார்கள் எம்மை ஒழித்திட வந்த தலைவனே வாழ்க!! எமக்கு முடிவுகட்ட வந்திருக்கும் முதல்வனே வாழ்க! வாழ்க! - என்று. நம்பச் சொல்லு கிறார்கள், தம்பி! எதனையும் ஆய்ந்தறியும் திறனை இயல்பாகவே பெற்றுள்ள தமிழர்களைக்கூட!!

சோஷியலிசம் வெற்றி பெற்றால். . .! என்று கூறிவிட்டு, காங்கிரஸ் பேச்சாளர் - காங்கிரஸ்காரரர் அல்ல - பேச்சாளர்! கண்களை மூடுகிறார். அவர் மனக்கண் முன் தோன்றிடும் காட்சிகளை எடுத்துக் காட்டுகிறார்.

மாளிகையிலே சிலர்
மண் குடிசையிலே பலர்!

அரண்மனைகளிலே சிலர்
ஆலமரத்தடியில் பலர்!
செல்வத்தில் புரண்டபடி சிலர்
செல்லரித்த வாழ்வினர் பலர்!

இந்த நிலைமை இருந்திடாது! எல்லோரும் இன்புற்று வாழ்ந்திடலாம்! எங்கும் இன்பம், எவருக்கும் புதுவாழ்வு, நல்வாழ்வு, முழு வாழ்வு!!

இன்று பார்க்கிறோமே, அதோ கோடீஸ்வரர், கப்பல் வியாபாரத்தில் சம்பாதித்தவர்! இதோ பல இலட்சங்களுக்கு அதிகாரி, பல ஆலைகள் நடத்திப் பணம் திரட்டியவர்! அதோ சீமான், வாணிபத்தில் கிடைத்த இலாபம் பெற்றவர்!! பொருளாதாரத் துறையில் இதுபோல "ஏகபோக மிராசு’ பாத்யதை பெற்றிருப்பவர்களெல்லாம் இருக்க முடியுமா?

இருக்கவிடப் போவதில்லை! இருக்கவிடமாட்டார் எமது தலைவர்! என்று வீரம் சொட்டச் சொட்டப் பேசுவர். ஆனால் இதனை ஒரு குறும்புப் புன்னகையுடன் யாரார் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்?

பெரிய நிலச்சுவான்தாரர்கள்
மாஜி - மன்னர்கள்
பல கம்பெனிகளின் அதிபர்கள்

என்ன எண்ணிக்கொண்டு, இவர்கள் காமராஜர் பேசுவதையும் அவருக்கு "லா-’ பாடிடுவோர் பேசுவதையும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்?

துவக்கத்திலே நான் காட்டினேனே உரையாடல், நான் சிங்கத்தின்மீது சவாரி செய்தேன், நான் யானைமீது சவாரி செய்தேன், நான் குதிரையை ஓட்டிச் சென்றேன் என்று குடைராட்டின வேடிக்கை பெற்ற குழந்தைகள் பேசிக்கொள்வதாக, அந்தப் பேச்சு போன்றது, காமராஜரும் அவருடைய

புகழ்பாடிகளும் பேசுவது என்றுதான் எண்ணிக்கொள்வார்கள்.

சிறார்களின் பேச்சு எப்படி சிந்துபோல இனிக்கிறதோ, பெற்றோர்களுக்கு, அதுபோல காமராஜர் கூட்டத்தாரின் பேச்சு இனிக்கிறது அவர்களை ஊட்டி வளர்த்திடும் முதலாளிமார்களுக்கு.

ஆகவே அவர்கள் அத்தகைய பேச்சைக் கேட்டு வேடிக்கை பெறுகிறார்கள். மேலும் பேசச் சொல்லி உற்சாகப்படுத்துகிறார்கள்!

உள்ளபடி சோஷியலிசத்தைக் கண்டிடும் நடவடிக்கையிலே ஈடுபட்டாலோ, பெரிய புள்ளிகளின் இலாபவேட்டைக்குக் குந்தகம் விளைவிக்கும் செயலில் இறங்கினாலோ, இந்த "இலாப வேட்டைக்காரர்கள்' இப்படியா மகிழ்ச்சி தெரிவித்துக்கொண்டிருப்பார்கள்?

பேதையும் அவ்விதம் கூறிட மாட்டானே!

சிறார்களின் பேச்சுக் கேட்டு மகிழ்ந்திடும் பெற்றோர்போல, சோஷியலிசம் பேசும் காங்கிரஸ் தலைவர்களிடம் முதலாளிகள் நடந்துகொள்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம்,

காங்கிரஸ் பேசிடும் சோஷியலிசம் வெறும் பேச்சு என்பதை அவர்கள் உணர்ந்திருப்பதனால்தான்.

காங்கிரஸ், சோஷியலிசத்தைப் பேசிக்கொண்டே முதலாளிகள் மேலும் மேலும் பணம் திரட்டிக்கொள்ள வழி செய்து கொடுக்கிறது, துணை நிற்கிறது என்பதனை முதலாளிகள் அறிந்திருப்பதனால்தான்.

அதே முதலாளிகள், காங்கிரஸ் தலைவர்களின் பேச்சு, பேச்சோடு நிற்கப்போவதில்லை. செய-லே

அவர்கள் ஈடுபடப் போகிறார்கள், முதலாளிகளின் ஆதிக்கத்தை முறியடிக்கப் போகிறார்கள் என்று தெரிந்துகொண்டால், இன்று காட்டுகின்ற கனிவா காட்டுவார்கள்? இன்று அவர்கள் காங்கிரசிடம் கனிவு காட்டுவது மட்டுமல்ல, சோஷியலிசத்துவத்திடமேகூட அல்லவா கனிவு காட்டுகிறார்கள்!! வேங்கை சைவத்தின் மேன்மை பற்றி உருகிப் பேசுவதுபோல அல்லவா, இந்த முதலாளிகள், சோஷியலிசம் கொண்டுவரப் போவதாகக் கூறும் காங்கிரஸ் கட்சியின் மேன்மைபற்றி உருக்கத்துடன் பேசுகின்றனர்.

ஏழ்மையும் அதன் விளைவாக அறியாமையும் இந்த நாட்டிலே எவ்வளவு அழுத்தமாகக் கப்பிக்கொண்டிருப்பினும், வெகு எளிதாக மன மயக்கம் கொண்டுவிடக்கூடிய நிலையிலே பெரும்பாலான மக்கள் இருந்திடினும், இவ்வளவு பச்சையான புரட்டுப் பேச்சை, இவ்வளவு வெளிப்படையாகத் தெரிகிற முரண்பாடுள்ள போக்கை மக்கள் நம்பிடப்போவதில்லை. முதலாளிகள் கூடி, சோஷியலிச விழா நடாத்தி, காமராஜர் சோஷியலிசச் சிற்பி என்று பேச்சாளர்களை விட்டு பொழியச் செய்து மகிழ்வதைக் காணும்போது, என்ன நேர்த்தியான நாடகம் நடத்துகிறார்கள்! என்று எண்ணாமலிருக்க முடியுமா?

கடன் கொடுத்து, தவறான கணக்குக் காட்டி, நிலபுலத்தைக் கைப்பற்றிக்கொண்டவன்.

விளைந்தது அவ்வளவையும் அறுத்தெடுத்துக் குவித்ததும், களஞ்சியத்திலே கொண்டுபோய்ச் சேர்த்துக் கொண்டு காலம் முன்போல இல்லை! கலம் நெல் கூலியாகத் தருவதற்கு இல்லை! - என்று பேசி, உழைத்தவன் வயிற்றில் அடித்திடும் உத்தமன்.

கள்ளச் சந்தையில் திரட்டிய பணத்தைத் தங்கக்

கட்டிகளாகவும், மின்னும் வைரங்களாகவும் மாற்றிப் பதுக்கி வைத்துக்கொண்ட பரந்தாமன்.

இவர்களெல்லாம் கூடி, காங்கிரசை சோஷியலிசம் பேசச் சொல்லிக் கேட்டு மகிழ்கிறார்கள் என்பதனைப் புரிந்து கொள்ளவா, ஏழை எளியோர்களால் முடியாது? அவர்கள் அச்சம் காரணமாகப் பேசுவதில்லை. பேசினால் ஏடு கொள்ளாது! நாடாள்வோர் தாங்கிக்கொள்ளமாட்டார்கள்! வேடிக்கையா காட்டுகிறீர்கள் வேடிக்கை! வேதனையிலே எங்களைத் தள்ளிவிட்டவர்கள் நீங்கள்! எமது உழைப்பின் பலன் எமக்கு வந்திருந்தால் நாங்கள் ஏன் இப்படி உழல்கிறோம்? அந்தப் பலனை அபகரித்துக்கொண்டு, சீமானாகி கனவானாகி, இப்போது எங்களையே பார்த்து ஐயோ! பாவம்! துரும்பாக இளைத்துவிட்டாயே! பால் தருகிறேன் குடி! பழம் தருகிறேன் சாப்பிடு! - என்றா பசப்புப் பேச்சுப் பேசுகிறீர்கள் - என்றெல்லாம் கொதித்துக் கூறுவான். ஆனால் அவனை, அவனுடைய ஏழ்மை மனத்தில் பட்டதைச் சொல்ல முடியாதபடி தடுக்கிறது.

ஏழை ஏதும் பேசாது இருப்பதையே அவன் தன் ஒப்புதலைத் தந்துவிட்டான் என்று காங்கிரஸ் தலைவர்கள் கருதிக்கொள்கிறார்கள்.

ஏழை பேசவில்லை! பெருமூச்செறிகிறான்! அந்தப் பெருமூச்சு பேச்சைவிட வலிவு மிக்கது.

பெருமூச்சு வளர்ந்து வளர்ந்தே, புரட்சியாக வடிவம் கொண்டிருக்கிறது பல்வேறு நாடுகளில்.

ஏழையை ஏய்த்துவிட்டோம், மயக்கிவிட்டோம் என்ற எண்ணத்துடன் முதலாளிகள் முகத்திலே புன்னகையும், அக்ரமம் நடக்கிறது, அதனைத் தடுக்க முடியவில்லை, அக்ரமம் நடக்கிறது என்று வெளியே பேசவும் முடியவில்லையே என்று குமுறி

ஏழையிடமிருந்து கிளம்பிடும் பெருமூச்சும் - இன்று காண்கின்றோம். தம்பி! நெருக்கடி மிக்க கட்டம் என்பதனைத்தான் இந்த நிலை எடுத்துக் காட்டுகிறது.

நிலை இது போலிருக்க, "அகில இந்தியா' மார்தட்டுகிறார். என்னை யாரும் கவிழ்க்க முடியாது. நான் யாருக்கும் அஞ்சப்போவதில்லை, சோஷியலிசம் ஏற்பட்டே தீரும் என்றெல்லாம் பேசுகிறார்.

வேடிக்கையான பேச்சு! குழந்தை வீரத்தைப் பொழிந்து தள்ளுகிறது!! என்று பெற்றோர் குழந்தையைத் தட்டிக் கொடுப்பதைப்போல காமராஜரைத் தட்டிக் கொடுக்கிறார்கள், பேசு! பேசு! நன்றாகப் பேசு! நிறையப் பேசு! சோஷியலிசம் பேசு! கேட்டு, கை தட்டுகிறோம்! என்று முதலாளிகள் கூறுகிறார்கள்.

அதே முதலாளிகளுக்கு ஏதாகிலும் தமக்குக் கேடு தரும் காரியம் நடந்துவிடக்கூடுமோ என்ற சந்தேகம் துளி தோன்றினாலும், தட்டிக் கொடுப்பதை நிறுத்திவிட்டு கூப்பிட்டுக் கேட்கிறார்கள், "என்ன இது, பேச்சு ஒரு தினுசாக இருக்கிறதே?'' என்று.

பார்த்தோமல்லவா, பாங்குகளை நாட்டுடைமையாக்க வேண்டுமென்று எர்ணாகுளத்திலே காங்கிரஸ் ஒரு பேச்சுப் பேசியதும், முதலாளிகள் சீறியதை?

பம்பாயில் அமைச்சர் பட்டீலை, அழைத்து வந்து தம் எதிரிலே நிற்கவைத்துக்கொண்டு செல்வபுரியினர், விளக்கம் தந்திடச் சொன்னார்களே!

அமைச்சர் பட்டீலும், அடக்க ஒடுக்கத்துடன், பற்று பாசத்துடன், முதலாளிகளிடம் விளக்கம் அளித்தாரே! இதழிலே கண்டோமல்லவா?

ஒரு தீர்மானம், ஒப்புக்குப் போட்டோம் பாங்குகளைத் தேசிய மயமாக்குவோம் என்று. அதற்கேவா இப்படி அச்சம் கொள்வது என்றெல்லாம் பட்டீல் சமாதானம் செய்திருக்கிறார்.

உண்மையாகவே சோஷியலிசம் கொண்டு வருபவர்களாக இருந்தால் இப்படியா, முதலாளி ஒரு துளி கவலைப்பட்டாலும், முகத்தைச் சுளித்துக்கொண்டாலும், அவன் முன் முழங்காற் படியிட்டுவிடுவார்கள்?

ஏன் அந்தவிதமான அச்சம் முதலாளிகளிடம், சோஷியலிசம் பேசுபவர்களுக்கு? காரணம், பட்டீல் அறிவார். காமராஜருக்கும் தெரியும். அவர்கள் ஊட்டி வளர்ப்பவர்கள்! அவர்கள் கொடுத்தபடி இருக்கும் பல இலட்சக்கணக்கான தொகையைக் கொண்டுதான் காங்கிரசின் தேர்தல் வேட்டையே நடந்து வருகிறது. அத்தகைய முதலாளிகள் தயவு கிடைக்காமற் போய்விட்டால், தேர்தல் களத்திலே என்ன கதி நேரிடுமோ என்று எண்ணுகிறபோதே நடுக்கம் எடுக்கிறது. அதனால் முதலாளிகளின் மனம் கோணாதபடி நடந்துகொண்டாக வேண்டும் என்ற அச்சம் பிடித்தாட்டுகிறது!

இந்த இலட்சணத்தில் வீரப் பேச்சு வேறு!!

முதலாளிகள் காங்கிரசை எந்த அளவுக்கு ஆட்டிப் படைக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டும் ஒரு நிகழ்ச்சி, டில்லியில் சில நாட்களுக்கு முன்பு நடந்தது.

காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த, பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கூடிப் பேசியிருக்கிறார்கள். எதைப் பற்றி?

முதலாளிகள் காங்கிரசுக்குள் நுழைந்துகொண்டு ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்பது பற்றி.

முதலாளிகளுக்கும் அவர்களின் தயவு பெற்றவர் களுக்குமே தேர்தலில் வேட்பாளர்களாக நிற்கும் வாய்ப்புத் தரப்படுகிறது என்பதுபற்றி.

காங்கிரஸ் கட்சியை முதலாளிகள் ஆட்டிப்படைக் கிறார்கள் என்று தம்பி! நாம் சொல்லும்போது, சீறிச் சீறிப் பேசுகிறார்களே, அவர்கள் இதற்கு என்ன சொல்லப் போகிறார்கள்? காங்கிரஸ் எம். பி. க்களே அல்லவா கூடி, கை பிசைந்துகொள்கிறார்கள்; கண்களைக் கசக்கிக்கொள்கிறார்கள்!

காங்கிரசிலேயே ஒரு பகுதியினர் கூடிக் கதறிடும் நிலைமையே உருவாகிவிட்டிருக்கிறது, முதலாளிகளிடம் காங்கிரஸ் சிக்கிக்கொண்டதன் விளைவாக!

காங்கிரஸ் கட்சியையே தமது கருவியாக்கிக்கொண்டிட முதலாளிகளால் முடிந்திருக்கிறது. அந்த முதலாளிகளிடம் சிக்கிக் கொண்டுள்ள காங்கிரசைத்தான், சோஷியலிசத்தை நிறைவேற்றப் போகும் கட்சி என்று காமராஜர் கூறுகிறார். கூறுகிறாரா? முழக்கமிடுகிறார்!!

காங்கிரஸ் கட்சியே முதலாளிகளிடம் மண்டியிட்டுக் கிடக்கவேண்டி நேரிட்டுவிட்டது என்று காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் குமுறிப் பேசியிருப்பது பற்றி, டில்லி, "Patriot' - பேட்ரியட் - எனும் ஆங்கில நாளிதழ், அக்டோபர் 20லில் எழுதியிருப்பதனைத் தருகிறேன். தம்பி, காங்கிரஸ் சோஷியலிசத்தைக் கொண்டு வர முடிகிறதா இல்லையா என்பதுகூட ஒருபுறம் இருக்கட்டும், காங்கிரஸ் கட்சி, தன்னைத்தான் காப்பாற்றிக்கொள்ளும் வலிவுடனாவது இருக்க முடிகிறதா என்பது பற்றி எண்ணிப் பார்க்கும்படி, காங்கிரஸ் நண்பர்களைக் கேட்டுக் கொள்.

At a meeting in the Capital on Tuesday a large number of Congre M. P. ’s expreed concern at the infiltration of the Congre by Big Busine and feudal relics. The fears expreed by M.P. ’s are based on a major concerted effort being made by reactionary elements and their intelligent stooges to gain entry on a large scale into the legislative organs on the Congre ticket. The warning is timely because in many states Congre Boes are hob - nobbing with Capitalists and former princelings and in some case have entered into secret alliances with them.

செவ்வாயன்று தலைநகரில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் பலர், ஜெமீன் பரம்பரையினரும் பெரிய முதலாளிகளும், காங்கிரசுக்குள் நுழைந்துகொண்டு விட்டிருப்பது பற்றி கவலை தெரிவித்துப் பேசினர். காங்கிரஸ் கட்சியின் "டிக்கட்’ பெற்று ஆட்சி மன்றங்களிலே இடம் பிடித்துக்கொள்ள, முதலாளிகளும் பிற்போக்காளரும் அவர்களின் கைக்கூ- அடிமைகளும் திட்டமிட்டு வருகின்றனர் என்ற ஆதாரமே, காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கொண்டுள்ள அச்சத்துக்குக் காரணம் (அவர்களின்) எச்சரிக்கை சரியான நேரத்தில் தரப்பட்டிருக்கிறது; ஏனெனில் பல மாநிலங்களில் காங்கிரஸ் பெருந்தலைவர்கள் மாஜி - மன்னர்களுடனும் முதலாளி களுடனும் கூடிக் குலவிக்கொண்டு வருகின்றனர். சில இடங்களில் இரகசிய ஒப்பந்த உறவுகளையும் ஏற்படுத்திக் கொண்டுள்ளனர்.

தம்பி! பேட்ரியட் தலையங்கத்தின் கருத்தைத் தமிழாக்கித் தந்துள்ளேன்.

நிலைமை இவ்விதம் இருக்கிறது, ஆனால் காமராஜரோ நீண்ட பேச்சுப் பேசுகிறார்; சோஷியலிசம் கொண்டுவரப் போகிறேன் என்று. அதனைச் செய்திட காங்கிரஸ் கட்சியால்தான் முடியும் என்று நம்பச்

சொல்கிறார். எப்படி நம்பிக்கை கொள்ள முடியும்? - நடுக் கொள்ளைக்காரர்கள் அவ்வளவு பேர்களும் அங்கு நடு நாயகர்களாக இருப்பது கண்கூடாகத் தெரியும்போது.

சோஷியலிசம் பேசுகிறார் காமராஜர் என்றால், பேசுவதற்கு முதலாளிகள் அனுமதித்து இருப்பதால் பேசுகிறார்.

ஏழை எளியோர் காதுகளுக்கு இசையாக இருக்கட்டும் என்பதற்காகப் பேசுகிறார்.

செயலில்? முடியாது! விடமாட்டார்கள்! இன்று காங்கிரஸ் கொண்டுள்ள அமைப்பு முறை அதற்கு இடம் கொடுக்காது; அது முதலாளிகளின் "பாசறை'யாக ஆகிவிட்டிருக்கிறது.

சோஷியலிசம் பேசலாம்; செயல்படுத்த முடியாது என்று தம்பி! நான் கூறுகிறபோதுதான் கோபம் கோபமாக வருகிறது அவர்களுக்கு; ஆனால் அவர்களின் பெருந்தலைவர் காமராஜரே, ஜெய்பூர் மாநாட்டிலே பேசினார்; தெரிந்துதான் பேசி இருக்க வேண்டும்! என்ன பேசினார் என்பதனை நான் ராஜ்ய சபையிலேயே எடுத்துரைத்தேன்.

பதினோரு ஆண்டுகளாக நாம் சோஷியலிசம் பேசுகிறோம்; ஆனால் செயல்படுத்தவில்லை.

ஏழை - பணக்காரர் பேதத்தைப் போக்க முடிய வில்லை என்பது மட்டுமல்ல, அதனைக் குறைக்கக்கூட நம்மால் முடியவில்லை.

இந்தக் கருத்துப்படவே காமராஜர் பேசியிருக்கிறார்.

அதனையே நாம் சுட்டிக் காட்டும்போது "சுரீல்' என்று கோபம் பிறக்கிறது; விட்டேனா பார்! என்று வீறாப்பு பேசுகிறார்.

காங்கிரசில், மாஜி - மன்னர்களையும் தொழில் அதிபர் களையும் ஆதிக்கம் செலுத்தும் அளவுக்குச் சேர்த்துக்கொண்டு, அவர்களிடம் இலட்ச இலட்சமாகப் பணமும் "கைநீட்டி’ வாங்கிக் கொண்டு, அதைக்கொண்டு ஓட்டு வேட்டை ஆடிக்கொண்டு, நான் சோஷியலிசத்தைக் கொண்டுவரப் போகிறேன் என்று பேசி வருவது, குடைராட்டினத்துச் சிங்கப் பொம்மைமீது உட்கார்ந்து கொண்டு என்னைச் சாமான்யமாக எண்ணிக்கொள்ளாதீர்கள்; நான் சிங்கத்தையே அடக்கி, அதன்மீது சவாரி செய்பவன்! என்று சிறுவர்கள் பேசி, கேட்பவர்களுக்குச் சிரிப்பு மூட்டுவதற்கு ஒப்பானதாகும் இல்லையா?

அன்புள்ள
அண்ணாதுரை
6-11-66

பறக்கும் குதிரை!

ஓநாயும் இருக்கும், முயல்களும் ஓடி ஆடும்!
காமராஜர் தேர்தலிலே நிறுத்த இருப்போர் விளைந்த காட்டுக் குருவிகள்!
பள்ளம் பள்ளம்தானே!
கொல்லாமை பேசும் குரு தின்பது யாது?
பேரரசு நடத்தும் காமராஜரின் வலக்கரம் சோஷியலிசம் பேசலாமா?

தம்பி!

வெகு வேகமாகக் கிளம்பி, மிக மிடுக்குடன் பேசி, வழக்கறிஞர்களையும் மருத்துவர்களையும் பொதுவாகப் படித்தவர்களையும் காங்கிரசுக்குள் கொண்டுவந்து சேர்த்துவிடப் போவதாகச் சூள் உரைத்து, பொதுத் தேர்தலிலே காங்கிரஸ் கட்சியின் வெற்றி வாய்ப்பு எப்படி இருக்கிறது என்பதைக் கண்டறிவதாக அறிவித்து, ஆரவாரத்துடன் நமது கழகத்தை ஏசி வந்த முன்னாள் நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், ஏன் திடீரென்று வாய் மூடிக்கொண்டுவிட்டார்? கூவி விற்றிட இருந்த சரக்கு தீர்ந்துபோய்விட்டதா? அல்லது விற்பனை எதிர்பார்த்த விதமாக நடைபெறாததால், “கடை’யை மூடிவிட்டாரா? என்ன காரணம் அந்த”மேதை’யின் சந்தடி அதிகமாகக் காணோமே? என்று நண்பரொருவர் கேட்டார். உடனிருந்த மற்றோர் நண்பர் - அவர் பெரியார் கட்சி - ஒரு நேர்த்தியான புன்னகையை உதிர்த்துவிட்டுச் சொன்னார்:

காரணம் விளங்கவில்லையா? அய்யா, ஒரு ஜாடை காட்டினார் காமராஜருக்கு; போயும் போயும் இந்த ஆசாமியையா நம்புகிறாய் என்பதாக; உடனே காமராஜர், கிருஷ்ணமாச்சாரியாரைக் கூப்பிட்டு "போதும் அய்யரே! உம்முடைய வேலை!" என்று சொல்லிவிட்டார்!

என்று விளக்கம் அளித்தார்.

"அப்படி ஒரு மனப்பால் குடிப்பதானால் குடித்தபடி இரும்!" என்று கூறிவிட்டு, ஒரு கனைப்பு, ஒரு முறைப்புடன், மற்றோர் நண்பர் பேசலானார்: அவர் காங்கிரசை ஆதரிப்பவர்.

பெரியார் சொல்லுவதைக் கேட்டு அதன்படி நடந்திடவா எங்கள் பெரியவர் இருக்கிறார்? அவர் என்ன பெரியாரைப்போல, பிராமணர்களைப் பார்ப்பான் என்று பேசிடும் போக்கினரா? எத்தனையோ கீர்த்திமிக்க அய்யர் - அய்யங்கார் - சாஸ்திரி - சர்மாக்கள் - காமராஜருக்கு நண்பர்கள்! டி. டி. கே. இப்போது அதிகமாகப் பேசப் போவதில்லை; காரணம் அவர் காங்கிரஸ் சர்க்காரின் நிலைமையிலே ஏற்பட்டுள்ள நெருக்கடிகள், அதிர்ச்சிகள் ஆகியவைபற்றி அதிகக் கவலை கொண்டுள்ளார். இருக்குமல்லவா? பாருங்கள், இப்போது இந்த நந்தா விலகிவிட்டார்; இந்திரா காந்தியார் உடனே, அனுபவம் மிக்க டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரை அழைத்துப் பொறுப்பை ஒப்புவிக்கவேண்டுமல்லவா? செய்தாரா? இல்லையே! அதைப் பார்க்கும்போது அவருடைய மனம் வேதனையாகத்தானே இருக்கும் என்றார்.

நான் எந்த ஒரு விளக்கமும் கொடுக்காமலிருக்கக் கண்ட அவர்கள், என்னைப் பார்த்தபடி "உங்கள் கருத்து என்ன?' என்று கேட்டார்கள்.

"திட்டவட்டமாக ஏதும் கூற முடியாது; ஆனால்

ஒரு எண்ணம் தோன்றுகிறது எனக்கு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், காங்கிரசுக்காகப் பிரசாரம் செய்வது, அதிலும் சோஷியலிசம் பேசுவது, கேட்பவர்களுக்கே ஏதோ ஒரு கேலிக் கூத்து போல இருப்பதை அவரே உணர்ந்துகொண்டுதான், தமது பிரசார வேகத்தைக் குறைத்துக்கொண்டிருக்கக்கூடும் என்று எண்ணுகிறேன்'' என்று நான் கூறினேன்.

எதையாவது சொல்லி வைக்கலாம் என்ற போக்கிலே சொல்லவில்லை. உள்ளபடி டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் போன்றவர்கள், சோஷியலிசம் பேசுவதைக் கேட்கும்போது, மக்கள் ஒரு கேலிச் சிரிப்பொலிதான் எழுப்புகிறார்கள்.

காங்கிரசிலே "தூண்களாக'வும், வலது கரங் களாகவும் உள்ளவர்கள், எப்படிப்பட்ட முதலாளிகள் என்பதை நமது கழகப் பேச்சாளர்கள் எடுத்து விளக்கிவிட்டு, இத்தகையவர்களைக் கொண்டுள்ள காங்கிரஸ் கட்சிதான் சோஷியலிசம் பேசுகிறது என்று கூறும்போது எழும் கையொலி வெறும் ஒலி அல்ல; உணர்ந்திருப்பாய் என்று நம்புகிறேன்.

மக்களுக்கு மயக்க மூட்டும், சொக்கவைக்கும் என்ற நினைப்புடன்தான், பாவம், காங்கிரசின் தலைவர்கள், சோஷியலிசம் பேசுகிறார்கள். ஆனால் அவர்கள் அந்தத் தத்துவத்திற்குத் தந்திடும் விளக்கம் இருக்கிறதே அதனைக் கேட்டதும், மக்கள் அடைகின்ற எரிச்சலும் ஏமாற்றமும் கொஞ்சமல்ல. இதைத்தான் சோஷியலிசம் என்கிறீர்களா? இவர்களை வைத்துக்கொண்டுதான் சோஷியலிசம் கொண்டு வரப் போகிறீர்களா? இவர்களெல்லாம் இப்போது உள்ளது போலவே இருப்பார்கள், ஆனால் சோஷியலிசமும் இருக்கும் என்கிறீர்களா? ஓநாயும் இருக்கும், முயல்களும் ஓடி ஆடியபடி இருக்கும்; புலியும் இருக்கும் புள்ளிமான்களும் இருக்கும்; அப்படித்தானே இருக்கும் என்கிறீர்கள்! - என்று

கேட்கிறார்கள்; வாய் திறந்து அல்ல; தமது குறும்புப் புன்னகையால்; கேலிப் பார்வையால்!

இதனைக் கண்டறிந்ததால் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் வெட்கப்பட்டுக்கொண்டு சே! நாம் போய் மேடைமீது நின்றுகொண்டு சோஷியலிசம் பேசினால் எப்படி நம்புவார்கள்? வீண் முயற்சி; விளைவு விபரீதமானாலும் ஆகிவிடக்கூடும் என்று எண்ணிக்கொண்டுதான், தமது இடி முழக்கத்தை நிறுத்திக்கொண்டிருந்திருக்க வேண்டும்.

மக்கள் தெளிவற்றவர்களாகவே இருந்துவிடுவார்கள்; பசப்பு மொழி கேட்டு மயங்கிவிடுவார்கள்; இரு பொருள் தந்திடும் பேச்சைப் பேசி அவர்களை ஏய்த்துவிடலாம் என்று நினைத்திடும் காங்கிரஸ் தலைவர்கள் உளர்.

டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் போன்றவர்கள் பேசும்போது, மக்கள் மிக எளிதாக அவர்கள் பேசும் சோஷியலிசம்,

வஞ்சகமானது
பசப்பு மிக்கது
இரு பொருள் கொண்டது

என்பதனை உணர்ந்துகொண்டுவிடுகின்றனர்.

மக்கள், உண்மையை உணர்ந்துகொண்டுவிட்டனர் என்பதனைக் கண்டறிந்த பிறகு எப்படி அவர்களுக்குப் பேச இயலும்? கடையைக் கட்டிக்கொள்கிறார்கள்!!

டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் போன்றவர்கள் பேசிடும் சோஷியலிசம், உண்மையான சோஷியலிசமாக இருக்க முடியாது; ஏனெனில் அவர்களே, முதலாளித்துவ அமைப்பின் பாதுகாவலர்கள்; அந்த அமைப்பிலே இருந்துகொண்டே, மக்களுக்கு இனிப்பளிக்கும்

என்பதற்காக சோஷியலிசம் பேசுகிறார்கள் என்பதைப் பொது மக்கள் அறிந்துகொண்டுவிட்டனர்.

டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் தமது மின்னல் வேகச் சுற்றுப்பயணத்தை நிறுத்திவிட்டதற்கும்,

காமராஜர்கூட, சோஷியலிசம் என்ற பேச்சுப் பேசி மக்களை மயக்க முடியவில்லை என்பதை உணர்ந்து கொண்டு,

நில வரியை எடுத்துவிடுகிறேன்!
ஆளுக்கு ஒரு வீடு தருகிறேன்!

பார்க்குமிடம் எங்கும் பள்ளிக்கூடங்கள் கட்டித் தருகிறேன் என்றெல்லாம் பேசிச் சுவைப் பண்டங்கள் வீசி மக்களை மயக்கலாமா என்று இப்போது முயற்சி செய்திட முனைவதற்கும் இஃதே காரணம்.

•

எல்லோரும் பேசும் விதமாகப் பேசக்கூடாது; பேச்சிலே ஒரு புதுமை வேண்டும்; புது முறையாகத் தன் பேச்சு அமைய வேண்டும் என்று நினைத்துக்கொண்ட ஒரு வாலிபன், திருமணம் செய்துகொள்ளச் சம்மதம் தரும்படி தன் காதலியிடம் கேட்டிடலானான். எப்படி?

"கண்ணே நீ என் குழந்தைகளுக்குத் தாயாக வேண்டும்.''

காதல் செய்த எந்தப் “பயலும்’ கேட்காத விதமான பேச்சு இது; மற்றவர், வாழ்க்கைத் தோணியிலே போகலாமா என்றோ, என் மன மாளிகையிலே உள்ளவளே! என் வீட்டின் திருவிளக்குமாக வேண்டும், சம்மதந்தானே கண்ணே! என்றோ கேட்டிருப்பான்; நாம்! கேட்ட உடன், அவள் சொக்கிப்போய்விடுவாள்; அப்படியே தோளின்மீது சாய்வாள்; அடிமூச்சுக் குரலாலே,”அத்தான். . . .’

என்பாள், அள்ளி அணைத்திடலாம், இன்பம் பருகிடலாம் - என்றெல்லாம் அவன் எண்ணிக்கொண்டான்.

ஆனால், கன்னியோ, கடுங்கோபம் கொண்டவளாகி அவனைப் பார்த்து.

"காதகா! இத்தனை காலமும் என்னைக் காதலிப்பதாக ஏமாற்றிக்கொண்டிருந்தாயா? ஏற்கனவே மணமாகி, குழந்தைகள் உள்ளவனா நீ? என்னை இரண்டாந்தாரமாக்கிக்கொள்ளவா இத்தனை காதல் நாடகமாடினாய்?" என்றெல்லாம் கடிந்துரைத்து விட்டு, எழுந்தோடிவிட்டாள்!

அவன், புது முறையிலே பேசுவதாக எண்ணிக்கொண்டு, கடிமணமாகி, காதற்கனி பிறந்திடும் நிலை பெற்றிடலாம் என்ற கட்டத்தைக் கூறினான். பெண்ணோ, "என் குழந்தைகள்' - என்று அவன் குறிப்பிட்டது, ஏற்கனவே ஒருத்தியை மணந்து அவன் பெற்ற குழந்தைகள் என்று எண்ணிக்கொண்டு, எரிச்சலும் ஏமாற்றமும் கொண்டாள்.

தம்பி! சொல்ல நினைப்பதை விளங்கும்படியும், வேறு பொருள் கொண்டிட முடியாத விதத்திலும் கூறிட வேண்டும். இல்லையேல் விபரீதமான விளைவுகள் நேரிடக்கூடும் என்பதனை விளக்கிடும் கதை இது.

இந்தக் காதலன் வஞ்சகன் அல்ல! புத்திசாலித் தனத்தைக் காட்டிவிட வேண்டும் என்று துடித்திட்ட ஏமாளி.

வஞ்சகன் தன் நிலையை மூடிமறைத்திட முயலுவான்;

என் இதயத்தில் முதன் முதலாக இடம் பெற்றவள் நீயே!

இல்லறம் என்ற நல்லறம் நடாத்திடவே உன்னை நாடுகிறேன்!

என்று எதையாவது இனிப்புள்ளதாகக் கூறிவைப்பான். பெண் மயங்கி மனத்தைப் பறிகொடுத்தான பிறகு, அவன் ஏற்கனவே வேறோர் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டவன் என்பதனை அறிந்து பதறும்போதுகூட, வஞ்சகன் கூசாமல் கூறிடுவான்,

என் இதயத்தில் அவளுக்கு நான் இடம் அளித்திட வில்லை! வீட்டில் மட்டுந்தான்; அதுவும் பெற்றோர் கொடுத்த தொல்லைக்காக மட்டுமே!

அவள் வீட்டில் இருக்கிறாள். ஆனால், அவளுடன் சேர்ந்து நான் இல்லறம் நடாத்தவில்லை. அதனை நான் முன்பே உனக்குக் கூறினேனே! கவனிக்கவில்லையா?

என் இதயத்தில் முதன் முதலாக இடம் பெற்றவள் நீயே - என்று அன்று சொன்னேன்; இன்றும் அதனையே கூறுகிறேன்; மனைவி என்ற பெயருடன் ஒருத்தி என் வீட்டில் இருப்பதாலேயே என் இதயத்திலும் இருப்பாள் என்று எண்ணிக்கொள்ளலாமா? அங்கு உனக்குத்தான் இடம்! உனக்கு மட்டுந்தான்!

என்று பசப்புவான்; தன் உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்ட பாவை என் செய்வாள்?

இவ்விதமான பேச்சு, இரு பொருள் தருவதாக அமைவது, உண்மையை மறைத்திட, பொய்மைக்கு ஒரு பொலிவளிக்கும் பூச்சுச் சேர்த்துத் தந்திடும் முறை.

அவ்விதமான பேச்சு பலன் தரவில்லை என்பதனை உணர்ந்துகொண்ட பிறகு, காங்கிரஸ் தலைவர்களுக்குத் தொடர்ந்து

பேசிக்கொண்டிருப்பதிலே எப்படித் "தெம்பு' பிறந்திட முடியும்?

காமராஜரோ, "தெம்பு' இருக்கிறதோ இல்லையோ இந்த சோஷியலிசப் பேச்சு தவிர, மக்களுக்குச் சுவையூட்டும் பேச்சு வேறு இல்லை என்பதை உணருவதாலே, அதனைப் பேசி வருவது என்று தீர்மானித்துவிட்டார். வேறு என்ன செய்வார்?

கட்டிய பள்ளிக்கூடங்களைப் பார்த்தீர்களா? என்று காமராஜர் கேட்டால், கொட்டிக் கொடுத்த வரிப் பணம் கொஞ்சமா? என்று மக்கள் கேட்கிறார்களே! பதில் என்ன சொல்ல முடியும்?

பார்! பார்! மின்சார விளக்கு பார்! - என்கிறார்; இதைவிட அதிசயத்தைக் காட்டினான் வெள்ளைக்காரன்- ஆகாய விமானமே காட்டினான்! அவன்கூட, இப்படி, பார்! பார்! என்று கூவிடவில்லையே என்று மக்கள் எண்ணிக் கொள்கிறார்கள்! காமராஜரின் பேச்சு அவர்கள் மனத்திலே அவர் எதிர்பார்க்கின்ற ஒரு களிப்பினை ஊட்டிட முடியவில்லை.

எப்படிப்பட்டவர் தெரியுமா தலைவர்? உலகப் பெருந் தலைவர்!! என்று உடனிருப்போர் உடுக்கை அடிக்கிறார்கள்! ஆமாமய்யா ஆமாம்! அவர் புகழ் ஏறுகிறது உச்சிக்கு; எங்கள் வயிறு காய்கிறது பட்டினியால்! - என்று மனம் நொந்து கூறுகிறார்கள் மக்கள்.

ஆகவே காமராஜர், காங்கிரசின் சாதனைகள்பற்றிய பட்டியலை நீட்டி, ஓட்டுக் கேட்டிட முடியவில்லை. தேர்தலிலே நிற்பதற்காக அவர் தேடிப் பிடித்து இழுத்து வந்திடுவோரும், காங்கிரசிலே நீண்ட காலமாக இருந்து பணியாற்றி, இன்னல் இழப்புக்களுக்கு ஆளானவர்கள் அல்ல.

விளைந்த காட்டுக் குருவிகள்! ஆகவே, இருப்பதற்குள் ஓரளவு சுவையூட்டக்கூடிய பேச்சு, சோஷியலிசம்தான் என்று அவருக்குத் தோன்றுகிறது. ஆகவே ஒரு நாலு கூட்டத்தில் அது பற்றிப் பேசிப் பார்க்கிறார்.

சோஷியலிசம் பேசுகிறீர்கள்; ஆனால் இத்தனை சீமான்களையும் உடன் வைத்துக்கொண்டிருக்கிறீர்களே - எப்படி இது பொருந்தும்? மக்கள் நம்புவார்களா? என்று அவரிடம் யாராவது கேட்டால், தம்பி! ஒரு பெரிய வெடிச் சிரிப்புச் சிரித்துவிட்டு,

சோஷியலிசம் பேசிவிட்டால், ஓட்டு வந்து குவிந்து விடுமா?
நோட்டுகள் வேண்டாமா - தேர்தலை நடத்த!!
நோட்டுகளை யார் தருவார்கள்? ஓட்டர்களா?
ஓட்டாண்டிகளிடம் ஏது நோட்டு?

நோட்டுப் பெற்றிட சீமான்கள் தேவைப்படுகிறார்கள்; ஓட்டு வைத்திருக்கும் ஏழைகளுக்குத் தித்திப்புத் தந்திட சோஷியலிசம் பேசவேண்டி இருக்கிறது என்று பச்சையாகவே சொல்லிவிடுவார்! பச்சைத் தமிழரல்லவா? தம்பி! காங்கிரஸ் கட்சியின் அமைப்பை எடுத்துக்கொண்டு பார்த்தாலும், காங்கிரஸ் ஆட்சியின் செயல் முறைகளை ஆராய்ந்து பார்த்தாலும், சோஷியலிசம் வருவதற்கான சூழ்நிலையே இல்லை என்பது நன்றாகப் புரிகிறது.

என்றாலும், காமராஜர், சோஷியலிசம் பேசுகிறார்; எந்தத் துணிவு காரணமாக? அதனை விளக்கிட ஒரு சிறு கதை கூறியாக வேண்டும், தம்பி! கூறட்டுமா?

மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவன், மன்னன் முன் மண்டியிட்டு, “அரசே! ஒரு வேண்டுகோள்; என்னை இப்போதே தூக்கிலே

பேட்டுவிடச் சொல்லாதீர்கள், ஒரு வருடம் எனக்கு அவகாசம் தருக! அதற்குள் நான், தங்கள் பட்டத்துக் குதிரைக்கு”பறந்திட’க் கற்றுக்கொடுக்கிறேன். அதனைக் கண்ட பிறகு, எனக்கு விதிக்கப்பட்ட தண்டனையைத் தள்ளுபடி செய்துவிடலாம். ஒரு வருடத்திற்குப் பிறகு, குதிரைக்குப் பறக்கும் சக்தி வந்திடச் செய்யத் தவறினால் என்னைத் தூக்கிலே போட்டுவிடுங்கள்’ என்று முறையிட்டுக்கொண்டான். மன்னன், குதிரையே பறந்திடுமாமே, பார்ப்போமே என்று எண்ணிக்கொண்டு, மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தவனுக்கு ஒரு வருடம் விடுதலை தந்தான்.

மரணத்தின் பிடியிலிருந்து தப்பித்துக்கொண்ட அந்த தந்திரக்காரனை அவனுடைய நண்பன் பார்த்து, "ஒரு வருடத்தில் குதிரைக்குப் பறக்கும் சக்தி பெற்றுத் தருவதாகக் கூறிவிட்டு, ஒரு வருட விடுதலை பெற்றுக்கொண்டாயே! ஒரு வருடம் முடிந்ததும், உன்னைத் தூக்கிலே போடாமல் விடுவார்களா? மன்னனுக்கு இப்போது உள்ள கோபத்தைவிட அதிகமாக அல்லவா கோபம் வரும். நம்மை ஒரு ஏமாளி என்றா இவன் எண்ணிக் கொண்டான்? தூக்கு மரத்திலே தொங்கட்டும். இவன் உடலைக் கழுகும் நரியும் விருந்தாக ஆக்கிக்கொள்ளட்டும் என்றல்லவா கட்டளை பிறப்பிப்பான்? என்ன செய்வாய் அப்போது?” என்று கேட்டான்.

தந்திரக்காரன் சொன்னான்,

ஒரு வருடத்திற்குப் பிறகு நடக்கக்கூடியதுபற்றி இப்போது ஏன் எண்ணிக்கொண்டு வேதனைப்பட வேண்டும்?

தூக்கு மேடையில் இருந்து வெளியே வந்திருக்கிறேன்; ஒரு வருடம் அவகாசமும் கிடைத்திருக்கிறது.

இந்த ஒரு வருஷத்திற்குள் அரசனே இறந்துபடக் கூடும்.

அல்லது நானே மடிந்துபோகக்கூடும்!

அல்லது குதிரை, பறக்க ஆரம்பித்தாலும் ஆரம்பித்து விடக்கூடும்!!

ஒரு வருடத்தில் என்னென்னவோ நடைபெறலாம்.

நம்பிக்கை கொள்ள வேண்டும்! உடனடியாகக் கிடைத்திடும் பலனைத்தான் கணக்குப் போட்டுப் பார்த்திட வேண்டும். ஒரு வருடத்திலே ஏதேதோ நடக்கலாம். அதன் காரணமாக, எனக்கு நிபந்தனையற்ற விடுதலை கிடைத்தாலும் கிடைக்கலாம்.

ஒரு வருடத்திற்கு பிறகு, தூக்கிலே போடுவார்களே என்பது பற்றி இப்போதே எண்ணி எண்ணி மனம் புண்ணவானேன்?

ஒரு வருடம் கிடைத்திருக்கிறது! அந்தக் காலத்தில, பெறவேண்டிய வசதியை, வாழ்க்கை இன்பத்தை ஏன் இழந்திட வேண்டும்? என்று கேட்டானாம்.

அதுபோல காமராஜர், சோஷியலிசம் கொண்டுவரவில்லையே, முடியாமற் போய்விட்டதே என்று எண்ணி ஏக்கம் கொள்ளாமல், குதிரையைப் பறக்க வைக்கப் போகிறேன் என்று பேசி, மரண தண்டனையைத் தவிர்த்துக் கொண்டவன்போலப் பேசுகிறார், சோஷியலிசம் பற்றி.

சோஷியலிசம் பேசி ஓட்டுகளைப் பறித்துக்கொள்வோம் முதலில். பிறகு, சோஷியலிசம் ஏன் கொண்டுவரவில்லை என்று மக்கள் கேட்டுவிட்டுப் போகட்டுமே! கொடுத்த ஓட்டுகளைத்

திருப்பியா வாங்கிக்கொள்ள முடியும்? - என்று அவர் எண்ணுகிறார் என்பது விளங்கவில்லையா? தம்பி! ஆம் என்கிறாய். மற்றவர்களும் விளக்கம் பெற்றிடவேண்டாமா?

அதற்காகத் தம்பி! சோஷியலிசம் பேசிடும் காமராஜரின் காங்கிரசிலே, எத்தகைய முதலாளிகள் கொலு இருக்கிறார்கள் என்பதை மக்களுக்கு எடுத்துக் காட்டிட வேண்டும்.

"வலது கரம்' - என்றும், தேர்தல் பிரசார பீரங்கி என்றும் கொண்டாடுகிறார்களே, டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரை. அவருந்தானே பேசுகிறார், சோஷியலிசமே எமது இலட்சியம் என்று. அவர் நிலை என்ன என்பதை நாடு அறிந்துகொள்ள வேண்டாமா?

ஒருவரிடம், வருவாய் தரத்தக்க தொழில், வாணிப அமைப்புகள் குவிந்துவிடுமானால், மக்களின் உழைப்பினால் உற்பத்தியாகும் செல்வத்திலே பெரும் பகுதி, அந்த ஒருவரிடம் போய்ச் சேர்ந்துவிடுகிறது. ஏழை பணக்காரன் பேதம், அகன்ற வாய்கொண்ட பெரிய பள்ளமாகிவிடுகிறது.

இதைப் போக்குவதுதானே சோஷியலிசம்?

இதைத்தானே காங்கிரஸ் தனது திட்டமாகக் கொண்டுள்ளதாக, டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் கூறுகிறார்.

"அப்படியானால் அந்த நேர்த்திமிக்க இலட்சியவாதி எந்த நிலையிலே இருக்கிறார்?''

அவருடைய குடும்பத்திடம் உள்ள தொழில் அமைப்புகள், வருவாய்த் துறைகள் எப்படி உள்ளன? அளவும் வளமும் எப்படி இருக்கிறது என்பதனை நாடு தெரிந்துகொள்ள வேண்டாமா?

டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், தமக்கு இந்தியப் பேரரசில் கிடைத்திருந்த அமைச்சர் பதவியைப் பயன்படுத்தி, தொழில் அமைப்புகளைப் பெரிதாக்கிக்கொண்டார் என்ற புகார் கிளம்பிற்று.

நான் அந்தப் புகார் பற்றிய நோக்கத்துடன் இதனைக் குறிப்பிடவில்லை.

மிக மிக நியாயமான, நேர்மையான முறைகளிலேயே இந்தத் தொழில் வாணிப அமைப்புகள் வளர்ந்தன என்றே வைத்துக் கொள்வோம். ஆனால் இவ்வளவு வருவாய்த் துறைகள், டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் குடும்பம் ஒன்றினிடம் இருந்திடலாமா? இருக்கவிடுவது, சோஷியலிசமா? இருக்கும் போது, அவர் சோஷியலிசம் பேசுவதிலே பொருள்தான் உண்டா? என்ற இவை பற்றியச் சிந்தனையைக் கிளறிவிடுவதற்காகவே கூறுகிறேன்.

வெட்டப்பட்டதோ, வெடிப்பு விரிவானதோ, எதுவாக இருந்தால் என்ன, பள்ளம் பள்ளந்தானே!

தம்பி! சோஷியலிசம் பேசிடும், டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் குடும்பத்திடம் உள்ள தொழில் - வாணிப அமைப்புகளின் பட்டியல் - எனக்குக் கிடைத்துள்ள அளவு - தருகிறேன் - பார்த்திடு! - காங்கிரஸ் பேசிடும் சோஷியலிசம், நம்பத் தகுந்ததுதானா என்பது பற்றிய தெளிவு தன்னாலே வந்திடும்.

டில்லி
கல்கத்தா
விஜயவாடா
பம்பாய்
விசாகப்பட்டினம்
சென்னை
ஐதராபாத்

கொச்சி
பெங்களூர்
ஆமதாபாத்
கோயம்புத்தூர்

இத்தனை நகரங்களிலே, டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் குடும்பத்தாரின் வணிக அமைப்புகள் உள்ளன.

“ஏக பாரதம்’ - எத்தனை எழிலுடன் விளங்குகிறது என்பதனை எடுத்துக் காட்ட, இந்தப்”பேரரசு’ அமைக்கப் பட்டிருக்கிறது போலும்!

இங்கெல்லாம் உள்ள கம்பெனிகளில், எத்தனை இவர் அமைச்சர் வேலை பெற்ற பிறகு வளர்ந்தன, மூலதனம் எப்படியெப்படி கிடைத்தன என்பன பற்றிய தகவல் அறிந்திட நான் முனையவில்லை.

நான், இந்தப் பிரச்சினையில் ஊழல் இருக்கிறதா, அக்ரமம் நடந்திருக்கிறதா என்ற கேள்வியிலே என்னை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை.

எனது நோக்கமெல்லாம், சோஷியலிசம் பேசிடும் ஒருவரின் குடும்பம், பொருளாதாரப் பேரரசு அமைத்து ஆண்டு கொண்டிருக்கும் விந்தையை நாடு அறியச் செய்ய வேண்டும் என்பதேயாகும்.

கொல்லாமைபற்றி உருக்கமான “உபன்யாசம்’ செய்திடும்”குரு’ சாப்பிடும் கோழிப் பிரியாணியின் அளவு பற்றிய தகவலைத் தான் நான் தருகிறேன்; கோழி விலை போட்டு வாங்கியதா? கொல்லைப் புறத்தில் மேயவந்த வேறோர் வீட்டுக் கோழியா? என்பது பற்றிய "மர்மம்’ நான் தரவுமில்லை. எனக்குத் தெரியவும் தெரியாது. இனி அந்தப் பேரரசைக் காணலாம்.

1. ஓரியண்டல் காஸ்மாடிக்ஸ்
2. டி. டி. கெமிகல்ஸ்

3. டார்டாய்ஸ் இந்தியா
4. ஓரியண்ட் பார்மா
5. கொப்பா பார்மா
6. ரைட் எய்ட்ஸ் ஓரியண்ட்
7. டி. டி. லிமிடெட்
8. டைம் எய்ட்ஸ், இந்தியா
9. லண்டன் ரப்பர் கம்பெனி
10. பாக்வெல் இன்டஸ்ட்ரீஸ்
11. பிரிசைசன் என்ஜினியர்ஸ்
12. இன்டர்நேஷனல் இன்ஸ்ட்ருமன்ட்ஸ்
13. எல். டி. ஸேமோர் அண் கோ
14. காட்டரி ப்ரை இந்தியா
15. செஸ்பிரோ பிராண்டு இந்தியா
16. இந்தூரிஃபாரம்
17. ஏ. கே. பார்மா கெமிக்ஸ்டிக்ஸ்
18. டி. டி. கிருஷ்ணமாச்சாரி கம்பெனி.

தம்பி! பெயர்கள் யாவும் ஆங்கிலம் - நான் செய்த தவறு அல்ல. அந்தக் குடும்பம் பெற்ற பேறு!!

இந்த அமைப்புகளுடன், நாடெங்கும் மக்கள் விரும்பி வாங்கிடத்தக்க பல பொருள்களுக்கு, இந்தக் குடும்பம், "ஏஜென்சி' உரிமை பெற்றிருக்கிறது.

1. உட்வார்ட்ஸ் கிரைப் வாட்டர்
2. பாண்ட்ஸ் கிரீம்
3. வாட்டர்மென் இங்க்; பேனா
4. பிரஸ்டிஜ் குக்கர்
5. வெஸ்ட்கிளாக்ஸ் கடிகாரங்கள்
6. அதுல் உற்பத்திப் பொருள்கள்
7. நவஸரி ஆயில் மில்ஸ்
8. ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ்
9. பக்கிம்ஹாம் கர்னாடிக் மில்ஸ்
10. குட்லாஸ் வால் பிக்மண்ட் அண்டு ரிஸின்ஸ்
11. காட்பெரி சாக்லட்
12. போர்ன்விடா

13. மாத்ஸ்ஃபாக்டர் காஸ்மாடிக்ஸ்
14. எஸ்ஸோவின் பிளிட்
15. மெட்டல் ஸ்ப்ரேயர்கள்
16. டாக்டர் வெஸ்ட்டின் பல் பிரஷ்
17. வில்லியம் ஷேவிங் சோப்
18. காரெட் பிளேடுகள்
19. எபிக் டூத் பேஸ்ட்
20. ஸ்கைலைன் கட்லரி
21. சாயம் - ரசாயனப் பொருள்கள்

அளவும், வகையும் விளங்குகிறதல்லவா? தம்பி!

பிளேடுகூட! பிரஷ்கூட! பல்பசைகூட! பூச்சி மருந்தைக்கூட விடவில்லை!!

இத்தகைய ஒரு பேரரசு இந்தக் குடும்பத்துக்கு, இந்தக் குடும்பத் தலைவர் பேசுவதோ சோஷியலிசம்!! தம்பி! மக்களை ஏமாளிகள் என்றே தீர்மானித்துவிட்டிருந்தாலொழிய, பேசிடும் துணிவு பிறந்திடுமா?

இந்த டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் காமராஜருக்கு வலது கரமாம்!

ராஜதந்திர முறை கூறிடும் மூளையாம்! பேசிக்கொள்கிறார்கள்.

மக்கள் இதனை அறியமாட்டார்களா? இப்படிப் பட்டவர்களைக்கொண்டு இயங்கி வரும் காங்கிரஸ் கட்சி, எப்படி சோஷியலிசத்தைக் கொண்டு வர முடியும் என்று கேட்கமாட்டார்களா என்ற எண்ணம் ஏற்படவே செய்யாதா காமராஜருக்கு? ஏற்படும்.

ஆனால், கதை தந்துள்ளேனே அதுபோல, குதிரையைப் பறக்கவைக்கிறேன் என்று கூறி, மரண தண்டனையிலிருந்து இப்போதைக்குத் தப்பித்துக்கொள்ளலாம் என்று திட்டமிடு கிறானே தந்திரக்காரன் அதுபோல காமராஜர், பின்னாலே

என்னவோ நடந்துவிட்டுப் போகட்டும், இப்போதைக்கு சோஷியலிசம் பேசி மக்களை மயக்கி ஓட்டுக்களைத் தட்டிக்கொண்டு, காங்கிரசு ஆட்சிக்கு ஆபத்து ஏற்படாமல் பார்த்துக்கொள்வோம் என்று திட்டமிடுகிறார். புரிகிறதல்லவா?

அன்புள்ள

அண்ணாதுரை

13-11-66

திரு. வி. க. கூறுகிறார்!

உணர்ச்சி ஒரு செல்வம்! அடக்கி ஆண்டால் அரும் பயன் கிடைக்கும்!
அகல் விளக்கே போதும் இருள் போக்கிட !
உணர்ச்சி ஊட்டச் சென்றேன்; உன்னத உணர்ச்சி பெற்றேன்!
கட்சி வாழ்ந்திடக் காட்டாட்சி தர்பாரா?
நோட்டுகளைக் காட்டி ஓட்டு வாங்கிடலாம் என்பது காங்கிரசார் நம்பிக்கை!
அரசியல் ஆதிக்கக் கூட்டுச் சதியை முறியடிக்கவே கழகம் தேர்தலில் ஈடுபடுகிறது!

தம்பி!

"உணர்ச்சி ஒரு செல்வம். அதனைப் பெற்றதும் துள்ளிக் குதித்து ஓடி ஆடி அதனைப் பாழாக்கிவிடுவது அறிவுடைமை ஆகாது. அதனை அடக்கி ஆண்டு ஒருமைப்படுத்தி நேரான வழியில் பயன்படுத்தி பலன் அடைவதே அறிவுடைமையாகும்.''

அன்பொழுகும் விழியினர் தென்மொழி தேன்மொழியே என்பதனை மெய்ப்பித்த நாவலர், பண்பாடு காப்பாற்றப் பட்டாலன்றி மனித குலத்துக்கே உயர்வு இல்லை என்றுரைத்த பாவலர், திரு. வி. க-யாணசுந்தரனாரின் கருத்தினையே மேலே தந்துள்ளேன் - அஃது தமிழரின் இதயத்தில பொறிக்கப்பட வேண்டியதோர் பொன்மொழியாகும்.

உணர்ச்சி ஒரு செல்வம்!

அடக்கி ஆண்டிடின் தக்க பலன் கிட்டும்.

எங்குச் சென்றிடினும் நமது கழகத் தோழர்களிடம் உணர்ச்சி பொங்கி வழிந்திடக் காண்கின்றேன். கொளுத்தும் வெயிலையும் கொட்டும் பனியையும் மழையையும் பொருட்படுத்துகின்றார் களில்லை. கவி பாடிடும் கண்ணினராகக் கூடுகின்றனர், திரள் திரளாக! எடுத்துக் கூறப்படும் கருத்தினைக் கூர்த்த மதியுடன் ஆய்ந்து பார்த்துக்கொள்கின்றனர். ஈடில்லா ஓர் எழுச்சி! மட்டற்ற ஓர் மகிழ்ச்சி! இந்த நூற்றாண்டின் இணையில்லா விழிப்புணர்ச்சி என்று எண்ணத்தக்க நிலைமை! காண்கின்றேன், களிப்புக் கடலில் மூழ்கிடுகின்றேன். எத்தனை கடமை உணர்ச்சி இவர்கட்கு! உழைத்திடும் உத்தமர்களாம் இவர்கள் ஊர் சீர்படப் பாடுபட்டாக வேண்டும் என்ற பண்பு மிக்கோராகவன்றோ விளங்குகின்றனர். ஏழ்மை! நலிவு! வாழ்வின் சுமை! எல்லாவற்றையும், தாங்கித் தாங்கிக் கூனிப்போய்க் குறுகிப்போய், எதிலும் ஈடுபாடு கொண்டிடத்தக்க தெம்பு அற்றுப்போய், "இருக்கின்றோம் இறந்துபட! இறந்துபடும் வரையில் இடர்ப்பாட்டில் உழல்கின்றோம்! என்னே இவ்வாழ்க்கை! எதற்கோ இவ்வாழ்க்கை!' என்றெல்லாம் எண்ணி எண்ணி ஏக்கத்தால் தாக்குண்டு கிடந்திடும் இவர்களா, நாடு, மொழி, வளம், உரிமை, நல்லறம், நல்லாட்சி என்பனபோன்ற இலட்சியங்களை உணர்ந்து அவைதமைச் செயலிலே கண்டிட கிளம்பிடப் போகிறார்கள் என்ற ஐயப்பாடு குடையும் நிலையினனாகப் புறப்பட்ட என்னையே, அவர்கள் தமது ஆர்வத்தினால், சலியாத உழைப்பினால், தளராத ஊக்கத்தினால், புது நம்பிக்கை கொண்டிடச் செய்துவிட்டனரே!

நான் அவர்களுக்கு உணர்ச்சி ஊட்டிடச்

சென்றேன்! அவர்களல்லவா எனக்கு உன்னதமான உணர்ச்சியினைத் தந்துள்ளனர்.

ஏதாகிலும் கிடைத்திடாதா, கிழங்கு கிளிஞ்சல் போன்றவையேனும் என்றெண்ணிப் பூமியினைக் குடைந்திடும்போது, தங்கப்பாளம் கரத்தினில் தட்டுப் பட்டால் பெறுபவன் எத்துணை மகிழ்ச்சி பெற்றிடுவான். அந்நிலையன்றோ எனக்கு!

உணர்ச்சி ஒரு செல்வம்! உண்மை! அந்தச் செல்வத்தைக் குவியல் குவியலாக, குன்றன்ன அளவினதாகக் காண்கின்றேன்; ஒவ்வோர் நாளும்; ஒவ்வோர் இடத்திலும்.

காலையிலே, மேயரும், மாவட்டச் செயலாளரும், மணிமொழியாரும் மற்ற நண்பர் சிலரும் மாநில மாநாட்டுக்கான "திடல்’ காண அழைத்துச் சென்றனர். சென்ற இடத்திலே, எத்தனை இனிய முகங்கள், நட்பு மொழிகள், வரவேற்கும் கண்கள்!

இடத்திலே கள்ளி காளான் நிரம்ப உள்ளனவே என்கின்றேன்; இதுதான் இடம் என்று தீர்மானித்துவிடுங்கள், எட்டே நாளில் இந்த இடம் பட்டுப்போல பளபளக்கிறது பாருங்கள் என்கிறார்கள்.

இங்கேதான் மாநாடாம்! மாநில மாநாடாம்! தேர்தல் அறிக்கையும் வேட்பாளர் பட்டியலும் வெளியிட அமைகின்ற மாநாடாம்! நமது பக்கத்தில்! நமது பேட்டையில்! நமது வட்டத்தில்! - என்றெல்லாம் பரிவுடன் பேசுகின்றனர். கழகத்திடம் அவர்கள் கொண்டுள்ள பாசம், வைத்துள்ள நம்பிக்கை தூய்மையானது; அது வளர்ந்தபடியும் இருக்கிறது. வஞ்சகத்தாலும் சதிச் செயலாலும் அதனை வீழ்த்திடவோ குன்றச் செய்திடவோ முடியவில்லை. காலைக் கதிரவன்போன்ற ஓர் எழிலுடன், உயிரூட்டம் தரும் சக்தியுடன், அந்த எழுச்சி

விளங்குகிறது.

கோடி கோடியாகக் கொட்டினாலும் கிடைத்திட முடியாத கருவூலம் நமக்குக் கிடைத்திருக்கிறது; உண்மை உழைப்பாளரின் உணர்ச்சி எனும் செல்வம்.

ஆடவர் மட்டுமல்ல தாய்மார்கள்; வாலிபர் மட்டுமல்ல, முதியோர்கள், சிறார்கள்; எல்லோரிடமுமே இந்த உணர்ச்சி ததும்பிடக் காண்கின்றேன்; உள்ளன்பு இருந்திடக் காண்கின்றேன். கண்டதும் ஓர் கனிவு! சொல் கேட்டதும் ஓர் பற்று! அழைத்ததும் ஓர் பாசம்! இதனைவிடச் சிறந்ததோர் செல்வம் எங்கும் இருந்திட முடியாது.

பெருமழையால் வீடிழந்து விம்மிக் கிடந்திடு வோரைக் காணச் செல்கின்றேன், அவர்கள் வாழ்த்தொலி எழுப்பி அல்லவா வரவேற்கிறார்கள்!

அண்ணன் வந்தானாமே, உங்கள் அண்ணன்! என்ன கொண்டுவந்து தந்தான்? உமது அல்லலைப் போக்கிட ஆளுக்கு ஆயிரம் என்றா அள்ளித் தந்தான்? - என்று கேமொ ழி பேசிடக்கூடச் சிலர் உளர் எனினும் அந்த உத்தமர்கள், நான் என்ன தந்தேன் என்றா கேட்டார்கள்? அண்ணன் வந்தான்! எமது அல்லலைக் கண்டான்! ஆவன செய்திடுவான்!! என்றல்லவா நெஞ்சம் நெகிழக் கூறுகின்றனர்! அத்தகைய உள்ளன்பும் உணர்ச்சிப் பெருக்கும் நிரம்பியுள்ள நிலை கண்டேன், பெருமகிழ்வு கொண்டேன். ஆனால் மறுகணமோ கவலை என் மனத்தினைக் குடைந்தெடுக்கலாயிற்று.

இவ்வளவு உள்ளன்பையும் உணர்ச்சிப் பெருக்கையும், துச்சமென்று எண்ணி அல்லவா, ஆளவந்தார்கள், மீண்டும் நாங்களே அரியாசனம் அமர்வோம் என்று கூறுகின்றனர். அகந்தை அது என்போம். ஆயினும் எதனால் பிறந்துளது அந்த

அகந்தை? இத்தனைத் தெளிவாக ஏழை எளியோர், பாட்டாளி, விவசாயி கழகப் பற்றினைத் தெரிவித்திடுவது கண்டும் ஆளவந்தார்கள், மீண்டும் தாமே தேர்தலில் வெற்றி பெறப் போவதாக, எந்தத் தைரியத்தினால் கூறுகின்றனர்?

எழுச்சி இருக்கிறது நிரம்ப, ஆனால் ஏழையரிடம்!

ஏழையர் விலை கொடுத்து வாங்கிவிடத் தக்கவர்கள்.

உணர்ச்சி இருக்கிறது நிரம்ப!

ஆனால் அந்த உணர்ச்சியை மங்கச் செய்திடலாம், மடியச் செய்திடலாம் காசு வீசி!

இவ்விதமாகவன்றோ, தம்பி! காங்கிரஸ் கட்சியினர் எண்ணு கின்றனர். ஏழையர்! ஆகவே அவர்களை விலை கொடுத்து வாங்கிவிடலாம், பணத்தால் அடித்து வீழ்த்திவிடலாம் என்றல்லவா எண்ணுகின்றனர்.

மனித இதயத்தை, தன்மானத்தை, உரிமை உணர்ச்சியை, கொள்கைப் பற்றை, அவ்வளவு மலிவான பண்டமாக அல்லவா கருதுகின்றனர்! பணம் பெருத்தான்கள்! கேவல ஜென்மங்கள் என்றல்லவா கருதுகின்றனர் ஏழையரை!

இதனை எண்ணும்போதுதான் தம்பி! கவலை என் உள்ளத்தைப் பிய்த்துத் தின்னுகிறது.

காங்கிரஸ் ஆளவந்தார்கள் எண்ணுவதுபோல, ஏழையர் வீழ்ந்துபடுவர் என்ற அச்சம் அல்ல எனக்கு; எங்ஙனம் அவ்விதமான அச்சத்தை நான் கொள்ள முடியும்? நான் காணும் கண்ணொளி பாவனையா? நான் கேட்டிடும் பாசப் பேச்சு? பாவனையா? இல்லை! இல்லை! முக்காலும் இல்லை! இதயம் பேசுகிறது! உணருகின்றேன்! ஆகவே அவர்களை

விலைகொடுத்து ஆளவந்தார்கள் வாங்கி விடுவர் என்ற அச்சம் நான் கொண்டிடவில்லை!

நான் கவலைகொள்வதற்குக் காரணம், பெரும் பாலான மக்களை ஏழ்மையிலே தள்ளி வைத்துள்ள எத்தர்கள், வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவதுபோல, கேவலப்படுத்தவும் துணிகின்றனரே என்பதுதான்.

மந்தகாச வாழ்வு நடாத்தும் சீமானின் மாளிகைகளிலே கொள்ளை இலாபமடிக்கும் வணிகக் கோட்டங்களிலே கூடிப்பேசுகின்றனர், தம்பி! கொந்தளித்தபடி இருக்கும் இந்த எழுச்சியை எப்படி வீழ்த்துவது என்பதுபற்றி, போர் முறை வகுக்கிறார்கள்.

எதிர்த்துத் தாக்குவதா?
சுற்றி வளைத்துக்கொள்வதா?
பக்கவாட்டத்திலே பாய்ந்துபிளப்பதா?
கோட்டைக்குள்ளே குத்துவெட்டு எழச்செய்வதா?

எந்த முறையிலே தாக்குதலை அமைத்துக்கொள்வது என்று சூழ்ச்சி வகுத்தபடி உள்ளனர். காங்கிரசுக்கு எதிர்ப்பாக உள்ள ஓட்டுகள் சிதறிடாதபடி பார்த்துக்கொள்ள, மும்முனைப் போட்டியைத் தவிர்த்திட வேண்டும் என்பதற்கான தொகுதி உடன்பாடு ஏற்பட்டுவிடினும்,

ஏதாகிலும் ஒரு கட்சியைக் கிளப்பிவிட்டோ, தனிப்பட்டவர்களைத் தூபம் போட்டோ, மும்முனைப் போட்டியை உண்டாக்கியே தீருவது என்பது காங்கிரஸ் காரரின் சூழ்ச்சித் திட்டங்களிலே ஒன்று.

இதனை அவர்கள் மிக வலிவுள்ள திட்டமென்றும் நம்புகின்றனர்.

தி. மு. கழகம் மிக மிகச் சாமான்யர்களாலே நடத்தப்பட்டு வருவது. அதன் வளர்ச்சி கண்டு

அருவருப்புக்கொண்டோர் உளர்; அவர்களைத் தட்டிவிட்டுப் போட்டியை மூட்டிவிடலாம் என்று கருதுகின்றனர்.

தம்பி! முதன் முதல் கழகம் தேர்தலிலே வெற்றி பெற்றபோது, காங்கிரசைக் காலமெல்லாம் எதிர்த்து வந்தவர் ஒருவர் - ஆனால் நமது கழகம் அல்ல - என்னைத் தருவித்து, தமது வாழ்த்தையும் பாராட்டுதலையும் தெரிவித்ததுடன், இந்த விதமான வெற்றியும் வளர்ச்சியும் கழகத்துக்குக் கிடைத்திடும், அதிலும் இவ்வளவு குறுகிய காலத்தில் என்று நான் எண்ணிடவே இயலவில்லை. எப்படியோ நல்ல இடம் கிடைத்து விட்டது, இனி அதனைக் கெட்டிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்றுரைத்தார். மகிழ்ச்சி அடைந்தேன். "இதுவரையில் கழகத்துக்கு ஆதரவு காட்டாதிருந்து வந்தவர்களெல்லாம்கூட, இது வளருகிற கட்சிதான் என்பது இப்போது மெய்ப்பிக்கப்பட்டு விட்டதால், இனி ஆதரவு அளித்திட முன்வருவார்கள்’ என்று பேசி என் ஆவலைக் கிளறினார்.

அந்த ஆவலுடன் எனக்கோர் ஐயப்பாடு கிளம்பிற்று. ஆதரவு கிடைத்திடும் என்கிறாரே, எந்த இடத்து ஆதரவோ என்பது பற்றிய ஐயப்பாடுதான்! அவரே அதனைப் போக்கி விட்டார்; "நான் சில கம்பெனிகளுக்குச் செல்ல முடியும், ஆதரவு காட்டச் சொல்லி, அவர்களுக்கெல்லாம் சில இலட்சங்களை நன்கொடையாகக் கொடுப்பது என்பது மிக எளிதான காரியம்’’ என்றார்.

கிணறு வெட்டுகிறார், கிளம்புவது கிளம்பட்டும் என்று எண்ணிக்கொண்டு நான் ஏதும் பேசாதிருந்தேன்; அவர் தமது பேச்சைத் தொடர்ந்தார்.

"ஒரு காரியம் செய்ய வேண்டும் நீங்கள் தொழில்களை - பஸ்கள் போன்ற தொழில்களை - தேசிய மயமாக்க வேண்டும் என்ற பேச்சை விட்டுவிட

வேண்டும்; அது சரியான திட்டமல்ல; அதனை மட்டும் கழகம் மறுத்துவிடுமானால், தொழிற் கோட்டங்கள் உமது கழகத்துக்கு நன்கொடை தந்திடத் தாராளமாக முன்வரத் தயக்கம்கொண்டிடா" என்றார்.

புரிகிறதல்லவா, தம்பி! நமது கொள்கையை விலை பேசுகிறார்! என்னிடம்! எந்தக் கொள்கையைக் கூறி மக்களின் பேராதரவைப் பெற்றோமோ, அதே கொள்கையை, கம்பெனி களிடம் நன்கொடை வாங்கிட, "விட்டுவிட'ச் சொல்லுகிறார்!!

நமது வளர்ச்சியும் வெற்றியும் அவருடைய மனத்திலே அந்த அளவுக்குத்தான் மதிப்பைக் கொடுத்தது.

நான் கோபம் கொள்ளவில்லை, வீண் வேலை அல்லவா? அவர், அவருடைய "அரசியலை'ப் பேசினார். எங்கள் அரசியல் வேறு என்று கூறிவிட்டு வந்துவிட்டேன்.

கழகம் வளர வளர இதுபோல வளைந்து கொடுக்கும் என்ற நினைப்பு நிரம்ப இருந்து வந்தது. இப்போது வெகுவாகக் குறைந்துவிட்டது. என்றாலும், கழகத்தில் சிலரிடமாவது இந்த வலையை வீசிடலாம், ஏதாவது பிடிபடக்கூடும் என்ற நப்பாசை கொண்டோர் சிலர் உளர்.

அது ஒரு காரணம், கழக ஆதரவாளர்களை வீழச் செய்துவிடலாம் என்று எண்ணித் திட்டமிடுவதற்கு.

ஆனால் இவைகளையெல்லாம்விட தம்பி! அவர்கள் மிகப் பலமாக நம்பிக்கொண்டிருப்பது, உணர்ச்சி ஒரு செல்வம், அதனை அடக்கி ஆண்டால் மட்டுமே பலன் கிடைக்கும் என்பதனை அறியாது, ஓடி ஆடி, உணர்ச்சியைப் பாழாக்கிக் கொள்ளுவோம் என்பதிலேதான். அதனை உணர்ந்துதான் தம்பி!

தெளிந்த சிந்தனையாளர் திரு. வி. க.வின் மணிமொழியைத் துவக்கத்திலே தந்துள்ளேன்; உணர்ச்சியைப் பதப்படுத்தி பயன் பெற்றிட முனைய வேண்டும்.

மின்னல் கண்ணைப் பறித்திடும், இருளைப் போக்கிடாது.

அகல் விளக்காயினும் போதும், இருளைப் போக்கிட.

உணர்ச்சியைச் சிதறடித்துவிடுவோம் என்ற எண்ணத்துடன் தம்பி! அவர்கள் நம்பிக்கொண்டிருப்பது, நமது பணி நின்று நிதானமாக, தட்டாமல் தயங்காமல், தொடர்ந்து இருக்க முடியாது என்பதிலே.

இவர்களோ ஏழைகள், இல்லாமை கொட்டிக்கொண் டிருக்கும் இந்நிலையில் இவர்கள் ஆர்வம் மிக்கவராயினும், தொடர்ந்து எங்கிருந்து தொண்டாற்றப் போகிறார்கள்? இடையிலே சோர்ந்துபோவர், தளர்ந்து போய்விடுவர் என்று நம்புகின்றனர்.

கூட்டம் கூட்டுவர் கோலாகலமாக.
கொடிகளை நாட்டுவர் கொண்டாட்டமாக.
முழக்கம் எழுப்புவர் இடிபோன்றதாக.

ஆனால், பரபரப்பான வேலையிலே தம்மை ஈடுபடுத்திக் கொள்வதன் காரணமாகவே அலுத்துப் போய்விடுவர், தொடர்ந்து பணியாற்றும் இயல்பு எழாது, வலிவு இராது, பழக்கம் இல்லை, பயிற்சி இல்லை என்று பேசிக்கொள்கின்றனர்.

ஒருவிதத்திலே இதிலே பெருமளவு உண்மையும் இருக்கத்தான் செய்கிறது என்பதனை நான் முன்பு நடைபெற்ற பொதுத் தேர்தல்களிலேயே பார்த்திருக்கிறேன். அதற்காக வருத்தப்பட்டும்

இருக்கிறேன்.

தொகுதியின் அமைப்பு, வாக்காளர் நிலை, அவர்களின் தொடர்புகள் உள்ள வாக்காளர்களில் எத்தனை சதவிகிதத்தவர் வாக்கு அளித்திடுவர்? ஏன் மற்றவர் வந்திடுவதில்லை என்பனபோன்ற தகவல்களைத் திரட்டி அவற்றிற்கு ஏற்ப வேலையை அமைத்துச் செல்வது என்பதிலே, நமது கழகத் தோழர்களுக்கு இருப்பதைக் காட்டிலும் அதிக அளவிலும் நேர்த்தியான முறையிலும் பயிற்சி, காங்கிரசில் உள்ளவர்களுக்கு இருக்கிறது.

இந்த நிலை இப்போது குறிப்பிடத்தக்க அளவுக்கு மாறிவிட் டிருக்கிறது என்பது மகிழ்ச்சி தருகிறது. என்றாலும் இந்தத் துறையிலே நமது கழகத் தோழர்களின் பயிற்சி மேலும் செம்மைப்பட்டாக வேண்டும்.

பொதுத் தேர்தலிலே நாம் நமது கடமையாகக் கருதி ஓட்டுச் சாவடி சென்றாக வேண்டும் என்ற உணர்வு கொண்டவர் தொகை வளர்ந்து வருகிறது என்றாலும், இன்றும் அதனைக் கடமை என்று கொள்ளாதாரின் தொகை பெரும் அளவு இருக்கத்தான் செய்கிறது.

ஆனால் காங்கிரஸ் கட்சியில் தேர்தல் தந்திரம் அறிந்தவர்கள், மேற்கொள்ளும் சூழ்ச்சி காரணமாக

ஓட்டுச் சாவடிக்கு வராதவர்களின் ஓட்டுகளெல்லாம் காங்கிரசு கட்சிக்குக் கிடைத்திடும் விந்தை நடைபெற்று விடுகிறது.

ஆகவே, நமது கழகத் தோழர்களிடம் எழுச்சி இருந்தால் மட்டும் போதாது, தொடர்ந்து செயலாற்றும் இயல்பு வளர வேண்டும்; அவற்றுடன் விழிப்புணர்ச்சி வேண்டும், காங்கிரஸ் கட்சியினர் மேற்கொண்டிடும் குறுக்குவழிச் செயல்களைக்

கண்டறிந்து தடுத்திட!

தம்பி! அவரவரும் தத்தமது தொகுதியைப் பொறுத்த மட்டில், இப்போதிருந்தே, இந்தத் துறைபற்றி அக்கறை செலுத்தியாக வேண்டும். முறைகளைச் செம்மைப்படுத்தியாக வேண்டும். நாம் வளர்ந்திருக்கிறோம். அதனை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். நம்மை ஒழித்தாலன்றி தமது ஒய்யார வாழ்வுக்கு எதிர்காலம் இல்லை என்பதனை அவர்கள் உணர்ந்து கொண்டுவிட்டுள்ளனர். ஆகவே இந்த முறை அவர்களின் தாக்குதலிலே கடுமை மிகுதியாக இருக்கும், முறைகளிலே சூழ்ச்சி அதிக அளவில் இருக்கும்.

காங்கிரசுக் கட்சி இலட்சியத்தை இழந்துவிட்டது. கொள்கை வலிவு அதனிடம் இல்லை. ஆகவே காங்கிரசுக்கு மக்களைத் தன்பால் ஈர்த்திடும் சக்தி கிடையாது என்கிறோம். இது உண்மையுங்கூட. கொள்கை வலிவு இழந்துவிட்டது, காங்கிரஸ் கட்சி என்பது வரையில்.

ஆனால் கொள்கையாளர்கள் இருந்த நாட்களை விட ஓட்டு வேட்டையில் வல்லவர்கள் சேர்ந்திருக்கும் இந்த நாட்களில் காங்கிரஸ் கட்சிக்கு, மக்கள்மீது வலைவீசும் சக்தி வளர்ந்திருக்கிறது.

தம்பி! காங்கிரஸ் தூய்மை மிக்கதாக, நாட்டு மக்கள் அனைவரும் "பயபக்தி விசுவாசம்' செலுத்திடத்தக்க நிலையினதாக இருந்த போது, தேர்தலில் வெற்றிபெற அந்தக் கட்சி எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்கும் தூய்மை இழந்த இன்றைய நிலையில் எடுத்துக் கொள்ளும் முயற்சிகளுக்கும் வித்தியாசம் இருக்கிறது.

தூய்மை மிக்க தேசிய ஸ்தாபனமாகக் காங்கிரஸ் விளங்கியபோது, காங்கிரசின் பெயரால் யாரை நிற்க வைத்தாலும் ஓட்டளித்து வெற்றி பெறச் செய்ய

வேண்டும் என்றனர்.

மக்கள் அதுபோன்றே, தேர்தலில் யார் நிற்கிறார் என்பதைப் பற்றிக் கவலைப்படாமல் மகாத்மா கட்சிக்கு ஓட்டுப்போட முனைந்தனர்.

யாரை நிற்க வைத்தாலும் என்று நான் மரியாதைக்காகச் சொன்னது, காங்கிரசின் பேரால் எதை நிற்க வைத்தாலும் என்பதாகும்.

காங்கிரஸ் கட்சியைச் சுற்றி வளர்ந்திருந்த ஒரு எழுச்சியூட்டும் வரலாறு அந்த அளவுக்கு வலிவளித்தது முதன் முறை. ஆனால் ஒரே ஒரு முறைதான்!

அடுத்த முறையே, காங்கிரஸ், யாரை நிறுத்தி வைத்தாலும் என்ற பேச்சை விட்டுவிட்டது.

காங்கிரஸ் ஸ்தாபனத்தின் பெருமையைப் பற்றிக் கூறியதுடன், தேர்தலுக்கு நிற்பவரின் நாட்டுப் பற்று, தொண்டு, தியாகம், அறிவாற்றல் ஆகியவை பற்றியே அதிகமாக, விளக்கமாகப் பேசித்தான் ஓட்டுக் கேட்க முடிந்தது.

அந்த அளவு மக்கள் மத்தியில் ஓர் விழிப்புணர்ச்சி ஏற்பட்டுவிட்டிருக்கிறது இடையில்.

பிறகோ, காங்கிரசுக் கட்சியின் பேரால் தியாகிகள், அறப்போர் வீரர்கள், அஞ்சா நெஞ்சினர், அண்ணல் காந்தியாரின் வழி நின்றிடுவார் என்போர்களைத் தேர்தலிலே நிற்க வைக்கவில்லை.

அவர்களின் தொகை குறைந்துகொண்டு வந்ததும் அவர்களிலே பலர், காங்கிரசாட்சியின் போக்கு கண்டு மனம் வெதும்பி, கட்சியைவிட்டு வெளியேறிவிட்டதும் இதற்கான காரணங்கள் என்று கொள்ளலாம்.

தியாகிகளுக்குப் பதிலாக, கனதனவான்களைத் தேடிப் பிடித்தனர்.

கட்சியின் சாதனைகள் பற்றிப் பெருமிதத்துடன் பேசி ஓட்டுக் கேட்பதற்குப் பதிலாக, வேட்பாளர்களின் நாட்டுப் பற்று, தியாக உள்ளம், மக்கள் தொடர்பு ஆகியவை குறித்து எடுத்துக் கூறி ஓட்டுக் கேட்பதற்குப் பதிலாக,

இவர் இந்தப் பகுதியில் மிக்க செல்வாக்குள்ளவர்,
பெரிய நிலச்சுவான்தாரர், கோயில் தர்மகர்த்தா,
சத்திரம் சாவடி கட்டியவர்,
ஆயிரம் பேர்களுக்குப் பிழைப்பு தருகிறார், தமது தொழிலகங்களில்.

இவருடைய பேச்சைத் தட்டி நடந்திடுவோர் எவரும் இந்தப் பக்கத்திலே கிடையாது.
இவர்தான் இங்கு ஜாதித் தலைவர் - குலத் தலைவர் - பெரிய தனக்காரரர்.
இவர் பாளையக்காரரர் பரம்பரை, ஆள் அம்பு இவரிடம் ஏராளம்

என்ற இவ்விதமான நாமாவளி பாடி ஓட்டுக் கேட்டிடலாயினர்.

காங்கிரசுக் கட்சி அதற்குள் அந்த விதமாக, பெரிய புள்ளிகளிடம் அடைக்கலம் புகுந்துவிட்டது.

தம்பி! கோவை சுற்றுப் பயணத்தின்போது கேள்விப்பட்டேன். இப்போதைய அமைச்சர் இருக்கிறாரே, பழைய கோட்டை பட்டக்காரரர் - காங்கிரசல்லவா அவர் - அவருடைய, தகப்பனார் காங்கிரசை எதிர்த்துத் தேர்தலிலே நின்று தமது செல்வம், செல்வாக்கு, ஆள்கட்டு எல்லாவற்றையும் காட்டியும், குட்டபாளையம் பெரியசாமி என்ற காங்கிரஸ்காரரரால் தோற்கடிக்கப்பட்டார். பெரியசாமி என்பவர் சிறு நிலச்சுவான்தாரர்தானாம்.

காங்கிரஸ் என்ற அமைப்புக்கு அன்று இருந்து வந்த அப்பழுக்கற்ற செல்வாக்கைக் காட்டுகிறது அந்த நிகழ்ச்சி.

இன்று அவர் திருக் குமாரர், காங்கிரசின்மீது பழி தீர்த்துக்கொண்டுவிட்டார்!

எந்தக் காங்கிரஸ் என் தகப்பனாரைத் தோற்கடித்ததோ அந்தக் காங்கிரஸ் இன்று என் அரண்மனைத் தாழ்வாரத்தில்! அதன் தலைவர்கள் என் எதிரில் சிரித்த முகத்துடன்! அதன் தொண்டர்கள், நான் கூப்பிட்ட குரலுக்கு ஓடிவர!

இவ்வளவு எளிதாக இந்தக் காங்கிரசை அடிமைப் படுத்த முடிகிறபோது, ஏனோ அப்பா, அதனை வீணாக எதிர்த்துத் தொல்லைப்பட்டார்?

தொட்டால் துவண்டிடும் நிலையில் காங்கிரஸ் இருக்கும் போது, தூக்கிவர ஆளா அனுப்ப வேண்டும்!! என்றெல்லாம் கேட்டு கெக்கலி செய்திடாமல், இருந்திடுவார் மன்றாடியார்! தம்பி! இடையிலே காங்கிரசுக் கட்சி அதன் இயல்பான மதிப்பையும் செல்வாக்கையும் இழந்துவிட்டதாலே, இத்தகைய பெரு நில முதலாளிகளின் அரவணைப்பில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவேண்டி நேரிட்டுவிட்டது.

மற்றோர் விந்தை இதிலே என்னவென்றால், பழைய, பழைய கோட்டை பட்டக்காரரைத் தோற்கடிக்கும் அளவு வலிவு பெற்றிருந்த பெரியசாமி என்பவர், காங்கிரஸ் தனது செல்வாக்கு சிதைக்கப்பட்டு, மக்களுடைய எதிர்ப்புக்கும் வெறுப்புக்கும் இலக்காகிவிட்ட பிறகு, அதே காங்கிரசின் சார்பிலே நின்று சோஷியலிஸ்டு நல்லசிவத்திடம் தோற்றுப் போனார்.

ஒரு புறத்தில் காங்கிரசின் செல்வாக்கு, அதன்

வேட்பாளருக்கு, வெற்றியைத் தேடிக் கொடுத்திட இயலாத சூழ்நிலையைக் காலம் ஏற்படுத்திவிட்டது.

மற்றோர் புறத்திலேயோ, தந்தையாரைத் தோற்கடித்த காங்கிரசை, திருமகனார் சிறைப்பிடித்து வந்து அரண்மனையில் அடைத்துப் போட்டிடும் சூழ்நிலையும் வடிவமெடுத்துவிட்டிருக்கிறது.

இந்தப் புதிய வலிவு மட்டுமே, தம்பி! இன்று காங்கிரசுக்கு நம்பிக்கை ஊட்டுகிறது. இந்தப் புதிய வலிவு,

பணம்
ஜாதிச் செல்வாக்கு
துணிந்த நடவடிக்கை

என்பவைகளைக் கொண்டது.

தூக்கிவாடா அவளை! கட்டிவைத்து அடியுங்களடா அவனை! கொளுத்து அவன் வீட்டை! கொன்று போடு அவன் மகனை! விரட்டு அந்தக் குடும்பத்தை! - என்றெல்லாம் காட்டாட்சி நடாத்தி வந்தவர்கள் இன்று காங்கிரசிலே இடம் பிடித்துக்கொண்டுவிட்டதால்,

ஓட்டு வேட்டையில் காட்டு முறையைப் புகுத்திடும் நிலை உருவாகிவிட்டிருக்கிறது.

இந்தத் தைரியத்தால் ஏற்பட்ட நம்பிக்கை தவிர, இன்றைய காங்கிரசுக்கு, தேர்தல் வெற்றியிலே நம்பிக்கைகொள்ள வேறு என்ன காரணம் இருக்கிறது?

அரிசிக்காக மக்கள் ஆலாய்ப் பறக்கிறார்கள்.
அகவிலை காரணமாக நாட்டவர் அவதிப்படுகிறார்கள்.
வேலை கிடைக்காமல் வேதனைப்படுகிறார்கள்.
வரிச் சுமையால் வாழ்வு முறிந்த நிலை

பெறுகிறார்கள்.
நித்த நித்தம் துப்பாக்கிச் சத்தம்! பிணம்!
நாட்டின்மீது உள்ள கடன் ஏறியபடி இருக்கிறது.
நாணயத்தின் மதிப்பே கெட்டுப்போய்விட்டிருக்கிறது.

ஏற்றுமதி வளரவில்லை, இறக்குமதியைக் குறைக்க முடியவில்லை.

உணவு அமைச்சர் இங்கு இருக்கிறார், உணவோ அமெரிக்காவில் இருக்கிறது.

இவை வெற்றி பெற்றிடுவதற்கான காரணங்களா? நம்பிக்கை யூட்டும் குறிகளா?

நேர்மையிலே நாட்டம் கொண்டிடும் ஒரு கட்சிக்கு, இந்த நிலைமைகளைக் காணும்போது நடுக்கமெடுக்கும். ஆனால் பார்க்கிறாயே, தம்பி! அவர்கள், இவ்வளவு எரிச்சலையும் ஏமாற்றத்தையும் மக்கள் மனத்திலே மூட்டிவிட்ட பிறகும், நாங்கள்தான் வெற்றி பெறப் போகிறோம் என்று எக்காளமிட்டு வருவதனை!

எதனால் பிறந்தது இந்தத் துணிவு?

சாதனைகளைக் காட்டி ஓட்டு வாங்கிட முடியாது என்றாலும், நோட்டுகளைக் காட்டி ஓட்டுகளை வாங்கிடலாம் என்ற துணிவுதான் தம்பி! இன்று அவர்களுக்கு உள்ள நம்பிக்கை!

நாட்டின் பல பகுதிகளில் இன்னும் இருந்து வரும் காட்டாட்சி நடத்திடுவோர், தொழிலதிபர்களாக இருப்பதால், நிலச்சுவான்தாரராக இருப்பதால், ஜாதித் தலைவராக இருப்பதால், கிடைத்திடும் வலிவினைக் காட்டி, மக்களை ஒடுக்கிடும் வித்தையில் கைதேர்ந்தவர்கள். காங்கிரசில் இருப்பதால், அவர்கள் இந்தத் தேர்தலிலே எல்லா முறைகளையும் கையாண்டு, வெற்றிபெற்றுத் தருவர் என்ற நம்பிக்கை.

ஆகவே தம்பி! இந்தத் தேர்தலிலே நாம் ஈடுபடுவது, வெறும் கட்சிக் கண்ணோட்டத்துடன் என்றுகூடக் கூறுவதற்கில்லை. அரசியலில், அதிலும் மக்களாட்சி முறையில் புகுத்தப்பட்டுள்ள காட்டாட்சி முறையை எதிர்த்து ஒழித்திடும் ஒரு தூய தொண்டிலே நம்மை ஈடுபடுத்திக்கொள்கிறோம் என்று பொருள்.

காட்டாட்சி நடாத்தி வந்தோரின் கசையடிக்குத் தமது தசையைக் கொடுத்த உழைப்பாளிகள் பலப் பலர்!

காட்டாட்சியினரால் உருக்குலைக்கப்பட்ட உத்தமர்கள் ஏராளம்!

வீடு இழந்தவர்கள், விழி இழந்தவர்கள், வாழ்வு இழந்தவர்கள், தன்மானமேகூட அழிக்கப்பட்டுவிட்ட வர்கள் ஏராளம்.

அவர்களெல்லாம் கொட்டிய குருதி, வடித்த கண்ணீர், எழுப்பிய பெருமூச்சு, காலவேகமாக, காட்டாட்சியினரின் பிடியைத் தளர்த்திற்று.

சிற்றரசர்கள்
ஜெமீன்தாரர்கள்
மிட்டா மிராசுகள்

போன்றோரின் ஆர்ப்பரிப்பும் அட்டகாசமும் ஆதிக்கமும், குறைக்கப்பட்டது. அவர்களின் கெடுமதியும் கொடு நினைப்பும் புற்றுக்குள் அரவமென்று ஒடுங்கிற்று. ஏழை விழித்துக் கொண்டான்! பாட்டாளி கேள்வி கேட்கிறான்! அழுத கண்களிலே அனல் கிளம்புகிறது! கூப்பிய கரத்தினர், கொடு வாள் தூக்கும் நிலை வந்திடுவது தெரிகிறது! காலம் மாறிவிட்டது! இனி நமது காட்டாட்சி நடவாது!! - என்று எண்ணி, அத்தகைய ஆதிக்கக்காரர்கள் தமது "தர்பாரை'

நிறுத்திக்கொள்ளத் தலைப்பட்டனர்.

அந்த நேரமாகப் பார்த்துத்தான் வெறும் கட்சி ஆதிக்கத்துக்காக வேண்டி அந்தக் காட்டாட்சி நடத்திடுவோரை, காங்கிரஸ் தலைவர்கள் அழைத்துவந்து அவர்களிடம் அரசியலை ஒப்படைத்திருக்கிறார்கள்.

முடிந்துவிட்டது நமது ஆதிக்கம் என்றெண்ணி மூலைக்குச் சென்றுவிட்டவர்களுக்கு, காங்கிரசின் மூலவர்கள் முதல் தாம்பூலம் கொடுத்து, கூடத்தில் கொலு இருக்கச் சொல்லுகிறார்கள்.

கொடுமை! கொடுமை! அது மட்டுமல்ல தம்பி! இது எத்தகைய எதிர்காலத்தை உருவாக்கும் என்று உணர்ந்திடக் கூடிய எவரும் இதனை மடைமை! மடைமை என்றே கூறுவர்.

முதலாளிகளையே, வேட்பாளர்களாக நிறுத்த முனைகிறார்கள். இது கட்சிக்கோ, நாட்டுக்கோ, நாட்டுக்குத் தேவையான சோஷியலிசத்துக்கோ நல்லது அல்ல என்று மனம் குமுறி, காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் பலர், டில்லிக் கூட்ட மொன்றில் பேசியதுபற்றி முன்பு குறிப்பிட்டிருந்தேன்.

இப்போது மாளவியா எனும் மற்றோர் காங்கிரஸ் தலைவரும் மாரடித்து அழுகிறார், இப்படியா முதலாளிகளுக்கு இடம் கொடுப்பது; காங்கிரசுக் கட்சி அவர்களிடம் ஒப்படைக்கப் படுகிறதே, நாடு கெடுமே; சோஷியலிசத் திட்டம் பாழ்படுமே என்றெல்லாம்.

கேட்பவர்கள் யார்? அவர்கள் வெகுதூரம் சென்று விட்டார்கள்; இனித் திரும்பி வருவது இயலாத காரியம். அவர்கள் மிக இறுக்கமாகப் பிணைத்துக்கொண்டுவிட்டனர்; இனி அவர்களைப் பிரித்துவிடுவது முடியாத காரியம்.

தம்பி! வளர்ந்துவிட்டிருக்கும் எதிர்ப்பை

அழித்தொழிக்க, காங்கிரசுக்கு, தனக்குள்ளே வலிவு போதுமானதாக இல்லை; ஆகவே சீமான்களின் வலிவைத் துணையாகப் பெறுகிறது. சீமான்களைக்கொண்டு, இந்த எதிர்ப்பை முறியடிக்கத் திட்டமிடுகிறது. மக்களின் உரிமைக் குரலை அடக்கிட மமதையாளர்களின் துணையைத் தேடிப் பெறுகிறது. அந்த மமதையாளர்கள்,

"கைத் திறனும் வாய்த் திறனும் கொண்ட மக்கள், கண்மூடி மக்களது உடைமை எல்லாம் கொத்திக்கொண்டு ஏப்பம் விட்டவர்"

என்பதனை அறிந்து, அவர்களை ஏவிவிட்டு ஜனநாயகத்தைச் சிதைத்திடத் துணிந்துவிட்டனர்.

ஆகவே இம் முறை நாம் தேர்தலிலே ஈடுபடுவது, கட்சியின் வெற்றிக்காக என்ற குறுகிய நோக்குடன் அல்ல; அரசியல் ஆதிக்கத்துக்காக அமைக்கப்பட்டுள்ள கூட்டுச் சதியை முறியடிக்க என்பதனை உணர்ந்திட வேண்டும்.

ஆகவே நமது பணியிலே தம்பி! உணர்ச்சி பக்குவப்படுத்தப் பட்டதாகி பயன்படுத்தப்பட வேண்டும்.

மிகப் பெரிய காரியத்தை மேற்கொண்டுவிட்டோம்.

மிகப் பயங்கரமான ஒரு வளையத்தை உடைத்துப்போட முனைந்திருக்கிறோம்.

மிகக் கேவலமான ஒரு கூட்டுச் சதியை உடைத்தெறியும் காரியத்தை மேற்கொண்டுவிட்டிருக்கிறோம்.

இதற்குத் தேவைப்படும் ஆற்றலை நாம் நமது உணர்ச்சி மூலம் பெறுகிறோம்.

பெற்றுள்ள உணர்ச்சி, என் உள்ளத்திலே தளராத நம்பிக்கையைத் தந்துள்ளது.

திரு. வி. க-யாணசுந்தரனாரின் கருத்தினை, இதுபோது கண்டேன். நாம் மேற்கொண்டுள்ள பணிக்கு மிக மிகத் தேவைப்படும் அறிவுரை அஃது என்பதனால் அதனைத் துவக்கத்தில் அளித்துள்ளேன்.

உணர்ச்சி ஒரு செல்வம்.

அதனை அடக்கி ஆண்டிடின் பலன் கிடைத்திடும்.

அன்புள்ள
அண்ணாதுரை
20-11-66

ஓட்டாண்டியாக்கிவிட்டு! (2)

கலயம் நிறையவில்லை! கண்ணீர் உலரவில்லை!
நலிவு தலைவிரித்தாடும்போது சுதந்தர விருந்து வைக்க முடியுமா?
சோஷியலிசப் பேச்சு நேர்த்தியாக நெய்யப்பட்டுள்ள சொல்லாடை!
நிற்பது கூண்டில்! வழங்குவது தீர்ப்பு!
திட்டங்களின் பயன் பணக்காரர்களுக்கே!
ஓட்டாண்டியாக்கிய உமக்கா ஓட்டு?

தம்பி!

ஒரு கவிதை வேண்டுமா ? பயப்படாதே நான் எழுதினது அல்ல, நமக்காக என்று எழுதித் தரப்பட்டதுமல்ல, ஒரு கவிஞரின் கற்பனைக் கனி!

கவிஞர்கள் விருப்பம் இருக்கும்போது புகழ்வார்கள், வேறு இடம் சென்றுவிட்டால் முன்னாள்தனை முற்றிலும் மறந்துபோய் எவரெவருக்குத் துதிபாடிக்கொண்டிருந்தனரோ அவர்களையே தூற்றிப் பாடுவரே என்று எண்ணியா தம்பி! கவிஞரின் கற்பனையா என்று கவலையுடன் கேட்கிறாய். அச்சம் வேண்டாம். இந்தக் கவிதை என்னைப் பற்றியதுமல்ல, நமது கழகத்தைப் பற்றியதுமல்ல; நாட்டு நிலையைக் குறித்த கவிதை.

நாட்டு நிலைமை காங்கிரஸ் ஆட்சி காரணமாக

நல்லபடி இல்லையே, நலிவு மிகுந்திருக்கிறதே என்று குறை கூறி வருபவர் நாம். ஆகவே நாட்டு நிலைமைபற்றி நமது ஏட்டினுக்காக எழுதி அனுப்பப்பட்ட கவிதை என்றால், காங்கிரஸ் ஆட்சியினைக் குறித்துக் கண்டிப்பதாகத்தான் இருக்கும்; அவை அறிதலும் கவிகளுக்கு உண்டே என்கிறாயா? தம்பி! இக்கவிதை, நாட்டு நிலைமைகள் நலிவுற்றிருப்பதைத்தான் காட்டுகிறது. ஆனால் நமக்காக இயற்றி அனுப்பப்பட்டது அல்ல; காங்கிரசை ஆதரிக்கும் ஏட்டுக்காக அனுப்பப்பட்டு வெளியிடப்பட்ட கவிதை. "குமுதம்' இதழில், சுரபி எனும் கவிஞர் வெளியிட்டது.

ஆசிரியர் கேட்டுக்கொண்டார்போல இருக்கிறது, சுதந்திரத்தினால் கிடைத்த சுவைபற்றிக் கவிதை தரும்படி.

கேட்டதையே கேட்டார். பாவம் புதிதாகக் காதல் கொண்டு கசிந்து கண்ணீர் மல்கிக்கொண்டிருக்கும் கவிவாணர்களை மட்டும் கேட்டிருக்கக்கூடாதா!! காவடிச்சிந்தும், திருப்புகழுமாகப் பொழிந்து தந்திருப்பார்களே! ஆசிரியர் அப்படிப்பட்ட "சிந்து' ஒன்றையும் வெளியிட்டார். இதோ நான் இப்போது உன் பார்வைக்குக் கொண்டுவரும் பாடலையும் வெளியிட்டார்! எவரெவருக்கு எதெது தேவையோ அதை எடுத்துக்கொள்ளட்டும் என்ற பெருநோக்கம் காரணமாக என்று எண்ணுகிறேன். அல்லது அவருக்கே ஒருவேளை இப்படியும் மற்றோர் வேளை அப்படியுமாக எண்ணம் எழும்புமோ என்னவோ தெரியாது.

கவிதை தந்திடச் சொல்லி ஆசிரியர் கேட்டதும் "சுரபி' கவலைப்படுகிறார், என்னத்தைப் பாட என்று தலைப்பே அதுதான். இனி கவிதையைப் படித்திடத் தொடங்கு, தம்பி!

மன்னிக்க வேணுமையா
ஆசிரியரையா!
என்னத்தைப்
பாட ஐயா?
சொன்னதையே
புரட்டிச்
சுண்டக் கறி
சமைத்துச்
சுதந்திர விருந்து
வைக்க - இந்தச்
சுரபியாலாகாதையா?

துவக்கத்திலேயே சூடு கலந்துவிடுகிறது. கவிதை கேட்கிறீர்கள், கவிதை! எதைப்பற்றிய கவிதையை எதிர்பார்க்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும்; பாரத நாட்டின் கொடி பட்டொளி வீசிப் பறந்திடுவதுபற்றி, "நானும் மனிதன், நாடாள்வேன்' எனக் கூறச் செய்த ஆட்சியின் பெருமை, அடிமைத்தளைகள் பொடிப் பொடியாகிவிட்ட பெருமை, இவை பற்றித்தானே! இதற்கு நான்தானா அகப்பட்டேன்; என்னிடம் இதனை எதிர்பார்க்காதீர் - இது அரைத்த மாவை அரைப்பது - புளித்துப் போய் விட்டது. . . வேண்டாம்;

சொன்னதையே புரட்டிச்
சுண்டக்கறி சமைத்துச்
சுதந்திர விருந்துவைக்க
இந்தச் சுரபியாலாகாதையா!

என்று தெரிவிக்கிறார். தெரிவித்துவிட்டுப் பெருமிதமாக எடுத்துரைத்திட என்னய்யா இருக்கிறது என்று கேட்கவே செய்கிறார்:

நாற்பதுகோடி பொங்கி
ஐம்பதாய் ஆவதையா?
நாழிக்குக் கையேந்தி
நகருங் குயூவினையா?
ஏற்பதில் போட்டியிட்டு

எய்டுகள் வாங்கிவந்து
யானைப்பசிக்குப் பொரி
எண்ணிக் கொடுப்பதையா?
என்னத்தைப் பாட ஐயா!

சுதந்திர ஆட்சி நடைபெறுகிறது. ஆனால் மக்கள் சோற்றுக்கு அலையும் நலிவு தலைவிரித்தாடுகிறது. இந்தக் கண்றாவிக் காட்சியைக் காணக் காண உள்ளம் வேதனைப்படுகிறது. நீங்களோ சுதந்திரத்தின் அருமைபற்றிப் பாடச் சொல்லுகிறீர்கள் - என்னத்தை ஐயா! பாடுவது! என்று கேட்கிறார். சுதந்திரம் வந்தால், பசிப்பிணி நீங்கிவிடும், மக்கள் நல்வாழ்வு வாழ்வார்கள் என்று சொல்லி வந்தோம்; சொல்லிக்கொண்டே இருக்கிறோம்; இந்த (அவ) இலட்சணத்தைப்பற்றி என்னத்தைப் பாடுவது என்கிறார்.

திட்டங்கள் தீட்டிவைத்துத்
தில்லானா பாடி வந்தோம்
தேனும் பாலும் பெருகித்
தெருவெல்லாம் ஓடுமென்றோம்
சட்டியில் போட்டாச்சு
சற்றே பொறுங்கள் என்றோம்.
சத்தம் பலத்ததல்லால்
சாதங் கொதிக்கக் காணோம்
என்னத்தைப் பாட ஐயா!
ஏட்டிலே பாத்திகட்டி
எழுத்தை வாரி விதைத்து
எழில் பொங்க வார்த்தைநட்டு
பிரசங்க மாரிபெய்து
கூட்டுக்குழு விளைத்துக்
கொத்தறிக்கை அறுத்துக்
கொட்டி அளந்து வந்தால்
கும்பி நிறைந்திடுமோ?
இரண்டல்ல ஒன்றல்ல
இருபதை ஓட்டிவிட்டோம்

இருந்ததைச் சுரண்டுவதில்
எல்லோரும் போட்டியிட்டோம்
அருண்டவர் படைகளை
அண்டையில் கொண்டுவிட்டோம்
ஆசிய ஜோதியையும்
அணைத்து விழுங்கிவிட்டோம்
என்னத்தைப் பாட ஐயா!
பாயும் படுக்கையுமாய்த்
தாயைக் கிடக்கவிட்டுப்
பகலுமிரவும் பேயாய்ப்
பதவிக்கலைந்து வந்தோம்
நாயும் நரியும் பொல்லா
நச்சரவும் மேயும்
நைந்த குடிசைக்குள்ளே
நாடகமாடி வந்தோம்.
இரும்புக்கு வீண்சண்டை
வரம்புக்குப் போராட்டம்
இளகிடுங் கோவாவை
விழுங்கிட வெறியாட்டம்
துரும்புக்குத் துஜங் கட்டி
உறவுக்குக் குழிவெட்டத்
துடித்திடும் வீணர்க்குச்
சுதந்திரம் ஏதுக்கு?
கருப்பு வெளுக்கவில்லை
கலயம் நிறையவில்லை
கனவு கண்ட கிழவன்
கண்ணீர் உலரவில்லை.
குறுக்கு நிமிரவில்லை
கும்மிருள் நீங்கவில்லை
கொண்டாட்டப் பாட்டு
நெஞ்சக் குழியில்
சுரக்குமோ அய்யா!
என்னத்தைப் பாட ஐயா!

தம்பி! கடைசியிலே, இசை மொழியிலே கூறுவார்களே, "முத்தாய்ப்பு' என்று, அது எவ்வளவு

அருமையாக அமைந் திருக்கிறது பார்த்தனையா!

உதட்டு அசைவு அல்ல ஐயா! கவிதை உள்ளத்திலிருந்து கிளம்பும் உணர்ச்சி, உண்மை; கவிதை! நாட்டு நிலையைக் காணும்போது இதயத்தில் வேதனை மூண்டிடுகிறது. அங்கிருந்து கவிதையாக சுரக்கும்! - என்று கேட்பதன் மூலம் "சுரபி' அவர்கள் இன்று சுதந்திரத்தால் கிடைத்த சுவையும் பயனும் பற்றிய கவிதைகள் பலவும் நெஞ்சக் குழியிலிருந்து சுரந்தவை அல்ல, எதுகையும் மோனையும் விளையாடிடச் செய்யும் வித்தை! வெறும் உதட்டும் அசைவு!! - என்று காட்டுகிறார்.

நாடு ஆள்வது காங்கிரஸ் கட்சி - நாட்டு நிலைமை நெஞ்சக் குழியிலே எழுச்சியைச் சுரந்திடச் செய்வதாக இல்லை என்று "சுரபி' கூறுகிறார் - இது மறைமுகமாகக் காங்கிரஸ் கட்சியைக் கண்டிப்பதாக இருக்கிறது என்பது அல்ல, நான் இந்தக் கவிதையைச் சுவைத்ததற்கான காரணம்.

இது நமது நாட்டு அறிவாளர்களின் உள்ளத்திலே முகிழ்த்துள்ள புதிய கருத்தோட்டத்தைக் காட்டுகிறது என்பதால்.

எதிர்பார்த்தவர்கள் ஏமாற்றமடைந்தால் எத்தனை சலிப்பு ஏற்பட்டுவிடும் என்பதை விளக்குகிறது என்பதால்.

சுபிட்சம் வரும், சுகவாழ்வு வரும் என்று திரும்பத் திரும்ப எத்தனை முறை சொல்லிக்கொண்டே இருப்பது ? நலிவு தலைவிரித்தாடிடும் நிலை நீடிக்கும்போது - எப்படிச் சுண்டக்கறி சமைத்துச் சுதந்திர விருந்து வைக்க முடியும் என்று கேட்கவேண்டிய விதமாக உள்ளம் நைந்த நிலையில் சிந்தனையாளர்கள் உள்ளனர் என்பதைக் காட்டுகிறது என்பதால்.

திரும்பத் திரும்பச் சொன்னதையே சொல்லிக் கொண்டிருக்க என்னால் ஆகாதய்யா!! வேறு ஆளைப் பாருமய்யா!! என்று கூறிடும் முறையிலே கவிதை இருப்பது. மேலும் மேலும் மக்களை மயக்க நிலையில் வைத்திருக்கும் காரியத்தில் ஈடுபட மனம் இசையவில்லை என்று அறிவாளர் பலரும் கருதுகின்றனர் என்பதைக் காட்டுகிறது என்பதால்.

சென்ற கிழமை நான் கூறினேனே தம்பி! "சுயராஜ்யம்' என்ற சொல் கிளறிவிட்ட ஆசைக் கனவுகள் பல; சுவை மிக்கன; எனவே அந்தச் சொல் கேட்டு மக்கள் சொக்கிக் கிடந்தனர் என்று. அந்த நிலையிலிருந்து விடுபட முனைகின்றனர் விளக்கம் பெற்றோர் என்பதனைக் காட்ட உதவுகிறது இந்தக் கவிதை என்பதைத்தான் முக்கியமானதாகக் கொள்கிறேன்.

அந்தச் சுண்டக்கறி சமைத்தளிக்கவே சலிப்பு ஏற்பட்டு விட்டிருக்கிறது - நெடுநாட்களாக இன்பநிலை வரப்போகிறது என்று எடுத்துக் கூறிவந்தவர்களுக்கு.

புதியவர்கள் விறுவிறுப்பாகத்தான் இருப்பார்கள்; அவர்கள் மக்களை அந்தப் பழைய பேச்சிலேயே சொக்க வைக்க முடியும், சொல்லில் சுவை கூட்டி, சந்த இனிமை காட்டி என்று எண்ணுகின்றனர்.

"சுரபி' - என்னத்தைப் பாட ஐயா! என்று சலிப்புடன் கேட்பதுபோலத்தான், சுதந்திர ஆட்சியின் அருமை பெருமை, அந்தச் சுதந்திரம் பெற்றிடக் காட்டப்பட்ட வீரம், தியாகம் ஆகியவைபற்றிய சிந்துகளைக் கேட்டுக் கேட்டு, மக்கள் சலிப்படைந்து போய்விட்டுள்ளனர்.

பொற்கோழி கூவிற்று பொழுது புலர்ந்தது என்று நிலை இருக்கும்போதுதான், சேவலின் கூவல் இசை

போன்றிருக்கிறது - மற்றப் போதினில் அது "கத்தல்' ஆகிறது, காது குடைகிறது.

சுதந்திர ஆட்சி, மக்களை நிம்மதியான வாழ்வு பெறச் செய்திருந்திருந்தால், சிந்து பாடிடவும் மனம் இடம் தரும், கேட்டிடவும் இனிமை பயக்கும். இப்போது சலிப்பு மட்டுமல்ல - கேலி செய்வதுபோலவேகூட இருக்கிறது.

கவிஞர் என்னத்தைப் பாட ஐயா! என்று சலிப்புடன் கேட்பதுபோலவே, ஆளவந்தார்களும், சுயராஜ்யத்தின் அருமை பெருமைபற்றிச் சுவையூட்டும் பேச்சுப் பேசி பதினெட்டுக்கும் அதிகமான ஆண்டுகள் ஓட்டிவிட்டோம், பதவியைக் காப்பாற்றிக் கொண்டுவிட்டோம், மேலும் மக்களை நமது பிடியிலே வைத்திருக்க "என்னத்தை எடுத்துக் காட்டுவது" என்று யோசித்துப் பார்த்து, தயாரித்த சுவைப் பானந்தான் தம்பி! சோஷியலிசம் பற்றிய பேச்சு.

சுயராஜ்யம் வருகிறது, உன் வாழ்வு துலங்கப்போகிறது என்று ஆண்டு பல பேசியாகிவிட்டது. அதன் சுவை குறைந்துவிட்டது, ஆகவே சோஷியலிசம் வருகிறது, உன் இன்னல் ஒழிந்துவிடப்போகிறது, உனக்குப் புதுவாழ்வு கிடைக்கப் போகிறது என்ற புதிய பேச்சு ஆரம்பமாகி இருக்கிறது.

இது நெஞ்சக் குழியில் இருந்து சுரப்பது அல்ல, நேர்த்தியாக நெய்யப்பட்டுள்ள சொல்லாடை!!

காங்கிரஸ் பிரசாரகர்கள் "சுண்டக் கறி' சமைத்துக் கொடுத்துச் சலிப்படைந்து கிடந்த நேரத்தில்"சுடச்சுட' புதுச்சரக்கு இதோ! என்று தலைவர்கள் சொன்னதும் மகிழ்ச்சி அடைந்து கூவிக் கூவி விற்கிறார்கள்! ஆதாயம் நிரம்பக் கிடைக்கும் என்றும் நம்புகிறார்கள். விவரம் தெரிந்தவர்கள்

விளக்கம் கேட்கிறார்கள். "சோஷியலிசம் பேசுகிறீர்கள், கேட்க இனிப்பாகத்தான் இருக்கிறது. ஆனால் திட்டம் என்ன காட்டுகிறீர்கள்? சோஷியலிசம் என்பது ஒரு லட்சியம் - அதை அடைவதற்கான திட்டம் என்ன மேற்கொண்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்கும்போது, காங்கிரஸ் பேச்சாளர்களுக்குக் கோபம் வருகிறது - பதில் கூற முடியாததால்.

ஏழையின் இன்னலைத் துடைக்கப் போகிறோம்.

ஏழைக்குச் சோறு, துணி, வீடு, வேலை எல்லாம் கிடைத்திடச் செய்யப் போகிறோம் என்று கூறுகிறார்கள்.

மகிழத்தக்கதுதான்! ஆனால் எப்படி? என்று கேட்டால் பதிலைக் காணோம்!!

எப்படி ஏழைக்கு நல்வாழ்வு தரப் போகிறீர்கள் என்ற கேள்விக்கு முன்னதாக மற்றோர் கேள்வியும் எழுகிறது.

ஏன் ஏழை, ஏழையாக இருக்கிறான்?
எப்படி அவன் ஏழையானான்?

என்ன காரணத்தால் பலர் ஏழைகளாகவும் ஒரு சிலர் மட்டும் செல்வர்களாகவும் இருந்து வருகின்றனர்?

இந்த அடிப்படைக் கேள்வியின் தொடர்பாக வேறோர் கேள்வியும் பிறக்கிறது.

ஏழையின் வாழ்வு துலங்கும்படிச் செய்யப் போகிறோம் என்கிறீர்களே, பதினெட்டு ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்சி செய்து வருகின்றீர்களே, இந்த உங்கள் ஆட்சியிலே ஏழையின் வாழ்வு துலங்க என்ன செய்திருக் கிறீர்கள்? எந்த அளவு வெற்றி கிடைத்திருக்கிறது?

இந்தக் கேள்விகளை நாம் எழுப்பும்போது தம்பி! ஒன்று தெளிவாகத் தெரிவித்துவிடுகிறோம்,

சோஷியலிசம் கூடாது என்றோ
சோஷியலிசம் கிடைக்காது என்றோ

நாம் கருதவுமில்லை, கூறவுமில்லை. சோஷியலிசத்தை வரவேற் கிறோம்; அதேபோது விளக்கம் கேட்கிறோம். அந்தப் புனிதமான இலட்சியத்தைச் செயல்படுத்தத் தக்க வழிமுறைகள் என்ன கொண்டிருக்கிறீர்கள்? கூறுங்கள் என்று கேட்கிறோம்.

காங்கிரஸ் ஆளுங்கட்சியாவதற்கு முன்பே, ஆளுங்கட்சி ஆகப்போகிறது என்று தெரிந்த உடனே, மோப்பம் பிடித்துக் கொண்டு காட்டு விலங்குகள் இரைதேடுவதுபோல, சீமான்கள் காங்கிரசின் நண்பர்களாகிவிட்டனர்! வழிகாட்டிகளாகி விட்டனர்! காங்கிரசை ஊட்டி வளர்ப்பவர்களாகிவிட்டனர்! இதை எந்தக் காங்கிரஸ்காரரும் மறுக்க மாட்டார், புதிதுகள் தவிர.

ஆட்சி நடத்திடக் காங்கிரஸ் முன்வந்த பிறகு, இந்த உறவு மேலும் வலுப்பட்டுவிட்டது; சிற்றரசர்கள், சீமான்கள், வணிகக் கோமான்கள் பெரும்பாலோர் இன்று காங்கிரஸ் கட்சியில் உள்ளனர். மறுத்திட இயலாது.

ஆனால் இவர்கள் தமது இயல்பை மாற்றிக் கொண்டவர்கள் - தேசியவாதிகள் - காந்தீயர்கள் என்று வாதாடுகிறார்கள். இது சாதுப் புலி, சைவப் புலி, சன்யாசிப் புலி என்று கூறுவதுபோன்ற வேடிக்கையான வாதம்.

காங்கிரசிலே சேர்ந்துள்ள எந்த நிலப் பிரபுவும், தன் நிலங்களைப் பகிர்ந்து கொடுத்துவிட்டு, எல்லோரும்போல நானும் வாழ்வேன் என்று

கூறிக்கொள்ளும் "கருணாமூர்த்தி’யாகிவிடவில்லை.

இப்போதும் அவர் பெரிய பண்ணை நடத்துகிறார். ஆள் அம்பு ஏராளம். கொடுக்கல் வாங்கல் எப்போதும்போல. கட்டிவைத்து அடிப்பதுகூட நடந்து வருகிறது. மாளிகையிலே கொலு இருக்கிறார், வைரம் மின்னுகிறது, எந்த மெருகும் குறையவில்லை.

ஒரே ஒரு "தியாகம்’ செய்கிறார்! நாலு பேர் முன்னாலே வரும்போது புன்னகை காட்டுகிறார், புதிய கதர்ச்சட்டை போடுகிறார்.

மாடாக உழைத்து ஓடாகத் தேய்ந்துவருகிறானே உழவன் அவன் இப்போதும், சேரியிலும் பாதை ஓரத்திலும்தான் இருக்கிறான்; பண்ணையாரின் தயவு இருக்கும் வரையில்தான் அவனுக்குப் பிழைப்பு!

பிழைப்பு! என்ன மாறுதல் அந்தப் பிழைப்பிலே காணுகிறான்? அதே ஏழ்மை - கவலை - திகைப்பு - திகில். ஒரே ஒரு மாறுதல்!

ஐயாவும் காங்கிரஸ்
நானும் காங்கிரஸ்

என்று கூற முடிகிறது. அவ்வளவுதான்.

கலெக்டர் எப்போதும்போல, பண்ணையார் மாளிகைக்குத் தான் வருகிறார். "பண்ணையாட்கள் இப்படித்தான், ஏதாவது தகராறு கிளப்பிக்கொண்டுதான் இருப்பார்கள்! நான் பத்துப் போலீஸ் அனுப்பிவைக்கிறேன்’’ என்று தைரியம் தருகிறார்.

தாசில்தாரருக்கு எப்போதும்போல பண்ணையார் ஆள் அனுப்பிவைக்கிறார், "இன்னார் நமக்கு ரொம்பவும் வேண்டியவர், கவனியுங்கள்’ என்று.

ஆகட்டும் என்று பதில் அனுப்புகிறார் அதிகாரி முன்புபோலவே.

போலீஸ் அதிகாரிகள், முன்புபோலவே, பெரிய பண்ணையாருடைய புன்னகையை விருந்தாகக் கொள்கிறார்கள்.

ஒரு மாறுதலும் ஏற்படவில்லை. ஏற்படாது. நிலப்பிரபு ஆகட்டும் தொழிலதிபராகட்டும், அவர்களுக்கு ஒரு தனி "இயல்பு' எப்படி ஏற்பட்டுவிடுகிறது?

அந்த இயல்புக்குக் காரணம், தன்னிடம் நிறையச் செல்வம் இருக்கிறது, புதிய செல்வமும் சேர்ந்து வருகிறது என்ற உணர்வு அவருக்கு. தான் பிறரை அடக்கி ஆளத்தக்கவர் என்ற இயல்பைக் கொடுக்கிறது. அவரிடம் குவிந்துகிடக்கும் செல்வத்தைக் கண்டதாலே ஏழையர் பலரும் அவர்முன் குனிந்து நிற்கிறார்கள், பணிவு காட்டுகிறார்கள். பலர் தன்முன் குனிந்து நிற்பதைக் காண்பதால் அவருக்குத் தன்னாலே நிமிர்ந்து நிற்கும் இயல்பு வருகிறது.

இந்த இயல்பு எதனால் ஏற்படுகிறதோ அதனை மாற்றினாலொழிய இயல்பு எப்படிப் போகும்?

இவ்விதமாகவெல்லாம் கேட்டிடின் தம்பி! காங்கிரசார் கோபம் கொள்கிறார்கள். கோபத்துக்குக் காரணம் என்னவென்றால், அவர்களுக்கு உள்ளூற நாம் கூறுவது உண்மை என்று படுகிறது. அந்த உண்மை உள்ளத்தைக் குத்துவதாலே ஒரு எரிச்சல். பாவம், அந்த எரிச்சலைத் தீர்த்துக்கொள்ள நம்மை ஏசுகிறார்கள். அதிலே அவர்களுக்கு ஒரு ஆறுதல். அந்த வகையிலே, தம்பி, நாம் அவர்களுக்கு ஒரு விதமான உதவிகூடச் செய்கிறோம் என்று கூறலாம்.

செல்வம், நிலமாகவோ தொழில் அமைப்பாகவோ

சிலரிடமே இருந்திட எவ்வளவு நாள் அரசு அனுமதித்துக் கொண்டு வருகிறதோ அந்த நாள்வரையில், அதற்கு ஏற்ற இயல்பு இருந்துதான் தீரும்.

செல்வம் ஒரு சிலரிடம் குவிந்திருப்பது அவர்களுக்குத் தனி இயல்பைத் தருகிறது என்று நான் கூறும்போது செருக்கு, கொடுமை செய்திடும் போக்கு ஆகியவற்றை மட்டுமே குறிப்பிட வில்லை. செல்வர்களிலே செருக்கற்றவர்களே இல்லையா என்றோ செல்வமே இல்லாமல்கூடச் செருக்குடன் திரிபவர்கள் கிடையாதோ என்றோ கேட்டுவிடாதே. செருக்கும் கொடுமை செய்திடும் போக்கும் கொண்ட இயல்பைப் பற்றிய ஆராய்ச்சியை நான் இங்கு நடத்தவில்லை.

நாம் பணக்காரர், நம்மிடம் பணம் இருப்பதால், பணமற்றவர்கள் நம்மிடம் பணிவுடன் இருக்கிறார்கள்.

நாம் பணம் படைத்தவர்கள்.

பணம் படைத்தவர்களாக இருப்பதால் நிம்மதியான, நாலு பேர் கண்டு மதிக்கத்தக்க வாழ்வு நடத்த முடிகிறது.

நாம் பணம் படைத்தவர்கள். அதனால் நாம் தொழிலை நடத்திட வசதி பெற்றிருக்கிறோம். நாம் தொழில் நடத்தினால் பலரும் நம்மிடம் வேலை செய்திட வருவார்கள். நம்மிடம் வேலை செய்து பிழைப்பதால், நம்மை "முதலாளி'யாகக் கொள்கிறார்கள்!

ஆக நாம் ஒரு "அரசு' நடத்த முடிகிறது.

இந்தவிதமான உணர்வுகள் ஊட்டி வளர்த்திடும் இயல்பு பற்றித்தான் கூறுகிறேன்.

தம்பி! இதிலே நாம் கவனிக்கவேண்டிய ஒன்று தொக்கி நிற்கிறது.

எந்தச் செல்வம் தனக்கு ஒரு தனிச் செல்வாக்கையும் மதிப்பையும் பெற்றுத் தந்து வருகிறதோ, அந்தச் செல்வத்தை இழந்துவிடக்கூடாது என்ற உணர்வும், அந்தச் செல்வம் போய்விட்டால், முன்புபோலச் செல்வாக்கும் மதிப்பும் கிடைக்காது என்ற அச்சமும், ஆகவே அந்தச் செல்வத்தைக் கட்டிக் காப்பாற்றியாக வேண்டும் என்ற உறுதியும், அந்தச் செல்வத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்காக எல்லா முறைகளையும் மேற்கொண்டாக வேண்டும் என்ற துணிவும், அவர்களுக்கு இயல்புகளாகிவிடுகின்றன.

பாம்புப் புற்றுக்குப் பால் வார்க்கும் தருமமும், எறும்புகளுக்கு அரிசி போடும் தருமமும், காக்கை கழுகுகளுக்குத் தின்பண்டம் போடும் தருமமும் செய்திடுவதிலே விருப்பமும் பழக்கமும் கொண்ட "முதலாளிகள்’ அதிக விலைக்குப் பண்டத்தை விற்பதற்கோ, கள்ள மார்க்கட் நடத்துவதற்கோ, பொய்க் கணக்கு எழுதுவதற்கோ கடன்பட்டவன் கதறிடும்போது அந்தக் கண்ணீரைக் கண்டும் மனத்தைக் கல்லாக்கிக்கொள்வதற்கோ துளியும் தயங்குவதில்லை அல்லவா?

அரிசியில் வேண்டுமென்றே கல்லையும் மண்ணையும் கலந்து, ஒரு படியை ஒன்றரைப் படியாக்கி விற்றிடும் “அக்ரமம்’ செய்திடும் அதே”முதலாளி‘, கோயி-லே உற்சவம் நடத்தி, வெண்பொங்கல் பிரசாதம், பக்தர்களுக்கும் ஏழைகளுக்கும், வழங்கிடும் “புண்யம்’ செய்கிறார்! பார்த்திருக்கலாமே! நான் அதை மட்டும் அல்ல, தம்பி! அந்தப்”புண்யவான்’, அந்தப் பொங்கலில் "கல்’ ஒன்றிரண்டு இருந்திடக் கண்டு கடுங்கோபம் கொண்டு என்ன அநியாயமய்யா இது! என்று

கேட்டதையும் கண்டிருக்கிறேன்.

செல்வவான்கள் தமக்குச் சமூகத்திலே கிடைத்திருக்கிற "இடம்’ தம்மிடம் உள்ள செல்வத்தின் காரணமாகத்தான் என்பதை உணர்ந்திருக்கும்போது அந்தச் செல்வத்தைக் காப்பாற்றிக்கொள்ளவும், வளர்த்துக்கொள்ளவும்தான் முனைந்து நிற்பார்கள். அஃது அவர்களின் இயல்பு ஆகிவிடுகிறது.

ஆகவே காங்கிரசில் சேர்ந்துகொண்ட செல்வர்கள் தமது இயல்பை மாற்றிக்கொண்டவர்கள் என்று வாதாடுவதிலே பொருள் இல்லை.

அவர்களுக்குள்ள இயல்பை மாற்றிக்கொள்ளச் செய்வோம் என்று சில காங்கிரஸ்காரர் பேசக் கேட்டிருக்கிறேன். "மகாத்மா‘வாக, காந்தியாரை ஏற்றுக்கொள்ளச் சம்மதித்த செல்வர்கள், பணக்காரர்கள் தம்மிடம் உள்ள செல்வம் தம்முடைய சுகபோகத்துக்காக என்று கருதாமல், சமூகத்தின் நன்மைக்காக அந்தச் செல்வம் தம்மிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது, தாம் அந்தச் செல்வத்தை சமூக நன்மைக்காகப் பயன்படுத்தும் செயலை மேற்கொண்டுள்ள "தர்மகர்த்தாக்கள்’ என்ற எண்ணத்துடன் நடந்துகொள்ள வேண்டும் என்ற உபதேசத்தை ஏற்றுக்கொண்டு அதன்படி நடந்திட முற்பட்டனரா? இல்லையே!

ஊசியின் காதிலே ஒட்டகம் நுழைந்தாலும் நுழையலாம், பணக்காரன் பரமண்டலத்துக்குள்ளே நுழைய முடியாது.

பிறந்தபோது கொண்டு வந்ததில்லை, போகும்போது கொண்டு செல்லப்போவதுமில்லை என்றும்,

செல்வம் நிலைக்காது, அது செல்வோம்,

செல்வோம் என்று செப்பிக்கொண்டே இருப்பதாகும் என்றும்

எப்படி எப்படியெல்லாமோ கூறிப் பார்த்தாகிவிட்டது. இப்போது கதர்ச் சட்டை போட்டுவிடுவதாலா அந்த இயல்பு மாறிவிடும்? மாறாது. ஆகவேதான், இத்தனை சிற்றரசர்களை, சீமான்களை, தொழிலதிபர்களை, வியாபாரக் கோமான்களைச் சேர்த்து வைத்துக்கொண்டு சோஷியலிசம் பேசுகிறீர்களே, இதிலே நேர்மைகூட இருப்பதாகத் தெரியவில்லையே, அருள் மொழிகளே அவர்களின் இயல்பை மாற்றிடவில்லையே, உங்கள் பேச்சா அவர்களின் இயல்பை மாற்றிவிடும் என்று நாம் கேட்கிறோம்?

இவ்வளவு விளக்கமாகக் கேட்பதுதான் தம்பி! அவர்களுக்கு ஆத்திரத்தை மூட்டிவிடுகிறது.

புரோகிதரிடம் சொல்லிப் பாரேன், எங்கள் வீட்டுக் கிணற்றுத் தண்ணீரையே குடத்திலே கொண்டுவரச் செய்து, மாவிலை சொருகிவிட்டு “கங்கா தீர்த்தம்’ என்று கூறி எங்கள் தலையிலேயே தெளிக்கிறீரே ஐயா! இது என்ன வேடிக்கை! என்று. அவராவது சிரிப்பார்! மற்ற பெரியவர்களுக்குத்தான் கோபம் பீறிட்டுக்கொண்டு வரும்;”இது என்ன போக்கிரித்தனமான கேள்வி?” என்பார்கள்.

அதுபோல ஒரு வேடிக்கை நடத்துகிறார்கள் ஊரிலுள்ள அத்தனை பணக்காரர்களையும் படைதிரட்டி வைத்துக்கொண்டு, நாங்கள் சோஷியலிசத்தைக் கொண்டுவரப்போகிறோம் என்று.

நாட்டிலே இன்று சீமான்களிடம் உள்ள செல்வம் முழுவதையும் பறித்து, ஒரு இடத்திலே குவித்து வைத்து, நாட்டு மக்கள் அனைவருக்கும் அந்தச் செல்வத்தைச் சமமாகப் பங்கு போட்டுக் கொடுத்துவிடுவதுதான் முறை. சோஷியலிசம்

அதுதான். ஆகவே அதைச் செய்யுங்கள் என்று நாம் கூறுவதாகக் கற்பித்துக்கொண்டு, வக்கணை பேசுவதிலே வல்லவர்கள் கேட்கிறார்கள்,

உள்ள செல்வத்தைப் பங்கு போட்டால் ஆளுக்குப் பத்து பைசாகூட வராதே! தெரியுமா? என்று.

இப்போது உள்ள செல்வத்தைப் பங்குபோடச் சொல்லிக் கேட்பதுதான் சோஷியலிசம் என்று யாரும் கூறிடவில்லை.

செல்வ உற்பத்திக்கான சாதனங்கள், வாய்ப்புகள் ஒரு சிலரிடம் மட்டும் அவர்கள் செல்வம் படைத்தவர்களாக இருப்பதால் சிக்கிக்கொள்கின்றன. அந்தச் சாதனங்களும் வாய்ப்புகளும் பணம் படைத்த சிலரிடம் சிக்கிக் கொள்வதால் அவர்களிடமே மேலும் மேலும் செல்வம் போய்ச் சேர்ந்துவிடுகிறது. செல்வம் இவ்விதம் சிலரிடமே சென்று அடைபட்டு விடுவதால், மிகப் பலரின் வாழ்க்கை செல்லரித்ததாகிவிடுகிறது. இந்த முறையை மாற்றுவதுதான் சோஷியலிசம்.

செல்வ உற்பத்திக்கான சாதனங்களையும் வாய்ப்பு களையும் ஒரு சிலரிடமே விட்டுவைக்கும் முறையை மாற்றாத வரையில், ஏழையின் வாழ்விலே முன்னேற்றம் காண முடியாது.

இந்த நோக்கத்துடன், இந்த வழியில் காங்கிரஸ் அரசு திட்டமிட்டு வேலை செய்கிறதா என்பதுதான் மிக முக்கியமான கேள்வி.

இந்த முறையிலே இந்நாள் வரையில் காங்கிரஸ் அரசு வேலை செய்யவில்லை.

இந்த முறையிலே வேலை செய்யாததால்தான் இத்தனை ஆண்டுகளாக உற்பத்தியான செல்வம் சமூகத்தில் பரவலாக்கப்படவில்லை. ஒரு சிலரிடம் முடங்கிவிட்டிருக்கிறது.

அப்படிச் சமூகத்தில் பரவிடாமல், ஒரு சிலரிடம் செல்வம் குவிந்துவிட்டதனால்தான், ஏழை மேலும் ஏழையாகிறான் பணக்காரன் மேலும் பணக்காரனாகி இருக்கிறான் என்று கூறப்படுகிறது.

இப்போது காங்கிரஸ் அரசு இத்தனை ஆண்டுகளாக, செல்வம் ஒரு சிலரிடம் சென்று குவிந்துவிட இடம் கொடுத்ததற்கும், உடந்தையாக இருந்ததற்கும், அதிலே (தேர்தல் நிதி என்ற முறையில்) பங்கு பெற்றதற்கும் சமூகத்திடம் மன்னிப்புக் கேட்கவும், சமூகம் அளிக்கும் தண்டனையை ஏற்றுக்கொள்ளவும் வேண்டிய குற்றவாளி நிலையில் இருக்கிறது.

குற்றவாளிக் கூண்டிலே நின்றுகொண்டே, காங்கிரஸ் அரசு, தீர்ப்பு அளிக்கிறது, நாட்டிலே சோஷியலிசம் கொண்டுவர என்னினும் தகுதி உள்ளவர்கள் எவரும் இல்லை என்று.

இந்தக் கொடுமையையும் இந்நாடு தாங்கிக்கொள்ள வேண்டி இருக்கிறது.

செல்வம், செல்வப் பெருக்கத்திற்கான சாதனங்கள், வாய்ப்புகள் சமூகத்தில் பரவலாக்கப்படாமல், ஒரு சிலரிடம் மட்டுமே குவிந்துவிட்டது என்பதனைக் காங்கிரஸ் தலைவர்களே ஒப்புக்கொண்டாகிவிட்டது.

ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் புதிதாக உற்பத்தியான செல்வம் எங்கே போயிற்று என்று தெரிய வில்லை என்று துவக்கத்தில் பேசிய காமராஜர், இப்போது வெளிப்படையாகவே ஒப்புக்கொண்டுவிட்டிருக்கிறார். ஐந்தாண்டுத் திட்டங்களால் உற்பத்தியான செல்வம் இதுவரையில் பணக்காரர்களுக்கு மட்டுமே பயன்பட்டு இருக்கிறது என்று.

இவர், ஏதோ இதுநாள் வரையில் இந்த நாட்டிலே இல்லாதவர்போலவும், என்ன நடக்கிறது என்பதனைக் காணும் இடத்திலே இவர் இருக்கவில்லை என்பதுபோலவும், யாரோ மூட்டிவிட்ட தீவினை இது என்ற முறையிலும் பேசுகிறார்.

இந்த நாட்டிலே மட்டுமே இத்தகைய பேச்சைப் பேச முடியும்.

ஜனநாயக உணர்வு செம்மையாக உள்ள வேறு எந்த நாட்டிலே இதுபோலப் பேசிடினும் என்ன கேட்பார்கள்?

என்னய்யா! மாய்மாலம் பேசுகிறீர்! உம்முடைய கட்சி அல்லவா இந்த ஐந்தாண்டுத் திட்டங்களை நடத்திற்று, நீரும் அந்தக் கட்சியிலே தலைமை இடத்திலே இருந்து வந்தீரே! எட்டு ஆண்டுகள் நாட்டை ஆண்டுகொண்டிருந்தீரே! அப்போதுதானே இந்த அக்ரமம் ஏற்பட்டது? நீரும் சேர்ந்துதானே இந்த ஐந்தாண்டுத் திட்டத்தின் பலன், பணக்காரர்களுக்குப் போய்ச் சேர்ந்துவிடும் அக்ரமத்தை நடத்தி வைத்தீர். இப்போது யாரோ செய்துவிட்டார்கள் என்ற முறையிலே பேசுகின்றீரே? உள்ளபடி என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதே உமக்குத் தெரியாமலிருந்து வந்ததா? தெரிந்தும் அந்த அக்ரமத்தைத் தடுக்கத் துணிவு எழவில்லையா? தடுக்க முயன்றும் அது நடக்கவில்லையா? என்றெல்லாம் கேட்பார்கள்.

இந்த நாட்டிலே தம்பி! பெரிய இடத்தில் உள்ளவர்களின் பகை நமக்கு ஏன் என்ற போக்கு காரணமாக, இதைக் கேட்கப் பலரும் தயக்கப்படுகிறார்கள். நாம்தான் கேட்கிறோம். அதனால்தான் நம்மிடம் அத்தனை ஆத்திரம் அவர்களுக்கு, ஆளவந்தார்களுக்கு.

நாம் அதனைக் கேட்பதுகூடத் தம்பி! குற்றம் செய்தவர்களை அம்பலப்படுத்த வேண்டும் என்ற உணர்வு காரணமாக அல்ல.

நடைபெற்ற குற்றம் என்ன என்று கண்டறிந்தாலொழிய, இந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின்போதும் நடைபெற்று விட்ட "அக்ரமம்' மறுபடியும் நடைபெறாமல் தடுத்திட வழி கிடைக்காதே என்பதற்காக.

காமராஜர், இந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் கிடைத்த செல்வம் பணக்காரர்களுக்கே பயன்பட்டு வருகிறது என்றுதான் கூறினாரே தவிர - அதிலும் அந்த உண்மையை மகனாலோபிஸ் குழுவினரின் ஆய்வுரை அறிவித்த பிறகு - நாட்டிலுள்ள எதிர்க்கட்சிகள் இடித்துரைத்த பிறகு - பொருளாதார விற்பன்னர்கள் விளக்கிக் காட்டிய பிறகு ஒப்புக்கொண்டார் - மறுபடியும் அதே கெடுதல் ஏற்படாமலிருக்க என்ன முறை மேற்கொள்ளப்பட இருக்கிறது என்று கூறவில்லை. ஆகவேதான் குற்றம் செய்தவர்கள் எவர் என்பதும், ஏன் அந்தக் குற்றம் செய்தார்கள் என்பதும் தெளிவாக்கப்பட வேண்டும் என்கின்றோம்.

மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலமும் உற்பத்தியான செல்வம் பணக்காரர்களுக்கே பயன்பட்டு வந்திருக்கிறது என்று வெளிப்படையாகக் காமராஜர் கூறியான பிறகு, ஏமாற்றத்துக்கு ஆளாக்கப்பட்ட ஏழை மக்கள், உழைத்து அதன் பலனை முழு அளவில் பெறாமல் தவித்திடும் பாட்டாளி மக்கள், தமது கண்டனத்தைத் தெரிவிக்கவேண்டாமா? தெரிவித்தால்தானே இனியும் இந்த அக்ரமம் நடைபெற்றிடக்கூடாது என்ற உணர்வு ஆளவந்தார்களுக்கு ஏற்படும்.

அந்தக் கண்டனத்தைத் தெரிவிக்கும்,

நியாயமான, சட்டப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள வழிதானே தேர்தல்.

அந்தத் தேர்தலின்போது ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் கிடைத்தப் பலனைப் பணக்காரர்கள் மட்டுமே பெற்றுவிட்டனர். அதற்கு நீவிர் உடந்தையாக இருந்து வந்தீர்கள்! நாங்கள் உழைத்தோம்! அவர்கள் கொழுத்தார்கள்! நீங்கள் அதற்கு வழி செய்து கொடுத்தீர்கள்! எம்மை ஓட்டாண்டியாக்கி விட்டு, மறுபடியும் எம்மையா ஓட்டுக் கேட்கிறீர்கள் என்று இந்நாட்டு ஏழை மக்கள் கேட்டிட வேண்டும்.

"என்னத்தைப் பாட ஐயா!" என்று கேட்டார், கவிஞர் சுரபி.

எனக்குக் கவிதை தீட்டிடத் தெரியாது. ஆனால் கவிதை திறமையுள்ளவர் இவைபற்றி எழுதிடலாகாதா?

ஏழை ஏமாற்றப்பட்டது பற்றி எழுதிடலாமே!

ஏழை மேலும் ஏழை ஆகிடத்தக்க விதமான முறைகள் இருந்து வருவதுபற்றி எழுதிடலாமே!

இனியாகிலும் இப்படிச் செய்யுங்கள் ஐயா! என்று வழிமுறை பற்றி எடுத்து எழுதலாமே!

கருத்து சுரக்கும், ஐயமில்லை! கவிதைக்குத் தேவைப்படும் எதுகை மோனைக்குக் குறைவுமில்லை. ஆனால் ஒரே ஒரு தொல்லை. ஆட்சியினர் சீறுவர்?

கவி பாடக் கற்றதனால் பயன்
என்கொல்
காவலர் சீறுவரோ என்றஞ்சிடின்

என்று கேட்கத் தோன்றுகிறதா தம்பி! நமக்கேன்

வீண் வேலை. நமக்குத் தெரிந்த முறையில் நாட்டினருக்கு உண்மைதனை எடுத்துச் சொல்வோம். கடமையைச் செய்திடுவோம்.

இந்தக் கடமையாற்றும் பணியின் ஒரு பகுதியாகத்தான் நாம் அங்கங்கே மாநாடுகள் நடாத்திக்கொண்டு வருகிறோம். அடுத்துச் சிவகெங்கையில் நடத்துகிறோம்.

சிவகெங்கைச் சீமையைப்பற்றி இனிமேல் நான் எடுத்துக் காட்டித்தான் நீ புரிந்துகொள்ளப் போகிறாயா? தம்பி!

மானங்காத்த மருதிருவரைத் தந்த மண்டலமாயிற்றே அது. எனக்குச் சொந்தமான இந்த மண்ணுக்கு இன்னொருவன் உரிமை கூறுவதா? என வெகுண்டெழுந்து மறப்போர் புரிந்து - மானத்துக்காக உயிர்விட்ட பெருமைக்குரிய இடம்!

அங்கே நாம் கூடுகிறோம்; நமக்குரிய எதிர்காலத்தை நாமே நிர்ணயித்துக்கொள்ளும் திட்டங்களை வகுக்கக் கூடுகிறோம்.

சிவகெங்கை மாநாட்டுக்கு மன்னை நாராயணசாமி தலைமை வகிக்க இருக்கிறார். சுறுசுறுப்புமிக்கவர்; சுற்றிச் சுற்றிச் செயலாற்றும் தீரர்! உழவர் பெரும்படையின் உள்ளம் உணர்ந்தவர் அவர்.

தீந்தமிழ்ச் சொற்களால் - தேமதுரத் தமிழால் தேனினுமினிய கவிதை யாத்து, கவின் காட்சிப் படைத்து களம் அமைக்கும் வேழவேந்தன் உன்னையெல்லாம் வரவேற்கப் போகிறார்.

பொல்லாத ஆட்சியதன் புன்மைகளையெல்லாம் புரட்டிக் காட்டிடுவார் அவர்.

கழக முன்னணித் தலைவர்கள் அனைவரும்

அங்கே நல்ல நல்ல கருத்து விருந்து படைக்கப் போகிறார்கள்!

தம்பி! நீ அந்த விருந்தைச் சுவைக்கவேண்டாமோ உன்னைச் சார்ந்தவர்களைச் சுவைக்கச் செய்ய வேண்டாமோ?

வந்திடு! மலர்ந்த உன் முகத்தால் ஒளி தந்திடு! ஒளி மிகுந்த அந்த முகங்களையெல்லாம் கண்ணாரக் கண்டு களிக்கவென்றே நான் புறப்பட்டுவிட்டேன் சிவகெங்கைக்கு.

அன்புள்ள
அண்ணாதுரை
27-11-66

முடியும், முயன்றால்!

வாட்டம் போக்கிடும் வழியைக் காணோம்!
விலை பேசும் வித்தையை அறிவார்கள்!
சிண்டு முடிஞ்சு பார்த்தாச்சு! பங்குச் சண்டை கிளப்புகிறார்கள்!
மும்முனைப் போட்டியை முடுக்கிவிடாதீர்!
குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கப் பார்க்கிறார்கள்!
வெண்ணெய் திரண்டு வருகிறது! பக்குவம் தேவை!
முள் நீக்கி மலர் பறித்திடுக!

தம்பி!

பஞ்சமும் பட்டினிச்சாவும், பற்றாக்குறையும் அகவிலையும், கிளர்ச்சியும் கலவரமும், அடக்குமுறையும் வன்முறைச் செயல்களும், மிரட்டிக்கொண்டிருக்கக் காண்கின்றோம். சமூகம் முழுவதிலும் ஓர் சலிப்புணர்ச்சி கப்பிக்கொண்டிருப்பது விளக்கமாகத் தெரிகிறது. இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் ஆளவந்தார்களின் திறமைக் குறைவும் ஆணவப் போக்குமே காரணம் என்று நடுநிலையாளர் பலர் கருத்தறிவித்துள்ளனர்.

மோசமாகிக்கொண்டு வரும் நிலைமையைக் கண்டு திகைத்துப்போன நிலையில் காங்கிரசின் பெருந்தலைவர்கள், நடைமுறைக்கு ஒத்துவரவே முடியாத யோசனைகளை வழங்கிக் கொண்டு, செயல் மறந்துகிடந்திடக் காண்கின்றோம். எங்கே பார்ப்பினும் ஓர் ஏமாற்றம், எரிச்சல்! விட்டேனா பார்! என்ற விராவேசம்! வீழ்ந்துபடுவதாயினும் நான்

எண்ணியதைச் சாதித்தே தீருவேன் என்ற சூளுரை! கடை அடைப்புகள்! ரயில் நிறுத்தங்கள்! தீயிடல்! இடித்திடல்! தகர்த்திடல்! இவைகளைத் தொடர்ந்து துப்பாக்கிச் சூடுகள்!! - எந்த ஒரு நாகரிக அரசும் சகித்துக்கொள்ள முடியாதன நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

பொறுப்புள்ள எந்த அரசியல் கட்சியாயினும் இந்த நிலைமையை, வன்முறையை ஆதரிக்கலாமா? கண்டித்திட வேண்டாமா? என்று ஆளுங்கட்சி பிற கட்சிகளைக் கேட்கிறது.

கிளர்ச்சிக்காரர்களோ, "இவ்வளவு மோசமான நிர்வாகத்தை, பொறுப்புள்ள எந்தக் கட்சியேனும் ஆதரிக்க முடியுமா? கண்டித்திட வேண்டாமா?" என்று கேட்கின்றனர்.

சட்டமும் சமாதானமும் நிலவிட வேண்டும்; ஒழுங்கு முறை காப்பாற்றப்பட வேண்டும், எக்காரணத்தைக் கொண்டும், எத்தனை சிக்கலுள்ள பிரச்சினையாக இருப்பினும், வன்முறை மூலம் தீர்வு காணலாம் என்ற நினைப்பே எழலாகாது என்பதிலே தளராத நம்பிக்கைக்கொண்டுள்ள நம் போன்றவர்களின் நிலைமை, தம்பி! மிகவும் சங்கடத்துக்குள்ளாக்கப்பட்டிருக்கிறது.

கட்டடங்கள் தகர்க்கப்படுவதையும், ரயில்கள் கவிழ்க்கப் படுவதையும் காணும்போது எப்படி நமது மனம் பதறுகிறதோ அதுபோலவே, மக்கள் விரட்டி விரட்டி அடிக்கப்படுவதையும், சுட்டுக் கொல்லப்படுவதையும் காணும்போதும் மனம் பதறத்தானே செய்கிறது! இதிலே எதைத் தொடர்ந்து எது நடைபெறுகிறது? எதன் விளைவாக எது நடைபெறுகிறது என்று கண்டறியத்தான் முடிகிறதா? கண்டறிவதுதான் எளிதா? இல்லையே! கிளர்ச்சி நடாத்துவோர் கூறுகின்றனர், பொதுச் சொத்துக்களுக்கு நாசம் விளைவிப்பது நமக்கு நாமே

கேடு தேடிக்கொள்வது என்ற சாதாரண உண்மைகூடவா எமக்குத் தெரியாது - நாங்கள் என்ன அந்த அளவுக்குக்கூடவா அறிவுத் தெளிவு பெற்றில்லை! நாங்கள் மிக நியாயமான காரணத்துக்காக நடத்தும் கிளர்ச்சிகளை வேண்டுமென்றே ஒடுக்குவதற்காக, கடுமையான அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுகிறது இந்த அரசு! அந்தக் கொடுமையைக் காணும் மக்கள் எமது கட்டு திட்டங்களையும் மீறி வன்முறையிலே ஈடுபடுகின்றனர்; நாங்கள் என்ன செய்ய? என்று செப்புகின்றனர்.

நியாயம் எங்கே என்று தேடிக் கண்டுபிடிப்பதற்குள் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பொருள் சாம்பலாகி விடுகிறது; விலை மதிக்கொணாத உயிர் பல பறிக்கப்பட்டுப் போய்விடுகின்றன; நாட்டிலே மறைக்கப்பட முடியாத விதமான வடுக்கள் ஏற்பட்டு விடுகின்றன.

தம்பி! இவைபற்றி நான் இப்போது குறிப்பிடுவதற்குக் காரணம், இந்தப் பிரச்சினையை அலசிப் பார்த்திட வேண்டும் என்பதற்காக அல்ல; இத்தகைய மோசமான, வேதனை தரத்தக்க சூழ்நிலையின் பின்னணியில், பொதுத் தேர்தல் நடத்தப்பட இருக்கிறதே அதனைக் கவனித்தனையா என்று உன்னைக் கேட்பதற்காகத்தான்.

சட்டம், சமாதானம், ஒழுங்கு இவைகள் செம்மையான முறையிலே காப்பாற்றப்பட முடியாத சூழ்நிலையில்,

உணவு நெருக்கடி பஞ்சம், பட்டினிச்சாவு என்ற அளவு முற்றிவிட்டிருக்கிற சூழ்நிலையில்,

சமூகத்தின் எந்த ஒரு முனையிலும், மனநிறைவு இல்லாமல், பிரச்சினைகள் குமுறிக் கொந்தளித்துக்கொண்டிருக்கும் சூழ்நிலையில்,

பொதுத் தேர்தல் நடத்தப்பட இருக்கிறது.

புண்ணுக்கு மருந்திட்டு புன்னகையை வரவழைத்து, மக்களை ஓரளவு மனநிறைவு கொண்டிடச் செய்து பிறகே, பொதுத் தேர்தலில் தமக்கு ஆதரவு அளித்திடவேண்டுமெனக் கேட்டுக்கொள்ள வேண்டும் என்றுதான் எந்த ஆளுங்கட்சியும் எண்ணம் கொண்டிடும். ஆனால் காங்கிரஸ் கட்சியோ, மூட்டிவிட்ட தீ அடங்கா முன்பு மூண்டுவிட்ட வேதனை விரிவாகியுள்ள வேளையில், ஆத்திரம் பொங்கிடும் நிலையிலே உள்ள மக்களிடம் ஆதரவு பெற்று பொதுத் தேர்தலிலே வெற்றியைப் பெற்றிட முடியும் என்று நம்புகிறது.

பஞ்சமும் பட்டினியும் கொட்டும் நிலையில், பட்டினிச் சாவு கண்களை உறுத்தும் நிலையில், அகவிலை தாக்கிடும் நிலையில் எப்படி மக்களை அணுகுவது என்ற அச்சமோ, இந்த நிலையில் உள்ள மக்களிடம் ஆதரவு திரட்டிட முடியுமா என்பதிலே ஐயப்பாடோ, துளியும், காங்கிரஸ் கட்சித் தலைவர்களுக்கு இருப்பதாகத் தெரியக் காணோம். இதனை என்னென்பது? துணிச்சல் என்பதா? அல்லது மக்கள் வேதனையிலே தத்தளிக்கும் வேளைதான் அவர்களின் ஓட்டுகளைப் பறித்திடுவதற்கு ஏற்ற வேளை என்ற திட்டம் என்பதா? புரியவில்லை.

பஞ்சத்தைப் போக்க, பற்றாக்குறையை நீக்க, உணவு நெருக்கடியை நீக்க, அகவிலையைக் குறைக்க, எடுத்துக் கொள்ளப்படவேண்டிய முயற்சிகளிலே காட்டவேண்டிய தீவிரமோ அக்கறையோ தென்படுவதைக் காட்டிலும், தேர்தல் பற்றிய தீவிரமும் அக்கறையுமே அதிகமாகக் காங்கிரஸ் வட்டாரத்திலே தெரிந்திடுவது காண்கிறோம்.

ஆகவே, காங்கிரஸ் கட்சி துணிச்சல்

பெற்றிருப்பது மட்டுமல்லாமல் மக்களின் வாழ்வு பற்றிய அக்கறையுமற்று இருப்பது நன்றாகத் தெரிகிறது.

இந்தப் போக்கு இவ்வளவு வெளிப்படையாகத் தெரியும்போது, எதைக்கொண்டு அல்லது எதைக் காட்டி, மக்களுடைய ஆதரவைப் பெற முடியும் என்று காங்கிரஸ் கட்சி நம்பிக் கொண்டிருக்கிறது என்பது, உள்ளபடியே புதிராகத்தான் இருக்கிறது.

மக்களைக் கண்டால், வெட்கித் தலைகுனியவேண்டிய பல செயல்கள், காங்கிரஸ் கட்சியுடன் தொடர்புபடுத்திப் பேசப் படுகின்றன. பாராளுமன்றத்திலே எழுப்பப்படும் புகார்கள், பத்திரிகைகளிலே விவாதிக்கப்படும் பிரச்சினைகள் ஆகியவற்றைக் கவனிக்கும்போது, காங்கிரஸ் கட்சி மக்களைச் சந்தித்து தனக்கு ஆதரவு அளிக்கும்படி எந்த முகத்தை வைத்துக்கொண்டு கேட்க முடியும் என்ற சந்தேகம் எல்லோருக்கும் எழுகிறது. ஆனால், பார்க்கின்றாயே தம்பி! புதிய புதிய படகு மோட்டார்கள் பறக்கின்றன! புதுப்புது கதர்ச் சட்டைகள் தைக்கப்படுகின்றன! அவர் காங்கிரசில் சேர்ந்தார்! இவரை இழுத்துக்கொண்டார்கள்! - என்ற பேச்சு பலமாக அடிபடுகிறது. தேர்தல் வேலையிலே காங்கிரஸ் கட்சி மும்முரமாகத் தன்னை ஈடுபடுத்திக்கொண்டுவிட்டிருக்கிறது.

போதுமான அளவு உணவு கிடைக்கவில்லையே! பசியும் பட்டினியும் கொட்டுகிறதே என்று பதறுகிறார்கள் மக்கள்; அவர்களைப் பார்த்துக் காங்கிரஸ் தலைவர்கள், "சரி! சரி! இதுவரையில் திங்கட்கிழமை மட்டும் சாப்பிடாமல் இருந்து வந்தீர்கள் அல்லவா? இனி வியாழக்கிழமைகளிலும் சாப்பிடாதீர்கள்!'' - என்று யோசனை கூறுவதோடு தமது பொறுப்பு முடிந்து விட்டதாகக் கருதிக்கொள்கிறார்கள்.

வாரத்துக்கு இரண்டு நாட்கள், கட்டாயப் பட்டினி கிடக்கவேண்டிய நிலைமைக்கு நாட்டு நிர்வாகத்தை மோசமாக்கிவிட்டதற்காக வெட்கப்படாமல், வருத்தப்படாமல், அதே காங்கிரஸ் கட்சி, எந்த மக்களைப் பட்டினிபோடுகிறதோ அதே மக்களிடம் "ஓட்டு'ப் போடும்படியும் வற்புறுத்துகிறது. போடுவார்கள் என்றும் நம்பிக்கொண்டிருக்கிறது.

தம்பி! படக்காட்சிகளிலே பார்த்திருக்கலாம். பாதகன் ஒருவன், ஒரு நல்ல குடும்பத்தை நாசமாக்கி, அக்குடும்பத்துப் பாவையைச் சிறைப்பிடித்து, அம்மங்கையை அழுத கண்களுடன் இருந்திடும் போது, சவுக்காலடித்து “ஆடு! ஆடடி அணங்கே! ஆடு! ஐயாவின் மனம் மகிழும்படி ஆடு!” என்று கட்டளையிடுவதுபோன்ற சம்பவத்தை. அதுபோல, மக்களைப் பட்டினிக் கொடுமைக்கு ஆளாக்கிவிட்டு, அதிகாரத்தைக் காட்டி அதே மக்களை,”போடு ஓட்டு!” என்று மிரட்டிப் பறித்திடவும் காங்கிரஸ் திட்டமிடுகிறது.

எதிர்பார்த்ததைவிட மிக அதிகமான அளவு உணவு நெருக்கடி முற்றிவிட்டிருக்கிறது.

நாலு நாட்கள் தொடர்ந்து மழை பெய்கிறது என்றால், உணவு அமைச்சர் சுப்பிரமணியம் துள்ளிக் குதிக்கிறார் மகிழ்ச்சியால், "பெய்துவிட்டது பெருமழை! பொய்த்துவிட்டது எதிர்க்கட்சியின் ஆரூடம்! விளைச்சல் அமோகமாக இருக்கப் போகிறது! உணவு நெருக்கடி இனி இராது!” என்றெல்லாம் சிந்து பாடுகிறார். ஆனால், மழை பெருமழையாவதும், வெள்ளமாகி விடுவதும், விளைந்ததை அழிப்பதும் நடைபெற்றுவிடுவது காண்கின்றோம். மகிழ்ச்சி மடிந்துபடுகிறது; திகைப்பு மேலிடுகிறது; பயிர் மட்டுமல்ல! அமைச்சர் தயாரித்த புள்ளி விவரங்கள் தீய்ந்துபோய்விடுகின்றன. உணவு நெருக்கடி பயங்கரமான வடிவம் எடுக்கிறது.

தேவைப்படும் அளவுக்கு உணவுப் பொருள் கொடுத்துக்கொண்டு வருவோம் என்று அமெரிக்கா கூறிவிட்டது. ஆகவே, உணவு நெருக்கடி பற்றிய பயம் வேண்டாம், போதுமான உணவுப் பொருள் கப்பல் கப்பலாக வந்துகொண்டிருக்கும் என்று அமைச்சர் பெருமிதத்துடன் பேசி வந்தார்.

இப்போது அமைச்சரின் குரலிலே வருத்தம் தோய்ந்திருக்கக் காண்கின்றோம்.

ஆகஸ்ட்டு மாதமே கேட்டோம், உடனடியாக உணவுப் பொருள் அனுப்பிக் கொடுக்கும்படி, வரக் காணோம் என்று வருத்தம் தெரிவிக்கிறார்.

அமெரிக்காவின் போக்கிலேயே ஒரு தீடீர் மாறுதல் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உணவுப் பொருள் அனுப்பிக் கொடுக்கும் திட்டம் முடக்கப்பட்டுவிட்டிருப்பதாகத் தெரிகிறது.

இதற்கான காரணம் என்ன என்று ஆராய்ந்துகொண்டிருப்பதன் மூலம் அருவருப்பு தரத்தக்க சில அரசியல் பிரச்சினைகளைக் கிளறிக்கொள்ள முடியும்! வேறு உருப்படியான பலன் ஏற்பட வழி இல்லை. ஆகவே, அமெரிக்காவின் போக்கிலே ஒரு மாறுதல் ஏற்படக் காரணம் என்ன என்று ஆராய்வதைக் காட்டிலும், ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடியைத் தீர்க்க வேறு எங்கிருந்து உணவுப் பொருள் தருவிக்கலாம்? எந்த முறையில் என்பது பற்றிய ஏற்பாட்டினைக் கவனிப்பதே முக்கியமானதாகும்.

ஆனால் காங்கிரசின் பெரிய தலைவர்கள் இதிலே கவனம் செலுத்துவதைவிட, யாரைப் பிடித்திழுத்து எந்தத் தொகுதியிலே நிற்க வைக்கலாம் என்பதிலேதான் மிகுந்த அக்கறை காட்டிக்கொண்டுள்ளனர்!

தம்பி! காங்கிரசின் பெரிய தலைவர்கள், தமது கட்சியிலே கொள்கைத் தூய்மை மாய்ந்துபோய்விட்டதனாலேயும், தமது ஆட்சியினாலே மனம் குமுறிப்போயுள்ள நிலைக்கு மக்கள் சென்றுவிட்டதனாலேயும், இனி அந்த மக்களுடைய அன்பான ஆதரவைப் பெற முடியாது என்ற முடிவுக்கு வந்துவிட்டனர். ஆதரவை இனிப் பெற்றுக்கொள்ள, அச்சமூட்டும் முறையையே மேற்கொள்வது என்று திட்டமிட்டுவிட்டனர். அதற்காக, எவராக இருப்பினும், அவருடைய முன்தொடர்புகள் யாதாக இருப்பினும் கவலையில்லை. அவர் பெரிய புள்ளியா?ஆள் கட்டு உள்ளவரா? ஜாதி உணர்ச்சியைத் தூண்டி பலம் பெறத் தக்கவரா? பணத்தாலே மக்களை விலைக்கு வாங்கக்கூடியவரா என்ற இவைகளை மட்டுமே கணக்கில் கொண்டு, புதியவர்களைப் பிடித்திழுத்துக் காங்கிரசுக்குப் பலம் சேர்க்கின்றனர்.

தம்பி! இரண்டொரு திங்களுக்கு முன்பு ஒரு நகரத்தில், நமது கழகக் கூட்டம். நான் பேசினேன். அன்று அக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தவர், நமது கழகத்தவர், ஆண்டு பலவாக எனக்கு நண்பர், காங்கிரசு தோற்கடிக்கப் படவேண்டும் என்பதிலே ஆர்வம் கொண்டவர்.

அவர், அன்றைய கூட்டத்திலே காட்டிய ஆர்வம், அனைவரும் பாராட்டத்தக்கதாக இருந்தது.

நாலைந்து நாட்களுக்குள், திடீரென அவரை, அந்தப் பக்கத்துக் காங்கிரஸ் தலைவர்கள் மொய்த்துக்கொண்டு, அவரை நம்மிடமிருந்து பிரித்து, காங்கிரசில் சேர்த்து, அவரையே அந்தத் தொகுதியில் நமது கழகத்தை எதிர்த்து நிற்க - காங்கிரஸ் வேட்பாளராக நிற்க - ஏற்பாடு செய்துவிட்டனர் என்று அறிகிறேன்.

இஃது, மனித இயல்பு எந்தெந்த

வகையாகவெல்லாம் மாறக் கூடியது கெடக்கூடியது என்பதை மட்டுமல்லாமல், ஓட்டு வேட்டையிலே மட்டும் குறியாக உள்ள காங்கிரஸ் கட்சி எத்தனை விதமான தரக் குறைவான செயலுக்குத் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் என்பதையும் நாம் உணரும்படி செய்கிறது.

இந்தப் புதிய வலிவினைத்தான் அவர்கள் பெரிதும் இன்று நம்பிக்கொண்டுள்ளனர். கொள்கை வலிவையும் அல்ல, சாதனைகளையும் அல்ல.

அவர்கள் மற்றும் ஓர் விஷயத்தில் மிக அதிகமான அளவு நம்பிக்கை கொண்டுள்ளனர். மும்முனைப் போட்டியைத் தவிர்க்க வேண்டும், காங்கிரசை எதிர்க்கும் கட்சிகளுக்குள் ஒரு தோழமைத் தொடர்பும் தொகுதி உடன்பாடும் ஏற்பட வேண்டும். காங்கிரசல்லாத ஓட்டுகள் சிதறிவிடும்படி விட்டு விடக்கூடாது என்பதனை நமது கழகம் வலியுறுத்திக்கொண்டு வருகிறது.

கூட்டு என்றும் எதிர்ப்பு அணி என்றும் உடன்பாடு என்றும் பல்வேறு விதமாகப் பெயரிட்டு அழைக்கப்படும் இந்த ஏற்பாட்டுக்கு, நமது கழகம் முதலிடம் கொடுத்திருக்கிறது.

இதற்கான பேச்சு வார்த்தைகள் வளர வளர, கனிவுக்குப் பதிலாகக் கசப்பு வளரும், தோழமைக்குப் பதிலாகப் பகைமை எழும் என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

கூடுமானவரையில், இந்தப் பேச்சு வார்த்தைகள் வெற்றி தராத நிலையை உண்டாக்க வேண்டுமென் பதற்காகக் காங்கிரசுக் கட்சி தன்னாலான முறைகளைக் கையாண்டு வருகிறது.

தோழமைத் தொடர்புகொண்டு, தொகுதி உடன்பாடு செய்து கொள்வதற்காக, பல கட்சிகள்

கலந்து பேசும்போது, ஏமாற்றம், எரிச்சல் எழக்கூடும். இதனை எவரும் எதிர்பார்க்கத்தான் செய்வார்கள், ஆனால், கடுமையான விவாதம் நடத்திப் பார்த்து, இறுதியாக தோழமையான ஒரு முடிவுக்கு வர முடியும் என்று கழகம் நம்புகிறது.

காங்கிரஸ் தலைவர்கள் - பெருந் தலைவர்கள் - பேச்சு வார்த்தை வெற்றி பெறாது - மனக் கசப்பிலேதான் அதுகொண்டு செல்லும் என்று கருதுகிறார்கள்.

அதற்காக, தட்டிக் கொடுத்தல், தடவிக் கொடுத்தல், தூதுவிடுதல், தூபமிடுதல் ஆகிய முறைகளை இப்போதே அவர்கள் நடத்திக் கொண்டு வருகின்றனர்.

ஆயிரம் தடவை கூடிப் பேசினாலும் அண்ணாதுரை அசைந்து கொடுக்கமாட்டான் - என்று பிற கட்சிகளிடமும், உங்கள் அண்ணாதுரை அசடன் - பிற கட்சிகளின் பச்சைச் சிரிப்பிலே மயங்கிப்போய், பல இடங்களை விட்டுக் கொடுத்துவிடுவான். . . என்று கழகத் தோழர்களிடமும், காங்கிரசின் தலைவர்கள் - மாவட்ட அளவிலே உள்ளவர்கள் - இப்போதே பேசிக்கொண்டுள்ளனர். அறிந்திருக்கிறேன்.

நமது கழகத்திலே, தம்பி! வெள்ளை உள்ளம் கொண்டவர்கள், கள்ளங் கபடமற்றவர்கள் ஏராளம். அவர்களைத் தூண்டிவிடுவது எளிதான காரியம் என்று அந்தக் கலையிலே வல்லவர்களான காங்கிரசார் எண்ணிக்கொண்டுள்ளனர். நமது கழகத் தோழர் களுக்கு “ரோஷம்’ எழச் செய்துவிடுவதன் மூலமே, நமக்கும் சுதந்திரக் கட்சிக்கும் உள்ள தோழமைத் தொடர்பைக் கெடுத்து விட முடியும் என்று கடைசி வரிசைக்காரரர் அல்ல, முதல் வரிசைக்காரரரான காமராஜரே நம்பித்தானே பேசி வந்திருக்கிறார்;”கழகத் தொண்டர்களே! எப்படி

ராஜகோபாலாச்சாரியாருடன் நேசமாக இருக்க முடிகிறது? உங்களை அவர் குரங்கு என்று ஏசுகிறாரே!!” என்று பேசினார். தாம் பெற்றுள்ள உயர்வான இடத்துக்கும் இவ்வளவு மட்டமான சிண்டு முடியும் பேச்சுக்கும் துளிக்கூடப் பொருத்தம் இல்லையே என்று யோசித்தாரா? இல்லை! ஏன்? இந்தப் பேச்சைக் கேட்டு, முன்னேற்றக் கழகத்திலே ஒரு பத்துப் பேர் “ரோஷம்’ கொண்டு, சுதந்திரக் கட்சியுடன்”கூட்டு’ கூடவே கூடாது என்று பேசமாட்டார்களா, எதிர்ப்புக் கிளப்பமாட்டார்களா! என்ற ஆசை. அப்படி எவரேனும் ஒருவர் எதிர்ப்புக் கிளப்பினால், ஒரு எட்டு நாளைக்கு அவர் "கொட்டை எழுத்து’ விளம்பரம் பெறுவார்!! அதற்கு ஆசைப்பட்டுக்கொண்டு சிலர் கழக அணியிலிருந்து பிளந்துகொண்டு வெளிவருவார்கள் என்றெல்லாம் எண்ணம் அவருக்கு - காமராஜருக்கு!!

எங்களை ஆச்சாரியார் சொன்னதுபோலத்தானே ஐயா! உம்மைப்பற்றி, காங்கிரஸ் வட்டாரத்திலும், குறிப்பாக இதழ்களிலும் கூறுகின்றனர் என்பதை நான் கூறிச் சான்றுக்காக, ஆனந்தவிகடனில், காமராஜரை, அனுமார்போலவே படம் போட்டு வெளியிட்டிருந்ததை எடுத்துக் காட்டினேன். காமராஜர் வாய் மூடிக்கொண்டார். ஆனால் சில திங்களுக்குப் பிறகு மறுபடியும் அதே பேச்சு! அதே மூக்கினைச் சொரிந்துவிடுகிற வேலை!!

இப்போது "சிண்டு முடிந்திடும்’ கட்டம் முடிந்துவிட்டது; பங்குச் சண்டை கிளப்பிடும் கட்டம் வந்துவிட்டிருக்கிறது. ஆகவே இப்போது காமராஜரும் அவரால் பயிற்சி அளிக்கப் பட்டவர்களும், கழகத்துடன் தோழமைத் தொடர்புகொள்ள முனையும் கட்சியினரைக் கண்டு, கனிவான ஓர் பார்வையை வரவழைத்துக்கொண்டு,

இவ்வளவு நேசம் காட்டுகிறீர்களே, உங்களுக்கு

இல்லையா?
இவ்வளவு பாசம் காட்டுகிறீர்களே பதினைந்தே இடம்தானா உங்களுக்கு?
உங்களுடைய உதவியில்லாமல் கழகம், எண்ணி எட்டு இடத்திலேகூட வெற்றி பெற முடியுமா?
ஏமாந்துவிடாதீர்கள் - உங்கள் இடங்களை விட்டுக் கொடுத்துவிடாதீர்கள்?

என்ற இந்தவிதமான பேச்சினை அவிழ்த்துவிடுகிறார்கள். அதைக் கேட்டு, அந்தக் கட்சிகள், இடம் கேட்பதிலே பிடிவாதம் காட்ட வேண்டும், அதன் காரணமாகத் தொடர்பு முறிய வேண்டும், தோழமை கெட வேண்டும் என்பது அவர்களின் நோக்கம். இத்தகைய கலகப் பேச்சுக்கு கட்டுப்பாட்டுடன் வளர்ந்து, அரசியல் நோக்குடன் நடத்தப்பட்டு வரும் கட்சிகள் ப-யாகி விடமாட்டா! ஆனால் வெறும் தேர்தல் வேலைக்காக மட்டும் வடிவம் கொள்ளும் கட்சிகளும். வலிவு காட்டும் தலைவர்களும், சுலபத்திலே பலியாகிவிடுவார்கள்.

ஆகவே, ஒவ்வொரு கட்சியும் தத்தமக்கு என்று இடம் கேட்டு, விவாதம் நடத்தும்போது, காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை வீழ்த்தும் நோக்குடனேயே இந்தத் தோழமைத் தொடர்பு உருவாக்கப்படுகிறது என்ற பொது உண்மையை மறவாமல் இருந்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நமக்கே உரித்தானது என்று நாம் எண்ணிக் கொண்டுள்ள இடம் சில நமக்குக் கிடைக்காது போய்விடினும், அந்த இழப்பின் மூலம், காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை வீழ்த்தும் காரியத்துக்கு வலிவு கிடைக்கும் என்றால், தனிப்பட்ட இழப்புகளுக்கும் நாம் நமது மனதைப் பக்குவப்படுத்திக்கொள்ள வேண்டும்.

அதிலும் தோழமைத் தொடர்பும் தொகுதி உடன்பாடும் கொள்ள விரும்பும் கட்சிகள் ஒன்று

இரண்டு அல்ல, பல.

துவக்க முதல் தோழமைத் தொடர்பு கொண்டிடும் நோக்குடன் கழகத்துடன் நேசமாக உள்ள கட்சிகள், முஸ்லீம் லீகும், சுதந்திரக் கட்சியுமாகும்.

அடுத்த கட்டத்தில், இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சியும் நம்முடன் தோழமைத் தொடர்புகொள்ளும் விருப்பத்தைத் தெரிவித்தது.

அச்சம், கூச்சம், தயக்கம், தடுமாற்றம் ஆகியவைகளைக் கடந்து மெள்ள மெள்ள நம்மை நோக்கித் தோழமைத் தொடர்புக்காக வருவதற்கு, வலதுசாரிக் கம்யூனிஸ்டு கட்சிக்கும் நாட்கள் அதிகம் பிடித்தன. வந்துகொண்டிருக்கிறார்கள்.

தேர்தல் நினைப்பும் தொகுதிப் பங்கீட்டு உணர்வும் இல்லாத சூழ்நிலையிலேயே எனக்கும் தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் அவர்களுக்கும் நட்பு நெருக்கமானது.

தமிழரசுக் கழகத்தின் சார்பில், ம. பொ. சி. அவர்களும், தொகுதி உடன்பாடு நோக்குடன் கழகத்துடன் பேச்சு நடத்த விருப்பம் தெரிவித்துள்ளார்.

சோஷியலிஸ்டு கட்சியும் பிரஜா - சோஷியலிஸ்டு கட்சியும், தொகுதிகள் குறித்துக் கழகத்துடன் பேச விருப்பம் தெரிவித்து நாள் குறிப்பிடும்படி எழுதி இருக்கிறார்கள்.

தம்பி! தொகுதி உடன்பாட்டுக்காகவும் தோழமைத் தொடர்புக்காகவும் கழகத்துடன் பேச்சு வார்த்தை நடத்த இதுபோலக் கட்சிகள் பலவும், வேறு தனிப்பட்ட நண்பர்களும் விருப்பம் தெரிவிக்கும்போது எனக்கு மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது என்றாலும்,

இத்தனை கட்சிகளுக்கு இடையில், இன்னின்ன கட்சிகளுக்கு என்று எப்படித் தீர்மானிப்பது என்பதை எண்ணும்போது திகைப்பு மேலிடத்தான் செய்கிறது.

காங்கிரசின் பெரிய தலைவர், இந்த நிலைமையில் எப்படியும் சிக்கல் எழத்தான் செய்யும், அதன் காரணமாக முறிவு ஏற்படும், அதன் விளைவாக மாச்சரியம் எழும் என்று எதிர்பார்க்கிறார், விரும்புகிறார்.

மும்முனைப் போட்டியைத் தவிர்க்க விரும்புகிறேன் என்பதனாலேயே, நாங்கள் கூறும் நிபந்தனைக்கு உட்படாவிட்டால், நாங்கள் மும்முனைப் போட்டியை மூட்டிவிடுவோம் என்று எவரும் மிரட்டிப் பணியச் செய்ய முயலக் கூடாது என்பதனைப் பணிவுடன், அதேபோது உறுதியாக நான் முன்பே தெரிவித்திருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக என்று நான் எந்தத் தொகுதியைக் கேட்பதாயினும், அந்தத் தொகுதியில்,

கழகத்திற்கு ஏற்பட்டுள்ள தொடர்பு, செல்வாக்கின் அளவு, வகை,
சென்ற தேர்தலின்போது ஏற்பட்ட நிலைமை,
இடையிலே ஏற்பட்டுள்ள கழகப் பிரசார வளர்ச்சி,
கழகம் குறிப்பிடும் வேட்பாளரின் தகுதி, திறமை, வசதி, வாய்ப்பு

ஆகியவைப் பற்றிய விளக்கம் அளித்துத்தான் விருப்பத்தைத் தெரிவிப்பதாக முறை வகுத்துக்கொண்டிருக்கிறேன். மற்றவர்களும் அதுபோன்ற ஒப்புக்கொள்ளத்தக்க ஒரு முறையை மேற்கொள்ள வேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றேன்.

இந்த நோக்கத்தைப் புரிந்துகொண்டு பேச்சு நடத்தினால் சிக்கல் குறைந்து, உடன்பாடு ஏற்பட வழி எளிதாகக் கிடைத்திடும்!

சிக்கல் குறையாது, உடன்பாடு ஏற்படாது என்று காங்கிரஸ் பெருந்தலைவர்கள் கருதுகிறார்கள். ஆகவே குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கலாம் என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

கழகத்துக்கும் தோழமைக் கட்சிகளுக்கும் இடையிலே எழக்கூடிய கருத்து வேற்றுமை பற்றி மட்டுமல்ல, கழகத்துக்கு உள்ளேயும், ஒரே தொகுதியில், இரண்டு மூன்று வேட்பாளர்கள் கிளம்புவர், பிடிவாதம் வளரும். எந்தவிதமாகத் தீர்வு காண்பது என்பது குறித்து தலைமை திணறும், பிளவு வெடித்திடும், பேதம் உருவாகும். அதனைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும், காங்கிரசின் பெரிய தலைவர்கள் எண்ணிக்கொண்டுள்ளனர்.

ஒரே தொகுதிக்காக இரண்டு மூன்று வேட்பாளர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர். இது சிக்கலுள்ள பிரச்சினை யாகக்கூடும் என்பதை நான் மறைக்க விரும்பவில்லை.

இந்த சிக்கலிலே, இறுதியான முடிவினை நானே தெரிவிக்கவேண்டுமெனக் கூறிடும்போது, மகிழ்ச்சியாகவும் பெருமையாகவுங்கூட இருக்கிறது. என்றாலும், பணிவன்புடன் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், நிலைமையையும் காங்கிரஸ் கட்சியின் நினைப்பையும் நன்கு எண்ணிப் பார்த்து, என்னுடைய "முடிவு' வரட்டும் என்று என்மீதே முழுப் பளுவையும் போட்டுவிடாமல், வேட்பாளர்கள் ஒவ்வொருவரும் தத்தமது பொறுப்பினை உணர்ந்து, தாமாகவே ஒரு சமரசம் கண்டு, ஒருமித்த முடிவு காண வேண்டும் என்று பணிவன்புடன் அவர்களை விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். மிக அருமையாக அமைத்துள்ள ஒரு அணியினை,

நமக்கென்று ஏற்பட்டு விட்டுள்ள விருப்பத்தை மட்டுமே பெரிதாகக் கருதி, உடைபடும்படி விட்டுவிடக் கூடாது என்பதனை நினைவுபடுத்துகிறேன்.

அவ்விதம் நமது அணி உடைபட வேண்டும் என்பதே காங்கிரசின் நோக்கம் என்பதையும் நாம் உணர வேண்டும்.

ஆகவே நமது நோக்கம், நமது விருப்பம் நிறை வேறுகிறதா இல்லையா என்பதைக் காட்டிலும், நமக்காக உருவாகியுள்ள அணி, எந்தக் காரணத்தாலும் உடை படாமல் இருக்கிறதா என்பதிலேதான் இருந்திட வேண்டும்.

இந்த நேர்த்தியான நிலையை காண்பதற்காக நம்மிலே ஒவ்வொருவரும் தனது நலம், தனது வலிவு, தனது நோக்கம் என்பவைகளைப் பின்னணிக்குத் தள்ளிவைத்து, கழகத்தின் பொதுநலனை முன்னணியில் கொலுவிருக்கச் செய்திட வேண்டும்.

நமது கழகத் தோழர்களிலே மிகப் பெரும்பாலானவர்கள், அதிலும் வேட்பாளர்களாகத் தம்மை அறிவித்திருப்பவர்கள், இளமைப் பருவத்தினர். எளிதிலே கோபதாபத்துக்குத் தம்மை ஒப்படைத்துவிடக்கூடிய நிலையினர். ஆகவே அவர்கள் தமது பருவத்திற்கு ஏற்பட்டுள்ள இயல்பினையும் மீறிய, பொறுமை உணர்ச்சியையும், பொறுப்பு உணர்ச்சியையும் காட்டித் தீர வேண்டும்.

மிகப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன், ஆங்காங்கே தோன்றிடும் சிக்கல்களை அந்த அந்த இடத்திலேயே நீக்கிக்கொள்வதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும்.

எல்லாவற்றையும் மொத்தமாக்கி, உருட்டித் திரட்டி ஓர் பேருருவாக்கி, என் முன் கொண்டுவந்து நிறுத்தி

விடாதீர்கள்.

எனக்குள்ள பொறுத்துக்கொள்ளும் உணர்ச்சி வலிவுள்ளது என்றாலும், சிக்கல்களை அறுத்து, எல்லோரும் ஒப்புக்கொள்ளத்தக்க தீர்வு அளிப்பதற்கான ஆற்றல் பெரிய அளவில் என்னிடம் இல்லை.

எனக்கென்று சொந்தத்தில் விருப்பு வெறுப்பு அதிக அளவிலே இல்லை என்றாலும், உடன் இருப்போரின் விருப்பு வெறுப்புகளை ஒரேயடியாகத் தள்ளிவிட்டு “முடிவு’ காணும்”கண்டிப்பு’ என்னிடம் போதுமான அளவு இருக்கிறதா என்பதிலே எனக்கே நிரம்ப ஐயப்பாடு உண்டு.

ஆகவே, சிக்கல் எழும் ஒவ்வொரு கட்டத்திலும், அந்தந்த வரிசையில் உள்ள பொறுப்புள்ள கழகத் தோழர்கள், அந்தச் சிக்கல்களை நீக்குவதற்கான காரியத்தில் ஈடுபட்டு வெற்றி பெற்றிட வேண்டும்.

எல்லாம் என்னிடம் விட்டுவிடலாம் - என்ற பேச்சிலே எனக்கு இனிப்பும் கிடைப்பதில்லை, அதனை நான் விரும்புவதுமில்லை. எல்லாவற்றையும் ஏற்ற முறையில் தீர்த்துவைத்திடும் ஆற்றல் என்னிடம் நிரம்ப இருக்கிறது என்ற நம்பிக்கையும் எனக்கு இல்லை.

ஆகவே, விரைவிலே, ஒரே தொகுதியில் விருப்பம் தெரிவித்துள்ள வேட்பாளர்கள், பொது நன்மையைக் கருதி, ஒரு சமரசம் கண்டறிந்து தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தம்பி! இப்போது நாம் மிகவும் முக்கியமான கட்டத்தில் அடி எடுத்து வைக்கின்றோம்.

நமக்குள்ளாகவே உள்ள போட்டிகளைத் தவிர்த்துக் கொள்வதும்,
நமக்கும், தோழமைக் கட்சிகளுக்கும் இடையே

ஏற்பட்டாகவேண்டிய உடன்பாடு பற்றிய ஏற்பாட்டினைச் செம்மைப்படுத்துவதும்.

இந்த இரு செயல்களிலும், நமது கழகத் தோழர்கள் வேறு எதிலும் மேற்கொள்ளாத அளவு பொறுப்புணர்ச்சியினை மேற்கொண்டாக வேண்டும்.

வெண்ணெய் திரண்டு வரும்போது எத்தனை பக்குவம் தேவையோ, அத்தனை நேர்த்தியான பக்குவம் தேவை.

மற்ற கட்டங்களிலே எப்படி நான் விரும்பிய விதத்திலும், மகிழத்தக்க வகையிலும், தம்பி! நீ உன் திறமையைக் காட்டினாயோ அஃதேபோல இந்தக் கட்டத்திலும், உன் திறமையினைக் காட்டிடுவாய், வெற்றியினைப் பெற்றளித்திடுவாய் என்பதிலே நான் உறுதிமிக்க நம்பிக்கை கொண்டிருக்கிறேன்.

பண பலம், பிரசார பலம், பதவி பலம் மிக்க எதேச்சாதிகார வெறிபிடித்த கட்சியின் பிடியினின்றும் இந்நாட்டு மக்களை விடுவிக்கும் மகத்தான தொண்டிலே, உன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளாய். அதிலே குறிப்பிடத்தக்க அளவு சிறப்புள்ள வெற்றியும் ஈட்டியுள்ளாய்.

உன் சீரிய தொண்டு காரணமாகவே, நாட்டிலே இன்று காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை வீழ்த்த முடியும் என்ற நம்பிக்கை நல்ல அளவுக்கு வளர்ந்துவிட்டிருக்கிறது.

உன் வல்லமையிலே நம்பிக்கை மிகுதியும் இருப்பதாலேயே, பல கட்சிகள் இன்று நமது கழகத்துடன் "தோழமை' கொண்டிட ஆவலைத் தெரிவித்துள்ளன.

உன் ஆற்றலின் துணைகொண்டு ஆணவ அரசை வீழ்த்த முடியும் என்ற நம்பிக்கை மிகுதியினாலேயே, நமது தோழர்கள், "நான் - நீ' என்று

ஒரே தொகுதிக்கே பலர் போட்டியிட்டுக் கொண்டு வேட்பாளர்களாக வந்துள்ளனர்.

உன்னால் உருவாக்கப்பட்டுள்ள இந்த நிலைமை, மகிழ்ச்சி தருவதுபோலவே, இந்த நிலைமையுடன் சேர்ந்து சில சிக்கல்களும் தோன்றியுள்ளன. அவைகளை நீக்கும் பொறுப்பு உன்னுடையதே! அதற்கான ஆற்றலும் உன்னிடமே உள்ளது!

ரோஜா மலர்ந்திருக்கிறது; முள்ளும் உடன் இருக்கிறது! முள்ளை நீக்கி மலரினைப் பறித்தெடுத்திட வேண்டும். தோட்டம் கண்டு, பாத்தி கட்டி, பயிரிட்டு, மொட்டு மலராகும் வரையில் பாதுகாத்திட்ட உன்னால், முள்ளை நீக்கி மலரினைப் பறித்திடவா முடியாது! முடியும், முயன்றால்!!

அன்புள்ள
அண்ணாதுரை
4-12-66

உள்ளுணர்வு

இன்றைய ஆட்சி முறை மாற்றப்பட வேண்டும்!
காங்கிரசார் மனிதப் புலிகளை ஊட்டி வளர்க்கிறார்கள்!
பட்ட கடனையும் கட்ட முடியவில்லை! புதிய கடனையும் பெற முடியவில்லை!
கழகம் தோழமைத் தொடர்பும் தொகுதி உடன்பாடும் காண முயல்கிறது!
தொகுதி உடன்பாட்டுக்கு என் தூய்மையும் நேர்மையுமே தகுதிகள்!

தம்பி!

எப்படி வாழ்வேன் இனிமேல்!
ஏன் பிறந்தேன் இப்புவியில்!
ஏழைக்கு ஏது இன்பம்!
உழைக்கிறேன், உழல்கிறேன்!
வாழ வழியின்றித் திகைக்கிறேன்!
முதுகெலும்பு முறிய மூட்டை சுமக்கிறேன்!
குடும்பம் தவிக்கிறது, குமுறிச் சாகிறேன்!
தற்கொலை தவிர வேறு வழி தெரியவில்லை.
சாவே! வா! சர்வேசா! அழைத்துக்கொள்!

இவ்விதமான "ஓலம்' நாட்டிலே மிகுந்துவிட்டிருக்கக் காண்கின்றோம்.

வயலை வளமாக்குகிறான், அவன் வாழ்வோ "பாலை'யாகிக் கிடக்கிறது.

மலையைக் குடைகிறான்; தேக்கம் அமைக்கிறான்; பாதை போடுகிறான்; பல்வேறு பொருளை உற்பத்தி செய்கிறான்; அவனோ பசியுடன் போராடுகிறான்; பட்டினியால் தாக்கப்படுகிறான்.

காலமெல்லாம் உழைக்கிறான், கண்ணீர் வடிக்கிறான், உழைப்பின் விளைவுகள் வேறு எங்கோ சென்று முடங்கிவிடக் காண்கிறான், கலக்கம் கொள்கிறான்.

அணி அணியாகத் தொழிற்சாலைகளுக்குச் செல்கிறார்கள், ஆலைச் சங்கு அலறியதும்; நெஞ்சற்ற இயந்திரங்களை நடத்திச் செல்கிறார்கள்; நேர்மையற்ற முதலாளிகள் கொழுத்திட இலாபத்தைக் குவித்துத் தருகிறார்கள்; குடும்பத்திற்குத் தேவைப்படும் ஊதியமும் கிடைக்கப் பெறாது நொந்து கிடக்கிறார்கள்.

நீதி எங்கே? என்று கேட்கிறார்கள். எமது நலனைக் காத்திடும் நேர்மையாளர்கள் எங்கே என்று கேட்கிறார்கள். பெருமூச்சு தவிர வேறு எந்த ஒலியும் பதிலாகக் கிடைக்காது தவிக்கிறார்கள்.

வேலை! வேலை! வேலை! ஓயாது வேலை! உடலையும் உள்ளத்தையும் கசக்கிப் பிழிந்திடும் கொடுமை நிறைந்த வேலை! எல்லாம் ஒரு கவளம் சோற்றுக்காக! அதுவும் கிடைக்காது தேம்புகின்றனர்;

கொளுத்தும் வெய்யில்! கொட்டும் பனி! இடி! மின்னல்! பெருமழை! - எதையும் தாங்கிக்கொண்டு வேலை செய்கின்றனர். பசியைத் தாங்கிக்கொள்ள முடியாதே, பட்டினி கிடக்கும் மனைவி மக்களைக் காத்திட வேண்டுமே என்ற உணர்வு சவுக்காகி விடுவதால்!

புதிய புதிய தொழிற்கூடங்கள் எழக் காண்கின்றனர்; புது மெருகு பெற்றிடும் பூமான்கள்

வளரக் காண்கின்றனர்.

காகிதம் செய்வோம், ஆயுதம் செய்வோம், இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவோம், எண்ணற்றப் புதுப் பொருள் சமைத்திடுவோம், செல்வம் பெருகிடச் செய்வோம், நமக்கு உரிய பங்கினைப் பெற்று வாழ்விலே சீர் பெற்றிடுவோம் என்று நம்பிப் பாடுபடுகின்றனர். மாடாக உழைத்து ஓடாகிப்போவதன்றி, வேறு நிலை காணாது, இதற்கோ இத்தனை கடினமாக உழைத்தோம் என்று ஏக்கம் கொள்கின்றனர்.

உழைப்பின் விளைவுகளாகப் பல பொருள் மின்னிடக் காண்கின்றனர் நாட்டிலே. வீட்டிலேயோ பசிக் கொடுமையால் பஞ்சடைந்த கண்ணினராகிக் கிடக்கின்றனர்.

எமக்கு வாழ்வு அளித்திடத்தக்க அரசு இல்லையே! எம்மை வாழவைத்திடா இந்த அரசினை எங்ஙனம் எமது அரசு என்போம்! நல்லரசு என்று எப்படி இதனைக் கூறுவோம் என்று கேட்கின்றனர், விம்மலுக்கு இடையில்.

ஆண்டுக்கோர் முறையோ நமது அரசு! நல் அரசு! பொது நலம் பேணிடும் அரசு! புதுவாழ்வு தந்திடும் அரசு! ஜனநாயக அரசு! சோஷியலிசம் தந்திடும் அரசு! - என்று சிந்துபாடி, கொடி ஏற்றுகின்றனர், கோலாகல விழா நடத்துகின்றனர்.

புள்ளி விவரங்களை, பளபளப்பும் வழவழப்பும் மிக்க ஏடுகளில் அச்சடித்து வழங்குகின்றனர்!

புதிய தொழில் முயற்சிகளைப் பாராட்டி அமைச்சர்கள் பேருரை ஆற்றுகின்றனர்.

நாட்டுச் செல்வத்தைப் பெருக்கிடுவீர்-உற்பத்தி முதலில், உரிய பங்கு - பிறகு என்று தத்துவ விளக்கம் தருகின்றனர் பேராசிரியர்கள்.

உலகின் பல பகுதிகளிலிருந்து புதுப் புது யந்திரங்கள், விஞ்ஞான நுணுக்க முறைகள், செயல் திறமைகள் தருவிக்கப்படுகின்றன. அதன் பயனாக ஒன்று ஒன்பதாகிறது, வளம் பெருகிக் கொண்டு வருகிறது என்று விளக்கமளித்துப் பேசுகின்றனர் அமைச்சர்கள்!

தொழில் வளம் மிக்க நாடாகிக்கொண்டு வருகிறது நமது நாடு; நமது நாட்டு உற்பத்திப் பொருள் வெளிநாட்டுச் சந்தை களுக்குச் செல்கின்றன; வெளிநாட்டுத் தொழில் விற்பன்னர்கள் நம் நாட்டு நுண்ணறிவினையும் தொழிலார்வத்தையும், தொழிலாளரின் தனித் திறனையும் வெகுவாகப் பாராட்டுகின்றனர் என்ற தேன் துளிகளைத் தெளிக்கின்றனர் நாடாளும் நல்லோர்கள்!

ஜெர்மனியே வியந்து பாராட்டுகிறது; ரµயர்ன்வ ஆர்வத்துடன் விரும்புகிறது; இங்கிலாந்தே இன்னும் அனுப்புக என்று கேட்கிறது; அந்த அளவுக்கு நமது பொருள்களுக்கு உலகிலே மதிப்பு மிகுந்திருக்கிறது; எல்லாம் எதனால்? காங்கிரசு ஆட்சியினால்! இதனை உணராமல் சிலர், எதிர்த்து வருகின்றனரே! என்ன மடைமை இது! என்ன கொடுமை இது! - என்று முழக்கம் எழுப்புகின்றனர், காங்கிரஸ் முத்திரையைப் பொறித்துக்கொண்டு நா வாணிபம் நடாத்திடக் கிளம்பிடுவோர்.

இந்தச் சிந்துக்கு இடையிலேதான் கிளம்புகிறது, ஐயோ! அப்பா! ஆண்டவனே! சாவு வரவில்லையே! ஏன் பிறந்து தொலைத்தீர்கள்! எங்காவது சென்று செத்துத் தொலையுங்கள்! - என்று அழு குரல்!

அவ்வப்போது இதழ்களிலே காணப்படும் “தற்கொலை’ பற்றிய செய்திகள், நாட்டிலே கப்பிக்கொண்டுள்ள இல்லாமையை எடுத்துக் காட்டுகின்றன. காட்டி? கண்ணீர் வடிக்கிறோம்!

கணநேரம் கலக்கம் கொள்கிறோம். அந்த நிலை நமக்கு வராமலிருக்க வேண்டுமே என்று கவலை கொள்கிறோம். பிறகோ? இந்த நிலையை மாற்றும் கடமை நம்முடையதாயிற்றே! இது மக்களாட்சிக் காலமாயிற்றே! நாமல்லவா”அரசு’ அமைக்கிறோம்! அப்படி "அரசு’ அமைப்பதிலே நாம் போதுமான அக்கறையும் திறமையும் காட்டினால் இந்த அவதிகளைப் போக்கிக் கொள்ளலாமே என்பது பற்றிய தீவிரம் காட்டுகின்றோமா? இல்லையே! இருந்திருப்பின் இத்தகைய இன்னலா தொடர்ந்து இருபது ஆண்டுகளாக இருந்து கொண்டிருக்கும்?

தம்பி! இந்த முறையாகிலும் இன்னலுக்கு ஆளாகியுள்ள மக்கள், அரசு அமைக்கும் கடமையைச் செம்மையான முறையிலே நடத்தித் தருவார்கள் என்று நம்புகிறோம்; மக்கள் இந்தத் தமது கடமையை நிறைவேற்றுவதற்குத் துணை நிற்கத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆர்வத்துடன் முனைந்து நிற்கிறது. இல்லாமை, போதாமை எனும் இடர்ப்பாடுகளிலே சிக்கிச் சீரழியும் மக்கள், தமது நிலையை மாற்றிக்கொள்ளும் முயற்சியில் நமது கழகத்தைத் தக்க முறையிலே பயன்படுத்திக்கொள்வார்கள் என்று பெரிதும் நம்பிக்கொண்டிருக்கிறோம்.

ஆனால் இந்த ஏழ்மை நிலைமையையே தமக்குச் சாதகமாக்கிக்கொண்டு, பணத்தை வீசி ஓட்டுகளைப் பறித்துக் கொள்ளலாம். இல்லாமையால் தாக்கப்படும் ஏழையிடம் இரண்டு என்பதற்குப் பதில் நான்கு என்று ரூபாய்களை வீசினால், இப்போதைய கஷ்டத்தைப் போக்கிக்கொள்ள இதாவது கிடைத்ததே என்று எண்ணி, ஓட்டுப் போடுவான் என்று காங்கிரஸ் கட்சியினர் எண்ணுகின்றனர். அந்த எண்ணத்தின் அடிப்படையிலேயே தேர்தலுக்கான திட்டம் வகுத்துக்கொண்டுள்ளனர்.

நாட்டிலே உள்ள நிலைமை, உலக நாடுகள் நமது நாட்டைப் பற்றிக்கொண்டுள்ள கருத்து, நமது நாட்டு நிர்வாகம் பற்றி நிபுணர்கள் கூறிடும் கண்டனம், நமது ஆட்சியாளர்களே அவ்வப்போது ஒப்புக்கொள்ளும் குறைபாடுகள், சீர்கேடுகள் ஆகிய எதனைக் கவனித்துப் பார்த்தாலும், இன்றைய ஆட்சி முறை மாற்றப்பட்டாக வேண்டும் என்பது தெளிவாகத் தெரிகிறது.

தெரிந்தும், மீண்டும் நாங்களே வெற்றி பெறுவோம் என்று காங்கிரஸ் தலைவர்கள் தெரிவிக்கிறார்கள்.

காரணம் என்ன, அவர்களின் நம்பிக்கைக்கு

மக்கள் தெளிவற்றவர்கள். துணிவற்றவர்கள். விலை கொடுத்து வாங்கிவிடத் தக்கவர்கள் என்ற எண்ணமும்,

காங்கிரஸ் ஆட்சிக்கு எதிராக ஒரு மாபெரும் சக்தி திரண்டிருக்கிறது, கொதிப்புணர்ச்சி வளர்ந்திருக்கிறது என்றபோதிலும், கட்சிகள் பலவாக உள்ளன, ஆகவே எப்படியும் காங்கிரசு எதிர்ப்பு ஓட்டுகள் சிதறிப்போய்விடும். இடையிலே நாம் முடிசூட்டிக்கொள்ளலாம் என்ற எண்ணமும், காங்கிரசுக்குப் பலமாக இருந்து வருகிறது.

ஆகவே காங்கிரஸ் கட்சி, தன் சொந்தப் பலம் அல்லது மக்களின் நல்லெண்ணம் ஆகியவற்றிலே நம்பிக்கை கொள்வதைக் காட்டிலும்,

மக்களின் ஏழ்மை நிலைமை
எதிர்க்கட்சிகள் பலவாக இருக்கும் தன்மை

என்பதிலேயே அதிகமான நம்பிக்கை கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு முறை பாராளுமன்றக் கூட்டம்

நடைபெறும் போதும் எழுப்பப்படும் பிரச்சினைகள், வெடித்துக் கிளம்பிடும் புகார்கள், கேட்கச் சகிக்காதனவாக உள்ளன.

அமைச்சர்களின் நடவடிக்கைகள், தொடர்புகள் கேலிக்குரியனவாக்கப்படுகின்றன

தம்பி! சின்னாட்களுக்கு முன்பு கிளறிவிடப்பட்ட ஒரு விஷயத்தைக் கூறலாம் என்று கருதுகிறேன். எதிர்க்கட்சியினர் எடுத்துக் கூறிய அந்தப் புகாரில் ஒரு பகுதியை சர்க்காராலேயே அடியோடு மறுத்துவிட முடியவில்லை.

ராஜஸ்தானத்து முதலமைச்சராக உள்ளவர் சுகாதியா என்பவர்.

திறமை மிக்கவர் என்றும், ஆட்களை வளையக் கட்டக் கூடியவர் என்றும் பாராட்டப்படுபவர்.

அவருடைய பேச்சிலேயும் அதைவிட அதிகமாக அவருடைய பார்வையிலேயும் மற்றவர்களைக் கவ்விக்கொள்ளும் தன்மை இருப்பதை நானே நேரடியாகப் பார்த்தேன்.

ராஜஸ்தான் பல்கலைக் கழகத்தினர் ஜெய்பூரில் நடத்திய ஒரு கருத்தரங்குக்கு நான் சென்றிருந்தபோது, சுகாதியா ஒரு விருந்தளித்தார் தமது மாளிகையில்.

என்னை அவருக்கு அறிமுகம் செய்து வைத்ததும் நீண்ட காலமாக என்னிடம் பழகியவர்போல கனிவு காட்டினார்.

"பாராளுமன்ற உறுப்பினர் அல்லவா அண்ணாதுரை! ராஜ்யங்களுக்கு உள்ள அதிகாரங்களைப் பறித்துக்கொண்டுபோய் மத்திய சர்க்காருக்குக் கொடுத்துவிடுவாரே!” என்று வேடிக்கை யாகக் குறிப்பிட்டார்.

“இல்லை ஐயா! அதற்கு மாறாக நான், ராஜ்யங்களுக்கு முழு அளவு அதிகாரம் தரப்பட வேண்டும் என்ற கருத்துள்ளவன்” என்று கூறினேன். உடனே மிக்க ஆர்வம் காட்டி,”எனக்கும் அதே கருத்துத்தான்!” என்று கூறினார். விவரம் பேசிடலானார்.

எவரிடமும் இலகுவாகப் பழகிடும் இயல்பு படைத்த சுகாதியா ஒரு முறை தமது மாநிலத்து கனவான் ஒருவர், லால்பகதூர் அவர்களைத் தங்கத்தால் நிறுத்து அந்தத் தங்கத்தை நாட்டுப் பாதுகாப்பு நிதிக்கு நன்கொடை தர இசைவதாகவும், லால்பகதூர் அதற்கு ஒரு நாள் குறிப்பிட்டுத் தர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

அந்தத் "துலாபாரம்’ நடைபெறவில்லை; லால்பகதூரும் இன்று இல்லை; ஆனால் வெளியாகி இருக்கும் பயங்கரமான உண்மை என்னவென்றால்,

துலாபாரம் செய்ய விரும்பிய கனவான், தங்கக் கள்ளக் கடத்தல் செய்பவர் என்றும், அந்த கள்ளக்கடத்தல் தங்கத்திலே ஒரு பகுதியைத்தான் துலாபாரம் என்ற பெயராலே சர்க்காருக்குக் கொடுத்துவிட்டு, தன்மீது சட்டம் பாயாமல் தடுத்துக்கொள்ள தந்திரத் திட்டமிட் டிருந்தார் என்பதும் இப்போது வெளியாகி இருக்கிறது.

இதிலே சுகாதியாவுக்குத் தொடர்பு உண்டா? பங்கு உண்டா? உடந்தையாக இருந்தாரா? என்பவைபற்றி எதிர்க்கட்சியினர் கிளப்பியவை ஆதாரமற்றவை, வீண் புகார் என்று எடுத்துக் காட்டப்பட்டன என்றபோதிலும், குறிப்பிட்ட அந்தக் கனவானின் மாளிகையும் தோட்டமும் சோதனையிடப்பட்டு, ஐம்பது தங்கக்கட்டிகள் - செங்கற்கள் வடிவம் கொண்டவை - கைப்பற்றப்பட்டன என்பது, சர்க்காரே ஒப்புக்கொண்டாகவேண்டிய உண்மையாகிவிட்டிருக்கிறது.

இப்படிப்பட்ட கள்ளக் கடத்தல் பேர்வழிகள் பற்றி அடிக்கடி கேள்விப்படுகிறோம். அவர்களிலே பலர், காங்கிரசுக் கட்சியைக் காத்திடும் "தருமவான்'களாக இருப்பதும் மெய்ப்பிக்கப்படுகின்றன.

இன்று எழுத உட்காருவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்பு இதழொன்றில் பார்த்தேன்.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினரும், செல்வாக்குமிக்க தொழிலதிபருமான ராம்ரதன்குப்தா என்பவரின் தொழிற்கூடம் ஒரு நாள் முழுவதும் இரகசியத் தகவல் இலாகாவினரால் சோதனையிடப்பட்டது என்ற செய்தியினை.

தொழிலதிபர்களின் தோழமையைப் பெற்றிருப்பதால் கோடிக்கணக்கில் காங்கிரஸ் கட்சிக்குத் தேர்தல் நன்கொடைத் தொகை கிடைத்திருப்பதைக் காங்கிரசுத் தலைவர்களே ஒப்புக்கொண்டுள்ளனர். அதற்கான கணக்கும் வெளியிடப்பட்டுவிட்டிருக்கிறது.

ஆக ஒரு புறத்திலே காங்கிரஸ் ஆட்சி ஏழையைத் தத்தளிக்கவிட்டிருக்கிறது. மற்றோர் புறத்திலே கள்ளக் கடத்தல் பேர்வழிகள், தொழிலதிபர்கள் ஆகியோரிடம் நன்கொடை திரட்டி அவர்களை ஆதரிக்கும் விதமான ஒரு சர்க்காரை நடத்தும் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்கிறது.

இவ்வளவு வெளிப்படையாக உண்மை தெரிந்திருந்தும், மக்கள் ஆத்திரத்தால் தம்மைக் கவிழ்த்துவிடுவார்களே என்ற அச்சம் ஆளவந்தார்களுக்கு எழக் காணோம். இது வேதனை தரும் விசித்திரமல்லவா?

தொழில் துறையிலும் ஆதிக்கம் வைத்துக்கொண்டு, ஆட்சித்துறையிலும் தொடர்பு வைத்துக்கொண்டு ஒன்றுக்கு மற்றொன்று

துணையாக இருக்கும்படி செயலை அமைத்துக்கொள்ளும் சீலர்களும் இருக்கின்றார்கள்.

ஒரிசா மாநிலத்தில் முதலமைச்சராக இருந்தவரும், எந்த நேரத்திலும் முதலமைச்சர்களை உண்டாக்கித் தமது கரத்தில் வைத்துக்கொள்ளக் கூடியவருமான பட்நாயக் என்பவர் பற்றிய செய்திகளைத் தம்பி! அடிக்கடி காண்கின்றாய்.

ஒரு சில வருடங்களிலே பல கோடி ரூபாய்களைத் திரட்டிய இலாபவேட்டைக்காரர் இந்த பட்நாயக்.

இவர் பற்றிய புகார்கள் பல! விசாரணைக் குழுவிடம்கூட ஒப்படைக்கப்பட்டன இந்தப் புகார்கள்.

இந்த விசாரணையின்போது வெளிவந்த உண்மைகள், சர்க்காரின் இரகசியங்களாக இருந்துவந்தன. எதிர்க் கட்சியினர் எப்படியோ அந்த விசாரணைக் குறிப்பேட்டைக் கூட வெளியே கொண்டுவந்துவிட்டனர்! பாராளுமன்றத்திலேயே அதனை வழங்கவும் செய்தனர்.

இத்தகைய "புகார்களை’ புகழாரமாகக் கொண்டுள்ள இந்தப் பெரியவரைத்தான், ஒரிசாவில் காங்கிரசுக்கு வெற்றி பெற்றளிக்கும் பொறுப்பேற்கும் தலைவராகக் காமராஜர் நியமித்துள்ளார்.

புகார்கள் பலமாக! ஆனால் காங்கிரசின் பெரிய தலைவர் காமராஜரின் அரவணைப்பு இவருக்கு!

எந்த அதிகாரி இந்த நிலையில் பட்நாயக்மீது நெருங்கத் துணிய முடியும்?

விசாரணையா நடத்தப்போகிறீர்கள்? பைத்தியக்காரர்களே! என்னிடம் ஒரிசாவையே ஒப்படைத்திருக்கிறார் காமராஜர்! நான் நினைத்தால் ஒரிசாவில் காங்கிரசை ஆக்கவும் முடியும் அழிக்கவும்

முடியும். எனக்கு உள்ள அந்த ஆற்றலை அறிந்து அகில இந்திய காங்கிரஸ் தலைவர் முழுப் பொறுப்பை என்னிடம் ஒப்படைத் திருக்கிறார்! காங்கிரசின் மந்திராலோ சனைக் கூடத்தில் எனக்கு நடு இடம் தரப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட என்மீது உள்ள புகார்களை விசாரிக்கவா துணிகிறீர்கள்? - என்று பட்நாயக் கேட்டிடின், எந்த அதிகாரி அஞ்சாதிருக்க முடியும்?

நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே! என்று கூறிட ஒரே ஒரு நக்கீரனைத்தானே காட்ட முடிகிறது, நேர்மை அரசோச்சிய நாட்களிலேயே! இன்று யாராக இருந்தாலும் உரிய விலை கொடுத்தால் வாங்கிவிட முடியும் என்ற பேச்சு மிகச் சாதாரணமாகப் பரவியுள்ள நாட்களல்லவா! பட்நாயக்குக்குக் காமராஜர் தந்துவிட்டுள்ள "இடம்’ எத்தனை உயர்வானது என்பதைப் பார்த்த பிறகும், பயப்படாமல், விசாரணை நடத்திட எத்தனை அதிகாரிகளைக் காண முடியும்.

இவ்வளவு புகார்கள் எவர்மீது எழுந்துள்ளனவோ அவரிடமா, இத்தனைப் பொறுப்பை ஒப்படைப்பது என்று காங்கிரஸ் வட்டாரத்திலேயே சிலர் கேட்கின்றனர். காங்கிரஸ், ஒரிசாவில் வெற்றி பெறவேண்டுமென்றால், பட்நாயக்கிடம் பொறுப்பை ஒப்படைப்பது தவிர வேறு வழி இல்லை என்ற பதில்தான் கிடைக்கிறது.

புகார்கள் அவர்மீது எழும்பியுள்ளது மட்டுமல்ல; ஏராளமான தொகை அவர் செலுத்தவேண்டுமாம்; வருமான வரியாக! அதனை வசூ-க்க முடியவில்லை இலாகாவினால்; இன்னமும் அதுபற்றிக்கூடக் கேட்கிறார்கள். பதில் என்ன?

அமைச்சர்கள் அளித்திடும் பதில் வசூலைத் துரிதப்படுத்த முயற்சி எடுத்துக்கொள்கிறோம் என்பது.

பட்நாயக் தரும் பதில்? காங்கிரஸ் ஆளவந்தார்களையே கேலி செய்யும் விதமான பதில்! "வருமான வரி பாக்கியா? கேட்கட்டும் தருகிறேன்; நியாயமாக இருந்தால்! இருக்கவே இருக்கிறதே கோர்ட்டு! அங்குச் சந்திப்போமே'' என்கிறார்.

இவை மட்டுமல்ல தம்பி! பட்நாயக்கின் பல தொழில் அமைப்புகளிலே ஒன்று, க-ங்கா விமான கம்பெனி. இந்தக் கம்பெனியிடம், வடகிழக்கு எல்லைப் பகுதியில் போர்க் காலத்தில் பொருளை எடுத்துச் செல்லும் அலுவல் ஒப்படைக்கப்பட்டது.

இந்த ஒப்பந்தம், முறைப்படி இல்லை என்றும், வேறு கம்பெனிகள் எதிர்பார்த்ததைவிட அதிகத் தொகை க-ங்கா கம்பெனிக்கு சர்க்கார், கட்டணமாகத் தந்தார்கள் என்பதும், ஒப்பந்தப்படி இந்தக் கம்பெனி ஏற்றுக்கொண்ட காரியத்தைச் சரியானபடி செய்யவில்லை என்பதும் இதனாலே சர்க்காருக்கு வீண் நஷ்டம் விளைந்திருக்கிறது என்பதையும் பொதுக் கணக்குக் கமிட்டி எடுத்துக் காட்டி சர்க்காரை இடித்துரைக்கிறது.

தர வேண்டிய தொகையைவிட அதிகப் பணம், இந்தக் கம்பெனிக்கு தரப்பட்டது என்றும் கமிட்டி சுட்டிக் காட்டியிருக்கிறது.

இது கேட்டு பட்நாயக் பதறினாரா? பாவிகளா! இப்படியா பழி சுமத்துவது? என்னுடைய கட்சி நடத்திச் செல்லும் சர்க்காருக்கு நானா வீண் நஷ்டம் உண்டாக்குவேன்? என்னை என்ன அத்தகைய சுயநலக்காரன் என்றா எண்ணிக்கொண்டீர்கள்? பணம்தான் பெரிது என்று நானா கருதுபவன்? என்றெல்லாம் கூவினாரா? இல்லை!

பத்திரிகை நிருபர்கள் இது பற்றிக் கேட்டபோது பட்நாயக் துளியும் பதறாமல் அதிகப் பணம் கொடுத்து விட்டதா சர்க்கார் க-ங்கா கம்பெனிக்கு?

சுத்த அதிர்ஷ்டக் கட்டையான சர்க்கார் ஜாக்ரதையாக நடந்துகொள்ள வேண்டும்! என்று கேலி பேசியிருக்கிறார்.

ஆட்சி நடத்தும் கட்சியிடம் நேசத் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு, அதனைப் பயன்படுத்தி தொழில் துறையிலே ஆதிக்கம் ஏற்படுத்திக்கொண்டு, முறை தவறுகளைத் துணிவுடன் செய்து, விசாரணை நடத்தப்படும் கட்டம் பிறந்திடின் உருட்டி மிரட்டிச் சர்க்காரைச் செயலற்றதாக்கி தமது செல்வாக்கு காங்கிரசுக்குப் பயன்படவேண்டுமானால், எந்தவிதமான கட்டு திட்டமும் தமக்கு விதிக்கக் கூடாது என்று நிபந்தனை போட்டிடும் அளவுக்கு நிமிர்ந்து நிற்கும் கோடீஸ்வரர்கள் பலர் இன்று உள்ளனர். இவர்களை ஊட்டி வளர்த்துவிட்டதே காங்கிரஸ் கட்சிதான். இன்று அவர்கள் புருவத்தை நெரித்தால் காங்கிரசின் மூலவர் களுக்கே குலைநடுக்கம் எடுக்கிறது.

தம்பி! விளைநிலங்களிலே புகுந்து களவாடுபவர்களைக் கண்டுபிடிக்கவும், விரட்டவும், காவலாளிகளையும், வேட்டை நாய்களையும் அமர்த்துகின்றனர் பண்ணை முதலாளிகள். இந்தோனிஷயர்வில், வயல்களிலே காவல் புரியவும், களவாடுபவர் நுழையாது தடுத்திடவும், நுழைந்திடின் விரட்டிடவும், பயிற்சி அளிக்கப்பட்ட புலிகளை அமர்த்தி இருக்கிறார்களாம்! விசித்திரம், ஆனால் உண்மை.

புலி பதுங்கிப் பாயும். மோப்பம் பிடித்து ஆளைத் தாக்குமல்லவா? அப்படிப்பட்ட புலிகளை வயல்களிலே காவலுக்கு வைக்கிறார்களாம்! களவாட வருபவனை புலிகள் கண்டுபிடித்து, கடித்துப் போடும் அல்லவா? அதற்காக!

பயிற்சி அளிக்கப்பட்ட வேட்டை நாய்கள், களவாட வருபவனைத் துரத்திவிடும். அல்லது

இலேசாகக் காயம் உண்டாக்கி விரண்டோடச் செய்திடும். புலி ஆள் பிடிபட்டால் விட்டா வைக்கும்? விரட்டி அடிப்பதோடா நின்றுவிடும்? கடித்துக் குதறி, இரத்தத்தைக் குடித்துவிடும்! ஆள் பிழைப்பானா?

புலியை ஏவி ஆளைச் சாகடிக்கும் கொடுமையை, வயலைக் காத்திடும் முறை என்று கருதி, இந்தோனிடீயர்விலே சிலர் மேற்கொண்டுள்ளனர் என்று ஒரு இதழில் படித்தேன். அந்த இதழ், இந்தக் கொடுமையைக் கண்டித்து எழுதியிருந்தது.

காங்கிரசின் மூலவர்கள், தமது கட்சிக்குத் தேர்தலிலே வெற்றி கிடைக்க வேண்டும் என்பதற்காக, இந்த மனிதப் புலிகளை ஊட்டி வளர்க்கின்றனர்!!

இந்த மனிதப் புலிகள் ஏழையின் குருதியைக் குடித்துச் சுவை கண்டு கொழுத்துக் கிடக்கின்றன.

வெறி முற்றிய நிலையில் இந்த மனிதப் புலிகள், தம்மை ஊட்டி வளர்ப்பவர்களே சிறிது உருட்டி மிரட்டினால், உறுமிடவும், மேலே பாய்ந்து கடித்திடவும் தயங்கப்போவதில்லை.

என்னை மனிதப் புலிகள் விரட்டிவிட்டன என்று முன்பு டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் கூறினார். கவனமிருக்கிறதல்லவா?

இப்போது வெளியேற்றப்படும் நிலைக்கு ஆளான குல்சாரி லால் நந்தாகூட, பெரிய முதலாளிகளின் சதி காரணமாகவே தனக்குப் பதவி பறிபோயிற்று என்ற கருத்துப்படப் பேசி இருக்கிறார்.

ஆகவே காங்கிரசுக் கட்சியை ஆட்டிப் படைக்கும் ஆதிக்கத்துடன் முதலாளிகள் உள்ளனர் என்பதும், அவர்களிலே கள்ளக் கடத்தல் பேர்வழிகளும், ஆட்சியாளர் களின் நேசத்தைத் தமது சுயநலத்துக்குப் பயன்படுத்திக் கொள்பவர்களும்,

சட்டத்திற்கு ஒவ்வாத முறையிலே பணம் திரட்டி சட்டத்தின் பிடியிலே சிக்கிடாது தப்பித்துக் கொள்பவர்களும், சர்க்காருக்கு விரயம் ஏற்படுத்துபவர் களும், சர்க்காருக்கு அஞ்ச மறுப்பவர்களும், எமது தயவில்லாமல் எப்படி காங்கிரஸ் கட்சி சர்க்கார் அமைக்க முடியும் என்று இறுமாப்புடன் கேட்பவர்களும் இருக்கின்றனர், கொட்டமடிக்கின்றனர்.

இந்த நிலையில் மக்களின் உரிமையைக் காத்திடவல்ல ஜனநாயகமோ, வாழ்வினைச் செம்மைப்படுத்தவல்ல சோஷியலிசமோ எப்படிக் காப்பாற்றப்பட முடியும்? எங்ஙனம் வெற்றி பெற முடியும்? இத்தகையவர்கள் குறித்தும், இவர்களின் போக்கினாலே ஏற்படும் பெரு நஷ்டம் குறித்தும், பாராளுமன்றத்திலே அடிக்கடி பேசுகிறார்கள். தயக்கம் கலந்த சமாதானம்தான் தர முடிகிறதே தவிர காங்கிரஸ் அமைச்சர்களால், இவைகளை அடியோடு மறுத்துப் பேச முடியவில்லை.

இன்று இதழிலே பார்த்தேன், மற்றும் ஒரு ஊழல் என்ற தலைப்பிலே எழுதப்பட்டுள்ள ஒரு கண்டனத்தை.

பாதுகாப்புத் துறைக்குத் தேவையான மோட்டார் டையர்கள், சுமார் 25 இலட்ச ரூபாய் பெறுமானமுள்ளவை, சர்க்கார் நடத்தும் வணிகத் துறையினால் விற்கப்பட்டிருக்கிறது. இந்த டையர்கள் பழுதானவை! இவை இலாயக்கில்லை என்று பாதுகாப்பு அமைச்சகத் துறையினரே அறிவித்துமிருந்தனர். என்றாலும் அந்த அறிவிப்பை வேண்டுமென்றே அனுப்பவேண்டிய அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்காமல், கெட்டுப்போன டையர்களை பாதுகாப்பு இலாகாவின் தலையிலே கட்டிவிட்டனர்!

இந்த கெட்டுப்போன டையர்களை ஐரோப்பிய

நாடொன்றில் இருந்து தருவிக்கும் ஏஜண்டாக வேலை பார்த்தது ஒரு தனிப்பட்ட முதலாளியின் கம்பெனி.

அந்தக் கம்பெனியுடன் கூடிக்கொண்டு, கெட்டுப்போன டையர்களைப் பாதுகாப்பு இலாகாவுக்கு விற்று, பொருள் நஷ்டம் ஏற்படுத்துவதற்கு, சர்க்காரின் வணிகத்துறை உடந்தை யாக இருந்திருக்கிறது.

ஏஜண்டு வேலை பார்த்த கம்பெனி, டையர்களை சோதனை பார்த்த அதிகாரி, விற்ற அதிகாரி ஆகியவர்கள் கூட்டாக இந்த மோசடியைச் செய்தனர் என்று பொது கணக்குக் கமிட்டி சுட்டிக் காட்டி கண்டித்திருக்கிறது.

இதுபோல நிர்வாகம் மோசமாகிக்கொண்டு வருவது எடுத்துக் காட்டப்படுகிறது.

காங்கிரஸ் சர்க்காரின் பெரிய சாதனை என்று விளம்பரம் செய்யப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்கள்பற்றி அவர்களே முன்பு காட்டிய ஆர்வத்தைக் காட்ட முடியவில்லை. ஐந்தாண்டுத் திட்டத்தின் பலன் ஏழைகளுக்கு வந்து சேரவில்லை என்பதை அவர்களே ஒப்புக்கொண்டுவிட்டுள்ளனர். இப்போது அவர்களிலேயே பலர் ஐந்தாண்டுத் திட்டங்கள் நடைமுறைக்கு ஒத்ததாகத் தீட்டப்படவில்லை என்றும், அவைகளை நிறைவேற்றுவதிலே போதுமான திறமை காட்டப்படவில்லை என்றும், திட்டங்களுக்காகச் செலவிடப்படுவதற்காகக் குறிக்கப்பட்ட பணம் மட்டும் அதே அளவு செலவாகி விட்டிருக்கிறதே தவிர, திட்டத்தின் மூலமாக அடையப் போவதாகச் சொன்ன "இலக்குகளை' அடைய முடியவில்லை என்றும் ஒப்புக்கொள்கிறார்கள்.

நிதி ஆண்டு 1965 - 66

திட்டமிட்டது கிடை த்தது
விவசாயப்   4 மிலியன்
பொருள்   7   100
மிலியன் டன்
எண்ணெய் வித்து 7மிலியன்
9.8 மிலியன் டன்
சணல் 3 62 இலட்சம்3.6 இலட்சம்
பேல்கள்   பேல்கள்
பருத்தி   5   70.552.65 இலட்சம்
இலட்சம் பேல்கள்   பேல்கள்
பொறுக்கு   விதைத்64 மில்லியன் ஏக்கர்
திட்டம்   1   204
மிலியன் ஏக்கர்
பாசன வசதி 1 29.58 மிலியன் ஏக்கர்
மில்லியன் ஏக்கர்
மின்சார சக்தி 1 29.50.5 மிலியன்
மிலியன்   கிலோவாட்
கிலோவாட்
எஃகுப்   பொருள்   6.6 மிலியன் டன்
9.2 மிலியன் டன்
பயிர்ப் பாதுகாப்பு 40 மிலியன் ஏக்கர்
50 மிலியன் ஏக்கர்
பத்திரிகைத் தாள் 30,000 டன்
1.20 இலட்சம் டன்
சிமிட்டி   1   130.4 மிலியன் டன்
மிலியன் டன்
நிலக்கரி   6   98.66 மிலியன் டன்
மிலியன் டன்
இரும்புக்கனி   1   306 மிலியன் டன்
மிலியன் டன்
சர்க்கரை   ஆலை7 கோடி ரூபாய்
இயந்திரம்   7   140
கோடி   ரூபாய்
மதிப்பு
காகித   ஆலை8 கோடி ரூபாய்

இயந்திரம் 1 65
கோடி ரூபாய்
மதிப்பு
டிராக்டர்கள் 4 10000 000
வீடுகள் 2 4.2 இலட்சம்
இலட்சம்
டீசல் என்ஜின் 84,800
1.66 இலட்சம்
போக்குவரத்து 0,000
வண்டிகள் 4 60,000

உடனடியாகப் பலன் தர முடியாத திட்டங்களுக்காகப் பெரும் பணத்தைச் செலவிடுவது, பண வீக்கத்தை உண்டாக்கி, அதன் காரணமாக விலைகளை அதிகப்படுத்தி, ஏழைகளை வாட்டி வதைக்கிறது என்பதையும் அவர்களே இப்போது ஒப்புக்கொண்டு பேசுகின்றனர்.

பெரிய அளவிலேயே திட்டங்கள் இருந்தாக வேண்டும் என்ற மயக்கத்திலிருந்து விடுபட்டாக வேண்டும் என்று இப்போது பேசுகின்றனர்.

உடனடிப் பலன் தரத்தக்க திட்டங்களுக்கே முதலிடம் தர வேண்டும் என்று பொருளாதார நிபுணர்கள் நீண்ட காலமாகக் கூறிக்கொண்டிருப்பது இப்போதுதான் இவர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது.

புவனேஸ்வர் காங்கிரஸ் மாநாட்டிலே தலைமைப் பேருரையில் காமராஜரே இது பற்றிப் பேசி நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்காகக் குறிக்கப்படும் தொகையின் அளவு குறைக்கப்பட வேண்டும் என்றும், உடனடிப் பலன் தரத்தக்க திட்டங்களையே முதலிலே மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

அவருடைய யோசனையை

ஏற்றுக்கொண்டதாகவும் தெரியவில்லை. பொருட்படுத்தியதாகக்கூடத் தெரியவில்லை.

திட்டத்துக்கான தொகை பெரிய அளவிலேயே அமைந்திருக்கிறது.

திட்டங்களும் உடனடிப் பலன் தருவனவாக அமைக்கவில்லை.

இவ்வளவுதானா என் பேச்சுக்கு நீங்கள் தரும் மதிப்பு, மரியாதை என்று காமராஜர் கேட்பதாகவும் தெரியவில்லை.

திட்டம் தீட்டுபவர்கள் தமது காரியத்திலே குறுக்கிடும் தகுதி காமராஜருக்கு இல்லை என்று வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லையே தவிர நடவடிக்கை மூலம் அதைத்தான் எடுத்துக் காட்டுகிறார்கள்.

நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் நாட்டுக்குப் பெரிய வளம் கிடைத்துவிடும் என்று நம்பிக்கொண்டு விடாதீர்கள் என்று நமது மாநிலத் தொழிலமைச்சர் வெளிப்படையாகவே பேசிவிட்டார்.

இந்த இலட்சணத்திலே உள்ள இந்தத் திட்டத்துக்கு, வெளி நாடுகளிலிருந்து கிடைக்கக்கூடிய கடன் தொகை, உதவித்தொகை எந்த அளவு இருக்கும், எந்தெந்த முறையிலே கிடைக்கும், எப்போது கிடைக்கும் என்பது திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட முடியவில்லை.

அமைச்சர்கள் "யாத்திரை’ சென்றவண்ணம் உள்ளனர்; வரம் தருவதிலே காட்டும் ஆர்வம் நிறைவேற்றப்படுவதிலே காட்ட, பல நாடுகள் முன் வரவில்லை.

உதவி அளித்திட உருவாகியுள்ள அமைப்பு அடிக்கடி கூடுகிறது, விவாதிக்கிறது; புதிய புதிய

பிரச்சினைகளை எழுப்புகிறது; உதவி அளித்திடுவதிலே தீவிரம் காட்டக் காணோம். கொடுத்த கடன் பெரிய அளவு - திருப்பித் தந்திடும் வாய்ப்பு எந்த வகையில் இருக்கிறது என்று உதவி தந்திடும் நாடுகள் பேசிக்கொள்கின்றன.

அமெரிக்காவால்தான் இவ்வளவு பெரிய தொகை கடனாகவோ, உதவியாகவோ தர முடியும் என்று பிற நாடுகள் கூறுகின்றன.

எல்லாப் பளுவையும் எம்மையே சுமக்கச் சொல்லாதீர்கள்; மற்ற நாடுகளும் தத்தமது வசதிக்கேற்ப உதவித் தொகை தந்திட வேண்டும் என்று அமெரிக்கா பிற நாடுகளுக்குக் கூறுகிறது.

வாணிபம் நடாத்தி நொடித்துப்போய்விட்டவனிடம், பச்சாதாப உணர்ச்சி காட்டி, அவன் ஒரே அடியாக அழிந்து போய்விட்டால், முன்பு கொடுத்த கடனே திருப்பிப் பெற்றிட முடியாது. ஆசாமியை நடமாடவிட்டு வாணிபம் நடத்தவிட்டால்தான், ஏதாகிலும் சம்பாதித்து கடனை அடைக்க முடியும், அதற்காக அவன் வாணிபம் நடத்துவதற்குத் தேவைப்படும் பணம், கடனாகக் கொடுத்துத்தானே ஆகவேண்டும் என்று பெரிய புள்ளிகள் வீழ்ச்சி அடைந்தவன் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து பேசுவதுபோல இந்தியா பற்றி பணம் படைத்த நாடுகள் இன்று பேசுகின்றன.

நாட்டின் தன்மானம் மிகவும் சீரழிக்கப்பட்டுவிட்டிருக்கிறது.

நாணயத்தின் மதிப்பைக் குறைத்தது, இந்தச் சீரழிவை அதிகமாக்கிவிட்டிருக்கிறது.

சொல்வதற்குக் கூச்சமாகக்கூட இருக்கிறது. பாகிஸ்தானுக்குக் கடன் தருவதிலே இருக்கும் ஆர்வமும் கொடுத்த கடனைத் திரும்பப் பெறலாம்

என்ற நம்பிக்கையும் இருக்கும் அளவுக்கு இந்தியா விஷயத்திலே பிற நாடுகளுக்கு ஏற்படவில்லை.

பாகிஸ்தான் நாட்டுப் பொருளாதாரம் நலிவற்றதாகக் கருதப்படுகிறது; இந்தியாவின் பொருளாதார நிலைபற்றி அவ்விதமான எண்ணம் இல்லை.

சென்ற திங்கள் டில்லியில் நடைபெற்ற கலவரங்களை பற்றிக் கவலை தெரிவித்து எழுதிய வெளிநாட்டு இதழ்களெல்லாம்,

இத்தனைக் குழப்பத்தில் நாடும் நிர்வாகமும் இருக்கும்போது, மேலும் மேலும் கடன் கொடுத்தபடி இருக்கலாமா என்ற கேள்வியே எழுப்பிவிட்டிருக்கின்றன.

ரூபாயின் மதிப்பைக் குறைப்பதன் மூலம், ஏற்றுமதியை அதிகமாக்கிவிடலாம், அதன் பலனாக அன்னிய நாட்டுச் செலாவணித் துறைக்கு வலிவு தேடிக்கொள்ளலாம் என்று கூறப்பட்டது.

எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை.
ஏற்றுமதி வளரவுமில்லை.
இறக்குமதி குறையவும் இல்லை.

நாணயத்தின் மதிப்பைக் குறைத்ததாலே, முன்பு நாலாயிரம் கோடி என்ற அளவுக்கு இருந்து வந்த கடன் - வெளிநாடுகளுக்குச் செலுத்தவேண்டிய கடன் - இப்போது ஐயாயிரம் கோடியாக உயர்ந்துவிட்டது என்றும்,

இந்த ஆண்டு வட்டியாக 120 கோடி ரூபாய் கட்டித் தீர வேண்டும் என்றும் இந்தியப் பேரரசின் நிதி அமைச்சர் சவுத்ரி, நாலு நாட்களுக்கு முன்பு தெரிவித்துமிருக்கிறார்.

இதனைக் கவனிக்கும்போது, காங்கிரசாட்சி

பட்ட கடனையும் கட்ட முடியாமல்,

புதிய கடனையும் பெற முடியாமல் திண்டாட்டத்தைத் தேடிப் பெற்றுக்கொண்டு விட்டிருக்கிறது என்பதும் விளக்கமாகிறது.

இப்படி எந்த முனையிலிருந்து பார்த்திடினும், எந்தத் துறையை எடுத்துப் பார்த்திடினும், உற்சாகமோ நம்பிக்கையோ கொள்வதற்கு முடியாத நிலை இருந்து வருவது தெரிகிறது.

கவலையும், கலக்கமும், கசப்பும் மிகுந்திருக்கிறது மறைக்க முடியாத அளவில்!

இந்த நிலைமையிலும், மக்களிடம் "ஓட்டு' வாங்கிட முடியும் என்று காங்கிரஸ் கட்சி நம்பிக்கையுடன் இருக்கிறது. காரணம்? ஏழைகளை மயக்கிடும் சக்தியைத் தேடிப் பெற்று கொண்டுள்ளோம் என்பதும், நாட்டிலே காங்கிரசுக்கு எதிர்ப்பாக உள்ள சக்தி, ஓருருவாக இல்லாமல், பல கட்சிகளாக உள்ளன என்பதிலே ஏற்படும் தெம்புமேயாகும்.

பல்வேறு கட்சிகள் ஒரே நாளில் ஒன்றுபட்டு ஒரே கட்சியாக ஆகிவிடப்போவதில்லை.

காங்கிரசிலிருந்து பிரிந்து வந்தவர்களேகூட புதிய தனிக் கட்சி அமைத்துக்கொண்டுள்ளனர். ஏற்கனவே உள்ள ஏதாகிலும் ஒரு கட்சியில் சேர்ந்து அதனை வலுவுள்ளதாக்கிடும் செயலில் ஈடுபடவில்லை.

இந்தக் கட்சிகள் ஒவ்வொன்றும், தத்தமது எதிர்காலத்தையும் வளர்ச்சியையும் முதல் நோக்கமாகவே கொண்டு செயல்படுகின்றன.

காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை வீழ்த்தும் பொது நோக்கத்தில் அவை அக்கறையும் ஆதரவும் காட்டுகின்றன என்றாலும், ஒன்றாகிவிட

இசையவில்லை. இசைவது முடியாத தாகவும் இருக்கிறது.

ஆகவே அவை ஒன்றாகாமல், பலவாக நின்று ஓட்டுகளைப் பங்கு போட்டுக்கொள்ள முனைகின்றன; இதன் காரணமாகக் கிடைத்திடும் ஓட்டுகளில் அதிக அளவுள்ள ஓட்டுகள் நமக்குத்தானே கிடைக்கும், நாமே மீண்டும் ஆட்சிக்கு வந்து அமர்ந்துவிட முடியும் என்று காங்கிரஸ் நம்புகிறது.

கழகம், இந்த நிலை ஏற்படாது தடுத்திட இதய சுத்தியுடன் பாடுபட முனைகிறது. தோழமைத் தொடர்பு தேடுகிறது. தோழமைத் தொடர்பு தேடுவதாலே, நாங்கள் கேட்டிடும் தொகுதிகளை எமக்குத் தந்துவிட வேண்டும் என்று பிற கட்சிகள் கேட்பது கண்டுகூட கழகம் கவலைப் படவில்லை. ஆனால் கழகத்திடம் கேட்டுப் பெற்றிடும் இடங்களிலே வெற்றி பெற்றிடும் வாய்ப்பும் வலிவும் அந்தக் கட்சிகளுக்கு இல்லாத நிலையில், தொகுதிகளைக் கேட்கின்றனவே என்பதைப் பற்றித்தான் கவலைப்படுகிறது.

தோழமைத் தொடர்பும் தொகுதி உடன்பாடும் காண வேண்டும் என்ற நிலை உருவாகாத முன்பேகூட, கழகம் வேண்டுமென்றே மும்முனைப் போட்டியை மூட்டிவிடக்கூடாது என்பதிலே அக்கறை காட்டி வந்திருக்கிறது.

இப்போது கழகம் கூடுமானவரையில், மும்முனைப் போட்டியை எந்த அளவுக்குத் தவிர்க்க முடியுமோ அந்த அளவு தவிர்க்க வேண்டும் என்ற நோக்குடனேயே பணியாற்றுகிறது.

தொகுதி உடன்பாடு ஏற்பட முடியாத நிலையிலே கூட, மும்முனைப் போட்டியை மூட்டிவிடும் பாதகத்தையும் பழிச் செயலையும் மேற்கொள்ளக்

கழகம் விரும்பப் போவதில்லை.

ஆனால் காங்கிரஸ் எதேச்சாதிகாரம், எதிர்க்கட்சிகள் பலவாக இருக்கும் நிலைமை எப்படியும் தனக்குச் சாதகத்தைத் தேடித்தரும் என்ற கணக்கினைத்தான் பெரிதாக நம்பிக்கொண்டிருக்கிறது.

இந்த நிலைமை எந்த அளவுக்குக் கவலை தராததாக ஆக்கப்படுகிறதோ அந்த அளவுக்கு ஜனநாயகம் வெற்றி பெற்றிட வாய்ப்பு இருக்கிறது.

இதிலே தம்பி! கழகத்துக்கு உள்ள பொறுப்பும் பங்கும் மிகப் பெரிது என்பதனை உணர்ந்து நடந்துகொண்டாக வேண்டும்.

எல்லா எதிர்க்கட்சிகளும் ஒரே உருவம் கொண்டிட இயலாத நிலையில், நான் வலியுறுத்தி வந்திடும் விகிதாச்சார ஓட்டு முறை செயல்பட முடியாத நிலையில், எதிர்க்கட்சிகள், தமக்குள் தோழமைத் தொடர்பு ஏற்படுத்திக்கொள்வது ஒன்றுதான், மேற்கொள்ளக்கூடிய முறையாக இருக்கிறது. இந்த முறை வெற்றி பெறவேண்டுமென்பதற்காக நாம் நேர்மையுடன் நடந்துகொள்ள உறுதிகொண்டிருக்கிறோம். ஆனால் அதேபோது, அமையும் எந்த ஏற்பாடும் காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை வீழ்த்தத்தக்க வலிவு எங்கெங்கு எவரெவருக்கு இருக்கிறது என்ற அடிப்படையிலேயே, தொகுதி உடன்பாடு அமைய வேண்டும் என்பதனை வலியுறுத்துகிறது.

இதன் மூலம் ஒரு பத்து இடங்கள் கழகத்துக்கு அதிகம் கிடைத்திட வேண்டும் என்பது அல்ல நமது நோக்கம். நிச்சயமாக அந்த எண்ணம் எழக்கூட இல்லை.

எவ்வளவு குறைத்து மதிப்பிட்டாலும், உள்ள

எதிர்க் கட்சிகளில், தமிழகத்தைப் பொறுத்தமட்டில், கழகந்தான் அதிக இடங்களிலே காங்கிரசை எதிர்த்திடவும் வீழ்த்திடவும் வலிவும் வாய்ப்பும் பெற்றிருக்கிறது என்பதனை எவரும் மறுத்திட மாட்டார்கள்.

எத்தனை இடங்கள் என்பது அல்ல பிரச்சினை. எந்த இடங்கள் என்பதுதான் பிரச்சினை. எந்தெந்த இடங்களில், நீண்டகாலமாகக் கழகம் பதப்படுத்தி, பக்குவப்படுத்தி காங்கிரசை வீழ்த்துவதற்கான சூழ்நிலையை உருவாக்கி வைத்திருக்கிறதோ, அந்த இடங்கள் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டால் மட்டுமே, காங்கிரசை வீழ்த்தும் காரியம் வெற்றிகரமாக முடியும்.

இந்த நோக்கத்திலே உள்ள தூய்மையையும் நேர்மையையும், பிற கட்சிகள் உணரும்படி செய்வதிலே எனக்குப் போதுமான திறமை கிடைக்குமா என்பதை என் மனத்தினைக் குடைந்திடும் கேள்வி.

இதிலே எழக்கூடிய சிக்கலையும் சங்கடத்தையும் நான் உணராமலில்லை.

காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை வீழ்த்துவதற்கான முறையினை வகுத்திட, தொகுதி உடன்பாட்டினை அதற்கு ஏற்றபடி அமைத்திட, பிற கட்சிகள் மட்டும், நம்பிக்கை வைத்து, என்னிடம் ஒப்படைக்க முன்வருமானால். . . !

பிற கட்சிகளிடம் என்னிடம் ஏற்பாட்டினை வகுத்திடும் பொறுப்பினை ஒப்புவித்துப் பாருங்கள் என்று கூறிடும் பெரிய நிலையும் செல்வாக்கும் எனக்கு இல்லை.

என்னுடைய தூய்மையையும் நேர்மையையும் மட்டுமே நான் தகுதிகளாகக் காட்ட முடியும்.

தொகுதிகளுக்கான உடன்பாட்டு ஏற்பாட்டினுக்கு மட்டும், எனக்குப் பொறுப்பினை, மனமுவந்தும் நம்பிக்கையுடனும் பிற தோழமைக் கட்சிகள் அளித்திடுமானால், வெற்றிக்குப் பிறகு அமைக்கும் ஆட்சியிலே, கழகம் பிற கட்சிகளுக்கு முன் வரிசை இடமளிக்கும் என்ற உறுதியைக்கூட நான் தர விரும்புகிறேன்.

காங்கிரசை வீழ்த்தியான பிறகு அமைக்கும் ஆட்சியிலே கழகத்துக்கு, அதன் வலிவுக்கும் எண்ணிக்கைக்கும் தகுந்த அளவு பங்கும் இடமும் கிடைக்குமா என்பதிலே எனக்கு இருக்கக்கூடிய அக்கறையைக் காட்டிலும் காங்கிரசு எதேச்சாதிகாரத்தை வீழ்த்துவதற்கு ஏற்ற முறையில், பல்வேறு கட்சிகளுக்கிடையில் தொகுதிகளைப் பிரித்துத் தருவதிலே என் நோக்கத்திற்கு மற்றக் கட்சிகள் நம்பிக்கையுடன் இசைவு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதிலேதான் நான் மிகுதியான அக்கறை கொண்டுள்ளேன்.

என் இதயத்தைக் காணும்படி செய்திடும் வழி யாது என்பதறியாது திகைக்கின்றேன். காங்கிரசு எதேச்சாதிகாரத்தை வீழ்த்துவதற்கான போர் முறையை வகுத்திடுவதாகக் கருதி தொகுதிகளைப் பிரித்துக்கொள்வதிலே என் கருத்தினைப் பிற கட்சிகள் ஏற்றுக்கொள்வார்களானால், வெற்றி பெற்றிட முடியும் என்ற ஓர் உள்ளுணர்வு வலிவுடன் இருந்து வருகிறது. அதனை மெய்ப்பிக்க ஓர் வாய்ப்பு அளிக்கும்படி தோழமைக் கட்சிகளைக் கேட்டுக்கொள்கிறேன்.

அன்புள்ள
அண்ணாதுரை
11-12-66

என்னால் முடிந்ததைச் செய்கிறேன்!

தேர்தல் ஆர்வத்தை வரவேற்கிறேன்
“அரசியல் ஆர்வம் குன்றிடும் நாளே ஜனநாயக முறை அழிந்திடும் நாள்!’
கழகத்துக்கு அச்சாணி அருமைத் தம்பிகளே!
உள்ளன்பு முதலில்! உடன்பாடு பின்பு!
”திமுக இல்லாத நிலையில் தமிழகத்து அரசியலைப் புரிந்துகொள்ள முடியாது!’
வலக் கம்யூனிஸ்டுகள் காடுமலை கடந்து பேச வருகிறார்கள்!
ஆறு கட்சிகளுடன் தொகுதி உடன்பாடு கண்டுள்ளோம்!

தம்பி!

நாடெங்கும், வீடெல்லாம் தேர்தல் பற்றிய பேச்சொமேலோங்கி இருந்திட காண்கின்றாய். "சூடும் சுவையும் நிறைந்த பேச்சு’. காரணம் கணக்கு இணைந்த பேச்சு! முன்னாள் இந்நாள் நிலைமை விளக்கம் காட்டும் பேச்சு! அங்கு முன்போல் இல்லை! இங்கு முன்பு இருந்ததைவிட ஆர்வம் அதிகம் என்பனபோன்ற பேச்சுக்கள் எங்கும் ஒலித்துக்கொண்டுள்ளன. உமது கருத்து என்ன? எனக்கு நிலைமை நன்கு புரிந்ததால்தான் இவ்விதம் கூறுகிறேன். எவரெவரிடம் பேசவேண்டுமோ அவர்களிட மெல்லாம் பேசிப் பார்த்த பிறகே இந்த

முடிவுக்கு வந்துள்ளேன். இன்னின்னார் நம் பக்கம் நிற்பார்கள் என்ற உறுதியைப் பெற்ற பிறகே கூறுகிறேன்! என்ற இவ்விதமான பேச்சு பலப்பல! பொதுவாக பொதுத் தேர்தல் பற்றிய பேச்சு பலமாகிவிட்டது.

இது தவறு, தேவையற்ற பரபரப்பு, பிற அலுவல்களைக் கெடுத்திடும் காரியம், நாட்டின் பொதுப் பிரச்சினைகளைக் கவனிக்கும் போக்கைப் பாதிக்கும் நிலைமை இது. ஆகவே இது தீது என்று கூறுவார் உளர்.

ஆனால் மக்களாட்சி முறை பொருளும் பயனும் தரத்தக்கதாக இருந்திட வேண்டுமானால், பொதுத் தேர்தல் பற்றி, நாட்டு மக்கள் இவ்விதமான ஆர்வம் காட்டுவதும், காரணம் கண்டறிவதும், கணக்குப் போட்டிடுவதும் தேவை, கடமை, வரவேற்கத்தக்க நிலைமை என்ற கருத்துடையவன் நான் என்பதை அறிவாய்.

அக்கறையற்று, ஆர்வமற்று, கடமை உணர்ச்சியற்று, எப்படியோ ஆகட்டும், எவரோ அரசாளட்டும் என்ற போக்கு கொள்வது ஜனநாயகமாகாது; பொறுப்புணர்ச்சியு மாகாது. ஆகவே நாடெங்கும் மிகுந்துள்ள தேர்தல் ஆர்வத்தை நான் வரவேற்கிறேன்.

மலர்க்குவியலுக்குப் பக்கத்தில் நின்றுகொண்டே, மணம் தரும் இனிமையை உணராதிருப்பதுபோல, மழலை கேட்டும் புன்னகை காட்டிடாது இருப்பதுபோல, இசைக் கூடத்திலே அமர்ந் திருந்தும், இடித்த புளியாகக கிடப்பதுபோல, நாட்டு அரசியல் வாழ்வை உருவாக்கக்கூடிய பொதுத் தேர்தலுக்கான சூழ்நிலை உருவாகும்போது, நமக்கென்ன என்ற முறையிலே இருந்திடுவது; இயல்பை அறிந்திடாதார், இனிமை நுகர்ந்திட முடியாதாரின் போக்குக்கு ஒப்பானதாகும். அத்தகையோரின் தொகை குறைந்து

விட்டது. பொதுத் தேர்தல் என்பது நாம் மேற்கொள்ளவேண்டிய பொறுப்பு என்ற கடமை உணர்ச்சி மிகுந்திருக்கக் காண்கிறேன். வரவேற்கிறேன்.

பொதுத் தேர்தலில் பொது மக்கள் ஆர்வம் காட்டாதிருந்திடின், அது கட்டாயக் க-யாணம்போல, ஒப்புக்கு உண்ட விருந்துபோல, சுவையற்றதாகிப் போகும். தமிழகத்தில், எந்த முனையிலும் அந்த நிலை இல்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையிலும், அளவிலும் பொறுப்பு ஏற்றுக்கொள்ளும் ஆர்வம் காட்டுகின்றனர். தம்மை ஜனநாயகத்துக்குத் தகுதி உள்ளவர்கள் என்பதை மெய்ப்பித்துக் காட்டுகின்றனர் மகிழ்ச்சி.

அரசியல் ஆர்வம் குன்றிடும் நாளே ஜனநாயக முறை அழிந்திடும் நாளாகும் என்று ஆங்கில அறிஞனொருவன் சொன்னது முற்றிலும் உண்மை. இருப்புப் பிடியிலே நாட்டை வைத்துக் கொண்டுள்ள முடிமன்னன் நாட்களிலும், "கப்சிப்’ தர்பார் நடாத்தும் சர்வாதிகாரியின் நாட்களிலும், பொது மக்களுக்கு அரசிய-லே அக்கறை ஏற்படாது, ஆர்வம் எழாது. மாறாக சலிப்பும், சங்கடமும், அருவருப்பும், அச்சமும் எழும். யார் ஆண்டால் நமக்கென்ன? நாம் எப்படி ஆள வேண்டும் என்று கூறிட நாம் யார்? நாம் கூறினாலா கேட்கப் போகிறார்கள்? நல்லதைச் சொல்லப்போய் பொல்லாங்கு தேடிக் கொள்வானேன். எதையாவது பேசித் தொலைத்து எவனுடைய பகையாவது மூண்டுவிட்டால் நம் பாடல்லவா ஆபத்து! நினைத்து நினைத்து மனம் குமுறலாமே தவிர பேசி வம்பிலே சிக்கிக்கொள்ளலாகுமா! - என்ற இந்தவிதமான பேச்சுகள் உலவிடும் நாடு, ஜனநாயகத்துக்கு ஏற்ற நாடு அல்ல.

குருடன் எதிரே வைரக் கற்களைக் கொட்டி வைப்பது போன்றதாகும், அக்கறையும் ஆர்வமுமற்ற

மக்களிடம், ஆட்சி அமைத்திடும் அதிகாரச் சீட்டான ஓட்டுகளை அளித்து வைப்பது.

முறையாகத் தமிழ் கற்றிராதான் முன்பு நைடதத்தை நீட்டுவதற்குச் சமமாகும்.

கூந்தலற்றாள் கரத்தில் முல்லைச் செண்டு தருவது போன்றதாகும்.

வழுக்கைத் தலைப் பெரியவரிடம் வாசனைத் தைலம் தருவது போன்றதாகும்.

தமிழகம் அந்த நிலையில் இல்லை! அது குறித்து நாம் பெருமிதம் கொள்ளலாம்! ஜனநாயக உணர்வு நல்ல முறையிலே வளமாகி இருக்கிறது. இந்த நிலை எழ, தம்பி! நீ ஆற்றியுள்ள தொண்டு மகத்தானது. பாறைகளைப் பிளந்து கொண்டுவந்து குவித்து வைத்துள்ளாய்; இனி சிற்றுளிகொண்டு சிலை வடித்திட வேண்டும்! ஆடைக்கு ஏற்ற நேர்த்திமிகு நூல் குவித்துள்ளாய்; இனி வண்ணம் கூட்டி வகையாய் நெய்து அறுத்தெடுக்க வேண்டும். காலம் கனியும் நிலையை உண்டாக்கி வைத்துள்ளாய்; இனி சாறு பிழிந்தெடுத்து சத்துணவு ஆக்கிட வேண்டும்.

எடுப்பும் தொடுப்பும் மிடுக்குடன் அமைத்துவிட்டாய், இனி ஏற்றதோர் முடிப்பு, உன் பண்ணுக்கு அமைதல் வேண்டும். மலர் பறித்து, குடலையில் சேர்த்துள்ளாய். இனி மாலை தொடுத்திட வேண்டும்.

அதுவும் உன்னால் முடியும்.

உன்னைக் கொண்டுதான் அதனை முடித்திட முடியும்.

முடித்தளிக்க நீ இருக்கிறாய் என்ற துணிவுதான், என்னை ஆதிக்கக்காரரின் அறைகூவலை ஏற்றுக்கொள்ளச் செய்திருக்கிறது.

முடித்துத் தருவதற்கேற்ற அறிவாற்றல் உன்னிடம் நிரம்ப உளது என்பதை உணர்ந்திருப்பதால்தான் ஆதிக்கக்காரர்கள் அத்தனைப் படைக்கலன்களைத் தேடுகிறார்கள், போர் முறைகளை மாற்றுகிறார்கள்.

கடுங்கோபத்தால் தாக்கப்படுகிறார்கள்.

உன் நோக்கம் அவர்களுக்குப் புரிந்துவிட்டது.

உன் சொல் நாட்டு மக்கள் செவி புகுந்து மனத்திலே பதிந்துவிட்டது என்பதை அவர்கள் உணர்ந்துகொண்டுவிட்டனர்.

நாட்டு மக்கள் உன் பக்கம் திரண்டு நிற்பதை அவர்கள் காணுகின்றனர்.

அடங்கிக்கிடந்தவர்கள் ஒடுங்கிட மறுக்கின்றனரே! கட்டளைக்குக் காத்துக்கிடந்தவர்கள் காரணம் கேட்கின்றனரே! சொல்வதையெல்லாம் நம்பிக்கிடந்த வர்கள், பொருள் என்ன? பயன் என்ன என்று கேட்கத் தொடங்கிவிட்டனரே!

அச்சம் கப்பிக்கொண்டிருந்த கண்கள் இன்று கேள்விக் குறிகளாகிவிட்டனவே!

காலம் மாறிவிட்டதே! குட்டு வெளிப்பட்டு விட்டதே! - என்றெல்லாம் எண்ணுகின்றனர் ஏகாதிபத்தியப் போக்கினர். எரிச்சல் எழுகிறது, ஏதேதோ செயல்களின் மீது அவர்களின் மனம் பாய்கின்றது.

எந்த அளவுக்குக் காங்கிரஸ் எதேச்சாதிகாரிகள் தமது ஆதிக்கச் சுவையை இழந்திட மனமின்றிச் செல்லுகின்றனர் என்பதனைக் காணும்போது தம்பி! வியப்பு மிகுந்திடுகிறது, வேதனையும் பிறக்கிறது. உள்ளதைப் பறித்திடுவேன் உருத்தெரியாமல் ஆக்கிவிடுவேன் என்ற உருட்டல் மிரட்டலாலும்,

கடன்பட்ட நீயா கட்சி பேசுகின்றாய்? என் நிலத்தில் உழுதுகொண்டே எனக்கேவா எதிர்ப்பு காட்டுகின்றாய்? என் ஜாதிக்காரனாக இருந்துமா இடையூறு செய்கின்றாய்? குளம் அறியும், கொடுவாளறியும் என் கோபம் எவரெவரை என்ன கதி ஆக்கிற்று என்று. இருந்தும் இட்ட கட்டளையை மீறுகின்றாய், புலிமீது இடறிவிழுகின்றாய்! உன் தாய்மாமன் நாய்போல் என் முன்னால் நத்திக்கிடக்கின்றான்! நேற்றுத்தான் உன் பெரியப்பன் வேற்றூர் ஓடி இருக்கின்றான் எனக்கு அஞ்சி! நீ காட்டுகின்றாய் உன் எதிர்ப்பை, கடுகளவும் புத்தியின்றி. என்னை எதிர்த்தோர் எவர் பிழைத்தார்? எண்ணிப்பார்! எவனையும் பிடித்து ஏவி உன் ஆவி பறித்திடுவேன்! சட்டம் என்ன செய்யும்? சமூகமும் ஏது செய்யும்? பொன்னை உருக்கிடுவேன், உண்மையைக் கருக்கிடுவேன். போதுமான சான்று தேவை எனில் போய்க் கேள், கண்ணிழந்த காத்தானை, முப்பதே வயதிலே முதுமைக்கோலம் கொண்ட முத்தனை, நத்தத்து முனியனை, கரம் இழந்த கண்ணப்பன், காலொடிந்த காட்டேரி - இவர்களெல்லாம் கதை கதையாய்க் கூறிடுவார்; கேட்டுத் தெளிவு பெறு! - என்றெல்லாம் பேசிப் பணியவைத்திட முனைகின்றார். வெற்றியும் காண்கின்றார். அம்மட்டோ!

கழகத்தின் சார்பிலே வேட்பாளராக தம்பியொருவன் நிற்பான் என்றறிந்து காங்கிரசின் பெருந்தலைவர் சிலர் கூடி, அவன் அண்ணனையே வேட்பாளராக்கி மிரட்டு கின்றார். குடும்பத்துக்குள்ளே குழப்பம் மூட்டியேனும் பதவிப் பசி போக்க இரைதேடி அலைகின்றார். இத்தகைய சூழ்நிலையில், ஊர் மக்கள் உணர்ச்சி பெற்று, உண்மைக்குப் பரிந்துரைத்து உறுதியுடன் பணியாற்றிடாது இருப்பரேல், என்னாகும்? ஜனநாயகம் மடிந்துபோகும். உரிமை உணர்வு அழிந்தொழியும்! உண்டு உறங்கிடு! உன்

போன்றிருந்திட குழந்தைகளைப் பெற்றுத் தந்திடு! உரிமை உணர்ச்சி என்றோ, உலகப்போக்கென்றோ உற்ற துயர் போக்கிட வழி யாது கூறிடுக என்றோ, பேசிடாதே என்று கூறி, கருத்துக்கு விலங்கிடும் கயமை நிறைந்த சர்வாதிகார முறை தலை எடுக்கும். பிறகோ தலை நிமிர்ந்து நடந்திடவும் தடை பிறக்கும் மாக்கள் மக்கள் என்பதற்கான வேறுபாடு காட்டிட உள்ள "சிந்தனா சக்தி' செத்தொழியும் வாயுண்டு வயிறுண்டு என்ற நிலை நிலைக்கும். மக்கள் மாக்களாவர்! ஆகவே தம்பி! வர இருக்கும் பொதுத் தேர்தல் எழுப்பிடும் கேள்வி, எவர் அமைச்சர் என்பதல்ல, நாடு பெறப்போவது எதனை?

சர்வாதிகாரமா?
ஜனநாயகமா?

இதுவே கேள்வி, இதுவே பிரச்சினை! இதற்கே பொதுத் தேர்தல். இதனை நன்கு உணர்ந்திருப்பதாலேதான், இந்நாட்டு மக்கள் இன்று இத்தனை ஆர்வம் காட்டுகின்றார், பொதுத் தேர்தல் குறித்து.

எங்குத் திரும்பிடினும் இதே பேச்சு! அங்காடியாயிடினும் ஆலயமுற்றமெனினும், பூங்காவிலும், விழாக் கூடந்தனிலும், அலுவலகந்தன்னிலும், ஆற்றோர மணற்பரப்பிலும், எங்கும் இதே பேச்சு. இம் முறை கழகம் வெற்றிமிகப் பெற்றிடுமாமே! ஆட்சி அமைத்திடுமாமே! இயலுமா? - என்று கேட்பார் ஒருவர்; மக்கள் திரள் திரளாய்க் கூடுவதனையும் பேச்சாளர் தந்திடும் விளக்கந் தனையும் கணக்கெடுத்துப் பார்க்கும்போது, “ஆம்’ என்று கூறிடவே தோன்றுகிறது என்று விடை அளிப்பார் மற்றொருவர்; இன்னொருவர் ஏழெட்டு இலட்சத்தை எடுத்து அடித்தால் எளியோர்கள் வாய்பிளந்து, எல்லாம் மறந்துபோய் ஓட்டளித்து விடுவராமே; எதிர்வீட்டு எல்லப்பன், கதர்க் கடையின்

கணக்காளன்; எவரெவரோ தலைவர்கள் கூடிப் பேசினராம், கூறுகின்றான் திட்டத்தை என்று செப்புகின்றார்; காளை ஒருவன் கொதித்தெழுந்து கூறுகின்றான்,"இலட்சம் பல வரட்டும், இளித்துக்கிடந்திடப்போவதில்லை ஏழையரும்; இடுப் பொடிக்கத் துணிந்துவிட்டார் இறுமாப்பு மிக்கதோர் ஆட்சியினை; இதற்கான சான்று என்னிடம் பல உண்டு' என்று முழங்குகின்றான்.

இந்தத் தொகுதிக்கு இவர் முடிசூடா மன்னனாம்! இரு மூன்று தலைமுறையாய் இந்தக் குடும்பமே கோலோச்சி வருகிறதாம்! இவராகச் சொல்லவில்லை இழுத்துச் சென்று இம் முறை முடி உமக்கே, பிடியும் எழுதுகோலை, இங்கே ஓர் கையொப்பம், இனி மற்றக் காரியம் எம்மிடம் விட்டுவிடும்; வெற்றி உமக்குத்தான்; வேறோர் விஷயம் கூறுகின்றோம், வெளியே கூறிடாதீர்; மந்திரி வேலையொன்று உமக்கென்று உண்டு! போமய்யா போம்! அணைக்க வருகின்றாள் "அதிர்ஷ்டம்' எனும் மங்கை! யோக பலன் உமக்கு அதுபோல் அமைந்துள்ளது என்று கூறி, உல்லாச புரி வாழும் செல்வப்பிரபு இவரை,"தலைவர்' கொண்டு வந்து தந்துவிட்டார் - என்றெல்லாம் பேச்சு, ஆளுங் கட்சியினர் கூடிடும் இடந்தன்னில்.

மாளிகையிலா உள்ளார் நம் தோழர்? இல்லை! அவர் இல்லம், சிறிய விடு, கூரை, கொட்டகை; நடைபாதையுங் கூடத்தான்; நமது நிலை நாட்டாட்சி உள்ளவிதம் காட்டிடுவது அறிவாய்.

விந்தை என்னவெனில் தம்பி! அந்தத் தோழர், விழிப்புடன் உள்ளார்; எழுச்சி பெற்றுள்ளார்; பணம் படைத்த சீமான் முன் பணிந்திருக்கும் காலம் அல்ல இது; பணம் அங்கு குவிந்த விதம் அறிந்துள்ளோம்; எமது உழைப்பன்றோ இவரை ஆக்கிற்று சீமானாய்; ஓடப்பராய் நாங்கள் இருந்திடச் செய்தவரே இந்த

உயரப்பர், அறிவோமே; இவர்போன்றார் இருப்பைப் பெருக்கிக் கொள்ளத் தேடுகின்றார் ஆட்சி, பதவி; இவர்க்கா ஓட்டளிப்போம்! இவர்க்கு ஓட்டளித்து இழி நிலையைத் தேடிப்பெற, நாங்களென்ன அறிவை இழந்தவரோ? இல்லை! இல்லை! உள்ள செல்வம் அறிவு ஒன்றேதான்! அதனை இழந்திடவா துணிந்திடுவோம்? அறிவையும் இழந்திடின் என்னாகும்? அவர் கால் தனக்கு நாங்கள் தூசு ஆவோம்! மானம் அழித்திடுவார், மாக்களாக்கிடுவார்! விவரம் புரிந்துகொண்டோம்; விளக்கம் பெற்றுவிட்டோம்; நாங்கள் வீழ்ந்து அழிவதற்கு நாங்களா ஆழ் குழியை வெட்டிடுவோம்? இல்லை! இல்லை! ஓட்டு என்ற ஒன்றன்றோ ஆணவக் கோட்டையைத் தகர்த்திட நாங்கள் பெற்றுள்ள வேட்டு! - என்றெல்லாம் பேசுகின்றார்

அவர் விழி பேசும் மொழி அறியும் பயிற்சியினால் கூறுகின்றேன்.

கழகத் தோழர்கள் நன்கு அறிந்துள்ளார் கனதனவான்களெல்லாம் காங்கிரசில் உள்ளார் என்பதனை. இரும்புச் சீமானும் கரும்புக் கனவானும், பட்டம் சில பெற்ற பட்டணத்துப் பிரபுவெல்லாம் கொட்டம் அடிக்கின்றார் காங்கிரசைக் கொலு மண்டபமாகக் கொண்டு என்பதனை அறிந்துள்ளார். எனினும் பார் தம்பி! அவர்க்குள்ள ஜனநாயக உணர்வை!

எதிர்த்து நின்றிட இயலுமா என்று கேட்கின்றேன். என் கடமையன்றோ! என்கின்றார்.

ஊரில் பெரியவராம் உள்ள செல்வம் குன்றனவாம், அவருக்கு எதிராக நின்றிட அச்சம் எழவில்லையோ என்று கேட்கின்றேன்; பாமர மக்கள் பாராளும் காலம் அண்ணா! என்ன வேடிக்கை இது; சொன்னது நீ அண்ணா! உனக்கே நான் கூறிடவா? என்று கேட்கின்றான் ஓர் தம்பி; சிரிப்பை அடக்கிக்

கொள்ள வெகு பாடுபடுகின்றேன்.

வேண்டுமென்றே எவரேனும் மும்முனைப் போட்டி தனை மூட்டிவிடின் என் செய்வாய் என்கின்றேன்; நாமாகச் சென்று வீணுக்கு மும்முனைப் போட்டியினை மூட்டிட லாகாது; ஆயின் அண்ணா! அச்சம் ஊட்டுதற்கும், அலைச்சல் உண்டாக்குதற்கும் மும்முனைப் போட்டியினை எவரேனும் மூட்டிவிட்டால், அது கண்டு மூலைக்குச் சென்றிடவா! இல்லை அண்ணா களம் நிற்பேன் என்கின்றான் ஓர் காளை; கடமை அறிந்துள்ளான்.

ஆய்வுக் குழுவினராம் அருமைத் தம்பியர் நாடெங்கும் கண்டறிந்த "சேதிகளை' இரவெல்லாம் கூறினர், கேட்டு இன்புற்றேன்; இருநூற்றுச் சொச்சம் தொகுதிகளிலும் நாம் வேட்பாளர் பெற்றிடலாம், உண்டு அதற்கான உறுதி; ஓட்டுகள் மொத்தத்தில் எந்த அளவு பெற்றிடலாம் என்ற கணக்கு மட்டும் போதும் என்பது நம் திட்டமெனின் எங்கும் நின்றிடலாம், எங்கும் உளர் நம் தோழர். எதிர்ப்புக்கு அஞ்சாதார்; விளைவுபற்றிக் கவலை கொள்ளாதார் என்கின்றார். ஓட்டுகள் மொத்தமாகப் பெற்றிடுவது மட்டுமல்ல நம் திட்டம். மற்றக் கட்சியினருடன் கலந்து உரையாடி, கணக்கெடுத்து காங்கிரசாட்சியினை வீழ்த்துதற்கு ஏற்ற முறையான தொகுதி உடன்பாடு காண வேண்டும் என்பதற்கே இன்னின்ன தொகுதிகளை இன்னின்ன கட்சிகட்கு என்று குறித்திட இசைகின்றோம் என்கின்றார்.

ஆய்வுக் குழுவினர் அளித்த விவரம், விளக்கம், அவர் காட்டும் வாதத் திறமை, தம்பி! இரவெல்லாம் நான் கேட்டு இனிய விருந்துண்டேன். ஒன்றைவிடவில்லை, ஒப்புக்குக் கூறவில்லை, உண்மை கண்டறிய திறம் காட்டி உழைத்துள்ளார்; நன்றி அவர்கட்கு; பெருமகிழ்ச்சி பெற்றுள்ளேன்.

ஒன்றில் மட்டும் அவர்கள் உறுதி மிகுந்திருக்க

காண்கின்றேன். ஒரு தொகுதி தருவது மற்றவர்க்கு என்றாலும் எளிதில் இசைய மறுக்கின்றார்; நானே மறுக்கொணாத காரணம் காட்டுகின்றார்; இறுதியில், தோழமைத் தொடர்பு பெற தொகுதி உடன்பாடு பெற இது தேவை என்பதனை வலியுறுத்தும்போது "ஆமண்ணா' என்கின்றார். அப்பப்பா! அவர்களிடம் என் கருத்தைப் புகுத்திடுதல் எளிதல்ல! ஆயினும் தம்பி! அவர்களன்றோ இயக்கத்து அச்சாணி! அவர் பொறுப்பும் அருந் திறனும், ஓயா உழைப்புமன்றோ நமக்கோர் கழகத்தை - இல்லை தம்பி! - நாட்டுக்கோர் கழகத்தைத் தந்துளது. ஆகவே அவர் சொல்லை நான் கேட்குங் காலை தனிச் சுவையே காண்கின்றேன். எவர்க்கும் கிட்டா ஆற்றல் மிக்கோரைப் பெற்றுள்ளேன் என்பதனால் இணையற்ற பெருமிதமும் கொள்கின்றேன்.

இத்தனை விழிப்புடனே, பொறுப்புடனே பணியாற்றிக் கட்சி பலவற்றுடனும் கலந்து பேசி, கட்டத்திற்குக் கட்டம் என் கருத்தைக் கேட்டுப் பெற்று கட்சி பலவற்றுடனே கண்டுள்ளார், கனிவு மிகு தொகுதி உடன்பாடு; அதனை நான் ஏற்றுக் கொண்டுள்ளேன். மாவட்டச் செயலாளர், மற்றுமுள்ள கழகத்துக் காவலர்கள் ஒப்பம் பெற்று, எனினும் முழு மகிழ்ச்சி பெற மாட்டாய்; ஏனண்ணா இந்தத் தொகுதியைக் கொடுத்திட்டீர்! என்ன கோபம் எங்களிடம் உழைத்து வெற்றிதனை உருவாக்கி இருப்போமே! உடைத்துப் போட்டீரே எமது விருப்பமதை என்றெல்லாம் கூறிடும் தம்பியர்கள் கண்ணெதிரே தெரிகின்றார், அவர் விடுத்த மடல் பலவும், இதோ என் அருகில்! ஆயினும் தம்பி! தொகுதி உடன்பாடு எனில், சில தொகுதி நாம் கொடுத்திடுவது, சில நாம் பெறுவது என்பதன்றோ பொருள்! எல்லாத் தொகுதியும் நமக்கே என்பதா? அறிவாயன்றோ. எந்தத் தொகுதியினை இழப்பதெனினும் அந்த தொகுதியினர் இழந்திட மனம் ஒப்பார்; வேறோர் தொகுதியினைக்

காட்டிடுவார்; இது இயற்கை. அம்முறையில் வருத்தம் தெரிவித்தோர்க்கு, தான் கொண்ட வருத்தங்களை அடக்கிக்கொண்டு மதுரை முத்து ஓர் விளக்கம் தந்திட்டார்.

வாதம் பல புரிந்தேன். வந்தது வரட்டும் போவது போகட்டும் என்றா நான் இருந்திட்டேன்? ஆயினும் நிலைமையை உணருகின்றேன். கட்சி பலவற்றுடனே தொகுதி உடன்பாடு காண்பதெனின் எளிதான காரியமா, இயலுமா உம்மாலே என்றெல்லாம் காங்கிரசின் தலைவர் இடித்திடித்துப் பேசி வந்ததனை அறிவாயே! இத்தொகுதி போய்விடுமே அந்தத் தொகுதி கிடைத்திடாதே என்பதெண்ணித் தொகுதி உடன்பாடு காணமுடியாமல், முறிந்துபோயின், என் சொல்வார்? ஏளனம், எங்கெங்கும் எழுமன்றோ! எங்கிருந்து வந்திடும் இவர்கட்கு உடன்பாடு காண்பதற்கான அறிவு, ஆற்றல்? எமக்கு அப்போதே தெரியும், பேச்சு வெற்றி தராதென்று. அதற்கு ஏற்ற பக்குவம் தெரிந்தவரே அண்ணாதுரை! பாவம், விவரம் அறியாதவன்; பேசுவான் ஏதேதோ! நாலு கட்சியினர் கூடிப்பேசி உடன்பாடு கண்டிட வைக்கும் ஆற்றல் ஏது அவனுக்கு? அவன் என்ன, கேரளத்து நம்பூதிரிபாதோ? அவர் வெற்றி கண்டார் உடன்பாடு திட்டத்தில். புலியைப் பார்த்துப் பூனை சூடிட்டுக்கொண்ட கதைபோல, நானும் தொகுதி உடன்பாடு காண்பேன் என்று மேடையெல்லாம் கூறி வந்தான், மேதை இவன்! முடிந்ததோ இவனாலே? முறிந்ததே திட்டம்!! என்றெல்லாம், கேவலம் பேசுவர்; ஊர் சிரிக்க ஏதேதோ மூட்டுவர்; நம் அண்ணனையும் ஏசுவர்; ஆகவே கேரளத்து நம்பூதிரிபாத் பெற்ற உடன்பாடு வெற்றிபோல, நாமும் வெற்றி பெற்றிடும் ஆற்றல் உண்டு என்பதனை நாடு காண்பதற்கு நாம் பாடுபடக் கடமை உண்டு. அதற்கேற்ப உடன்பாடு திட்டம் காண முனைந்து நின்றோம். சில தொகுதி நமக்கு இல்லை என்றாலும் உடன்பாடு காண்பதிலே

வெற்றி பெற்றோம்; இதிலே தோல்வி காண்போம் துளைத்தெடுத்துவிடலாம் என்று காங்கிரசுத் தலைவர்கள் போட்டிருந்த திட்டத்தை பொடிப் பொடியாய் ஆக்கிவிட்டோம்; ஆகவே அமைதிகொள்; அண்ணன் மேற்கொள்ளும் முயற்சி எல்லாம் நமது மாண்பினை உயர்த்திவிடும், நோக்கம் ஈடேறச் செய்திடும், வெற்றிக்கு வழி காட்டும், அறிந்து இருக்கின்றோமே இத்தனை ஆண்டுகளாய்; எடுத்துக் கூறத்தான் வேண்டுமா அந்த விவரமெல்லாம்?

இதுபோலப் பேசினார் முத்து, குறை கண்ட தோழரிடம். என்னிடமோ ஏ! அப்பா! என்னென்ன விதமான கோபமெல்லாம் காட்டினார். எல்லாம் எதன் பொருட்டு? கழகத்தின் வலிவும் பொலிவும் மிகுந்திட!

தம்பி! நாம் மேற்கொண்ட தொகுதி உடன்பாடு வெற்றியே தந்துள்ளது.

காங்கிரசை எதிர்த்து நிற்கும் பிற கட்சிகளுடன் தொகுதி உடன்பாடு கொள்ள வேண்டும் என்ற முயற்சி சென்ற பொதுத் தேர்தலின்போதே மேற்கொள்ளப்பட்டது. ஆனால் முடியாது போயிற்று. முஸ்லீம் லீக் மட்டுமே நம்முடன் தோழமைத் தொடர்பும் தொகுதி உடன்பாடும் செய்துகொள்ள வாய்ப்புக் கிடைத்தது.

சென்ற பொதுத் தேர்தலின்போது தொகுதி உடன்பாட்டுக் காக, நம்முடன் கலந்து பேசிய கட்சிகள், லீக், சுதந்திரா, கம்யூனிஸ்டு கட்சி.

அப்போதே நம்முடன் கலந்து பேசுவதும், தோழமை கொள்வதும், தொகுதி உடன்பாடு செய்திடுவதும் கூடாது - கொள்கைக்கு ஒத்து வராது - தத்துவ ரீதியாகவேகூட அது தீது - என்ற கருத்துக்கொண்ட பகுதி கம்யூனிஸ்டு கட்சியிலே இருந்தது. மேடைகளிலேயும் பேசினர்; இதழ்களிலும் எழுதினர்; காரசாரமாக; கண்டிப்புடன். ஆயினும்

தயக்கம், தடுமாற்றம் எனும் தடைகளை மீறிக்கொண்டு அவர்கள் கழகத்திடம் பேச இசைந்தனர்.

இதற்கிடையில் நாட்கள் வேகமாக உருண்டோடிக் கொண்டிருந்தன.

கழகத் தோழர்கள் கசப்புணர்ச்சி கொள்ளும் விதமாகவும், மனம் புண்படும்படியாகவும் கம்யூனிஸ்டு கட்சியினர் பேசியும் எழுதியும் வந்தனர்.

இதன் காரணமாகத் தொகுதி உடன்பாடு பற்றிய பேச்சு துவக்கப்பட்டபோதே ஒரு கனிவு காணப்பட வில்லை.

கட்சிகளாகட்டும், தனித்தனியானவர்களாகட்டும், தோழமை கொள்ளவேண்டுமென்றால், தொகுதி உடன்பாடுகொள்வதென்றால்.

நட்பு முறை, ஒருவரை ஒருவர் மதித்திடுதல்.

ஒரு கனிவு, ஒரு இனிமை, சூழ்நிலையாக அமைந்திட வேண்டும்.

மிரட்டல் வற்புறுத்தல் வறட்டுவாதம்.

இவைகளின் பிடியிலே சிக்கிக்கொண்டால், தோழமைத் தொடர்பு ஏற்பட முடியாது.

கழகத்தைப்பற்றிக் கேவலமாகப் பேசுவதுடன், உள்ளூர ஒரு வெறுப்புணர்ச்சியையும் வைத்துக்கொண்டு "உடன்பாடு' காண்பதென்பது முடியாத காரியம்;

கூடாத காரியமுங்கூட.

ஒப்புக்கு ஒரு உடன்பாடு ஏற்படுத்திக்கொள்வது இடையிலே முறிவைத்தான் மூட்டிவிடும்.

கழகத்துடன் கம்யூனிஸ்டு கட்சியினால் சென்ற தடவை உடன்பாடுகொள்ள முடியாமல் போய்விட்டதற்குக் காரணம், கழகத்திடம் நட்போ, மதிப்போ துளியுமற்ற மனப்போக்கைக் கம்யூனிஸ்டு கட்சி வைத்துக்கொண்டிருந்ததுதான்.

லீகுடன் நேசத் தொடர்பு நீண்டகாலமாக இருந்து வருவதாலே தொகுதிபற்றிய பேச்சு கனிவான ஒரு தொடர்பிலே ஒரு ஏடு என்ற விதமாக இருந்தது. உடன்பாடு ஏற்பட்டது.

உள்ளன்பு முதலில், உடன்பாடு பிறகு என்ற நிலை கண்டோம்.

கம்யூனிஸ்டு கட்சியினரோ, உள்ளத்தில் கசப்பை வைத்துக்கொண்டே உதட்டளவு உறவுகாட்டிப் பேசினர். உடன்பாடு ஏற்படவில்லை.

சுதந்திரக் கட்சியின் நிலை இதுபோல இல்லை. தொகுதி உடன்பாடு பற்றிய பேச்சு எழுவதற்கு முன்பே, ஒரு தோழமைத் தொடர்பு அமைந்திருந்தது.

தொகுதிகள் பங்கிடுவதற்கான பட்டியல் இரு கட்சிகளுக்குமிடையில் உடன்பாடு காண்பதைத் தடுத்துவிட்டது.

என்றாலும், ஒரு கட்சியை மற்றோர் கட்சி மதித்ததாலும் ஒரு கட்சிக்கும் மற்றோர் கட்சிக்கும் இடையில் நேசத்தொடர்பு அமைந்திருந்ததாலும், உடன்பாட்டுத் திட்டத்திலே ஒத்த கருத்து ஏற்பட முடியாதுபோயிற்று என்றாலும், காங்கிரசை வீழ்த்த வேண்டும் என்ற பொதுத் திட்டத்திலே கருத்து வேறுபாடு எழவில்லை. உடன்பாடு இல்லை என்று ஆகிவிட்ட பிறகு ஒரு கட்சியை மற்றோர் கட்சி மதிப்புடன் நடத்த முடிந்தது. உள்ளன்பு மிகுந்திருந்தது.

தம்பி! இதனால்தான், பொதுத் தேர்தல் முடிந்த

பிறகு சுதந்திரக் கட்சியும் கழகமும் பேதம், பகை ஏதுமற்ற நிலையில், உடன்பாடு கொள்ளவில்லை என்ற நினைப்புமற்று, பொதுக் காரியத்தில் ஒன்றுபட்டுப் பணியாற்றி வர முடிந்தது.

இந்த நல்ல சூழ்நிலை, இம் முறை உடன்பாடு பற்றிய பேச்சுக்குத் தேவைப்படும் கனிவினைத் தந்திருந்தது. ஆகவேதான் சுதந்திரக் கட்சியுடன் பொருத்தமான ஒரு தொகுதி உடன்பாடு செய்துகொள்ள முடிந்தது.

கம்யூனிஸ்டு கட்சி சென்ற தேர்தலிலே உடன்பாடு செய்து கொள்ளத் தவறிவிட்டது மட்டுமல்ல, பழையபடி கழகத் தோழர்கள் கசப்புணர்ச்சி கொள்ளும் விதமாகவும், மனம் புண்படும் விதமாகப் பேசவும் எழுதவும் தலைப்பட்டது. தொகுதி உடன்பாட்டுக்கான முயற்சி எடுத்துக்கொண்டபோது கழகம் ஒரு பொறுப்பான கட்சியாகத் தென்பட்டது. ஆனால் அதே கம்யூனிஸ்டு கட்சியின் கண்களுக்கு, பிறகு கழகம்

பிற்போக்குக் கட்சியாக
வகுப்புவாதக் கட்சியாக
அரை வேக்காட்டுப் பேர்வழிகளின் கட்சியாக
மொழிவெறி கிளப்புவோரின் கட்சியாக
கொள்கையற்ற கட்சியாக
திட்டமற்ற கட்சியாகத் தெரியலாயிற்று.

தொடர்ந்து கம்யூனிஸ்டு கட்சி கழகத்தைக் கேவலப்படுத்தும் செயலைச் செய்துகொண்டு வந்ததுடன், காங்கிரசுக் கட்சியுடன் குலவவும், கூட்டு முயற்சிகளில் ஈடுபடவும் முனைந்திருந்தது.

தேசிய அணி - முற்போக்கு அணி - என்ற பல பெயரிட்டுக்கொண்டு, காங்கிரசுடன் உறவாடிக்கொண் டிருந்தது; கழகத்தைப் பல முனைகளிலும் எதிர்த்துக் கொண்டு வந்தது.

சில தொகுதிகளை விட்டுக் கொடுப்பதா வேண்டாமா என்ற விஷயமான கவலை ஏற்படுவதைவிட, எந்த ஒரு கட்சியிலும், அதிலும் அதற்காகத் தமது உயிரையும் கொடுக்கத் துணிந்து பணியாற்றி வருபவர்களுக்கு, மற்றோர் கட்சி பேசிக்கொண்டு வரும் கேவலத்தைத் தாங்கிக்கொள்வதுதான் அதிகக் கலக்கத்தைக் கொடுக்கும்.

நண்பரே! இந்த மூட்டை பளுவாக இருக்கிறது. தூக்கிப்போட ஒரு "கை' கொடுத்து உதவும் என்று கேட்கும்போது, உதவி செய்திடத் தோன்றுகிறது. ஆனால், ஏ! பயலே, இந்த மூட்டையைத் தூக்கடா, பளுவு அதிகமாக இருக்கிறது என்று கூப்பிட்டால், மானமுள்ள எவனும் வரமாட்டானல்லவா?

எத்தனையோ தத்துவ ஏடுகளைப் படித்தவர்கள் என்கிறார்கள் கம்யூனிஸ்டுகளை. ஆனால் எனக்குத் தெரிந்த அளவில் அவர்கள் உளநூல் படிப்பதில்லை; ஏடுகளைக் கூட வைத்துக்கொண்டிருக்கக்கூடும்; ஆனால் மக்களை உளநூற்களாகக் கொள்வதில்லை.

இந்த நிலை காரணமாக, சுதந்திரக் கட்சியுடன் நேசத் தொடர்பு வளர்ந்துகொண்டு வந்த அதே காலத்தில், கழகத் தோழர்களுக்குக் கம்யூனிஸ்டு கட்சியுடன் கசப்பு அதிகமாகிக் கொண்டு வந்தது.

இந்தக் கசப்புணர்ச்சியை அதிக அளவிலும், மிக மும்முரமாகவும் வளர்த்துக்கொண்டும் வந்த முன்னணியினரே இன்றைய வலதுசாரி கம்யூனிஸ்டு கட்சியில் நிரம்பி இருக்கிறார்கள்.

இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சியினர் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாக கழகத்திடம் நெருங்கிய தொடர்பு கொள்ளவும், நேசம் விரும்பவுமான நிலைமையை ஏற்படுத்திக்கொண்டனர். கழகத்தின்

கொள்கைகளையும் திட்டங்களையும் ஆய்ந்து பார்த்து இவைகள் முற்போக்கானவை என்பதை உணர்ந்தனர். ஊருக்கும் எடுத்துரைத்தனர். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பிற்போக்குக் கட்சி என்று கூறுவது சரியல்ல, முறையல்ல என்று வெளிப்படையாகவே பேசலாயினர். திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலைமையைக் கணக்கில் எடுக்காமல், தமிழகத்து அரசியலைப் புரிந்துகொள்ள முடியாது என்ற முடிவுக்கு வந்தனர்.

யார் மேற்கொள்ளுகிற நடவடிக்கையானாலும், முற்போக்கு நடவடிக்கையென்றால் அதிலே பங்குகொள்ள திராவிட முன்னேற்றக் கழகம் தயங்கியதில்லை என்பதனை அக மகிழ்ச்சியுடன் எடுத்துக் காட்டினர்.

சுருக்கமாகக் கூறுவதானால், தோழமைத் தொடர்பு கொள்வதற்கும், தொகுதி உடன்பாடு கொள்வதற்கும், இடதுசாரி கம்யூனிஸ்டுகள் கழகத்திடம் வருவதற்கு முன்னாலேயே, அதற்குத் தேவைப்படும் பாதையை ஒழுங்காக அமைத்துக்கொண்டனர். அதனால், தொகுதி உடன்பாடு குறித்து கழகத்துடன் இடதுசாரி கம்யூனிஸ்டுகள் பேச்சு நடத்தியபோது, ஒருவரை ஒருவர் மதித்து நடந்துகொள்ளும் இரண்டு நண்பர்களுக்கிடையே நடந்திடும் உரையாடலாக அமைந்தது.

உண்டா? இல்லையா? அதிகம்! குறைவு! இந்த இடம், அந்த இடம், இதற்கென்ன நியாயம்? அது எப்படிப் பொருந்தும்? என்ற விதமான மோதல்கள் இருந்தன. என்றாலும் மகிழ்ச்சி தரத்தக்க சூழ்நிலை இருந்தது.

இந்தச் சூழ்நிலை காரணமாக கழகத்துக்கும் இடதுசாரி கம்யூனிஸ்டுகளுக்கும் தேர்தல் உடன்பாடு வெற்றியுடன் அமைந்துவிட்டிருக்கிறது.

இதற்கு நேர்மாறாக, வலதுசாரிகள் நடந்துகொண்டு வந்தனர். சொல்லப்போனால் இந்த இரண்டு ஆண்டுகளாக வலதுசாரி கம்யூனிஸ்டுகள் கழகத்தைக் கேவலப்படுத்திப் பேசுவதைத் தங்களின் நேர்த்திமிக்க கலையாக்கிக் கொண்டனர். பற்பல ஆண்டுகள் முயன்றாலும் துடைக்கப்பட முடியாத அளவுக்குப் பகை உணர்ச்சியை மூட்டிவிட்ட வண்ணம் இருந்தனர்.

கழகத்தைக் கேவலப்படுத்துவதுடன் காங்கிரசுடன் குலவுவதையும் தங்கள் திட்டமாக்கிக்கொண்டனர்.

காங்கிரசுடன் சேர்ந்து கூட்டுக் கூட்டங்கள் நடத்துவதிலே மும்முரமாயினர்.

கழகத்தைத் தாக்கிப் பேசும் பகுதியையே காங்கிரஸ், இவர்களிடம் ஒப்படைத்துவிட்டது என்று நாடு கருதத்தக்க முறையிலே பேசி வந்தனர்.

காங்கிரசுடன் மட்டுமல்ல கழகத்தை எதிர்த்திட யார் புறப்பட்டாலும் உடனே “அட்சதை' போட்டு”ஆசீர்வதிக்கவும்' கைலாகு கொடுத்து வரவேற்கவும், கூட்டுச் சேர்ந்து கேவலம் பொழியவும் முனைந்தனர்.

இவ்வளவையும் தம்பி! நான் மறந்துவிட்டுத்தான் அவர்களை அழைத்தபடி இருந்தேன் தேர்தலில் ஒன்றுபட்டுப் பணியாற்ற, காங்கிரசை வீழ்த்த, தொகுதி உடன்பாடு காண வருக! என்று கேட்டுக்கொண்டேன். என் சொல் இவர்கள் செவி புகவில்லை என்பது மட்டுமல்ல, எங்களை யார் என்று அறியாமல், எமது தீவிரம் புரியாமல், பாரம்பரியத்தைத் தெரிந்துகொள்ளாமல், தங்களுடன் கூட்டுச் சேரும்படி அழைக்கிறார்களே தீனா மூனாக்கள், வேடிக்கையாக இருக்கிறதே! - என்று கேலி பேசினர்.

தேர்தல் வரப்போகிறது ஓராண்டில் என்ற நிலை பிறந்ததும், எண்ணத்தை அல்ல - சொற்களைக்கூட அல்ல - குரலைச் சிறிது மாற்றிக்கொண்டு பேசலாயினர்; கூட்டுச் சேரவேண்டுமா? சேருவோம்! ஆனால் பிற்போக்குக் கட்சியான சுதந்திராவுடன் உள்ள உறவை அறுத்துக்கொள்! வகுப்பு வாதத்தை விட்டுவிடு! பிறகு சேரலாம்! - என்று பேசலாயினர்.

குளித்துவிட்டு, தீட்டுப் போக்கிக்கொண்டு வீட்டுக்குள்ளே காலடி எடுத்து வை என்று வைதிகர்கள் கூறுவார்களே அந்தப் பாணியில்.

பொறுத்துக்கொண்டேன். சில இதழ்கள்கூட என்னைக் கேலி செய்தன. துளியாவது இந்த அண்ணாத்துரைக்கு ரோஷம் இருக்கிறதா? வலதுசாரிதான் கூட்டுச் சேர முடியாது என்று பேசுகிறான், உன்னைக் கண்டபடி ஏசுகிறான், வா! வா! என்று கூப்பிட்டபடி இருக்கிறானே, சே! - என்று எழுதின. பொறுத்துக் கொண்டேன்.

ஆனால் அப்போது விடாமல் நான் கூறிக்கொண்டு வந்தேன், கடைசியில், இந்த வலதுசாரிகளும் கழகத்தின் தோழமையை நாடி வரத்தான் போகிறார்கள் என்று.

அதனையும் கேலி பேசினர் வலதுசாரிகள். ஆனால் அவர்களின் பிடிவாதத்தை அவர்களே மெள்ள மெள்ள கலைத்துக்கொள்ள வேண்டி நேரிட்டது.

உங்களுடனா? நாங்களா? என்ன துணிச்சல் எங்களை அழைக்க!

உங்களுடனா? எங்களையா அழைக்கிறீர்கள்? எங்கள் பாரம்பரியம் தெரியுமா?

வீரதீரம் தெரியுமா? தியாகத் தழும்பு தெரியுமா? எங்களையா? சுதந்திராவைப் பக்கத்தில் வைத்துக்

கொண்டா?

எங்களையா? சுதந்திராவுடன் உள்ள உறவைத் துண்டித்துக்கொள், அப்போது பார்க்கலாம்.

இந்த விதமான வீம்புடன், வழக்கமான தூற்றுதல் கழகத்தின்மீது.

அந்தச் சமயம் பொன்மலை சென்றிருந்த நான், பொதுக்கூட்டத்திலே கனிவுடன் அழைத்தேன் தோழமைத் தொடர்பு கொள்ளும்படி. கணக்குக் காட்டியும் பேசினேன். அந்தப் பக்கத்து வலதுசாரித் தலைவரான கலியாணசுந்தரம் அவர்களேகூட கருதவில்லை தி. மு. க. ஒத்துழைப்பு இல்லாமல் இம் முறை வெற்றிபெற முடியாது என்று.

சீறினார்! சிம்ம கர்ஜனை எழுப்பினார்! எனக்கா உன் ஒத்துழைப்பு? யாருக்கு வேண்டும்? யார் கேட்டார்கள்? ஒருவருடைய ஒத்துழைப்பும் வேண்டாம், அதிலும் உன்னுடைய ஒத்துழைப்பைப் பெற்றா நான் ஜெயிக்க வேண்டும்? அது தோல்வியைவிடக் கேவலம். உன்னுடைய ஒத்துழைப்பு இல்லாமல் நாற்பதாயிரம் ஓட்டு வித்தியாசத்தில் நான் ஜெயிப்பேன் என்று பேசி இதயக் கதவைத் தாளிட்டுக்கொண்டார்.

நம்ம முதலியார் இன்று அண்ணாத்துரையை வெளுத்துக் கட்டிவிட்டார் என்று கொண்டாடினார்கள் வலதுசாரிகள்.

எனக்கு உள்ளூரச் சிரிப்பு - இதே "முதலியார்'தான் சென்ற தடவை தமிழ்நாடு முழுவதற்குமான உடன்பாடு பற்றிய பேச்சு முறிந்துபோன பிறகு, "தன் வரையில்' மாவட்ட மட்டத்தில் கழகத்தோடு ஒப்பந்தம் செய்துகொண்டவர்.

இவருடைய ராஜதந்திர முறையை மணலி, தஞ்சை வரையில் என்று

கடைப்பிடித்திருப்பாரானால், பாராளுமன்ற உறுப்பினராகி இருந்திருப்பார். மறுத்து நின்றார். அதனாலேயே எனக்கு அவரிடம் மதிப்புகூட வளர்ந்தது. தனக்கென்று ஒரு ஏற்பாடு செய்துகொள்ளும் நிலைமைக்கு அவர் தம்மைத் தாழ்த்திக்கொள்ளவில்லை. மிகக் கடுமையாகக் கலியாணசுந்தரம் அவர்கள் பேசிய பிறகும் நான் சொல்லிக்கொண்டு வந்தேன்,

பாருங்கள், வலதுசாரிகள் கழகத்தோடு உடன்பாடு தேடி வருகிறார்களா இல்லையா என்று.

நான் எதிர்பார்த்தபடி வலதுசாரிகளின் போக்கிலே மாறுதல் ஏற்பட்டது. கூடிப் பேசினார்களாம்! தத்துவ விளக்கம் - யதார்த்த நிலைமை அறிதல் போன்றவைகளின் மூலம், வெகு எளிதாக இடதுசாரிகள் முன்னதாகவே தெரிந்துகொண்ட "காலகட்ட' கருத்தைக் கண்டுபிடித்து,

சுதந்திராவுடனோ வேறு யாருடனோ தி. மு. க. உறவு வைத்துக்கொண்டிருந்தாலும் கவலையில்லை, பொருட்படுத்தவில்லை. ஆனால், தேர்தல் உடன்பாடு செய்வதானால் அது ஒரு குறைந்தபட்சத் திட்டத்தின் அடிப்படையில்தான் அமைய வேண்டும், அதற்குச் சம்மதம் தெரிவித்தால் பிறகு பேசலாம் என்றார்கள்.

நான் அதற்கும் இணங்கவில்லை. காரணம் ஆணவம் அல்ல. நான் விடுத்திடும் தோழமை அழைப்பு - எந்தக் கட்சிக்காக இருப்பினும் - கொள்கை அடிப்படையில் அல்ல; தொகுதி நிலைமை அடிப்படையில். ஆகவே இதற்கு அடிப்படைத் திட்டம் எதுவும் தேவை இல்லை என்பது என் எண்ணம்.

அந்தக் கருத்தையும் சில மாதங்கள் கடுமையாகக் கண்டித்துவிட்டு, போகட்டும், இப்போது இல்லா

விட்டாலும், ஆட்சி அமைக்க நேரிடும்போது அந்த திட்டத்தை ஏற்றுக்கொள்வீர்களா? என்று கேட்டனர்.

அவர்கள் எதிர்பார்த்த பதில் கிடைக்கவில்லை.

ஏற்றுக்கொள்ளச் சொல்லி வற்புறுத்தவில்லை, பரிசீலனை செய்வீர்களா? பரிசீலனைகூட வேண்டாம், பேச்சின்போது அதன் அடிப்படையில் பேசுவோமா? சரி! அதுவும் முடியாதா? போகட்டும், அது எங்கள் திட்டம். நாங்கள் யார்மீதும் திணிக்க விரும்பவில்லை; பேச வரலாமா, தொகுதி உடன்பாடு பற்றி?

இந்த விதம் வலதுசாரிகள், காடு மலை வனம் வனாந்திரங்களைக் கடந்து பேச வரலாமா என்று கேட்டிருக்கிறார்கள். இருபத்தொன்றாம் தேதிக்குமேல் வரலாம் என்று வலதுசாரி களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதற்கு இடையில் இடதுசாரிகளுடன் பேசுகிறார்களாம்.

அந்தப் பேச்சு வெற்றிபெறவேண்டுமென விரும்புகிறேன்.

ஏனெனில் அந்தப் பேச்சு வெற்றி பெற்றிடின், வலதுசாரிகளுடன் கழகம் பேச்சு நடத்துவது மேலும் வசதியாக இருக்கும்.

அவர்களுக்குள்ளே பேச்சு வெற்றி பெறாவிட்டால் இடதுசாரிகளுடன் கழகம் செய்துகொண்ட உடன் பாட்டிலே குறிப்பிடப்பட்டுள்ள தொகுதிகளைத் தவிர மற்றத் தொகுதிகளைப் பற்றி மட்டுமே பேச முடியும். அதுதான் முறை. அதுதான் சாத்தியம்.

இதற்கிடையிலே தம்பி! கழகம் நடத்திய தோழமைத் தொடர்பும், தொகுதி உடன்பாட்டுப் பேச்சும்,

முஸ்லிம் லீக்
சுதந்திரக் கட்சி
பார்வார்டு பிளாக்
இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி
பிரஜா சோஷியலிஸ்டு கட்சி

ஆகிய கட்சிகளுடன் நமது கழகம் ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ள முடிந்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேறு கட்சிகளுடனும் உடன்பாடு காண முயற்சி நடைபெறுகிறது.

ஒன்று நினைவிலே நாம் கொள்வது நல்லது. தேர்தல் உடன்பாடு பற்றி நாம் பேசத் தொடங்கியபோது, அடிப்படையாக,

தி. மு. க.
முஸ்லிம் லீக்
சுதந்திரா

என்றுதான் துவங்கிற்று. இதனை முக்காலிக் கூட்டு என்று கூடக் கேலி பேசினர்; காங்கிரஸ் கட்சி மட்டுமல்ல, வலது கூடத்தான்!

இந்த மூன்று கட்சிகளும் ஒன்று சேர முடியாது என்று காமராஜப் பெரியவர் மேடை தவறாமல் பேசிக்கொண்டு வந்தார். மட்டங்கள், மூன்று விரலைக்காட்டி - மூன்று கட்சிகள் - தெரிகிறதல்லவா பொருள்? மூன்று விரல் - நாமம்! - என்று நையாண்டி பேசின. இதைக் கேலி செய்து விதவிதமான படங்கள். சித்திரக்காரர்களுக்கு நல்ல வருமானம். ஏகப்பட்ட ஆரூடங்கள், இது நடக்காது என்று.

ஆனால் இப்போது முக்காலிக் கூட்டு என்றுகூட அவர்கள் கூறுவதற்கில்லை. ஏனென்றால், தொகுதி உடன்பாடு கையொப்பமாகி இருப்பது.

தி. மு. க.
முஸ்லிம் லீக்
சுதந்திரக் கட்சி
பார்வார்டு பிளாக்
இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி
பிரஜா சோஷியலிஸ்டு கட்சி

ஆகிய ஆறு கட்சிகளுக்கிடையில் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாம் தமிழர் இயக்கத் தலைவர் ஆதித்தன் அவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையும் தக்க பலன் தரத்தக்க முறையில் வடிவம் தந்திருக்கிறது. சம்யுக்த சோஷியலிஸ்டு கட்சித் தலைவர் நல்லசிவம் அவர்களுடன் நடந்த நட்புமிக்க பேச்சு, "செங்காய்' என்ற வகையில் இருக்கிறது. உழைப்பாளர் கட்சித் தலைவர் எஸ். எஸ். இராமசாமி படையாச்சியாருடன், நான் ஒரு முறை பேசினேன்; ஆய்வுக் குழுவுடன் ஒரு முறை பேச்சு நடந்திருக்கிறது.

எனது மதிப்புமிக்க நண்பர் ம. பொ. சிவஞானம் அவர்களிடம் நடத்தப்பட்ட பேச்சு பற்றியும் குறிப்பிட வேண்டும். கழகம் தனது நிலைமையை அவரிடம் விளக்கிக் கூறியிருக்கிறது; விளைவு கனிவான நேசமாகவே இருந்திடும் என்று நம்புகிறேன்.

தம்பி! நான் செய்யக்கூடியவைகளைச் செய்துகொண்டு வருகிறேன்; முடிந்ததை. மூன்று கட்சிகளின் "அணி' அமைக்க முயற்சி எடுத்துக்கொண்டோம். அரசியல் ஆரூடக்காரர்களின் பேச்செல்லாம் பொய்த்துப்போகத்தக்க முறையில், இப்போது ஆறு கட்சிகளின் அணி என்று சொல்லத்தக்க, தொகுதி உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது. இனி உன் வேலை தொடங்கட்டும்.

அன்புள்ள
அண்ணாதுரை

செந்தமிழே வா!

நீலமேக நகரில் மாநில மாநாடு!
பேரணி அன்று, போரணி!
குருதி கொடுத்துக் கொடி காத்தோர் நினைவு தெரிந்திடும்!
புத்தாட்சி அமைத்துப் புதுவாழ்வு அளித்திடச் செந்தமிழே வா!
பாசறையைப் பார்வையிட வருகிறாய், தம்பி!

தம்பி!

என்ன ஒரே மகிழ்ச்சி! கொந்தளிப்பு அளவுக்குக் களிப்பு! முகத்திலே ஓர் புதுப்பொலிவு! இதழோரம் ஓர் கனிவு! நடையிலேயே ஓர் முடுக்கு!! என்ன காரணம்? புரிகிறது, தம்பி! புரிகிறது! மாநில மாநாட்டுக்குப் புறப்படும் ஏற்பாடு உனக்கோர் புதுத்தெம்பைக் கொடுத்திருக்கிறது. கழகத்தவர் இலட்சக் கணக்கில் திரண்டிடும் திருநாள்; அன்று நாட்டிற்கான ஓர் பொற்காலம் காண விழைவோரெல்லாம் கூடிடுகின்றனர். உரை கேட்டு மகிழவும், உணர்ச்சியினை ஊட்டவும், உவகை பெறவும், தரவும் கூடுகின்றனர். கழகம் பெற்றுள்ள வளர்ச்சியின் உயிரோவியம் அன்று உலவிடும் கழகத் தோழர்களின் உறுதியை அவர்களின் ஒளிவிடு கண்கள் காட்டுவனவாகிடும்!

பேட்டையாரா? பெரும்பண்ணையூராரா? அதோ மாயவரத்தார், அவர் மன்னார்குடியார், மயிலாப்பூராருடன் வருகின்றாரே அவர்

காயல்பட்டினம், எதிர்பார்த்தபடி வருகிறார் சேலத்து நண்பர், கோவைக் குமரர்கள் நேற்றே வந்துவிட்டார்கள், காஞ்சிபுரத்துத் தோழர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பே வந்து விட்டனர், காவேரிப்பாக்கத்தார், கருங்குழியார், கலசபாக்கத்தார், கருந்தட்டாங்குடியார், கலையூராம் தஞ்சைப் பகுதியின் தோழர்கள், வேலூரார், வாணியம்பாடியார், சிதம்பரத்துச் செம்மல்கள், சீர்காழித் தோழர்கள், பேராவூரணியார், பெரிய பாளையத்தார், அதோ காரைக்குடியார் வட மதுரைத் தோழருடன், மறவர் கோட்டத்து மாமணிகள் பற்பலர், மதுரையம்பதியின் மாவீரர் அணி அணியாய், கருநாடகப் பகுதிவாழ் கடமை வீரர்கள், ஆந்திர மாநிலத்து அருமைத் தோழர்கள், பண்ணைக்காட்டார், பாபநாசத்தார், குத்தாலத்தார், குடவாசல் தோழர்கள், குடந்தை தந்திட்ட குணக்குன்று, நெல்லை நண்பர்குழாம், திருச்சி தீரர்கள், திங்களூர் தோழர்கள், உடுமலைவாழ் அன்பர், பொள்ளாச்சித் தோழர்கள், ஈரோடு நகரத்துத் தோழர்கள், உவகை தரும் முகவை மாவட்டத் தோழர்கள், அணி அணியாய் வருகின்றார், அழகு தருகின்றார், குடும்பம் குடும்பமாகக் கூடுகின்றார் குதூகலமாக!

காண்கின்றாயே பெண்ணே! இன்றென்ன கூறுகின்றாய்? கழகம் கழகமென்று கூவிக்கிடக்கின்றீரே, கழகம் என்னதான் சொக்குப்பொடி போட்டதுவோ? என்றெல்லாம் கேட்பாயே, எழிலரசி! காண் இன்று! இதுதான் என் கழகம்! இவரெல்லாம் என் குடும்பம்! இவர் கூடும் இடம் எனக்கு, திரு இடம், தீரர் இடம்! பெருமகிழ்ச்சி பலவற்றுள் இதற்கீடு இல்லையன்றோ! வாழ்வளிக்கக் கூடுகின்றார், வன்கணாளர் கொட்டமடக்கிடுவார், கோல் கொண்ட காரணத்தால் கொடுமை உமிழ்ந்துலவும் கூட்டத்தை விரட்டிடுவார், அவர் பெற்ற உறுதியின் அடிப்படை அறிவாயோ?

தன்னலம் மறுத்திட்ட தக்கோரின் உழைப்பேதான்! தன்னைத்தான் ஒப்படைத்த தகுதி மிக்கோரின் அறிவாற்றல்; தொண்டு! கூடுகின்றோம் இன்று இங்கு, கொடி பறக்கக் காண்கின்றோம், முரசொலி கேட்கின்றோம் என்றால், முழுமதியே! இந்த நிலை நாம் பெற்றிடவே, எத்தனையோ தோழர்கள் கொட்டினர் குருதியினை. கொடுவாளுக்கஞ்சாமல், பழி தாக்கியபோதும் பதறாமல் களம் நின்று, என் கழகம்! என் குடும்பம்! என்று கூறி நின்றார், ஏற்றார் எதிர்ப்புகளை, அவர் கண்ட தொல்லைக்கோர் அளவே கிடையாது!

ஆண்டை எதிர்த்திருப்பார், அடி ஆள் எதிர்த்திருப்பார்; வேலை இழந்திருப்பார் வேதனையில் உழன்றிருப்பார், என்றாலும் எப்போதும், எது வந்திடினும் அஞ்சிடப்போவதில்லை. நெஞ்சத்துக் குடிகொண்ட உண்மைக்கே பணிந்திடுவேன் என்றுரைத்து என் கழகம்! என் குடும்பம்! எனக் கூறிக் களம் நின்றார். எண்ணற்றவர் என் உடன் பிறந்தார்! இதோ! இதோ எங்கும்! காணடி என் உள்ளம் வென்றவளே! காட்சி இதுபோலக் கண்டதுண்டோ கூறிடுவாய். அங்கே உலவுகின்ற அறிவரசன் அறிவாயா ?

அகமும் புறமும் கற்ற அருந்தமிழ்ப் புலவரவர் ஊரின் கோடியில் உள்ளதோர் சிறு குடிலில் வாழ்கின்றார். அவர் திறனோ, நாட்டிற்கே நல்லதோர் அணிகலனாம்! நம் தமிழர் வாழ்ந்த விதம், நடுவில் வந்துற்ற நலிவு, அதன் காரணம், இன்று நாம் பெற்றுள்ள விழிப்புணர்ச்சி, அதன் விளைவு, இத்தனையும் கூறிடுவார், தித்திக்கும் செந்தமிழில். அதோ காண்பாய், அவர்தான் எழுத்துலகு தன்னில் ஏற்றமிகு இடத்தைத் தனக்கெனப் பெற்றிட்ட பேரறிவாளன். முத்தமிழை அவர் வடித்துத் தந்திடுவார், பருகிடுவோர் பெற்றிடுவார் தனிச்சுவையை. உள்ளத்துப் பாங்குகளை

உன்னதமாய் காட்டவல்லார், உயர உயரச் சென்றேன் என்று உரைத்திடும் பணந்தேடிப் புலவரெல்லாம், ஊர் பகைக்கும் என்றஞ்சி உண்மையினை உணர்த்திடாமல் ஒதுங்கி நின்ற காலத்தில் உச்சி பிளந்திடினும் ஊராள்வோர் பகைத்திடினும், மெச்சிப் புகழ்ந்திடவே வாரார் எவரும் என்று எச்சரிக்கை கிளப்பிடினும், இல்லம் இழந்திடினும் இன்னுயிரே போகுமென்ற நிலையே உறுத்திடினும் உண்மையின் பக்கமே உறுதியுடன் நான் நிற்பேன், உலகு உணருமட்டும் உரைத்தபடி இருப்பேன் என்று கூறி நின்றார், பழந்தமிழர் பண்புக்கோர் எடுத்துக்காட்டாய்!

கலகலப்பு அதிகமாகக் காணுதே, காண்கின்றாய்! காரணம் அறிவாயோ! கலை உலகில் நிலையான புகழ் பெற்ற தோழரவர், கழகத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாய் உள்ளார்; நேர்த்திமிகு கலைத்திறனால் நாட்டார் நெஞ்சத்தில் இடம் பெற்றார்; புகழ் மணக்க வாழ்கின்றார்.

ஆயின் பூந்தோட்டம், இசை களியாட்டம் பொற்குவியல் என்பனவற்றில் இல்லை இன்பம், புன்னகை பூத்த முகத்தோடு என் தோழர் நின்று வாழ்க! வாழ்க! என்று எழுப்பிடும் வாழ்த்தொ-யே இசையாகும் என்ற கருத்துடையார். இளஞாயிறுகள்! எழு ஞாயிறுகள்! எல்லோரும் என் தோழர்! விலை ஏறிவிட்டதனால் வேதனையுறுகின்றார், வேண்டாம் விபரீதம், விளைவு நல்லதல்ல என்று ஆண்டிடும் பெரியோர்க்கு அறிவுரை கூறியதால் அடைபட்டார் அதோ அந்தத் தோழர் சிறைதனில் ஓராண்டு! இளைத்த உடல், காண்கின்றாய்; ஆனால் உள்ளம் எஃகு! ஆமாம்! அவரே கரம் கூப்பி நிற்கின்றார் மாதெதிரில்! ஏனென்று அறிந்துகொள் ஆரணங்கே! மாத்தமிழ் காத்திடவே புறப்பட்டான் ஓர் காளை! இந்தி தமிழர்க்குச் செந்தீ என்றான், காரணம் பல காட்டி! எப்பக்கம் வந்து புகுந்துவிடும்? இந்தி

எத்தனை பட்டாளம் கூட்டி வரும்? என்ற பண் எழுப்பிப் புறப்பட்டான். பதைக்கச் சுட்டு வீழ்த்தினர் அத்திருமகனை! அந்த மாது அவன் மாதா? நாடு வாழ மகனைப் பறிகொடுத்தாள் மாதா! அவள் கால்பட்ட மண், மணம் பெற்றிடும் என்றிடலாம். மகனை இழந்திட்டேன், மாத்தமிழுக்கு அளித்துவிட்டேன், ஒருவனை நான் கொடுத்து இதோ இத்தனைப் பிள்ளைகளை நான் பெற்றேன்! இவர்களிடம் உள்ளவன் என் மகன், இறந்தானில்லை! இவர்களோடு கலந்துவிட்டான், மடியவில்லை! மலரினின்று கிளம்பும் மணம் கலந்திடும் காற்றில் என்பர். என் மகன் நறுமணமானான்; பிணமானான் என்று எண்ணிடுதல் பேதமை! என்று எண்ணித்தானோ அந்த மாது நடக்கின்றாள் எழுச்சி யூட்டி! - இதுதானடி தேனே! என் கழகம்!

சொக்குப்பொடி என்ன போட்டதுவோ என்று கேட்டாய் அன்று; இன்று சொல்லுவாய் காண்கின்ற காட்சி பற்றி உன் கருத்தை. இதுதான் என் கழகம்! என் குடும்பம்! - என்று கூறுகின்றான், மயிலாள் கடைக்கண்ணால் பார்க்கின்றாள். "களுக்'கென்று சிரிக்கின்றாள், காரணம் அறியாது திகைக்கின்றான் மணவாளன்; ஒன்றும் தெரிவதில்லை உங்களுக்கு என்கின்றாள்; என் கழகம்! என் குடும்பம்! என்று கூறுகின்றீர், உம்மில் நான் கலந்து ஒருயிராய் ஆன பின்னும்! உமக்கு இது குடும்பம் எனில் என் குடும்பம் ஈதன்றோ என்கின்றாள். பூரித்துப் போகின்றான். என்ன இனிமையுடன் எனக்களித்தாய் நல்லுணர்வு! தவறே செய்துவிட்டேன், தந்தையே இஃது நம் கழகம்! நம் குடும்பம்! என்று கூறுகின்றான்.

காட்சிகள் இதுபோலக் கண்டிடவும், கருத்து விருந்து பெற்றிடவும் மாநில மாநாடு செல்லப் போகின்றோம் என்ற செந்தேனை உண்டதினால் புதுப் பொலிவே நீ பெற்றாய். தம்பி! உன்னைக்

காணும்போது உள்ளபடி நான் உதயசூரியனைக் காண்கின்றேன்; உலகுக்கு ஒளியூட்டி, உயிரூட்டி வந்திடுவது உதயசூரியன். அஃது இல்லையெனில் வேறு எதுவும் இல்லை என்பர்! அதனிடம் தொடர்பு கொள்ளப் பொருள் எதுவும் பொருளாகாது என்றுரைப்பர்! உதயசூரியன் போன்று இன்று தமிழகத்துக்கு நீ இருந்து வருகின்றாய். காரிருளை ஓட்டிவிட்டாய்! காலை மலர்ந்தது மாந்தர் கண் மலர்ந்து நடமாடுகின்றார் என்றாரல்லவா புரட்சிக் கவிஞர். தம்பி உதயசூரியன்போல நீ புறப்பட்டாய், நாட்டவர் உள்ளம் மலர்ந்தது. நம்பிக்கை எழுந்தது. நாடு வாழ்ந்திட நற்பணியாற்றிடும் ஆற்றல்மிகு தோழர்களின் அணிவகுப்பு கண்டோம், நாம் பட்டி தொட்டி எங்கும் பாங்குடனே அமைத்துள்ள அணிவகுப்பு எல்லாம் ஓரிடத்தில் பேரணியாய் சீரணியாய் கூடுகின்றதன்றோ. மாநில மாநாடெனில் இஃதேயன்றோ பொருளாகும்.

பேரணி மட்டுமன்று, இதுபோது கூடிடுவது; போரணி! ஆமாம். வலியோர் சிலர் எளியோர்தமை வதையே புரிகுவதா? மகராசர்கள் உலகாளுதல் நிலையாம் எனும் நினைவா? என்று முழக்கம் எழுப்பி, வீரர்காள் புறப்படுவீர்! கோழைகளே! ஓர்புறம் ஒதுங்கிடுவீர்! என்று பரணி பாடி, ஆதிக்கக் கோட்டையினைத் தாக்கித் தகர்த்திடக் கூடிடும் போரணி.

பற்பல நாட்களாகப் பல்லாயிரம் கூட்டங்களிலே எடுத்துரைத்தவைகளை எல்லாம் செயலில் காட்டிடக் கிடைத்திடும் வாய்ப்பாம் பொதுத் தேர்தல் களம் சென்று, புல்லர்களின் கொட்டமது அடக்கி, புத்தாட்சி அமைத்திடக் கிளம்பிடும் போரணி!

தமிழர் பெரும்படை நடைபோடும் காட்சி காணாத கண்ணென்ன கண்ணோ! - என்று பாடிடக்கூடத் தோன்றுகிறது; பயிற்சி இல்லை, குரலிலே குளிர்ச்சி

இல்லை.

மறவர் படை எழுப்பிடும் முழக்கமதைக் கேளாத காதென்ன காதோ? என்று இசைத்திட எண்ணம் எழுகிறது. இசைக் கலைக்கு நாம் ஏன் இழுக்குத் தேடுவது என்ற எண்ணம் குறுக்கிட்டுத் தடுக்கிறது.

ஆனால் தம்பி! நமது உடன் பிறந்தார் கூடிடும் மாநாட்டில், பேச்செல்லாம் இசையே! ஐயமுண்டோ!!

கோட்டை கொத்தளம் அமைத்து இந்த மாநில முழுதும் ஆண்டிருந்தார் நம் முன்னோர் என்று படிக்கின்றோம். தாரணி மெச்சிட வாழ்ந்திருந்தார் என்று அறிகின்றோம். கத்தும் கடல் அடக்கி வென்றார். கடாரம் கண்டார், முத்தும் பவழமும் யவனம் கொண்டு சென்றார், உலகின் மூத்தகுடி தமிழ்க்குடியே என்பதனை மெய்ப்பித்தார் என்றெல்லாம் படிக்கின்றோம். ஓரோர் வேளை, மெய்யாக அந்த நிலை இருந்திருக்கக் கூடுமோ, இல்லை வெறும் கற்பனையோ என்று ஐயம் எழக்கூடும்; ஆயின் தாழ்வுற்று நிலைகெட்டு, தாள் தொட்டால் பிழைத்திடுவீர் என்று கூவிக் கொக்கரிக்கும் கொடியோரால் கொட்டப்பட்ட நிலை எனினும், எத்தனை வீரமதைப் பெற்றுள்ளார் இம்மறவர்! உறுதியின் தன்மை எத்தனை உன்னதமாய் உள்ளது இங்கு என்பதனை மாநில மாநாடதனில் காண்போர் ஐயம் அகன்றிடும்; அத்தனையும் உண்மையே; இற்றை நாளிலேயே இவர்க்கு இந்த ஆற்றல் உள்ளதெனில், அந்நாளில் பெரும் புலவர் கூறினரே அதுபோல ஏன் இருந்திக்கமாட்டார்கள்! - எனக் கேட்டு, மரபின் பெருமைதனை முற்றும் உணர்ந்து, இதனை இழந்திடுதல் பெரும் தவறு என உரைத்து, மரபு காத்திடவும், அதன் மாண்பு வளர்த்திடவும் உறுதி பூண்டிடுவர், உண்மை. வெறும் புகழ்ச்சி இல்லை.

வாழ்வின் சுவைதன்னை வகையாய்ப்

பல்லாண்டு உண்டு, உடல் பெருத்து ஊழியர் புடைசூழத் தண்டு தளவாடமுடன் தார் அணிந்து தேரேறும் அரச குமாரர், செல்வர்

ஆகியோருக்காக நடத்தப்படுவது அல்ல, நமது கழகம்; ஆயினும் அத்தகையோர் பல இலட்சம் கொட்டி நடத்திடினும் எழ முடியாததோர் எழில், நீலமேகம் நகரில் எழச் செய்துள்ளனர்.

மாநாட்டுத் திடலை நான் சென்று முதலில் பார்த்தபோது, பள்ளமும் மேடும் பயமூட்டின; கள்ளியும் காளானும் மிரட்டி நின்றன; கல்லும் முள்ளும் தைத்தன; ஆனால் நமது தோழர்களின் கரம்பட்டு, எப்படி இருக்கிறது என்கிறாய்! நான் சொல்வானேன்! வந்து பார்க்கத்தானே போகிறாய்.

தம்பி! ஒரு விதத்திலே பார்த்தால் உனக்குக் கிடைத்திடும் வாய்ப்பு சிறப்புடையது. அந்த வெட்ட வெளியை, மணிப்பிரவாள நடையிலே கூறுவதானால் "ஜெகஜ் ஜோதி'யாக விளங்கிடும் நிலை பெற்ற பிறகு, நீ காண்கிறாய். உன் கண்களிலே, நான் கண்ட மேடும் பள்ளமும் படாது. பட்டொளி வீசிப் பறந்திடும் கழகக் கொடியும், அதனை ஏந்தி நின்றிடும் வீரனின் உருவமும், அந்தக் கொடிகாத்து நின்றதால் கொடியோர்களால் தாக்குண்டு இறந்துபட்டோரின் உடலங்களும், படுகாயமுற்ற மாவீரர்களின் உருவங்களும் தெரிந்திடும். கண்டதும் நாம் நடந்து வந்த பாதை எப்படிப்பட்டது என்பதும் நமக்காக உயிர் நீத்தோர்கள் எத்தகைய உத்தமர்கள் என்பதும் நன்கு விளங்கிடும்.

கொடி ஏந்தி நின்றிடும் வீரர் கோட்டம் எழுச்சியூட்டும் விதமாக அமைந்திருக்கிறது. கண்டு கண்டு களித்திடுவாய் - திண்ணம்.

நாம் சாமான்யர்கள். மாளிகையும், ஆங்கோர்

செயற்கைக் குளமும், அதிலே குடைந்தாடும் குமரிகளும், ஊர்ந்திடும் அன்னங்களும், பூங்காவும், ஆங்கு பாடிடும் புள்ளினங்களும், அணி மணி பூண்ட ஆரணங்குகளும் கண்டா களிப்படையப் போகிறோம்.

நாம் எவ்வளவு பெருந் தொகையினராக வளர்ந்திருக் கிறோம் என்பதனை எடுத்துக் காட்டும் காட்சியே நமது கண்களுக்கு விருந்தாகும். சொல்லப் போனால், அந்தக் காட்சிக்குச் செல்வவான்கள் காணும் காட்சி எந்த விதத்திலும் ஈடாகாது! காணும்போது, அண்ணன் சொன்னது முற்றிலும் உண்மை என்பதனை ஒப்புக்கொள்வாய்.

குடிமகனாய் உள்ளோன், ஊர் சுற்றும் உழைப்பாளி, தோள் குத்தும் முட்கள் நிறை மூட்டைதனைச் சுமப்போன், தாங்கொணாப் பாரந்தனைத் தூக்கித் தத்தளிப்போன், கலத்தில் பணி புரிவோன், உலைக்கூடத்தில் உழல்வோன், ஏதோ இசை எழுப்பி அதில் இனிமை காண நினைப்போன்! ஏரடிப்போன்! தூக்கம் தொட்டிழுக்கும் துயர் கக்கும் கண்கொண்டோன்,

இத்தகையோர் அமைத்துள்ள பாசறை, தி.மு.க. ஆனால் இவர்கள் முயன்றால் எதனையும் முடித்திட வல்லார் என்பதனை நாடு அறியும். அவர்தம் முயற்சிக்கு ஒரு அழகுமிகு சான்றாக அமைகிறது நீலமேகம் நகர் - மாநில மாநாடு!

தம்பி! 1967 வந்து நம் கதவைத் தட்டுகிறது. ஒலியே கேட்கத் தொடங்கிவிட்டது, விழி! எழு! - என்று கழகம் மாநில மாநாடு மூலம் கூறுகிறது. பரணி பாடிடும் முன்னணியினர், நாட்டு நிலைமையினை எடுத்துக் காட்டி, அதனை மாற்றி அமைத்திடும் வழிவகை கூறி, செயலார்வம் தந்திடப் போகின்றனர்.

புத்தாண்டிலே அடி எடுத்து வைக்கின்றோம்

என்பதனை விளக்கிடும் முறையிலே அமைந்துள்ள முகப்பும், கைத்திறன் கொண்டோர் கட்டி அளித்திட்ட கொட்டகையும், அதிலே பகலெது இரவெது என்று தெரிய ஒட்டாது அமைந்துள்ள ஒளி முறையும், ஓர் புறம் கலைக் கண்காட்சியும், எங்கு பார்த்திடினும் சிலை வடிவங்களும், தம்பி! புறத்தோற்றமே எவருக்கும் பூரிப்புத் தரத்தக்கதாக அமைந்துள்ளது; அக மிக மகிழ்ந்திடுவாய்.

இத்தனை கோலமும் உண்டாகிட உழைத்தவர் எவர்? எவர் கரம் பட்டு இந்த எழில் உண்டாயிற்று! நமது உடன் பிறந்தார் உருவாக்கினர் அந்தத் திருவினை. அவர்களைத்தான் அரசியல் ஆதிக்கக்காரர்கள், ஏனோதானோக்கள், எச்சிற் கலையங்கள், சாவு வரும் வரையில் சளைக்காது போரிடும் கந்தலுடைக்காரர் என்றெல்லாம் - ஏசி வருகின்றனர்; அறிவாய்.

அந்த “ஏனோதானோக்கள்’ இன்று கழகம் கண்டு, நாட்டு நிலையையும் நினைப்பையும் மாற்றிவிட்டுள்ளனர். இன்று”ஏனோதானோக்கள்” எத்தர்களைக் கேட்கின்றனர் “இன்னும் எத்தனை நாள் உமக்கு இந்த வாழ்வு?” என்று. இடிச் சிரிப்புடன் இறுமாப்புடன் ஆதிக்கக்காரர் கூறுகின்றனர்,”என்றென்றும்” என்று! என்றென்றுமா? அப்படி ஒரு நினைப்பா? காலம் மாறி விட்டது அறியாமல் பேசுகிறீர். காலம் பிறந்துவிட்டது; கணக்குக் கேட்கும் காலம், பிப்ரவரியில் கணக்குக் காட்டியாக வேண்டும், கவனமில்லையா? கணக்குத் தீர்த்துவிடப் போகிறார்கள் மக்கள். புரியவில்லையா? என்று கூறுகின்றனர் மக்கள்.

"எமது ஆதிக்கத்தை எதிர்த்திடும் துணிவும் ஆற்றலும் படைத்த ஒரு படையும் உண்டோ?” - அவர்கள் கேட்கின்றனர்.

"உண்டு! உண்டாகிவிட்டது! திரண்டு நிற்கிறது!” -

மக்கள் கூறுகின்றனர்.

"எங்கே அந்தப் படை? எவ்விடம் உளது?" - அவர்கள் கேட்கின்றனர்.

"அந்தப் போரணி காண வேண்டுமா? இந்தத் திங்கள் 29-ல் கூடுகிறது. ஜனவரித் திங்கள் முதல் நாள் வரையிலே காணலாம் அந்தப் போரணியை" - என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

அந்தப் போரணியைக் கண்டு களித்திடப் புறப்படுவதற்கான ஏற்பாட்டிலே ஈடுபட்டிருப்பதனால்தான், உன்னிடம், தம்பி! ஓர் புதுப்பொலிவு தெரிகின்றது.

எப்போது நடந்திடினும் நமது கழக மாநாடு ஓர் எழுச்சியூட்டும் நிகழ்ச்சி; இம்முறையோவென்றால் ஓர் தனிச்சிறப்பு தன்னாலே வந்துள்ளது.

பொதுத் தேர்தலுக்கு நாம் எந்த விதமாகப் பக்குவப் பட்டிருக்கிறோம் என்பதை நாடு காணக்கூடிய விதத்திலும்,

ஏன் நாம் ஓர் புதிய ஆட்சிமுறையினை காண விழை கின்றோம் என்பதற்கான விளக்கம் அளித்திடும் முறையிலும்,

எந்தவிதமான கட்டுக்கோப்புடனும் பண்பு பயிற்சியுடனும் போரணி திரண்டிருக்கிறது என்பதனை எடுத்துக் காட்டும் வகையிலும், இம்முறை மாநில மாநாடு அமைகின்றது.

படைக்கலன் யாது உமக்கு? - என்று கேட்பர் பட்டத்தரசராகிவிட்டோர்!

ஏழை அழுத கண்ணீர் கூர்வாளொக்கும் என்றார் வள்ளுவப் பெருந்தகை.

குமுறிடும் நெஞ்சினர், கசிந்திடும் கண்ணினர்,

காலமெலாம் உழைத்துழைத்து வியர்வை சிந்தினோர் - புரட்சிகளே போதும் என்கிறார்கள் இப்படைக்கலன்! பொதுத் தேர்தலிலே வெற்றி ஈட்டிடப் போதாவா, இப்படைக்கலன்கள்!!

ஆகவே தம்பி! இம்முறை மாநில மாநாடு காண வருவது, விளக்கம் பெற்றிட மட்டுமல்ல, விருந்து பெற்றிட மட்டுமல்ல, பாசறையைப் பார்வையிட வருகின்றாய்! ஆமாம் தம்பி! பாசறை!!

தேர்தல் அறிக்கையும் வேட்பாளர் பட்டியலும், இம் மாநாட்டிலேதான் வெளியிட எண்ணியுள்ளேன்.

கழகக் காவலர்கள் கருத்து விளக்கம் அளித்திட வருகின்றனர்.

கனிவு கொண்டுள்ள ஆதரவாளர்களான பெரியவர்கள் பலரும் கலந்துகொள்கின்றனர். வாழ்த்தளிக்கின்றனர்.

நானும் சில பேசுவேன்; எனக்குத் தம்பி! பேசுவதைக் காட்டிலும், உன் பேசிடும் கண்களைக் கண்டு களித்திடவே மெத்த விழைவு. எனினும் ஏதாகிலும் பேசத்தானே வேண்டும். பேசுகின்றேன்.

தம்பிதான் திறப்பாளர்; தென்றல் காண்பாய், புயலும் வீசும்! தேனும் உண்டு, வாள் வீச்சும் காண்பாய்! எல்லாவற்றிலும் ஒரு தனித்தன்மை இருந்திடக் காண்பாய், அதிலும் எம்முறையும் இல்லாத அளவு இம்முறை தம்பியின் பேச்சு அமைந்திருக்கும். பத்து இலட்சமாயிற்றே! பேச்சு சுவைமிக்கதாகத்தானே இருக்கும், பத்து இலட்சம் ரூபாய்களைத் திரட்டிக் கொடுத்து விட்டல்லவா, தம்பியைப் பேசச் சொல்லுகிறாய்! எழுச்சி மிக்கதாகத்தானே பேச்சு அமையும்?

மாநாட்டிற்கான முதற் கட்டமே நாம் பெருமிதம் கொள்ளத்தக்கதாக அமைகிறது.

சுயமரியாதை இயக்க நாள் தொட்டு நமது இயக்கத்திற்கு உயிர்ப்புச் சக்தி ஊட்டி வரும் காஞ்சி க-யாண சுந்தரம் கொடி ஏற்றி வைக்கிறார்.

வாய்ப்புகள் அதிகம் கிடைப்பதில்லையே தவிர, கிடைத்திடும் போது, நான் அரசியல், பொது இயல் பிரச்சினைகள் பற்றிப் பேசி மகிழ்ந்திடுவது, காஞ்சியார் போன்றாரிடமே! என்னிடம் மற்றவர்கள் கூறுவதற்குக் கூச்சப்பட்டுக் கொண்டிருப்பர் பல விஷயங்கள் பற்றி. காஞ்சியார் அவ்விதம் அல்ல! ஒளிவு மறைவு கிடையாது! இயக்கத்திடம் உள்ளன்பு. என்னிடம்? பாசம்! அளவு கடந்த பாசம்! முன்பு நடைபெற்ற மாநில மாநாட்டில், எனக்கு மாலை அணிவித்துவிட்டு கட்டிப்பிடித்துக்கொண்டு குழந்தை போல அழுத காட்சி என்றும் என் மனத்தைவிட்டு அகலக் கூடியது அல்ல. அவர் கொடி ஏற்றி வைக்கிறார் மாநில மாநாட்டில் இப்போது! நாட்டிலே நமது கொடியினை அவர் பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே ஏற்றி வைத்திருக்கிறார்.

கழகத்திலே நேரடியாக ஈடுபாடு கொள்ளாததற்கு முன்பே, "பொறுப்பாளர்' என்ற நிலையினைப் பெறுவதற்கான நேசத் தொடர்பு எனக்கும் நண்பர் A. கோவிந்தசாமி அவர்கட்கும். எளிமை மாறாமல், எப்போது அழைத்து என்ன பணி தந்திடினும் பொறுப்புடன் நிறைவேற்றி வரும் பண்பினர். சட்டமன்றத்தில் வீற்றிருந்து நற்பணியாற்றிடும் தகுதி மிக்கவர். அவர் கலைக் கண்காட்சியினைத் துவக்கி வைக்கின்றார்.

அரிமா போன்றார் மாற்றாருக்கு; நமக்கோ அண்ணன். அனுபவக்கனிக் கொத்து; அருமையான நகைச்சுவைப் பெட்டகம். எதிர்ப்பு பல கண்டவர்; அன்பர்க்கன்றி வேறு எவருக்கும் அஞ்சிட மறுப்பவர்; அவர் கால்படாத கிராமம் இல்லை தமிழகத்தில்

என்று கூறத்தக்க விதமாகப் பல ஆண்டுகள் சுற்றிச் சுழன்று வருபவர். மேலவையில் உறுப்பினர் - சிற்றரசு. அவர் தியாகிகள் கோட்டத்தைத் திறந்து வைக்கின்றார். நமக்காக வாழ்ந்து நமக்காக உழைத்து, நமக்காக உயிர் ஈந்த தியாகிகட்கு நாம் நமது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்வது முறைதானே!

அந்தக் கோட்டத்தைத் துவக்கி வைத்திட அவர் மிகத் தகுதி பெற்றவர்; அவர் உரை உணர்ச்சி ஊட்டும் எழுச்சி கூட்டும் என்பதனை எடுத்துச் சொல்லவா வேண்டும்? உடல் தளர்ந்த நிலையிலும், உள்ள உறுதி தளராதிருக்கும் அண்ணனல்லவா சிற்றரசு!

மற்றவர்! மற்றவரா? முரசு! முழவு! யாழ்! குழல்! வாள்வீச்சு? வேலெறிதல்! எல்லாம் உண்டு! மேடை அதிர, மாற்றார் நெஞ்சு அதிர, காங்கிரசாட்சியின் கொடுமைகளை எடுத்துரைக்கும் மதியழகன் இருக்கின்றார், சங்கப் புலவர்கள் இவ்விதந்தான் அரச அவை தன்னில் உரையாற்றி இருப்பரோ என்று எண்ணி வியந்து பாராட்டிடத்தக்க விதமான பேருரை ஆற்றிடும் நாவலர் நெடுஞ்செழியன் இருக்கின்றார்; அவர் கழக மாநாட்டுப் பொறுப்பாளர். அவர் "தம்பி' இருக்கின்றார், வாதத் திறமையுடன் புள்ளி விவரம் பல அள்ளி அளித்திட, மல்லிகை மலரெடுத்து மாலையெனத் தொடுத்திடும் நேர்த்திபோல, சொல்லில் சுவை கூட்டி பொருளில் தோய்த்து பொருத்தமுறப் பேச்சாக்கித் தருகின்ற மனோகரன் இருக்கின்றார்; சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிப்புமன்றத் தலைவர்கள், நகராட்சித் தலைவர்கள், ஊராட்சி மன்றத்தார், ஏ! அப்பா! எவ்வளவு உள்ளார் நமது அணி வகுப்பில்!

ஒவ்வொருவர் திறன் குறித்தும் கூறிச் செல்வதெனில், இதழ் போதாதென்பதன்றோ, அவர்

பற்றிய விளக்கம் அளிக்காது விட்டதன் காரணம்? பெரியதோர் பூந்தோட்டம்; எல்லா மலரும், எழில் மலர்; நறுமணம்; வடிவழகு! மாவட்ட செயலாளர் நமது கழகத்திலுள்ளார்; எத்தனை நேர்த்தியான செயல் திறமை மிக்கவராயுள்ளார்! பேச்சு மட்டுமென்ன? பெருமரத்தை வீழ்த்தவல்ல புயலா? காணலாம்! கோடைக் களைப்பாற்றும் பூங்காற்றா? கிடைக்கிறது! வாதத் திறமையா? நிரம்ப! குறைவற்ற செல்வம் பெற்றுள்ளேன்.

தம்பி! உன்னையெல்லாம் வரவேற்று, கருத்து விருந்து தரப்போகும் வரவேற்புக் குழுத் தலைவராம் நீலநாராயணனும், மாநாட்டுச் செயலாளர்களாம் மன்னை ப. நாராயணசாமி, ஈ. ஆர். கிருட்டிணன், சி. வி. எம். அண்ணாமலை, கோ. செங்குட்டுவன் ஆகியோரும், தொண்டர் படைத் தலைவர் கே. எம். கண்ணபிரானும், துணைத் தலைவர்கள், சு. பாலன், தி. அ. நல்லதம்பி, எஸ். வி. வேலு, அலமேலு அப்பாதுரை, சாகுல் அமீது ஆகியோர் மட்டுமென்ன! போரணியின் முன்னோடிகள் அல்லவோ!

கலை உலகிலுள்ள கழகத் தோழர்களின் பாங்குதனை எண்ணி எண்ணி நான் மகிழாத நாள் உண்டா? விதை தூவி, முளை காண நாம் பாடுபட்ட காலை, தமது இசையைப் பாய்ச்சிக் கழக வயல் செழிக்கச் செய்த, என் அருமை கே. ஆர். ராமசாமியின் தோழமை உள்ளந்தனைக் கண்டு பாராட்டாதார் உண்டா? கருத்து விருந்தளிக்க, பாடமாட்டேன்! - என்று பாடக்கேட்டு மகிழாதார் உண்டா? தமிழகத்தின் கண்மணியாய், கலை உலக நன்மணியாய், அன்பு மணியாகத் திகழ்ந்திடும் புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன், பொதுத் தேர்தலில் ஈடுபட இருக்கின்றார்; என்னிடம் தனியாகப் பேசுங்காலை எந்த அளவு தயக்கமும் கூச்சமும் தென்படுகிறதோ, அந்த அளவு, மேடை ஏறிப் பேசும்போது எழுச்சி கலந்திருக்கக்

கேட்டின்புற்றிருக்கின்றேன். அவர் உரை கேட்குங் காலை, தேனுண்ட வண்டாகிக் கழகத் தோழர் சொக்கிடுவர். காண்கின்றாய். இலட்சிய நடிகர் இராஜேந்திரனும், நடிகமணி டி. வி. நாராயணசாமியும், என்னுடன் உண்டு உறங்கி, உரையாடி உவகையூட்டிய, எங்கள் குடும்பத்துப் பிள்ளைகள். நாடக நடிகர்களாக இருந்த நாள் தொட்டு, பொதுத் தொண்டாற்றும் ஆர்வம் மிக்கார், அரசியல் பிரச்சினைகளை ஆய்ந்து பார்த்துப் பேச வல்லார், அவர்களின் உரைகேட்டு அகமகிழ்வுடன் தெளிவும் பெற்றிடலாம்.

மற்றும் நடிகர்கள் ஆனந்தன், கண்ணன், வாசு போன்றார், நமது இயக்க வளர்ச்சியிலே நாட்டம் காட்டிப் பணியாற்றி வருகின்றார். மகிழ்ச்சி. நன்றி. என்னிடம் பற்றுக்கொண்டுள்ள நண்பர்கள், சற்றுத் தொலைவிலே நின்றுள்ளார் என்றால், பழகிடக் கூச்சம் என்பதுதான். மற்றும் பலர். கலை உலகத் தோழர்களின் கனிச்சாறுபோன்ற உரை பல உண்டு.

வழக்கறிஞர்! ஆம், தம்பி! கழகத்தில் பற்றுமிகக்கொண்டு பணியாற்றி வருகின்ற வழக்கறிஞர்கள் தஞ்சையில் மாநாடே நடத்திவிட்டார். எத்தனை எத்தனை இளைஞர்கள்! எவ்வளவு தெளிவு! கழகத்திடம் எத்தனை கனிவு! அவரெல்லாம் வருகின்றார்.

தமிழ் நாடெங்கும் சென்று கழகக் கொள்கைதனை எடுத்துரைத்து வலிவு சேர்க்கும் பேச்சாளர் இவ்வளவும் காண்கின்ற திரு இடம் நீலமேகம் நகர். ஒவ்வொருவரையும் காட்டி மகிழ விருப்பம் மிக உண்டு. நேரம் இல்லை. போதுமான தாளும் இல்லை. அவர்கள் எல்லாம் என் நெஞ்சில் இடம் பெற்றார். அவர்கள் சென்று குவித்துத் தந்திடும் கருவூலத்தைப் பெற்றுத் திகழ்பவனே நான்.

அவர்களை எல்லாம் காணவும், அவர் உரை

கேட்கவும், எனக்கு உவகை ஊட்டவும், எல்லாவற்றிற்கும் மேலாக, மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கத்தக்க புத்தாட்சி அமைத்து நடத்திடும் ஆற்றல் பெற்றோர் நாம் என்பதனை நாட்டுக்கு எடுத்துக் காட்டவும், தம்பி! மாநில மாநாடு வந்திடப்போகின்றாய்! ஒவ்வொருவரும் தம் வாழ்வில் பெறத்தக்க ஒரு சில எழுச்சியூட்டும் நிகழ்ச்சிகளில், தலையாயது இம்மாநில மாநாட்டு நிகழ்ச்சி. அதனை எண்ணி எண்ணி நீ மகிழ்ந்திருக்கும் வேளையில், அரசியல் பற்றிக்கூட பேச விருப்பமில்லை. புறப்படு, தம்பி! புறப்படு! நாவலர் சொல்வது கேட்கிறதல்லவா, “சிறுத்தையே! வெளியே, வா!” நான் வயது முதிர்ந்துகொண்டு போகும் நிலையினன் அல்லவா! ஆகவே அவர்போல அழைக்கவில்லை.”செந்தமிழே வா!” என்று அழைக்கின்றேன்.

அன்புள்ள
அண்ணாதுரை
25-12-66

வெற்றி விழா காண.

விழாக்கள் நாட்டு மக்களின் வளர்ச்சி - வளம் - உளப்பாங்குகளை எடுத்துக்காட்டுவன!
கடமையுணர்ச்சியுடன் பணியாற்றிடின் புத்தாட்சி அமைத்திட இயலும்!
எழுஞாயிறு கண்டிடின் எங்கும் ஒளிமயம்!
நல்லரசு கண்டிடும் நற்பணிக்கான உறுதி பெற்றிடுவீர்!

தம்பி!

எல்லா வளங்களும் தருகிறேன், என் மக்களிடம் பரிவு மிகக் கொண்டிருப்பதனால்! இருந்தும் என் மக்களிடமே ஏழ்மை கப்பிக்கொண்டிருக்கக் காண்கின்றேன். ஏக்கம் கொள்கின்றேன்.

எல்லாச் சீரும் தந்துள்ளேன்; எனினும் என் மக்கள், இங்கும் வெளியிலும், கூலிகளாகி உழலக் காண்கின்றோம்; தங்கத் தொட்டிலில் தவழ்ந்த குழந்தை, பெரியவனான பிறகு கரத்தில் தகரக்குவளையுடன் காணப்படின், இரத்தமல்லவா வடியும் கண்களிலிருந்து.

எங்கும் காணப்படாத அளவு இலக்கியச் செல்வத்தைத் தந்துள்ளேன்; எனினும் என் மக்களிலே பெரும்பாலோர் எழுத்தறிவும் அற்றவராயுள்ளார்! கற்றோரிலும் மிகப் பலர், பகுத்தறிவற்றுக் கிடக்கின்றார். என் செய்வேன்! - என்று எண்ணி எண்ணித் தமிழன்னை

குமுறுகின்றாள் என்று கூறிடின், கற்பனை என்றும், கதைநடை என்றும் கூறிட முற்படுவர்.

ஆனால் தமிழகத்துக் குடில்களில் உலவிடும் ஒவ்வொரு தாயும், இந்நிலையில் இருந்திடக் காண்கின்றோம்; அந்தத் தாயே, தமிழன்னை; தத்தளிக்கும் தமிழன்னை!!

எனினும், அந்தத் தாயும் ஒரு நாள் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, மனையிலிருந்தும் மனத்திலிருந்தும் இருளை விரட்டிவிட்டு, புத்தொளி கூட்டி, புதுக்கோலம் புனைந்து பொங்கற் புதுநாள் கொண்டாடுவதனை ஒரு "மரபு' ஆக்கிக் கொண்டிருக்கக் காண்கிறோம்.

கவலைகள் மடிந்திடவில்லை; மறைந்துள்ள ஒரு நாள்; மறைத்துவைக்கப்பட்டுள்ளன, விழா நாள் என்பதால்.

விழாக்கள், ஒரு நாட்டு மக்களிடன் வளர்ச்சியையும் வளமும், உளப்பாங்கும் எந்நிலையில் உளது என்பதை எடுத்துக் காட்டுவன.

வீடும் நாடும் விழாக்கோலம் பூண்டு, மக்கள் ஒன்றுகூடி மனம் மகிழ்ந்து, கலைநடமிட, களிப்பு ஒளிவிட உலவிடும் நாள், விழா நாள்; திருநாள்!

நிம்மதியான வாழ்வும், நிலையான அரசும் பெற்றிருந்தாலொழிய, ஒரு நாடு, விழா நடத்திடும் இயல்பினைப் பெற்றிட முடியாது.

பிற நாடுகள் அந்நிலை பெறா முன்பே, தமிழகம் சீரான நிலை பெற்றிருந்ததனாலேயே, பொங்கற் புதுநாள், தமிழர் திருநாள், அறுவடைப் பெருநாள், பொன்னாள் நன்னாள் என்று பல்வேறு சிறப்புப் பெயர்களைப் பெற்றுள்ள தனித் திருநாளைக் கொண்டாடி வந்துளது.

அந்நாள், உமது இல்லத்தில் இன்பம் வழங்குவதாக அமையட்டும் என்று வாழ்த்துகின்றேன். கவலையும் கலக்கமும் கண்ணீரும் பெருமூச்சும் அந்த ஒரு நாளாகிலும், இல்லங்களில் இருந்திடாத நிலை வேண்டும்; களிப்பும் கனிவும், பரிவும் பாசமும், மலரும் மணமும், பசுமையும் பாங்கும், பாட்டும் கூத்தும், எழிலும் மழலையும் அந்த ஒரு நாளாகிலும் இல்லந் தோறும் அரசோச்சட்டும், இன்பம் என்றால் இப்படித்தான் இருக்கும், அன்புவழி என்றால் இதுபோலத்தான் இருக்கும், வளம் என்றால் இதுதான், வண்ணம் என்றால் இதுதான் என்று உணரச் செய்திடவாகிலும் ஆண்டுக்கு ஒரு நாள் இந்த அருமைத் திருநாளைப் பெறுகின்றோம்.

முயற்சி திருவினையாக்கும்; கூடி வாழ்ந்தால் கோடி இன்பம்; இல்லறமே நல்லறம்; நல்ல வீடு ஓர் பல்கலைக்கழகம்; மழலைக்கீடாகாது குழலும் யாழும்; - என்பன போன்றவைகளை ஏடுகளிலே படித்திடும்போது கிடைத்திடும் மகிழ்ச்சியைவிட, வீடுகளில், காண்பதற்கு வாய்ப்புக் கிடைத்திடும்போது, மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

இன்றுபோல் என்றென்றும் இருந்திடலாகாதா என்ற எண்ணம்கூடக் கொள்கின்றோம்; இருந்திடுவதில்லையே என்பதனை எண்ணி ஏங்குகின்றோம்.

இவ்வாண்டு பொங்கற் புதுநாள் கொண்டாடுங்காலை, ஏக்கம் துரத்திவிட்டு, ஏற்புடை ஓர் உறுதிகொண்டிட வேண்டுகின்றேன்.

பொழுது புலர்ந்தது; பொற்கோழி கூவிற்று; புதுமலர் காண்கின்றோம்; பொன்னொளி காண்கின்றோம்; விழா! எனவே இவை கண்டு மகிழ்கின்றோம்.

நாட்டுக்கே ஓர் பொற்காலம், பொழுது புலரும் நாள், கண்டிட முடியும் நல்லரசு அமைத்திடின். அந்த நல்லரசு அமைத்திடும் உரிமையாளரே, நாம் ஒவ்வொருவரும்! "இந்நாட்டு மன்னர்கள்!”

நாட்டு மக்கள் இவ்வாண்டு பொங்கற் புது நாளன்று, நல்லாட்சி அமைத்திடும் உரிமை பெற்றுள்ளோம் என்பதனை உணர்ந்து உவகை கொண்டிடல் வேண்டும்; அதற்கேற்ற முறையில் பணியாற்றிடும் உறுதி பூண்டிட வேண்டும்.

ஓர் திங்கள்கூட அல்ல; இரு கிழமைகளே இடையில்! இருளுக்கும் ஒளிக்கும் இடையில்! இல்லாமைக்கும் "எல்லோர்க்கும் எல்லாம்’ எனும் நிலைக்கும் இடையில்; அன்பு வழி மறந்து அறம் பழித்து நடாத்தப்படும் அரசியலுக்கும் அன்பரசுக்கும் இடையில்!

இந்த இடையிலே உள்ள நாட்களில், மக்கள் தமது கடமை உணர்ந்து, ஆற்றல் மறவாமல், நெறி பிறழாமல் பணியாற்றிடின், புத்தாட்சி அமைத்திட இயலும், நாட்டிலே புத்தொளி பரவிடச் செய்திட முடியும்.

முடியும், முயன்றால்! முயன்றோர் வெற்றி கண்டுள்ளனர்! முயன்று பல முடித்த மரபினரே நாம்! அதனை மறவாது, எழுச்சியுடன் பணிபுரிந்திடின், வெற்றி நமதே! ஐயமில்லை! உதயசூரியன் எழுவான்! ஐயமில்லை! எழு ஞாயிறு கண்டிடின், ஏது இருள்? எங்கும் ஒளிமயம்! அகத்திலும் புறத்திலும் நாடெங்கும்! வீடெல்லாம்!

அந்த எழிலையும் ஏற்றத்தையும் பெற்றாக வேண்டும் என்ற உறுதியைச் சமைத்தெடுத்து, தானும் உண்டு, மனையுளார் அனைவர்க்கும் தந்து மகிழ்ந்திட வேண்டுகிறேன்; மாண்பு பெற வேண்டுகிறேன்.

அகமும் புறமும்கொண்டோர் நாம்; இன்று அறியாமையின் பிடியில் சிக்கியுள்ளோம்.

கரும்பு விளையும் நாடு இது; மக்கள் கசப்பு உண்டு உழல்வது காண்கின்றோம்.

செந்நெல் விளைந்திடும் வளமிகு பூமி இது; இன்று கட்டாயப் பட்டினி, அரச கட்டளையாகிடக் காண்கின்றோம்.

எல்லோரும் ஓர் நிறை என்ற கவிதை பெற்றோம்; இன்றோ இல்லாதார் தொகை வளர்ந்திடக் காண்கின்றோம்.

உலை கொதிக்கிறது, பானை இசைபாடுகிறது, கொண்டு வந்து போடு! கொண்டுவந்து போடு! என்று; அரிசி கொட்டிடின் சோறு காண்போம்; மணலைக் கொட்டிடின்?

செங்கரும்புத் துண்டொன்றைத் தூக்கிச் சென்று சிவந்த அதரம் இரத்தச் சிகப்பாகு மட்டும் கடித்துத் தின்கின்றான், கண்ணின்மணி! காண்கின்றோம், களித்திடுகின்றோம். கரும்புத் துண்டாக இன்றி, மூங்கில் துண்டாக இருந்திடின்!

முக்கனி கிடைத்திடாமல், எட்டிக்கனியைக் கொட்டி இஃது வேண்டுமோ என்று கேட்டிடின், என்ன எண்ணிக்கொள்வோம்! இன்று "பசுமையை’ வெகுபாடுபட்டு இல்லங்கள் தேடிப் பெறுகின்றன. பசுமை, தன்னாலே கிடைத்திடவில்லை; தாராளமாகவும் காணப்படவில்லை.

எங்கும், என்றும் பசுமை கொலுவிருக்கத்தக்க நிலை பெற்றிடலாம் இன்பத் திரு இடத்தில்; அதற்கானதோர் நல்லரசு அமைத்திடின்.

இன்று, ஏற்படுத்திக்கொண்டுள்ள விழாக்கோலம் இயற்கையானதாகிட, இன்று வருவித்துக்கொள்ளும்

மகிழ்ச்சி உயிருள்ளதாக, இன்று மனையுள்ளார் கொண்டிடும் பொலிவு என்றும் நிலைத்திருக்க யாது செயல் வேண்டும் என்ற எண்ணத்தைப் பெற்றிட வேண்டும்.

தமிழன் எண்ணிப் பார்த்திடின், தக்க வழியினைக் கண்டறியும் திறனுடையான்.

தமிழன், செயலார்வம் கொண்டிடின் எண்ணியதைச் செய்து முடிக்கவல்லான்.

தமிழன் கத்தும் கடல் அடக்கிக் கலம்விட்டான். கடக்கொணாதது என்று மற்றையோர் எண்ணி மலைத்திருந்த நாட்களிலேயே!

கங்கைகொண்டான், கடாரம் வென்றான், இமயம் சென்றான், கொடி பொறித்தான்; ஏற்றம் எல்லாம் கண்டான்.

வரலாறு மறவாமல் இருந்திடின், இன்றும் எண்ணியதை முடித்திட இயலும்.

கழகம், அந்த வரலாற்றுச் சிறப்பினை நித்தநித்தம் எடுத்துக் கூறி வருகிறது.

நல்லாட்சி அமைத்திடுவீர் என்று வேண்டியபடி இருந்து வருகிறது.

இன்று பொங்கற் புதுநாள்! மகிழ்ச்சி பெற்றிடும் நன்னாள். இந்நாளில் என் வாழ்த்துக்களை வழங்குகிறேன்; ஒன்று கேட்கின்றேன்; நல்லரசு கண்டிடும் நற்பணிக்கான உறுதி பெற்றிடுவீர், மற்றையோர்க்கும் அளித்திடுவீர்!

இன்று விழா மட்டுமல்ல; வீரம் விளைவிக்க உறுதி கொண்டிடும் நாள்!

நாடு விழாக்கோலம் கொண்டிடச் செய்வோம் என்ற உறுதி கொண்டிடும் நாள்.

விழா தரும் மகிழ்ச்சி அந்த உறுதியினை வளர்த்திடட்டும்! ஆற்றலை வளர்க்கட்டும் வெற்றி நோக்கி நடைபோடச் செய்யட்டும்!

கல்லும் முள்ளும் மண்டிக் கிடந்த இடம், மலர்த் தோட்டமானதும், கனிதரு நிறை சோலையானதும், கதையல்ல! விழா காட்டிடும் உண்மை!

ஒரு நல்லாட்சி கண்டிடும் ஆற்றல் நமக்கு உண்டு என்பதனை, உழைப்பின் மூலம் நாட்டின் புதிய காலத்தையே மாற்றிட வல்லோர் நமது மக்கள் என்பதனை எடுத்துக் காட்டிடும் இந்நாளன்று; நல்லாட்சி அமைத்திட உறுதி கொண்டேன்; செய்து முடிப்பேன்; வெற்றி காண்பேன்! - என்ற முழக்கம் எழட்டும்; புறப்படு,தம்பி! புறப்படு!

புனிதப் போர் நடாத்திட! வெற்றி பெற்றிட! புறப்படு! ஒரு முறை - மற்றோர் முறை - விழாக்கோலம் கொண்டுள்ள மனையினைக் கண்டு களித்திடு; இல்லத்துள்ளாரின் இன்முகம் கண்டு மகிழ்ந்திடு!

புதியதோர் “தெம்பு’ பெறுகின்றாய் அன்றோ! அந்தத்”தெம்பு’ தரும் நடையுடன் புறப்படு. தமிழன்னை அழைக்கின்றாள், எல்லா வளமும் நான் தந்தேன், தக்க முறையில் பயன்படுத்தி என் மக்களை வாழவைக்கும் நல்லரசு அமைத்திட வா! மகனே வா என்று.

ஆமாம், தம்பி! அன்னை அழைக்கின்றாள் புறப்படு! - என்று நானும் அழைக்கின்றேன்! வெற்றி விழா காணலாம், வீரநடை போடலாம், புறப்படு!

அன்புள்ள
அண்ணாதுரை
8-1-67

கனியும் மலரும் நீயே!

“கிழமை தவறாமல்”தம்பி!’ என்று அழைத்த உன் அண்ணன் இன்று முதலமைச்சர்!’

“தேவையற்றதென்றோ தேனென இனிக்கிறதென்றோ கூறமாட்டேன்!’

”ஊர்திபோலப் பணியாற்றியபடி இருக்கிறேன்.’

“தம்பியுடன் அளவளாவுதலை இழந்திருப்பதிலே ஓர் ஏக்கம்! ஒரு தவிப்பு!’

”நம்மால் முடிந்த அளவு செய்வோம்!’

“என் பணி மக்கள் தேவைகளைத் தீர்த்து வைத்திட முயல்வதே!’

”அண்ணன் பொறுமையாளன் என்பது பெருமளவு உண்மைதான்!’

“காலமல்லவா, கடமைகளை மேற்கொண்டுள்ளவர் களைக் கடுமையாக வேலை வாங்குகிறது!’

”என் நிலைபற்றி ஒரு துளி!’

“என் பணி வெற்றிபெற உன்னைத்தான் நம்பியிருக் கிறேன், தம்பி!’

”என் ஆற்றல் என்பது தம்பிமார்களின் ஆற்றலின் கூட்டு!’

“நான் கூட்டுச் சக்தியின் உரிமையாளன்!’

”என் ஆற்றலின் வளர்ச்சி, உன் ஆற்றலின் வளர்ச்சியிலே இருக்கிறது!’

தம்பி! தித்திக்கும் அந்தச் சொல்லைக் கிழமை தவறாமல் "காஞ்சி’ இதழ் மூலம் சொல்லிச் சொல்லி மகிழ்ச்சி பெற்றுக்கொண்டு வந்த உன் அண்ணன், இன்று. . . .!

ஆமாம்! என் அண்ணன் இன்று முதல் அமைச்சர் என்று பெருமிதத்துடன் கூறுகிறாய், அறிகிறேன்; ஆனால் நான். . . !

ஒவ்வொரு கிழமையும் நாட்டு நடப்புகள்பற்றி, பிரச்சினைகள் குறித்து எனக்குத் தோன்றிடும் எண்ணங்களை உன்னுடன் பங்கிட்டுக்கொண்டு, உன் மூலம் மற்றவருக்கு அந்த எண்ணங்களை அளித்துக்கொண்டு வந்த அந்த நாட்களை எண்ணிக்கொண்டால். . . . !

சொல்லவேண்டுவனவற்றை சொல்லியாகிவிட்டது என்ற நிலையும் இல்லை. ஏதேதோ நிரம்ப, தொடர்ந்து, சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. நாட்டிலும் வெளியிலும் நமது கவனத்தை ஈர்க்கத்தக்க நமது வாழ்வுடன் தொடர்புகொண்டுள்ள எத்தனை எத்தனையோ நிகழ்ச்சிகள் சுழன்றபடி உள்ளன; அவை பற்றி உன்னுடன் உரையாட வேண்டும் என்ற ஆவல் உள்ளத்தில் ததும்பியபடி இருக்கிறது; ஆனால். . . . !

ஒரு நிலைக்கு ஆட்பட்டுவிட்டிருக்கிறேன் - உன் ஆணை காரணமாக நான் மேற்கொண்டுவிட்டுள்ள ஒரு கடமையுடன் பிணைக்கப்பட்டிருக்கிறேன்; தேவையற்றது என்றும் கூறமாட்டேன், தேனென இனிக்கிறது என்றும் கூறமாட்டேன்; ஏற்றுக் கொண்டுள்ள பொறுப்பினைச் செம்மையாக நிறைவேற்றித் தீருவார் என் அண்ணன், பாரீர்! பாரீர்! - என்று ஊரெல்லாம், தம்பி! நீ கூறியபடி இருந்திடுவது தெரிகிறதே; நான் அந்த உன் உணர்வுக்கு ஏற்றபடி பொறுப்பினை நிறைவேற்றியாக வேண்டுமே, இல்லை என்றால் “என்னடா வீரனே! ஏதேதோ பேசிக் கொண்டாயே உன் அண்ணனைப் பற்றி! அவன் இலட்சணம் இவ்வளவுதானா!” என்று எங்கேனும் எவரேனும் ஒரு

சுடுசொல் கூறிடின், துடிதுடித்துப் போவாயே; அதனை உணர்ந்திருப் பவனல்லவா உன் அண்ணன். ஆகவே சாலையில் தங்காமல் சோலை கண்டு மயங்காமல் ஓடையில் நீந்திட நினைக்காமல், ஓய்வினை நாடிடாமல், கடமை! கடமை! கடமை! என்று ஓடியபடி உள்ளதே நீராவியால் உந்தப்படும் ஊர்தி, அதுபோல, ஒவ்வொரு நிமிடமும், பணியாற்றியபடியே இருக்கிறேன்; கடினம் இல்லை என்று கூறுவதற்கு இல்லை; வெற்றி இல்லை என்று கூறுவாரும் இல்லை; ஆனாலும், உன்னுடன் கிழமை தவறாமல்,"காஞ்சி' இதழ் மூலம் அளவளாவிவிடுவேனே, அதனை இழந்திருப்பதனை எண்ணிக் கொள்ளும்போது, ஒரு ஏக்கம், ஒரு பெருமூச்சு, ஒரு தவிப்பு ஏற்படத்தான் செய்கிறது. என் செய்வது!

"ஆண்டு மலருக்காகிலும். . . ." என்று முடிவு பெறாத வாக்கியத்தை வீசினான், இளங்கோவன்;"ஆகட்டும்'' என்று பதிலளிக்க ஆரம்பித்து, அடடா! அது "அவருடைய' பணியல்லவா என்ற நினைவு எழவே சிரித்தேன்;"என்ன அப்பா! ஏன் சிரிப்பு, ஏன்?'' - என்றான் இளங்கோவன் முன்பு - சில ஆண்டுகளுக்கு முன்பு தயாரித்து வைத்திருந்த குறிப்பு ஒன்றினைக் கண்டெடுத்து காட்சிக் கதையாக்கி, "காஞ்சி' - ஆண்டு மலருக்கெனத் தந்தேன்; எப்போதும்போல, மலரில் என் இதழும் இருக்கும் என்பதிலே ஒரு மகிழ்ச்சி. ஆனால் இந்த மகிழ்ச்சியை ஒவ்வொரு கிழமையும் பெற முடிந்தால். . . . பெற முயன்றால் என்ன. . . . முயலலாம் என்ற எண்ணம் வலுவடைந்து வருகிறது. . . . முயல்கிறேன். . . . ஆயினும் இதுபோது நான் மேற்கொண்டுள்ள கடமை. . . . ! எவ்வளவு நேரம் கிடைப்பினும் அவ்வளவையும் விழுங்கி விட்டு. . . . மேலும் வேண்டும் வேண்டும் என்று கேட்டபடி இருக்கிறது.

கவலை அதிகமா அண்ணா! - என்று கேட்கத் தோன்றும்; நாமாக ஏற்றுக்கொண்ட கடமையைச் செய்து முடித்திட முனையும்போது, கவலை எங்ஙனம் நம்மை கப்பிக்கொள்ள முடியும்? கவலை அல்ல தம்பி! கவலை அல்ல!! செய்து முடித்திட எண்ணிடும் பணிகளைக் கணக்கெடுக்கும்போது, அவ்வளவுக்கும் தேவையான ஆற்றலைப் பெற்றிருக்கிறோமா என்ற ஐயப்பாடு எழத்தான் செய்கிறது.

இது என்ன பிரமாதம்!
இது எனக்கு எம்மாத்திரம்!
இதுவா! பூ! மிகச் சாதாரணம்!

என்று நான் எப்போதும் சொல்லிப் பழக்கப்படாதவன்; சொல்லாததற்குக் காரணம், அத்தகைய ஒரு எண்ணம் என்றுமே எனக்கு ஏற்படாததுதான். ஆயினும்,

வேறு எவர்மீதாவது சுமையைப் போட்டுவிடுவோம் என்ற போக்கிலேயும், நான் என்றும் இருந்தது இல்லை.

நம்மால் முடிந்த அளவு செய்வோம்.

நம்மைவிட வல்லவர்கள் கிடைக்கிறவரையில் நாம் இதனைச் செய்து வருவோம் என்ற எண்ணம் எனக்குப் பல காலமாகத் துணை இருந்து வருகிறது.

செய்யப்பட வேண்டியவைகளை எண்ணிக்கொள்ளும் போது. . . .!

குப்பை கூளங்களை அப்புறப்படுத்த ஒரு தாய் பெருக்கிக் கொண்டிருக்கும்போது, தத்தித் தத்தி நடந்துவரும் குழந்தை பொருளை எடுத்து இங்குமங்கும் வீசிடக் கண்டு, வேலை மேலும் வளருகிறதே என்ற கவலை பிறந்திடினும், குழந்தையை முத்தமிட்டு - (பரிசு தருகிறாள்!

வேலையைக் கெடுத்ததற்கு!!) - மகிழ்கின்றாளே, அந்தத் தாயின் உள்ளத்திலே குழந்தையின் எதிர்காலம் எழிலுடன் விளங்கிட என்னென்ன செய்திட வேண்டும் என்று எண்ணிடுகிறாள் - அறிந்திட முயன்றதுண்டா? கேட்டுப் பார்த்ததுண்டா?

கேட்டால் மட்டும் என்ன, அந்தத் தாய், விவரமாக எடுத்துக் கூறவா செய்வாள்? ஒரு புன்னகை மலரும், அதிலே ஓராயிரம் ஆவல்கள் ஒளிவிடும்! என் மகனை. . . என் மகனை. . . என்று ஒரு இசை பிறக்கும், மற்றவற்றை எல்லாம் முத்தங்களாக்கிக் குழந்தையின் கன்னத்தில் பதித்துவைப்பாள். அந்தக் கன்னம், தான் பெற்ற செய்தியினை எடுத்து இயம்பவா செய்யும்! கலகலவெனச் சிரிப்பான் குழந்தை! பொருள் என்ன. . . .? முயன்றவர் பலர். அந்தப் பொருளை அறிந்திட! வென்றவர் எவரும் இல்லை!

புள்ளினமும் பேசிடக் கேட்கிறோம்; பூங்காற்றும் ஏதோ பேசத்தான் செய்கிறது; புனலிடைத் துள்ளிடும் மீனினமாகட்டும், கானிடை ஓடிடும் மானினமாகட்டும், பேசாமலா உள்ளன? அருவியே ஏதோ ஒலி மூலம் எதையோ சொல்லியபடிதானே இருந்திடக் காண்கிறோம்! பொருள் மட்டுந்தானே விளங்க வில்லை. அந்தப் பொருள் மட்டும் விளங்கிவிட்டால். . . . ! எண்ணிடும்போதே, இந்த உலகிற்குள் உறங்கிக்கிடக்கும் ஒரு உலகம் நிழலளவுக்குத் தெரிவதுபோல் தோன்றுகிறது.

எனக்கு உள்ள வேலை, இந்த இயற்கையின் புதிர் தரும் பொருளைக் கண்டறிந்திடுவது அல்ல. அது என்னால் முடியக் கூடியது என்று எண்ணுவதுகூட பேதமை.

எனக்கு அளிக்கப்பட்டுள்ள பணி, பொருள் விளங்க நன்கு புரியும்படி, மக்கள் தமது தேவைகளை எடுத்து இயம்புகிறார்களே,

அவைகளைக் கேட்டு, தீர்த்து வைத்திட முயற்சி எடுத்திடுவதாகும்.

எளிதானது என்பாயா, தம்பி! கூறிடமாட்டாய்! அறிவுத் தெளிவுள்ளவனல்லவா, நீ! நீ அறிவாய், தேவைகளை அறிந்து நிறைவேற்றி வைத்திடுவது எளிதல்ல என்பதனை.

சரியான முறையிலே அறிந்துகொள்வதற்கே ஒரு தனித் திறமை வேண்டும். தொடர் தொடராகத் தேவைகள் வளருகின்றனவே என்று எண்ணி, சலிப்பு அடையாதிருக்க வேண்டும்.

ஒரு தேவையை நிறைவேற்றியவுடனே மற்றோர் தேவையினை எடுத்துக் காட்டுகின்றனரே என்று எரிச்சல் அடையாதிருக்க வேண்டும்.

இதற்கே பலருக்கு முடிவதில்லை. ஆனால், அண்ணனுக்கு இதிலே அதிகமான கஷ்டம் கிடையாது - பொறுமையுடன் இருந்து பழகிவிட்டிருக்கிறான் - என்பாய். உண்மைதான் ஓரளவுக்கு! ஓரளவுக்கென்ன, பெருமளவு உண்மைதான்! ஒப்புக்கொள்கிறேன்.

ஆனால், தேவைகளைக் கணக்கெடுப்பதுடன், வரிசைப் படுத்துவது, வகைப்படுத்துவது என்பது அவ்வளவு எளிதானது அல்ல. தேவைகளின் நியாயத்தைக் கண்டறிவது அதனினும் கடினம்.

அதனினும் கடினம், ஒருவனுடைய “தேவை’யை நிறைவேற்றி வைக்கும்போது அது வேறு ஒருவருடைய”தேவை’யையும், “உரிமை’யையும்,”வசதி’யையும் கெடுத்துவிடுகிறதா என்று கண்டறிவது.

எல்லாவற்றையும்விடக் கடினம், நியாயமானது என்று அறிந்தான பிறகும் அந்தத் தேவையை நிறைவேற்றிக் கொடுப்பதற்கான "வலிவும்

வாய்ப்பு’ம் பெற்றிடுவது.

காத்தான் ஒரு ஏழை! வீட்டு மனை வேண்டும் என்கிறான். தேவை, நியாயம்! இடம்கூடக் காட்டுகிறான், இலுப்பத் தோப்புக்குப் பக்கத்தில் ஒரு இடம்; கரம்பு; விலை அதிகம் தரத் தேவையில்லை என்கிறான். மறுப்பதற்கில்லை.

முத்தன் ஒரு உழவன்; பிறர் கையை எதிர்பார்த்துத் தீரவேண்டிய நிலை அல்ல; அதேபோது, “பிரமாதமான’ பணக்காரனும் அல்ல. அவன் அந்தக்”கரம்பு’க்குச் சொந்தக்காரன். அதுதான் என் வயலுக்கு வழி! அது பறிக்கப்பட்டுவிட்டால், அடைக்கப்பட்டுவிட்டால், என் ஆறு ஏக்கர் அயன் நஞ்சையும் பாழாகிவிடும்; பிறகு நான் அதோகதிதான் என்கிறான். நியாயம்! இதுவும்!!

முத்தன் பக்கம் நிற்பதா? - காத்தானிடம் கனிவு காட்டுவதா. . . .?

தேவைகளின் தன்மைகளையும் ஒன்றோடொன்று அந்தத் தேவைகள் மோதிக்கொள்ளக்கூடிய வகையினையும் விளக்கிட, காத்தானையும் முத்தனையும், சான்று கூற அழைத்தேன்! அவர்கள் என் கற்பனையூர் வாசிகள்! அந்த இருவர். எங்கே உளர்? வடாற்காடா, தென் ஆற்காடா என்று தேடத் தேவையில்லை என்பதனைக் கூறிவை, தம்பி!!

கடினமும் சிக்கலும் இருந்திடினும், பிரச்சினைகளைத் தீர்க்காமல், காலத்தை ஓட்டிக்கொண்டிருக்க முடியுமா! காலமல்லவா, கடமையை மேற்கொண்டுள்ளவர்களைக் கடுமையாக வேலை வாங்குகிறது!

அந்த வேலை செய்ததுபோக “மிச்சம்’ நேரம் கிடைத்து, முன்புபோல”காஞ்சி’ மூலம் உன்னுடன்

அளவளாவ விரும்புகிறேன்.

“அந்த வேலை’ செய்வதற்குத் தேவைப்படும்”தெம்பு’கூட, உன்னுடன் அளவளாவுவதன் மூலம் பெற முடியுமே. . . பெற்றுக் கொண்டு பெருமிதம் கொண்டவன்தானே. . .

ஆகவே, தம்பி! இந்த மலரில், என் "நிலை‘பற்றி ஒரு "துளி’ எடுத்துக் கூறினேன்! இதிலேயே எத்தனையோ மகிழ்ச்சி பெறுகிறேன்! இதனைத் தொடர்ந்து. . . .!!

கதைகளாக, வரலாற்றுத் துணுக்குகளாக, உரையாடலாக. . . எத்தனை எத்தனையோ கூறிடத் துடித்தபடி இருக்கிறேன். . .

அண்ணா! கிழமை தவறாமல் மடல் பெற்று மகிழ்ந்தவனே நான்! இனியும் அந்தச் சுவை பெறத்தான் விழைகிறேன். ஆனால் உனக்குள்ள புதிய பொறுப்பினை உணர்ந்துகொள்ளாதவ னல்லவே! ஆகவே உன்னால் இயன்ற அளவு "காஞ்சி’ இதழ் மூலம், கருத்தளித்து வந்திடின் போதும், கடிதமோ, கட்டுரையோ, கதையோ, வரலாறோ - வடிவம் எங்ஙனம் இருப்பினும், உன் எண்ணத்தை எனக்கு அறிவித்து வந்திடின்போதும் இயன்ற அளவு என்று கூறிடுவாய். உணர்கிறேன், முயல்கிறேன்.

நான் மேற்கொண்டுள்ள பணி வெற்றி பெற, உன்னைத்தான் நம்பியிருக்கிறேன், அறிவாய். உன் உள்ளத்தில் உலவிடும் எண்ணங்களை நான் கண்டறிந்தமட்டில், செயல்படுத்தி நாட்டினைச் சீர்படுத்தி, மக்களின் வாழ்வினைச் செம்மையான தாக்கிட, என்னால் இயன்ற அளவு பணியாற்றி வருகிறேன்; அந்தப் பணியாற்றிடும்போது, ஒவ்வொரு நிமிடமும், தம்பி உடையான் படைக்கு அஞ்சான்! என்ற பழமொழியை எண்ணிக் கொள்கிறேன். நான் செய்திட முனையும் ஒவ்வொரு

நற்செயலின் போதும், நீ உடன் இருக்கிறாய் என்ற உணர்வுடனேயே இருந்து வருகிறேன்.

பிரச்சினைகளின் கடினம் என்னை மிரட்டும்போது, அவைகளை நிறைவேற்றி வைத்திடும் ஆற்றல் நம்மிடம் ஏது என்ற கவலை எழும்போது, உன்னைத்தான் எண்ணிக்கொள்கிறேன்; தம்பிகளின் தனித்தனி ஆற்ற-ன் மொத்தத்தின் தன்மையைக் கணக்கெடுக்கும்போது, பிரச்சினைகளைத் தீர்த்திடத் தேவைப் படும் ஆற்றல் போதுமான அளவு கிடைத்திடும் என்ற நம்பிக்கை எழத்தான் செய்கிறது. என் ஆற்றலை மட்டுமே நம்பிடின், ஏக்கமோ, ஏமாற்றமோதான் விளைவாகிட முடியும். என் ஆற்றல், என் ஆற்றல் மட்டுந்தானா? இல்லை, தம்பி! இல்லை! என் ஆற்றல் என்றது, என் தம்பிமார்களின் ஆற்ற-ன் கூட்டு - நான், இந்த கூட்டுச் சக்தியின் உரிமையாளன்!

ஆகவே, தம்பி! உன் விருப்பத்தை அறிந்து ஆணை கேட்டு, அரசாளும் பொறுப்பை ஏற்றுக்கொண்டதனாலே ஏற்பட்டு விட்டுள்ள புதிய நிலையில் நாம் பொறுப்புடன் நடந்து, பொது மக்களின் நல் வாழ்வுக்கான வழியினில் நடந்து, வெற்றி கண்டோம் என்பதனை ஊரும் உலகமும் ஒப்புக்கொண்டு பாராட்டத்தக்க முறையில், நாம் நடந்துகொள்ள வேண்டும், தம்பி! நான், தம்பிமார்களின் தனித்தனி ஆற்றலின் ஒட்டு மொத்தம் என்று குறிப்பிட்டேன்.

ஆகவே என் ஆற்றல், உன் ஆற்றலிலே இருக்கிறது.

என் ஆற்றலின் வளர்ச்சி, உன் ஆற்றலின் வளர்ச்சியிலே இருக்கிறது.

கனி குலுங்கா மரமும், மலர் ஆடாச் செடியும், கதிர்

குலுங்காப் பயிரும் எற்றுக்கு?

கழகம், உன் ஆற்றல் நிரம்பிய கழனி! கனியும் மலரும் நீயே! கதிர் மணியும் நீயே! கனி பெற்றதால் மரம் பெருமைகொள்வது போல, உன்னைக் கொண்டிருப்பதனால் கழகம் பெருமை பெற்றுளது. உன்னைத் தம்பியாகப் பெற்றுள்ள நானோ! சொல்லவா வேண்டும், களிப்பிலே மிதக்கிறேன், கனவு பல காணுகின்றேன். நமது நாட்டை எழிலுள்ளதாக்கிட! மக்களின் வாழ்வு செம்மையானதாக்கிட! உன் துணைகொண்டு அந்தத் தூய தொண்டிலே வெற்றி பெற்றிட முடியும் என்று நம்புகிறேன்! வா! தம்பி! வா! தூய தொண்டாற்றி வெற்றி கண்டிடலாம், வா! என்று அழைக்கின்றேன்; மறுகணம், மனக் கண்ணால் காண்கின்றேன், உன் குறும்புப் புன்னகையை! பொருளும் தெரிகிறது! வா! வா! என்று அழைக்கிறாயே, அண்ணா நான் எங்கே சென்றுவிட்டேன், உன்னுடன்தானே இருக்கின்றேன் என்று அந்தப் புன்னகை கூறுகிறது. ஆமாம்! தம்பி அறிந்து அகமகிழ்கின்றேன்! வாழ்க, வளர்க, வெல்க உன் ஆற்றல்!

அன்புள்ள
அண்ணாதுரை
5-11-67

புதுமை இன்பம்

தம்பி!

வழக்கமான தழதழப்பு இல்லையே என்கிறாயா? ஒப்புக் கொள்கிறேன். ஏக்கம் கலந்திருக்கிறது. வேண்டுமென்று அல்ல, நானாக விரும்பி இழைத்ததும் அல்ல. நிலைமை அவ்விதம். அந்த நிலைமைக்கும் பொறுப்பு நானல்ல. உன்னால் உருவாக்கப்பட்ட நிலை. உணரும் பக்குவம் பெற்றவனாயிற்றே, மேலும் விளக்கம் அளிக்க வேண்டுமா?

சென்ற ஆண்டு பொங்கற் புதுநாளன்று உன் பக்கம் நின்றிடவும், பரிவினைப் பெற்று மகிழ்ந்திடவும், இல்லந்தனிலே

"புனலிடை மூழ்கிப் பொழிலிடை உலவிப்
பொன்னனள் இழையும் துகிலும் பூண்டு
கனிமொழி பேசி'

நீ களித்திருக்கும் காட்சியினைக் கண்டு மகிழ்வுபெறும் நிலையிலே இருந்தேன். அங்ஙனம் இருந்து வந்த என்னை, அதிலே பெறும் இன்பம் வேறு எதிலும் இல்லை என்ற எண்ணம் கொண்ட என்னைப் பிடித்திழுத்துக்கொண்டுபோய் ஓர் பீடத்தில் அமர்த்திவிட்டாய். பெரு வெற்றி அல்லவோ அண்ணா என முழக்கமிட்டாய். நற்காலம் பொற்காலம் என்றெல்லாம் மகிழ்கின்றாய். நானும் என்னாலான அளவுக்கு உன் நம்பிக்கைக்கு

ஏற்றவனாக நடந்துகொள்வதில் முற்பட்டிருக்கிறேன். எனினும், ஒவ்வோர் ஆண்டும் இந்தப் பொங்கற் புதுநாளன்று உன் புன்னகை தவழ்ந்திடும் முகத்தினைக் கண்டு அந்தப் பொலிவினைப் போற்றித் தங்குதடையற்ற நிலையில் இருந்து வந்த நான், "கட்டுண்டு’ கிடக்கிறேன் என்பதனை எண்ணும்போது, ஓரளவு வருத்தமாகவே இருக்கிறது.

இந்நாளினையே நாம் நம் திருநாளாகக் கருதி வந்திருக் கிறோம்.

இந்நாள் நமக்குத் தேவையான ஏற்புடைய கருத்தளிக்கும் பொன்னாள் - ஐயமில்லை.

முன்னாள் தீவினையைப் போக்கிக்கொள்வதற்கு என்று அறிவிக்கப்பட்டுள்ள "திருநாள்’ தமிழகத்திலே பல உண்டு.

"தமிழகத்தில் பல உண்டு என்றுதான் கூறினேன்; தமிழருக்கு என்று கூறவில்லை’ கவனித்தனையா? பொருள் பொதிந்திருக்கும். உனக்கா விளக்கமளித்துப் புரியச் செய்திட வேண்டும்? மணம் கண்டே முல்லையா, மல்லியா, மனோரஞ்சிதமா, மகிழம்பூவா என்று கண்டறிபவனல்லவா? ஓ, ஓ! ஒன்று மறந்துவிட்டேன். இவை அவ்வளவும் ஒருங்கே கலந்த மணமும் ஒன்று உண்டு என்கின்றாய். தெரிகிறது தம்பி! நன்றாகத் தெரிகிறது உன் மனையிலுள்ள மணமலரைக் குறிப்பிடுகிறாய் வாழ்க உன் மனையுளாரும் நீயும்! கமழுக நறுமணம்! பொங்குக இன்பம்!

சென்ற ஆண்டு பொங்கற் புது நாளில் நீ கொண்டிருந்த எண்ணத்தை நானறியச் செய்தாய் - நாடறியச் செய்தாய். இந்நாளில் "நமது அரசு’ நடந்திடுகிறது என்ற சுவைமிக்க எண்ணத்தை அணைத்தபடி இருக்கின்றாய். இந்த ஆண்டு பொங்கற் புதுநாள் புத்தரிசி மட்டுமல்ல - புத்தாட்சி

நடைபெறுகின்றது என்று பூரிப்புடன் இருக்கின்றாய்.

உணவு நெருக்கடி மிகுந்திருக்கிறது சென்ற ஆண்டு; இவ்வாண்டு போதுமான அளவு உணவுப் பொருள் கிடைத்திருக்கின்றது. அதிலும் தமிழகத்தில் சில இடங்களிலேனும் "மலிவு' விலையில் என்பது, உண்மையிலேயே நமக்கு மகிழ்ச்சி தரத்தக்கதுதான், ஐயமில்லை. ஆனால். . .!

தேவைப்படும் அளவுக்கு என்னால் மக்களுக்கு ஆற்றிட வேண்டிய தொண்டினைச் செய்திட இயலவில்லை. கிடைத்துள்ள வாய்ப்பும் வசதியும் குறைவு மிகுதியும் கொண்டதாக அமைந்துளது திருத்த - புதுப்பிக்க முயன்றபடி இருக்கிறேன் - முயற்சி திருவினையாக்கும் என்ற முதுமொழியில் நம்பிக்கை யுடன். காலம் கனியவில்லை என்ற நம்பிக்கை இல்லாமலுமில்லை.

பொங்கற் புதுநாள் இன்று. பாலில் அரிசியிட்டுக் கொதிக்கச் செய்திட உன் பாவை ஈடுபடும்போது, இன்னமும் பொங்கவில்லையா என்று விழியால் பல முறையும், சொல்லால் சில முறையும் கேட்கின்றாய். இதற்குள்ளாகவா என்ற பதிலைப் பாவை அளித்திடக் கேட்கின்றாய். பார்வையோ, "இத்தனை அவசரமா' என்று கேட்கிறது.

அம்முறையில் பதிலளிக்க மாதரசி உரிமை கொண்டுள்ளது இயற்கை என்பதிலும், அம்முறையில் அமைந்திடுதல் பொருந்தா தன்றோ, இனியும் நான் செய்திடவேண்டியவைகளைச் செய்து முடித்திட - ஆர்வமும் ஆற்றலும் எனக்குக் கிடைத்திட உன் துணையும் தோழமையும் பெருமளவு தேவை. தந்திடத் தயக்கம் காட்ட மாட்டாய். தந்தபடி உள்ளாய். அறிந்துமிருக்கிறேன். நன்றி கூறி மகிழ்கின்றேன்.

நமதாட்சி, அமைந்தது - நாட்டுக்கே ஒரு புதிய பொலிவு கிடைத்திடும் வாய்ப்பாகும் என்று

கூறிடுவார் பலர் உளர். அவர்தம் நட்புறவு அரசுக்கு அரணாக அமைவதுடன், செயலார்வம் நான் பெற்றிட வழி தருகிறது. அவர்கட்கெல்லாம் என் வணக்கம்.

பாலோ தெளிதேனோ, பாகோ பருப்போ, பாற் பொங்கலோ ஏதோ உன் இல்லத்தரசி தந்திடும்போது சுவைத்து உட்கொள் கின்றாயா, மகிழ்ச்சி தெரிவிக்கின்றாயா என்ற பரிவு நிறை பார்வையாலே கேட்கின்றாளே கவனித்தனையா, ஒரு சொல் "மிக நன்றாக இருந்தது' என்று நீ கூறிடின், கன்னல்-ன் சுவையிலும் அது மிஞ்சுவதாகிவிடும். கொஞ்சுகின்றாள் பார் குழந்தையுடன்! எதற்கு? உனக்குத்தான் தம்பி! நன்றி கூறுகின்றாள்.

எனக்குத் தேனும் பலாச்சுளையும் தந்து இனிக்கிறதா என்று கேட்டிடும் என் அரசி தானோ தன் குழந்தையின் குரலைக் கேட்டு, அதிலேயே தேனும் பாலும் பிறவும் உளது என்கின்றாளே, என்ன விந்தை? என்று எண்ணுகின்றாய்!

"குழந்தை குதலை மொழியமிழ்து!
குன்றாய் பழந்தமிழும் பாட்டும் அமிழ்து!
திங்கள் அமிழ்து திகழ் ஆவின்பால் அமிழ்தே!'
என்றாரே பாவேந்தர். அறியாயா?

ஒன்று நாம் உணருகின்றோம் தம்பி! எத்தனை இன்னலுக்கிடையிலே தள்ளப்பட்டிருப்பினும், இந்தப் பொங்கற் புதுநாளில் மட்டும் நமக்கு ஒரு மகிழ்வு, நாட்டுக்கு ஒரு பொலிவு வந்து சேர்ந்துவிடத்தான் செய்கிறது. நலிந்தோரும்கூட இந்நாளில் புதுத்தெம்பு வரக் காண்கின்றனர். இந்நாளில் மட்டுமே உழைப்பின் பெருமையை உணர்ந்து உரையாடி மகிழ்ந்திட வாய்ப்புக் கிடைக்கின்றது. இந்நாளே அந்நாளில் தமிழர் வாழ்ந்த நேர்த்திபற்றிய நினைவு எழுகிறது. நமக்கெல்லாம் எழுச்சி தரத்தக்க முறையிலும்

அளவிலும் நம்மைச் சுற்றிக் காணும் பொருள் யாவும் நிலமடந்தை தந்தனள் பரிவுடன். ஆயின், பாலூட்டும் தாயும் சேயுடன் விளையாட்டுக் காட்டி, "முடியாது - பிறகு - விடு - அடிப்பேன்' என்று கொஞ்சுவதில்லையா, அதுபோல நில மடந்தையும் தன் மக்களுக்கு வளம் அளிக்கு முன்பு, விளையாட்டுக் காட்டுவாள் வேண்டி, உழைத்துப் பெறு! உரிய நேரத்தில் பெறு! முயற்சி செய்து பெறு! என்று அன்பு ஆணையிடுகிறாள்.

நம் காலத்து நற்புலவர்கள் இந்தப் பொங்கற் புதுநாளின் மாண்பினை நலம் உணர்ந்து உவகை கொண்டாடிச் செய்துள்ளனர்.

"தமிழர் திருநாள் தை முதல் நாளாம்
அமிழ்தென இனிக்கும் பொங்கல் திருநாள்
உழைப்பின் உயர்வை உணர்த்தும் பெருநாள்
சளைப்பிலா முயற்சிதரு பயன்பெற்றுப்
புதுமை இன்பம் பூணும் நன்னாள்'
என்று முடியரசன் முழங்குகிறார்.

நாடு, "ஆம்! ஆம்!' என்கிறது.

இத்தகு திருநாளன்று என்னால் இயன்ற அளவு "கருத்து விருந்து' அளித்துள்ளேன்,"காஞ்சி' இதழ் மூலம், மற்றவற்றுடன் இதனையும் பெற்று மகிழ்ந்திருப்பாய் என்று.

பொங்குக இன்பம்! பொங்குக புதுமை! பொங்குக பொலிவு! வளம் பெருகிடுக! வாழ்வு சிறந்திடுக! வாழ்க தமிழ்! வாழ்க தமிழகம்!

அன்புள்ள
அண்ணாதுரை
14-1-68

Kaniyam Foundation Account Number : 606 1010 100 502 79 Union Bank Of India West Tambaram, Chennai IFSC – UBIN0560618 Account Type : Current Account

தமிழர் திருநாள்

★ சூழ்நிலைக் கைதி - முதலமைச்சர்!

★ இரண்டாண்டுகளாகக் "கிழமைக் கடிதம்' இழந்து தவிக்கிறேன்!

★ நலந்தானா?

★ மனிதத் தன்மையை நம்புகிறேன்!

★ பொங்கல் திருநாளுக்கு ஒப்பான விழா உலகமெங்கிலும் இல்லை!

★ "தமிழ் நாடு' பெயர் சட்டத்தில் ஏறிவிட்டது!

★ மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தேவை!

★ வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் தமிழ்த் துறைகள்!

★ மூன்று பல்கலைக் கழகங்களில் திருக்குறள் ஆராய்ச்சிக்கு இடம்!

★ பொங்கல் திருநாள் இருக்கும் இடத்திற்காக! மற்றவை போகும் இடத்திற்காக!

★ தமிழ்ப் பண்பாட்டினை எடுத்துக் கூறுவது பிளவு மனப்பான்மையாம்!

★ வெள்ளம் அழித்திடும்! வாய்க்கால் வளமூட்டும்!

★ உழைப்பே செல்வம்! உழைப்பே உயர்வு!

★ காலத்தை வீணாக்காமல் சமூகத் தொண்டாற்றுக!

தம்பி!

எந்தப் பணி எனக்கு இனிப்பும் எழுச்சியும் தந்து வந்ததோ,

எந்தப் பணியிலே நான் ஆண்டு பலவாக மிக்க மகிழ்ச்சியுடன் ஈடுபட்டு வந்திருந்தேனோ,

எந்தப் பணி மூலம் என்னை உன் அண்ணனாக நீ உள்ளன்புடன் ஏற்றுக்கொண்டு, பெருமிதத்துடன், உலகுக்கு அறிவித்து வந்தனையோ,

எந்தப் பணி வாயிலாக என் கருத்துக்களை உனக்கு அளித்து உன் ஒப்புதலைப் பெற்று அந்தக் கருத்துக்களின் வெற்றிக்கான வழியினைக் காண முடிந்ததோ,

எந்தப் பணியின் மூலம் தமிழகத்தை அறியவும், உலகத்தை உணரவும், தமிழ்ப் பண்பை நுகரவும் வழி கிடைத்து வந்ததோ,

எந்தப் பணி மூலம், எப்போதும் உன் இதயத்தில் எனக்கு ஓர் இடம் கிடைத்து அது குறித்து நான் அளவற்ற அகமகிழ்ச்சி பெற முடிந்ததோ,

அந்தப் பணியினை முன்புபோலச் செய்ய முடியாத வனாக்கப்பட்டு, முடியவில்லையே என்ற ஏக்கத்தால் தாக்கப்பட்டு, சூழ்நிலையின் கைதியாக்கப்பட்டுக் கிடக்கிறேன் என்பதனை அறிவாய்.

"சூழ்நிலையின் கைதி' - என்ற சொற்றொடருக்குத்தான், முதலமைச்சர் என்று முத்திரையிட்டிருக்கிறார்கள்.

தம்பி! தம்பி! தம்பி! - என்று கிழமை தவறாமல், பலப் பல ஆண்டுகள் உன்னை அழைத்து உரையாடி அளவளாவி வந்திருக்கிறேன். இரண்டு ஆண்டுகளாக அந்த விருந்தினை இழந்து தவிக்கின்றேன்.

முதலமைச்சர் என்ற முறையில் பல பிரச்சினைகள் பற்றிய கருத்துக்களை அறிக்கைகள், சொற்பொழிவுகள், சட்டமன்ற உரைகள் மூலம் நாட்டுக்குத் தந்துவிட முடிகிறது - தனிமையாக உன்னிடம் உரையாடி மகிழ்ந்திட என்று நான் வகுத்துக்கொண்ட "கிழமைக் கடிதம்' எழுதிட இயலவில்லை.

பிரச்சினைகளை விளக்கிட, ஐயப்பாடுகளைப் போக்கிட, அச்சம் துடைத்திட, மறுப்புக்கு மறுப்புரைக்க, “வாழ்க வசவாளர்' என்று அவர்களையும் வாழ்த்திட,”தம்பிக்குக் கடிதம்'' மிக நேர்த்தியான முறையில் பயன்பட்டு வந்தது.

எனக்குத் தோன்றும் எண்ணங்களை உன்னிடம் கூறிடுவதிலே, தனியானதோர் மகிழ்ச்சி.

எனக்கு ஏற்படும் மகிழ்ச்சியினை உன்னோடு பங்கிட்டுக் கொள்வதிலே ஓர் இன்பம்.

கவலை குடையும்போது, மன உளைச்சல் ஏற்படும்போது, உன்னோடு உரையாடி, தம்பி உடையான் படைக்கு அஞ்சான் என்ற எழுச்சி பெற்று வந்தேன்.

இப்போது? அந்த இன்ப நாட்களை எண்ணி எண்ணி ஏக்கம் கொள்கிறேன். சுமக்கும் பளுவினாலே கூனிக் குறுகி வாடுகிறேன். எத்தனை எத்தனையோ பிரச்சினைகளைப் பற்றிய கருத்துக்களைக் கூற நேரமோ வாய்ப்போ இன்றித் தவித்திடுகிறேன்.

ஆயினும், முன்பு செலவிட்டதைக் காட்டிலும் அதிக நேரம், வேலைக்காக ஒதுக்குகிறேன். இலக்கியச் சுவை நுகர்ந்திட நேரமில்லை. கலை அழகினை எண்ணிட நேரமில்லை. வேலை! வேலை! வேலை! ஓயாத வேலை! உடலும் உள்ளமும் அலுத்துப் போகும் அளவு. கடமையை நிறைவேற்றிக்கொண்டிருக்கவே காலம் போதவில்லை - களிப்புப் பெற்றிட உன்னிடம் உரையாடிட நேரத்தைக் கண்டறிவதே மிகச் சங்கடமாகிவிட்டது.

இந்தக் கிழமை எப்படியும் தம்பிக்குக் கடிதம் எழுதிட வேண்டும் என்று தீர்மானித்து எழுதத் தொடங்குவேன். தொலை பேசி மணி ஒலிக்கும். . .

சீப் பா. . .

ஆமாம், நான்தான். . .

எங்க ஊர் வாய்க்கால் விஷயமாக மனு அனுப்பினது பற்றி. . .

பரிசீலனையில் இருக்கிறது.

அண்ணா! நீங்க பார்த்து முடிவு செய்யவேண்டியது தானே, இதற்கு என்ன பரிசீலனை தேவை?

அப்படி அல்லவே. இலாக்கா பரிசீலனை செய்தாக வேண்டுமே. . .

அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. . . . எப்படியும் முடித்துக் கொடுத்தாக வேண்டும்.

சரி, சென்னைக்கு வரும்போது விளக்கமாகக் கூறுகிறேன்.

உடம்பைப் பார்த்துக்கொள்ளுங்கள் அண்ணா!

ஆகட்டும். ஆகட்டும்!

வேலைகளைக் குறைத்துக்கொள்ளுங்கள். இளைப்பும் களைப்பும் அதிகமாகத் தெரிந்தது போன மாதம் பார்த்தபோது.

தம்பி! என் மனத்துக்கு இனிமை தந்திடும் பணியிலே என்னை ஈடுபடுத்திக்கொள்ள முடியவில்லையே என்ற கவலை ஒரு புறம்; அத்துடன் பின்னிப் பிணைந்துகொண்டு என் உடல் நிலையைப்பற்றிய கவலை ஒரு புறம்.

என் பேரப் பெண், இளங்கோவனின் மகள் கண்மணி தன் மழலை மொழியில் பாடுகிறாள்.

நலந்தானா? நலந்தானா?
உடலும் உள்ளமும்
நலந்தானா?

என்று. எனக்கென்னவோ அந்தப் பாட்டைக் கேட்கும் போதெல்லாம், என் தம்பிகள் தங்கைகள் நாட்டின் நல்லோர் அனைவருமே என்னை நலந்தானா? என்று கேட்பதுபோலவே தோன்றுகிறது. கடந்த ஓராண்டாகவே, இந்தக் கேள்வி கிளம்பியபடி இருந்தது. அமெரிக்கா சென்று அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளவேண்டிய அளவுக்கு உடல் நலம் பாழ்பட்டது. ஆனால், அதனால் ஏற்பட்ட கவலையை நான் உதறித் தள்ளும் விதமான அன்பும் கனிவும் நாடு முழுவதிலுமிருந்து கிடைத்தது. அரசியலில் நம்மோடு மாறுபட்டிருப்பவர்களிலே பலரும் கனிவு காட்டிடக் கண்டேன் - மனிதத் தன்மை அடியோடு மடிந்துவிட வில்லை என்பதனை உணர்ந்தேன்.

தம்பி! அந்த மனிதத் தன்மையிலேதான் முழுக்க முழுக்க நம்பிக்கைக்கொண்டிருக்கிறேன். மனிதத் தன்மை திகழ்ந்திடச் செய்வதைக் காட்டிலும் மகத்தான வேறோர் வெற்றி இல்லை என்றே கருதுகிறேன். அரசுகள் அமைவதே, இந்த மனிதத் தன்மையின் மேம்பாட்டினை வளர்த்திடத்தான்

என்று கருதுகிறேன். என்னால் எந்தப் பிரச்சினையையும் மனிதத் தன்மை கலந்ததாக மட்டுமே கொள்ள முடிகிறது. அதனால் கொடுமை நேரிட்டுவிடும்போது குமுறிப் போகிறேன். அக்ரமம் நடைபெற்றிடும்போது நெஞ்சில் வேல் பாய்கிறது. இந்நிலை உடலைப் பாதிக்கிறது; மருத்துவர்கள் பலர் என் உடல்நிலை தேறிடத் துணை நிற்கின்றனர். ஆனால், உன் புன்னகை தவழும் முகத்தை மனக் கண்ணால் காணும்போதுதான் உண்மையான "மாமருந்து' கிடைக்கிறது. கிடைத்தற்கரிய அந்தச் செல்வத்தைக் கொண்டு மகிழ்ச்சிப் பெருக்கிலே திளைத்திருக்க எண்ணும் என்னை, தம்பி! நான் மேற்கொண்டுவிட்ட"கடமை' வேலையைக் கவனி! வேலையைக் கவனி! என்று முடுக்குகிறது.

இன்று எப்படியும் எழுதுவது - ஆண்டுக்கோர் நாள் - அருமைமிகு திருநாள் - பொங்கற் புதுநாள் - அதற்காக வெளிவரும் மலரில் எப்படியும் எழுத வேண்டும் என்று எண்ணிக் கொண்டு ஏடெடுத்தேன் எழுத! எடுத்து?

நிதிக் குழுவினருடன் பேசவேண்டிய பிரச்சினைகளைப் பற்றிய தகவல்களுடன் நிதித்துறைச் செயலாளர், அமைச்சர் மாதவனுடன் வந்தார்! ஒரு மணிக்குமேல் உருண்டோடிவிட்டது - சிக்கலான பிரச்சினைகள் - பேசித் தீர்த்தாகவேண்டிய பிரச்சினைகள் - நமது மாநிலத்து வருவாய்த் துறையை எந்தெந்த முறையிலே செப்பனிட முடியும் என்பதுபற்றி ஆய்ந்தறிய வேண்டிய கட்டம். உன்னை மறந்தேன் என்ற பொருள் கொள்வாயோ! விவரமறிந்த தம்பியாயிற்றே!! உனக்காகவும் சேர்த்து மேற்கொள்ளப்படுகிற வேலை என்பதனை அறிவாயே. பிரச்சினைகளைப் பேசினோம். புள்ளி விவரங்களைச் சரிபார்த்துக்கொண்டோம். தொடர்பான நிகழ்ச்சிகள் பற்றிய முறைகளை வகுத்துக்கொண்டோம்.

அதற்குப் பிறகுதான் எழுத ஆரம்பித்தாயா அண்ணா? என்றுதானே கேட்கிறாய்.

அதற்குப் பிறகு அல்ல, தம்பி! அதைப்போல மூன்று நான்கு தவிர்க்க முடியாத வேலைகளைக் கவனித்தான பிறகு, எழுத வேண்டும் என்ற முடிவு எடுத்ததற்கும் எழுதத் தொடங்கியதற்கும் இடையில் ஆறு ஏழு மணி நேரம் சென்றுவிட்டது. இந்நிலையில் நான் இருந்திடினும் பொங்கற் புதுநாள் வாழ்த்தினைத் தெரிவித்துப் பெற்றிடும் மகிழ்ச்சியினை மட்டும் நான் இழந்து விடமாட்டேன். நமக்கென்று உள்ள ஒப்பற்ற விழா அல்லவா அது. எத்தனையோ இன்னல்கள் தாக்கிடினும், அவைகளை மறந்து, ஒரு நாள் மனைதொறும் மனைதொறும் மகிழ்ச்சியுடன் கொண்டாடிட என்று அமைந்த நாளல்லவா பொங்கற் புதுநாள். பேச்சிலே ஓர் இசை கலந்திடும் நாள் இத்திருநாள்! இந்நாளில், உனக்கு வாழ்த்துக் கூறுவதிலே பெற்றிடும் இன்பம் ஈடற்றதல்லவா? எனவேதான், எப்படியும் எழுதுவது என்று உட்கார்ந்தேன்.

உலக நாடுகள் பலவற்றின் தலைநகரங்களை ஒரு முறைக்கு மும்முறை கண்டு வந்தேன். அங்கு எங்கும் - விழாக்கள் பலப் பல நடாத்தப்படினும் - தமிழகத்தின் பொங்கற் புதுநாள் போன்றதோர் பொன்விழா இல்லை. நிச்சயமாக இல்லை. கோலாகல விழாக்கள் உள்ளன; பரபரப்பூட்டும் விழாக்கள் நடத்தப்படுகின்றன; கேளிக்கைகள், மதுபான விருந்துகள் மிகுதியாக; எனினும் ஆர்ப்பரிப்பின்றி ஆனால் அக மகிழ்ச்சியுடன், போலிப் பூச்சுகளின்றி ஆனால் புதியதோர் பொலிவுடன், வீட்டில் உள்ள அனைவரும் கலந்துரையாடி மகிழ்ந்திருக்கும் நமது பொங்கற் புதுநாளுக்கு ஒப்பான விழா அங்கு எங்கும் இல்லை. நாட்டியக் கூடங்களிலே அமளி! பாதைகளிலே புதுவேகம், மோதல், உயிர்ச் சேதம்! அங்காடிகளிலே ஆரவாரம்! இவைகள் ஏராளமான

அளவு! ஆனால் இங்கு வீடுதோறும் எழுகிறதே! முதியவரும் மூதாட்டியும் இளைஞரும் இளநங்கையும், சிறுமியரும் கலந்து எழுப்பும் பொங்கலோ! பொங்கல்! என்ற இசை, அது அங்கு எங்கும் இல்லை. இருந்திடத்தக்க விதமான சமூக அமைப்பே இல்லை.

தம்பி! வறுமை வாட்டுகிறது, இல்லை என்று கூறவில்லை. எண்ணிடும் திட்டங்களை நிறைவேற்றிட வசதிகள் கிட்டவில்லை. அதனை மறைத்துப் பயனில்லை. வளம் கொழித்திட வழிதேடிய படிதான் இருந்து வருகிறோம். இன்னும் பொழுது புலரவில்லை. இவ்வளவும் உண்மை. ஆனால் தமிழகத்தில் பன்னெடுங் காலத்துக்கு முன்பிருந்து நாடு பல, தனது எல்லையை வகுத்துக் கொண்டு அரசு அமைத்துக் கொண்டு நிலவத் தொடங்குவதற்கு நெடுங்காலத்திற்கு முன்பே, நாம் பெற்றிருந்த கருத்துச் செல்வத்தை எண்ணிப் பார்த்திடும் போது, நமக்கு இன்றுள்ள எல்லாத் துயரங்களையும் ஒரு கணம் மறந்து, வேறு எவரும் பெற முடியாத ஓர் பெருமித உணர்வினை நாம் பெற முடிகிறது.

அத்தகைய கருவூலத்தை நமக்குத் தந்த தமிழ் நாட்டுக்கு, நாம் இதுநாள் வரையில் அரசியல் சட்ட திட்டத்தில், தமிழ் நாடு என்ற பெயரைக்கூடப் புகுத்தத் தவறினோமே, மறுத்து வந்தோமே, எதிர்த்து வந்தோமே என்று காங்கிரஸ் கட்சியினர் எண்ணி வருத்தப்படுகிறார்களோ இல்லையோ, நானறியேன் - நாம் - இவர்களால் என்ன ஆகும்? என்ற ஏளனக் கணைகளால் தாக்கப்பட்ட நாம் - நாம் ஆட்சிப் பொறுப்பினை பெற்றதன் விளைவாக இந்தப் பொங்கற் புதுநாளிலிருந்து, நாம் உலகுக்கு அறிவிக்க முடிகிறது, இது தமிழ் நாடு என்பதாக. பெயரில் என்ன இருக்கிறது என்று பேசிடும் பெரியவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள் - ஆனால்

பாடினாரே பாரதியார்,

செந்தமிழ் நாடெனும் போதினிலே
இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே!

என்று. அந்த “கவிதா வாக்கியம்’ பெரிய இடத்தில் அமர்ந்து கொண்டு”சின்னத்தனம்’ பேசிடும் பலருடைய ஏளனத்தைப் பொருட்படுத்த வேண்டாம். உயர்ந்த எண்ணம் கொள்! என்றன்றோ கட்டளையிடுகிறது. "நாம்’ தமிழ்நாடு என்ற பெயர் பெற்றிடக் காரணமாக இருந்தோம் என்ற தித்திப்புக் கலந்திடும் பொங்கற் புதுநாள், இந்த ஆண்டு.

போதும் என்று நான் கூறவில்லை. அத்துணைப் பேதமை என்னைப் பிடித்தாட்டவில்லை.

தமிழகத்துக்கு வளமளிக்கவேண்டிய பருவ மழை தவறி விட்டது. ஏரி குளம் குட்டைகள் வறண்டு கிடக்கின்றன. வயல்கள் வெடித்துக்கிடக்கின்றன. பல மாவட்டங்களில் எண்ணிடும் போதே கவலையும் கலக்கமும் மிகத்தான் செய்கிறது. எனினும் இந்த நிலையை மனத்திலே எண்ணி, இதம்தரும் பல செயல்களை அந்த இடங்களிலே மேற்கொள்ளும்படி திட்டமளிக்கப்பட்டிருக்கிறது.

"தமிழ் நாடு’ - என்ற பெயர் கிடைப்பதால் கிடைத்திடும் பெருமிதம் காலமெல்லாம் நிலைத்து நிற்கும்; நமது வழிவழி வருவோருக்கெல்லாம் நம்மைப்பற்றி அறிவிக்கும்; வரலாற்றில் இடம் பெறும்; பருவமழை தவறுவதும் வறட்சி மிகுவதும் பஞ்ச நிலை தலை தூக்குவதும் என்றென்றும் இருப்பதல்ல; திங்கள் சில.

எனவேதான், தம்பி! எப்போதுமே எழுச்சியுடன் நடாத்திடும் பொங்கற் புதுநாளை இவ்வாண்டு புதியதோர் எழுச்சியுடன் கொண்டாடிடக் காரணம் இருக்கிறது என்பதனை நினைவு படுத்துகின்றேன்.

உடையார்க்கே, - விழாவெல்லாம் ஏழையர்க்கு ஏது? என்ற கேள்வியிலே தொக்கியுள்ள நியாயத்தை நான் மறுப்பவனல்ல. தமிழக முழுவதும் விழாக்கோலம் கொள்ளக்கூடிய விதமான வளம் கொழித்திட வேண்டும் என்று விரும்புகிறேன்; அதற்கான வழிகள் யாவை என்பதுபற்றி ஆய்வாளர்களிடம் அறிவுரை கேட்டுப் பெறுகிறேன்; திட்டம் பல தீட்டப்படுகின்றன; ஆனால், அவைகளை நிறைவேற்றத் தேவைப்படும் பணம், இந்தியப் பேரரசிடமல்லவா முறையிடவேண்டி இருக்கிறது. முறையிடு கிறேன் - கனிவும் பணிவும் குறையாமல்; வம்வு வல்லடிப் போக்கு துளியுமின்றி - ஆனால் கிடைக்கிறதா? நிரம்ப காரணங்கள்! நியாயங்கள்! வாதங்கள்! எதற்கு?

இவ்வளவுக்கு மேல் பணம் தருவதற்கு இல்லை என்பதற்கு! என் செய்வேன்? அண்ணன் ஏன் எப்போதும் கவலைப்பட்டபடி இருக்கிறான் என்று சில தம்பிகள் கேட்கவே செய்கிறார்கள். நான் கவலைப்படாமல் எப்படி இருக்க முடியும்?

ஆகவேதான் மாநிலங்கள் அதிக அளவில் அதிகாரங் களைப் பெறத்தக்க விதத்தில் இந்திய அரசியல் சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுபற்றி வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் எடுத்துக் கூறி வருகின்றேன்.

இதற்கான நல்லாதரவு நாளுக்கு நாள் வளர்ந்தபடி இருக்கிறது என்பதிலே எனக்குத் தனியானதோர் மகிழ்ச்சி. நமது கழகம் மட்டுமின்றி வேறு பல அரசியல் கட்சிகளும் இப்போது இதனை வலியுறுத்த முன்வந்துள்ளன. அரசியல் கட்சிகளைச் சாராத அறிவாளர் பலரும் இதற்கு ஆதரவு காட்டுகின்றனர். "நாம்’ அரசு நடாத்தியதால் கிடைத்திருக்கின்ற நற்பலன்களிலே இதனை ஒன்று என்றே நான் கருதுகின்றேன்.

தமிழகத்தின் தனித் தன்மைகள், சிறப்புகள் குறித்துப் பேசுவதனையே இந்திய ஒருமைப்பாட்டுக்குக் கேடு பயப்பதாகும் என்று பேசுவார் உளர் இங்குகூட! அங்கு உள்ளவர்கள் அக மகிழ்வார்கள் என்ற நினைப்பினர்!

தமிழகத்திற்கென்று இருக்கின்றனவே தனிச் சிறப்புகள் - என் செய்வது? எப்படி மறப்பது? எப்படி மறைப்பது?

யாதும் ஊரே; யாவரும் கேளிர்
பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும்
மெய்ப் பொருள் காண்பது அறிவு
யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு

இவைகளை எங்ஙனம் மறந்திட இயலும்? வேறு எங்கும் இந்த எண்ணம் ஏற்படாத நாட்களில் இவை தமிழகத்திலே மலர்ந்தன என்ற உண்மையை எப்படி மறைக்க முடியும்? ஏன் மறைக்க வேண்டும்?

சிலர் எதிர்க் கூச்சலைக் கிளப்பியபடி இருப்பினும், இன்றையத் தமிழர், தமிழகத்தின் தனிச் சிறப்பினை பெருமளவிற்கு உணர்ந்து எழுச்சி பெற்று வருகின்றனர். தமிழகத்து வரலாற்றுத் துறையிலும், இலக்கியத் துறையிலும், பண்பாட்டுத் துறையிலும் மேலும் மேலும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படின் தமிழரின் தனிச் சிறப்புகள் முழு அளவு கிடைக்கப்பெறும் என்பது மட்டும், அதனைத் தரணி அறிந்து போற்றிடத்தக்க வாய்ப்பும் மிகுந்திடும்.

இப்போதே, அமெரிக்க ஐரோப்பியப் பல்கலைக் கழகங்கள் பல, தமிழ்த் துறைக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.

தமிழரின் தனிச் சிறப்புகளை ஆய்ந்தறியும்

ஏற்பாடு, இங்கு இன்னமும் போதுமான அளவுக்கு மேற்கொள்ளப்படவில்லை. உலகமே ஏற்றுக்கொண்ட உயர் நூலாம் திருக்குறளுக்கான ஆராய்ச்சியேகூட அல்லவா இங்கு மேற்கொள்ளப்படாமலிருந்து வந்தது?

“இதுகள்’ என்ற ஏளனத்தைச் சுமந்துகொண்டிருக்கும்”நாம்’ ஆட்சி நடத்தத் தொடங்கியதன் தொடர்பாக நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டிலே திரட்டிய பணத்தில் ஒன்பது இலட்சம் வெண் பொற் காசுகளைக் கொடுத்தல்லவா மூன்று பல்கலைக் கழகங்களையும் திருக்குறள் ஆராய்ச்சியில் ஈடுபடும்படி ஊக்குவித்திருக்கிறோம்.

வேறெல்லா விழாக்களும், "போகும் இடத்திற்காக” - பொங்கற் புதுநாள் இருக்கும் இடத்திற்காக என்பதனைத் தம்பி! ஆண்டு பலவாக நீ எடுத்துக் கூறி வந்திருக்கின்றாய்.

துவக்கத்திலே இது கேட்டு வெகுண்டெழுந்தோ ரெல்லாம் கூட, இப்போது உண்மைதானே! என்று கூறிட முன்வந்துள்ளனர். பொங்கற் புதுநாளை ஒட்டி, தம்பி! உன்னால் இயன்ற அளவுக்கு, தமிழரின் தனிச் சிறப்புகளைக் குறித்து எடுத்துரைக்கும் பணியிலே ஈடுபடக் கேட்டுக்கொள்கிறேன். நீ முயன்றால் முடியாததும் இருக்கிறதா! என்னையே முதலமைச்சர் ஆக்கிவிட முடிந்திருக் கிறதே உன்னால் - வேறு எதுதான் செய்திட உன்னால் முடியாது? முயன்றிடு! முனைந்திடு!

போலிப் பெருமைத் தேடிக்கொள்ளவோ, நாட்டின் பிற பகுதிகளைத் தரக்குறைவாகக் கருதுவதற்காகவோ அல்ல தம்பி! தமிழகத்தின் தனிச் சிறப்புகள் பற்றி நாம் அறிந்திட வேண்டும், அக மகிழ்ந்திட வேண்டும், எழுச்சி பெற்றிட வேண்டும் என்று நான் கூறுவது, பிற பகுதிகளும், உலகின் பல்வேறு நாடுகளும் கேட்டு இன்புறத்தக்க, அறிந்து

மேற்கொள்ளத்தக்க பண்பாடு நம்முடையது, அத்தகைய கருவூலத்தை இழந்துவிடுவது நமக்கும் நாட்டுக்கும் மட்டுமல்ல உலகுக்கே நட்டம் என்பதாலேயே, தமிழகத்துத் தனிச் சிறப்பு இயல்புகளை நாம் நன்கு அறிந்திட வேண்டும் என்று கூறி வருகிறேன். குறுகிய மனப்பான்மை என்கின்றனர் இதனை. அவர்கள் குறைமதியாளர் என்று கூறிடத் தோன்றுகிறது. பண்பாடு அந்த உணர்ச்சியைத் தடுத்து நிறுத்துகிறது. பிளவு மனப்பான்மை என்றும்கூடக் கூறுவார் உளர்! எதனை என்று பார்த்திடும்போது சிரிப்பே வருகிறது.

யாதும் ஊரே
யாவரும் கேளிர்

என்ற பண்பாட்டினை எடுத்துக் கூறுவது, பிளவு மனப்பான்மை யாமே! யாழ், காது குடைச்சலை உண்டாக்குகிறது; தேன் குமட்டலைத் தருகிறது, தென்றல் வெப்பத்தை மூட்டுகிறது என்று கூறுவதுபோல அல்லவா இருக்கிறது, தமிழ்ப் பண்பாட்டுச் சிறப்பினை எடுத்துக் கூறுவது பிளவு மனப்பான்மையை மூட்டிவிடும் என்று கூறுவது? கூறுகின்றனர், உரத்த குரலிலேகூட! உயர்ந்த இடத்திலே இடம் பெற்று விட்டவர்களும்! ஆயின் என்ன? மிகப் பெரிய இடத்திலே உள்ளவர்கள் கூறுகின்றனரே, அவர்தம் கருத்துக்கு மாறாக நாம் நடந்துகொள்ளப்போமா என்ற எண்ணம் எழும்போது தம்பி!

நெற்றிக் கண்ணைக்
காட்டிடினும்
குற்றம் குற்றமே!

என்பது செவியினில் வீழ்கிறது. உண்மையை உரைத்தாக வேண்டும் என்ற உறுதி பிறக்கிறது.

வான்கோழி கண்டால் வருத்தப்படுமே என்று

எண்ணித் தோகையை கீழே உதறிப் போட்டுவிடுமா கலாப மயில்? காக்கைக்கு வருத்தமாக இருக்குமே என்பதற்காகப் பச்சைக் கிளி கருப்புப் பூச்சைத் தேடிக்கொண்டிருக்குமா? பிற நாடுகளும், நமது நாட்டின் பிற பகுதிகளும் பெற்றிராத கருத்துக் கருவூலத்தைத் தமிழகம் பெற்றிருக்கிறது என்பதனை எடுத்துக் காட்டுவது எந்த வகையிலும் தவறு அல்ல. எத்தகைய தீமையும் தந்திடாது எவருக்கும்.

தமிழரின் தனிச்சிறப்பினை அறிந்திடப் பயன்படும் நமது இலக்கியச் செல்வத்தை நினைவிற்கொள்ளவும், மற்றையோர்க்கு எடுத்துக் கூறவும் பொங்கற் புதுநாள் ஏற்றது என்பதாலேயே பெரியோர்கள் இதனைத் தமிழர் திருநாள் என்றழைக்கின்றனர்.

பழம் பெருமை பேசிப் பெருமூச்செறிந்துகொண்டே செயலற்று இருப்பதல்ல நமது குறிக்கோள். செய-னால் பெற்றிடும் செழுமையை எடுத்துக் காட்டிடும் நன்னாளாம் பொங்கற் புதுநாளில், செயலார்வம் மிகுந்திடுவது இயல்பு. செயலும் செம்மையானதாக அமைந்திட வேண்டும், பயனும் சமூகம் முழுவதற்கும் கிடைத்திடத்தக்க முறை கண்டாக வேண்டும். வெள்ளம் அழித்திடும்; - வாய்க்கால் வளமூட்டும், செல்வம் சிலரிடம் சென்று குவித்திடுவது வெள்ளத்துக்கு ஒப்பானது. அது கொண்டவனையும் அழித்திடும், சமூகத்தில் வலிவற்றோரையும் அழித்திடும். எனவேதான் - சிந்தனையாளர், செல்வம் பெருக்கிட வேண்டும். அஃது முடக்கப்படாமல் சமூகம் முழுவதற்கும் பயன் அளிக்கக்கூடிய வழிமுறை கண்டாக வேண்டும் என்று எடுத்துக் கூறினர். நமது அரசுகூட அந்தச் சமதர்ம இலட்சியத்தைப் போற்றுகிறது; நமது கழகம் சமதர்ம நெறியிலே நம்பிக்கையும் நாட்டமும்

கொண்டிருக்கிறது. ஆனால், நடைமுறைக்குள் புகும்போது, தம்பி! ஆயிரம் ஆயிரம் தடைகள் எதிர்ப்புகள், ஆபத்துகூட!

ஆண்டவனே! ஏனோ எனக்கு இந்தச் சோதனை, இத்துணை வேதனை என்று ஏழை இறைஞ்சுகிறான். செல்வவான், ஆண்டவன் அருளால் நான் பெருநிதி பெற்றேன். இதனைக் குறை கூறுவது தர்மமா? என்று நியாயம் பேசுகிறான்.

மொரேவியா நாட்டில், பணம் பெட்டியில் தூங்குகிறது; பணக்காரன் பட்டு மெத்தையில் தூங்குகிறான்; ஆண்டவன் சொர்க்கத்தில் தூங்குகிறார்; இல்லாவிடில் தெருவில் ஏன் இத்தனைப் பிச்சைக்காரர்கள்? என்றோர் பழமொழி உண்டு.

இந்த நிலை கண்டு மனம் வெதும்பிய நிலையில், பொங்கலாம் பொங்கல்! யாருக்கு? ஏழைக்கு ஏது அந்த இன்பம்? - என்று நமது இளங்கவிஞர்கள் கேட்கின்றனர். அந்தக் கேள்வியிலே உருக்கமும் இருக்கிறது உண்மையும் இருக்கிறது.

இந்த நிலையைக் கண்டு மனம் வெதும்பிக் கவிஞர் இராஜேந்திரன்.

தைத்திங்கள் வருகின்ற பொங்கல் நாளில்
தங்கத்தைச் சுமக்கின்ற மகளிர் ஆக்கும்
நெய்ப்பொங்கல் சுவைத்துண்டு மகிழ்ச்சிகொள்வர்
நிதிபடைத்த சீமான்கள் என்றும் எங்கள்
கைதொட்டு வாய்பட்டதுண்டோ பொங்கல்
கண்மட்டும் ஓயாமல் பொங்கும்! பொங்கும்!
தெய்வங்கள் திருநாட்கள் எங்கட்கு இல்லை
தெருவோரச் சாக்கடையில் வருமா தெப்பம்?

என்று கேட்டிருக்கிறார். மிகைப்படுத்திக் கூறுகிறார் என்று எவரும் கூறிடார்! ஏழ்மை

நெளிகிறது! அதிலும் வளம் பெற்றளிக்கும் பாட்டாளிகளிடம்! இது நீதியல்ல; தமிழர் நெறியுமாகாது. இந்நிலை மாறிட, எல்லோர்க்கும் வாழ்வில் இன்பம் கிடைத்திட நாம் ஒவ்வொருவரும் தத்தமக்குக் கிடைத்துள்ள வாய்ப்பிற்கு ஏற்ற முறையில் பணியாற்றிட வேண்டும். தமிழர் திருநாளில் தமிழர் அனைவரும் களிப்புடன் கலந்துகொள்ளத் தக்கதான சமுதாய அமைப்பு முறை காணப் பாடுபட்டாக வேண்டும். உவகை தந்திடும் இந்நாளில் இதற்கான உறுதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இந்நிலை, தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியா எங்கணும் இருந்திடக் காண்கின்றோம்.

இந்தியாவின் தொழில் பொருளாதாரம் 20 இலட்சம் பங்குதாரர்களின் கையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. 500 முக்கிய கேந்திரத் தொழில்கள், நிதி ஸ்தாபனங்கள், கம்பெனிகளில் எடுத்துப்பார்க்கும் போது அவற்றில் 3,128 டைரக்டர்கள் இருக்கிறார்கள். அவர்களை யார் என்று உற்றுக் கவனித்தால் 1,013 பேர்கள்தான் இந்த 500 கம்பெனிகளில் டைரக்டர்களாக இருக்கிறார்கள் என்பது புலப்படும். இந்த 1,013 டைரக்டர்கள் யார் என்று கவனித்தால் அவர்களில் 800க்கு மேற்பட்டவர்கள் 20 குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவோ அவர்களுக்கு உட்பட்டவர்களாகவோ இருப்பதைச் சுலபத்தில் காணலாம். இந்த 20 பெரிய திமிங்கலங்கள் பாங்குகளையும் இன்ஷூரன்ஸ் கம்பெனிகளையும் நிர்வகிப்பதன் மூலமாகவும், நம் தொழில், பொருளாதாரத்தின் தன்மையையும், வேகத்தையும், போக்கையும் நிர்ணயித்து நிர்வகிக்கும் சக்தி பெற்றவர்களாக விளங்குகிறார்கள்!

என்று அசோக்மேதா சில ஆண்டுகளுக்கு முன்பு

எழுதினார். இன்றைய நிலை, அதனைவிட மோசம் என்கின்றனர் நிபுணர்கள். ஆனால் இதனை மாற்றி அமைத்திடத்தக்க முறைகளை நமக்கு இந்திய அரசியல் சட்டம் போதுமான அளவுக்கு அளிக்கவில்லை. எனவேதான் எங்களுக்கு ஏது பொங்கல்? என்று ஏழை கேட்கும் நிலை நீடிக்கிறது.

ஆனால் தம்பி! மனம் வெதும்பி இதுபற்றிக் கூறிய கவிஞரே, பிறகோர் இடத்தில்,

தைத் திருநாள் வருகை பார் தம்பி! வெல்லத்
தமிழ் உள்ளம் தனில் இன்ப வெள்ளம் சேர்க்கும்
மெய்த்திருநாள் மேன்மை பார்! அறிவை வாட்டி
மெலியவைக்கும் தேவையற்ற பண்டிகைகள்
பொய்த்தினிமேல் போய்விடும்! பார் வானில் பாயும்
புலிச்சின்னப் புகழ் மன்னன் கரிகாலன்றன்
கைத்திருவாள் வெளிச்சம்போல மின்னுகின்ற
கதிர்மணியின் குவியல் பார்! கரும்பைப் பார்!

என்று எழுச்சியுடன் பாடுகிறார். தமிழ் கற்றுணர்ந்தவர்கள் அனைவருமே இதுபோலத்தான்; சமூகத்தில் மூட்டிவிடப் பட்டுள்ள கேடுகளைக் கண்டு மனம் வெதும்பினாலும், பொங்கற் புதுநாளை மட்டும் தமிழர் தமது திருநாளாகக்கொள்ள வேண்டும் என்பதனை எடுத்துரைத்து வருகின்றனர். காரணம் மற்றைய பல விழாக்கள்,

கொடுத்து வைத்தது அவ்வளவுதான்.

நாம் வந்த வழி அது.

இங்குத் துன்பம், அங்கு இன்பம் கிட்டும்.

என்ற எண்ணங்களுக்கு முதலிடம் தருவன. தமிழர் திருநாளாம் பொங்கற் புதுநாள் தனித்தன்மை பெற்றது.

உழைப்பே செல்வம்
உழைப்பே உயர்வு
உழைப்பின்றி உலகு இல்லை!

என்பன போன்ற நற்கருத்துக்களைத் தருவதாக அமைந்திருக்கின்றது.

பணம் படைத்தவர்கள், அது எந்த வழியிலே கிடைத்தது என்றாலும் சமூகத்திலே முன்னிடம் பெற்றுவிடுவது காண்கிறோம். அந்தப் பணம் பண்பை அழிப்பதுடன், சமூகத்தில் பல முறைகேடுகளை மூட்டிவிடுகிறது.

தம்பி! செல்வச் சீமானின் மகன் - இளைஞன் - எப்படி நடந்துகொள்கிறான் என்பதனை நன்கு அறிவாய் அல்லவா? அறிந்திருக்கிறாய் என்றாலும், இதோ நான் தந்துள்ள காட்சியையும் பார்த்திடு - சமூகத்தின் நிலை நன்கு புரிந்திட வாய்ப்புக் கிடைக்கும்.

இடம்:- லிலி கிளப்

இருப்போர்:- கண்ணாயிரம், கோடீஸ்வரன், காதர் மற்றும் பல நண்பர்கள்.

நடப்பது: லிலி கிளப், சீமான் வீட்டுப் பிள்ளைகள் பொழுது போக்குவதற்காக உள்ள இடம். ஆகையால் அங்குச் சீட்டாட்டம் ஒரு புறம், பூப்பந்தாட்டம் மற்றோர் புறம், ஆங்கில முறை நடனம் வேறோர் புறம், விருந்து இன்னோர் புறம் இப்படி இருக்கிறது.

பூந்தோட்டப் பக்கமாகப் போடப்பட்ட நாற்காலி களிலும் சாய்வு நாற்காலிகளிலும் உட்கார்ந்துகொண்டு கண்ணாயிரமும் அவன் நண்பர்கள் சிலரும் சிகரெட் புகைத்தபடி பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

காதர்: எனக்கு வர வர, இந்தக் கிளப் பிடிக்கவில்லை. ஒரே களியாட்ட மயமாகிவிட்டது. இதிலேயே நாம் முழுகி விடுகிறோம். உலகிலே மனிதர்களாகப் பிறந்தவர்கள், ஏதாவது ஒரு பயனுள்ள வேலையைச் செய்தே ஆக வேண்டும். கடினமாக உழைக்க வேண்டும். . .

கோடீஸ்வரன்: எந்தப் புத்தகத்திலே படித்தாயப்பா இதை?. . .

காதர்: புத்தகம் கிடக்கட்டும், நமக்கென்று சிந்திக்கிற சக்தி இருக்கிறதே. அது போதுமே, இதைப் புரிந்துகொள்ள. . .

கண்: என்ன சொல்கிறார், காதர்!

கோடீ: கடினமாக உழைக்கச் சொல்கிறார்.

கண்: உழைக்கட்டும், உழைத்தே தீரவேண்டியவர்கள். . .

காதர்: எல்லோருக்கும் சேர்த்துத்தான் சொல்கிறேன். உழைக்காமல் வாழ்பவன் சமூகத்தைச் சுரண்டிப் பிழைக்கிறான் என்றுதான் பொருள். அதாவது. . .

கண்: புரிகிறது, புரிகிறது! வியாக்யானம் வேண்டாம். தத்துவம் பேசுகிறாய். தாராளமாகப் பேசு. . . தேவையுள்ளவர்கள் அதன்படி நடந்துகொள்ளட்டும். . . .

கோ: அட, உனக்கும் சேர்த்துத்தான் சொல்கிறான் காதர், தெரியவில்லையா? வெறும் பொழுதை ஓட்டிக்கொண் டிருக்கிறாயாம். . . கடினமாக வேலை செய்ய வேண்டுமாம்...

கண்: ஏதோ எனக்கென்று கொஞ்சம் சொத்து இருக்கிறது பிரதர்! நான் ஒன்றும் அலைந்து

திரியவேண்டிய அவசியம் இல்லை. நிம்மதியாக வாழ எனக்கு வசதி இருக்கிறது. ஆண்டவன் அப்படி ஒன்றும் என்னை உழைத்து உருக்குலையும்படியான நிலையிலே விட்டுவைக்கவில்லை. வாழ்வதற்காக வதைபடு என்று என் தலையில் ஒன்றும் எழுதியில்லை. . .

(காதர், அந்தப் பேச்சுக் கேட்டுத் திகைத்துக் கிடக்கிறான். இரண்டோர் விநாடி கழித்து விடைபெற்றுக் கொண்டு செல்கிறான். அவன் மறையும் வரையில் பார்த்துக்கொண்டிருந்து விட்டு)

கோ: கண்ணாயிரம்! காதர் யார் தெரியுமல்லவா உனக்கு? கான் சாகிப் சாதுல்லாவுடைய பேரன். கான் சாகிப்புக்கு மலாயாவிலே தோட்டக்காடு நிரம்ப. அந்த வருவாய் வந்து கொண்டிருந்தது. அதை வைத்துக்கொண்டு சுல்தான் - அதாவது காதருடைய அப்பா, இவனைச் செல்லமாகத்தான் வளர்த்து வந்தார். போன வருஷம் ஒரு பெரிய ஆபத்து; சுல்தான் மறு க-யாணம் செய்துகொண்டார்; குழந்தை பிறந்திருக்கிறது; காதர் வருத்தப்படாமலிருக்க முடியுமா?. . . அப்பனோடு சண்டை! சின்னம்மா சாகசக்காரி - அந்தச் சண்டையை அதிகமாக்கி விட்டுவிட்டாள். காதர் இப்போது சொந்தத்திலே மாவு மில் நடத்துகிறான்.

கண்: அப்படிச் சொல்லு. . . . அதனால்தான் வரட்டு வேதாந்தம் பேசுகிறானா? நாம் சற்று பச்சென்று இருப்பது அவனுக்கு இப்போது பிடிக்கவில்லை. . . . இவனுக்குப் பணக் கஷ்டம்; அந்தச் சமயத்திலே, நான் பணத்தைத் தாராளமாகச் செலவழித்து, ஆனந்தமாக இருப்பதைக் கண்டு இவனுக்கு மனம் பொறுக்கவில்லை. . . .

கோ: என்ன கண்ணாயிரம்! இதுதான் சாக்கு என்று என்னமோ பிரமாதமாகப் பேசுகிறாய் உன் தாராளச் செலவுபற்றி.

கண்: (வேடிக்கையாக) அடப்பாவி! நேற்று மட்டும் பால் டான்சுக்காக ஆயிரம் செலவிட்டேனே. . .

கோ: உன் அந்தஸ்துக்கும் செல்வத்துக்கும் இது ஒரு பிரமாதமா? நேற்றுத் தோன்றியவர்களெல்லாம் ஷெவர்லேயில் போகும்போது, நீ ஏன் ரோல்ஸ் ராயில் போகக்கூடாது. சாதாரணப் பயலெல்லாம் "ரேஸ்' கிளப்பிலே ஆயிர ரூபாய் நோட்டை அலட்சியமாக வீசி எறிகிறான். நூறு ரூபாய் நோட் எடுப்பதென்றால் உனக்குக் கை நடுக்கம் எடுக்கிறது! உன் அந்தஸ்துக்கு ஏற்றபடியா உடை இருக்கிறது. ட்வீட் இல்லாமல் டாக்டர் தாமோதர் வெளியே கிளம்புவதில்லை; உன் உடையைப் பார்! செச்சே! என்ன இருந்தாலும் நீ இப்படிச் செல்வ நிலைக்குக் குறைவாக, மட்டமாக, வாழ்க்கை நடத்தக்கூடாது. மதிக்க மாட்டார்கள். என்னடா மகாப் பிரமாதம்! அவன் பெரிய புள்ளியின் மகன் என்கிறீர்கள்; அவனுந்தான் 555 பிடிக்கிறான். நானுந்தான் அதே சிகரட்! என்று ஒரு நாள் ஆபிரகாம் சொன்னான். வெட்கமாகத் தான் இருந்தது எனக்கு. நீ கஞ்சன்தான் வரவர. . . . .

(கோடீஸ்வரன் பேசிக்கொண்டிருக்கையில், கண்ணாயிரம் தன்னை நோக்கி வரும் ஒருவனை உற்றுப் பார்த்தபடி இருக்கிறான். கோடீஸ்வரனை பேச்சை நிறுத்தும்படி ஜாடை காட்டிவிட்டு.)

கண்: இரு கோடி! யாரோ, தெரிந்த ஆசாமிபோல இருக்குது... ஆமாம். . . அடே, என்கூடப் படிச்ச பய. . . இவ்வளவு சீக்கிரமா கிழவனாகிவிட்டானே.

(அடையாளம் கண்டுபிடித்த களிப்பில் அவன், கண்ணாயிரம் அருகே வந்து நிற்கிறான். கண்ணாயிரம் அவனைக் கட்டிப் பிடித்தபடி, களிப்புடன்)

கண்: வாடா, வாடா, வள்ளியப்பா! பார்த்துப் பல

வருஷமாகி விட்டது. ஆமா, என்னடா இதற்குள்ளே கிழவனாயிட்டே . . . தலை நரைச்சி இருக்கு, உடல் இளைச்சி இருக்குது, முகம் கருத்துக் கிடக்குது . . . எங்கே இருக்கறே? . . . என்ன வேலை? . . . இங்கே எப்ப வந்தே? . . .

வள்: கண்ணாயிரம்! நல்லவனப்பா நீ எங்கே அடையாளம் தெரியாமல் இருக்கறியோன்னு பார்த்தேன். அடையாளம் தெரிஞ்சாலும் அலட்சியப்படுத்திவிடுவயோன்னுகூடப் பயந்தேன். . .

கண்: இடியட்! நான் அப்படிப்பட்டவனா?. . .

வள்: நீ நல்லவன்தான் கண்ணாயிரம்! ஆனா, உன்னோட அந்தஸ்து. . .?

கண்: அது பொல்லாதது என்கிறயா?. . . வள்: அப்படியும் சொல்லவில்லை. . . . ஆனா உன்னோட அந்தஸ்துக்கு நீ என்னோடு சரி சமமாப் பழக முடியா தேன்னுதான் பயப்பட்டேன். நான் இந்த கிளப்பிலே கணக்குச் சரிபார்க்க வந்திருக்கிறேன் - ஆடிட்டர்.

கோ: புதுசா ஆடிட்டர் வரப்போறதாகச் சொன்னாங்க. . . கணக்கு சுறுசுறுப்பா எழுதியபடி இருந்தாங்க. . . நீங்கதான் ஆடிட்டரா?

வள்: ஆமாம் சார்! நான்தான் ஆடிட்டர்.

கண்: டே ஆடிட்டர்! நீ கணக்கு பரீட்சையிலே மூன்று தடவை "கோட்' அடிச்சவனாச்சே நீ எப்படிடா ஆடிட்டர் ஆகிவிட்டே? . . . . போகட்டும் சம்பளம் என்ன? கலியாணம் ஆகிவிட்டதா? குழந்தைகள்?

வள்: குழந்தைகள் நாலு பெண்ணு, இரண்டு ஆண் அப்பா. . . சம்பளம் 300 . . .

கண்: பரவாயில்லை . . . சௌக்கியமா இருக்கிறியா?. . . அதுபோதும். ஆமா இப்படி ஏன்

கருத்துப்போய் இருக்கே?. . .

வள்: பெரிய குடும்பம் கண்ணாயிரம். என் மனைவிக்கு ஆஸ்த்மா, அம்மாவுக்கு டி. பி., கொழந்தைகள் ஆறு, கிடைக்கிற சம்பளம் 300 எப்படி சுகமா இருக்க முடியும்? கஷ்டந்தான் கவலைதான். . .

கண்: போடா போக்கிரி! நீ எப்பவுமே இப்படித்தான். பெரிய பாரமூட்டையைத் தூக்கிச் சுமப்பவன்போல மூக்காலே அழுகுற வாடிக்கை. . . .

வள்: உனக்கு என்னப்பா, குத்தலும் குடைச்சலும். பெட்டியிலே பணம் ஏராளமாக. வட்டி சட்டி மூலம் அதை வளர்க்கச் சரியான தந்தை இருக்கிறார். நீ சுத்தலாம் ஆனந்தமாக. விலை பற்றிக் கவலை இல்லாம, சாமான்களை வாங்கலாம்; காலத்தைப் பத்தின கவலை இல்லாம, வேடிக்கையாக இருக்கலாம், எவ்வளவு வேண்டுமானாலும் செலவு செய்யலாம்!

கோ: வாயைப்போய் கழுவிட்டு வாங்க ஆடிட்டர்! நம்ம கண்ணாயிரத்தைப் போயி, எவ்வளவு வேண்டுமானாலும் செலவு செய்யலாம்னு சொல்லிய வாயைக் கழுவியாகணும். ஆசாமி ஒரே கஞ்சத்தனம்.

கண்: சும்மா இரு கோடி. வள்: எப்படியோ சொத்து சேர்ந்துவிட்டது, சுகமாக வாழ முடியுது. மற்றவர்களைப்போலக் கஷ்டப்பட்டுச் சேர்த்திருந்தா உனக்கும் தெரியும் பணத்தோட அருமை. சீமானுக்கு மகனாப் பிறந்தே - இப்ப, ஆனந்தம் என்கிற அம்சதூளிகா மஞ்சத்திலே புரள முடியுது. உனக்கு ஊர்லே உள்ள கஷ்டம் என்ன தெரியும்?. . . . நான் வந்ததும் விசாரித்துத் தெரிந்துகொண்டேனே. உன் கவலை பூராவும் விதவிதமான களியாட்டங்களைத் தேடுவதிலேதானே. . .

கண்: போடா பொல்லாத

போதகாசிரியனாகிவிட்டே! டே! வள்ளி! வா ஒரு நாளைக்கு வீட்டுக்கு. . .

கோ: கண்ணாயிரத்தோட அப்பா இல்லாதபோது. . .

கண்: ஒரு நாளைக்கு என்ன! வாயேன் இப்பத்தான். . .

வள்: வீட்டுக்குத்தானே. . . .

கண்: பின்னே காட்டுக்கா கூப்பிடுவேன். . . .

கோ: என்ன, பிளான் மாறுது. நாம போட்டிருக்கிற திட்டம். . . . .

(ஏதோ ஜாடை காட்டுகிறான்)

கண்: ஆமா. . . . மறந்தே போயிட்டேனே. . . . . பிரதர்! நாளைக்குக் கட்டாயம் வரணும். . . . இப்ப ஒரு அவசரமான வேலை.

வள்: போய் வா கண்ணாயிரம். நீ இவ்வளவு அன்பாகப் பேசினயே, அதுபோதும் எனக்கு. மற்றதுகள் கொஞ்சம் பணம் கைக்கு ஏறியதும், மண்டைகனம் கொண்டுவிடும், நீ நல்லவன். . .

கண்: நாளைக்குக் கட்டாயமா வர வேண்டும். . .

(கண்ணாயிரமும் கோடீஸ்வரனும் கிளம்புகிறார்கள்.)

(திடுமென்று அங்கு வந்த கண்ணாயிரமும், வள்ளியப்பனும் அளவளாவுவதைப் பார்த்துக்கொண் டிருந்த காதரும் வேறோர் நண்பனும் அவர்கள் போவதைப் பார்த்தபடி நின்றார்கள்.)

நண்பன்: மனுஷ ஜென்மமெடுத்தா இப்படி எடுக்க

வேண்டும்; நாம் இருக்கறோம் நாய்படாத பாடுபட்டுக்கொண்டு, அதோ பார் கண்ணாயிரத்தை; மகராஜன், புண்யசாலி; போன ஜென்மத்திலே என்ன பூஜை செய்தானோ, இந்த ஜென்மத்திலே இவ்வளவு அந்தஸ்த்தோடு வாழறான். . . கடவுள் கடாட்சம் மோட்டாரைப் பார்! படகு போல!!

காதர்: கிடக்கிறான். தள்ளப்பா. எதுக்காக அவனைப் புகழணும்? மோட்டாரிலே சவாரி செய்கிறானாம். அதிலே இருக்கிற ஒரு சிறிய ஆணியை விலை கொடுத்து வாங்கத் தேவைப்படும் பணத்தைக்கூட அவன் சம்பாதித்ததில்லை - சம்பாதிக்க முடியாது - வழி கிடையாது. என்னமோ பணக்காரனுக்குப் பிள்ளையாகப் பிறந்துவிட்டான், அகப்பட்டதை வைத்துக்கொண்டு ஆடறான் ஆட்டம். இது ஒரு பெரிய கீர்த்தியா? இவன் தன்னுடைய திறமை யாலும், உழைப்பாலும் சேர்த்ததா இந்தச் சொத்து, இவனைப் புகழ. அவன் மட்டும் சீமான் சிங்காரவேலுக்கு மகனாகப் பிறக்காதிருந்தா, அரை ரூபா சம்பாதிப்பானா அன்றாடம்? விரலை மடக்கு அவனுக்கு பிழைக்கும் வழி இன்னது தெரியும்னு. என்ன வேலைக்கு இவன் இலாயக்கு? கூ-வேலைகூடச் செய்ய முடியாதே. உடலிலே அதுக்கு வலிவு ஏது? என்ன கண்டுவிட்டே அவனைப் புகழ. பிழைக்க வகை இல்லாதவன். அப்பன் சேர்த்து வைத்திருப்பதைச் செலவழிக்கிற வீண் ஜம்பக்காரன் என்றுதான் சொல்லுவேன்.

(சிகரெட் எடுத்து பற்ற வைக்கிறான். அதை நண்பன் பார்த்துவிட்டு.)

நண்: அமர்க்களமாகப் பேசிவிட்டு, "அக்பர்ஷா’ பத்த வைக்கறே நீ. அவனைப் பார்! தங்கமுலாம் போட்ட குழாயிலே 555! காதர்: அது மட்டுந்தானா! பூப்போட்ட கிளாசிலே பொங்கி வழியப்போகுது போதை. நண்: அந்தப் பழக்கம்கூட உண்டா? காதர்:

பணம் வேறே எதற்கு இருக்குது?. . . காலத்தைச் செலவிடணுமே! வேறே வழி, நேரே அதுக்குத்தான் ஆசாமி போறது. . .

நண்: பணக்காரன். ஓஸ்திச் சரக்குச் சாப்பிடுவான். . . காதர்: அடச் சே, போ! சுத்தப் பஞ்சப் பயலா இருக்கறே. . .

(காதர் கோபமாக அவ்விடம் விட்டுச் செல்கிறான்)

தம்பி! இப்படிப்பட்ட சீமான் மகன் கொண்டாடும் விழா அல்ல பொங்கற் புதுநாள். சமூகத்தின் கோணல்களை நிமிர்த்தியாக வேண்டும் என்ற குறிக்கோள் கொண்ட உன்போன்றாருக்கென்றே அமைந்துள்ள விழாவாகும்.

கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் தக்க முறையிலே பயன்படுத்தினால், சமூகத்தை நிச்சயமாகத் திருத்தி அமைத்திடலாம்.

காலத்தை வீணாக்காமல் சமூகத் தொண்டாற்ற ஓர் துடிப்பு உனக்கு உண்டு என்பதனை உணர்ந்த உன் அண்ணன் இன்று உனக்குக் கனிவு நிரம்பிடும் வாழ்த்தினை அளிப்பதுடன்,

உன் இல்லத்துள்ளார் யாவருக்கும் வாழ்த்துக் கூறுவதுடன், நாடு வளம்பெற, சமூகம் சீர்பெற, சமதர்மம் மலர்ந்திட பாடுபடுவதற்கான உறுதியினை இன்று பெற்றிடுக என்றும் கூற விரும்புகிறேன்.

ஒரு நிமிடம்கூட வீணாக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று நான் கூறுவதற்குக் காரணம், தம்பி! எங்கோ படித்ததாக நினைவு. ஒரு நிமிடத்தில், விண்ணிலிருந்து 6,000 விண் கற்கள் விழுகின்றன; பூமி தன்னைத்தானே 950 மைல் வேகத்தில் சுற்றுகிறது; 100 பேர் இறந்துபடுகின்றனர்; 114 குழந்தைகள் பிறக்கின்றன. 34 திருமணங்கள், 16 விவாக விடுதலை நிகழ்ச்சிகள்

நடைபெறுகின்றன; 68 மோட்டார்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன என்பதாக.

காலம் அத்துணை மதிப்பு வாய்ந்தது. கடமை உணர்ந்த நீ, காலத்தையே கனியச் செய்திடும் ஆற்றல் பெற்ற நீ, தமிழக அரசியலையே மாற்றி அமைத்த நீ உன் கடமையைச் செய்வதிலே கண்ணுங் கருத்துமாக இருப்பாய் என்பதனை நான் அறிவேன். எனினும் அண்ணன் என்ற உரிமையுடன் உனக்கு அந்தக் கடமையை நினைவுபடுத்துவது எனக்கோர் மகிழ்ச்சி தந்திடுவது போல உனக்கும் மகிழ்ச்சி தந்திடும் என்பதிலே ஐயப்பாடு இல்லை.

என்னைப் பொறுத்தமட்டிலே தம்பி, நலிவைத் தாங்கிக் கொண்டபடி என்னால் இயன்றதைச் செய்துகொண்டு வருகின்றேன்.

தாத்தாவுக்கு ஏன் கைவலி தெரியுமா?. . . . எழுதுவதாலே! - என்று என் பேரன் மலர்வண்ணன் - என் மகன் டாக்டர் பரிமளம் பெற்ற செல்வம் - கூறுகிறான். உண்மைதான்! வலி இருக்கத்தான் செய்கிறது - ஆனால் தம்பிக்கல்லவா கடிதம் எழுதுகிறேன்! அது தனியானதோர் சுவையைத் தருகிறது.

மகிழ்ந்திரு!

விழா நடத்திடு!

வேலை மிகுதி இருக்கிறது என்ற நினைவுடன்.

அன்புள்ள
அண்ணாதுரை
12-1-69

கணியம் அறக்கட்டளை

தொலை நோக்கு – **Vision**

தமிழ் மொழி மற்றும் இனக்குழுக்கள் சார்ந்த மெய்நிகர்வளங்கள், கருவிகள் மற்றும் அறிவுத்தொகுதிகள், அனைவருக்கும் கட்டற்ற அணுக்கத்தில் கிடைக்கும் சூழலை உருவாக்குதல்.

பணி இலக்கு – **Mission**

அறிவியல் மற்றும் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஒப்ப, தமிழ் மொழியின் பயன்பாடு வளர்வதை உறுதிப்படுத்துவதும், அனைத்து அறிவுத் தொகுதிகளும், வளங்களும் கட்டற்ற அணுக்கத்தில் அனைவருக்கும் கிடைக்கச்செய்தலும்.

எமது பணிகள்

- கணியம் மின்னிதழ் - kaniyam.com
- கணிப்பொறி சார்ந்த கட்டுரைகள், காணொளிகள், மின்னூல்களை இங்கு வெளியிடுகிறோம்.
- கட்டற்ற தமிழ் நூல்கள் - FreeTamilEbooks.com
- இங்கு யாவரும் எங்கும் பகிரும் வகையில், கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமையில், தமிழ் மின்னூல்களை இலவசமாக, அனைத்துக்

கருவிகளிலும் படிக்கும் வகையில் epub, mobi, A4 PDF, 6 inch PDF வடிவங்களில் வெளியிடுகிறோம்.

- தமிழுக்கான கட்டற்ற மென்பொருட்கள் உருவாக்கம்
- தமிழ் ஒலியோடைகள் உருவாக்கி வெளியிடுதல்
- விக்கி மூலத்தில் உள்ள மின்னூல்களை பகுதிநேர/முழு நேரப் பணியாளர்கள் மூலம் விரைந்து பிழை திருத்துதல்
- OpenStreetMap.org ல் உள்ள இடம், தெரு, ஊர் பெயர்களை தமிழாக்கம் செய்தல்.

மேற்கண்ட திட்டங்கள், மென்பொருட்களை உருவாக்கி செயல்படுத்த உங்கள் அனைவரின் ஆதரவும் தேவை. உங்களால் எவ்வாறேனும் பங்களிக்க இயலும் எனில் உங்கள் விவரங்களை kaniyamfoundation@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

வெளிப்படைத்தன்மை

கணியம் அறக்கட்டளையின் செயல்கள், திட்டங்கள், மென்பொருட்கள் யாவும் அனைவருக்கும் பொதுவானதாகவும், முழுமையான வெளிப்படைத்தன்மையுடனும் இருக்கும். https://github.com/KaniyamFoundation/Organization/issues இந்த இணைப்பில் செயல்களையும், https://github.com/KaniyamFoundation/Organization/wiki இந்த இணைப்பில் மாத அறிக்கை, வரவு செலவு விவரங்களுடனும் காணலாம்.

கணியம் அறக்கட்டளையில் உருவாக்கப்படும் மென்பொருட்கள் யாவும் கட்டற்ற மென்பொருட்களாக மூல நிரலுடன், GNU GPL, Apache, BSD, MIT, Mozilla ஆகிய உரிமைகளில் ஒன்றாக

வெளியிடப்படும். உருவாக்கப்படும் பிற வளங்கள், புகைப்படங்கள், ஒலிக்கோப்புகள், காணொளிகள், மின்னூல்கள், கட்டுரைகள் யாவும் யாவரும் பகிரும், பயன்படுத்தும் வகையில் கிரியேட்டிவ் காமன்சு உரிமையில் இருக்கும்.

நன்கொடை

உங்கள் நன்கொடைகள் தமிழுக்கான கட்டற்ற வளங்களை உருவாக்கும் செயல்களை சிறந்த வகையில் விரைந்து செய்ய ஊக்குவிக்கும்.

பின்வரும் வங்கிக் கணக்கில் உங்கள் நன்கொடைகளை அனுப்பி, உடனே விவரங்களை kaniyamfoundation@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.